
# 1981 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 48


18.01.1981 நினைவு சொருபத்தின் ஆதாரம் நினைவு மற்றும் சேவை!

20.01.1981 மனம், புத்தி, சம்ஸ்காரத்தின் அதிகாரிதான் வரதான மூர்த்தி!

07.03.1981 சாந்தி சொரூபத்தின் காந்தமாகி நாலாபுறங்களிலும் சாந்தியின் கிரணங்களைப் பரப்புங்கள்!

09.03.1981 கடின உழைப்பை முடிவுக்கு கொணர்ந்து நிரந்தர யோகி ஆகுங்கள்!

11.03.1981 வெற்றிக்கான இரண்டு முக்கிய ஆதாரங்கள்!

13.03.1981 இரட்டை ரூப சேவையின் மூலமாகத் தான் ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படும்!

15.03.1981 சுயதர்சன சக்கரதாரி அதாவது சக்கரவர்த்தியே விஷ்வ கல்யாணகாரி!

17.03.1981 இந்த சகஜ மார்க்கத்தில் கஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் நிவாரணம்!

18.03.1981 கடினத்தை சுலபமாக்குவதற்கான வழி -எப்பொழுதும் தந்தையைப் பாருங்கள்!

19.03.1981 உலக இராஜ்ய அதிகாரியாக எப்படி ஆவது?

21.03.1981 உண்மையான ஹோலியை எப்படி கொண்டாடுவது?

23.03.1981 முதல் வகுப்பு அல்லது குளிர்சாதன வகுப்பில் செல்வதற்கான சுலபமான வழி!

25.03.1981 மகான் நிலையின் ஆதாரம் எண்ணம், சொல், செயலின் சோதனை!

27.03.1981 தந்தைக்குப் பிரியமானவராக, அனைவருக்கும் பிரியமானவராக, தன் மனதிற்குப் பிரியமானவராக எப்படி ஆவது?

29.03.1981 ஞானத்தின் சாரம் -நான் மற்றும் என்னுடைய பாபா !

03.04.1981 ஞான மார்க்கத்தின் நினைவுச்சின்னம் பக்தி மார்க்கம்!

05.04.1981 சக்திசாலியான கர்மங்களின் (காரியங்களின்) ஆதாரம் -தர்மம்!

**07.04.1981 சிந்தனை சக்தி மூலமாக சர்வ சக்திகளின் சொரூபத்தின் அனுபவம்!**

**11.04.1981 சத்தியத்தின் சக்தி மூலம் உலக மாற்றம்!**

**13.04.1981 ஆன்மீக ரோஜாவின் விசேஷம்!**

**15.04.1981 நம்பர் ஒன் அதிர்ஷ்டசாலியின் விசேஷங்கள்!**

**02.10.1981 எப்பொழுதும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடுவதற்கான ஆதாரம்!**

**04.10.1981 எண்ண சக்தியின் மகத்துவம்!**

**06.10.1981 ஞானசூரியன் தந்தையின் மாஸ்டர் ஞான சூரிய குழந்தைகளுக்கு சேவைக்கான வாழ்த்து! (தாதிஜீ, சகோதரிகள் ஜெயந்தி மற்றும் லச்சு ஆகியோர் வெளிநாட்டு சேவை செய்து திரும்பி வந்தவுடன் பாப்தாதா கூறிய மகாவாக்கியங்கள்).**

**08.10.1981 பிரம்மாபாபாவின் ஒரு நல்விருப்பம்!**

**09.10.1981 உள்நோக்குப் பார்வை உடையவர் தான் எப்பொழுதும் பந்தனமற்றவராகவும், யோக சொரூபமானவராகவும் இருப்பார்!**

12.10.1981 நிகழ்காலம் தான் எதிர்காலத்திற்கான ஆதாரம்!

14.10.1981 அனைத்து பொக்கிஷங்களின் சாவி ஒரு வார்த்தை -பாபா!

17.10.1981 அனைத்து சூழ்நிலைகளுக்கான சமாதானம் -பறக்கும் பறவை ஆகுங்கள்!

19.10.1981 ஒவ்வொரு பிராமணனும் சைத்தன்ய நட்சத்திர மண்டலத்தின் அலங்காரம்!

22.10.1981 வள்ளலின் குழந்தைகள் நிரந்தர வள்ளல் ஆகுங்கள்!

24.10.1981 உண்மையான பிரியதர்ஷிணியின் அடையாளம்!

27.10.1981 தீபாவளி சுபவேளையில் அவ்யக்த பாப்தாதாவினால் வழங்கப்பட்ட மகாவாக்கியங்கள்!

29.10.1981 தந்தை மற்றும் குழந்தைகளின் ஆன்மீக சந்திப்பு!

01.11.1981 சேவையின் வெற்றிக்கான சாவி!

03.11.1981 யுத்தம் செய்பவராக இன்றி இதயசிம்மாசனதாரி ஆகுங்கள்!

06.11.1981 விசேஷ யுகத்தின் விசேஷ பலன்!

08.11.1981 இடைவெளியை நிறைவு செய்வதற்கான சாதனம் -துரித தானம் மகாபுண்ணியம்!

11.11.1981 பிந்துவின் (புள்ளியின்) மகத்துவம்!

13.11.1981 பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியின் ஆதாரம் -அமைதி சக்தி!

16.11.1981 வெற்றி மாலையின் வரிசை எண்ணிற்கான ஆதாரம்!

18.11.1981 சம்பூர்ண நிலையின் அருகாமையின் அடையாளம்!

21.11.1981 விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள்!

23.11.1981 தியாகத்தையும் தியாகம் செய்தல்!

26.11.1981 சகயோகி தான் சகஜயோகி!

28.11.1981 மூதாதையர்களாகிய உங்களிடமிருந்து அனைத்து ஆத்மாக்களின் எதிர்பார்ப்புகள்!

29.12.1981 தூர தேசத்து குழந்தைகளுடன் தூர தேசத்து பாப்தாதாவின் சந்திப்பு!

**31.12.1981 பலமற்றவர்களுக்கு பலம் கொடுக்கக்கூடிய மிக மகா பலவான் ஆகுங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 18.01.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

# நினைவு சொருபத்தின் ஆதாரம் நினைவு மற்றும் சேவை!

இன்று பாப்தாதா தன்னுடைய விலைமதிக்க முடியாத மணிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மணியும் அவரவர்களின் நிலை என்ற ஸ்தானத்தில் மின்ளிக் கொண்டிருக்கும் மணிகளின் சொரூபத்தில் பாப்தாதாவின் அலங்காரமாக இருக்கிறது. இன்று பாப்தாதா அமிர்தவேளையில் இருந்து தன்னுடைய அலங்காரத் தைப் (மணிகளை) பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் அனைவரும் இந்த பௌதீக உலகத்தில் ஒவ்வொரு ஸ்தானத்தையும் அலங்கரிக்கிறீர்கள், விதவிதமான வகைகளின் மலர்களால் அலங்கரிக்கிறீர்கள். குழந்தைகள் செய்யும் இந்த கடின உழைப்பை பாப்தாதா மேலே இருந்து பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். இன்றைய தினம் நீங்கள் அனைத்து குழந்தைகளும் மதுபனின் ஒவ்வொரு ஸ்தானத்தையும் சுற்றி வலம் வருகிறீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளுடன் சுற்றி வலம் வருவதில் உடன் இருக்கிறார். மதுபனில் கூட விசேஷமாக நான்கு இடங்களை உருவாக்கியிருக்கிறீர்கள் அதைச் சுற்றி வலம் வருகிறீர்கள். நீங்களும் வரிசைகளை உருவாக்கி செல்கிறீர்கள், பக்தர்களும் வரிசையில் நின்று தரிசனத்திற்காக காத்திருக்கிறார்கள். எப்படி பக்தியில் சத்திய வாக்கு கூறும் மகாராஜ் என்று கூறுகிறார்கள். அதே போல் சங்கமயுகத்தில் சத்தியவாக்கின் கூடவே உங்களுடைய சத்தியமான காரியமும் மகான் ஆகி விடுகிறது, அதாவது நினைவுச்சின்னம் ஆகி விடுகிறது. சங்கமயுகத்தின் இந்த விசேஷமாகும். பக்தர்கள் பகவானின் எதிரில் சுற்றி வலம் வருகிறார்கள் ஆனால் இப்பொழுது பகவான் என்ன செய்கிறார்? பகவான் குழந்தைகளின் பின்னால் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கிறார். குழந்தைகளை முன்னுக்கு வைத்து பின்னால் அவரே செல்கிறார். அனைத்து காரியத்திலும் செல்லுங்கள் குழந்தைகளே செல்லுங்க! என்று கூறிக் கொண்டே இருக்கிறார். இது விசேஷம் தான் இல்லையா? குழந்தைகளை எஜமானன் ஆக்குகிறார். சுயம் குழந்தை ஆகி விடுகிறார். எனவே தினசரி எஜமானனே சலாம் ! என வணக்கம் கூறுகிறார்.

## 1981 அவ்யக்த முரளி

பகவான் உங்களை தன்னுடையவர்களாக ஆக்கியிருக்கிறாரா அல்லது நீங்கள் பகவானை உங்களுடையவராக ஆக்கியிருக்கிறீர்களா? என்ன கூறுவீர்கள்? யார் யாருடையவராக ஆக்கியது. பாப்தாதாவோ குழந்தைகள் பகவானை தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறார். குழந்தைகளும் சாதுர்யமானவர்கள் என்றால் தந்தையும் சாதுர்யமானவர். எந்த நேரம் கட்டளையிடுகிறீர்களோ அந்த நேரம் உடனே ஆஜராகி விடுகிறார்.

இன்றைய தினம் சந்திப்பிற்கான தினம் ஆகும். இன்றைய தினத்திற்கு எப்பொழுதும் நினைவிலிருப்பவராக ஆகுக என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. அப்படியானால் இன்று நினைவில் இருப்பவராக ஆகுக என்பதின் அனுபவம் செய்தீர்களா?

இன்று நினைவில் இருப்பவராக ஆகுக என்பதற்குப் பலனாக சந்திப்பை செய்வதற்காக வந்திருக்கிறீர்கள். நினைவு மற்றும் சேவை இரண்டின் சமநிலை நினைவு சொரூபமானவராக இயல்பாகவே ஆக்கி விடுகிறது. புத்தியிலும் பாபா, வாயிலிருந்தும் பாபா. ஒவ்வொரு அடியும் உலக நன்மைக்கான சேவைக்காக இருக்கிறது. எண்ணத்தில் நினைவு மற்றும் காரியத்தில் சேவை இருக்கட்டும், இது தான் பிராமண வாழ்க்கை. நினைவு மற்றும் சேவை இல்லை என்றால் பிராமண வாழ்க்கையே இல்லை. நல்லது.

அனைத்து விலைமதிப்பில்லா மணிகளுக்கு, நினைவு சொரூப வரதானி குழந்தை களுக்கு, ஒவ்வொரு காரியத்தையும் சத்திய காரியமாக செய்யக்கூடிய மகான் மற்றும் மகாராஜன் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையின் அன்பு மற்றும் சகயோகத்தில் இருக்கக்கூடிய அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.01.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனம், புத்தி, சம்ஸ்காரத்தின் அதிகாரிதான் வரதான மூர்த்தி!

இன்று வரமளிக்கும் வள்ளல் மற்றும் உருவாக்குபவர் தந்தை தன்னுடைய மகாதானி மற்றும் வரதானி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் மகாதானியின் பங்கை அனைவரும் தங்களின் சக்திக்கேற்றபடி செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது இறுதி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கும் வேளையில் விசேஷமாக வரதானி ரூபத்தின் பங்கை நடைமுறையில் செய்ய வேண்டியதாக இருக்கும். மகாதானி விசேஷமாக வாய்மொழி மூலமாக சேவை செய்கிறார்கள் ஆனால் கூடவே மனம் மூலம் செய்யும் சேவையின் சதவிகிதம் குறைவாக இருக்கிறது. வாய்மொழியின் சதவிகிதம் அதிகம் மற்றும் மனசேவை அதை விட குறைவு. மேலும் வரதானி ரூபத்தில் வாய்மொழி குறைவாகவும் மற்றும் மனதின் சேவையின் சதவிகிதம் அதிமாகவும் இருக்கிறது. மனம் மூலம் என்றால் எண்ணம் மூலமாக சுபபாவனை மற்றும் நல்விருப்பங்கள் மூலமாக கொஞ்ச நேரத்தில் சேவையின் உடனடி பலனை அதிகமாகப் பார்க்க முடியும். வரதானி ரூபம் மூலமாக சேவை செய்வதற்காக முதலில் தன்னுள் சுத்த எண்ணம் வேண்டும். மேலும் மற்ற எண்ணங்களை ஒரு நொடியில் கட்டுப்படுத்துவதற்கான விசேஷ பயிற்சி வேண்டும். முழு நாளும் சுத்த எண்ணங்களின் கடலில் அலைகளிலே மிதந்து கொண்டே இருங்கள். மேலும் எந்த நேரம் விரும்புகிறீர்களோ சுத்த எண்ணங்களின் கடலின் ஆழத்தில் சென்று அமைதி சொரூபம் ஆகி விடுங்கள் அதாவது பிரேக் சக்திசாலியானதாக இருக்கட்டும். எண்ண சக்தி தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். கூடவே ஆத்மாவின் இன்னும் இரண்டு விசேஷ சக்திகளான புத்தி மற்றும் சம்ஸ்காரம், அப்படி மூன்றுமே தன்னுடைய அதிகாரத்தில் இருக்க வேண்டும். மூன்றிலிருந்து ஒரு சக்தியின் மேல் கூட ஒருவேளை அதிகாரம் குறைவாக இருக்கிறது என்றால் வரதானி சொரூபத்தின் சேவை எவ்வளவு செய்ய விரும்புகிறீர்களோ அந்த அளவு செய்ய முடியாது.

# 1981 அவ்யக்த முரளி

இந்த வருடத்தில் எவ்வளவு தான் பெரிய காரியம், மகாயக்ஞத்தை படைத்திருக்கிறீர்களோ அந்த அளவே இந்த மகாயக்ஞத்தின் விசேஷமாக மகாதானியின் பங்கையும் செய்ய வேண்டும். மேலும் கூடவே ஆத்மாவின் மூன்று சக்திகளின் மேல் சம்பூர்ண அதிகாரத்தின் மேல் என்னென்ன குறை இருக்கிறதோ அதையும் மகாயக்ஞத்தில் சுவாஹா செய்ய வேண்டும். எவ்வளவு விசால காரியம் செய்ய வேண்டியதாக இருக்கிறதோ அந்த அளவே இந்த விசால காரியத்திற்குப் பிறகு சுயசிந்தனையாளர், நற்சிந்தனையாளர், அனைத்து சக்திகளின் மாஸ்டர் உருவாக்குபவர், உயர்ந்த எண்ணம் மூலமாக மாஸ்டர் வரமளிக்கும் வள்ளல், எப்பொழுதும் கடலின் ஆழத்தில் மிக இனிமையான அமைதி சொரூபம் லைட் மற்றும் மைட் ஹவுசாகி இந்த சொரூபத்தின் சேவை செய்ய வேண்டும். எந்த அளவு சாதனங்கள் மூலமாக சேவையின் மேடையில் வர வேண்டுமோ அந்த அளவே சித்தி சொரூபமாகி அமைதியின் சொரூபத்தின் அனுபவத்தை செய்விக்க வேண்டும். சேவையின் சாதனமும் மிக நன்றாக உருவாகியிருக்கிறது. எந்த அளவு விசால சேவைக்கான யக்ஞத்தை படைக்கிறீர்களோ, அதே போலவே அனைவரும் ஒன்றாகச் சேர்ந்த ரூபத்தின், ஜூவாலா ரூபம் சாந்தி குண்டத்தின் மகாயக்ஞத்தைப் படைக்க வேண்டும். இது சேவைக்கான யக்ஞம் ஆகும். உலகின் ஆத்மாக்கள் மேல் வாய்மொழி மூலமாக ஏர் உழ வேண்டும். ஏர் உழுவதில் மேலே கீழே செல்லும். அதற்குப் பிறகு என்ன விதை விதைப்பீர்களோ அதற்கு சீதளத்தின் (குளிர்ச்சி) ரூபத்தினால், அமைதியின் சக்தியினால் குளிர்ந்த நீர் விட்டீர்கள் என்றால் அப்பொழுது தான் குளிர்ந்த நீர் படுவதினால் பழம் உருவாகும். மகாயக்ஞம் உருவானது, அதனால் சேவையின் அதிக பங்கு முடிவடைந்து விட்டது என்று அப்படி நினைக்காதீர்கள். இதுவோ ஏர் உழுது விதை விதைப்பீர்கள். அதிகமான கடும் உழைப்பு இதில் இருக்கும். அதற்குப் பிறகு பழத்தை உருவாக்குவதற்காக மகாதானியின் பிறகு வரதானியின் சேவை செய்ய வேண்டியதாக இருக்கும். வரதானி மூர்த்தி என்றால் சுயம் அவரே எப்பொழுதும் வரதானங்களினால் நிரம்பியிருப்பவர். அனைத்தையும் விட முதல் வரதானம் எது? அனைவருக்கும் தெய்வீக ஜென்மம் கிடைத்தவுடனேயே முதல் வரதானமாக எது கிடைத்தது? எதில் உழைப்பு இல்லையோ அது வரதானம், சகஜ பிராப்தி ஆகி விட வேண்டும். அந்த வரதானம் என்ன கிடைத்தது? ஒவ்வொருவருக்கும் வேறு வேறு வரதானமா அல்லது ஒன்றே ஒன்று தானா? சொல்லும் போது நீங்கள் தன்னுடைய வேறு வேறு வரதானத்தைக் கூறுகிறீர்கள் இல்லையா? அனைவருக்கும் ஒரே ஒரு வரதானம் தான். அது எந்த உழைப்புமின்றி, எதையும் யோசிக்காமல் புரிந்து கொள்ளாமல் இருந்த போதிலும், எப்படிப்பட்ட பலஹீனமான ஆத்மாவிற்கும் தைரியமற்ற ஆத்மாவையும் தன்னுடைய குழந்தையாக தந்தை ஏற்றுக் கொண்டார்.

## 1981 அவ்யக்த முரளி

யார் என்னவாக இருக்கிறார் எப்படி இருக்கிறாரோ என்னுடையவர் என்று இதை ஒரு நொடியில் ஆஸ்தியின் அதிகாரி ஆக்குவதற்கான லாட்டரி என்று சொன்னாலும், பாக்கியம் என்று சொன்னாலும் வரதானம் என்று சொன்னாலும் தந்தை அவரே கொடுத்தார். நினைவு என்ற சுவிட்சை நீ என்னுடையவன் என்று ஆன் செய்து விட்டார். இந்த மாதிரி பாக்கியமும் கிடைக்க முடியும் என்று யோசிக்கவே இல்லை ஆனால் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை பாக்கியத்தின் வரதானத்தை கொடுத்து விட்டார். இந்த விநாடியின் வரதானம் பல ஜென்மங்களின் ஆஸ்திக்கு அதிகாரியாக ஆக்கியது. இந்த வரதானத்தை நினைவு சொரூபத்தில் கொண்டு வருவது என்றால் வரதானி ஆவது. தந்தையோ அனைவருக்கும் ஒரே விநாடியில் ஒரே மாதிரியான வரதானம் கொடுத்தார். சிறிய குழந்தையாக இருந்தாலும், வயதானவராக இருந்தாலும், பெரிய பதவியில் இருப்பவராக இருந்தாலும், சாதாரணமானவராக இருந்தாலும் ஆரோக்கியமானவரோ அல்லது நோயாளியோ எந்த மதத்தைச் சேர்ந்தவரானாலும், எந்த தேசத்தை சேர்ந்தவரானாலும் படித்தவராக இருந்தாலும் அல்லது படிக்காதவராக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே ஒரு வரதானம் கொடுத்தார். இந்த வரதானத்தை வாழ்க்கையில் கொண்டு வருவதில், நினைவு சொரூபம் ஆவதில் வரிசை எண்ணில் வருபவர்களாக ஆகி விட்டீர்கள். சிலர் நிரந்தரமாக ஆக்கினார்கள், சிலர் எப்பொழுதாவது ஆக்கினார்கள். இந்த வித்தியாசத்தின் காரணமாக இரண்டு மாலைகள் உருவாகி விட்டன. யார் எப்பொழுதும் வரதானத்தின் நினைவு சொரூபமாக இருந்தார்களோ அவர்களின் மாலையும் எப்பொழுது ஜபிக்கப்படுகிறது. மேலும் யார் வரதானத்தை சில நேரம் வாழ்க்கையில் கொண்டு வந்தார் மற்றும் நினைவு சொரூபத்தில் கொண்டு வந்தாரோ அவர்களின் மாலையும் சில நேரம் ஜபிக்கப்படுகிறது. அவர் வரதானி சொரூபம் என்றால் இந்த முதல் வரதானத்தின் நினைவு சொரூபமாக எப்பொழுதும் இருந்தார். யார் அவரே நிரந்தரமாக தந்தையின் குழந்தையாக ஆகியிருப்பவராக இருப்பாரோ அவர் தான் மற்றவர்களையும் தந்தையின் நிரந்தர குழந்தையாக ஆக்க முடியும். இவர் வரதானத்தை பெறுவது ஒரு கடினத்தையும் அனுபவம் செய்யவில்லை. இதுவோ தந்தை ! அவரே தன்னுடையவர் ஆக்கினார். இந்த ஒரு வரதானத்தை மட்டும் எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் வரதானத்தை மறக்கிறீர்கள் என்றால் கடின உழைப்பு செய்கிறீர்கள். இப்பொழுது வரதானி மூர்த்தி மூலமாக எண்ணத்தின் சக்தியின் சேவை செய்யுங்கள்.

# 1981 அவ்யக்த முரளி

இந்த வருடம் தன்னுடைய சக்திகள் மூலமாக, தன்னுடைய குணங்கள் மூலமாக பலமற்ற ஆத்மாக்களை தந்தையின் அருகில் கொண்டு வாருங்கள். தற்சமயம் பெரும்பான்மையான ஆத்மாக்களில் ஆத்மீக சக்தி என்ன செய்ய முடியுமோ அதை வேறு யாரும் செய்ய முடியாது என்ற நல் ஆசை உருவாகிக் கொண்டிருக்கிறது ஆனால் ஆன்மீகத்தில் செல்வதற்காக தன்னை தைரியமற்றவராக நினைக்கிறார்கள். அப்படி விருப்பம் என்ற ஒருக்கால் இப்பொழுது வெளிப்படையாக தென்படுகிறது ஆனால் அவர்களுக்கு தன்னுடைய சக்தி மூலமாக தைரியம் என்ற இன்னொரு காலைக் கொடுங்கள். அப்பொழுது தந்தையின் அருகில் வர முடியும். இப்பொழுதோ அருகில் வருவதற்கே தைரியமற்றவர்களாக இருக்கிறார்கள். முதலிலோ தன்னுடைய வரதானங்களினால் தைரியத்தைக் கொண்டு வாருங்கள், நீங்களும் ஆக முடியும் என்று அவர்களை உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது தான் பலமற்ற ஆத்மாக்கள் உங்களுடைய சகயோகம் மூலம் ஆஸ்தியின் அதிகாரி ஆக முடியும். நொண்டிகளை நடக்க வைக்க வேண்டும், அப்பொழுது வரதானி மூர்த்திகள் உங்களுக்கு அடிக்கடி நன்றி கூறுவார்கள். சிலர் பக்தர்கள் ஆவார்கள், சிலர் பிரஜை ஆவார்கள். மேலும் சிலர் கடைசியில் வந்தவர் வேகமாக செல்பவராகவும் இருப்பார். அப்படி இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா!

எப்படி மகா யக்ஞத்தின் சேவையை நாலாபுறங்களிலும் வெகு விமர்சையாக செய்தீர்கள். அதே போல் இந்த யக்ஞத்தின் காரியத்தின் கூடவே சாந்தி குண்டத்தின் வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷன்கள் அதன் சிறப்பையும் நாலாபுறங்களிலும் பரப்புங்கள். எப்படி மகா யக்ஞத்தின் புதுப் படங்களைத் தயாரித்தீர்கள், பந்தல்கள் உருவாக்கினீர்கள் சொற்பொழிவு தயாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். மேடை தயாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதே போல் நாலாபுறங்களிலும் உள்ள ஒவ்வொரு பிராமணனும் தந்தைக்குச் சமமான சைத்தன்ய ரூபம் ஆகி விட வேண்டும். லைட் மற்றும் மைட் ஹவுசின் பந்தல் ஆகி விட வேண்டும். எண்ண சக்தியின் அமைதியின் சொற்பொழிவைதயார் செய்ய வேண்டும். மேலும் கர்மாதீத் நிலையில் வரதானி மூர்த்தியின் பங்கைச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் சம்பூர்ண நிலையும் அருகில் வரும் இதே வருடத்தில் மிக விசாலமான சேவையின் காரியம் என்ன செய்ய வேண்டுமோ அதையும் இந்த அளவே அனைவரும் ஒன்றாகச் சேர்ந்த ரூபத்தில் பிரத்யக்ஷத்தின், ஒரு பலம் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையின் கோஷத்தை எடுத்துக் கொண்டு சேவையின் மேடையில் வர வேண்டும். அனைத்து பிராமணர்களின் விரல்கள் மூலமாக காரியத்தை நிறைவேற்ற வேண்டும். அதே போலவேஇந்த வருடத்திலேயே

அனைவரின் ஒரு எண்ணம் மூலமாக வரதான ரூபத்தின் விசால காரியத்தை அந்த மாதிரியே நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

அந்த மாதிரி சப்தத்தில் வந்த போதிலும் சப்தத்தை விட்டு விலகிய நிலையில் நிலைத்திருக்கக் கூடிய, தன்னுடைய தைரியம் மூலமாக மற்ற ஆத்மாக்களுக்கும் தைரியம் கொடுக்கக்கூடிய, தன்னுடைய நெருக்கத்தின் மூலமாக மற்றவர்களையும் நெருக்கத்தில் கொண்டு வரக்கூடிய, உடல் அங்கம் ஊனமுற்ற ஆத்மாக்களையும் ஓட்ட பந்தயத்தில் ஈடுபடுத்தக்கூடிய, அந்த மாதிரி வரதானி மற்றும் மகாதானி, பாப்தாதாவின் நெருங்கிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன்:** நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறதா அல்லது நீங்கள் நேரத்தின் அருகில் வந்து கொண்டிருக்கிறீர்களா? உங்களை கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது நேரம் உங்களை இழுக்கிறதா? நாடகம் உங்களை நடத்து விக்கிறதா அல்லது நீங்கள் நாடகத்தை நடத்து விக்கிறீர்களா? தலைவன் நீங்களா அல்லது நாடகமா? படைப்பவர் நாடகமா அல்லது நீங்களா? இப்பொழுது என்ன டிராமாவில் இருக்குமோ அது தான் நடக்கும் என்று பல தடவை முரளியில் வருகிறது ஆனால் இன்னும் வரும் நாட்களில் நாடகத்தில் என்ன நடக்க வேண்டுமோ அது அந்த அளவு தெளிவாக புத்தியில் உணரப்படும் பிறகு என்ன நடக்க வேண்டுமோ அது தான் நடக்கும் என்று அந்த மாதிரி சொல்ல மாட்டீர்கள். அதிகாரத்துடன் இது தான் டிராமாவில் நடக்கும் என்று கூறுவீர்கள். மேலும் அதுவே நடக்கும். எப்படி எதிர்காலத்து பிராப்தி தெளிவாக இருக்கிறது. அதே போல் நாடகத்தில் என்ன நடக்க வேண்டுமோ அதுவும் தெளிவாக இருக்கும். யார் எவ்வளவு தான் இந்த மாதிரி இருக்கவே இல்லை, ஆகுமா அல்லது ஆகாதா ஒன்றும் தெரியாது என்று கூறினால் யாராவது ஏற்றுக்கொள்வார்களா? இல்லை. எப்படி இந்த விஷயத்தில் ஞானம் நிறைந்தவரின் ஆதாரத்தில் மாஸ்டர் ஆகி விட்டீர்கள். ஆம் இதுவே தான் நடக்கும். எது நாளை நடக்க வேண்டுமோ அல்லது ஒரு விநாடிக்குப் பிறகு நடக்க வேண்டுமோ அதையும் அந்த அளவு அதிகாரத்துடன், ஞானம் நிறைந்த நிலையின் சக்தியுடன் தெளிவுத்தன்மையின் சக்தி மூலம் இது கண்டிப்பாக நடக்கும் என்று அந்த மாதிரியே கூறுவீர்கள். என்ன நடக்குமோ அதைப்பார்க்கலாம் என்று அப்படி கூறமாட்டீர்கள். பார்த்திருக்கிறீர்கள் மேலும் அதுவே நடக்கும். அந்த அளவு அதிகாரம் உள்ளவராக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். இதுவும் ஒரு அதிகாரம் தான் இல்லையா? கண்டிப்பாக ஆக

வேண்டும். நம்முடைய இராஜ்யம் வந்தே தான் ஆகும். யார் எவ்வளவு தான் அசைக்க முயற்சி செய்தாலும் ஆனால் அது மிகவும் தெளிவாக இருக்கிறது. அந்த விஷயத்தின் அதிகாரி ஆகி விடுவார். இது எப்பொழுது நடக்கும் என்றால் எப்பொழுது கொஞ்சம் ஏகாந்தவாசியாக ஆவீர்களோ, அப்போது. எவ்வளவு ஏகாந்தவாசியாக இருப்பீர்களோ அந்த அளவு உணருதல் நன்றாக இருக்கும். என்ன நடக்க வேண்டுமோ அது தற்சமயத்திற்குச் சமமாக எதிர்காலம் தெளிவாகி விடும். இப்பொழுது நேரம் குறைவாக கிடைக்கிறது. திரைச்சீலைக்குப் பின்னால் நாடகத்தின் இந்த காட்சியாகும். இதுவும் அனுபவம் ஆகும். எனவே தான் இந்த வருடத்தில் எவ்வளவு சேவையின் நடவடிக்கைகள் இருக்குமோ அந்த அளவே முற்றிலும் நிலத்தின் அடியில் சென்றது போல் சென்று விடுங்கள். ஏதாவது புதிய கண்டுபிடிப்பு மற்றும் சக்திசாலியான கண்டுபிடிப்பு இருக்கிறது என்றால் அந்த அளவு நிலத்தின் அடியில் செய்வார்கள் அப்படி ஏகாந்தவாசி ஆவது தான் நிலத்தின் அடியில் செல்வதாகும். எந்த நேரம் கிடைத்தாலும், ஒன்றாக ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் கிடைக்காது. இந்தப் பயிற்சியும் ஆகி விடும். இப்பொழுதைய விஷயம் ஆகும். இப்பொழுது ஐந்து நிமிடம் கிடைத்தால் கூட கடலின் ஆழத்தில் சென்று விடுங்கள். வருபவர்கள் கூட இவர் எங்கோ வேறு இடத்தில் இருக்கிறார் என்று புரிந்து கொள்வார்கள். இவர் இங்கே இல்லை. அவர்களுடைய எண்ணமும் முற்றிலும் நிறுத்தப்பட்டு விடும் வார்த்தையில் வர விரும்பினால் கூட வர முடியாது. அமைதி மூலமாக அந்த அளவு தெளிவான பதில் கிடைக்கும் அது வார்த்தை மூலமாகக் கூட குறைந்த தெளிவானதாகத் தான் இருக்கும். எப்படி சாகார பாபாவில் காரிய நடவடிக்கைகளின் இடையிடையே எங்கோ சென்று விட்ட நிலையின் அனுபவம் ஆனது தான் இல்லையா? கேட கொண்டும், கூறிக் கொண்டும் டைரக்ஷன் கொடுத்துக் கொண்டும் நிலத்தின் அடியில் சென்று விடுவார். அப்படி இப்பொழுது இந்தப் பயிற்சியின் தேவை இருக்கிறது. இவர் எங்கோ காணாமல் போய் இருக்கிறார் என்று பார்ப்பவர்களுக்குத் தென்பட வேண்டும். இவர் இந்த உலகத்தில் இல்லை இந்த பரிஷ்தா இந்த உடலின் உலகத்தில் மற்றும் உடலின் உணர்விலிருந்து விலகிச் சென்று விட்டார். இதைத்தான் அனைவரும் சாட்சாத்காரம் என்று கூறுவார்கள். யார் எதிரில் வந்தாலும் அவர் இதே நிலையில் சாட்சாத்காரத்தின் அனுபவம் செய்வார். எப்படி தொடக்கத்தில் சாட்சாத்காரத்தின் அலை இருந்தது இல்லையா? அதன் மூலமாகத் தான் நாலாபுறமும் செய்து பரவியது. மந்திரம் மற்றும் வேறு எதுவோ என்று புரிந்து கொண்டால் கூட செய்தியோ இதன் மூலம் தான் பரவியது. அதே போல் எப்பொழுது அனுபவத்தின் சமமாக சாட்சாத்காரம் ஏற்படுமோ அப்பொழுது பிரத்யக்ஷம் ஏற்படும். பெயர் நாலாபுறங்களிலும் பரவும் சாட்சாத்காரம் ஆகும்.

பிரத்யக்ஷ பலன் அனுபவம் ஆகும். இந்த பிரத்யக்ஷ பலனின் சீசனில் பிரத்யக்ஷதா ஆகும். இதைத் தான் வரதானி ரூபம் என்று சொல்வது. யார் வந்தாலும் அவர் அனுபவம் செய்து செல்லட்டும். பேசிக் கொண்டிருக்கும் போதே அவரும் மறைந்து விடுவார். மற்றவர்களையும் மறையச் செய்து விடுவார். இதுவும் நடக்கும். வார்த்தைகள் மூலமாக காரியங்களை செய்வித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் இந்த அனுபவம் செய்வது மற்றும் செய்விப்பதின் நிலை. ஒரு நொடியில் பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படுத்தும், குறைந்த நேரம் வெற்றி அதிகமாக இருக்கும். இன்றைய நாட்களில் யாருக்காவது ஏதாவது விஷயத்தை வார்த்தைகள் மூலம் கூறினீர்கள் என்றால் என்ன கூறுவார்கள்? ஆம் இவை அனைத்தும் தெரியும். ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டார்கள். இதையோ நாங்கள் தெரிந்திருக்கிறோம் என்று ஒரு நொடியில் கூறுவார்கள். இதைத் தான் கேட்பீர்கள் இந்த தவறுக்கு என்ன அறிவுரை கிடைக்கும் என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டார்கள். அப்படி இப்பொழுது புதிய வழிமுறை வேண்டும். அது இது தான். அனுபவத்தின் குறைவு, ஞான விஷயங்களின் குறைவு இல்லை. ஒரு விநாடியாவது யாருக்காவது சக்தி ரூபத்தின், சாந்தி ரூபத்தின் அனுபவத்தை செய்வித்து விட்டீர்கள் என்றால் அவர்கள் அமைதியாகி விடுவார்கள். நல்லது - ஓம் சாந்தி

**வரதானம்: விசால புத்தி மூலமாக குழுவின் சக்தியை அதிகரிக்கக்கூடிய வெற்றி சொரூபம் ஆகுக!**

குழுவின் சக்தியை அதிகரிக்க வேண்டும் - இது பிராமணனின் வாழ்க்கையின் முதல் உயர்ந்த காரியம் ஆகும். இதற்காக எந்தவொரு விஷயத்தையும் பெரும்பான்மையோர் சரி பார்க்கிறார்கள் என்றால் எங்கு பெரும்பான்மையினரோ அங்கு நான் - இது தான் குழுவின் சக்தியை அதிகரிப்பது. இந்த விஷயத்தில் என்னுடைய கருத்து மிக நல்லதாக இருந்தது என்று பெருமை கொள்ளக்கூடாது. எவ்வளவு தான் நல்லதாக இருந்தாலும் ஆனால் குழு உடைகிறது என்றால், அந்த நல்லதும் சாதாரணமாகி விடும். அந்த நேரம் தன்னுடைய கருத்தை தியாகம் செய்ய வேண்டியதாக இருந்தாலும் தியாகம் செய்வதில் தான் பாக்கியம். இதன் மூலம் தான் வெற்றி சொரூபம் ஆவீர்கள் நெருங்கிய சம்மந்தத்தில் வருவீர்கள்.

**சுலோகன்: அனைத்து வெற்றிகளையும் அடைவதற்காக மனதின் ஒருநிலைப்பாட்டை அதிகரியுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சாந்தி சொரூபத்தின் காந்தமாகி நாலாபுறங்களிலும் சாந்தியின் கிரணங்களைப் பரப்புங்கள்!

இன்று மிகப் புனிதமான தந்தை புனித அன்னப்பறவைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இந்த வேறுபட்ட மற்றும் அன்பான சந்திப்பை மிக உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் மட்டும் தான் அனுபவம் செய்ய முடியும். குழந்தைகளின் அன்பிற்கான பிரதிபலனை வழங்குவதற்காக தந்தை வந்திருக்கிறார். குழந்தைகள் தந்தையின் அன்பிற்கு பிரதிபலனாக சேவையில் அனைவரும் ஒன்றாகக்கூடி சகயோகம் கொடுத்து காண்பித்தார்கள். பாப்தாதா அன்பு நிறைந்த கூட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். முழு லயிப்புடன் இயற்கை மற்றும் கலியுக அசுர சம்பிரதாய தடைகளைக் கடந்து தடையின்றி காரியத்தை முடித்தீர்கள், இந்த சகயோகம் மற்றும் ஆர்வத்தின் பலனாக பாப்தாதா குழந்தைகள் மேல் பாராட்டுக்களின் மலர்களின் மழையைப் பொழிந்து கொண்டு இருக்கிறார். பாபா காரியம் என்பது என்னுடைய காரியம், இந்த முழு ஈடுபாட்டுடன் வெற்றி அடைந்தீர்கள். அதற்காக பாராட்டுக்கள் ! நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து குழுவின் சக்தியின் முதல் காரியத்தை இப்பொழுது தொடங்கி இருக்கிறீர்கள். இப்பொழுது ஒரு முன்மாதிரி ரூபத்தில் செய்தீர்கள். இப்பொழுதோ உங்களுடைய குழந்தைகள் இன்னும் அதிகரித்து விசால காரியத்திற்கு பொறுப்பாளர் ஆவார்கள். அனைவரும் ஒன்றாக இணைந்த குழுவின் சக்தியின் எதிரே எப்படி வித விதமான தடைகள் அகன்று விடுகின்றன என்பதை அனுபவம் செய்தீர்கள். நீங்கள் அனைவரும் "வெற்றி எங்களுடைய பிறப்புரிமை" என்ற உயர்ந்த எண்ணத்தை வைத்தீர்கள், இந்த எண்ணம் காரியத்தை வெற்றியடைய வைத்தது. குழந்தைகளின் தைரியம், உற்சாகம், கடின உழைப்பு மற்றும் அன்பைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கிறோம்.

இந்தக் குழு விசேஷமாக எந்தப் பாடத்தைக் கற்பித்தது? தெரிந்திருக்கிறீர்களா? என்ன காரியம் நடந்தாலும் அது வருங்காலத்திற்காக ஒரு பாடத்தை கற்பிக்கிறது?

## 1981 அவ்யக்த முரளி

அப்படி என்ன பாடத்தைப் கற்றீர்கள்? (சகித்துக் கொள்வதற்கு) இப்பொழுதோ இந்தப் பாடத்தை இன்னும் படிக்க வேண்டும். இந்தக் காரியம் வருங்காலத்திற்காக "எப்பொழுதும் டபுள் லைட் ஆகி எவரெடியாக எப்படி இருப்பது" என்ற நடைமுறை பாடத்தைக் கற்பித்தது. யார் டபுள் லைட்டாக இருப்பாரோ அவர் தன்னை ஒவ்வொரு விஷயத்திலும் சுலபமாகவே வெற்றி அடைபவராக ஆக்க முடியும். எப்படி நேரமோ அப்படி தன்னை சரள முறையில் நடத்திக் கொள்ள முடியும். மனதால் எப்பொழுதும் மூழ்கிய நிலையில் இருக்க முடியும்.

இன்றோ குழந்தைகளின் கடும் உழைப்பிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்தோம். இன்னும் வரும் நாட்களில் விசால காரியங்களை செய்து கொண்டே இருங்கள், வளர்ந்து கொண்டே இருங்கள். பாப்தாதா உங்களை விட அதிகமாக அனைத்துக் காரியத்தையும் பார்க்கிறார். நீங்களோ ஸ்தூல சாதனங்கள் காரணமாக சில நேரம் சென்றடைய முடியும், சில நேரம் சென்றடைய முடியாது. பாப்தாதாவிற்கு ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் சென்றடைவதில் எவ்வளவு நேரம் எடுக்கும்? நீங்கள் என்ன பார்க்கவில்லையோ அதை நாம் பார்த்தோம். தந்தையின் அன்பு தான் காலை அமுக்கி விடுகிறது. பொறுப்பாளர்களாக டில்லியைச் சேர்ந்தவர்கள் ஆனார்கள் ஆனால் அனைத்து பிராமண ஆத்மாக்களின் சகயோகத்தினால், எந்தக் குழந்தை களெல்லாம் சேவையின் மைதானத்தில் வந்தார்களோ, சேவை என்ற மலையைத் தூக்குவதற்கு விரல் கொடுத்தார்களோ அந்த அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பு மற்றும் எப்பொழுதும் உடன் இருப்பதின் குடை நிழலின் உள் அன்பு நினைவு என்றதினால் காலை அமுக்கி விடுகிறார். களைப்படைந்து விடவில்லை தான் இல்லையா? சொல்வதற்காக வெளிநாட்டினர் என்று கூறுகிறோம் ஆனால் அவர்களும் பாரதவாசிகள். அவர்களும் மிக நல்ல ஈடுபாட்டுடன் களைப்பற்றவராகி பாரதத்தின் கும்பகர்ணன்களை எழுப்புவதற்காக வெற்றிப் பூர்வமாக காரியம் செய்தார்கள். எனவே பாப்தாதா அனைவருக்கும் நம்பர் ஒன் என்ற பட்டம் கொடுக்கிறார். வெளிநாட்டினர் கேட்டீர்கள் தானே? வெளிநாட்டிலும் இந்த மாதிரி பெரிய நிகழ்ச்சி நடக்கும். அந்த நாளும் வரும். அனைவரும் குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இன்றைய இந்த இனிமையான மேளாவின் (சந்திப்பின்) விசேஷ நினைவுச்சின்னம் உருவாகிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவிற்கும் விசால மேளா மிகப் பிரியமானதாக இருக்கிறது. யாரெல்லாம் தொலைதூரத்திலிருந்து கஷ்டப்பட்டு மிக ஆர்வத்துடன் வந்து சேர்ந்திருக்கிறார்கள், அவர்கள்

# 1981 அவ்யக்த முரளி

அனைவருக்கும் பாப்தாதா விசேஷ அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அன்பு தூரத்தை அருகில் கொண்டு வந்து விடுகிறது. அப்படி பாரதத்திலும் மிக தொலைதூரத்தில் இருப்பவர்கள் அன்பின் பந்தனத்தில் சகயோகத்தின் ஆர்வத்தில் அருகாமையை அனுபவம் செய்கிறார்கள். எனவே பாரதவாசி பெரிய தேசத்தின் கணக்குப்படி தூர இடங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷ அன்பைத் தருகிறார். மிகவும் கள்ளம் கபடமற்றவர்கள், மேலும் மிக அன்பானவர்கள். எனவே போலாநாத் தந்தையின் அந்த மாதிரியான குழந்தைகள் மேல் விசேஷமாக அன்பு நிறைந்த திருஷ்டி இருக்கிறது. அனைவரும் தன்னை அந்த அளவே உயர்ந்த பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? நல்லது.

இப்பொழுது வரும் வருடத்தில் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்திருக்கிறீர்களோ மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள், இப்பொழுது வரும் நாட்களில் என்ன செய்ய வேண்டும்? தற்சமயம் உலகின் பெரும்பான்மையான ஆத்மாக்களுக்கு அனைத்தையும் விட அதிகமாக உண்மையான அமைதியின் தேவை இருக்கிறது. அமைதியின்மைக்கான அனேக காரணங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஒருவேளை அவரே அமைதி யில்லாதவராக இருந்தால் கூட மற்றவர்களின் அமைதியற்ற வாயுமண்டலம், அமைதியற்ற எண்ண அலைகள் அவர்களையும் தன் பக்கம் இழுத்து விடுகிறது நடத்தையில், இருப்பதில், உணவு விஷயத்தில், காரியம் செய்வதில் ஆகிய அனைத்திலும் அமைதியின்மையின் சூழ்நிலை அமைதியான நிலையில் அமர விடாது. அதாவது மற்றவர்களின் அமைதியின்மையின் பிரபாவம் கூட ஆத்மா மேல் ஏற்படும் அமைதியின்மையின் மன அழுத்தத்தின் அனுபவம் அதிகரிக்கும். அந்த மாதிரி நேரத்தில் அமைதிக் கடலின் குழந்தைகள் உங்களுடைய சேவை என்னவாக இருக்கிறது? எப்படி எங்காவது நெருப்பு பிடித்து விடுகிறது என்றால் குளிர்ந்த நீரினால் நெருப்பை அனைத்து சூடான சூழ்நிலையை குளுமை ஆக்கி விடும் அதே போல் உங்கள் அனைவரின் தற்சமயம் "மாஸ்டர் அமைதி கடலின்' விசேஷ ! வேண்டும். மனதின் எண்ணங்கள் மூலமாக அமைதி சொரூபத்தின் நிலை மூலமாக நாலாபுறங்களிலும் அமைதியின் கிரணங்களைப் பரப்புங்கள். அந்த மாதிரி சக்திசாலியான சொரூபம் ஆக்குங்கள். முழு உலகத்தின் மூலைகளில் இந்த மிகக் குறைந்த ஆத்மாக்கள் தான் அமைதியின் தானம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் அமைதிக் கடல் என்று அனுபவம் செய்யட்டும். எப்படி நாலாபுறங்களிலும் இருள் இருந்து ஒரு மூலையில் பிரகாசமான வெளிச்சம் இருக்கிறது என்றால் அனைவரின் கவனமும்

இயல்பாகவே வெளிச்சத்தின் பக்கம் செல்லும். அதே போல் நாலாபுறங்களிலும் அமைதியின்மையின் நடுவில் இங்கிருந்து அமைதியை பிராப்தி செய்ய முடியும் என்று ஈர்ப்பு இருக்கட்டும். அமைதி சொரூபத்தின் காந்தம் ஆகுங்கள். அதன் மூலம் தூரத்திலிருந்தே அமைதியற்ற ஆத்மாக்களை ஈர்க்க முடிய வேண்டும். கண்கள் மூலமாக அமைதியின் வரதானம் கொடுங்கள். வாய் மூலமாக அமைதி சொரூபத்தின் நினைவூட்டுங்கள். எண்ணம் மூலமாக அமைதியின்மையின் எண்ணங்களை உள்ளடக்கி அமைதியின் எண்ண அலைகளை பரப்புங்கள். இந்த விசேஷ காரியத்திற்காக நினைவின் விசேஷ விதி மூலமாக சித்தியை பிராப்தி செய்யுங்கள். பக்தர்கள் சாந்தி தேவா என்று உங்களை மகிமை செய்கிறார்கள். இந்த வருடத்தில் விசேஷமாக அதே சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். ஆத்மா என்னுடைய அமைதி சொரூபத்தின் எண்ண அலைகள் எந்த அளவு காரியம் செய்கிறது என்று பயிற்சி செய்யுங்கள். அமைதியின் எண்ண அலைகள் அருகில் இருக்கும் ஆத்மாக்கள் வரை சென்றடைகிறதா மற்றும் தொலைதூரம் வரைக்கும் சென்றடைய முடிகிறதா? அமைதியற்ற ஆத்மாக்கள் மேல் தன்னுடைய அமைதியின் எண்ண அலைகளை அனுபவம் செய்து பாருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது. இப்பொழுதோ சந்தித்துக் கொண்டே இருப்போம்.

எப்பொழுதும் அன்பில் இருக்கக்கூடிய அனைவருக்கும், ஒவ்வொரு காரியத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருப்பவருக்கு. அன்பு மூலம் கடின உழைப்பை அகற்றக்கூடியவர்களுக்கு, எப்பொழுதும் களைப்பற்று பாப்தாதாவின் குடைநிழலின் கீழ் இருக்கக்கூடியவர்களுக்கு எப்பொழுதும் தடைகளை அழிக்கும் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**ஒரிசா மற்றும் கர்நாடக மண்டல சகோதர சகோதரிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: 1) உங்கள் அனைவருக்கும் எவ்வளவு உயர்ந்த பாக்கியம் இருக்கிறது. குழந்தைகள் உங்களை சந்திப்பதற்காக தந்தை அவரே வருகிறார்!** இந்த பாக்கியத்தை சிந்தனை செய்து பாபா எனக்காக வந்திருக்கிறார் என்று எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருங்கள். பகவானை நான் கொண்டு வந்திருக்கிறேன். பகவானை தன்னுடைய அன்பின் பந்தனத்தில் கட்டிப்போடுவது என்ற இதை விட வேறு என்ன வேண்டும்?. அந்த மாதிரி போதையில் இருந்தீர்கள் என்றால் மாயா ஓடி விடும். மாயாவின் உறவையோ அனைவரும் துண்டித்து விட்டீர்கள் தான் இல்லையா?. துண்டித்து விடுவது

என்றால் எண்ணத்தில் கூட வர வேண்டாம். எண்ணத்தினால் கூட அழிப்பது என்பது தான் துண்டிப்பது. அப்படி துண்டித்து விட்டீர்கள் தான் இல்லையா? நீங்கள் அனைவரும் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். தூர இடங்களில் இருக்கும் உங்களையும் தந்தை தேடிக் கண்டுபிடித்து விட்டார். எனவே எப்பொழுதும் தன்னை காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

**2) ஃபரிஷ்தாவுக்கு சமமான நிலையை உருவாக்குவதற்காக தன்னை தந்தையின் குடைநிழலின் கீழ் இருப்பதாக புரிந்து கொள்ளுங்கள்!** தன்னை எப்பொழுதும் தந்தையின் குடைநிழலின் உள்ளே இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எந்த அளவு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவு நான் தனியாக இல்லை ஆனால் பாப்தாதா எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார் என்று அனுபவம் செய்வீர்கள். எந்தவொரு பிரச்சனை எதிரில் வந்தாலும் கூட தன்னை இணைந்த சொரூபத்தில் அனுபவம் செய்வீர்கள். எனவே பயப்பட மாட்டீர்கள். (பாபாவுடன்) இணைந்த ரூபத்தின் நினைவு மூலம் எந்தவொரு கடின காரியமும் சுலபமாகி விடும். எப்பொழுதாவது அந்த மாதிரி ஏதாவது விஷயம் எதிரில் வந்தது என்றால் பாப்தாதாவின் நினைவை வைத்து தன்னுடைய சுமையை தந்தை மேல் வைத்து விட்டீர்கள் என்றால் லேசாகி விடுவீர்கள். ஏனென்றால், தந்தை பெரியவர் மேலும் நீங்கள் சிறிய குழந்தைகள்! பெரியவர்கள் மேல் தான் சுமையை வைப்பார்கள். சுமையை தந்தை மேல் வைத்து விட்டீர்கள் என்றால், எப்பொழுதும் தன்னை குஷியாக அனுபவம் செய்வீர்கள். ஃபரிஷ்தாவிற்கு சமமாக நடனமாடிக் கொண்டே இருப்பீர்கள். இரவு பகல் 24-மணி நேரமும் மனதால் நடனமாடிக் கொண்டே இருப்பீர்கள். தேக அபிமானத்தில் வருவது என்றால் மனிதன் ஆவது ஆத்ம அபிமானி ஆவது என்றால் ஃபரிஷ்தா ஆவது. எப்பொழுதும் அதிகாலை எழுந்தவுடனேயே தன்னுடைய ஃபரிஷ்தா சொரூபத்தின் நினைவில் இருங்கள். மேலும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எந்தவொரு விஷயம் எதிரில் வந்தாலும் அதை மிகவும் குஷியோடு கடந்து விடுவீர்கள். எப்படி தேவிகள் அசுரர்கள் மேல் நடனம் ஆடினார்கள் என்று காண்பிக்கிறார்கள். அப்படி ஃபரிஷ்தா சொரூபத்தின் நிலையில் இருப்பதினால் அசுர விஷயங்கள் மேல் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பீர்கள் ஃபரிஷ்தா ஆகி ஃபரிஷ்தாக்களின் உலகத்தில் சென்று விடுவீர்கள். ஃபரிஷ்தாக்களின் உலகம் எப்பொழுதும் நினைவில் இருக்கும்.

**3) பாவ கர்மங்களில் இருந்து விடுதலை அடைவதற்கான சாதனம் லைட் ஹவுஸின் நிலை!** அனைவரும் தன்னை லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ்

என்று நினைக்கிறீர்களா? எங்கு லைட் இருக்குமோ அங்கு எந்தவொரு பாவக் காரியமும் நடக்காது. அப்படி எப்பொழுதும் லைட் ஹவுசாக இருப்பதினால் மாயா எந்தவொரு பாவக் காரியமும் செய்விக்க முடியாது. எப்பொழுதும் புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள். அப்படி தன்னை புண்ணிய ஆத்மா என்று நினைக்கிறீர்களா? புண்ணிய ஆத்மா எண்ணத்தில் கூட எந்த பாவக் காரியமும் செய்ய முடியாது. மேலும் எங்கு தந்தையின் நினைவு இல்லையோ அங்கு பாவம் நடக்கும். தந்தை இருக்கிறார் என்றால் பாவம் இல்லை, பாவம் இருக்கிறது என்றால், தந்தை இல்லை. அப்படியானால் எப்பொழுதும் யார் இருக்கிறார்? பாவம் அழிந்து விட்டது தான் இல்லையா? எப்பொழுது புண்ணிய ஆத்மாவின் குழந்தைகளாக இருக்கிறீர்கள் என்றால் பாவம் அழிந்து விட்டது. எனவே இன்றிலிருந்து நான் புண்ணிய ஆத்மா பாவம் என் எதிரில் வர முடியாது என்ற இந்த உறுதியான எண்ணத்தை வையுங்கள். உங்களில் யார் இன்றிலிருந்து பாவத்தை எண்ணத்திலும் மற்றும் கனவிலும் வர விட மாட்டோம் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். திட எண்ணம் என்ற தீக்குச்சி மூலம் 21-ஜென்மங்களுக்காக பாவம் அழிந்தது. பாப்தாதாவும் அந்த மாதிரி தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். சுயம் தந்தை குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார் என்ற இது கூட எவ்வளவு பாக்கியம்! இந்த நினைவில் எப்பொழுதும் குஷியாக இருங்கள் மேலும் அனைவரையும் குஷி அடையச் செய்யுங்கள்.

**4) சுயதரிசன சக்கரதாரி ஆகி சுயராஜ்யம் மற்றும் உலக ராஜ்யத்தின் அதிகாரி ஆகுங்கள்!** சங்கம யுகத்தில் தந்தை மூலமாக கிடைத்த அனைத்து பட்டங்களும் நினைவில் இருக்கிறதா? பாப்தாதா குழந்தைகளுக்கு சுயதரிசன சக்கரதாரி என்ற பட்டத்தைத் தான் முதலில் கொடுக்கிறார். பாப்தாதா மூலமாக கிடைத்த இந்த பட்டம் நினைவில் இருக்கிறதா? எந்த அளவு சுயதரிசன சக்கரதாரி ஆவீர்களோ அந்த அளவு மாயாவை வென்றவர் ஆவீர்கள். அப்படி சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டே இருக்கிறீர்களா? சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டே எப்பொழுதாவது சுயத்திற்கு பதிலாக மற்ற தரிசன சக்கரமோ சுற்றிவிடவில்லையே? சுயதரிசன சக்கரதாரி ஆகுபவர் சுயராஜ்யம் மற்றும் உலக ராஜ்யத்தின் அதிகாரி ஆகி விடுகிறார்கள். சுயராஜ்ய அதிகாரியாக இப்பொழுது ஆகியிருக்கிறீர்களா? யார் இப்பொழுது சுயராஜ்ய அதிகாரியாக ஆகிறாரோ அவர் தான் எதிர்காலத்தில் இராஜ்ய அதிகாரி ஆக முடியும். இராஜ்ய அதிகாரி ஆவதற்காக கட்டுப்படுத்தும் சக்தி வேண்டும். எப்பொழுது எந்தக் கர்மேந்திரியம் மூலமாக என்ன காரியம் செய்விக்க விரும்புகிறீர்களோ அதைச் செய்விக்க முடிய

வேண்டும். இதைத் தான் அதிகாரி என்று சொல்வது. அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறதா? எப்பொழுதாவது கண்கள் மற்றும் வாய் ஏமாற்றத்தைக் கொடுக்கவில்லையே? எப்பொழுது கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறது என்றால், எந்தவொரு கர்மேந்திரியமும் ஒருபொழுதும் எண்ண ரூபத்தில் கூட ஏமாற்ற முடியாது.

**5) பார்வையாளரின் ஆசனம் மரியாதைக்குரிய ஆசனம் ஆகும். இந்த ஆசனத்தில் அமருபவர் பிரச்சனைகளிலிருந்து விடுபடுகிறார்!** என்னென்ன நாடகத்தில் நடக்கிறதோ அதில் நன்மை தான் அடங்கியிருக்கிறது. இந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் வருமானம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். விவேகம் நிறைந்த குழந்தைகள் என்னென்ன நடக்கிறதோ அது நன்மை பயப்பது என்று தான் நினைப்பார்கள் ஏன், என்ன என்ற கேள்வி விவேகம் நிறைந்த குழந்தைகளின் மனதில் எழ முடியாது. ஒருவேளை இந்த சங்கமயுகம் நன்மை பயக்கும் யுகம், தந்தையும் நன்மை செய்பவர் என்ற நினைவு இருக்கிறது என்றால், உயர்ந்த நிலை உருவாகிக் கொண்டே இருக்கும். வெளிமுகமாக நஷ்டம் தென்பட்டால் கூட, அந்த நஷ்டத்திலும் நன்மை அடங்கியிருக்கிறது. அந்த மாதிரி நிச்சயம் இருக்க வேண்டும். எப்பொழுது தந்தையின் துணை மற்றும் கை இருக்கிறது என்றால் நன்மையின்மை நடக்க முடியாது. இப்பொழுது சோதனை அதிகமாக வரும் அதில் ஏன், என்ன என்ற கேள்வி எழ வேண்டாம். என்ன நடந்தாலும் அதை நடக்க விடுங்கள். தந்தை என்னுடையவர் நான் தந்தையுடையவன் என்றால் யாரும் எதுவும் செய்ய முடியாது. இதைத் தான் நிச்சயபுத்தி என்று சொல்வது விஷயம் மாறினாலும் நீங்கள் மாறாதீர்கள். இது தான் நிச்சயம். எப்பொழுதாவது மாயாவினால் தொந்தரவு ஆவதில்லையே? சில நேரம் சூழ்நிலைகளினால் சில நேரம் வீட்டில் இருப்பவர்களினால், சில நேரம் பிராமணர்கள் மூலமாக பாதிக்கப்படுவதில்லையே? மரியாதைக்குரிய ஆசனத்தில் அமருங்கள். பார்வையாளரின் ஆசனம் மரியாதைக்குரிய ஆசனம் ஆகும். இதிலிருந்து விலகி இருக்கா விட்டால் பிரச்சனைகள் முடிந்து விடும். ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் பாதிக்கப்பட மாட்டேன், மேலும் பாதிப்பை செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி எடுங்கள். எப்பொழுது ஞானம் நிறைந்த தந்தையின் குழந்தை ஆகி விட்டீர்கள், மூன்று காலங்களையும் தெரிந்தவராக ஆகி விட்டீர்கள் என்றால், உங்களிடம் எப்படி பிரச்சனைகள் வர முடியும்? எண்ணத்தில் கூட பிரச்சனை இருக்க வேண்டாம். ஏன் என்ற வார்த்தையை அகற்றி விடுங்கள். ஏன் என்ற வார்த்தைக்குப் பின்னால் நீண்ட வரிசை இருக்கிறது.

# 1981 அவ்யக்த முரளி

**விடைபெறும் நேரம்:** மேளாவைச் சந்திப்பு விழாவை) பார்த்து குஷி ஏற்படுகிறது தான் இல்லையா? இதுவும் நாடகத்தில் என்னென்ன நடக்கிறதோ அது நல்லதிலும் நல்லதாக இருக்கிறது. இதுவோ ஒன்றும் இல்லை. இன்னும் மிக அதிகமாக வருவார்கள். வசதிகளை அதிகரித்துக் கொண்டே இருப்பீர்கள். அதிகரிப்பவர்கள் அதிகரித்துக் கொண்டே இருப்பார்கள். எப்பொழுது மதுபன்னில் அதிக கூட்டம் கூடி விடுமோ அப்பொழுது பக்தியில் நினைவுச்சின்னமாகும். எவ்வளவு உருவாக்கிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். இந்த வரதானமும் கிடைத்திருக்கிறது. இதைத் தான் நினைவுச் சின்னத்தில் கடல் வரை சென்றடைந்து விட்டது என்று கதைகளை உருவாக்கிக் காண்பிக்கிறார்கள். இருந்தும் சின்னதாகி விட்டது. இப்பொழுது அபு ரோடு வரையிலாவது சென்றடையுங்கள். அப்பொழுது தான் மகிமை ஏற்படும். அபுரோடில் தொடங்கி மௌன்ட் அபு வரை அமர்ந்தீர்கள் என்றால் தான் பிரத்யக்ஷம் ஏற்படும். இது என்ன நடக்கிறது என்று யோசிப்பார்கள். கவனமோ செல்லும் தான் இல்லையா! பிரம்மா குமாரிகள் எதுவரை வந்தடைந்து விட்டார்கள். இப்பொழுது இதுவோ குழந்தைகளின் சந்திப்பு! ஆனால் குழந்தைகள் கூட பக்தர்களும் எப்பொழுது சேர்ந்து விடுவார்களோ அப்பொழுது என்னவாகும். இப்பொழுதோ மிகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எப்பொழுது தந்தையின் வருகை இருக்கிறது என்றால் குழந்தைகளும் அதிகரிப்பார்கள் வளர்ச்சி அடையவில்லை என்றால் எதற்காக சேவை செய்கிறோம். சேவையின் அர்த்தமே வளர்ச்சி நல்லது.

**வரதானம்: சகித்துக் கொள்ளும் சக்தி மூலமாக அழியாத மற்றும் இனிய பலனை பெறக்கூடிய அனைவரின் அன்பிற்குரியவர் ஆகுக!**

சகித்துக் கொள்வது என்பது இறப்பது அல்ல! ஆனால் அனைவரின் இதயத்தில் அன்போடு வாழ்வது எப்படிப்பட்ட எதிரியாக இருந்தாலும், இராவணனை விட கொடுமையானவனாக இருந்தாலும், ஒரு தடவை இல்லை பத்து தடவை சகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும் சகித்துக் கொள்ளும் சக்தியின் பலன் அழியாதது. மேலும் இனிமையானது. நான் இவ்வளவு சகித்துக் கொண்டேன் என்றால் இவரும் கொஞ்சம் செய்ய வேண்டும் என்ற இந்த பாவனையை மட்டும் வைக்காதீர்கள். அற்ப காலத்து பலனின் பாவனை வைக்காதீர்கள். இரக்க உணர்வு வையுங்கள். இது தான் சேவைக்கான உள்உணர்வாக இருக்க வேண்டும். சேவை உணர்வுள்ளவர் பிறரது பலஹீனங்களை உள்ளடக்கிக் கொள்வார். அவர்களை எதிர்ப்பதில்லை.

**சுலோகன்: எது நடந்து முடிந்து விட்டதோ அதை மறந்து விடுங்கள், கடந்த விஷயங்களிலிருந்து கற்றுக் கொண்டு வரும் காலத்திற்காக எப்பொழுதும் எச்சரிக்கை வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடின உழைப்பை முடிவுக்கு கொணர்ந்து நிரந்தர யோகி ஆகுங்கள்!

இன்று பரந்த இதயமுள்ள தந்தை (திலாராம்) குழந்தைகளின் இதயப்பூர்வமான ஈடுபாட்டைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். இன்றைய சந்திப்பு திலாராம் தந்தை மற்றும் அன்பிற்குரிய தில்ரூபா) குழந்தைகளினுடையது எதிரில் இருந்தாலும், அல்லது உடலால் தூரமாக இருந்தாலும் ஆனால் இதயத்திற்கு அருகாமையில் இருக்கிறார்கள். தூரத்தில் இருக்கும் குழந்தைகளும் தங்களுடைய இதயப்பூர்வமான ஈடுபாட்டின் காரணமாக திலாராம் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள். யாருடைய இதயத்தில் இருந்து பாபாவின் இசை தான் ஒலித்துக் கொண்டே இருக்கிறதோ அந்த மாதிரி தில்ரூபா குழந்தைகள் அது முடிவில்லா இசை எல்லைக்குட்பட்டது அல்ல - அந்த மாதிரி குழந்தைகள் இப்பொழுது கூட தந்தையின் கண்களில் நிரம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பின் பிரதிபலனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். திலாராம் தந்தையின் தில்தக்த் நஷீன்களோ (இதய சிம்மாசனதாரிகளோ) அனைத்து குழந்தைகளும் தான் ! இருந்தாலும் வரிசைக்கிரமம் என்று தான் சொல்வோம். எப்படி அனைவருமே மாலையின் மணிகள் தான் ! ஆனால் 8-எங்கே ? 16000-ன் கடைசி மணி எங்கே? இருவர்களையுமே மாலையின் மணிகள் என்று தான் சொல்வோம் ஆனால் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. இந்த வரிசை எண்ணிற்கான ஆதாரம், முக்கிய சுலோகன் 'தூய்மை ஆகுங்கள் மற்றும் யோகி ஆகுங்கள். ஒருவர் யோகா செய்யும் யோகி மற்றவர் சதா யோகாவில் இருக்கக்கூடிய யோகி மூன்றாமவர் யோகா மூலமாக தடைகளை அகற்றுவதற்கு பாவத்தை அழிப்பதற்கான கடினமாக உழைப்பவர். எவ்வளவு உழைப்போ அந்த அளவு பலன் பெறுபவர். எப்படி இன்றைய நாட்களில் உலகத்தில் ஒருவர் பூர்வ ஜென்மத்தின், பக்தியின் கணக்குப்படி செய்த உயர்ந்த காரியத்தின் ஆதாரத்தினால் எல்லைக்குட்பட்ட இராஜ்யத்தின் ஆஸ்தியை கடின உழைப்பு எதுவுமின்றி அடைகிறார். ஆஸ்தியின் அதிகாரத்தினால் பிராப்திகிடைக்கிறது. இந்தக் காரணத்தினால் இராஜ பதவியின் போதை இயல்பாகவே இருக்கிறது. நான் இராஜ்குமார் அல்லது இராஜா என்று நினைவு செய்ய வேண்டியதில்லை.

## 1981 அவ்யக்த முரளி

இயற்கையான உணர்வு மற்றும் செல்வத்தின் பிராப்தி இருக்கிறது. இன்றைய நாட்களிலோ இராஜாக்கள் இல்லை. இது துவாபரயுக ஆரம்ப கால விஷயம் சதோகுண பக்தியின் காலத்தின் விஷயம் அந்த மாதிரி நம்பர் ஒன் குழந்தைகள் இயல்பாகவே யோகி வாழ்க்கையில் இருக்கிறார்கள். பிராப்தியின் களஞ்சியம் ஆஸ்தியின் ஆதாரத்தில் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது. இன்று சுகம் கொடுங்கள். இன்று சாந்தி கொடுங்கள் என்று உழைப்பதில்லை. எண்ணத்தின் பொத்தானை அழுத்தியவுடன் சுரங்கம் திறந்து விட்டது. எப்பொழுதும் நிரம்பியவர்களாக இருக்கிறார்கள் அதாவது நிறைந்தவர்களாக, யோகா எப்பொழுதுமே இருந்து கொண்டே இருக்கிறது.

இரண்டாம் நம்பரைச் சேர்ந்தவர்கள் -யோகா செய்பவர்கள். அவர்கள் இன்றைய நாட்களின் வியாபாரிகள் மாதிரி, சில நேரம் அதிகம் சம்பாதிக்கிறார்கள் மற்றும் சில நேரம் குறைவாக சம்பாதிக்கிறார்கள். இருந்தும் பொக்கிஷங்கள் இருக்கின்றன. சம்பாத்தியத்தின் போதைஇருக்கிறது. குஷியும் இருக்கிறது ஆனால் நிரந்தரமாய் ஒரே சீரான நிலையில் இருப்பதில்லை. பார்த்தோம் என்றால் சில நேரம் மிக நிரம்பிய நிலையின் சொரூபம் இருக்கும். கூடவே சில நேரம் இப்பொழுது இன்னும் வேண்டும். இப்பொழுது இன்னும் வேண்டும் என்ற எண்ணம் கடின உழைப்பில் கொண்டு வந்து விடும். எப்பொழுதும் நிரம்பியவராக, எப்பொழுதும் ஒரே சீராக இருக்க மாட்டார். எப்பொழுதும் தன் மேல் திருப்தியாக இருக்க மாட்டார். இவர்கள் தான் யோகா செய்பவர்கள். யோகா செய்பவர்கள் என்றால் துண்டிக்கப்படும் போது மீண்டும் இணைக்கிறார்கள்.

மூன்றாமவர் -எப்படி இன்றைய நாட்களின் வேலை செய்பவர்கள் சம்பாதித்தோம், சாப்பிட்டோம் என்கிற நிலை எவ்வளவு சம்பாத்தித்தார்களோ அந்த அளவு சௌகரியமாக அருந்தினார்கள் ஆனால் கையிருப்பு சேமிப்பு ஆகாது. எனவே எப்பொழுதும் குஷியில் நடனமாடுபவர்களாக இருக்க மாட்டார். கடின உழைப்பின் காரணமாக சில நேரம் மனமுடைந்து போவோராகவும் சில நேரம் மனதால் குஷி அடைபவராகவும் இருப்பார்கள். அந்த மாதிரி மூன்று விதமான குழந்தைகள் இருக்கிறார்கள்.

அனைவருக்கும் ஆஸ்தியாக அனைத்து பிராப்திகளின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது. நீங்கள் அதிகாரிகள், இயற்கையான யோகி இயற்கையான சுயராஜ்ய அதிகாரி ஆவீர்கள். குழந்தையாக இருப்பவரிலிருந்து தந்தையின் பொக்கிஷத்தின் அதிகாரி ஆகுபவர்கள். அப்படியென்றால் இந்த அளவு கடின

# 1981 அவ்யக்த முரளி

உழைப்பு ஏன் செய்கிறீர்கள். மாஸ்டர் படைப்பவர், வேலைக்காரனுக்குச் சமமாக கடினமாக உழைப்பதா?. இது ஏன்? 200-ரூபாய் சம்பாதிக்கிறார்கள் மற்றும் 200-ரூபாயை சாப்பிடுகிறார்கள். 2000-சம்பாதிக்கிறார்கள் மற்றும் 2000-சாப்பிடுகிறார்கள். அப்படி 2-மணி நேரம் யோகா செய்கிறார்கள் மற்றும் 2-மணி நேரம் அதற்கான பலனைப் பெறுகிறார்கள். இன்று 6-மணி நேரம் யோகாசெய்தேன், இன்று 4-மணிநேரம் யோகா செய்தேன் என்ற இது ஏன்? வாரிசு ஒருபொழுதும் 2-நாட்களுக்கான இராஜா. 4-நாட்களுக்கான இராஜா என்று சொல்வதில்லை. எப்பொழுதும் தந்தையின் குழந்தைகள் எப்பொழுதும் பொக்கிஷத்தின் அதிபதிகள். கூறுவது தந்தை, ஆனால் செய்வது நினைவின் கடின உழைப்பு, இரண்டு விஷயங்களும் ஒன்று இன்னொன்றுக்கு விபரீதமானது. எனவே நான் ஒரு சிரேஷ்ட ஆத்மா, குழந்தையாக இருப்பவன் அதிபதி ஆகுபவன் என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரி ஆவேன், இழந்தேன் - அடைந்தேன், இழந்தேன் - அடைந்தேன் என்ற இந்த விளையாட்டை செய்யாதீர்கள். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது. பிறகு ஏன் இழக்க வேண்டும் மற்றும் ஏன் அடைய வேண்டும்? இல்லை என்றால் இந்த பாடலை மாற்றுங்கள் செய்யுங்கள். அடைந்து கொண்டிருக்கிறேன், அடைந்து கொண்டிருக்கிறேன் என்ற இது அதிகாரியின் வார்த்தைகள் அல்ல. நீங்கள் சம்பன்னமான தந்தையின் குழந்தைகள், கடலின் குழந்தைகள் ஆவீர்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள். நிரந்தர யோகி ஆகுங்கள். நான் யார்? நான் தான் பிராமணன். தேவதை ஆகுபவன் மற்றும் நான் சத்ரியனிலிருந்து இருந்து தேவதை ஆகுபவன் குழந்தைகளின் கடின உழைப்பைப் பார்த்து தந்தைக்கு இரக்கம் வருகிறது. இராஜாவின் குழந்தைகள் வேலை செய்வதா? இது அழகாக இருக்கிறதா? அனைவரும் எஜமானன் ஆகுங்கள்

இன்றோ பார்ட்டிகளுடன் மட்டும் தான் சந்திக்க வேண்டும் ஆனால் முரளி ஏன் கூறப்பட்டது, இதற்கும் இரகசியம் இருக்கிறது. இன்று அதிக மகாவீர் குழந்தைகள் பாப்தாதாவை ஈர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று பாப்தாதா அவர்களை முன்னுக்கு வைத்து முரளி கூறிக் கொண்டிருக்கிறார். பாபா மற்றும் வெளிநாட்டின் அதிகமான மகாவீர் குழந்தைகள் நினைவு செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் அந்த மாதிரி சேவாதாரி, கட்டளைப்படி நடக்கும் இயல்பான யோகி குழந்தைகளுக்கு விசேஷ நினைவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

மதுபன் நிவாசி மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகள் யார் மிக அன்புடன் சாதகப் பறவையாகி முரளி கேட்பதற்கு எப்பொழுதும் அபிலாசை உள்ளவர்களாக

இருக்கிறார்களோ, அந்த மாதிரி சேவைக்குத் தகுதியான, அன்பு நிறைந்த, அன்பிலேயே மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மதுபன் நிவாசி மற்றும் யாரெல்லாம் கீழே அமர்ந்திருக்கிறார்கள், ஆனால் பாப்தாதாவின் கண்களின் எதிரிலேயே இருக்கிறார்கள் அந்த மாதிரி களைப்பற்ற சேவாதாரி குழந்தைகளுக்கு விசேஷ அன்பு நினைவுகள் கூடவே எதிரில் அமர்ந்திருக்கும் அதிர்ஷ்ட நட்சத்திரங்களுக்கும் விசேஷ அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வங்காளம், பீகார், நேபாளம் மண்டலத்தைச் சேர்ந்த சகோதரசகோதரிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு:** முரளியையோ கேட்டீர்கள் இப்பொழுது கேட்ட பிறகு சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். ஒன்று நினைவில் கொண்டு வருவது மற்றும் இன்னொன்று சொரூபத்தில் கொண்டு வருவது என்னென்ன கேட்கிறீர்களோ அவை அனைத்தையும் நினைவிலேயோ கொண்டு வருகிறீர்கள், அஞ்ஞானிகள்கூட கேட்டதை நினைவு செய்கிறார்கள் ஆனால் ஞானத்தின் அர்த்தமே சொரூபத்தில் கொண்டு வருவது. அப்படியானால் எந்த விஷயத்தை சொரூபத்தில் கொண்டு வருவீர்கள்? குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன். இதைத் தான் சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். முயற்சி செய்வதின் கூடவே பிராப்தியின் அனுபவம் இருக்கட்டும். இப்பொழுதோ முயற்சி செய்பவர்கள் பிராப்தி எதிர்காலத்தில் கிடைக்கும் என்று அப்படியில்லை. சங்கமயுகத்தின் விசேஷமே இந்த நேரம் முயற்சி செய்வது உடனே அடுத்த நேரம் பிரத்யக்ஷ பலன். இந்த நேரம் நினைவு சொரூபம் உடனே அடுத்த நேரம் பிராப்தியின் அனுபவம். எதிர்காலத்தின் உத்திரவாதமோ இருக்கிறது ஆனால் எதிர்காலத்தையும் விட உயர்ந்த பாக்கியம் இந்த நேரத்திற்கானது. இந்த நேரத்தின் ஆஸ்தியையோ அடைந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அடைந்து விட்டீர்களா அல்லது அடைய வேண்டுமா? ஒருவேளை அடைந்து விட்டீர்கள் என்றால், பிறகு அமிர்தவேளையில் முறையீடு செய்ய மாட்டீர்கள். ஒன்று நினைவு இருக்கும் அல்லது முறையீடு இருக்கும். எங்கு நினைவு இருக்கிறதோ அங்கு முறையீடு இருக்காது, மேலும் எங்கு முறையீடு இருக்கிறதோ அங்கு நினைவு இருக்காது. அப்படியானால் முறையீடுகள் முடிவடைந்து விட்டனவா? கேள்விக்குறி அகன்று விட்டதா? முறையீட்டில் இருப்பதே கேள்விக்குறி மற்றும் நினைவில் இருப்பது முற்றுப்புள்ளி அதாவது புள்ளி (சூன்யம்). புள்ளி சொரூபம் ஆகி புள்ளியை நினைவு செய்ய வேண்டும். தந்தையும் புள்ளி நீங்களும் புள்ளி. அப்படி பரிவர்த்தன பூமியில் (மதுபன்னில்) வந்து ஏதாவது விசேஷ பரிவர்த்தனை அவசியம் செய்ய வேண்டும் இப்பொழுது முறையீடுகளை விட்டு விட்டு இயல்பான

யோகி ஆகிச் செல்ல வேண்டும். முறையீட்டில் குழப்பம் இருக்கும் குஷி இருக்காது அப்படி தந்தையிடமிருந்து குஷியின் பொக்கிஷத்தைப் பெற வேண்டும். குழப்பத்தை அல்ல குழப்பமோ குடும்ப தந்தையின் பொக்கிஷமாக இருந்தது, இப்பொழுது அதுவோ அழிந்து விட்டது. குடும்ப உறவுகள் முடிந்து விட்டன என்றால் முறையீடுகள் முடிந்து விட்டன. ஆன்மீகத் தந்தை மற்றும் ஆன்மீக ஆஸ்தி அப்படி முறையீடுகளின் பட்டியல் முடிவடைந்து விட்டன தான் இல்லையா? கிழித்து எரிந்து விட்டீர்களா? ஒருவேளை அழித்திருந்தால் கூட எழுதப்பட்டிருந்தது என்று கூறுவார்கள், எனவே கிழித்து அழித்து விடுங்கள். சேவைக்காக நேரம் கொடுங்கள் எதுவரை நீங்கள் தயாராகவில்லையோ அதுவரை இராஜ்யம் வருவதில் தாமதம் ஆகிறது. கால சேவைக்கான ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? மகா யக்ஞத்திலேயோ அனைவரும் சேவை செய்தீர்கள் இல்லையா? பிராமணர்களின் கூட்டம் கூடுவது, ஆஜர் ஆவதே சேவை தான் இதுவொன்றும் குறைந்த விஷயம் இல்லை சரியான நேரத்தில் ஆஜர் ஆவது எவரெடி ஆவது, சகித்துக் கொள்ளும் சக்தியை கடைப்பிடிக்க வேண்டும் என்ற லட்சியம் வைப்பது. இவைகளும் பதிவேட்டில் சேமிப்பாகின்றன. பின்பு இறுதி முடிவோடு இதன் தொடர்பு இருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் மூன்று மாதங்கள், ஆறு மாதங்களில் பரீட்சை வைக்கிறார்கள். பிறகு அனைத்து பரீட்சைகளின் மதிப்பெண்களை இறுதியில் ஒன்றாகச் சேர்த்து முடிவை வெளியிடுகிறார்கள். அப்படி என்னென்ன பிராமணர்களின் உயர்ந்த காரியம் நடக்கிறதோ அவற்றில் சகயோகி ஆவது, இதற்கும் மதிப்பெண்கள் இருக்கிறது. அந்த மதிப்பெண்கள் உண்டு. முடிவிற்காக சேமிப்பாகி விட்டது. சகித்துக் கொண்டீர்கள், உடல். மனம். பணத்தை ஈடுபடுத்தினீர்கள் ஈடுபடுத்தினீர்கள் என்றால் அடைந்தீர்கள். டைரக்ஷனிற்கு ஏற்றபடி செய்தீர்கள், இதற்கும் மதிப்பெண்கள் சேமிப்பாகிறது. மகாயக்ஞத்தில் வந்தீர்கள் மட்டும் என்று அப்படியில்லை ஆனால் இறுதி முடிவிற்கான மதிப்பெண்கள் சேமிப்பு ஆகின. அப்படியானால் சேவையாக ஆனது இல்லையா. செய்தியை நாலாபுறங்களிலும் பலமாக ஒலிக்க வைப்பதும் சேவையின் ஒரு பாடம் ஆகும். சேவையின் அனேக சொரூபங்கள் இருக்கின்றன, அப்படி இந்த மாதிரி ஒன்றாகக் கூடி கூட்டமாக செய்தியை நாலாபுறங்களிலும் மிக சப்தமாக ஒலிக்கச் செய்வதும் சேவை ஆகும். பரிவாரத்தைப் பார்த்து குஷி ஏற்பட்டது தான் இல்லையா? எத்தனை சகோதரசகோதரிகளைப் பார்த்தீர்கள். இவ்வளவு பெரிய குடும்பம் ஒருபொழுதும் எந்த யுகத்திலும் யாருக்கும் இருப்பதில்லை. இதுவோ ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. முழு பரிவாரமோ இல்லை தான் இல்லையா? முழு பரிவாரத்தையும் ஒன்றாகக் கூட்டினோம் என்றால் முழுமையான டெல்லியை நம்முடையதாக ஆக்க வேண்டியதாக இருக்கும் அபுவில்

ஒன்றாகக் கூட்டினோம் என்றால், அபுரோடு வரை நம்முடையதாக ஆக்க வேண்டியதாக இருக்கும். எங்களுடைய வீட்டிற்கு வாருங்கள் என்று அனைவருமே வரவேற்கும் அந்த நாளும் வரும். கல்கத்தாவில் உள்ள விக்டோரியா மைதானத்தை தயார் செய்து உங்களுக்குக் கொடுப்பார்கள். வாருங்கள். வரவேற்கிறோம் என்று கூறுவார்கள். மெது மெதுவாக இந்த செய்தி பரவும். இப்பொழுதோ இவர்கள் ஒன்றும் சாதாரணமானவர்கள் இல்லை என்று நினைக்கிறார்கள் இல்லையா? பிரம்மாபாபா அவ்யக்தம் ஆன பிறகு இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்த்து பலியாகி விடுகிறார்கள் மற்ற இடங்களிலுள்ள இயக்கங்கள் உடைந்து விடுகின்றன. இங்கு வளர்கிறது. இந்த அதிசயத்தைப் பார்க்கிறார்கள். அனைவருமே அவரவர்களின் சுத்த எண்ணத்தோடு சகயோகத்தின் சக்தி, இணைந்த குழுவின் சக்தியோடு சேவை செய்தார்கள். இப்பொழுது அனைத்து இடங்களிலிருந்தும் அழைப்பிதழ் வரும். இந்த ஜனாதிபதி மாளிகை உங்களுடைய வீடாக மாறி விடும்.

**2) தன்னை எப்பொழுதும் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவராக நினைக்கிறீர்களா?** இந்த இதய சிம்மாசனம் முழுக் கல்பத்திலும் இந்த சங்கமயுகத்தை தவிர வேறு ஒருபொழுதும் கிடைக்க முடியாது. இதய சிம்மாசனத்தில் யார் அமர முடியும். யாருடைய இதயத்தில் எப்பொழுதும் ஒரே ஒரு திலாராம் தந்தை நிறைந்திருக்கிறாரோ, ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற நிலையில் இருப்பவர்களுக்கான ஸ்தானம் இதய சிம்மாசனம். அப்படியானால் நீங்கள் எந்த ஸ்தானத்தில் இருக்கிறீர்கள்? ஒருவேளை ஆசனத்தை விட்டு விடுகிறீர்கள் என்றால் தூக்கு மேடைக்குச் சென்று விடுகிறீர்கள். பல ஜென்மங்களுக்காக மாயாவின் தூக்கில் மாட்டிக் கொள்கிறீர்கள். இருந்தால் தந்தையின் இதய சிம்மாசனம் அல்லது மாயாவின் தூக்கு மேடை அப்படியானால் எங்கு இருக்க வேண்டும்? ஒரு தந்தையைத் தவிர வேறு யாருடைய நினைவும் வரலாகாது. தன்னுடைய உடலின் நினைவும் வேண்டாம். ஒருவேளை உடலின் நினைவு வந்தது என்றால், உடலோடு சேர்த்து உடலின் உறவுகள், பொருட்கள், உலகம் அனைத்தும் ஒன்றிற்கு பின்னால் ஒன்றாக வந்து விடும். கொஞ்சம் எண்ண (சங்கல்பத்தில்) கூட ஒருவேளை சூட்சும கயிறு கட்டப்பட்டு இருக்கிறது என்றால், அது தன் பக்கம் இழுத்து விடும். எனவே எண்ணம், சொல், செயலில் எந்தவொரு சூட்சும கயிறும் இருக்க வேண்டாம். எப்பொழுதும் விடுபட்டு இருங்கள். அப்பொழுது தான் மற்றவர்களையும் விடுவிக்க முடியும். இன்றைய நாட்களில் முழு உலகமும் மாயாவின் வலையில் மாட்டிக் கொண்டு துடித்துக் கொண்டிருக்கிறது. அவர்களை இந்த வலையில் இருந்து மீட்பதற்காக முதலில் சுயம் தான் விடுபட

வேண்டும். சூட்சும எண்ணத்தில் கூட பந்தனம் இருக்க வேண்டாம். எந்த அளவு பந்தனமற்றவராக இருப்பீர்களோ அந்த அளவு தன்னுடைய உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க முடியும். பந்தனம் இருந்தது என்றால் உயர்வாக இருக்க விரும்பினால் கூட கீழே வந்து விடுவீர்கள்.

**3) நீங்கள் அனைவரும் உங்களை இந்த உலகத்திற்குள் அனைத்து ஆத்மாக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்ந்த ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா?** சுயம் தந்தை என்னை தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார் என்று நினைக்கிறீர்களா? முழு உலகத்திலிருந்து தந்தை எவ்வளவு குறைந்த ஆத்மாக்களை தெரிந்தெடுத்திருக்கிறார். மேலும் அவர்களில் நான் உயர்ந்த ஆத்மா ஆவேன். இந்த எண்ணம் வைத்தவுடனேயே என்ன அனுபவம் ஆகும். இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட சுகத்தின் பிராப்தி ஏற்படும். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட சுகத்தின் அனுபவம் ஆகிறதா அல்லது கேட்டு மட்டும் இருக்கிறீர்களா? நடைமுறையில் அனுபவம் இருக்கிறதா அல்லது ஞானம் மட்டும் இருக்கிறதா? ஏனென்றால் ஞானம் என்றால் அறிவு, அறிவின் அர்த்தமே அனுபவத்தில் கொண்டு வருவது கேட்பது, கூறுவது வேறாகும், அனுபவம் செய்வது வேறாகும். இந்த உயர்ந்த ஞானம் அனுபவம் நிறைந்தவராக ஆவதற்கானது. துவாபர யுகத்தில் தொடங்கி அனேக விதமான ஞானம் கேட்டிருக்கிறீர்கள் மற்றும் கூறியிருக்கிறீர்கள். எதை அரைக் கல்பமாக செய்தீர்களோ அதை இப்பொழுதும் செய்தீர்கள் என்றால், அது என்ன பெரிய விஷயம் | இது புதிய வாழ்க்கை, புதிய யுகம், புது உலகத்திற்கான புதிய ஞானம், என்றால் இதனுடைய புதுமையே எப்பொழுது அனுபவத்தில் கொண்டு வருகிறீர்களோ அப்பொழுது தான் ஒவ்வொரு வார்த்தையும், ஆத்மா, பரமாத்மா, சக்கரத்தின் எந்தவொரு ஞானத்தின் வார்த்தையும் அனுபவத்தில் வர வேண்டும். உணருதல் இருக்க வேண்டும். நான் ஒரு ஆத்மா என்ற இந்த அனுபவம் இருக்க வேண்டும். பரமாத்மாவின் அனுபவம் இருக்க வேண்டும். இதைத் தான் புதுமை என்று சொல்வது. புதிய நாள், புதிய இரவு, புதிய குடும்பம், அனைத்தும் புதியது என்று அப்படி அனுபவம் ஆகிறதா? பக்தியின் பலனாக இப்பொழுது ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்றால் அந்த மாதிரி ஞானத்தின் அனுபவியாக ஆகுங்கள் அதாவது சொரூபத்தில் கொண்டு வாருங்கள்.

**4) அனைவரும் வெற்றி இரத்தினங்கள் தான் இல்லையா?** வெற்றிக் கொடி உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? வெற்றி நம்முடைய பிறப்புரிமை ஆகும். இது வாயினால் கூறப்படும் கோஷம் மட்டுமில்லை ஆனால் நடைமுறை

வாழ்க்கையின் கோஷம் ஆகும். ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவர், இப்பொழுதிற்கு மட்டுமின்றி ஒவ்வொரு கல்பத்திற்கும் எண்ணிலடங்கா தடவைகள் வெற்றி அடைந்தவர்கள். அந்த மாதிரி வெற்றி அடைபவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். தோல்வி அடைவதில் துக்க உணர்வு வரும். யார் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் குஷியாக இருப்பார், ஒருபொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் துக்க உணர்வு வர முடியாது. துக்கமான உலகத்திலிருந்து விலகி வந்து விட்டார். இரவு முடிவடைந்தது, அதிகாலையில் வந்து விட்டார் என்றால் துக்க உணர்வு எப்படி வர முடியும்? வெற்றிக் கொடியை எப்பொழுதும் பறக்க விட்டுக் கொண்டே இருங்கள், கொடி கீழே வர வேண்டாம்.

**விடைபெறும் நேரத்தில் தாதிகளுடன்:** பாப்தாதாவும் அன்பின் பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கிறார். விடுவிக்க விரும்பினால் கூட விடுவிக்க முடியாது. எனவே தான் பக்தியில் கூட பந்தனத்தின் படத்தை காண்பித்திருக்கிறார்கள். நடைமுறையில் அன்பின் பந்தனத்தில் அவ்யக்தமாக இருந்த போதும் கட்டிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஸ்தூலமான விஷயங்களிலிருந்து விடுவிக்கிறோம். இருந்தும் விடுபட முடிவதில்லை. எனவே நீங்களும் பந்தனத்தில் இருக்கிறீர்கள். தந்தையும் பந்தனத்தில் இருக்கிறார் (வெளிநாட்டினரின் பக்கம் சமிக்ஞை செய்து) இவர்களும் தபஸ்யா செய்து கொண்டிருக்கிறார்கள் இரவும் பகலுமாய், எனவே தானே மந்திரம் போட்டு விட்டார்கள் என்று கூறுகிறார்கள்.

**வரதானம்: ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை உயர்ந்ததாக மற்றும் பயனுள்ளதாக ஆக்கக்கூடிய ஞான சொரூப, அறிவு நிறைந்தவர் ஆகுக!**

யார் ஞான சொரூபம், அறிவாளி ஆகி எந்தவொரு எண்ணம் மற்றும் காரியம் செய்கிறாரோ அவர் வெற்றி அடைபவர் ஆகுகிறார். இதனுடைய நினைவுச் சின்னமாக பக்தி மார்க்கத்தில் காரியத்தை தொடங்கும் நேரத்தில் ஸ்வஸ்திகா வரைகிறார்கள் மற்றும் கணேஷரை நினைவு செய்வார்கள். இந்த ஸ்வஸ்திகா சுயநிலையில் நிலைத்திருப்பதற்கான மற்றும் கணேஷர் ஞானம் நிறைந்த நிலையின் வெளிப்பாபாகும். நீங்கள் குழந்தைகள் இப்பொழுது ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை செய்கிறீர்கள் என்றால் வெற்றி சுலபமாக அனுபவம் ஆகிறது.

**சுலோகன்: பிராமண வாழ்க்கையின் விசேஷமே குஷி, எனவே குஷியின் தானம் செய்து கொண்டே இருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றிக்கான இரண்டு முக்கிய ஆதாரங்கள்!

இன்று குதா தோஸ்த் (இறை நண்பன்) தன்னுடைய குழந்தைகளுடன் நண்பனின் ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஒரு குதா தோஸ்த்திற்கு எத்தனை நண்பர்கள் இருப்பார்கள்? பொதுவாக வெளிநாட்டினர் நட்பை அதிகம் விரும்புகிறார்கள். பாப்தாதா தந்தையாகவும் இருக்கிறார். ஆசிரியராகவும் இருக்கிறார், அனைத்து உறவுகளையும் வைத்து நடந்து கொள்பவராகவும் இருக்கிறார். உங்கள் அனைவருக்கும் அனைத்தையும் விட அதிக பிரியமான உறவாக எது அனுபவம் ஆகிறது? சிலருக்கு ஆசிரியர் பிடித்திருக்கும். சிலருக்கு நாயகனின் உறவு பிடித்திருக்கும், சிலருக்கு நண்பனின் உறவு பிடித்திருக்கும், ஆனால் அவரோ ஒரே ஒருவர் தான் இல்லையா? எனவே ஒருவருடன் எந்த உறவையும் வைத்து நடந்து கொள்வதன் மூலம் அனைத்து பிராப்திகளும் கிடைத்தே விடுகிறது. இது தான் மந்திர சக்தி. அந்த ஒருவருடனே என்ன உறவை வைத்துக் கொள்ள விரும்புகிறீர்களோ அதை வைத்துக் கொள்ள முடியும். வேறு எங்கும் செல்வதற்கான அவசியமே இல்லை. இதை விட வேறு யாராவது கிடைப்பார்களா என்ற இந்த ஆசையும் அகன்று விடும். அனைத்து உறவுகளின் அன்பை வைத்து நடந்து கொள்வதின் அனுபவியாக ஆகி விட்டீர்களா? ஆகி விட்டீர்களா அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? என்ன நினைக்கிறீர்கள்? முழுமையான அனுபவியாக ஆகி விட்டீர்களா? இன்று கடமை உணர்வோடு முரளி கூற வரவில்லை. பாப்தாதாவும் தன்னுடைய அனைத்து உறவுகளுடன் வெகு தொலைதூரத்திலிருந்து வந்திருக்கும் ஆத்மாக்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். அனைத்தையும் விட தூர தேசம் எது? நீங்களோ இருந்தாலும் இந்த பௌதீகூலகத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். பாப்தாதா சூட்சும உலகத்தையும் தாண்டி நிராகார உலகத்திலிருந்து சூட்சும உலகத்திற்கு வந்து பிறகு இந்த ஸ்தூல பௌதீகூலகத்திற்கு வந்திருக்கிறார்கள். அப்படியானால் அனைவரையும் விட தூர தேசத்தைச் சேர்ந்தவர் தந்தையா அல்லது நீங்களா? இந்த உலகின் கணக்குப்படி யார் அனைத்தையும் விட தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறார்களோ அவர்களுக்கும் பாப்தாதா அன்பு நிறைந்த பாராட்டுக்களைத்

தெரிவிக்கிறார். அனைவரையும் விட தொலைதூரத்திலிருந்து வந்திருப்பவர்கள் கையை உயர்த்துங்கள். எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், எத்தனை கிலோ மீட்டர் கடந்து வந்திருக்கிறீர்களோ அத்தனை கிலோ மீட்டரையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஃபாரினர்ஸ் (வெளிநாட்டினர்) என்றால் ஃபார் எவர் (நிரந்தரமானவர்). அந்த மாதிரி வரம்பெற்றவர்கள் தான் இல்லையா? ஃபாரினர்ஸ் இல்லை ஆனால் ஃபார் எவர். எப்பொழுதும் சேவைக்காக எவரெடி (தயாராக இருப்பவர்). டைரக்ஷன் கிடைத்தவுடன் சென்று விடுவது, இது தான் ஃபார் எவர் குரூப்பின் விசேஷம். இந்த நேரம் அனுபவம் செய்த அடுத்த நேரம் அனுபவத்தை செய்விப்பதற்காக தைரியம் வைத்து சேவையில் வந்து சேர்ந்து விடுகிறார்கள். இதைப் பார்த்து பாப்தாதாவும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஒருவர் மூலம் அனேக சேவாதாரிகள் பொறுப்பாளர் ஆகி விட்டார்கள். சேவையின் வெற்றிக்காக இரண்டு முக்கிய ஆதாரங்கள் இருக்கின்றன. அதை தெரிந்திருக்கிறீர்களா? (பல பதில்கள் வந்தன). அனைவரின் பதிலும் அவர்களுடைய அனுபவத்தின் அனுசாரம் மிகவும் சரி தான். பொதுவாக சேவையில் மற்றும் தன்னுடைய முன்னேறும் கலையின் வெற்றிக்கான முக்கிய ஆதாரம் ஒன்று தந்தையுடன் துண்டிக்கப்படாத அன்பு, தந்தையைத் தவிர வேறு எதுவும் தென்பட வேண்டாம். எண்ணத்திலும் பாபா, வார்த்தையிலும் பாபா, காரியத்திலும் தந்தையின் துணை. அந்த மாதிரி அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மா ஒரு வார்த்தை கூறினாலும், அவருடைய அன்பான வார்த்தை இன்னொரு ஆத்மாவையும் அன்பில் கட்டிப்போட்டு விடுகிறது. அந்த மாதிரி அன்பிலேயே மூழ்கியிருக்கும் ஆத்மாவின் "பாபா" என்ற ஒரு வார்த்தையே மந்திரத்தின் காரியம் செய்கிறது. அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மா ஆன்மீக மந்திரவாதி ஆகி விடுகிறார். ஒரு தந்தையின் அன்பு என்றால் அன்பிலேயே மூழ்கியிருக்கும் ஆத்மா. இரண்டாவது வெற்றிக்கான ஆதாரம் ஒவ்வொரு ஞானத் துளிகளின் அனுபவம் நிறைந்தவர் ஆவது, எப்படி நாடகத்தின் ஞானத்துளி கொடுக்கிறார்கள். அதில் ஒன்று ஞானத்தின் ஆதாரத்தில் அந்த விஷயத்தைக் கூறுவது. இன்னொன்று அதன் அனுபவியாகி அந்த ஞானத்துளியைக் கூறுவது. நாடகத்தின் ஞானத்தின் அனுபவியாக யார் இருப்பார்களோ அவர் எப்பொழுதும் பார்வையாளரின் நிலையில் நிலைத்திருப்பார். ஒரே சீராக, ஆடாத அசையாதவராக இருப்பார். அந்த மாதிரி நிலையில் நிலைத்திருப்பவர்களை அனுபவம் நிறைந்தவர் என்று கூறுவது. ரிசல்ட்டில் (முடிவில்) வெளிப்படையான ரூபத்தில் நல்லதாக இருந்தாலும் அல்லது தீயதாக இருந்தாலும் கூட, நாடகத்தின் ஞானத்தின் அனுபவி ஆத்மா ஒருபொழுதும் தீயதிலும் தீயதை பார்க்காமல் நல்லதையே பார்ப்பார். அதாவது தன்னுடைய

நன்மைக்கான வழி தென்படும். தீமையின் கணக்கு முடிவடைந்தது. நன்மை பயக்கும் தந்தையின் குழந்தை ஆன காரணத்தினால், நன்மையே பயக்கும் யுகமாக இருக்கும் காரணத்தினால் இப்பொழுது நன்மையின் கணக்கு தொடங்கி விட்டது. இந்த ஞானம் மற்றும் அனுபவத்தின் வலிமை காரணமாக எப்பொழுதும் ஆடாதவர்களாக இருப்பார்கள். ஒருவேளை விரல் விட்டு எண்ணிப்பார்த்தீர்கள் என்றால், உங்கள் அனைவரிடமும் எத்தனை விதமான வல்லமைகள் இருக்கின்றன. மற்ற ஆத்மாக்களிடம் ஓரிரு வல்லமை இருக்கும். சிலரிடம் அறிவியலின். சிலரிடம் சாஸ்திரங்களின், சிலரிடம் மருத்துவத்தின், சிலரிடம் பொறியியலின் வல்லமை தான் இருக்கும், உங்களிடம் எந்த வல்லமை இருக்கிறது. பட்டியலை எடுத்தீர்கள் என்றால் மிக நீண்ட பட்டியலாக ஆகி விடும். அனைத்தையும் விட முதல் வல்லமை உலகின் அனைத்து வல்லமை, நிறைந்தவர் உங்களுடையவர் ஆகி விட்டார் என்றால் உலகின் என்னென்ன வல்லமைகள் இருக்கின்றனவோ அவை உங்களுடையவையாக ஆகி விட்டன. அந்த மாதிரி பட்டியலை எடுங்கள். உலகின் முதல், இடை, கடையின் ஞானத்தின் வல்லமை இருக்கிறது. அந்த ஞானத்தின் நினைவு சாஸ்திரமாக பைபிள் மற்றும் குரான் ஆகியவை இருக்கின்றன. எனவே கீதா ஞானத்தை அனைத்து சாஸ்திரங்களின் மற்றும் புத்தகங்களின் தாய், தந்தை என்று கூறுகிறார்கள். அனைத்தையும் விட உயர்ந்தது என்று கூறுகிறார்கள். நேரடியாக யார் கீதை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்? (பிராமணன்). அப்படியானால் வல்லமை உள்ளவர் ஆகி விட்டீர்கள் இல்லையா? இதே விதமாக அனைத்து மதங்களிலும் முதன்மையான மதம் யாருடையது? உங்களுடைய பிராமண தர்மம் மூலமாகத் தான் அனைத்து மதங்களும் ஜென்மம் எடுத்தன. பிராமண தர்மம் தண்டு ஆகும். இந்த தர்மத்தின் இன்னும் விசேஷங்கள் இருக்கின்றன. பிராமண தர்மம் பரம்பிதாவால் நேரடியாக ஸ்தாபனை செய்யப்பட்டது. மற்ற தர்மங்கள் அதாவது மதங்கள் தர்ம தந்தைகளினுடையது ஆனால் இந்த தர்மம் பரம்பிதாவினுடையது. அது குழந்தைகள் மூலமாக ஸ்தாபனை செய்யப்பட்டது. அவர்களை கடவுளின் குழந்தை என்று கூறுகிறார்கள் அவர்கள் கடவுள் இல்லை. அப்படி நேரடியாக பரமபிதா மூலமாக உயர்ந்த தர்மம் ஸ்தாபனை ஆனது. அந்த தர்மத்தின் அதிகாரி நீங்கள் ஆதி பிதா பிரம்மாவின் நேரடி வாய்வழி பிறந்தவர்கள் அதன் அதிகாரம் உள்ளவர்கள் அனைத்தையும் விட உயர்ந்த காரியம் செய்யும் நடைமுறை வாழ்க்கையின் அதிகாரிகள் நீங்கள் ! உயர்ந்த காரியத்தின் பிராப்தியாக முழு உலகின் துண்டுபடாத இராஜ்யத்தின் அதிகாரத்தின் அதிகாரிகளாவீர்கள், பக்தர்களின் அதிகாரிகள் ஆவீர்கள் அந்த மாதிரி இன்னும் பட்டியலை எடுத்தீர்கள் என்றால் அதிகமாக வெளியாகும். அப்படி நீங்கள் எவ்வளவு பெரிய வல்லமை நிறைந்தவர்கள், அதிகாரிகள் என்று புரிந்து

கொண்டீர்களா? அந்த மாதிரி அதிகாரம் உள்ளவர்களுக்கு தந்தையும் நமஸ்காரம் செய்கிறார். இவர்கள் அனைவரையும் விட மிக வல்லமை உள்ளவர்கள் அந்த மாதிரி வல்லமை உள்ளவர்களைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அனைவரும் மிக நன்றாக கடுமையாக உழைத்து சேவையின் காரியத்தை விஸ்தாரத்தில் கொண்டு வந்திருக்கிறீர்கள். அலைந்து கொண்டிருக்கும் தன்னுடைய சகோதர சகோதரிகளுக்கு வழி கூறியிருக்கிறீர்கள். தாகத்திலிருக்கும் ஆத்மாகளுக்கு அமைதி மற்றும் சுகத்தின் அஞ்ச- கொடுத்து திருப்தியான ஆத்மாவாக ஆக்குவதின் நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். தந்தையிடம் கொடுத்த உறுதிமொழியை நடைமுறையில் கடைப்பிடித்து தந்தையின் எதிரில் சிறியதோ அல்லது பெரியதோ பூச்செண்டை கொண்டு வந்திருக்கிறீர்கள், ஆனால் சிறியது கூட தந்தைக்குப் பிரியமானவர் தான். இப்பொழுது இந்த உறுதிமொழியையோநிறைவேற்றி இருக்கிறீர்கள், இன்னும் விஸ்தாரத்தை அடைந்து கொண்டே இருப்பீர்கள். சிலர் நெக்லஸ் (கழுத்து மாலை) உருவாக்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சிலர் மாலையை உருவாக்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள், சிலர் வளையலையும், சிலர் மோதிரத்தையும் உருவாக்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அப்படி அனைவருமே பாப்தாதா வின் நகைகள், ஒவ்வொரு ரத்தினமும் மிகவும் விலைமதிக்க முடியாதது. நகைகளையோ தந்தையின் எதிரில் மிக நல்லவைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.இப்பொழுது இன்னும் வரும் நாட்களில் என்ன செய்ய வேண்டும்? நகைகளை இப்பொழுது என்ன செய்வீர்கள்? (பாலிஷ்) மதுபன்னில் வந்திருக்கிறீர்கள் என்றால் பாலிஷோ ஆகியே விடும். இப்பொழுது ஷோகேஸில் (அலங்காரப் பெட்டகத்தில்) வையுங்கள். உலகத்தின் ஷோ கேஸில் இந்த நகைகள் ஜொலித்துக் கொண்டிருப்பதாக அனைவருக்கும் தென்படட்டும். ஷோ கேஸில் எப்படி வருவீர்கள்? தந்தையின் எதிரில் வந்தீர்கள், பிராமணர்களின் எதிரில் வந்தீர்கள் இதுவோ மிக நல்லதாக நடந்தது. இப்பொழுது உலகின் எதிரில் வர வேண்டும். பகவானின் இந்தக் குழந்தைகள் ஒவ்வொரு மூலையிலும் வெளிப்பட்டு விட்டார்கள் என்ற இந்த செய்தி உலகின் பல மூலைகளிலிருந்தும் வெளியாக வேண்டும். அதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். அது பாரதமாக இருந்தாலும் வெளிநாட்டின் ஒவ்வொரு மூலைகளாக இருந்தாலும் நாலாபுறங்களிலும் ஒரே அலை பரவி விட வேண்டும். எப்படி ஒரே ஒரு சூரியன் மற்றும் சந்திரன் வெவ்வேறு நேரத்தில் தென்பட்டது என்றால், ஒன்று தான் தெரிகிறது இல்லையா? அதே போல் இந்த ஞான சூரியனின் குழந்தைகள் லை மூலைகளில் தென்பட வேண்டும். ஞான நட்சத்திரங்களின் ஜொலிப்பு நாலாபுறங்களிலும் தென்பட வேண்டும். அனைவரின்

எண்ணத்தில் வாயில் ஞான நட்சத்திரங்கள், ஞான சூரியனினுடன் உதயமாகி விட்டார்கள் என்ற இந்த விஷயம் தான் இருக்க வேண்டும். அப்பொழுது அனைத்து பக்கங்களிலிருந்தும் கிடைத்திருக்கும் ஓசை நாலாபுறங்களிலும் ஒலிக்கும். மேலும் பிரத்யக்ஷத்தின் நேரம் வரும். இப்பொழுதோ மறைவான பாகம் தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது வெளிப்பாட்டில் கொண்டு வாருங்கள். இதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். பிறகு பாப்தாதாவும் கூறுவார்கள். ஒவ்வொரு இரத்தினங்களின் விசேஷத்தை வர்ணனை செய்தோம் என்றால் அனேக இரவுகள் கழிந்து விடும். ஒவ்வொரு குழந்தைகளின் விசேஷம் ஒவ்வொருவரின் நெற்றியில் மணி மாதிரி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

அந்த மாதிரி அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு, அனைத்து உண்மையான அதாவது சேவைக்கான நிரூபணம் கொடுப்பவர்களுக்கு, எப்பொழுதும் சேவை மற்றும் நினைவில் இருக்கக்கூடிய சேவைக்குத் தகுதியான

மாஸ்டர் அனைத்து சக்திகளின் அதிகாரம் உள்ளவர்களுக்கு அனைவரின் மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய மிக அன்பான அன்பிலேயே மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:** நியூஸிலேண்ட் பார்ட்டி நியுஸிலேண்ட்டைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் என்ன நினைவு இருக்கிறது? உலகிற்கு புதிய நியூஸ் (செய்தி) கொடுக்க வேண்டும் என்ற நினைவு நியுஸிலேண்டிற்கு எப்பொழுதும் இருக்க வேண்டும். நியுஸிலேண்டிற்கு உலகிற்கு தினசரி நியூஸ் கொடுக்க வேண்டும். அப்பொழுது நியுஸிலேண்ட் என்னவாகி விடும். முழு உலகிற்காக லைட் ஹவுஸ் ஆகி விடும். அனைவரின் பார்வை எங்கிருந்து இந்த நியூஸ் வந்தது என்று நியுஸிலேண்டின் பக்கம் சென்று விடும். இப்பொழுது கூட செய்தித்தாட்களில் ஏதாவது நியூஸ் வருகிறது என்றால் அனைவரின் கவனம் எங்கே செல்கிறது? இந்த நியூஸ் எங்கிருந்து வந்திருக்கிறது என்பதில் தான் செல்லும் அப்படி நியூஸிலேண்ட் இந்த அதிசயக் காரியத்தை செய்ய வேண்டும். இப்பொழுது ஏதாவது புதிய விஷயத்தைக் கூறுங்கள் ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்குங்கள். அங்கிருந்து உலகின் அனைத்து பக்கங்களிலும் பரவி விடும் அளவிற்கு அந்தளவு டீச்சர்களை உருவாக்குங்கள். இந்த அதிசயக் காரியத்தை செய்யுங்கள். பிறகு எப்படி பெயரோ அப்படி காரியம் செய்தார்கள் என்று கூறுவோம். நீங்கள் அனைவரும் மிகவும் தேடிக் கண்டெடுக்கப்பட்ட வெகு

## 1981 அவ்யக்த முரளி

தொலைதூரத்திலிருந்து தந்தையால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். பாரதத்தை விட்டு விட்டும் சென்றீர்கள் ஆனால் பாரதத்தின் தந்தை விடவில்லை. நியுஸிலேண்டின் பூந்தோட்டமும் மிகவும் மலர்ந்திருக்கிறது.

**டிரினிடாட் பார்ட்டி:** குழந்தைகளில் பாப்தாதா எப்பொழுதும் என்ன விசேஷத்தைப் பார்க்கிறார்? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குழந்தைகளில் அவருடைய 21-ஜென்மங்களின் பிராப்தியைப் பார்க்கிறார்கள். என்னவாக இருந்தார்கள். என்னவாக ஆகியிருக்கிறார்கள் மேலும் என்னவாக ஆகப்போகிறார்கள்? அப்படி மூன்று காலங்களையும் பார்த்து எதிர்காலம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்பதையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய பிராப்தியைப் புரிந்து கொண்டு அனுபவம் செய்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? இன்று நான் இதுவாக இருக்கிறேன், நாளை இதுவாக ஆகப்போகிறேன் என்று தன்னுடைய பிராப்தி அந்த அளவு தெளிவாக இருக்கிறதா? எப்பொழுது தந்தையின் குழந்தையாக ஆகி விட்டீர்கள் என்றால், தந்தையின் குழந்தை ஆவது என்றால், பிராமணன் ஆவது. பிராமணனிலிருந்து தேவதையாகவும் அவசியம் ஆவீர்கள். மற்றபடி தேவதையில் கூட என்ன பதவி கிடைக்கும் என்பது ஒவ்வொருவரின் முயற்சியின் ஆதாரத்தில் இருக்கிறது.

இப்பொழுதோ சேவைக்கான அனேக சாதனங்கள் இருக்கின்றன. வாய்மொழியின் கூடவே ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டே கூட உலகின் சேவை செய்ய முடியும். மனசேவை செய்வதற்காகக் கூட நல்ல வாய்ப்பு இருக்கிறது. முழு நாளும் ஏதாவது விதத்தில் சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருங்கள். மதுபன்னில் புத்துணர்வு அடைவது என்றால், சேவைக்காக கருவியாகி சேவாதாரியாகி சேவைக்கான வாய்ப்பை எடுப்பது. சேவை செய்வதற்கு முன்பு முதலில் யார் பொறுப்பாளர் ஆகி சேவையில் இருப்பவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டே முன்னேறிச் சென்றீர்கள் என்றால், வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும். இப்பொழுது எத்தனை கிளை நிலையங்கள் திறந்து விட்டு வருகிறீர்கள் என்று பார்க்கலாம். மாத செய்தி இதழ்களில் எத்தனை புது சேவை நிலையங்கள் திறந்திருக்கிறீர்கள் என்று வெளியாகும். நாம் அனைவரும் உலகிலுள்ள அனைவரையும் அங்கு இங்கு அலைவதிலிருந்து விடுவிக்கக்கூடிய ஆன்மீக சமூக சேவகர்கள் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். அனேக ஆத்மாக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களைப் பார்த்து இரக்கம் வருகிறது தான் இல்லையா? எப்படி தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைப் பார்த்து நான் எவ்வளவு அலைந்திருக்கிறேன்,

எத்தனை ஜென்மங்களாக அலைந்து கொண்டிருந்தேன் என்று தன்னுடைய வாழ்க்கையைப் புரிந்து கொள்கிறீர்கள். தன்னுடைய அனுபவத்தின் ஆதாரத்தினால் இன்னும் அதிக இரக்கம் வர வேண்டும். எனவே இந்த ஆத்மாக்களை அலைவதிலிருந்து எப்படி விடுவிப்பது என்று எப்பொழுதும் மனதில் திட்டத்தை உருவாக்கிக் கொண்டே இருங்கள். தினசரி புதுப்புது பாய்ன்ட்டுகளை (ஞான விஷயங்களை) யோசியுங்கள். எந்த மாதிரி ஒரு பாய்ன்ட்டை நான் கொடுக்க வேண்டும் அதன் மூலம் அவர்கள் விரைவிலேயே பரிவர்த்தனை ஆகி விட வேண்டும். இப்பொழுது பக்தர்களுக்கு பக்தியின் பலனை கிடைக்கப் பெறச் செய்யுங்கள். எப்பொழுதும் தந்தையோடு சந்திப்பதற்கான சுலபமான வழியை நினைத்துக் கொண்டே இருங்கள். இந்த சிந்தனை ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

**அமெரிக்கா பார்ட்டி:** எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்களா? பாப்தாதாவினால் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் என்றால் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை தாய் தந்தையர் எப்பொழுதும் எந்த இடத்தில் எந்த சிரமமும் இருக்காதோ அந்த இடத்தில் அமர வைப்பார்கள் பாப்தாதா கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் உங்களுக்கு அமருவதற்காக எந்த இடத்தை கொடுத்திருக்கிறார்? இதயசிம்மாசனம். இந்த இதய சிம்மாசனம் எவ்வளவு பெரியது? இந்த ஆசனத்தில் அமர்ந்து என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். எனவே எப்பொழுதுமே ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருங்கள். கீழே வராதீர்கள் எப்படி வெளிநாட்டில் மண் தூசி ஒட்டி விடக்கூடாது என்பதற்காக அங்கங்கே கம்பளிகளை விரித்திருப்பார்கள். பாப்தாதாவும் தேக உணர்வின் மண்ணில் அழுக்காகி விடக்கூடாது என்று கூறுகிறார். எனவே எப்பொழுதும் இதய சிம்மாசனதாரியாக இருங்கள். யார் இந்த நேரம் சிம்மாசனதாரியாக இருப்பாரோ அவர் தான் எதிர்காலத்திலும் சிம்மாசனதாரியாக ஆவார். எனவே எப்பொழுதுமே சிம்மாசனதாரியாக இருக்கிறேனா அல்லது இறங்குகிறேன் ஏறுகிறேன் என்று அப்படி இருக்கிறதா என்று சோதனைசெய்யுங்கள். ஆசனத்தில் அமர்வதற்கு உரியவராகவும் யார் ஆகிறார்? யார் எப்பொழுதுமே டபுள் லைட் ரூபத்தில் இருக்கிறாரோ அவர் தான் ஆக முடியும். ஒருவேளை கொஞ்சமாவது சுமை வருகிறது என்றால் ஆசனத்தின் கீழே வந்து விடுவீர்கள். ஆசனத்திலிருந்து கீழே வந்தீர்கள் என்றால் மாயாவை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும், ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களாக இருந்தீர்கள் என்றால் மாயா நமஸ்காரம் செய்யும். பாப்தாதா மூலமாக தினசரி சக்திசாலியான உணவு கிடைக்கிறது. அதை

ஜீரணித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் ஒருபொழுதும் பலஹீனம் வர முடியாது. மாயாவின் தாக்குதல் இருக்க முடியாது. நல்லது.

**வரதானம்: ஆன்மீக போதையின் அனுபவம் மூலமாக நிச்சயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகுக!**

ஆன்மீக போதை நிச்சயத்தின் கண்ணாடி. நிச்சயத்தின் எடுத்துக்காட்டு போதை மற்றும் போதையின் எடுத்துக்காட்டு குஷி யார் எப்பொழுதும் குஷி மற்றும் போதையில் இருக்கிறாரோ அவர் எதிரில் மாயாவின் எந்தவொரு தந்திர வேலையும் செல்லுபடியாகாது கவலையற்ற மகாராஜாவின் இராஜ்யத்தினுள் மாயா வர முடியாது. ஆன்மீக போதை சுலபமாகவே பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரத்தை மறக்க வைத்து விடுகிறது. எனவே எப்பொழுதும் ஆத்மீக சொரூபத்தின் போதையில், ஆன்மீக வாழ்க்கையின் போதையில் ஃபரிஷ்தா நிலையின் போதையில் அல்லது எதிர்கால நிலையின் போதையில் இருந்தீர்கள் என்றால், வெற்றி அடைபவர் ஆவீர்கள்.

**சுலோகன்: இனிமையின் குணம் தான் பிராமண வாழ்க்கையின் மகான் நிலை ஆகும். எனவே இனிமையானவர் ஆகுங்கள் மேலும் இனிமையானவராக ஆக்குங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 13.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா Nமதுபன்

# இரட்டை ரூப சேவையின் மூலமாகத் தான் ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படும்!

இன்று பாப்தாதா அனைத்து நற்சிந்தனையாளர்கள் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நற்சிந்தனையாளர் என்றால் எப்பொழுதுமே நற்சிந்தனையில் இருப்பவர், சுயசிந்தனையில் இருப்பவர், அந்த மாதிரி சுயசிந்தனையாளர்கள் மற்றும் நற்சிந்தனையாளர்கள் எப்பொழுதும் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் அனைத்து பிராப்திகள், அனைத்து பொக்கிஷங்கள் மற்றும் சக்திகள் ஆகிய இந்த பிராப்திகளின் போதையில், கூடவே சம்பூர்ண ஃபரிஷ்தா மற்றும் சம்பூர்ண தேவதை ஆவதின் இலக்கின் நினைவு சொரூபத்தில் இருக்கிறீர்களா? எந்த அளவு போதை இருக்கிறதோ அந்த அளவு இலக்கு தெளிவாக இருக்கும். அருகில் இருந்தால் தான் தெளிவாக இருக்கும். எப்படி தன்னுடைய முயற்சியின் ரூபம் தெளிவாக இருக்கிறதோ அதே போல் சம்பூர்ண ஃபரிஷ்தா ரூபமும் இந்த அளவே தெளிவாக அனுபவம் ஆகும். ஆவேனா அல்லது ஆகமாட்டேனா என்ற இந்த எண்ணமும் உருவாகாது. ஒருவேளை ஆகத்தான் வேண்டும் மற்றும் அவசியம் ஆவேன் என்று அப்படி ஏதாவது எண்ணம் வருகிறது என்றால் இதன் மூலம் தன்னுடைய ஃபரிஷ்தா சொரூபம் அந்த அளவு அருகில் மற்றும் தெளிவாக இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. எப்படி தன்னுடைய பிரம்மாகுமார். பிரம்மாகுமாரியின் சொரூபம் தெளிவாக இருக்கிறதோ அப்போது மேலும் நிச்சயபுத்தி உடையவராகி, ஆம் நான் பிரம்மாகுமார், குமாரி என்று கூறுவார்கள் ! நானும் பிரம்மாகுமார், குமாரியாக ஆக வேண்டும் தான்.. என்று அப்படி இழுத்து கூறமாட்டார்கள். நான் அப்படித் தான் இருக்கிறேன். ஆம் நாங்கள் தான் பிரம்மாகுமார், குமாரி என்று கூறுவார்கள். நான் இருக்கிறேனா அல்லது இல்லையா என்ற கேள்வி எழாது. ஒருவேளை யாராவது நீங்கள் பிரம்மாகுமார். குமாரி இல்லை, பாரதத்தைச் சேர்ந்தவர்கள் தான் பிரம்மாகுமார், குமாரிகள், பெரிய பெரிய மகாரதிகள் தான் பிரம்மாகுமார், குமாரிகள், நீங்களோ வெளிநாட்டு கிறிஸ்தவர்கள், பிரம்மாவோ பாரதத்தைச் சேர்ந்தவர், நீங்கள் எப்படி பிரம்மாகுமார், குமாரி ஆவீர்கள், தவறுதலாக கிறிஸ்தவ குமார், குமாரிக்குப் பதிலாசு பிரம்மா சூமார், குமாரி என்று கூறுகிறீர்கள் என்று எவ்வளவு தான் குறுக்கு விசாரணை

செய்தாலும் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா? ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் தான் இல்லையா? நிச்சப்புத்தியோடு நாங்கள் பிரம்மா குமார், குமாரியாக இந்த நேரத்தில் மட்டுமில்லை. அனேக கல்டங்களாக நாங்கள் பிரம்மா குமார், குமாரிகளாக இருந்திருக்கிறோம் என்று பதில் கூறுவீர்கள். அந்த மாதிரி நிச்சயத்தோடு சொல்வீர்கள் இல்லையா அல்லது யாராவது கேட்டார்கள் என்றால், யோசிக்க ஆரம்பித்து விடுவீர்களா? என்ன செய்வீர்கள்? யோசிப்பீர்களா அல்லது நிச்சயத்தோடு நாங்கள் தான் என்று கூறுவீர்களா? எப்படி இந்த பிரம்மாகுமார், குமாரியின் உறுதியான நிச்சயம் இருக்கிறது, தெளிவாக இருக்கிறது, அனுபவம் ஆகிறது அதே போல் சம்பூர்ண ஃபரிஷ்தா நிலையும் அந்த அளவு தெளிவாக அனுபவத்தில் வருகிறதா? இன்று முயற்சி செய்பவர் நாளை ஃபரிஷ்தா. அந்த மாதிரி உறுதியான நிச்சயம் இருக்க வேண்டும். இந்த நிச்சயத்தை யாரும் அகற்ற முடியக்கூடாது. அந்த மாதிரி நிச்சயபுத்தி இருக்கிறதா? ஃபரிஷ்தா சொரூபத்தின் ரூபம் தெளிவாக எதிரில் இருக்கிறதா? ஃபரிஷ்தா சொரூபத்தின் நினைவு, உள்உணர்வு, பார்வை, காரியம் மற்றும் ஃபரிஷ்தா சொரூபத்தின் சேவை என்னவாக இருக்கிறதோ அதன் அனுபவம் ஆகிறதா? ஏனென்றால் பிரம்மாகுமார் மற்றும் குமாரி சொரூபத்தின் சேவையின் ரூபத்தை ஒவ்வொருவரும்தனது சக்திக்கேற்றபடி அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த சேவையின் விளைவுகளை தொடக்கத்திலிருந்து இப்பொழுது வரை பார்த்து விட்டோம். இந்த ரூபத்தின் சேவையின் அவசியமும் இருந்தது, அது நடந்தது. மேலும் நடந்து கொண்டிருக்கிறது, மேலும் நடந்து கொண்டே இருக்கும்.

வரும் நாட்களில் நேரத்திற்கு ஏற்றபடி மற்றும் ஆத்மாக்களின் விருப்பங்களின் தேவைக்கு அனுசாரம் இரட்டை ரூபத்தின் சேவையின் அவசியம் இருக்கும். ஒன்று பிரம்மாகுமார், குமாரி சொரூபம் அதாவது பௌதீக சொரூபத்தில், இரண்டாவது சூட்சும ஒளி வடிவ ஃபரிஷ்தா சொரூபத்தில் சேவை. எப்படி பிரம்மாபாபாவின் இரண்டு சேவைகளையுமே பார்த்திருக்கிறீர்கள் பௌதீக உடல் ரூபத்தின் மற்றும் ஃபரிஷ்தா ரூபத்தின் சேவை பௌதீக உடல் ரூபத்தின் சேவையை விட அவ்யக்த ரூபத்தின் சேவையின் வேகம் அதிகமாகும். இதையோ தெரிந்திருக்கிறீர்கள். அனுபவி தான் இல்லையா? இப்பொழுது அவ்யக்த பிரம்மாபாபா அவ்யக்த ரூபம் உடையவர் ஆகி அதாவது ஃபரிஷ்தா ரூடம் உடையவர் ஆகி குழந்தைகளுக்கு அவ்யக்க ஃபரிஷ்தா சொரூபத்தின் நிலையில் ஈர்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையைப் பின்பற்றி செய்யத் தெரியும் தான் இல்லையா? நானும் உடலை விட்டு விட்டு அவ்யக்தம் ஆகி விட வேண்டும் என்று அப்படி நினைப்பதில்லையே இதில் பின்பற்ற வேண்டாம். பிரம்மாபாபா ஃபரிஷ்தாவாக ஏன் ஆனார் என்றால், அவரது

# 1981 அவ்யக்த முரளி

அவ்யக்த ரூபத்தின் எடுத்துக் காட்டைப் பார்த்து சகஜமாக பின்பற்றி நடக்க முடியும். பௌதீக ரூபத்தில் இல்லாத போது ஃபரிஷ்தா ரூடம் மூலமாக பௌதீக ரூபத்தின் சமமாகவே சாட்சாத்காரம் செய்விக்கிறார் இல்லையா? விசேஷமாக வெளிநாட்டினருக்கு இந்த அனுபவம் இருக்கிறது. மதுபன்னில் சாகார பிரம்மாவின் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? அவருடைய அறையில் சென்று ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் இல்லையா. படம் தென்படுகிறதா அல்லது உயிரோட்டமாக தென்படுகிறதா? அனுபவம் ஆகிறது. அதனால் தான் உணர்வுப்பூர்வமாக பிரம்மாபாபா என்று கூறுகிறீர்கள். உங்கள் அனைவரின் பிரம்மாபாபாவா அல்லது முதன்முதலில் வந்த குழந்தைகளின் பிரம்மாபாபாலா? அனு வத்தோடு கூறுகிறீர்களா அல்லது ஞானத்தின் ஆதாரத்தினால் கூறுகிறீர்களா? அனுபவம் இருக்கிறதா? எப்படி அவ்யக்த பிரம்மாபாபா சாகார ரூபத்தில் பாலனை கொடுத்துக் கொண்டிருக்கிறார். சாகார ரூபத்தின் பாலனையில் அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். அதே போல் நீங்கள் வியக்தத்தில் இருந்தும் அவ்யக்த ஃபரிஷ்தா ரூபத்தின் அனுபவம் செய்யுங்கள். இவர்கள் அனைத்து ஃபரிஷ்தாக்களும் யார்? எங்கிருந்து வந்திருக்கிறார்கள்? என்று அனைவருக்கும் அனுபவம் ஆகட்டும். எப்படி இப்பொழுது வெள்ளாடை உடுத்தியவர்கள் யார், மேலும் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்று நாலா றங்களிலும் இந்த பேச்சு பரவுகிறது. அதே போல் நாலாபுறங்களிலும் இப்பொழுது ஃபரிஷ்தா ரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படட்டும். இதைத் தான் இரட்டை சேவையின் ரூடம் என்று கூறுவது. வெள்ளாடை அணிந்தவர்கள் மற்றும் வெண்மை ஒளி தரித்தவர்கள். அவர்களைப் பார்த்து விரும்பாவிட்டாலும் கண் திறந்து விடும். எப்படி இருளில் ஏதோ பிரகாசமான ஒளி எதிரில் வருகிறது என்றால் இது என்ன, இது யார், எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்று திடீரென்று கண் திறந்து விடுகிறது இல்லையா? அந்த மாதிரி புதுமையான கிளர்ச்சியை ஏற்படுத்துங்கள். எப்படி மேகம் நாலாபுறங்களிலும் பரவி விடுகிறது அதே போல் நாலாபுறங்களிலும் ஃபரிஷ்தா ரூபத்தில் வெளிப்பட்டு விடுங்கள். இதைத் தான் ஆன்மீக விழிப்புணர்வு என்று கூறுவது. இத்தனை பேர்கள் அனைவரும் பாரதம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள், பிரம்மாகுமார். குமாரி சொரூபத்தின் சேவை செய்தீர்கள். செய்தியை வலுவாக ஒலிக்கச்செய்வதற்கான விழிப்புணர்வு காரியம் செய்தீர்கள். குழுவின் கொடியை பறக்க வைத்தீர்கள். இப்பொழுது பிறகு புது திட்டத்தை உருவாக்குவீர்கள் இல்லையா? எங்கு பார்த்தாலும் டரிஷ்தாக்கள் தென்படட்டும். லண்டனில் பார்த்தாலும் பாரதத்தில் பார்த்தாலும் எங்கு பார்த்தாலும் ஃபரிஷ்தாவே ஃபரிஷ்தாக்கள் பார்க்கத் தென்பட வேண்டும். ஆஸ்திரேலியா, அமெரிக்காவை பார்த்தாலும் கூட ஃபரிஷ்தாவே ஃபரிஷ்தாவாகத் தென்பட

வேண்டும். இதற்காக என்ன தயார் செய்ய வேண்டும்? அதற்கோ பத்து விதிகள் அடங்கிய நிகழ்ச்சியை தயாரித்தீர்கள். இதற்காக எத்தனை விதிகள் இருக்கிறது? அதுவே பத்து விதிகளின் நிகழ்ச்சி ! இதுவோ 18 கலைகளின் விதிகள் அடங்கிய நிகழ்ச்சி. இதைப் பற்றி உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். மேலும் பிறகு வருங்காலத்தில் கூறிக் கொண்டே இருப்போம். திட்டத்தை கூறியிருக்கிறோம். இப்பொழுது நிகழ்ச்சியை உருவாக்குங்கள். முக்கியமான கருத்தைக் கூறிவிட்டோம் இப்பொழுது விரிவான நிகழ்ச்சியை உருவாக்க வேண்டும்.

அந்த மாதிரி எப்பொழுதும் நற்சிந்தனையில் இருக்கக்கூடிய, நற்சிந்தனையாளர், இரட்டை ரூபம் மூலமாக சேவை செய்யக்கூடிய, இரட்டை சேவாதாரி, பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடக்கக்கூடிய, நிராகார தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக அனைத்து பிராப்திகளினால் நிரம்பிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன்:** டீச்சர்களோ எப்பொழுதுமே நிரம்பிய ஆத்மாக்கள். நாடகத்தின் அனுசாரம் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள், மிக நன்றாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் வரும் நாட்களிலும் உழைத்துக் கொண்டே இருப்பீர்கள். ரிசல்ட் நல்லதாக இருக்கிறது. இன்னும் நல்லதாக இருக்கும். நேரம் அருகில் வரும் காரணத்தினால் வேகமாக சேவையின் விஸ்தாரம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால் சங்கமயுகத்திலேயே திரேதாயுகத்தின் இறுதி வரைக்குமான பிரஜை. இராஜகுடும்பத்தினர், கூடவே கலியுகத்தின் இறுதி வரைக்குமான தன்னுடைய தர்மத்தின் ஆத்மாக்களை தயார் செய்ய வேண்டும். வெளிநாட்டின் அனைத்து ஸ்தானங்களும் பிக்னிக் ஸ்தாளம் ஆகும் ஆனால் பிராமண ஆத்மாக்களோ இராஜகுடும்பத்தில் வருவார்கள். அங்கே இராஜ்யம் செய்ய வேண்டியதில்லை. இராஜ்யமோ இங்கே செய்ய வேண்டும். அனைவரும் நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது சேவையில் இன்னும், மனசேவை இன்னும் சக்திசாலியாக எப்படி ஆகும், இதற்கான விசேஷ திட்டத்தை உருவாக்குங்கள். வாய்மொழியின் கூடவே மனசேவையும் வெகுதொலைதூரம் வரை காரியம் செய்ய முடியும். எப்படி இன்றைய நாட்களில் பறக்கும் தட்டை பார்க்கிறார்கள். அதே போல் உங்கள் அனைவரின் ஃபரிஷ்தா சொரூபம் நாலாபுறங்களிலும் பார்க்கத் தென்படும். மேலும் யார் இவர்கள் மேலே சுற்றி வருகிறார்கள் என்ற பேச்சு எழும். இதன் மேல் தான் ஆராய்ச்சி செய்வார்கள் ஆனால் மேலே இருந்து கீழே வந்தவுடனேயே உங்கள் அனைவரின் சாட்சாத்காரம்

ஏற்பட்டு விடும். மேலும் இவர்கள் அதே பிரம்மா குமார். குமாரிகள் யார் ஃபரிஷ்தா ரூபத்தில் சாட்சாத்காரம் செய்வித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்வார்கள். இப்பொழுது இந்த சுப்தத்தை நாலாபுறங்களிலும் பரப்புங்கள். இறுதி வாகன சூட்சும உடல் மூலமாக சுற்றி வரும் பயிற்சி செய்யுங்கள். விமானமும் கிடைக்க முடியாத மாதிரியான நேரமும் வரும், அந்த மாதிரி மிக சிக்கலான நேரமும் வரும். அதற்கு முன்பே நீங்கள் அனைவரும் வந்து சேர்ந்து விடுவீர்கள். இறுதி வாகன சூட்சும உடல் மூலமாக சுற்றி வருவதற்கான பயிற்சி அவசியமாகும். அந்த மாதிரி பயிற்சி செய்யுங்கள். எப்படி நடைமுறையில் அனைவரும் பார்த்து சந்தித்து வந்திருக்கிறார்கள் என்று அனுபவம் ஆக வேண்டும். மற்றவர்களும் ஆம் எங்களிடமும் அதே ஃபரிஷ்தாக்கள் வந்தார்கள் என்று அனுபவம் ஆக வேண்டும். பிறகு ஃபரிஷ்தாக்களைத் தேடத் தொடங்குவார்கள். ஒருவேளை அனைத்து இத்தனை ஃபரிஷ்தாக்களும் சுற்றி வருகிறார்கள் என்றால் என்னவாகும்? இயல்டாகவே அனைவரின் கவனம் செல்லும். எனவே இப்பொழுது உடல் மூலமான சேவையின் கூடவே ஒளிவடிவமான உடலின் சேவையின் அவசியம் இருக்கிறது. நல்லது, இப்பொழுது அமிர்தவேளையில் உடலிலிருந்து விலகி உலகைச் சுற்றி வாருங்கள்.

**கேள்வி: அனைத்தையும் விட மிகப் பெரிய சேவை எது, அதை நீங்கள் ஆன்மீக சேவாதாரிகள் அவசியம் செய்ய வேண்டும்?**

பதில்: யாருடைய துக்கத்தை எடுத்து, சுகம் கொடுப்பது இது தான் அனைத்தையும் விட பெரிய சேவை. நீங்கள் சுகக்கடல் தந்தையின் குழந்தைகள் என்றால் யாரை சந்தித்தாலும் அவருடைய துக்கத்தையாவது பெற்றுக் கொண்டு சுகத்தை கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். யாருடைய துக்கத்தை பெற்றுக் கொண்டு சுகத்தை கொடுப்பது இது தான் அனைத்தையும் விட பெரிய புண்ணிய காரியம். அந்த மாதிரி புண்ணியம் செய்து செய்து புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள்.

**கேள்வி: பிராமண தன்மையின் மற்றும் மர்ஜீவா ஜென்மத்தின் (மறுபிறவியின்) முதல் முத்திரை எது? அதன் அடையாளங்கள் என்னவாக இருக்கும்?**

பதில்: முதன் முதலில் எப்பொழுது பிரம்மா வாய்வழி பிறந்த பிராமணன் ஆனீர்கள் என்றால் பிரம்மா குமார், பிரம்மா குமாரியின் முத்திரை இடப்பட்டது. பிரம்மா குமார், குமாரி என்றால் ஒவ்வொரு எண்ணம். வார்த்தை, செயல், சம்மந்தம், தொடர்பு மற்றும் சேவை அனைத்திலும் பிராமண தன்மைக்கு ஏற்றபடி நடைமுறை வாழ்க்கையில் நடந்து கொள்பவர். எந்தவொரு சூத்திர தன்மையின் சம்ஸ்காரமும்

தென்படலாகாது. பிராமண ரூபத்தில் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு எண்ணம் பிரம்மாபாபாவிற்குச் சமமாக இருக்கட்டும். எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள். எந்த சுபாவம், சம்ஸ்காரம் அல்லது எண்ணம் தந்தையினுடையதோ அதுவே குழந்தைகளினுடையதாக இருக்கட்டும். எப்படி தந்தைக்கு வீணான மற்றும் பலஹீனமான எண்ணங்கள் உற்பத்தி ஆவதில்லை, தந்தை ஆடாத அசையாத உறுதியான நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறார் என்றால் பிராமணர்கள் மற்றும் குழந்தைகளின் கடமை தந்தையைப் பின்பற்றி நடப்பது.

**கேள்வி: தந்தையைப் பின்பற்றி நடப்பதின் யதார்த்த அர்த்தம் என்ன?**
பதில்: தந்தையைப் பின்பற்றி நடப்பது என்றால் ஈஸ்வரிய சேவாதாரியாக ஆகி விட்டேன் என்பது மட்டுமல்ல ஆனால் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்றால், ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு எண்ணத்திலும் பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது. எப்படி தந்தையின் ஈஸ்வரிய சம்ஸ்காரம், தெய்வீக சுபாவம், தெய்வீக உள்உணர்வு மற்றும் தெய்வீகப் பார்வை எப்பொழுதுமே இருக்கிறதோ அதே போலவே உங்களுடைய உள்உணர்வு, பார்வை, சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் இருக்க வேண்டும். அந்த மாதிரி ஈஸ்வரிய காரியங்கள் செய்யும் முகமாக இருக்க வேண்டும். அந்த முகம் மூலமாக தந்தையின் குணங்கள் மற்றும் காரியங்களின் வடிவமைப்பு தென்பட வேண்டும். எப்படி தந்தையின் குணத்தை மகிமை செய்கிறீர்கள் அல்லது சரித்திரத்தை வர்ணனை செய்கிறீர்கள், அதே போன்று தன்னிலும் அந்த அனைத்து குணங்களும் தாரணை ஆக வேண்டும்.

**கேள்வி: குழந்தைகளின் எந்தக் காரியம் நிரந்தரமான நினைவுச்சின்னம் ஆகி விடுகிறது?**
பதில்: எந்தக் காரியத்தை தந்தையின் நினைவில் இருந்து செய்கிறீர்களோ அந்தக் காரியம் நினைவுச்சின்னம் ஆகி விடுகிறது. கர்மயோகி என்றால், ஒவ்வொரு காரியமும் யோகா நிறைந்த, யுக்தியானதாக, சக்தி நிறைந்ததாக இருக்க வேண்டும்.

**கேள்வி: யார் கர்மயோகியாக இருக்கிறாரோ அவருடைய அடையாளமாக என்ன இருக்கும்?**
பதில்: எந்தவொரு காரியமும் அவரை தன் பக்கம் ஈர்க்க முடியாது. யோகி தன்னுடைய யோக சக்தி மூலம் கர்மேந்திரியங்கள் மூலமாக காரியம் செய்விக்கிறார். யார் காரியத்தின் வசமாகி நடந்து கொள்பவர்களோ அவர்களை கர்மயோகி என்றில்லாமல் கர்மபோகி என்று கூறுவோம். ஏனென்றால் யார்

கர்மத்தின் போகத்தின் (அனுபவத்தின்) வசமாகி விடுகிறார், அதாவது காரியத்தை அனுபவம் செய்வதில் நல்ல அல்லது தீய காரியத்தின் வசமாகி விடுகிறார்கள். அவர்களை யோகி என்று கூற முடியாது. இராஜயோகி ஆத்மாக்கள் நீங்கள் ஒருபொழுதும் செய்யும் காரியத்தின் அடிமையாக, காரியங்களின் அடங்கிய நிலை இருப்பவராக ஆக முடியாது. நல்லது.

**வரதானம்: ஈஸ்வரிய மரியாதைகளின் ஆதாரத்தில் உலகின் எதிரில் ஒரு உதாரணமாக ஆகக்கூடிய சகஜயோகி ஆகுக!**

உலகின் எதிரில் ஒரு உதாரணமாக ஆவதற்காக அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரைக்குமான ஈஸ்வரிய மரியாதைகள் என்னென்ன இருக்கின்றனவோ அதன் பிரகாரம் நடந்து கொண்டே இருங்கள். விசேஷமாக அமிர்தவேளையின் மகத்துவத்தை தெரிந்து அந்த நேரம் சக்திசாலியான நிலையை உருவாக்கினீர்கள் என்றால் முழு நாளின் வாழ்க்கை மகான் ஆகி விடும். எப்பொழுது அமிர்தவேளையில் தந்தையிடமிருந்து விசேஷமாக சக்தியை நிரப்பிவிட்டீர்கள் என்றால், சக்தி சொரூபமாக நடந்து கொள்வதினால் எந்தவொரு காரியத்திலும் கடினம் அனுபவம் ஆகாது. மேலும் மரியாதைப்பூர்வமான வாழ்க்கை வாழ்வதினால் சகஜயோகியின் நிலையும் இயல்பாகவே உருவாகி விடும். பிறகு உலகம் உங்களுடைய வாழ்க்கையைப் பார்த்து தனது வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**சுலோகன்: தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் தூய்மையின் உயர்ந்த நிலையை அனுபவம் செய்வியுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயதர்சன சக்கரதாரி அதாவது சக்கரவர்த்தியே விஷ்வ கல்யாணகாரி!

இன்று ஞானம் நிறைந்த பாப்தாதா தன்னுடைய மாஸ்டர் ஞானம் நிறைந்த குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபா மூலமாகக் கிடைத்த ஞானத்தை நன்றாக சிந்தனை செய்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமாக இயன்றளவு யோகம், இயன்றளவு சக்தி அனுசாரமாக ஞானம் நிறைந்த ஆத்மா என்ற அனுபவம் செய்து கொண்டிருக்கின்றார். ஞானம் நிறைந்த ஆத்மா என்றாலே ஞானத்தினுடைய ஒவ்வொரு பாயிண்டிலும் அனுபவ சொரூபம் ஆவது. ஒரு வினாடியில் ஞானம் நிறைந்த ஆத்மா என்ற நிலையில் நிலைத்து விடுங்கள் பய்தாதா கட்டளை தருகின்றார் என்றால். ஒரு வினாடியில் அந்த ஸ்திதியில் நிலைக்க முடிகின்றதா? ஆக முடிகின்றதா? அல்லது ஆகி விட்டீர்களா? அந்த ஸ்திதியில் நிலைத்திருந்து உலகத்தில் இருக்கும் ஆத்மாக்களைப் பாருங்கள். என்ன அனுபவம் செய்கின்றீர்கள்? அனைத்து ஆத்மாக்களும் எப்படி தென்படுகின்றார்கள்? அவ்வளவு பரந்த புத்திக்கான நிலை இருக்கின்றதா என்பதை அனுபவம் செய்யவும். திரிகாலதரிசினி, திரிநேத்திரி, தூராந்தேசி, உலக சர்வசக்திவான், அனைத்து குணம், சக்திகளின் எஜமானன் என்று எத்தனை நிலையுள்ளது? அந்த ஸ்திதியில் இருந்து கீழே பார்க்கவும். அனைத்து விதமான ஆத்மாக்களையும் பாருங்கள். முதலில் தன்னுடைய பக்த ஆத்மாக்களைப் பார்க்கவும். என்ன தென்படுகின்றது? ஒவ்வொரு இஷ்ட தேவர்களின் அநேக முறையில் பக்தி செய்யக்கூடிய விதவிதமான பக்தர்களின் வரிசை இருக்கின்றது. எண்ணிலடங்காத பக்தர்கள் இருக்கின்றார்கள். சிலர் சதோபிரதானமான பக்தர்கள் அதாவது பாவனையுடன் பக்தி செய்பவர்கள், சிலர் ரஜோ. தமோகுணி அதாவது சுயநலனுக்காக பக்தி செய்யக்கூடிய பக்தர்கள் ஆனால் அனைவரும் பக்தர்களின் வரிசையில்தான் இருக்கின்றார்கள். பாவமானவர்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள், அலைந்துக் கொண்டிருக்கின்றார்கள், கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கூக்குரல் கேட்கின்றதா ஏன்னா? (ஒரு ஈ பாபாவிற்கு முன்னால் சுற்றிக் கொண்டிருந்தது) எப்படி இந்த ஈ அலைந்து

கொண்டிருக்கின்றது. இதற்கு இருப்பிடம் காட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. அப்படி பக்தர்களுக்காக அப்படி தீவிர எண்ணம் வருகின்றதா? நல்லது பக்தர்களைப் பார்த்து விட்டீர்கள்.

இப்பொழுது தர்மத்தின் மனிதர்களைப் பாருங்கள், எத்தனைவிதமான பெயர், ஆடை, காரியத்திற்கான விதி, எத்தனை விதமான கவர்ச்சி செய்யும் சாதனங்களை தன்னிடத்தே வைத்துள்ளனர். இதுகூட மிக தர்மத்தினுடைய பெரிய ரம்மியமான பஜாரைப் போல் உள்ளது. ஒவ்வொருவருடைய விளம்பர காட்சிப் பெட்டகத்திலும் (ஷோகேஸ்) அவரவரர் விதியினுடைய காட்சிப் பொருள் தென்படுகின்றது. சிலர் நன்றாக சாப்பிட்டு, அருந்திக் குடித்துக் கொண்டிருக்கின்றார்கள், சிலர் அனைத்தையும் விட்டு தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றார்கள். ஒருவருடைய விதி சாப்பாடு, அருந்துதல் சந்தோஷத்தை கொண்டாடுதல், மற்றொரு வருடைய விதி அனைத்தையும் தியாகம் செய்தல். அதிசயமான காட்சியல்லவா? சிலர் சிவப்பு, சிலர் மஞ்சள், விதவிதமான கருத்துக்கள், இதனைப் பார்க்கும் பொழுது ஹே மாஸ்டர் ஞானம் நிறைந்த குழந்தைகளே. உங்களுக்கு என்ன எண்ணம் வருகின்றது. தர்ம ஆத்மாக்களுக்கும் நன்மை செய்யும் மாஸ்டர் பரமாத்மாவிற்கு என்ன சிந்தனை ஏற்படுகின்றது? உலகிற்கு நன்மை செய்பவர்களாகிய உங்களுக்கு இவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று எழுகின்றதா? அல்லது சுய நன்மையிலேயே முழ்கியிருக்கின்றீர்களா? தன்னுடைய சேவை நிலையத்திலிலேயே பிஸியாக உள்ளீர்களா? அனைத்து ஆத்மாக்களின் தந்தையினுடைய குழந்தைகள், அனைத்து ஆத்மாக்களும் உங்களுடைய சகோதரர்கள். ஹே! மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களே, தன்னுடைய சகோதரர்களின் பக்கம் சங்கல்பம் என்ற பார்வை எப்பொழுது செல்லப்போகின்றது? பரந்த புத்தி, தூராந்தேசி (தொலை நோக்குப் பார்வை) அனுபவம் செய்கின்றீர்களா? சிறு சிறு விஷயங்களில் நேரம் செலவாகவில்லைதானே? உயர்ந்த ஸ்திதியில் நிலைத்திருக்கின்றீர்களா? விசாலமான காரியம் தென்படுகின்றதா?

இப்பொழுது மூன்றாவது பக்கம் பாருங்கள், தற்கால சங்கமயுகத்தில், கூடவே எதிர்காலத்திலும் கூட உங்களுடைய ராஜ்யத்திற்கு சகயோகம் கொடுக்கக்கூடிய விஞ்ஞானி ஆத்மாக்கள் எவ்வளவு முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். என்னனென்ன கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது கூட நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது விஞ்ஞானத்தின் உதவியினால்தான் (மைக், கெட்போன்) கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்.

## 1981 அவ்யக்த முரளி

தெளிவான பொருட்களை உருவாக்கி உங்களுக்குப் பரிசாகக் கொடுத்து விட்டு சென்றுவிடுவார்கள். இந்த ஆத்மாக்களுக்குக் கூட எவ்வளவு தியாகம் உள்ளது. எவ்வளவு முயற்சி எவ்வளவு மூளையுள்ளது. தான் முயற்சி செய்து பிராப்தியை உங்களுக்குத் தருகின்றார்கள். இந்த ஆத்மாக்களின் நன்மைக்கான விதி எண்ணத்தில் வருகின்றதா? அல்லது இவர்கள் நாஸ்திகன் என்று நினைத்து விட்டுவிடுவீர்களா? அவர்களுக்கு என்ன தெரியும்? ஆனால் ஆஸ்திகனோ? நாஸ்திகனோ? குழந்தைகள் தானே? உங்களுடைய சகோதரனல்லவா? சகோதரர்கள் என்ற உறவின் மூலமாக இந்த ஆத்மாக்களுக்குக்கூட ஏதாவது ஒருவிதத்தில் ஆஸ்தி கிடைக்கவேண்டும்தான்? விஷ்வகல்யாண்காரி என்ற ரூபத்தில் இந்த பக்கம் பார்வையைச் செலுத்த மாட்டீர்களா? அவர்கள் கூட அதிகாரிகள்தானே? ஒவ்வொருவரும் அதிகாரத்தை அடையும் முறை வெவ்வேறானது. நல்லது இன்னும் முன்னால் செல்லுங்கள். உள்நாடு, அயல்நாட்டில் உள்ள ராஜ்ய அதிகாரிகளைப் பாருங்கள். பார்த்தீர்களா? ராஜ்யம் அசைந்துக் கொண்டிருக்கின்றதா? நிலையாக இருக்கின்றதா? ராஜ்யத்தின் காட்சி எப்படித் தென்படுகின்றது? கல்பத்திற்கு முன்பான நினைவு சின்னத்தில் ஒரு விளையாட்டுக் காட்டி யுள்ளார்கள். என்ன விளையாட்டு என்று தெரியுமா? அது சாகாரத்தில் பிரம்மாபாபாவிற்குப் பிடித்தமான விளையாட்டாக இருந்தது. சொக்கட்டான் ஆட்டம், ஒருபக்கம் 12 விழுந்தால் ஜெயித்து விடுவார்கள். சிலநேரம் எதுவுமேயில்லாமல் தோல்வியடைந்து விடுகின்றார்கள். அந்தளவு தோல்வியடைந்து விடுகின்றார்கள். தன்னுடைய குடும்பத்தை நடத்தமுடியாத அளவிற்கு வந்து விடுகின்றார்கள். இப்பொழுது கூட அப்படித்தான், திடீரென்று கிரீடமற்ற அதிகாரியாக உள்ளனர், திடீரென்று வாக்கிற்காக பிச்சையெடுக்கின்றனர். அப்படிப்பட்ட விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் தானே? பெயர் மற்றும் மரியாதையின் பசியில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்ககளுக்கு சிறிதாவது ஆறுதல் வழங்க வேண்டும். அவர்கள் மீதும் கருணை நிறைந்த ஆத்மாக்ள் ஆகி கருணை நிறைந்த திருஷ்டி வள்ளல் சொரூபத்தினால் சிறிதாவது கொடுத்து திருப்தியடையச் செய்யவும். ஒவ்வொரு பிரிவின் சேவையும் தனிப்பட்டது. பிறகு நீங்கள் இதனை விஸ்தாரப்படுத்த வேண்டும். இன்னும் முன்னால் செல்லவும்,

நாலாபுறமும் உள்ள பொதுவான மக்கள். இதிலும் பல்வேறு விதங்கள் உள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பாடிக் கொண்டிருக்கின்றார்கள். நாலாபுறமும் வேண்டும், வேண்டும் என்ற பாடல் தான் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த பாடலை சமாப்தி செய்வதற்கு இப்பொழுது எந்த

பாடலைப் பாட வேண்டும்? அனைத்து ஆத்மாக்களுக்கும் மகாதானி, மகாஞானி, மகா சக்திசொரூப வரதானி, மாஸ்டர் வள்ளல், ஒரு வினாடியில் திருஷ்டியைக் கொடுக்கும் வள்ளல் இப்படிப்பட்ட நன்மை செய்வதற்கான எண்ணம் வருகின்றதா? நாலாபக்கமும் பார்ப்பதற்கு நேரம் உள்ளதா? சர்ச்லைட் ஆகியுள்ளீரா? லைட் ஹவுஸ் ஆகியுள்ளீரா? இப்பொழுது நாலாபுறமும் சக்கரம் சுற்றி வருகின்றீர்களா?

இந்த நொடி விஷ்வ கல்யாண்காரி, திரிகால தரிசி, மாஸ்டர் ஞானம் நிறைந்த ஆத்மா, மாஸ்டர் உலகைப் படைப்பவர், உலகின் நாலாபுறமும் வலம் வாருங்கள். பார்வையைச் செலுத்துங்கள். தினமும் உலகைச்சுற்றி வரவும். அப்பொழுதுதான் ஸ்வதர்சனசக்கரதாரி என்று சொல்லலாம். அதன் கூடவே சக்கரவர்த்தி என்றும் சொல்லலாம். ஸ்வதர்சன சக்கரதாரி மட்டும்தானா? அல்லது சக்கரவர்த்தி ராஜாவாகவும் தானே இருக்கின்றீர்கள்? இரண்டும் தானே!

இன்று தாதி, தீதீ இருவரும் பாப்தாதாவிற்கு முன்னால் அமர்ந்துள்ளனர். பாப்தாதா விசசேமாக நிமித்தமாகியுள்ள ஆத்மாக்களைப்பார்த்து ஏன் மகிழ்ச்சியடைகின்றார்? எந்தவொரு தந்தையும் தன்னுடைய குழந்தைகளுக்கு ராஜ்யத்தைத் தந்த பிறகு எப்படி ராஜ்ய சிம்மாசனத்தில் அமர்ந்து ராஜ்யம் செய்கின்றார்கள் அதனை இந்த கலியுக உலகத்தில் பார்ப்பதில்லை ஆனால் அலௌகீக தந்தை, பரலௌகீக தந்தை குழந்தைகள் சேவை என்ற சிம்மாசனதாரியாகி எப்படி சேவைக்கான காரியத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நடைமுறையில் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள், பாபா தானே குழந்தைகளைப் பார்க்கமுடிகின்றது. இதுதான் சங்கமயுகத்தின் விசேஷமாகும். அந்த பழக்கம் சத்தியயுகத்திலும் நடக்கும். அங்குக்கூட தந்தை குழந்தைகளுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விட்டு, பார்க்கலாம் ஆனால் கலியுகத்தில் பார்க்க முடியாது. பாப்தாதா தினமும் பார்க்கின்றார். ஒவ்வொரு நிமிடத்திற்கான காட்சி, எண்ணம், வார்த்தை, கர்மம், அனைவருடைய தொடர்பு பாப்தாதாவிடம் அவ்வளவு தெளிவாக உள்ளது. உங்களிடம் உள்ளதைவிட அதிகமாகத் தெளிவாக உள்ளது. ஒவ்வொரு வினாடியும் காரியத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். நடைமுறையில் பலனை தருவதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாபா தனக்கு சமான் ஆக்கியுள்ளார், மேலும் அதற்கு மதிப்பு கொடுத்திருப்பதைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைகின்றார்.

ஒரு காட்சியைப் பார்த்து விசசேமாக மகிழ்ச்சியடைகின்றார். தினமும் உங்களுடைய ஒரு அதிசயமான நடனத்தைப் பார்க்கின்றார். முழுநாளில் அதனை

நிறைய செய்கின்றீர்கள். அனைவரும் செய்கின்றார்கள் ஆனால் விசேஷமாக நிமித்தமாக இவர் இருக்கின்றார். எனவே நிமித்தமாக உள்ளவர்கள் அதிகமாக செய்ய வேண்டியுள்ளது. அதுதான் சமஸ்கார சந்திப்பிற்கான நடனம்! ஏப்படி ஏதாவது காரியம் செய்தீர்களேயானால் கைகோர்த்து சந்திக்கின்றீர்களல்லவா? மேலும் நடனம் செய்யும் போதுகூட ஒருவரையெருவர் கைகோர்த்து ஆடுகின்றீர்களல்லவா? முழு நாளில் இந்த நடனத்தை எவ்வளவு நேரம் ஆடுகின்றீர்கள்? பாப்தாதாவிடம் தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி இருக்கின்றன. அதில் எப்படி காட்சி தெரியும்? எப்பொழுது சமஸ்காரம் சமஸ்காரத்துடன் மோதுகின்றது அந்த காட்சியும் சன்றாகயிருக்கின்றது. பிறகு எப்படி அயல்நாட்டினருக்கு உடல் நெகிழ்ச்சியானதாக உள்ளது. எங்கு வளைந்து கொள்ள வேண்டுமோ அங்கு வளைய முடிகின்றது. அதுபோல நிகழ்கால சமயத்தில் வளைந்து கொடுப்பதிலும் சகஜமாகிக் கொண்டேயிருக்கின்றனர். எனவே இந்த காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கின்றது. முதலில் இறுக்கமாயிருக்கின்றனர். பிறகு சிறிது நெகிழ்ச்சியாகின்றது. நெகிழ்ச்சியான பிறகுதான் ஒன்று சேருகின்றனர், அந்த சந்திப்பிற்குப் பிறகு மகிழ்ச்சிக்கான நடனம் ஆடுகின்றனர். எனவே காட்சி எவ்வளவு நன்றாக இருக்கும். பாப்தாதாவிடம் எல்லாமே இயல்பாக நடக்கின்றது. அனைத்து சாதனங்களும், கருவிகளும் தயாராக உள்ளது. எண்ணத்தைக் கொண்டுவந்ததும் வெளிப்பட்டு விடுகின்றது. தற்சமயம் அறிவியல் கூட சாதனங்களை சூட்சமமாக்கிக் கொண்டேயிருக்கின்றது. மிகச்சிறியதாக, மிக சக்திசாலியானதாக ஆக்கிக் கொண்டேயிருக்கின்றது. சூட்சமவதனம் என்றாலே சக்தி நிறைந்தது. இவ்வளவு சிறிய புள்ளிக்குள் நீங்கள் அனைத்தையும் பார்க்க முடிகின்றது. விஸ்தாரப்படுத்தினால் பெரியதாகப் பார்க்க முடியும். சிறியதாக்கினால் முற்றிலும் புள்ளி பிறகும் கூட குழந்தைகளின் முயற்சி, தைரியத்தைப் பார்த்து பாபா பலியாகி விடுகின்றார். ஏனென்றால் எப்படிப்பட்ட குழந்தையாக இருந்தாலும், ஒருமுறை பாபா என்று கூறிவிட்டால் பாபா பலியாகி விடுகின்றார். பிறகும் கூட குழந்தைகள்தானே? பாபா குழந்தைகளின் தவறிலும் கூட நன்மையைத்தான் பார்க்கின்றார். எப்படி இந்த சாகார உலகத்தில் சிறிய குழந்தைகள் யாராவது கீழே விழுந்து விட்டால் என்ன புதையல் எடுத்தீர்கள் என்று விளையாட்டிற்காக கேட்பார்களல்லவா? மாற்றிவிடுகின்றார்கள். இங்குக்கூட ஒருவேளை குழந்தைகள் அடிவாங்கி வங்கி, கீழே விழுகின்றீர்கள் என்றால் விழுந்து விழுந்து அனுபவியாகி சிலையாகி விடுவீர்கள். பாபா விழுவதைப் பார்ப்பதில்லை, விழுந்து பிறகு எந்தளவு சிலையாகி வந்திருக்கின்றீர்கள் என்பதைப் பார்க்கின்றார். எனவே பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் மிகப்பிடித்த மானவர்தான். காலாற்படையாக இருந்தாலும் சரி குதிரைப்படையாக

இருந்தாலும் சரி ஏனென்றால் காலாற்படை யில்லையென்றாலும் வெற்றியடைய முடியாதல்லவா? எனவே ஒவ்வொரு ஆத்மாவும் விசசேமானவர்கள் தான். பாபா மூன்று காலத்தையும் பார்க்கின்றார். நிகழ்காலத்தை மட்டும் பார்ப்பதில்லை. குழந்தைகள் நிகழ்காலத்தை மட்டும் பார்ப்பதால் என்னவாகுமோ? ஏன்? என்ற பயத்தில் வந்து விடுகின்றர்கள்.

**டீச்சர்களுடன்**: டீச்சர்கள் தனக்கு சமான் எத்தனை டீச்சரை உருவாக்கியுள்ளீர்கள். பெரியவர்கள், சிறியவர்கள் அனைவரும் பாப்சமான்தான். நிறைய உதவிக் கரங்கள் தயாராகி விட்டால் சேவை செய்யாமல் இருக்க முடியாது. பிறகு சேவை தானாக அதிகாரிக்கும். பாப்தாதா மூலமாக சொல்லப்பட்ட மகாவாக்யங்கள் பிறகு நடைமுறையில் வரும். இப்பொழுது எதுவரையில் வந்துள்ளீர்கள். எப்படி வரைபடத்தில் ஒவ்வொரு மாநிலமும் புள்ளி போலத் தெரிகின்றது. அதுபோல சேவையில் எதுவரையில் வந்துள்ளீர்கள்? இப்பொழுது மிக மிக அதிகப்படுத்துங்கள். எத்தனை வருடங்களுக்கு முன்புள்ள வார்த்தையை இப்பொழுது கேட்டுக் கொண்டிருக் கின்றீர்கள். ஒவ்வொருவரும் நிறைய கிளைகளை வளர்க்க செய்ய வேண்டும் என்பது பாபாவின் விருப்பம், அப்பொழுதுதான் சொல்ல முடியும் நம்பர் ஓன் டீச்சர். ஏப்படி கலியுக பிரதமமந்திரி ஒரு நாளில் எவ்வளவு சுற்றி வருகின்றார். அதுபோல சங்கமயுக டீச்சர்கள் எவ்வளவு சுற்றி வரவேண்டும், அப்பொழுதுதான் சக்கரவர்த்தி ராஜா என்று சொல்லமுடியும். எனவே என்ன செய்ய வேண்டும்? திட்டம் தீட்டுங்கள். அயல்நாட்டு சேவையில் அவ்வளவு முயற்சி தேவையில்லை. பாரதத்தில் நிறைய முயற்சி தேவையுள்ளது. விதேசி பூமி ஆங்காங்யே கேட்கும் விஷயத்திலிருந்து சுத்தமாக உள்ளது. பாரதத்தில் முயற்சி அதிகம் தேவைப்படுகின்றது. இரண்டாவது விஷயம் வெளிநாட்டு ஆத்மாக்கள் அனைத்தையும் பார்த்து, பார்த்து களைத்துப் போய்விட்டார்கள் ஆனால் பாரதவாசிகள் இப்பொழுதுதான் பார்க்க ஆரம்பித்துள்ளார்கள். பாரதவாசிகளுக்குள் இப்பொழுதுதான் தான் ஆசை ஆரம்பமாகியுள்ளது. வெளிநாட்டவர்கள் முடித்து விட்டார்கள். எனவே பாரதவாகிகள் சேவையை விட விதேசிகள் சேவை சகஜமாக உள்ளது. அதிர்ஷ்டசாலிகள்தான். எவ்வளவு பிரத்யக்ஷ பலனை வெளிப்படுத்த முடிகின்றது.

**பார்ட்டிகளுடன்:** லௌகீகத்தில் கூட யாராவது வீட்டிலிருந்து சென்றால் அது மகிழ்ச்சியை ஏற்படுத்தாது ஆனால் பாப்தாதா குழந்தைகள் வெளியில் செல்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஏன்? ஒவ்வொரு நல்ல குழந்தையும் பலனை வெளிப்படுத்துவதற்காகச் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை

பாப்தாதா புரிந்து கொண்டிருக்கின்றார். செல்லவில்லை, பிறரை அழைத்துவர செல்கின்றார்கள். ஒருவர் சென்று நிறைய பேரை அழைத்து வந்தால் மகிழ்ச்சி ஏற்படும் அல்லவா? எங்கு சென்றாலும் பாப்தாதாவின் துணையை விட முடியாது, பாபா விட விரும்பினாலும் விட முடியாது. இருவருமே பந்தனத்தில் கட்டுண்டு இருக்கின்றார்கள். (சத்யுகத்தில் விட்டுவிடுகின்றோம்.) சத்தியயுகத்தில் கூட ராஜ்யத்தைக் கொடுத்து மழ்ச்சியடைகின்றார். குழந்தைகள் மீது நம்பிக்கையிருக்கின்றது இவர்கள் நல்லமுறையில் ராஜ்யம் செய்வார்கள், எனவே கவலையற்று இருக்கின்றார். லண்டன் குழந்தைகள் கூட தன்னை நல்லமுறையில் விருத்தி செய்திருக்கின்றார்கள். இப்பொழுது மேலும் உலகத்தில் நாலாபுறமும் பரவ வேண்டும். எந்த இடம் காலியாக உள்ளதோ? லண்டனில் அவ்வளவு சகயோகிகள் இருக்கின்றார்கள், அவர்கள் சேவையில் உதவி செய்ய முடியும். நல்ல ரிசல்ட் கொடுத்திருக்கின்றார்கள்.

அமிர்தவேளையை சக்திசாலியாக வைப்பதற்காக விதவிதமான அனுபவங்களைச் செய்கின்றீர்கள். சில நேரம் ஞானம் நிறைந்தவர் என்ற அனுபவம், சில நேரம் அன்பு சொரூபத்தின் அனுபவம் செய்யுங்கள். இப்படி விதவிதமான அனுபவங்களை அதிகரித்துக் கொண்டே சென்றீர்களேயானால் நினைவின் போது ஏற்படும் சோம்பேறித்தனம், களைப்பு ஒருபோதும் வராது. ஏனென்றால் தினமும் புதுபுது அனுபவங்கள் ஏற்படும். விதவிதமான நிலையின் அனுபவத்தினை செய்யுங்கள். சிலநேரம் கர்மாதீத் நிலையின் அனுபவம், சிலநேரம் பரிஸ்தாவின் அனுபவம், சிலநேரம் ஆன்மீக உரையாடலின் அனுபவம் செய்யுங்கள், விதவிதமான அனுபலம் செய்யவும். சிலநேரம் சேவாதாரியாகி சூட்சமரூபத்தில் உலகைச் சுற்றி வாருங்கள். இந்த அனுபவத்தினை அதிகப்படுத்திக் கொண்டே செல்லவும். நல்லது. ஓம்சாந்தி.

**வெளிநாடு பார்ட்டிகளுடன் - சாரம் : நியூஸிலேண்ட் பார்ட்டி:** உங்களுக்கு சதா என்ன நினைவு உள்ளது? நியூஸிலேண்ட் காரர்களுக்கு உலகிற்கு என்ன புதிய செய்தி (new news) தரலாம் என்பது! இவ்வாறு செய்தால் முழு உலகிற்கும் லைட் ஹவுஸ் ஆகி விடுவீர்கள். இப்போது இந்த அற்புதத்தைச் செய்யுங்கள் -அதிகமான டீச்சர்களை உருவாக்கி எல்லா பக்கமும் பரவ வேண்டும். பாரதத்தை விட்டுச் சென்றிருந்தாலும்கூட பாரதத்தின் தந்தை உங்களை விடவில்லை!

**டிரினிடாட் பார்ட்டி:** பாப்தாதா சதா குழந்தைகளிடம் எந்த விசேஷத்தைப் பார்க்கிறார்? 21-ஜென்மத்தின் பலனை! தந்தை உடையவராகி விட்டீர்கள் என்றால் பிராமணன் ஆவது. பிராமணர்கள்தான் நிச்சயமாக தேவதைகளாக ஆகிறார்கள்.

பின்னர் தேவதைகளில் பதவி என்பது அவரவர் முயற்சியைப் பொறுத்தது. இப்போது சேவைக்கன சாதனங்கள் அதிகம் உள்ளது. மனஸா சேவை செய்யவும் நல்ல வாய்ப்பு உள்ளது. நாள் முழுவதும் தன்னை ஏதாவது ஒரு சேவையில் பிஸியாக வைத்திருங்கள்.

**ஆப்பிரிக்கா:** சதா அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருக்கிறர்களா? சதா இந்த தந்தையின் விசாலமான இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள், தேக உணர்வு என்ற மண்ணில் கீழே வரக்கூடாது மற்றும் மாயாவும் அருகே வராது. எனில் சதா டபுள் லைட் ஆக இருக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: புதிய வாழ்க்கையின் நினைவு மூலமாக கர்மேந்திரியங்கள் மீது முழுமையான வெற்றியை பிராப்தியாக அடைய வைக்க்கூடிய மறுபிறவி ஆகுங்கள்!**

எந்த குழந்தைகள் முழுமையாக மறுபிறவி எடுத்திருக்கின்றார்களோ அவர்கள் கர்மேந்திரியங்களின் கவர்ச்சியில் செல்லமாட்டார்கள். மறுபிறவி எடுப்பது என்றாலே அனைத்து பக்கத்திலிருந்தும் இறந்து விடுவது பழைய ஆயுள் முடிந்து விட்டது. புதிய பிறவி எடுத்த பிறகு புதிய பிறவி, புதிய வாழ்க்கையில் கர்மேந்ரியங்களுக்கு எப்படி அடிமையாக முடியும்? பிரம்மாகுமார், பிரம்மாகுமாரிகளுக்கு புதிய பிறவியில் கர்மேந்திரியங்களுக்கு வசமாவது என்றால் என்ன? இந்த ஞானத்திலிருந்தும் விடுப்பட்டு இருக்க வேண்டும். சூத்திரனுடைய சமஸ்காரத்தினுடைய மூச்சு எங்கேயும் ஒளிந்திருக்கக் கூடாது.

**சுலோகன்: அமிர்தவேளையில் உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பை நிறைத்து விட்டீர்களென்றால் வேறு யாருடைய அன்பும் கவர்ந்திழுக்க முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த சகஜ மார்க்கத்தில் கஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் நிவாரணம்!

இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டு குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இரட்டை வெளிநாட்டினர் இரட்டை பாக்கியசாலிகள் ஏன்? ஒன்று பாப்தாதாவை தெரிந்து கொண்டார்கள் மற்றும் ஆஸ்தியின் அதிகாரி ஆகியிருக்கிறார்கள். இரண்டாவது, இறுதியில் வந்தும் மிக வேகமாக முன்னேறி முதலில் வருவதற்கான மிகவும் நம்பிக்கைக்குரியவர்கள். இறுதியில் வந்திருப்பவர்கள் சில காரணங்களினால் பாக்கியசாலிகள் தான், ஏனென்றால் அனைத்தும் தயாராகி இருக்கும் நிலையில் வந்திருக்கிறார்கள். முதலில் வந்திருந்த குழந்தைகளோ சிந்தனை செய்தார்கள், கடுமையாக உழைத்தார்கள், வெண்ணை திரட்டினார்கள். மேலும் நீங்கள் அனைவரும் வெண்ணையை உண்பதற்கு சரியான நேரத்தில் வந்திருக்கிறீர்கள். உங்களை பொறுத்தளவில் மிக மிக சுலபமாகும். ஏனென்றால் முதலில் வந்த குழந்தைகள் மார்க்கத்தை தயார் செய்து அனுபவி ஆகி விட்டார்கள். மேலும் நீங்கள் அனைவரும் அந்த அனுபவிகளின் சகயோகத்தினால் சுலபமாகவே லட்சியத்தை வந்தடைந்து விட்டீர்கள். அப்படி இரட்டை பாக்கியம் நிறைந்தவர்கள் தான் இல்லையா. இரட்டை பாக்கியமோ நாடகத்தின் அனுசாரம் கிடைத்தே இருக்கிறது. இப்பொழுது இன்னும் என்ன செய்ய வேண்டும்?

எப்படி அனுபவம் நிறைந்த மகாரதிகள் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் உங்கள் அனைவரின் அனுபவங்கள் மூலமாக சேவை செய்திருக்கிறார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் தங்களது அனுபவங்களின் ஆதாரத்தினால் அனேகர்களை அனுபவி ஆக்க வேண்டும். அனுபவத்தைக் கூறுவது அனைத்தையும் விட சுலபமானது. என்னென்ன ஞானத்தின் துளிகள் இருக்கின்றனவோ அவை துளிகள் இல்லை ஆனால் ஒவ்வொரு துளியின் அனுபவம் இருக்கிறது. அப்படி ஒவ்வொரு ஞானத்துளியின் அனுபவத்தைக் கூறுவது எவ்வளவு சுலபம். அந்த

# 1981 அவ்யக்த முரளி

அளவு சுலபமாக அனுபவம் செய்கிறீர்களா? அல்லது கடினமாக இருக்கிறதா? ஒன்று அனுபவத்தின் ஆதாரத்தின் காரணமாக சுலபமாக இருக்கிறது. இன்னொரு விஷயம் தொடக்கத்தில் இருந்து இறுதி வரைக்குமான ஞானத்தை பாப்தாதா ஒரு கதையின் ரூபத்தில் கூறுகிறார். அப்படி கதை கூறுவது மற்றும் கேட்பது மிக சுலபமாக இருக்கும். மூன்றாவது விஷயம் - தந்தை இப்பொழுது என்ன கூறிக் கொண்டிருக்கிறாரோ அதை நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் முதல் தடவை கேட்கவில்லை ஆனால் அனேக தடவைகள் கேட்டிருக்கிறீர்கள். மேலும் இப்பொழுது அதை திருப்பிச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்படி எந்தவொரு விஷயத்தையும் அதே போல் மீண்டும் செய்வது கேட்பது அல்லது சொல்வது மிக சுலபமாக இருக்கும் புதிய விஷயம் கடினமாக இருக்கும் ஆனால் அனேக தடவைகள் கேட்டிருக்கும் விஷயங்களை மீண்டும் அப்படியே செய்வது மிக சுலபமானதாக இருக்கும். நினைவை பாருங்கள் எவ்வளவு அன்பானது மற்றும் நெருக்கமான சம்மந்தத்தின் நினைவாக இருக்கிறது. நெருக்கமான சம்மந்தத்தை நினைவு செய்வது கடினமாக இருக்காது, விரும்பாவிட்டாலும் கூட அவருடைய நினைவு வந்து கொண்டே இருக்கும். மேலும் பிராப்தியை பாருங்கள், பிராப்தியின் ஆதாரத்தினால் கூட நினைவு செய்வது மிக சுலபமாகும். ஞானமும் மிக சுலபம் மற்றும் நினைவும் மிக சுலபம். மேலும் இப்பொழுதோ ஞானம் மற்றும் யோகா காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் உங்களுக்காக ஞான மழை 7 நாட்களிலேயே முடிவடைந்து விடுகிறது. மேலும் யோகா முகாம் 3 நாட்களிலேயே முடிவடைந்து விடுகிறது. அப்படி கடலை ஒரு சிறிய தண்ணீர் பாத்திரத்தில் நிரப்பி விட்டீர்கள். கடலைத் தூக்குவது கடினம் ஆகும். சிறிய தண்ணீர் பாத்திரத்தைத் தூக்குவது கடினம் இல்லை. உங்களுக்கோ கடலை தண்ணீர் பாத்திரத்தில் நிரப்பி, சிறிய பாத்திரத்தை மட்டும் கொடுத்திருக்கிறோம், அவ்வளவு தான் ! 'நீங்கள் மற்றும் தந்தை' என்ற இரண்டு வார்த்தைகளில் ஞானம் மற்றும் யோகா வந்து விடுகிறது. அப்படி நினைவும் வந்து விட்டது மற்றும் ஞானமும் வந்து விட்டது. அப்படி இரண்டு வார்த்தைகளை தாரணை செய்வது எவ்வளவு சுலபம். எனவே தான் உங்களுடைய பட்டமே சகஜ இராஜயோகி ஆகும். எப்படி பெயரோ அப்படியே அனுபவம் செய்கிறீர்களா? இதை விட வேறு ஏதாவது சகஜமாக இருக்க முடியுமா என்ன? பொதுவாகவே ஏன் கடினமாக ஆகிறது. அதற்கான காரணம் தன்னுடைய பலஹீனமே ஆகும். ஏதாவது பழைய சம்ஸ்காரம் சுலபமான மார்க்கத்தின் இடையில் பந்தனமாக உருவாகி தடை ஏற்படுத்துகிறது. மேலும் சக்தி இல்லாத காரணத்தினால் கல்லை உடைக்கத் தொடங்குகிறார்கள். மேலும் உடைத்து உடைத்து மனமுடைந்துப் சோர்ந்து போகிறார்கள் ஆனால் சுலபமான வழி எது? கல்லை உடைக்க கூடாது ஆனால் அதைத் தாண்டி கடந்து சென்று விட வேண்டும்.

# 1981 அவ்யக்த முரளி

இது ஏன் நடந்தது? இது நடக்கக்கூடாது. இறுதியில் இது எதுவரையிலும் இருக்கும்? இதுவோ மிகக் கடினம் அப்படி ஏன் நடக்கிறது? இந்த வீணான எண்ணம் கல்லை உடைப்பதாகும் ஆனால் ஒரே ஒரு வார்த்தை 'நாடகம்' நினைவு வந்து விட்டது என்றால் ஒரு டிராமா என்ற வார்த்தையின் ஆதாரத்தினால் உயரம் தாண்டுதல் செய்து விடுகிறார்கள். அதில் எத்தனை நாட்கள் மற்றும் மாதங்கள் ஆனதோ. ஆனால் இதிலோ ஒரு விநாடி தான் எடுக்கிறது. அப்படி ஞானத்தில் பலஹீனம் தன்னுடையதாக இருந்தது இல்லையா ?

தேவையான நேரத்தில் அந்த ஞானத்துளி புத்தியில் வருவதில்லை. அதே போல் அனேக துளிகள் புத்தியிலும் நோட்டு புத்தகங்களிலும் நிறைந்திருக்கின்றன ஆனால் நேரம் என்ற நோட்டுப் புத்தகத்தில் அந்த நேரம், அந்த ஞானத்துளி தென்படுவதில்லை. இதற்காக எப்பொழுதும் ஞானத்தின் முக்கியமான துளிகளை தினசரி மீண்டும் மீண்டும் படித்து நினைவு செய்யுங்கள். அனுபவத்தில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். சோதனை செய்து கொண்டே இருங்கள். மேலும் தன்னை சோதனைசெய்து மாற்றம் செய்து கொண்டே இருங்கள். பிறகு ஒரு பொழுதும் நேரம் வீணாகச் செல்லாது. ன்னும் வரும் நாட்களிலேயே மிகுந்த அனுபவம் செய்வீர்கள் எப்பொழுதுமே தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அனுபவம் செய்வீர்கள் புரிந்ததா? இப்பொழுது ஒருபொழுதும் வீணான எண்ணங்கள் என்ற சுத்தியலினால் பிரச்சனைகள் என்ற கல்லை உடைப்பதில் ஈடுபடாதீர்கள். இப்பொழுது இந்த கூலி வேலை செய்வதை விடுங்கள், மகாராஜா ஆகுங்கள். கவலையில்லா ஊரின் மகாராஜா ஆவீர்கள். எனவே பிரச்சனை என்ற வார்த்தை இருக்காது மேலும் அடிக்கடி எச்சரிக்கை செய்வதில் நேரம் செல்லாது. இதே பழைய சம்ஸ்காரம் உங்களுடைய தாசன் ஆகி விடும், உங்களைத் தாக்காது. எனவே மகாராஜா ஆகுங்கள். சிம்மாசனதாரி ஆகுங்கள், கிரீடம் அணிந்திருப்பவராக ஆகுங்கள். திலகமிட்டிருப்பவராக ஆகுங்கள்.

**ஜெர்மனி பார்ட்டியுடன்:** சகஜ ஞானம் மற்றும் யோகாவின் அனுபவிகளாக இருக்கிறீர்களா? பாப்தாதா ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாவின் எதிர்காலத்தைப் பார்க்கிறார்கள். எப்படி தந்தை ஒவ்வொருவரின் நெற்றியில் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்க்கிறார். அதே போல் நீங்களும் தன்னுடைய நெற்றியில் எப்பொழுதும் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்க்கிறீர்களா? நட்சத்திரம் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கிறதா? மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தை மாயா ஒருபொழுதும் மறைத்து விடுவதில்லையே? மாயா வருகிறதா? மாயாவை வென்று உலகத்தை வென்றவராக எப்பொழுது

ஆவீர்கள்? இன்று மற்றும் இப்பொழுது என்ற உறுதியான எண்ணம் வைத்தீர்கள் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி, மாயாவை வென்றவர்-உலகை வென்றவராகவே ஆகி விடுவீர்கள். தைரியம் இருக்கிறது தான் இல்லையா? ஒருவேளை தைரியம் வைத்தீர்கள் என்றால் பாப்தாதாவும் அவசியமாகவே உதவி செய்வார். ஒரு அடியை நீங்கள் எடுத்து வையுங்கள், ஆயிரம் அடிகள் தந்தை உதவி செய்வார். ஒரு அடி எடுத்து வைப்பதோ சுலபம் தான் இல்லையா? அப்படி இன்றிலிருந்து அனைவரும் சகஜ யோகி என்ற பட்டத்தை மதுபன் வரதான பூமியிலிருந்து வரதான ரூபத்தில் பெற்றுச் செல்லுங்கள். இந்த குரூப் ஜெர்மனி குரூப் அல்ல, ஆனால் சகஜயோகி குரூப். எந்தவொரு விஷயம் உங்கள் எதிரில் வந்தாலும் அதை தந்தை மேல் மட்டும் விட்டு விடுங்கள். உணர்வோடு உரிமையோடு 'பாபா' என்று கூறுங்கள். பிறகு விஷயம் முடிவடைந்து விடும். இந்த பாபா என்ற வார்த்தையை உள்ளப்பூர்வமாகச் சொல்வது தான் மந்திர சக்தியாகும். அந்த அளவு உயர்ந்த மந்திர சக்தி நிறைந்த வார்த்தை உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. மாயா எந்த நேரம் வருகிறதோ அந்த நேரம் இதை மறக்க மட்டும் வைத்து விடுகிறது. மாயா செய்யும் முதல் வேலையே தந்தையை மறக்க வைப்பது தான். எனவே இந்த கவனம் வைக்க வேண்டும். எப்பொழுது இந்த கவனம் வைப்பீர்களோ அப்பொழுது நிரந்தரமாக தாமரை மலருக்குச் சமமாக தன்னை அனுபவம் செய்வீர்கள். மாயாவின் பிரச்சனைகளின் சேறு எவ்வளவு இருந்த போதிலும் நீங்கள் நினைவின் ஆதாரத்தினால் சேற்றிலிருந்து எப்பொழுதுமே விலகி இருப்பீர்கள். தாமரை மலர் உங்களுடைய படம் தான் இல்லையா? எனவே பாருங்கள் ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய கண்காட்சி கூடத்தில் தாமரை மலரை உருவாக்கியிருக்கிறார்கள் இல்லையா? பிரம்மாபாபா மட்டும் தாமரை மலரில் அமர்ந்திருக்கிறாரா அல்லது நீங்களும் அமர்ந்திருக்கிறீர்களா? தாமரை மலரின் நிலை உங்களுடைய ஆசனம் ஆசனத்தை ஒருபொழுதும் மறக்காமல் இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் மலர்ந்த முகத்தோடு இருப்பீர்கள். ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் குழப்பத்தில் வர மாட்டீர்கள் எப்பொழுதுமே மகிழ்ச்சியினால் முகமலர்ந்திருக்கும் மனநிலை தான் இருக்கும். உங்களை அனைவரும் பார்த்து இவர் எப்பொழுதுமே சகஜயோகி மற்றும் எப்பொழுதும் முகம் மலர்ந்திருப்பவர் என்று மகிமை செய்வார்கள். எப்பொழுதும் தந்தை என்ற வார்த்தையின் மந்திரத்தை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மூன்று விஷயங்களை நினைவில் வையுங்கள். ஜெர்மனியைச் சேர்ந்தவர்களிடம் மதுபன்னிற்கு மிகவும் ஈர்க்கப்பட்டு மிக அன்புடன் ஓடி வரும் விசேஷம் இருக்கிறது. மதுபன் மேல் அன்பு என்றால் தந்தை மேல் அன்பு. பாப்தாதாவிற்கும் குழந்தைகள் மேல் இந்த அளவே அன்பு இருக்கிறது. தந்தையின்

## 1981 அவ்யக்த முரளி

அன்பு அதிகமா அல்லது குழந்தைகளின் அன்பு அதிகமா? (தந்தையின்) உங்களுடையதும் தந்தையை விட பல மடங்கு அதிகமானது. தந்தையோ எப்பொழுதும் குழந்தைகளை முன்னுக்கு வைப்பார் இல்லையா? குழந்தைகள் தந்தைக்கும் எஜமானர்கள். பாருங்கள் நீங்கள் உலகின் அதிபதி ஆவீர்கள், தந்தை அதிபதியாக ஆக்குவார் ஆனால் அவர் ஆக மாட்டார். அப்படி நீங்கள் முன்னுக்கு இருக்கிறீர்கள் இல்லையா? இந்த அளவு அன்பு தந்தைக்கு குழந்தைகள் மேல் இருக்கிறது. ஒரு ஜென்மத்தின் அதிர்ஷ்டம் இல்லை 21 ஜென்மங்களுக்கான அதிர்ஷ்டம் மற்றும் அழியாத அதிர்ஷ்டம், இது உறுதியானது.

ஜெர்மனி குரூப்பினர் அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். எப்படி இப்பொழுது உழைத்து கீதைக்குரிய பகவானின் படத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். அதே போல் பெயர் பெற்ற நபரைக் கண்டுபிடியுங்கள், அவர் மூலம் ஆம் கீதை சொன்னது பகவான் சிவன் என்பது அனைவரிடமும் சென்றடைய வேண்டும். பாப்தாதா குழந்தைகளின் உழைப்பைப் பார்த்து மிகுந்த பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். மிக நல்ல தலைப்பை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இதே தலைப்பை நிரூபித்து விட்டீர்கள் என்றால் முழு உலகிலும் வெற்றி முழக்கம் ஏற்பட்டு விடும். எப்படி இப்பொழுது உழைத்திருக்கிறீர்கள் அதே போல் இன்னும் உழைத்து செய்தியை நாலாபுறமும் பரப்ப வேண்டும். ஞான சிந்தனை நன்றாக செய்திருக்கிறீர்கள், மிக நல்ல படங்களை உருவாக்கியிருக்கிறீர்கள்.

**கேள்வி: பாப்தாதா ஒவ்வொரு இடத்தின் ரிசல்ட்டை எதன் ஆதாரத்தில் பார்க்கிறார்?**

பதில்: அந்த இடத்தின் வாயுமண்டலம் மற்றும் சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று அதன் ஆதாரத்தில் தான் பாப்தாதா ரிசல்ட்டைப் பார்க்கிறார். ஒருவேளை கரடுமுரடான வரண்ட கட்டாந்தரை நிலத்திலிருந்து இரண்டு மலர்கள் உருவாகி விட்டால் கூட அது 100 -ஐயும் விட அதிகமானது. பாபா இரண்டை பார்ப்பதில்லை, ஆனால் இரண்டையும் நூறுக்குச் சமமாக பார்க்கிறார். எவ்வளவு தான் சிறிய சென்டராக இருந்தாலும். சிறியது என்று நினைக்காதீர்கள். சில இடங்களில் தரம் இருக்கிறது என்றால் சில இடங்களில் எண்ணிக்கை இருக்கிறது. எங்கே குழந்தைகள் செல்பவராக இருந்தாலும் அங்கே வெற்றி உங்களுடைய பிறப்புரிமை ஆகும்.

**கேள்வி: எந்த இரட்டை சொரூபத்திலிருந்து சேவை செய்தீர்கள் என்றால் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும்?**

பதில்: ரூப் மற்றும் பசன்ந்த் (ஞானம் மற்றும் யோகம்). இரண்டு சொரூபத்தினால் சேவை செய்யுங்கள், பார்வையாலேயும் சேவை மற்றும் வாய் மூலமாகவும் சேவை. ஒரே நேரத்தில் இரண்டு ரூபங்களின் சேவை மூலமாக இரட்டை ரிசல்ட் வெளியாகும்.

**நைரோபி பார்ட்டி:** எப்பொழுதும் கடைசியில் வந்தும் வேகமாகச் செல்லும் விசேஷம் நிறைந்த ஜோதியின் எதிரில் இருக்கும் விட்டில்பூச்சிகள், நிரந்தரமாக எரிந்து மறுபிறவி எடுத்து வாழ்பவர் ஆவதில் எப்பொழுதும் புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் உறுதியான விட்டில்பூச்சிகள் தான் இல்லையா? விட்டில்பூச்சிகளைப் பார்த்து ஜோதியும் குஷி அடைகிறார். அந்த மாதிரி விட்டில்பூச்சிகள் மேல் ஜோதிக்கும் பெருமிதம் இருக்கிறது. அப்படி எப்பொழுதும் தந்தையின் நினைவு சொரூப குழந்தைகள் நீங்கள் ! எப்படி நீங்கள் தந்தையை நினைவு செய்கிறீர்களோ. அதே போல் தந்தையும் உங்களை நினைவு செய்கிறார். நீங்களோ தந்தைக்கு ஜட விக்கிரகங்கள் மூலமாக மாற்று வழியில் சைத்தன்யமானவருக்கு மாலைகள் அணிவிக்க முயற்சி செய்தீர்கள். மேலும் தந்தை எப்பொழுதும் குழந்தைகளின் குணங்களின் மாலையின் நினைவு செய்து உச்சரித்துக் கொண்டே இருக்கிறார் அப்படி நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். தந்தையை ஆத்மாக்கள் நினைவு செய்கிறார்கள் மேலும் மகான் ஆத்மாக்கள் உங்களை தந்தை நினைவு செய்கிறார். அப்படி தந்தையையும் விட உயர்ந்தவர்கள் ஆகி விட்டீர்கள் எனவே குழந்தைகளின் ஸ்தானம் தந்தையின் கிரீடத்தில் இருக்கிறது. நீங்கள் கிரீடத்திலும் மிக விலைமதிக்க முடியாத மணியாக இருக்கிறீர்கள். எது உண்மையான மணிகளாக அல்லது உண்மையான வைரங்களாக இருக்குமோ அது எவ்வளவு பிரகாசமாக இருக்கும். இன்றைய நாட்களிலோ உண்மையான முத்துக்கள் கூட போலிக்குச் சமமாக இருக்கிறது. சத்யுகத்திலோ ஒவ்வொன்றும் பல்பு மாதிரி ஒளி இருக்கும் மிகவும் ஒளி வீசுவதாக இருக்கும். எப்படி இங்கே ஏதாவது வண்ணத்தின் ஒளியாக ஆக்குவதற்காக பல்பு மேல் அந்த வண்ண காகிகதத்தை சுற்றுகிறீர்கள். பச்சை ஒளிக்காக பச்சை வண்ண காகிதம், சிகப்பு ஒளிக்காக சிகப்பு வண்ண காகிதம் சுற்றுகிறீர்கள் அதே போல் அங்கே எத்தனை வர்ணங்களின் வைரங்கள் இருக்குமோ அந்த அளவு இயற்கையான ஒளி விதவிதமான வர்ணங்களில் இருக்கும். கொஞ்சம் வெளிச்சம் வந்தாலும் மிகவும் பிரகாசமான அறை மாதிரி அனுபவம் ஆகும். அப்படி நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் தலையின் கிரீடத்தின் உண்மையான வைரங்கள். ஒரு வைரம் பிரகாசிப்பது மேலும் ஒரு வைரம் அனைத்தையும் விட உயர்ந்த முக்கிய பங்கேற்று செய்யும் கதாநாயகன் கதாநாயகி. அப்படி இரண்டு கிரீடங்கள் ஆகி

விட்டன. எனவே நான் இரட்டை கிரீடம் என்று எப்பொழுதும் இந்த போதையிலேயே இருங்கள்.

நைரோபியின் நறுமணம் வதனம் வரை மிக நன்றாக வந்து கொண்டிருக்கிறது. தைரியமுள்ள குழந்தைகள். இவ்வளவு பெரிய குரூப் வந்திருக்கிறது என்றால், தைரியத்தின் நிரூபணம் தான் இல்லையா? இதிலிருந்து நைரோபியைச் சேர்ந்தவர்கள் தந்தைக்குச் சமமான சேவாதாரிகள் என்று நிரூபணம் ஆகிறது அதனால் தானே அனைவருக்கும் சேவை செய்து இங்கு வரை கொண்டு வந்திருக்கிறார்கள் இல்லையா? இது சேவையின் வெளிப்படையான நிரூபணம் ஆகும். திட நிச்சயத்தின் பலன் கிடைத்திருக்கிறது இல்லையா? நிச்சயபுத்தி உடையவர்களாக ஆனீர்கள் மேலும் தந்தையின் உதவியின் மூலம் நடக்க முடியாதது கூட நடந்தேறிவிட்டது. சின்னஞ்சிறு குடிசையிலிருந்து மாளிகை கிடைத்து விட்டது (பாப்தாதா, தன்னுடைய மாளிகையை (சென்டரை) பார்த்திருக்கிறார்) பாப்தாதாவோ தன்னுடைய வேலையை விடுவதில்லை. தந்தை எப்பொழுதும் குழந்தைகளைப் பாதுகாக்கிறார். குடும்பத்தில் கூட பார்த்தீர்கள் என்றால் தாய் குழந்தைகளின் அக்கம் பக்கத்திலேயே அவசியம் சுற்றி வந்து கொண்டிருப்பார். ஏனென்றால் அன்பு இருக்கிறது. அப்படி பாப்தாதா மற்றும் தாய் தந்தையர் குழந்தைகளை எப்படி சுற்றி வராமல் இருப்பார்கள். எனவே தினசரி சுற்றி வருகிறார். பாப்தாதா இருவருமே பௌதீகூடல் இன்றி உடலற்றவர்களாக இருக்கிறார்கள். அவர் நிராகாரமானவர், இவர் அவ்யக்த உடலுள்ளவர். இருவர்களுக்கும் தூக்கத்தின் அவசியம் இருப்பதில்லை. எனவே எங்கே விரும்புகிறார்களோ அங்கே சென்றடைய முடியும்.

இப்பொழுது ஆஃப்ரிக்காவில் எத்தனை சென்டர்கள் இருக்கின்றன? ஆஃப்ரிக்காவின் நிலப்பரப்போ மிகப் பெரியது. ஒவ்வொரு இடங்களுக்கும் செல்லுங்கள் மேலும் சேவையை இன்னும் வளர்ச்சியடையச் செய்யுங்கள். அதன் மூலம் உங்களை யாரும் புகார் கூற முடியாது. அந்த மாதிரியும் வேண்டாம். அங்கங்கே சேவை நிலையங்கள் திறங்கள், சேவை செய்தீர்கள், செய்தி கொடுத்தீர்கள் மற்றும் கீதா பாடசாலை திறந்து முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள்.

**டீச்சர்களுடன்:** டீச்சர்கள் என்றாலே தந்தைக்குச் சமமாக தன்னுடைய எண்ணம், சொல் மற்றும் ஒவ்வொரு காரியம் மூலமாக அனேகர்களை மாற்றம் செய்யக்கூடியவர். வார்த்தைகள் மூலமாக மட்டும் சேவாதாரி இல்லை, காரியங்கள்

மூலமாகவும் சேவாதாரி. யார் மூன்று சேவைகளிலும் வெற்றி அடைபவராக இருக்கிறாரோ அவர் தான் மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர் ஆகி விடுகிறார். மூன்றிலும் மதிப்பெண்கள் சமமாக இருக்க வேண்டும். அப்படி அந்த மாதிரியே மதிப்புடன் தேர்ச்சி பெறும் ஆசிரியர்கள் தான் நீங்கள் இல்லையா? தேர்ச்சி அடைபவர்களோ அதிகம் இருப்பார்கள் ஆனால் மதிப்புடன் தேர்ச்சி அடைபவர்கள் விசேஷமானவர்கள் தான் இருப்பார்கள். அப்படியானால் என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்கள்? தினசரி தன்னுடைய முழு நாள் நடவடிக்கையில் மூன்று சேவைகளின் சமநிலை இருந்ததா? என்று சோதனைசய்யுங்கள். சமநிலை வைப்பதினால் அனைத்து குணங்களின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். நடைமுறையில் தனக்கு மற்றும் அனைவருக்கும் அனைத்து குணங்களின் அனுபவம் செய்விக்க முடியும் இவர் குணதானம் செய்கிறார் என்று அனைவரும் கூறுவார்கள். ஏனென்றால் தெய்வீக குணங்களின் அலங்காரம் தெளிவாகத் தென்படும். அப்பொழுது தான் இறுதியில் தேவியே தேவியே என்று கூறி நமஸ்காரம் செய்வார்கள். மேலும் இதே இறுதியின் சம்ஸ்காரம் துவாபர்யுகத்திலிருந்து தேவியின் பூஜை ரூபத்தில் நடக்கும். நீங்கள் அந்த மாதிரி தான் இல்லையா? ஒருவர் இன்னொருவருக்கு தந்தையின் குணங்களின் மற்றும் தன்னுடைய தாரணையின் குணங்களின் சகயோகம் கொடுத்து கொண்டே குணமானவர் ஆக்குவது என்ற இது அனைத்தையும் விட மிகப் பெரிய சேவை. குணங்களின் தானமும் இருக்கிறது. எப்படி ஞானத்தின் தானம் இருக்கிறது அதே போல் குணங்களின் தானமும் இருக்கிறது.

இப்பொழுது ஒவ்வொருவருக்கும் 8, 10-சென்டர்களை கவனிக்க வேண்டும் அப்பொழுது தான் சேவை நடந்தது என்று கூறுவோம். இப்பொழுது ஒவ்வொருவரும் 4. 5 சென்டர்களை கவனிக்கிறார்கள். பிறகு ஒவ்வொருவருக்கும் அனேகர்களை கவனிக்க வேண்டும். இப்பொழுது சேவையை இன்னும் அதிகப்படுத்துங்கள்.

**வரதானம்: நம்பர் ஒன் வியாபாரி ஆகி, ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தில் வருமானத்தை சேமிப்பு செய்யும் பல மடங்கு செல்வந்தர் ஆகுக!**

யார் தன்னை பிஸியாக வைப்பதின் முறையை தெரிந்திருக்கிறாரோ அவர் தான் நம்பர் ஒன் வியாபாரி. வியாபாரி என்றால் யாருடைய ஒரு எண்ணம் கூட வீணாக செல்லாமல், ஒவ்வொரு எண்ணத்திலும் வருமானம் இருக்க வேண்டும். எப்படி

வெளியுலக வியாபாரி ஒவ்வொரு பைசாவையும் காரியத்தில் ஈடுபடுத்தி பல மடங்கு பணமாக ஆக்கி விடுகிறார். அதே போல் நீங்களும் ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தில் வருமானம் செய்து காண்பியுங்கள். அப்பொழுது தான் பல மடங்கு செல்வம் நிறைந்தவர் ஆவீர்கள். இதன் மூலம் புத்தியின் அலைவது முடிவடைந்து விடும். மேலும் வீணான எண்ணங்களின் புகாரும் முடிவடைந்து விடும்.

**சுலோகன்: யார் யாசிப்பாரோ அவர் குஷியின் பொக்கிஷத்தினால் நிரம்பியவர் ஆக முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடினத்தை சுலபமாக்குவதற்கான வழி -எப்பொழுதும் தந்தையைப் பாருங்கள்!

இன்று விசேஷமாக லண்டனில் இருப்பவர்களை சந்திக்க வந்திருக்கிறோம். சந்திப்பதின் அர்த்தம் தந்தைக்குச் சமமாக ஆவது எப்பொழுதிலிருந்து தந்தையை சந்தித்திருக்கிறீர்கள் என்றால் தந்தை உங்களுக்கு என்ன சமிக்ஞை கொடுத்தார்? குழந்தைகளே நீங்கள் அனைவரும் உயர்ந்த ஆத்மாக்கள் தந்தைக்குச் சமமான அனைத்து குணங்களில், அனைத்து பிராப்திகளில் மாஸ்டராக (அதிகாரியாக) இருக்கிறீர்கள். தந்தையையும் விட உயர்ந்த தந்தையின் தலையின் கிரீடமாக இருக்கிறீர்கள். முதன் முதலில் என்ன சமிக்ஞை கிடைத்ததோ அந்த சமிக்ஞைக்கு ஏற்றபடி தந்தைக்குச் சமமாக மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் அனைத்து குணங்களும் நிரம்பியவராக ஆகியிருக்கிறீர்களா? இப்பொழுது தந்தைக்குச் சமமாக எப்பொழுது ஆளீர்களோ அப்பொழுது தான் எதிர்காலத்தில் உலகின் இராஜ்ய அதிகாரி தேவதையாக ஆக முடியும். தந்தைக்குச் சமமாக எந்த அளவு ஆகியிருக்கிறேன் என்ற இந்த சோதனையை செய்து கொண்டே இருக்கிறீர்களா? ஒவ்வொரு குணத்தையும், ஒவ்வொரு சக்தியையும் எதிரில் வைத்து எத்தனை சதவிகிதம் குணம் மற்றும் சக்தி சொரூபமாக ஆகியிருக்கிறேன் என்று தன்னை சோதனை செய்யுங்கள். இதைப் பின்பற்றுவது சுலபம் தான் இல்லையா? பாப்தாதா உங்கள் எதிரில் உதாரணமாக இருக்கிறார். நிராகார ரூபத்தில் மேலும் சாகார ரூபத்தில் இரண்டு ரூபங்களிலும் தந்தையைப் பார்த்து பின்பற்றிச் சென்று கொண்டே இருங்கள். பொதுவாகவே எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள் இருப்பார்கள் என்ற பழமொழி இருக்கிறது. மேலும் சன் ஷோஸ் ஃபாதர் (மகன் தந்தையை வெளிப்படுத்துவார் என்ற வர்ணனையும் இருக்கிறது. தந்தை மற்றும் குழந்தைகளின் உறவே தந்தையைப் பின்பற்றிச் செய்வதற்கானது தான். கடினம் இல்லை, ஆனால் கடினமாக்கி விடுகிறீர்கள். ஏனென்றால் ஒருவேளை கடினமாக இருக்கிறது என்றால் எப்பொழுதுமே எல்லோருக்குமே கடினமாக இருக்க வேண்டும். சிலருக்கு சுலபமாக இருக்கிறது, சிலருக்கு கடினமாக இருக்கிறது. ஏன் இப்படி இருக்கிறது? மேலும் சில நேரம் அவருக்கே சுலபமாக இருக்கிறது. மேலும் சில நேரம் அவருக்கே கடினமாக இருக்கிறது. இதுவும் ஏன்? இதன் மூலம் என்ன

நிரூபணம் ஆகிறது. பின்பற்றி நடந்து கொள்பவரிடம் தான் ஏதோ பலஹீனம் இருக்கிறது. அதன் காரணமாகவே கடினமாக அனுபவம் ஆகிறது.

தந்தையின் மகிமையாக என்ன இருக்கிறதோ அதை இன்று வரை பக்தர்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள், கூடவே மகான் ஆத்மாக்கள், பூஜைக்குரிய ஆத்மாக்கள் உங்களுக்கும் அதே மகிமை இருக்கிறது. அது எந்த மகிமை என்று நினைவிருக்கிறதா? ஏதாவது கடினமான காரியம் மனித ஆத்மாக்களிடம் வருகிறது என்றால் அவர்கள் யாரிடம் செல்கிறார்கள்? ஒன்று தந்தையிடமோ அல்லது தேவ ஆத்மாக்கள் உங்களிடமோ செல்வர்கள். அப்படி யார் மற்றவர்களின் கடினத்தையும் சுலபமாக ஆக்குபவராக இருக்கிறாரோ அவர் எப்படி தானே கடினத்தை அனுபவம் செய்வார்? கடினம் அனுபவம் செய்யும் நேரத்தில் விசேஷமாக அந்த மாதிரி கடினமாக ஆக்கும் எந்த விஷயம் புத்தியில் வருகிறது? மிகுந்த அனுபவம் நிறைந்தவர்கள் தான் நீங்கள் இல்லையா? தந்தையைப் பார்ப்பதற்குப் பதிலாக விஷயங்களைப் (தடைகள், பிரச்சனைகள்) பார்க்கத் தொடங்கி விடுகிறீர்கள். இவ்வாறு பிற விஷயங்களில் செல்வதினால் பிறகு அனேக கேள்விகள் எழுந்து விடுகின்றன. ஒருவேளை தந்தையைப் பாருங்கள் எப்படி தந்தை புள்ளியாக இருக்கிறாரோ அதே போன்று ஒவ்வொரு விஷயத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். விஷயங்கள் மரம் மற்றும் தந்தை விதை. நீங்கள் விஸ்தாரமாக இருக்கும் மரத்தை கையில் எடுக்க விரும்புகிறீர்கள், எனவே தந்தையும் கையில் வருவதில்லை, மரமும் வருவதில்லை. தந்தையையும் விலக்கி வைத்து விடுகிறீர்கள். மேலும் மரத்தின் விஸ்தாரத்தை தன்னுடைய புத்தியில் நிரப்ப முடிவதில்லை. அப்படி என்ன விரும்புகிறீர்களோ அது நிறைவேறாத காரணத்தினால் மனமுடைந்து போய் விடுகிறீர்கள். மனமுடைந்து போயிருப்பவரின் முக்கிய அடையாளமாக, அவர் அடிக்கடி ஏதாவது ஒரு சூழ்நிலை மேல், ஏதாவது ஒரு நபரின் மேல் புகார் செய்து கொண்டே இருப்பார் என்பது இருக்கும். மேலும் எவ்வளவு புகார் செய்கிறாரோ அந்த அளவு அவர் தன்னையே சிக்க வைத்துக் கொண்டே செல்கிறார். ஏனென்றால் இந்த விஸ்தாரம் ஒரு வலை ஆகி விடுகிறது. பிறகு எந்த அளவு அதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சி செய்கிறார் களோ அந்த அளவு அதில் சிக்கிக் கொண்டே இருக்கிறார்கள். எனவே ஒன்று விஷயம் இருக்கும் அல்லது தந்தை இருப்பார். விஷயங்களைக் கேட்பது மற்றும் விஷயங்களைக் கூறுவது என்ற இதையோ அரைக் கல்பம் செய்து வந்திருக்கிறீர்கள். பக்தி மார்க்கத்தின் பாகவதம் அல்லது இராமாயணம் ஆகியவை என்ன? எவ்வளவு அதிகமான விஷயங்கள் இருக்கின்றன. எப்பொழுது விஷயங்கள் இருந்தனவோ அப்பொழுது தந்தை இருக்கவில்லை. இப்பொழுது

கூட எப்பொழுது நீங்கள் விஷயங்களில் செல்கிறீர்களோ அப்பொழுது தந்தையை இழந்து விடுகிறீர்கள். பிறகு என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள்? கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடு கிறீர்கள். மூன்றாவது கண்ணில் துணியைக் கட்டிக் கொண்டு தேடுகிறீர்கள். தந்தை அழைத்துக் கொண்டே இருக்கிறார். நீங்கள் தேடிக் கொண்டே இருக்கிறீர்கள். இறுதியில் என்ன ஆகிறது? தந்தை அவரே வந்து அவருடைய துணையை கொடுக்கிறார். அந்த மாதிரி விளையாட்டை ஏன் விளையாடுகிறீர்கள்? ஏனென்றால் விஷயங்களின் விஸ்தாரத்தில் வண்ணமயங்கள் இருக்கும், அவை தன் பக்கம் ஈர்த்து விடுகிறது. அதிலிருந்து விலகி விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் சகஜயோகி ஆகி விடுவீர்கள். லண்டனிலிருப்பவர்களோ கடினத்தை அனுபவம் செய்வதில்லை தான் இல்லையா?

தன்னைத் தானே பிஸியாக வைத்துக் கொள்வதற்கான முறையை கற்றக்கொள்ளுங்கள். பிறகு நேரமும் இருக்காது. விஸ்தாரத்திலும் செல்ல மாட்டீர்கள். ஏதேனும் ஒரு பெரிய நிகழ்ச்சி வைக்கிறீர்கள் என்றால் அதில் மிகவும் பிஸியாக இருப்பீர்கள். அந்த நேரம் வேறு ஏதாவது நடந்து கொண்டே இருந்தாலும், நீங்கள் அதிலிருந்து விலகியிருப்பீர்கள். சேவையின் முழுமையான ஈடுபாட்டிலேயே இருப்பீர்கள். உணவு அருந்துவதற்கும் தூங்கு வதற்கும் கூட எண்ணமே வராது. அந்த மாதிரி உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்கள் எப்பொழுதும் பெரிய காரியத்திற்கான திட்டத்தை எப்பொழுதும் புத்தியில் வெளிப்படுத்தி வையுங்கள். தன்னுடைய புத்திக்கு ஓய்வே இல்லாத அந்த அளவு பெரிய காரியத்தைக் கொடுங்கள். தன்னுடைய புத்தியை பிஸியாக வைப்பதற்காக தினசரி டைரி எழுதுங்கள். இதன் மூலம் எப்பொழுதும் இயல்பாகவே சகஜயோகத்தின் அனுபவம் செய்வீர்கள்.

சகஜ இராஜயோகம் என்று வாணனை செய்கிறீர்கள், சில நேரம் சசுஜயோகம், சில நேரம் கடினமான யோகம் என்றோ சொல்வதில்லை. எனவே எப்படி பெயரோ அதே சொரூபத்தில் அனைத்து குழந்தைகளையும் பாப்தாதா பார்க்க விரும்புகிறார். மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆன பிறகும் கடினத்தை அனுபவம் செய்தீர்கள் என்றால் சுலபமாக எப்பொழுது இருக்கும்? இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை. இதற்காக உங்களுக்குள் நிகழ்ச்சியைத் தயாரியுங்கள்.

**லண்டன் பார்ட்டி: 1) ஒவ்வொரு ரத்தினமும் மிகவும் பிரியமானவர்கள் மற்றும் விலைமதிக்க முடியாதவர்கள்!** ஏனென்றால் ஒவ்வொரு

ரத்தினத்திற்கும் அவரவர்களுக்கென்ற விசேஷம் இருக்கிறது. அனைவரின் விசேஷங்கள் மூலமாகத் தான் உலக காரியம் நிறைவேற வேண்டும். எப்படி ஏதாவது ஸ்தூல பொருளைத் தயாரிக்கிறீர்கள் என்றால் கூட, அதில் ஒருவேளை அனைத்து பொருட்களையும் போடவில்லை, சாதாரண இனிப்பு அல்லது உப்பையும் போடவில்லை என்றால், எவ்வளவு தான் நல்ல ஒரு பொருளை தயாரித்தாலும் கூட அது உண்ணவோ, அருந்தவோ தகுதியானதாக ஆக முடியாது. எனவே அதே போல் உலகின் இவ்வளவு உயர்ந்த காரியத்திற்காக ஒவ்வொரு ரத்தினத்தின் அவசியம் இருக்கிறது. அனைவரின் விரல் தேவையாக இருக்கிறது. (கோவர்த்தன மலையைத் தூக்கும்) படத்தில் கூட அனைவரின் விரல்களைக் காண்பிக்கிறார்கள் இல்லையா? மகாராதிகளினுடையது மட்டுமின்றி. அனைவரின் விரல்கள் மூலமாகத் தான் உலக மாற்றத்தின் காரியம் நிறைவேற வேண்டும். அனைவரும் அவரவர்களின் முறையில் மகாரதிகள். பாப்தாதாவும் தனியாக எதையும் செய்ய முடியாது. பாப்தாதா குழந்தைகளை முன்னுக்கு வைக்கிறார். பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் அனைவரையும் முன்னுக்கு வைக்கிறார்கள். எனவே அனைவரும் மிக மிக அவசியமானவர்கள் மற்றும் உயர்ந்த ரத்தினங்கள். நீங்கள் பாப்தாதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரத்தினங்கள், நினைவுச் சின்னத்தில் கல் மேலேயும் பகவானின் பார்வை பட்டு விட்டது என்றால், கல்லும் தங்கமாகி விடும் என்று வர்ணிக்கிறார்கள். நீங்களோ அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உயர்ந்த ரத்தினம். தன்னுடைய காரியத்தின் உயர்ந்த தன்மையை, மதிப்பைத் தெரிந்து கொள்ளுங்கள். சக்திகளுக்கு அவர்களுக்கென்ற மகிமை இருக்கிறது மற்றும் பாண்டவர்களுக்கு அவர்களுக்கென்ற மகிமை இருக்கிறது. அப்படி நீங்கள் அனைவரும் மகான் ஆத்மாக்கள் மகான் ஆத்மாக்களின் அடையாளம் என்ன? யார் எந்தளவு மகானாக இருப்பாரோ அந்த அளவு பணிவாகவும் இருப்பார். மகான் ஆத்மாக்கள் எப்பொழுதுமே தன்னை கீழ்படிதல் உள்ள சேவகன் என்று தான் அனுபவம் செய்கிறார்கள். அந்த மாதிரி குரூப் தான் நீங்கள் இல்லையா? சக்தி பவனில் சக்திகளுக்கோ தன்னுடைய சக்தி சொரூபம் இயல்பாகவே நினைவு இருப்பதாக இருக்கும். ஸ்தானத்தின் மூலம் ஸ்திதியும் நினைவு வருகிறது. சக்திகளின் விசேஷம் மாயாவை வென்றவர்கள். சக்திகளின் எதிரில் எந்தவிதமான மாயாவும் வர முடியாது. ஏனென்றால், சக்தி மாயாவின் மீது சவாரி செய்து கொண்டிருக்கிறார். சக்திகளின் கையில் திரிசூலம் இருப்பதாக எப்பொழுதும் காண்பிப்பார்கள். இது யாருடைய அடையாளம்? திரிசூலம் ஆத்மாவின் நிலையின் அடையாளம். சங்கமயுகத்தின் பட்டமாக என்னென்ன இருக்கிறதோ, மாஸ்டர் திரிமூர்த்தி, திரிநேத்ரி, திரிகாலதரிசி. திரிலோகிநாத் அப்படி இந்த அனைத்து நிலையின் அடையாளம் திரிசூலத்தில் வந்து விடுகிறது.

அப்படியானால் இந்த நிலை நினைவில் இருக்கிறதா? நிரந்தரத்தை கீழ்க்கோடிடுங்கள். யார் உலக வாயுமண்டலத்திலிருந்து விலகி விட்டாரோ அவர் மிகச் சிறந்த பாக்கியத்தை உருவாக்கியிருக்கிறார். பாப்தாதாவும் குழந்தைகளின் பாக்கியத்தை பார்த்து குவி அடைகிறார்.

**2) எப்பொழுதும் தன்னை பூஜைக்குரிய ஆத்மா என்று நினைத்து நடந்து கொள்கிறீர்களா?** பூஜைக்குரிய ஆத்மாக்கள் என்றால் மகான் ஆத்மாக்கள். மகான் ஆவதற்கான விசேஷம் -எப்பொழுதும் தன்னை விருந்தினர் என்று புரிந்து நடந்து கொள்வது. யார் தன்னை (இவ்வுலகில்) விருந்தினர் என்று புரிந்து நடந்து கொள்கிறாரோ அவர் தான் மகான் பூஜைக்குரியவர் ஆக முடியும். ஏன்? ஏனென்றால் தியாகத்தின் பாக்கியம் உருவாகி விடுகிறது. விருந்தினர் என்று நினைப்பதினால் தன்னுடைய உடல் என்ற வீட்டிலிருந்தும் பற்றற்றவர் ஆகி விடுகிறார். விருந்தினருக்கு தனக்கென்று எதுவும் இருப்பதில்லை, அனைத்தும் நடக்கும், ஆனால் தன்னுடையது என்ற உணர்வு இருப்பதில்லை. காரியத்தில் அனைத்து பொருட்களையும் ஈடுபடுத்துவார்கள் ஆனால் தன்னுடையது என்ற உணர்வு இருக்காது. எனவே விலகியிருப்பவராகவும் இருக்கிறார். மேலும் அனைத்து பொருட்களையும் காரியத்தில் ஈடுபடுத்து வர், பிரியமானவராகவும் இருக்கிறார். அந்த மாதிரி விருந்தினர் என்று புரிந்து கொள்பலர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே, சேவைக்கான சாதனங்களைப் பயன்படுத்தி கொண்டே எப்பொழுதும் விலகியிருப்பவராகவும் மற்றும் தந்தைக்கு பிரியமானவர்களாகவும் இருக்கிறார்கள். நீங்களும் அந்த மாதிரி விருந்தினர்கள் தான் இல்லையா? விருந்தினர் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? இன்று இங்கே இருக்கிறீர்கள். நாளை தன்னுடைய உண்மையான வீட்டிற்குச் சென்று விடுவீர்கள். பிறகு தன்னுடைய இராஜ்யத்தில் வருவீர்கள். இதே எண்ணம் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? எனவே எப்பொழுதும் உடலிலிருந்தும் விலகியவராக இருக்கிறீர்கள். எப்பொழுது உடலிலிருந்து விலகி விடுகிறாரோ பிறகு உடலின் சம்மந்தம் மற்றும் சாதனங்களிலிருந்தும் விலகியிருப்பவராக ஆகியே விடுகிறார். இந்த விலகியிருக்கும் நிலை எவ்வளவு அன்பு நிறைந்ததாக இருக்கிறது -இந்த நேரம் காரியத்தில் வாருங்கள், அடுத்த நேரம் விலகியிருங்கள் அந்த மாதிரி அனுபவம் ஆகிறது தான் இல்லையா? உங்களுடைய ஜட விக்கிரகங்களை பூஜைக்குரிய ரூபத்தில் கோயில்களில் வைக்கிறார்கள், ஆனால் பக்தியில் கூட சங்கமயுகத்தின் விலகியிருக்கும் நிலையின் பரம்பரை வந்து கொண்டிருக்கிறது. கோயில் லட்சுமி நாராயணனின் உடையது ஆனால் லட்சுமி நாராயணன் அதை தன்னுடையது என்று நினைப்பார்களா? விலகியிருக்கிறார்கள்

இல்லைய? ஜட விக்கிரகங்கள், எவை பூஜைக்குரியதாக ஆகிறதோ அவர்களிலும் தன்னுடையது என்ற தன்மை இல்லை என்றால் சைத்தன்ய பூஜைக்குரிய ஆத்மாக்கள் அவர்களிலும் எப்பொழுதும் விருந்தினர் என்ற உள்உணர்வு இருக்கிறது. எந்த அளவு விருந்தினரின் உள்உணர்வு இருக்குமோ அந்த அளவு இல்லறம் சிறந்ததாக, நிலை உயர்ந்ததாக இருக்கும். லண்டனில் இருப்பவர்கள் என்று பெயர் அளவிற்குத் தான் சொல்லப்படுகிறது ஆனால் அனைவருமே விருந்தினர்கள். இன்று இங்கே இருக்கிறார்கள். நாளை அங்கே இருப்பார்கள். இன்று மற்றும் நாளை என்ற இரண்டு வார்த்தைகளில் முழு வாழ்க்கைச் சக்கரமும் நினைவில் வந்து விடுகிறது. அந்த மாதிரி நீங்கள் பூஜைக்குரிய மகான் ஆத்மாக்கள் தான் இல்லையா? லண்டனில் இருப்பவர்களுக்கு மிக நல்ல நிச்சயம் மற்றும் ஊக்கம் இருக்கிறது. பலஹீனமான ஆத்மாக்களாக இருக்கவில்லை. தடை வந்தது மற்றும் கடந்து சென்றார்கள். வெள்ளாடுகளாக இருக்கவில்லை, அனைவருமே சிங்கக்குட்டிகளாக இருக்கிறார்கள். வெள்ளாட்டுத் தன்மை என்றால் மே, மே அதாவது என்னுடையது என்பது அழிந்தது. சக்தி சேனையின் கொடி மிக நன்றாக பறந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சக்தியும் சர்வ சக்திவான் தந்தையை வெளிப்படுத்தக் கூடியவர்கள். எப்பொழுது சக்தி சேனை மைதானத்தில் வந்து விடுமோ அப்பொழுது வெற்றி முழக்கம் ஏற்படும். முதலில் வெற்றி முழக்கம் எங்கே ஒலிக்கும்? லண்டனிலா அல்லது அமெரிக்காவிலா? அன்பிற்குரிய குழந்தைகளுக்கு பாப்தாதா எப்பொழுதும் அமிர்தவேளையில் வாழ்த்துக்கள் கூறுகிறார். 'ஆஹா எனது குழந்தைகளே ஆஹா என்ற பாடலைப் பாடுகிறார். பாடலைக் கேட்க முடிகிறதா?

**டீச்சர்களுடன்**: இவர்கள் லண்டனின் சேவைக்கான அலங்காரம். எப்படி லண்டனின் கண்காட்சியகத்தில் இராணியின் அலங்கார பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன இல்லையா? அதே போன்று, பாப்தாதாவின் கண்காட்சியகத்தில் கூட பாப்தாதாவின் சேவையின் அலங்காரம் ஆவீர்கள் நீங்கள். எப்பொழுதும் மகானாக மற்றும் பணிவாக இருப்பவர்கள். இதே விசேஷம் தன்னையும் மகான் ஆக்குகிறது மற்றும் சேவையையும் மகான் ஆக்குகிறது. சம்ஸ்காரத்தை இணைத்து கொள்வதிலோ திறமைசாலிகள் தான் இல்லையா? ஒருவேளை ஸ்தூலத்தில் யாருக்காவது கை, கால்களை அசைக்கத் தெரியவில்லை என்றால் உடனிருக்கும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள். கையோடு கை கோர்த்து அவருடன் இருந்து அவருக்கு கற்றுக் கொடுப்பார்கள். அப்படி நீங்களும் என்ன செய்கிறீர்கள். முன்னேறிச் சென்று சகயோகி ஆகி சகயோகத்தின் (பிறரோடும் கொடுத்து சம்ஸ்காரத்தை இணைப்பதற்கான நடனத்தை கற்றுக் கொடுக்கிறீர்கள்

தான் இல்லையா?. இதிலோ நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள் தான் இல்லையா? இதே விசேஷத்தின் ஆதாரத்தில் யார் அனைவரையும் விட அதிகமான சம்ஸ்காரத்தை இணைக்கும் நடனம் ஆடுகிறார், தந்தையின் சசுயோகியாக ஆகிறாரோ அவர் தான் முதல் பிறவியில் ஸ்ரீகிருஷ்ணனுடன் கை கோர்த்து நடனம் ஆடுவார். நடனம் ஆட வேண்டும் தான் இல்லையா? சம்ஸ்காரத்தின் ஒத்துப்போகும் நடனம் ஆடுவதற்காக மிக சுலபமான வழி சுயம் நீங்களே பணிவு நிறைந்தவர் ஆகி விடுங்கள், பிறருக்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்து விடுங்கள். அவரை உயர்ந்த ஸ்தானத்தில்  அமர வைத்தீர்கள் என்றால் அவர் தானாகவே கீழே இறங்கி உங்களை அமர வைத்து விடுவார். அப்படி அமர வைப்பது தான் அமர்வது ஆகி விடும். 'முதலில் நீங்கள் என்ற பாடத்தை உறுதியாக்குங்கள். பிறகு சம்ஸ்காரம் சுலபமாகவே இணைந்து விடும். ஆசனமும் கிடைத்து விடும். நடனம் ஆடியதும் ஆகி விடும். மேலும் எதிர்காலத்திலும் நடனம் ஆடுவதற்கான வாய்ப்பு கிடைத்து விடும் என்றால் எவ்வளவு சுலபமான விஷயமாக ஆனது.

லண்டனைச் சேர்ந்தவர்கள் உண்மையான சேவாதாரி குரூப் ஆவார்கள். சேவாதாரி என்ற வார்த்தையே மிக இனிமையானது. டீச்சர் என்ற வார்த்தை நன்றாக இருக்கிறதா அல்லது சேவாதாரியா? தந்தையும் தன்னை கீழ்ப்படிதலுள்ள சேவகன் என்று கூறுகிறார், சேவகன் என்று சொல்வதினால் கிரீடம் அணிந்தவராக இயல்பாகவே ஆகி விடுவார். அப்படி சாதுர்யமானவராக ஆவதற்கான வழி இதுவாகும். உழைப்பும் இல்லை, பிராப்தியும் அதிகம். அப்படி சாதுர்யமான தந்தையின் சாதூர்யமான குழந்தைகளாக ஆகுங்கள்.

**பிரான்சு நாட்டினருடன்**: நினைவு யாத்திரையில் எப்பொழுதும் சென்று கொண்டே ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானத்தை சேமித்துக் கொண்டே இருக்கிறீர்களா? ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு வருமானத்தை சேமிப்பவர் எவ்வளவு அனைத்தும் நிறைந்தவராக இருப்பார். அப்படி நிறைந்த ஆத்மாவாக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? குறைவில்லா பொக்கிஷம் கிடைத்து விட்டதா? பொக்கிஷத்தின் சாவி கிடைத்து விட்டது தான் இல்லையா? சாவி போட்டு திறக்கத் தெரியுமா? எப்பொழுதாவது சாவியை போட்டு திறந்து கொண்டே மாட்டிக்கொள்ளவோ இல்லையே? மிக சுலபமாக திறக்கும் சாவியாகும். 'நான் அதிகாரி ஆவேன்'. அதிகாரத்தன்மையின் நினைவு தான் பொக்கிஷங்களின் சாவி. இந்த சாவியை போட்டு திறக்கத் தெரியுமா? இந்த சாவி மூலம் எந்த பொக்கிஷத்தை எந்த அளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு பெற முடியும். சுகம் வேண்டுமா, அமைதி வேண்டுமா, அன்பு வேண்டுமா அனைத்தும் கிடைக்க முடியும்.

# 1981 அவ்யக்த முரளி

**கேள்வி: எந்த எடையை குறைத்தீர்கள் என்றால் ஆத்மா சக்திசாலி ஆகி விடும்?**

பதில்: ஆத்மாவின் மீதுல் வீணானவைகளின் எடை உள்ளது வீணான எண்ணம், வீணான வார்த்தைகள், வீணான காரியம் இதன் மூலமாகத் தான் ஆத்மா சுமை ஆகி விடுகிறது. இப்பொழுது இந்த சுமையை அகற்றுங்கள். இந்த சுமையை அகற்றுவதற்காக எப்பொழுதும் சேவையில் பிஸியாக இருங்கள். சிந்தனை சக்தியை அதிகப்படுத்துங்கள், சிந்தனை சக்தி மூலம் ஆத்மா சக்திசாலி ஆகி விடும். எப்படி உணவை ஜீரணிப் பதினால் ரத்தம் உருவாகிறது, பிறகு அதுவே சக்தியின் செயலைச் செய்கிறது, அவ்வாறு சிந்தனை செய்வதினால் ஆத்மாவின் சக்தி அதிகரிக்கிறது.

**கேள்வி: எந்த மந்திரம் பக்தியில் மிகவும் பிரசித்தியானது அதன் நினைவில் இருந்தீர்கள் என்றால் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள்?**

பதில்: பக்தியில் 'நான் தான் அது, அதுவே நான்' என்ற மந்திரம் மிகவும் பிரசித்தியானது, இப்பொழுது குழந்தைகள் நீங்கள் நான் தான் அது வின் இரகசியத்தை நடைமுறையில் அனுபவம் செய்கிறீர்கள். இந்த மந்திரம் நமக்காகத் தான் இருக்கிறது. பிராமணனாக இருக்கும் நான் தேவதை ஆவேன். நானே தான் தேவதையாக இருந்தேன், தேவதையாக இருந்த நான் பிராமணனாக ஆகி இருக்கிறேன். இது இப்பொழுது தெரிய வந்துள்ளது. இப்பொழுது தேவதைகளின் படங்களைப் பார்க்கும் போது இது நம்முடைய படங்களே என்று புத்தியில் வருகிறது. இது தான் அதிசயம். இதே நினைவில் இருந்தீர்கள் என்றால் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள்.

**வரதானம்: அனைவருக்கும் மரியாதை (ரிகார்டு) கொடுத்துக் கொண்டே தன்னுடைய பதிவேட்டை (ரிக்கார்ட்) சரியாக வைத்துக்கொள்ளும் அனைவரின் அன்பிற்குரியவர் ஆகுக!**

யார் எந்த அளவு அனைவருக்கும் மரியாதை கொடுக்கிறாரோ அந்த அளவே தன்னுடைய பதிவேட்டை சரியாக வைத்துக் கொள்ள முடியும். மற்றவர்கள் மேல் மரியாதை வைப்பது என்பது தன்னுடைய பதிவேட்டை உருவாக்குவது. எப்படி யக்ஞத்தின் உதவியாளர் ஆவது தான் உதவியைப் பெறுவது என்று இருக்கிறது, அதே போஙன்று மரியாதை கொடுப்பது தான் மரியாதையைப் பெறுவது. ஒரு தடவை கொடுப்பது மற்றும் அனேக தடவைகள் பெறுவதற்கான உரிமையாளர்

ஆகி விடுவது சிறியவர்களுக்கு அன்பு மற்றும் பெரியவர்களுக்கு மரியாதை கொடுங்கள் என்று கூறுகிறார்கள், ஆனால் யார் அனைவரையும் பெரியவர் என்று புரிந்து மரியாதை கொடுக்கிறாரோ அவர் அனைவரின் அன்பிற்குரியவர் ஆகி விடுகிறார். இதற்காக ஒவ்வொரு விஷயத்திலும் முதலில் நீங்கள் என்ற பாடத்தை உறுதியாக்குங்கள்.

**சுலோகன்: பாப்தாதாவிடமிருந்து கிடைத்திருக்கும் அறிவுரைகள் தேவையான நேரத்தில் நினைவு வருவது தான் தீவிர முயற்சி செய்வதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக இராஜ்ய அதிகாரியாக எப்படி ஆவது?

இன்று பாப்தாதா தன்னுடைய வலது கரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையின் எத்தனை புஜங்கள் களைப்பற்று சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு புஜத்திலும் அவரவர்களுக்கென்ற விசேஷம் இருக்கிறது. வலதுகரம் என்றால், யார் எப்பொழுதும் பாப்தாதாவின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு அடியை எடுத்து வைப்பவர். தந்தையின் புஜங்களாக ஆகியிருக்கிறீர்கள். எனவே பாப்தாதாவும் தன்னுடைய புஜங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து வலதுகரங்களின் கையில் என்ன இருக்கிறது? இராஜ்ய பாக்கியத்தின் பூமி உருண்டை இருக்கிறது. கிருஷ்ணரின் கையில் பூமி உருண்டை இருப்பதாக காண்பிக்கும் படத்தையும் பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? கிருஷ்ணர் ஒருவர் மட்டும் தனியாகவா இராஜ்யம் செய்வார்? நீங்கள் அனைவரும் உடன் இருப்பீர்கள் தான் இல்லையா? எனவே அது உங்களுடைய படமும் தான். ஏனென்றால் அதிகாரிகளாக நீங்களும் இப்பொழுது ஆகிறீர்கள். இப்பொழுதைய அதிகாரத்தன்மையின் சம்ஸ்காரம் 21-ஜென்மங்கள் வரை வரும். இப்பொழுதும் இராஜா மேலும் எதிர்காலத்திலும் இராஜா ஆவீர்கள். இப்பொழுதைய இராஜ்ய அதிகாரி தான் உலக இராஜ்ய அதிகாரியாக ஆகிறார்கள். அப்படியானால் நீங்கள் இப்பொழுதைய இராஜ்ய அதிகாரியாக இருக்கிறீர்களா? இராஜ்ய நடவடிக்கைகள் அனைத்தும் சரியாக நடந்து கொண்டிருக்கின்றனவா? உங்கள் அனைவரின் இராஜ்பத்தின் நிலைமை என்ன? அனைத்து இராஜ்ய நடவடிக்கைள் சட்டம் மற்றும் ஒழுங்கில் இருக்கின்றனவா? இங்கேயே ஒருவேளை சில நேரம் மட்டும் ஆட்சி செய்பவராக இருந்தீர்கள் என்றால் அங்கே என்ன செய்வீர்கள்? அங்கேயும் ஓரிரு ஜென்மத்தின் இராஜாவாக ஆவீர்கள். ஆகவேண்டியதோ 21-ஜென்மங்களுக்காக என்றால் பிறகு இங்கே சில ரத்திற்காக இராஜாவாக ஏன் இருக்க வேண்டும்? இங்கே உள்ள சம்ஸ்காரம் தான் அங்கே செல்லும், எனவே நிரந்தரமான இராஜா ஆக வேண்டும். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களோ அனைவருடன் பந்தயம் செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? எந்த எண் வரை சென்றடைந்திருக்கிறீர்கள்? (இதயசிம்மாசனம் வரை), அதிலேயும் எந்த எண் வரை?

இருந்தும் முயற்சி செய்வது நன்றாக இருக்கிறது. மரியாதை புருஷோத்தமனாகும் சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும் என்ற லட்சிடம் வைப்பதில் நன்றாக இருக்கிறீர்கள். உண்மையான சீதைகளாகி ஆகி கோட்டிற்கு உள்ளே இருக்க வேண்டும் என்ற லட்சியத்தில் நல்ல தைரியம் உள்ளவர்களாக இருக்கிறீர்கள். இராவணனின் கவர்ச்சியில் வருவதில்லை தான் இல்லையா? இராவணனின் மாறு வேடத்தை நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா? இராவணனின் ஞானமும் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்களா? ஞானம் குறைவாக இருக்கும் காரணத்தினால் தான் அவன் உங்களை தன்னுடையவராக ஆக்க முடியும். ஞானம் நிறைந்தவரின் எதிரில் அவன் அருகில் கூட வர முடியாது. அவன் பொன் ரூபம் எடுத்தாலும், வைரத்தின் ரூபம் எடுத்தாலும் வர முடியாது. ஆஸ்திரேலியாவில் இராவணன் வருகிறானா? போர் செய்வதற்காக அல்ல. கற்றுக் கொடுப்பதற்காக வருகிறான் இல்லையா? இராவணனுக்கும் அரைக் கல்பத்து நண்பர்கள் நீங்கள் அனைவரும் மிகப் பிரியமானவர்களாகத் தென்படுகிறீர்கள். எனவே விட விரும்புவதில்லை. பிறகு என்ன செய்வீர்கள்? அவனுடைய நட்பை வைத்து கொள்ள மாட்டீர்களா? (மாட்டோம்).

இப்பொழுது இராவணன் பத்து புஜங்களினால் உங்களுடைய பத்து விதமான சேவை செய்வான். அத்தனை புஜங்களையும் சேவையில் ஈடுபடுத்துவான் தான் இல்லையா. பத்து புஜங்களின் வலுவினால் உங்களுக்காக மிக விரைவிலேயே மேலும் மிக அழகான இராஜ்யத்தை தயார் செய்வான். ஏனென்றால்,அவன் இப்பொழுது இராஜ்யம் செய்ய முடியாது என்று இராவணனும் புரிந்து கொண்டான் ஆனால் அவனுக்கு இராஜ்யத்தை தயார் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கும். ஏதாவது காரியம் செய்ய வேண்டியதாக இருந்தால், இருபது விரல்களையும் சேர்த்து வலிமையோடு இந்தக் காரியம் செய்ய வேண்டும் என்று பொதுவாக கூறுவார்கள். அப்படி இந்த இயற்கையின் 5-தத்துவங்கள் மேலும் கூடவே 5-விகாரங்கள் அவை மாற்றமாகி 5-விசேஷ தெய்வீக குணங்களின் ரூபத்தில் உங்களுடைய சேவைக்காக வருவார்கள். பிறகு இராவணனுக்கு நன்றி கூறுவீர்கள் இல்லையா? இராவணனின் சேனை உங்களுக்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறது. எத்தனை பேர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பார்க்கிறீர்களா? வெளிநாட்டிலோ அறிவியல் மூலமாக எவ்வளவு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்தும் யாருக்காக நடந்து கொண்டிருக்கிறது? நமக்காக என்று கூறுங்கள்.

# 1981 அவ்யக்த முரளி

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் தைரியத்தின் குணத்தை மிக நன்றாகக் காண்பித்திருக்கிறார்கள். எனவே பாப்தாதா இன்று விசேஷமாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களுடன் பிக்னிக் செய்வார். ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் அதனதனுடைய விசேஷம் இருக்கிறது. யார் மற்றவர்களுக்கு வாய்ப்பு (சான்ஸ்) கொடுத்தாரோ, அந்த மாதிரி சான்சிலர் (வேந்தர்) ஆவதற்காக அனைவருக்கும் பாப்தாதா விசேஷமாக ஒரு பரிசு கொடுக்கிறார். அது எது? விசேஷமாக ஒரு அலங்காரம் கொடுக்கிறார். அது எப்பொழுதும் "நற்சிந்தனையாளரின் திலகம்". கிரீடத்தின் கூடவே இந்த நெத்திச்சூடியும் இருக்கும் எப்படி ஆத்மா திலகம் பிரகாசமாக இருக்கிறதோ அதே போல் நெற்றியின் நடுவில் இந்த நெத்திச்சூடியின் மணியும் மின்னிக் கொண்டிருக்கிறது. இவர்கள் அனைவருமே நற்சிந்தனையாளர்கள் குரூப் தான் இல்லையா? மற்ற சிந்தனையை முறித்து எப்பொழுதும் நற்சிந்தனை உள்ளவர்கள். எப்பொழுதாவது ஏதாவது அந்த மாதிரி விஷயம் எதிரில் வருகிறது என்றால் நற்சிந்தனையாளரின் மணியின் பரிசை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். பிறகு ஆஸ்கிரேலியாவில் எப்பொழுதும் சக்திசாலியான வைப்ரேஷன், (அதிர்வலைகள்) சக்திசாலியான சேவை மற்றும் எப்பொழுதும் பரிஷ்தாக்களின் சபை தென்படும். சக்திகள் மற்றும் பாண்டவர்களின் குழுவும் நல்ல குழுவாக இருக்கிறது. சேவை செய்வதற்கான ஊக்கமும் நன்றாக இருக்கிறது. சேவையோ அனைவரும் செய்கிறார்கள் ஆனால் எந்த சேவையில் எந்தவிதமான சம்ஸ்காரம் மற்றும் எண்ணத்தில் தடை இருக்கவில்லையோ அது தான் வெற்றி சொரூபமான சேவை ஆகும். இதே விஷயங்கள் தான் சேவையின் வளர்ச்சியில் நீண்ட காலத்தை எடுக்க வைத்து விடுகிறது. எனவே எப்பொழுதும் தடையற்ற சேவாதாரி ஆகுங்கள். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் எத்தனை சேவை நிலையங் களை திறந்திருக்கிறீர்கள்? சேவைக்கான ஊக்கம் நன்றாக இருக்க வேண்டும் பிறகு எங்கே வேண்டுமானாலும் செல்லுங்கள். தன்னுடைய சேவை என்று புரிந்து காரியம் செய்யுங்கள். இது ஜெர்மனியின் சேவை, இது ஆஸ்திரேலியாவின் சேவை என்று அப்படி இருக்க வேண்டாம். பாபாவின் சேவை மற்றும் உலகின் சேவை என்னுடையது. இதைத் தான் எல்லைக்கட்பாற்பட்ட உள்உணர்வு என்று கூறுவது. நீங்களும் எல்லைக்கட்டாற்பட்ட உள்உணர்வு உடையவர்கள் தான் இல்லையா? எங்கே சென்றாலும் அது நம்முடைய இடம் தான். நீங்கள் உலகிற்கு நன்மை செய்பவர்களேயன்றி ஆஸ்திரேலியா மற்றும் அக்கம் பக்கத்திற்கு மட்டும் நன்மை செய்பவர்கள் இல்லை. இதுவோ சேவை வளர்ச்சி அடைந்த காரணத்தினால் நியமம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சேவையை நன்றாக கவனிக்க முடிய வேண்டும் என்ற இந்தக் காரணத்திற்காக பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறோம். இப்பொழுது

இன்னூம் என்ன செய்ய வேண்டும். சேவை நிலையங்களையும் திறந்தீர்கள். கீதா பாடசாலைகளையும் திறந்தீர்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள் (சூட்சுய சேவை). சூட்சும சேவையின் கூடவே இன்னும் ஏதாவது செய்ய வேண்டும். இப்பொழுது ஆஸ்திரேலியாவலிருந்து அந்த மாதிரி எந்த வி.ஐ.பி-யையும் கொண்டு வரவில்லை. பாரத அரசாங்கமும் அவரை வரவேற்கும் அளவிற்கான அந்த மாதிரி வி.ஐ.பி-யை அழைத்து வாருங்கள். அரசாங்கம் வரை செய்தி செல்வது என்றால் செய்தி நாலாபுறமும் பரவுவது. இப்பொழுது அனைத்து வெளிநாடுகளிலிருந்தும் ஏதாவது ஒரு நாட்டில் அந்த மாதிரி ஒரு சேவையை செய்ய வேண்டும். அதன் மூலம் விரும்பாவிட்டால் கூட பாரதவாசிகளின் காதுகளில் வலுக்கட்டாயமாக அந்த செய்தி கேட்க வேண்டும். எப்படி கும்பகர்ணன் படத்தில் காதில் அமிர்தம் விட்டுக் கொண்டிருப்பதாக காண்பித்திருக்கிறார்கள். அப்படி சேவை நடக்க வேண்டும் அப்பொழுது தான் பாரதம் வரை செய்தி வந்து சேர்ந்தது என்று கூறுவோம். இப்பொழுது சிறு சிறு ஊதாங்குழல் வரை வந்திருக்கிறீர்கள், பெரிய பிகுல் ஊத வேண்டியதாக இருக்கும். பிறகு உங்கள் அனைவருக்கும் பாப்தாதா மிக நல்ல பரிசு கொடுப்பார். எப்பொழுது இந்த மாதிரி ஓசை எழுமோ அப்பொழுது வெற்றியின் மங்கள இசை ஒலிக்கும். இல்லை என்றால் பாரதத்தின் கும்பகர்ணர்கள் அந்த மாதிரி சுலபமாக எழுபவர்கள் இல்லை. இப்பொழுதோ 'என்ன என்று மட்டும் கூறி குரட்டை விட்டுக் கொண்டே இருக்கிறார்கள். புரிந்ததா, இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று வெளிநாட்டில் ஒவ்வொரு இடத்திலும் அந்த மாதிரி தைரியம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இந்த தடவை நைரோபியைச் சேர்ந்தவர்கள் முயற்சி நன்றாகச் செய்திருக்கிறார்கள். கடுமையான உழைப்பை நன்றாகச் செய்திருக்கிறார்கள், முறையோடு பொது நிகழ்ச்சியை செய்தீர்கள் என்றால் செய்தி பரவும். தனிப்பட்ட நிகழ்ச்சியைச் செய்கிறீர்கள் என்றால் செய்தி நாலாபுறமும் பரவ முடியாது. நீங்கள் எப்பொழுது அந்த மாதிரி சேவை செய்வீர்களோ அப்பொழுது மகாயக்ஞத்தின் நிறைவு விழாவைக் கொண்டாடுவோம். இப்பொழுதோ தொடங்கியிருக்கிறீர்கள்.

சக்திசேனை ஏற்கனவே தயாராகி வந்திருப்பவர்கள் மாதிரி தென்படுகிறார்கள். முகம் மற்றும் நடத்தை இரண்டுமே சக்தி ரூபமாகத் தென்படுகிறது. யுனிஃபாரமும் நன்றாக இருக்கிறது, அனைவரின் பேட்ஜும் நன்றாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது. முயற்சி செய்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் தொடக்கத்தில் எப்படி சுதந்திரமாக இருப்பதின் சம்ஸ்காரம் உள்ளவர்களாக இருந்தார்களோ அந்த அளவே இப்பொழுது மரியாதையோடு இருப்பதிலும் நன்றாக இருக்கிறார்கள். இப்பொழுது தந்தையின் இனிமையான

பந்தனம் வந்து விட்டது. அனைவரும் நல்லவர்கள். எப்படி நகை இருக்குமோ அதை சொரூபத்தில் கொண்டு வரப்படும், இவர்களும் நகைகள் நன்றாக தயாராகி விட்டார்கள். பாலிஷ் போடப்பட்டு விட்டது. பாண்டவர்களும் நல்ல சேவைக்கு தகுதியானவர்கள். மரியாகை கொடுப்பது மற்றும் மரியாதையைப் பெறுவது என்ற இந்த மந்திரம் மூலம் எப்பொழுதும் சுலபமாக சேவையின் வளர்ச்சி ஆகிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது மரியாதையை கொடுப்பதையும் கற்றுக் கொண்டார்கள், பெறுவதையும் கற்றுக் கொண்டார்கள். மரியாதை கொடுப்பது தான் மரியாதையை பெறுவது என்ற இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். மரியாதை பெறுவதினால் மட்டும் கிடைக்காது, கொடுப்பதினால் கிடைக்கும். எனவே ஒவ்வொருவரிடமும் அன்பு மற்றும் ஒற்றுமை நன்றாக இருக்கிறது. இந்த மந்திரம் உறுதியாக நினைவில் இருக்கிறது தான் இல்லையா.

**தீதி, தாதியுடன்:** வயர்லஸ் செட் உங்களிடம் இருக்கிறது தான் இல்லையா? ஒரு காரியத்தை ஒரு விநாடியை விட விரைவாக எங்காவது செய்விக்க வேண்டியதாக இருக்கிறது என்றால், அங்கே வயர்லஸ் மூலமாக டைரக்ஷன் கொடுக்க முடியும். ஏனென்றால் எந்த அளவு சேவை வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கிறது என்றால் பிறகு இந்த கடிதப் போக்குவரத்து, தொலைபேசி, தந்தி ஆகியவை என்ன செய்ய முடியும். இன்று இவைகள் சரி தான், ஆனால் நாளை இல்லை. பிறகு முழு சேவையையும் எப்படி கையாளுவீர்கள்? இதற்காகவும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். ஹாலையும் கட்டுவீர்கள் சமையல் அறையையும் கட்டிவிட்டீர்கள். இதுவோ யார் வருவார்களோ அவர்களுக்காக சரி தான் ஆனால் நாலாபுறங்களிலும் உள்ள சேவை நிலையங்களில் இந்த அளவு வளர்ச்சியை எப்படி கையாளுவீர்கள்? அனைவரையும் இங்கே அழைப்பீர் களா? பிரஜைகளின் வரிசையோ இருக்கும், வாரிசு வரிசையிலோ வரமாட்டார் இல்லையா? எனவே விசேஷமாக ஒரு விநாடியில் கர்மாதீத் நிலையின் ஆதாரத்தினால் நீங்கள் எண்ணத்தை வைத்தவுடன் மேலும் அது அங்கே அந்த மாதிரி சென்றடையும். எப்படி நீங்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள், மேலும் அது சென்றடைந்து கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி நிறைய அனுபவமும் ஆகிக் கொண்டே இருக்கும், அது இன்று அந்த மாதிரி அனுபவம் ஆனது என்று செய்தியிலும் வரும். சாட்சாத்காரமும் ஏற்படும் மற்றும் எண்ணங்களின் சித்தியும் ஆகும். இப்பொழுது இந்த விசேஷம் வந்து கொண்டே இருக்கும். மகாரதிகளின் இப்பொழுதைய முயற்சி இந்த பயிற்சியினுடையதாகத் தான் இருக்கும். இந்த நேரம் கர்மயோகி, அடுத்த நேரம் கர்மாதீத் நிலை. ஒரு இடத்தில் நின்று கொண்டே கூட

நாலாபுறங்களிலும் எண்ணத்தின் சித்தி மூலமாக சேவையில் சகயோகி ஆக முடியும்.

அதிக நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கும். எவ்வளவு நேரம் கொடுக்கிறீர்களோ அந்த அளவே அனைவரிடமும் குஷியின் சுரங்கம் நிரம்பிக் கொண்டே இருக்கும். நீங்கள் நேரம் கொடுப்பது என்றால் குஷியின் சுரங்கத்தை நிரப்புவது. மற்றவர்களின் குஷியைப் டார்த்து இன்னும் அவர்களுக்கு ஊக்கம் உற்சாகத்தை கொடுப்பதற்கான எண்ணம் எழுகிறது. அனைவரும் நன்றாகவே அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். நேரத்தையும் அவசியம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் நேரத்தின் பயன்பாடு ஆயிரம் மடங்குகளை விட அதிகமாகி விடுகிறது. எனவே மதுபனின் ஈர்ப்பு நாளாக நாளாக அனைவருக்கும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இது பொறுப்பாளராகி இருக்கும் ஆத்மாக்கள் உங்களுடைய சேவையின் பலன்.

**ஆஸ்திரேலியாவின் பல சேவை நிலையங்களிலிருந்து வந்திருக்கும் சகோதர சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான சந்திப்பு:**

**1) ஒவ்வொரு அடியிலும் பல மடங்கின் வருமானம் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறதா?** அந்த மாதிரி தன்னை பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? முழு நாளில் எத்தனை அடி சேமீப்பாகிறது? கணக்கு பார்க்க முடியுமா? பாண்டவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து சேவையில் வளர்ச்சியை கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள் இது மிக நல்லது தான். எப்பொழுதும் ஒருவர் இன்னொருவர் மேல் திருப்தியாக இருக்கிறீர்களா? அனைவரும் எப்பொழுதும் ஒற்றுமையுடன் மேலும் ஒரே சீராக இருக்கிறீர்கள். இதுவும் மிக நல்ல உதாரணமாகும். ஒருவர் கூறினார் மற்றவர் அதை ஏற்றுக் கொண்டு நடந்தார் என்ற இதுவும் அன்பிற்கான பிரதிபலனைக் கொடுப்பதாகும். அந்த மாதிரி உதாரணத்தை பார்த்து மற்றவர்களும் தொடர்பில் வருவதற்காக தைரியம் வைக்கிறார்கள். ஒற்றுமையாக இணைந்திருக்கும் இந்த சபையும் சேவைக்கான ஒரு சாதனம் ஆகி விடுகிறது. ஒரே தந்தை, ஒரே வழி என்ற இந்த சம்ஸ்காரம் தான் சத்யுகத்தின் ஒரு இராஜ்யத்தின் ஸ்தாபனை செய்கிறது. தடையற்ற சேவை நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? ஏதாவது பிரச்சனை இல்லையே? இவர்களுடைய ஒற்றுமை நன்றாக இருக்கிறது, அனைவரும் இணைந்திருக்கிறார்கள் என்றால் அதைப் பார்த்து அங்கு மாயை வருவதற்கு தைரியமே வைப்பதில்லை. ஒவ்வொருவரும் தன்னை சேவைக்கு பொறுப்பானவர் என்று நினைத்து நடந்து கொள்கிறார்கள். ஒருவர் மட்டும் இல்லை

ஆனால் நாங்கள் அனைவரும் பொறுப்பானவர்கள். தந்தை என்னை பொறுப்பானவராக ஆக்கியிருக்கிறார் என்ற நினைவு இருக்கிறது என்றால் வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும். சிந்தனை சக்தி மூலம் தன்னுடைய நிலையும் சக்திசாலியாக ஆகிக் கொண்டே இருக்கும்.

**2) எப்பொழுதும் தன்னை பந்தனமற்ற ஆத்மா என்று உணருகிறீர்களா? எந்தவிதமான பந்தனத்தையும் உணரவில்லையே?** ஞானம் நிறைந்த நிலையின் சக்தி மூலம் பந்தனங்களை அழிக்க முடியாதா? ஞானத்தில் லைட் மற்றும் மைட் (அறிவு மற்றும் சக்தி) இரண்டும் இருக்கிறது தான் இல்லையா? ஞானம் நிறைந்தவர் பந்தளத்தில் எப்படி இருக்க முடியும்? எப்படி இரவு மற்றும் பகல் இணைந்திருக்க முடியாது, அதே போல் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் மற்றும் பந்தனம் என்ற இந்த இரண்டும் எப்படி சேர்ந்தே இருக்க முடியும். ஞானம் நிறைந்தவர் என்றால் பந்தனம் அற்றவர். கடந்தது கடந்ததாகவே இருக்கட்டும். எப்பொழுது புதிய ஜென்மம் ஆகி விட்டது என்றால், கடந்த காலத்தின் சம்ஸ்காரத்தை இப்பொழுது ஏன் வெளிப்படுத்துகிறீர்கள்? எப்பொழுது பிரம்மாகுமார் குமாரி ஆகி விட்டீர்கள் என்றால் பந்தனம் எப்படி இருக்க முடியும்? பிரம்மாபாபா பந்தனம் அற்றவர் என்றால் குழந்தைகள் பந்தனத்தில் எப்படி இருக்க முடியும்? எனவே நான் மாஸ்டர் ஞானம் நிறைந்தவன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள்.

**3) வெற்றி எப்பொழுதும் என்னுடைய பிறப்புரிமை என்று அந்த அளவு போதை இருக்கிறதா? வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா? என்ற இந்த கேள்விக்கே இடமில்லை**. வெற்றி நிறைந்தவன் அந்த மாதிரி போதை இருக்கிறதோ நீங்கள் மாஸ்டர் ஆசிரியர் தான் இல்லையா? எப்படி தந்தைக்கு ஆசிரியரின் தகுதி இருக்கிறது, அதே போல் மாஸ்டர் ஆசிரியருக்கும் இருக்கும் இல்லையா? தந்தைக்குச் சமமானவராக ஆகியிருக்கிறீர்கள் தான் இல்லையா? (ஆம்). இந்த ஆம் - ஆம் என்ற பாடலை நன்றாகப் பாடுகிறீர்கள். இதிலிருந்து இவர்கள் தந்தையின் குணத்தை அனைவருக்கும் கூறி நடனம் ஆடுகிறார்கள் மற்றும் ஆட வைக்கிறார்கள் என்பது நிரூபணம் ஆகிறது. குமாரிகளைப் பார்த்து பாப்தாதா மிகுந்த குஷி அடைகிறார்கள். ஏனென்றால் குமாரர்கள் மற்றும் குமாரிகள் தியாகம் செய்து வந்து தபஸ்வி ஆகியிருக்கிறார்கள். குழந்தைகளின் தியாகத்தின் தைரியத்தைப் பார்த்து, தபஸ்யாவின் ஊக்கத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார்கள். தந்தையின் மகிமையையோ பக்தர்கள் செய்கிறார்கள்

ஆனால் குழந்தைகளின் மகிமையை தந்தை செய்கிறார். நீங்கள் எத்தனை ஜென்மங்கள் மாலையை உருட்டி நினைவு செய்தீர்கள்? இப்பொழுது அதற்குப் பலனாக தந்தை குழந்தைகளின் மாலையை நினைவு செய்கிறார். நீங்கள் குழந்தைகள் தந்தை எந்த நேரம் மாலையை நினைக்கிறார்கள் என்று பார்க்கலாம்? (அமிர்தவேளை) அப்படி எந்த நேரம் தந்தை மாலையை நினைவு செய்கிறாரோ அந்த நேரம் நீங்கள் தூங்கி விடுவதில்லையே? சக்திகளோ தூங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்புபவர்கள். அவர்களே எப்படி தூங்க முடியும்? ரிசல்ட் நன்றாக இருக்கிறது, சான்றிதழ் கிடைப்பது அதிர்ஷ்டம் ஆகும். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல சான்றிதழ் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தன்னுடைய பூந்தோட்டத்திற்கு நிச்சயம் மற்றும் தைரியத்தின் தண்ணீரை பாய்ச்சிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.

**டாக்டர் நிர்மலா சகோதரியுடன்:** பாப்தாதா எவ்வளவு மகிமை செய்தாலும் அது குறைவு தான், அந்த மாதிரி நீங்கள் மகிமைக்குத் தகுதியான இரத்தினம் ஆவீர்கள். எப்படி பெயரோ அதே போல் பணிலான குணத்தின் மூலம் வெற்றி அடைபவர் ஆகியிருக்கிறீர்கள். சகித்துக் கொள்ளும் சக்தி மற்றும் எதிர்கொள்ளும் சக்தியின் ஆதாரத்தில் அனைத்து நிலையங்களையும் தடையற்றதாக ஆக்கியிருக்கிறீர்கள். அப்படி பிரத்யக்ஷ பலனைப் பார்த்து பாப்தாதா மிகவும் குஷி அடைகிறார்கள். எனவே நீங்கள் எப்பொழுதுமே விசேஷ ஆத்மாவின் பட்டியலில் இருக்கிறீர்கள். எப்பொழுதும் தந்தையின் உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். விசேஷமாக குழந்தையின் தலை மேல் எப்பொழுதும் தந்தையின் கரம் இருக்கிறது. எப்பொழுதும் இந்தப் படத்தைத் தான் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். அனைத்து தெய்வீகக் குடும்பத்தின் அன்பும், சான்றிதழும் இருக்கிறது.

**வரதானம்: எப்பொழுதும் கட்டளைப்படி நடப்பவர் என்ற திலகத்தை இட்டுக் கொண்டு முதல் பரிசை பெறக்கூடிய கட்டளைப்படி நடப்பவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகளின் நெற்றியில் கட்டளைப்படி நடப்பவரின் நினைவுத் திலகம் இடப்பட்டு இருக்கிறதோ அவர் ஒரு எண்ணத்தைக் கூட கட்டளையின்றி செய்யமாட்டார். அந்த மாதிரியானவர்களுக்கு முதல் பரிசு கிடைக்கிறது, எப்படி சீதைக்கு கோட்டிற்கு உள்ளே இருக்க வேண்டும் என்ற கட்டளை இருந்தது, அதே போல் ஒவ்வொரு அடியை எடுத்து வைத்தும், ஒவ்வொரு எண்ணத்தை உருவாக்கிக்

கொண்டும் தந்தையின் கட்டளை என்ற கோட்டிற்கு உள்ளே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். எந்த விதமான இராவணனின் சம்ஸ்காரம் தாக்க முடியாது மேலும் நேரமும் வீணாகச் செல்லாது.

**சுலோகன்: யார் மேலேயாவது பற்றுதல் இருக்கிறது என்றால் அது முயற்சி செய்வதில் அலட்சியமானவராக அவசியம் ஆக்கி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான ஹோலியை எப்படி கொண்டாடுவது?

இன்று துக்கமில்லா உலகத்தின் மகாராஜா தன்னுடைய துக்கமற்ற உலகின் எஜமானர்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். அந்த மாதிரி எஜமானர்களைப் பார்த்து, ஒவ்வொரு குழந்தையும் எஜமானன் ஆகி விட்டார் என்று பாப்தாதாவும் குஷியடைகிறார். சங்கமயுகம் துக்கமற்றது, மூலவதனம் துக்கமற்ற உலகம், சொர்க்கம் துக்கமற்ற உலகம் அப்படி மூன்று உலகங்களின் எஜமானன். பாப்தாதா அந்த மாதிரி எஜமானர்களைப் பார்த்து, எஜமானர்களுக்கு இன்றைய ஹோலி பண்டிகைக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். வர்ணங்களினால் கொண்டாடும் ஹோலி பண்டிகைக்கான வாழ்த்துக்கள் இல்லை ஆனால் ஹோ லியே (ஆகி விட்டீர்கள்) என்பதற்கான வாழ்த்துக்கள்! அனைவரும் தந்தையின் ஹோ லியே, அதாவது தந்தையின் குழந்தைகளாக ஆகி விட்டீர்கள். ஹோ லியே தான் இல்லையா? பாடலாக என்ன பாடுகிறீர்கள்? தந்தையின் ஹோ லியே அதாவது ஆகி விட்டோம். யார் தந்தையின் குழந்தையாக ஆகி விட்டர்களோ அவர்களுக்குத் தான் ஹோலிக்கான வாழ்த்துக்கள் ஆவீர்களா அல்லது ஆகி விட்டீர்களா? என்ன பதில் கூறுவீர்கள்? எப்பொழுது ஹோலி அதாவது கடந்ததை கடந்ததாக்கி தந்தையின் குழந்தை ஆகி விட்டீர்களோ அப்பொழுது தான் குஷி என்ற பீச்சாங்குழலை உபயோகிக்கிறீர்கள். பீச்சாங்குழல் மூலம் வர்ணம் தெளிப்பார்கள் தான் இல்லையா? அப்படி உங்களுடைய பீச்சாங்குழல் மூலம் எத்தனை குடும்பங்கள் உருவாகின? இன்றைய நாட்களில் ஒரே பீச்சாங்குழலில் விதவிதமான வர்ணங்களையும் போடுகிறார்கள். அந்த வர்ணம் அடிக்கப்பட்ட பிறகு வர்ணம் பூசப்பட்டவர்களாக ஆகி விடுகிறார்கள். எனவே அவர்களுக்கு தன்னுடைய ஆடையையும் மற்றும் தன்னுடைய முகத்தையும் சரி செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் உங்களுடைய வர்ணமோ அந்த அளவு உயர்ந்தது மற்றும் அனைவர்களுக்கும் பிரியமானது. அதை யாருக்காவது தெளித்தீர்கள் என்றால் அவர் இன்னும் தெளியுங்கள் என்று தான் கூறுவார். எப்பொழுதுமே தெளியங்கள் என்று கூறுவார். உங்களுடைய குஷியின் பீச்சாங்குழல் மனிதனை அந்த அளவு பரிவர்த்தனை செய்து தேவ ஆத்மா ஆக்கி

விடுகிறது. ஒரு நீரோட்டம் - நான் ஒரு உயர்ந்த ஆத்மா, இது குஷியின் நீரோட்டம். நான் உலகின் அதிபதியின் குழந்தை, நான் படைப்பின் முதல், இடை, கடையின் ஞானம் நிறைந்தவன். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன் உயர்ந்த மேடையில் எனக்கு கதாநாயக பாத்திரம். இந்த மாதிரி எத்தனை குஷியின் விஷயங்களின் நீரோட்டங்கள் உங்களுடைய பீச்சாங்குழலில் இருக்கிறது. ஒன்றோ இந்த குஷியின் பீச்சாங்குழலினால் ஒவ்வொருவர் மேலேயும் தெளிக்கிறீர்கள் இல்லையா? இரண்டாவது அனைத்து பிராப்திகளின் நீரோட்டங்களின் பீச்சாங்குழல், எப்படி அதீந்திரிய ககம் இருக்கிறது. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பின் ஆன்மீக அன்பு அந்த மாதிரி இன்னும் யோசியுங்கள். இதுவோ பொதுவானது. மூன்றாவது பீச்சாங்குழல் அனைத்து சக்திகளின் பீச்சாங்குழல். இந்த வெளிநாட்டினர் எப்பொழுதாவது பீச்சாங்குழலை பார்த்திருக்கிறார்களா? எப்படி பன்னீர்செம்பு இருக்கிறது அதில் எத்தனை துளைகள் இருக்கின்றன. அப்படி பீச்சாங்குழலினால் தூரத்திலிருந்தே அடிப்பார்கள், அது மிக வேகமாக தூரம் வரை செல்லும். ஞானத்தின் ஆன்மீக பீச்சாங்குழல்களைப் பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நல்லது, நான்காவது பீச்சாங்குழல் ஞானத்தின் மூல விஷயங்கள் அந்த மாதிரி பீச்சாங்குழல்களினால் ஹோலி விளையாடுவதினால் தேவாத்மா ஆகி விடுகிறீர்கள். கோபி வல்லப் (சிவ பாபார் கோபர் கோபிகளுடன் (பிரம்மா குமார், குமாரிகளுடன் ஒரு நாள் ஹோலி விளையாடுவதில்லை ஆனால் சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் ஹோலி டே (நாள் ஆகும். சங்கமயுகத்தில் ஹோலி டே மற்றும் சத்யுகத்தில் ஹாலி டே (விடுமுறை) இருக்கும். இப்பொழுது ஹாவி டே கொண்டாடாதீர்கள். இப்பொழுதோ கடும் முயற்சியே அன்பின் காரணமாக ஹாலி பேயின் அனுபவம் செய்விக்கிறது. பாப்தாதா மேலே இருந்து குழந்தைகளின் ஒரு காட்சியைப் பார்த்தார். கடுமையாக உழைக்கும் காட்சியைப் பார்த்தார். (எங்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டியதாக இருக்கிறதோ அங்கு சகோதரர்கள் தினசரி கல்லைத் தூக்குகிறார்கள்) எங்கே கோயில்களில் பூஜை செய்யப்படுபவர்கள், இயற்கையும் உங்களுடைய தாசியாகி சேவை செய்யக்கூடியது; தந்தையும் குழந்தைகளின் மாலையை ஜபித்துக் கொண்டிருக்கிறார், ஆனால் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? கல்லைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த உழைப்பு. அன்பின் காரணமாக உழைப்பாகப் படவில்லை. நம்முடைய வேலை, நமது வீட்டின் வேலை, யக்ஞ சேவை என்று புரிந்து கொண்டிருந்தார்கள். அப்படி பாப்தாதா மேல் அன்பு இருக்கும் காரணத்தினால் இந்த உழைப்பு கூட விளையாட்டு மாதிரி அனுபவம் ஆனது இல்லையா? சங்கமயுகத்தின் எந்த அளவு கடின உழைப்போ அந்த அளவு சுதந்திரம் இருக்கிறது. ஏனென்றால் புத்தி மற்றும் உடல் எந்த அளவு பிஸியாக இருக்கிறதோ

அந்த அளவு வீணான எண்ணங்களிலிருந்து விடுபட்டு இருக்கிறது. எனவே தான் சங்கமயுகத்தில் முயற்சி தான் விடுமுறை நாள் என்று கூறினோம். குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது (ஓம் சாந்தி பவன்) ஹாலைக் கட்டுவதற்காக கல்லைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த ஒவ்வொரு கல்லும் ஆயிரம் மடங்கு வளர்ச்சி அடைந்து முத்துக்கள் வைரங்கள் ஆகி விடும். அவை உங்களுடைய மாளிகைகளில் இந்த வைரங்கள் முத்துக்களினால் எவ்வளவு அலங்கரிப்பார்கள். அங்கே சென்று மாளிகை கட்ட வேண்டியதாக இருக்காது. இப்பொழுது என்ன உழைப்பு செய்தீர்களோ அதன் பலனாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட மாளிகை கிடைக்கும். மிகவும் குஷியோடு சேவையில் ஆர்வமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை பாப்தாதாவும் பார்த்தார்கள். ஆக எந்த ஹோலி என இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

முதலில் எரிக்க வேண்டும் பிறகு கொண்டாட வேண்டும். ஒரு நாள் எரிப்பார்கள், மறுநாள் கொண்டாடுவார்கள். நீங்களும் ஒரு நாள் ஹோலி அதாவது கடந்ததை கடந்ததாக்குகிறீர்கள். அதாவது முந்தைய அனைத்தையும் எரிக்கிறீர்கள், அப்பொழுது தான் நாங்களோ பாப்தாதாவினுடையவர்களாக ஆகி விட்டோம் என்று பாடல் பாடுகிறீர்கள். இது தான் குஷியில் கொண்டாடுவது. நினைவுச் சின்னமான ஹோலி பண்டிகை கொண்டாடும் நாளில் தேவதைகளின் ரூபமாக ஈட்டியின் ரூபத்தை உருவாக்குகிறார்கள் ஆனால் அதிலும் விசேஷமாக நெற்றியில் லைட்டை எரிய வைப்பார்கள். இது உங்களுடைய நினைவுச் சின்னமாகும். எப்பொழுது நெற்றியின் ஜோதி எரிகிறதோ அப்பொழுது தேவதை ஆகி விடுகிறீர்கள். தந்தையினுடையவராக ஆகி விட்டீர்கள் என்றால் தேவதை ஆகி விடுகிறீர்கள். உங்களுடையது அனுபவம், மேலும் அவர்களுடையது, உங்களுடைய அனுபவத்தின் நினைவுச் சின்னத்தை கொண்டாடுவது அப்படி நீங்கள் அனைவரும் எப்படி ஹோலி கொண்டாடுகிறீர்கள். மேலும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று புரிந்து கொண்டீர்களா? யதார்த்தமானது எது மற்றும் நினைவுச்சின்னம் எது? (பெரிய பெரிய மனிதர்கள் மகா மூர்க்கர்களின் மகாநாட்டையும் கூட்டுகிறார்கள்) இதுவும் சரி தான். ஏனென்றால் எப்பொழுது தந்தை வருகிறார் என்றால் பெரிய பெரிய மனிதர்கள் மகாமூர்கர்களாகத் தான் ஆகி விடுகிறார்கள். எவ்வளவு பெரியவரோ அந்த அளவே மூர்க்கர் ஆகிறார். யார் தந்தையையே தெரிந்து கொள்ள முடியவில்லையோ அவர் மகாமூர்க்கன் ஆகிறா இல்லையா? இதையும் நம்முடைய சென்ற கல்பத்தின் மகாமூர்க்கத்தன்மையின் நினைவாகக் கொண்டாடுகிறார்கள். அனைத்து தவறான காரியம் செய்கிறார்கள். என்னை

# 1981 அவ்யக்த முரளி

தெரிந்துகொள் என்று தந்தை கூறுகிறார் ஆனால் அவர்கள் தந்தையே இல்லை என்று கூறுகிறார்கள். அப்படி தலைகீழானவர்கள் ஆனார்கள் இல்லையா? தந்தை வந்திருக்கிறார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். மேலும் அவர்கள் அப்படி இருக்கவே முடியாது என்று கூறுகிறார்கள். அப்படி தவறான காரியம் செய்கிறார்கள் தான் இல்லையா? பொதுவாக மிக அதிக விஸ்தாரம் செய்தாகி விட்டது ஆனால் சாரம் தந்தை மற்றும் குழந்தைகளின் மங்கள சந்திப்பிற்கான நினைவு சின்னம். சங்கமயுகம் தான் மங்கள சந்திப்பிற்கான யுகம். பாரதத்தில் வசிக்கும் குழந்தைகளோ இந்த விஷயங்களைத் தெரிந்திருக்கிறார்கள், இன்று வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளுக்குக் கூறிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இராஜ்யமோ பாரதத்தில் தான் செய்ய வேண்டும் இல்லையா? அமெரிக்காவில் செய்ய வேண்டாம் இல்லையா? பாரதத்தின் விஷயங்களை அவசியம் கேட்பீர்கள் மற்றும் புரிந்து கொள்வீர்கள் இல்லையா? உங்களுடைய விஷயங்களையே என்னவாக ஆக்கியிருக்கிறார்கள், எவ்வளவு வித்தியாசம் செய்து விட்டார்கள்.

அந்த மாதிரி கடந்ததை கடந்ததாக்கி ஹோலியின் பாடலைப் பாடக்கூடிய, எப்பொழுதும் விதவிதமான பீச்சாங்குழல்கள் மூலமாக ஆத்மாவின் ஆடையை வண்ணமயமாக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையுடன் மங்கள சந்திப்பை செய்து கொண்டிருக்கும் பிராமணனாக இருப்பவர் தேவதையாக ஆகக்கூடிய துக்கமற்ற உலகத்தின் எஜமானர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

முரளிகளோ அதிகம் கேட்டிருக்கிறீர்கள். கேட்பதற்கு இன்னும் ஏதாவது இருக்கிறதா? இப்பொழுதோ சந்திக்க வேண்டும் மற்றும் கொண்டாட வேண்டும். கேட்பது மற்றும் கூறுவது கூட அதிகமாகி விட்டது. சாகார ரூபத்தில் கூறினோம், அவ்யக்த ரூபத்திலும் எவ்வளவு கூறியிருக்கிறோம். ஒரு வருடம் அல்ல ஆனால் 13-வருடங்கள். இப்பொழுது 13வது வருடத்தில் உன்னுடையவராகவே ஆகி விட வேண்டும் இல்லையா? உன்னுடையவன் என்ற இந்த உணர்விலேயே இருந்தீர்கள் என்றால் முழுமையாக சொன்னதின் சாரம் வந்து விடும்.

நேற்று குழந்தைகளின் கொண்டாட்டத்தின் காட்சியையும் பார்த்தோம். அதிகமாக சிரித்தார்கள், அதிகமாக விளையாடினார்கள். பாப்தாதா புன்முறுவலிட்டுக் கொண்டே இருந்தார். எப்பொழுதுமே அந்த மாதிரி சிரித்துக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருங்கள் ஆனால் அழியாததாக இருக்கட்டும். குழந்தைகள்

கலகலட்டாக இருப்பதைப் பார்த்து அழியாததாக இருக்கட்டும் என்ற வரதானத்தை பாப்தாதா கொடுக்கிறார், கால்களோ களைப்படைந்து விடும் ஆனால் பத்தி மூலம் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். அவ்யக்த வதனவாசியாகி ஃபரிஷ்தாவின் ஆடையில் நடனமாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அழியாததாக மற்றும் நிரந்தரமாக செய்ய முடியும். இதுவும் சங்கமயுகத்தின் கொண்டாட்டம், பிறகு இருக்காது எனவே நன்றாக விளையாடுங்கள், சாப்பிடுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள் ஆனால் அழியாதது என்ற வார்த்தையையும் நினைவு வையுங்கள்.

**அமெரிக்கா**: ஒவ்வொரு இரத்தினமும் அனேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்வதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். ஆத்மாக்கள் அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்து இரக்கம் வருகிறது தான் இல்லையா? இப்பொழுதோ இன்னும் அதிகமாக துக்கத்தின் அறைல்கள் அதிகரிக்கும். சுகத்தின் ஒரு துளி அளவு கூட தென்படவில்லையே என்று அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். இந்த சுகத்திற்கான சாதனம் அனைத்தும் அவர்களுக்கு துக்கத்தின் சாதனமாக அனுபவம் ஆகத் தொடங்கும். அந்த மாதிரி நேரத்தில் தந்தை ஒருவரின் மட்டும் மற்றும் தந்தையின் குழந்தைகளின் ஆதரவு தான் அவர்களுக்குத் தென்படும். முழு உலகத்தில் இருளின் நடுவே ஒரே ஒரு லைட் ஹவுஸ் தென்படும். இது மெது மெதுவாக அளவு கடந்த நிலையில் விரைவிலேயே சென்று கொண்டு இருக்கும். அந்த மாதிரி நேரத்தில் லைட் (ஞானம்) மற்றும் மைட் (சக்தி) கொடுப்பதற்கான பயிற்சி உள்ள ஆத்மாக்கள் வேண்டும். இதே பயிற்சியில் இருக்கிறீர்களா? ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவை செய்ய வேண்டியதாக இருக்கும். எண்ணத்தினாலும், வார்த்தைகளினாலும், செயலினாலும் செய்ய வேண்டும். செயல் மூலமாக அவர்களை அமர வைத்து ஆறுதல் கொடுங்கள் அந்த மாதிரி தயார் செய்து கொண்டே செல்லுங்கள். ஏனென்றால், அமெரிக்காவில் எவ்வளவு அதிகமாக சாதனங்கள் இருக்கின்றன. எவ்வளவு பெரிய ஸ்தானமாக இருக்கிறது. அந்த அளவே பெரிய துக்கத்தின் அனுபவமும் இருக்கும். அப்படி விநாஷத்தின் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன இல்லையா? விநாஷத்திற்கு பொறுப்பாகியிருக்கும் ஆத்மாக்களின் கூடவே ஸ்தாபனை செய்யக்கூடிய ஆத்மாக்கள் நீங்களும் தன்னுடைய கொடியை பறக்க விடுவீர்கள். அப்படி ஸ்தாபனை காரியத்தில் விசேஷ ஆத்மாவை யார் கொண்டு வருவீர்கள்? (அமெரிக்கா), விசேஷ ஆத்மாக்களை அழைத்து வருவதினால் அமெரிக்காவின் சேவை நிலையமும் வி.ஐ.பி ஆகி விடும் இல்லையா?

# 1981 அவ்யக்த முரளி

**சான்ஃபிரான்சிஸ்கோ**: எப்படி ஸ்தானமோ, ஸ்தானத்திற்கு ஏற்றபடி எந்த கொடியை பறக்கவிடுவீர்கள். அறிவியலைச் சேர்ந்தவர்களோ மற்ற இடங்களிலும் இருக்கிறார்கள். அதனால் இந்த இடத்தின் விசேஷமாக என்ன இருக்கிறது. தார்மீகத் தலைவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒரு தார்மீக தலைவருக்காவது ஒருவேளை அனுபவம் செய்வித்து விட்டீர்கள் என்றால், பெயர் எவ்வளவு நாலாபுறமும் பரவும். எனவே இந்த விசேஷத்தைக் காண்பியுங்கள். எப்பொழுது அவர்களும் நடைமுறை அனுபவத்தை கேட்பார்களோ பிறகு அனுபவத்தின் ஆதாரத்தில் ஈர்க்கப்படுவார்கள். அப்படி இந்த புதுமையை காண்பியுங்கள். அந்த மாதிரி வித்வான்களுக்கு குமாரிகள் அம்பு எய்யுங்கள். இது சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னம் தான் இல்லையா. அவர்கள் எந்தக் குமாரிகள்? நீங்கள் தான் இல்லையா? உங்களில் யாராவது பொறுப்பாளர் ஆகட்டும். பிரம்மா குமாரர்கள் அருகில் அழைத்து வருவார்கள். பிரம்மா குமாரிகள் வெற்றியை அடைந்து வெற்றிக் கொடியைப் பறக்க விடுவார்கள். பிரம்மா குமாரர்கள் நீங்கள் பலியாகுபவரை அழைத்து வருவீர்கள். மேலும் நீங்கள் பலியை தன்னுடையதாக்கி இறந்து மறுபிறவியில் வாழ்வதாக ஆக்கி விடுவீர்கள். முதல் காரியம் பாண்டவர்களினுடையது. பழம் உருவாவதற்கு கொஞ்ச காலம் எடுக்கும். இப்பொழுது என்ன விதை விதைத்து கொண்டிருக்கிறீர்களோ அதனுடைய பலன் அவசியம் கிடைக்கும். மிக அன்புடன் அவர்களுடைய சேவை செய்ய வேண்டும். அவர்களை மகான் மகான் என்று கூறிக் கொண்டே தன்னுடைய மகான் தன்மையை காண்பிக்க வேண்டும். ஒருவேளை முதலில் அவர்களிடம் நீங்களோ ஒன்றுமே இல்லை, நீங்கள் தவறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கூறினீர்கள் என்றால், அவர்கள் நீங்கள் கூறுவதைக் கேட்கவே மாட்டார்கள். எனவே முதலில் அவர்களை மகிமை செய்யுங்கள். எப்படி முரளியில் கேட்கிறீர்கள் தான் இல்லையா -எலி என்ன செய்கிறது? முதலில் ஊதுகிறது. பிறகு கடிக்கிறது. அந்த மாதிரி நீங்களும் செய்யுங்கள். ஏனென்றால் விகார உலகத்திற்கு தூண்கள் கொடுத்து நிறுத்துவதற்கான காரியமோ செய்திருக்கிறார்கள் இல்லையா? அப்படி என்ன செய்திருக்கிறார்களோ அதனுடைய மகிமையையோ செய்வோம் தான் இல்லையா? நல்லது, நல்லது என்று கூறிக் கொண்டே நல்லதை உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். நீங்கள் என்ன காரியம் செய்ய வேண்டும் என்று புரிந்ததா, இவரும் உங்களுடைய தூதுவர் (மெசஞ்சர்) ஆகி விடுவார். இவர்களுடைய பேச்சோ மிக வலுவானதாக இருக்கிறது தான் இல்லையா? மைக் பெரியதாக இருக்கும். எனவே அந்த மாதிரியானவர்களை யாருடைய பெயர் நன்றாக இருக்கிறதோ, மற்றும் பெரிய பெயராக இருக்கிறதோ அவர்களை தொடர்பில் கொண்டு வாருங்கள். நீங்கள் அவர்கள் மூலமாக தன்னுடைய பெரிய காரியத்தை செய்விக்க

முடியும். பிராமணர்களை அதிகரிக்கும் சேவையோ செய்யத் தான் வேண்டும், ஆனால் இது இன்னொரு சேவை ஏதாவது பெரிய நிகழ்ச்சியை வையுங்கள். அந்த நிகழ்ச்சியில் இந்த மாதிரி விஜபி -க்களை ஏதாவது முக்கிய பொறுப்பு கொடுத்து அழைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவர்களை இந்தக் காரியத்தில் சகபோகிகளாக ஆக்குங்கள். அவர்களிடம் அனுபவம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரையாவது உங்களுடன் அழைத்துச் சென்றீர்கள் என்றால், அவர்களுடைய நடைமுறை வாழ்க்கையின் பிரபாவம் அவர்கள் மேல் அதிகமாக ஏற்படும். ஏனென்றால் இவர்கள் (பி.குமாரிகள்)என்ன செய்கிறார்கள் என்ற நிரூபணத்தையும் பார்க்க விரும்புகிறார்கள்.

**ஆப்பிரிக்கா** சேவையின் வளர்ச்சியை செய்ய வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகமோ எப்பொழுதும் இருக்கிறது தான் இல்லையா? எப்படி மீன் தண்ணீர் இல்லாமல் இருக்க முடியாது என்ற உதாரணம் கூறுகிறார்கள், அதே போல் பிராமணன் சேவையின்றி இருக்க முடியாது. ஏனென்றால் சேவை செய்வதினால் ஒன்று சுயமுன்னேற்றம் மற்றும் கூடவே அனேக ஆத்மாக்களுக்கும் முன்னேற்றம் ஏற்பட்டு விடுகிறது. அப்படி தன்னுடைய முன்னேற்றத்தின் காரணமாகவும் பிராப்தி ஆகிறது மற்றும் மற்றவர்களின் முன்னேற்றமாக என்ன ஆகிறதோ அதற்கான பங்கும் சேமிட்டாகி விடுகிறது. எனவே பாப்தாதா யார் எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் தான் பிராமணன் என்று கூறுகிறார். நினைவிலிருந்து சேவை செய்வது என்றால் பிராப்தியே பிராப்தி தான். எப்படி உழைப்பு அன்பில் மாறிவிடுகிறதோ அதே போன்று சேவை பிராப்தியில் மாறிவிடுகிறது. அந்த மாதிரி சேவைக்கான ஊக்கம் இருக்கிறதா? யார் எந்த அளவு செய்கிறாரோ அதற்கான பல மடங்கு பலன் சேமிட்டாகி விடுகிறது. ஆப்பிரிக்காவில் பாவனையுள்ள சகயோகி ஆத்மாக்கள் இருக்கிறார்கள். சேவையில் சகயோகம் கொடுப்பதற்கான ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு இரத்தினமும் மிகவும் மதிப்புள்ளது மற்றும் செல்லமானது.

தந்தையைப் பார் இந்த மந்திரத்தை எப்பொழுதும் எதிரில் வைத்துக் கொண்டே முன்னேறும் கலையில் சென்று கொண்டே இருங்கள். எப்பொழுது தந்தையை பார்ப்பது மற்றும் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்பது இருக்கிறது என்றால் மேலே பறந்து கொண்டே இருப்பீர்கள், எப்பொழுது ஆத்மாவை பின்பற்றுகிறீர்களோ அப்போது கீழே வந்து விடுகிறீர்கள். ஒருபொழுதும் ஆத்மாவைப் பார்க்காதீர்கள். ஏனென்றால், ஆத்மாக்கள் அனைவரும் முயற்சி

செய்பவர்கள். முயற்சி செய்பவர்களைப் பின்பற்றி நடந்தீர்கள் என்றால் முயற்சி செய்பவர்களில் நல்லவைகளும் இருக்கும். கூடவே கொஞ்சம் குறையும் இருக்கும், சம்பன்னமாக இல்லை. எனவே தந்தையைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறின்றி, சகோதரன் அல்லது சகோதரியை பின்பற்ற வேண்டும் என்பது இல்லை. எப்படி தந்தை ஒரே சீரான நிலையில் இருக்கிறார் என்றால் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்களும் ஒரே சீரான நிலை உள்ளவர்களாக ஆகி விடுவார்கள்.

**பாரதவாசி** குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா கூறினார் -வெளிநாட்டினருக்கு அவர்களுக்கென்ற பாக்கியம் மற்றும் பாரதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுக்கென்ற பாக்கியம் இருக்கிறது. பாரதத்தைச் சேர்ந்தவர்கள் பாக்கியசாலியாக ஆகவில்லை என்றால் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் எப்படி வருவார்கள்? வெளிநாட்டின் மகிமை கடைசியில் வந்தாலும் வேகமாக செல்லும் கணக்குப்படி இருக்கிறது ஆனால் யார் தொடக்கத்திலேயே இருக்கிறார்களோ அவர்கள் தொடக்கத்தில் தான் இருப்பார்கள். பாரதத்தைச் சேர்ந்தவர்கள் பகவானை தன்னுடையவராக ஆக்கினார்கள், மேலும் அவர்களுக்கு ஏற்கனவே தயாரான பகவான் கிடைத்தார். ஒருவேளை பாரதத்தைச் சேர்ந்தவர்கள் தந்தையைத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் அவர்களுக்கு யார் அறிமுகம் கொடுப்பார்கள். தந்தையை வெளிப்படுத்துவதற்கு பொறுப்பாளராக இருந்தது முதலில் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் தான். ரகசியமாக பிரத்யக்ஷத்தை முதலில் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் பிறகு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எப்படி கடை திறக்கிறார்கள் முதலில் பாதை ஓரத்தில் போடுவார்கள். பிறகு வளர்ச்சி அடைந்து அடைந்து பெரிய கடை ஆகி விடுகிறது. அந்த மாதிரி பாரதத்தைச் சேர்ந்தவர்கள் முதலில் மிகக்கடுமையாக உழைத்திருக்கிறார்கள், கடை திறந்தார்கள் அதனால் தான் நீங்கள் அனைவரும் வந்தீர்கள் இல்லையா? எந்த அளவு பாரதத்தைச் சேர்ந்தவர்கள் சகித்துக் கொண்டார்களோ அந்த அளவு வெளிநாட்டினர் எங்கே சகித்துக் கொண்டார்கள். எனவே பாரதவாசி குழந்தைகள் இதில் நம்பர் ஒன். யார் சகித்துக் கொள்வதில் நம்பர் ஒன் ஆக இருக்கிறார்களோ அவர்களுக்கு ஆஸ்தியும் அந்த கணக்குப்படி கிடைக்கிறது. நீங்கள் நடைமுறையில் சரித்திரத்தை உருவாக்குபவர்கள். மேலும் அவர்கள் கேட்பவர்கள். நாங்கள் எங்கள் கண்கள் மூலமாக பிரம்மாவில் சிவ தந்தையை பார்த்தோம் என்று கூறுவீர்கள். இது தான் விசேஷம் ஆகும். பார்க்கப்போனால் அனைவரும் ஒருவர் மற்றவரை விட முன்னால் இருக்கிறார்கள். ஏனென்றால் நாடகத்தின் அனுசாரம் சங்கமயுகத்திற்கு அந்த மாதிரி வரதானம் கிடைத்திருக்கிறது. அதன் காரணமாக ஒவ்வொருவரிடமும் ஏதாவது விசேஷம் இருக்கிறது, அது அனைத்தையும் விட விசேஷமாக இருக்கிறது.

# 1981 அவ்யக்த முரளி

இப்பொழுது போலி (தாதி) யின் விசேஷத்தைப் பாருங்கள். மேலும் சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் விசேஷத்தைப் பாருங்கள். ஒருவேளை டோலி (சமையல் பொறுப்பு தாதி) இல்லை என்றால் ஒரு காரியமும் நடக்காது. நல்லது. இவரும் ஹோலி விளையாடுகிறார். இன்றோ கொண்டாட்டம் தான். இவரும் பீச்சாங்குழலால் வர்ணம் தெளிக்கிறார்.

**வரதானம்: சங்கமயுத்தில் ஒன்றிற்கு நூறு மடங்கு பிரத்யக்ஷ பலனை அடையக்கூடிய பலமடங்கு பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!**

சங்கமயுகமே ஒன்றிற்கு நூறு மடங்கு பிரத்பக்ஷ பலனைக் கொடுக்கக்கூடியது. ஒரே ஒரு தடவை நான் தந்தையின் குழந்தை, நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற எண்ணத்தை வைத்தீர்கள் என்றால், மாயாவை வென்றவர் ஆவதற்கான, வெற்றி அடைபவர் ஆவதற்கான போதை அனுபவம் ஆகும். உயர்ந்த எண்ணத்தை வைக்க வேண்டும், இது தான் விதை மேலும் அதன் மிகப் பெரிய பழமானது சுயம் பரமாத்மா தந்தையே சாகார மனித ரூபத்தில் சந்திக்க வருகிறார். இந்த பழத்தில் அனைத்து பழங்களும் வந்து விடுகிறது.

**சுலோகன்: யாருடைய முகம் மற்றும் நடத்தையின் மூலம் தூய்மையின் தனித்தன்மை மற்றும் இராஜ குல கௌரவ தன்மை அனுபவம் ஆகிறதோ அவரே உண்மையான பிராமணர் ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முதல் வகுப்பு அல்லது குளிர்சாதன வகுப்பில் செல்வதற்கான சுலபமான வழி!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் முகத்தில் விசேஷமாக ஒரு விஷயத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அது எந்த விஷயம்? ஒவ்வொருவரின் முகத்தில் தூய்மையின் அழகு எந்த அளவு வந்திருக்கிறது. அதாவது மகான்தன்மையின் ஜொலிப்பு எந்த அளவு தென்படுகிறது. எப்படி உடலின் அழகில் நெற்றி, கண்கள், முகம் ஆகிய அனைத்தையும் பார்க்கிறார்கள். அதே போல் தூய்மையின் அழகில் பாப்தாதா நெற்றியில் எண்ணத்தின் ரேகைகளை அதாவது நினைவின் சக்தி, கண்களில் ஆத்மீக உள்உ ணர்ளின் பார்வை, வாயில் மகான் ஆத்மா ஆவதின் குஷியின் புன்முறுவல், வார்த்தைகளில் எப்பொழுதும் மகான் ஆகி மகான் ஆக்குவதற்கான வார்த்தைகள், தலைமேல் தூய்மையின் அடையாளமாக ஒளியின் கிரீடம் -அந்த மாதிரி ஒவ்வொருவரின் பிரகாசமாக இருக்கும் முகத்தைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்று வதனத்தில் தூய்மையின் போட்டி இருந்தது. இன்று அனைவரின் வரிசை எண் எதுவாக இருக்கும். இதைத் தெரிந்திருக்கிறீர்களா? முதலாவது, இரண்டாவது, மூன்றாவது பரிசு உள்ளது. இதில் உங்கள் அனைவருக்கும் எந்தப் பரிசு கிடைத்திருக்கிறது?

யாருடைய மேற்கூறிய; ஐந்து விஷயங்களுமே முழுமையாக இருக்குமோ அவர்களே முதல் பரிசிற்கு உரியவர் ஆகிறார். ஒன்று ஒளியின் கிரீடம், அந்த கிரீடத்திலும் கூட யாருடைய கிரீடம் முழுமையான வட்ட வடிவத்தில் இருக்கிறதோ. எப்படி சந்திரனுக்கும் முழுமையான வட்ட வடிவம் இருக்கும். சில நாட்களில் அரைகுறையாக இருக்கும். அதே போல் சிலருணடயது பாதியாக இருந்தது. சிலருடையது முழுமையாக இருந்தது. மேலும் சிலருடையது ஒரு கோடு அளவில் இருந்தது. அதை பெயரளவில் இருந்தது என்று கூறுவோம். அப்படி முதல் வரிசை எண் அதாவது முதல் பரிசு பெறுபவர் முழுமையான ஒளியின் கிரீடம் அணிந்தவராக இருப்பார்.

இரண்டாவது எப்படி நெற்றியில் திலகம் மின்னுகிறது. அதே போல் சகோதரன் - சகோதரன் என்ற நினைவு அதாவது ஆத்மீக நினைவின் அடையாளம் நெற்றியின் நடுவில் புள்ளி மின்னிக் கொண்டிருந்தது. மூன்றாவது கண்களில் ஆன்மீகத்தின் ஜொலிப்பு, ஆன்மீகப் பார்வை, உடலை பார்த்தும் பார்க்காமல் ஆத்மாக்களைப் பார்க்கும் பயிற்சியின் ஜொலிப்பு இருந்தது. ஆன்மீக அன்பின் பொலிவு இருந்தது. உதடுகளில் பிரபுவிடமிருந்து கிடைத்த பிராட்தி. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் மகான் சந்திப்பின் மற்றும் அனைத்து பிராப்திகளின் புன்சிரிப்பு இருந்தது. முகத்தில் தாய் தந்தை மற்றும் உயர்ந்த பரிவாரத்திலிருந்து விடுபட்டுச் சென்று ஒரு கல்பத்திற்கு பிறகு சந்திக்கும் சுகத்தால் சிவந்திருந்தது. தந்தையும் சிவப்பு (லால்), ஆத்மாவும் சிவப்பு, வீடும் சிவப்பு மற்றும் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள் என்றால் செல்லக் குழந்தையாகி விட்டீர்கள் (லால்). அப்படி எத்தனை விதமான சிவப்புக்கள் ஆகி விட்டன. அப்படி ஐந்து ரேகைகளும் சம்பூர்ண சொரூபமுடையவர்கள் முதல் பரிசில் இருக்கிறார்கள். இப்பொழுது இந்த அடிப்படையில் யோசித்துப் பாருங்கள் முதல் பரிசு 100 சதவிகிதம் 5 ரேகைகளிலுமே இருக்கிறது. இரண்டாவது பரிசு பெறுபவர்கள் 70 சதவிகிதம் மற்றும் மூன்றாவது பரிசு பெறுபவர்கள் 30 சதவிகிதம். நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்று இப்பொழுது கூறுங்கள், இரண்டாவது பரிசு பெறுபவர்களிலும் வரிசைக்கிரமமானவர்கள் பெரும்பான்மையோர் இருந்தார்கள். முதல் மற்றும் மூன்றாவது பரிசில் குறைவாக இருந்தார்கள். 30-லிருந்து 50-க்குள் பெரும்பான்மையோர் இருந்தனர். அவரையும் இரண்டாவது என்று கூறுவோம் ஆனால் பின்னால் இருக்கிறார். முதல் வகுப்பைச் சேர்ந்தவர்களிலும் இரண்டு விதமானவர்கள் இருந்தார்கள். ஒன்று பிறந்ததிலிருந்தே தூய்மையின் அழகின் ஐந்து அடையாளங்களையும் பிறப்பு உரிமையின் ரூபத்தில் பெற்றிருந்தார்கள். பிராப்தி செய்ய வேண்டியதாக இருக்கவில்லை, ஆனால் பிராப்தி செய்திருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் தூய்மையின்மையின் ஞானத்தின் ரேகைகள் இருக்கவில்லை. இயற்கையான சம்ஸ்காரம், இயற்கையான வாழ்க்கை. சம்ஸ்காரத்தை மாற்றுவதற்கான உழைப்பு தேவையில்லை எண்ண அளவில் கூட கனவில் கூட, தூய்மையின்மையின் காக்குதல் இல்லை அதாவது தாய்மையின் அழகில் சிறிதளவு நுண்ணிய கரை கூட இல்லை. இரண்டாவது, பிறந்ததிலிருந்தே ஞானத்தின் ஒளி மற்றும் சக்தியின் ஆதாரத்தில் எப்பொழுதும் தூய்மையின் அழகு உடையவர்கள். வித்தியாசம் என்ன வென்றால், முதலில் கூறியவர்களின் கடைசி ஜென்மத்தில் முந்தைய ஜென்மங்களின் சம்ஸ்காரங்களின் கரையும் இருக்கவில்லை. எனவே முந்தைய ஜென்மங்களின் சம்ஸ்காரங்களை அழிப்பதற்கான உழைப்பின் ரேகை இல்லை. முந்தைய ஜென்மத்தின் சுமை

## 1981 அவ்யக்த முரளி

ஆத்மாவில் இருக்கிறது என்ற ஞானம் இருக்கிறது ஆனால் 84-வது ஜென்மத்திற்கு முந்தைய ஜென்மத்தின் நாடகத்தின் அனுசாரம் தூய்மையின்மையின் எண்ணத்தின் அனுபவம் இல்லை. எனவே இதுவும் லிஃப்ட்டின் கிஃப்ட்டாக (பரிசாக) கிடைத்திருக்கிறது எனவே இயற்கையான சம்ஸ்காரத்தின் ரூபத்தில் சகஜ மகான் ஆத்மா. எப்படி சாஜ யோகி அதே போன்று சகஜ தூய்மையான ஆத்மா. பி ஹோலி அதாவது தூய்மை ஆகுங்கள் என்றல்ல, அவர் தூய்மையாகவே தான் இருக்கிறார். அவர்களுக்காக இந்த என்ற சுலோகன் இல்லை. அவர்கள் ஏற்கனவே தூய்மையில் தயாராகி வந்திருப்பவர்கள். முதல் பரிசிலும் நம்பர் ஒன் அதாவது குளிர்சாதன வகுப்பைச் சேர்ந்தவர் என்று புரிந்து கொள்ளுங்கள், பிறகு முதல் வகுப்பு, அவர்களிடம் சிறிதளவு வித்தியாசம் இருக்கும். இயற்கையான சம்ஸ்காரம் இல்லை. சம்ஸ்காரத்தை உருவாக்க வேண்டியதாக இருக்கும். அதாவது மர்ஜீவா ஜென்மத்தின் (உடலிலிருந்து (உணர்வால்) இறந்து மறுபிறவியில் இருப்பவர்) தொடக்கத்தில் ஞானத்தின் ஆதாரத்தில் கவனம் வைக்க வேண்டியதாக இருந்தது. முயற்சி செய்வதின் ரேகைகள் சிறிதளவு ஜென்மத்தின் தொடக்கத்தில் தென்படுகிறது, இப்பொழுதில்லை. முதலில் ஆதிகாலத்தின் விஷயம், குளிர்சாதன வகுப்பு என்றால் ஏற்கனவே தயாராகி வந்தவர்கள் மற்றும் முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தொடக்கத்தில் தன்னை உருவாக்கினார்கள். அதிலேயும் முயற்சியும் சகஜமாக செய்தார்கள். சகஜ முயற்சி, தீவிர முயற்சி, சக்திசாலியான முயற்சி ஆனால் முயற்சியின் ரேகை என்பது இருக்கத்தான் செய்தது. இது தூய்மையின் விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறோம். தூய்மையின் பாடத்தில் அவர்கள் ஏற்கனவே தயாராகி வந்தவர்கள். மேலும் இவர்கள் அதற்கான முயற்சி செய்தவர்கள். மற்றபடி முழுமையான அனைத்து பாடங்களின் விஷயம் வேறு. அது ஒரு பாடத்தின் விஷயம். அவர்கள் 8 இரத்தினங்களின் மாலை மற்றும் இவர்கள் 100-ல் வரும் முதல் எண். மூன்றாம் வகுப்பை இந்திய அரசாங்கமும் அகற்றிவிட்டது. மூன்றாம் வகுப்பைச் சேர்ந்தவர்களோ சத்யுகத்தின் முதலில் வரும் பெயர் பெற்ற பிரஜைகள். இவர்கள் இராஜ குடும்பத்தின் சம்மந்தத்தில் எப்பொழுதும் இருப்பார்கள். மாளிகையின் உள்ளே இருக்கும் பிரஜைகளாக இருட்டார்கள். மாளிகைக்கு வெளியே இருப்பவர்கள் அல்ல. உள்ளே இருப்பவர்களின் தொடர்பு மிகவும் நெருக்கமானதாக இருக்கும், ஆனால் பதவியில் பின்னுக்கு இருப்பார்கள். லட்சியமே குளிர்சாதன வகுப்பிற்கானது தான் இல்லையா? முதல் வகுப்பிற்கான வித்தியாசம் மூலம் இரண்டாம் வகுப்பைப் பற்றி புரிந்து கொண்டிருப்பீர்கள். இரண்டாம் வகுப்பிலிருந்து முதல் வகுப்பு மற்றும் குளிர்சாதன வகுப்பிற்குச் செல்வதற்கு சகஜமான சாதனம் இருக்கிறது. ஒரே ஒரு எண்ணத்திற்கான சாதனம் மட்டும் தான். அந்த ஒரு எண்ணம் 'நான் இயற்கையாகவே தூய்மையான

ஆத்மாவாகவே இருக்கிறேன். இயற்கையான சொரூபம் தூய்மையற்றதாக இருக்கவில்லை தான் இல்லையா? அனாதி (பரந்தாமம் மற்றும் ஆதி (சத்யுகம்) இரண்டு காலங்களில் உண்மையான சொரூபம் தூய்மையாக இருந்தது. தூய்மையின்மையோ போலியானது, உண்மை கிடையாது. சூத்திரர்களால் கொடுக்கப்பட்டது. சூத்திரர்களின் பொருளை பிராமணர்கள் எப்படி உபயோகிக்க முடியும்? எனவே நான் அனாதி, ஆதி உண்மையான ரூபத்தில் தூய்மையான ஆத்மா ஆவேன் என்ற இந்த எண்ணத்தை மட்டும் வையுங்கள். யாரையாவது பார்த்தீர்கள் என்றாலும் கூட அவரையும் ஆதி, அனாதி உண்மையான ரூபத்தில் பாருங்கள். தன்னுடையதையும் மற்றவர்களுடையதையும் அந்த மாதிரி பாருங்கள். உண்மையை உணருங்கள். சிகப்புக் கண்ணாடியை அணிந்து கொள்ளுங்கள். இந்தக் கண்ணாடி அல்ல. நினைவு என்ற கண்ணாடி, நானும் சிகப்பு, அதுவும் சிகப்பு, தந்தையும் சிகப்பு அப்படி சிகப்பு கண்ணாடி ஆகி விட்டது இல்லையா? பிறகு செங்கோட்டையின் மேல் கொடியை பறக்க விடுவோம். இப்பொழுது மைதானம் வரை அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள். இப்பொழுது அரசாங்கத்தின் பார்வை வரை வந்திருக்கிறீர்கள். பிறகு பார்வைக்குப் பிறகு இதயம் வரை வந்து விடுவீர்கள். அனைவரின் இதயத்திலும் இருக்கிறது என்றால் இது தான் என்ற வார்த்தைகள் வெளியாகும். இப்பொழுது இது மிகப் பெரிய இயக்கம். பெரிய காரியம் செய்கிறார்கள். இதுவொன்றும் சாதாரண இயக்கம் அல்ல. பெயர் பெற்ற பட்டியலில் இருக்கிறது என்ற விஷயங்கள் பரவி இருக்கிறது. இப்பொழுது உங்களுடைய உழைப்பைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிறகு பரமாத்மாவின் மீது இருக்கும் உங்களுடைய அன்பை மகிமை செய்வார்கள். இதையும் நன்றாகச் செய்தார்கள். பாப்தாதா குஷி அடைகிறார்கள். உலகின் எதிரில் இவ்வாறு நீங்கள் கூட்டாக நாம் அனைவரும் ஒன்றானவர்கள் என்பதை அதிசயமான படத்தில் வைத்திருக்கிறீர்கள், இதனுடைய கொடியையும் பறக்க விட்டிருக்கிறீர்கள். மனிதர்கள் இந்த பிரம்மாகுமாரிகளின் இயக்கம் இல்லாமல் போய்விடும். எவ்வளவு காலம் தான் இயங்க முடியும் என்று நினைத்திருந்தார்கள் ஆனால் உங்கள் ஒற்றுமையின் வரைபடம் அனேக சாதனங்கள் மூலமாக அதாவது வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாட்கள், தலைவர்கள் இவர்கள் அனைவரின் தொடர்பு மூலமாக பிரம்மாகுமாரிகள் முன்னேறும் கலையில் அமரர்களாக இருக்கிறீர்கள், போய் விடுபவர்கள் அல்ல ஆனால் அனைவரையும் அழைத்துச் செல்பவர்கள் என்ற விஷயம் பரவியது. பலபேர் இதற்காக தன்னுடைய உடல், மனம், செல்வத்தை ஈடுபடுத்தினார்கள். உலகின் மூலை மூலைகளின் உள்ள பிராமணர்கள் தமது பாவனையின் அஸ்திவாரம் போடும் நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்டது. தன்னுடைய இராஜ்யத்தின் வேரை உறுதியாக்கினீர்கள். எனவே

கொஞ்சம் பழம் உருவானது. இன்னும் உருவாகும். அனைத்து பழங்களும் ஒரே நேரத்தில் உருவாகாது. புகார்களிலிருந்து தப்பித்துக் கொண்டீர்கள். வெளிப்படையான மேடையில் எங்கே வருகிறீர்கள் என்று யாரும் உங்கள் மீது புகார் கூற முடியாது. செங்கோட்டை வரை சென்றடைந்தீர்கள் என்றால் புகார்கள் முடிவடைந்தது, அவர்களுடைய பலஹீனம் இருந்தது. உங்கள் மேல் உள்ள புகாராக இருக்கவில்லை. எனவே வெற்றி அடைந்தவராக இருக்கிறீர்கள். மேலும் எப்பொழுதுமே இருப்பீர்கள். இன்னும் வரும் நாட்களில் வேறு புதுத் திட்டம் உருவாகும். செலவைப் பற்றி யோசிக்காதீர்கள். என்ன செலவு செய்திருக்கிறீர்கள். 10-பைசா தான் கொடுத்திருக்கிறீர்கள். மனிதர்களோ பொழுதுபோக்கிற்காக குரூப்பாக நிகழ்ச்சி செய்வதற்கான செலவிற்காக எவ்வளவு சேமிக்கிறார்கள் மற்றும் செலவு செய்கிறார்கள். உங்கள் அனைவருக்குமோ 10-பைசா அல்லது 10-ரூபாயில் வேலை முடிந்து விட்டது. இவ்வளவு பெரிய பரிவாரத்தைப் பார்ப்பது மற்றும் சந்திப்பது, இதுவம் அன்பின் நிரூபணத்தை பார்த்தோம். ஒற்றுமையின் நறுமணம், ஊக்கம் உற்சாகம் மற்றும் கண்டுபிடிப்பின் நறுமணம் நாலாபுறங்களிலும் நன்றாகப் பரவியது. பாப்தாதாவின் வதனம் வரை வந்து சேர்ந்தது. இப்பொழுது ஒரே ஒரு நறுமணம் மட்டும் மீதம் இருக்கிறது. அது எது? பகலானின் குழந்தைகள் என்ற இந்த நறுமணம் இன்னும் மீதம் இருக்கிறது. மகான் ஆத்மாக்கள் என்ற இந்த நிலை வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். ஆத்மீக அணு குண்டை போட்டிருக்கிறீர்கள் ஆனால் பரமாத்மா குண்டை போடவில்லை. தந்தை வந்திருக்கிறார், இவர்கள் தந்தையின் குழந்தைகள் மற்றும் துணைவர்கள் என்ற இந்தக் கடைசி கொடியைப் பறக்க விட வேண்டும். சொற்பொழிவுகள் மூலமாக காட்சி அரங்கங்களில் ஒலி பெருக்கி மூலமாகவோ செய்தி கொடுத்திருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது அனைவரின் இதயம் வரை செய்தி சென்றடைய வேண்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்தத? அந்த நாளும் வந்து விடும். வெளிநாட்டிலிருந்து அந்த மாதிரி விசேஷ நபரை அழைத்து வருவார்கள் என்று கூறியிருந்தோம் இல்லையா? அந்த சலசலப்பு ஏற்படும். அனைவரும் முதல் வகுப்பு தூய்மையின் அழகில் வந்து விட வேண்டும், இரண்டாம் வகுப்பும் அகன்று விட வேண்டும். அந்த நாளும் வெகுதொலைவில் இல்லை. இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவர்களை அழகு நிறைந்தலர்களாக ஆக்குவதற்காக கடும் உழைப்பு என்ற அலங்காரம் செய்ய வேண்டும். இப்பொழுது இதையும் விட்டு விடுங்கள். இயற்கையான அழகில் வந்து விடுங்கள். எப்படி தேவதைகளின் சம்ஸ்காரத்தில் தூய்மை யின்மை என்பது தெரியாமல் இருந்தது. அதையே இயற்கையான சம்ஸ்காரமாக ஆக்கினீர்கள் என்றால் உலகின் எதிரில் தூய்மையின் அழகின்

ஆன்மீகக் கவர்ச்சியின் சொரூபம் ஆகி விடும். இன்று என்ன போட்டி இருந்தது என்று புரிந்து கொண்டீர்களா?

வெளிநாட்டு குரூப்பை சேர்ந்தவர்கள் அதிகமானவர்கள் இங்கிருந்து திரும்பிச் செல்பவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் செல்வது என்றால் அனேகர்களை அழைத்து வருவது. ஒவ்வொரு நட்சத்திரமும் தன்னுடைய உலகை உருவாக்குவார்கள். இது சைத்தன்ய நட்சத்திரங்களின் உலகம். எனவே அறிவியலைச் சேர்ந்தவர்கள் உங்களுடைய நினைவாக நட்சத்திரங்களின் உலகைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களையும் உங்களுடைய உலகத்தில் அழைத்து போருங்கள். பிறகு கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவார்கள். அவர்களுக்கு நட்சத்திரங்களின் உலகம் எது என்ற அனுபவம் செய்வியுங்கள், இன்று பாரதத்தின் குழந்தைகளுடன் வெளி நாட்டினருக்கும் விசேஷமாக ஞானத்தின் பிக்னிக் உபசாரம் செய்கிறார்கள். யார் செல்பவர்களாக இருப்பார்களோ அவர்களுக்கு பிக்னிக் கொடுப்பார்கள் இல்லையா? அப்படி பாப்தாதாவும் பார்ட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இது ஞானத்தின் பார்ட்டி ஆகும்.

அந்த மாதிரி தூய்மையின் அழகில் நம்பர் ஒன், தூய்மையின்மையின் மீது எப்பொழுதும் வெற்றி யடையும், தூய்மையை இயற்கையான சம்ஸ்காரம் ஆக்கக்கூடிய, அனைத்து சம்மந்தத்தின் சுகத்தை ஒரு தந்தையிடமிருந்து எப்பொழுதும் பெறக்கூடிய, ஒருவரில் முழு உலகத்தையும் பார்க்கக்கூடிய, அந்த மாதிரியான நிரந்தர பிரியதர்ஷினிகளுக்கு பிரியதர்ஷன் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அனைவரும் மகாயக்ஞத்தில் மிக நன்றாக உழைத்திருக்கிறீர்கள். உழைப்பின் பலன் கிடைத்தே விடுகிறது. செய்தியைப் பரப்புவதில் செலவோ செய்யத்தான் வேண்டியதிருக்கிறது. ஏதாவது ஒரு புதுக் கண்டுபிடிப்பு செய்வதில் செலவு ஏற்படுகிறது ஆனால் அதனுடைய வெற்றி பிற்காலத்திலும் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சில நேரம் பெயர் புகழடைகிறது, சில நேரம் செய்தி பரவுகிறது, சில நேரம் பிராமண குடும்பம் வளர்ச்சி அடைகிறது. மகாயக்ஞத்தின் காரணமாக அரசாங்கம் மூலமாக என்ன சகயோகம் கிடைத்ததோ அதுவும் அவர்களுடைய பதிவேட்டில் நிரந்தரமாக வந்து விட்டது இல்லையா? எப்படி ரயில் பயணச்சலுகை கிடைத்தது. இதுவும் பதிவேட்டில் வந்து விட்டது. அந்த மாதிரி குப்தமாக பல காரியங்கள் நடக்கும். ஜனாதிபதி வரையிலும் இத்தனை சேவை

நிலையங்களிலிருந்து இத்தனை பேர்கள் மிக ஆர்வத்தோடு வந்திருக்கிறார்கள் என்ற செய்தியும் சென்றது தான் இல்லையா? இதுவும் பிரத்யக்ஷ பலன் ஆகும். யாரெல்லாம் சேவை செய்திருக்கிறார்களோ, பாப்தாதா அவர்களுடைய ரிசல்ட்டின் மேல் திருப்தியாக இருக்கிறார்கள். எனவே கடுமையாக உழைத்ததற்கு வாழ்த்துக்கள் !

**சேவாதாரி சகோதர சகோதரிகளுடன்** ஒவ்வொருவரும் தன்னை கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலர் என்று அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாவாக நினைக்கிறீர்களா? சேவைக்கான லாட்டரி கிடைப்பதும் பாக்கியத்தின் ரேகை ஆகும். இந்த சேவை சேவையில்லை ஆனால் பிரத்யக்ஷ பலன் ஆகும். ஒன்று புத்தம் புதிய பழமாக இருக்கும். இன்னொன்று காய்ந்த பழமாக இருக்கும். இது எந்த மாதிரியான பழம்? இது பிரத்யக்ஷ பாக்கியத்தின் பழமாகும். இந்த நேரம் செய்யுங்கள். இந்த நேரமே அருந்துங்கள். எதிர்காலத்திற்காக சேமிப்பு ஆகத்தான் ஆகிறது ஆனால் எதிர்காலத்தையும் விட முதலில் பிரத்யக்ஷ பலன் தற்போது கிடைக்கிறது. வாயுமண்டலத்தின் சகயோகத்தின் குடைநிழல் எவ்வளவு சுலபமாக உயர்ந்ததாக ஆக்குகிறது. கூடலே பழைய உலகத்தின் சப்தம் மற்றும் பார்வையிலிருந்து தூரமாகி விடுகிறீர்கள். வேலை செய்வதற்குப் பதிலாக, யக்ஞ சேவை வீட்டின் சேவை ஆகி விடுகிறது. வேலையின் கூடையும் இறக்கி வைக்கப்பட்டு விடுகிறது தான் இல்லையா? சேவையின் கிரீடம் வைக்கப்பட்டு விடுகிறது. வேலையின் கூடையையோ உள்ளப்பூர்வமாக இன்றி நிர்பந்தத்தில் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். டைரக்ஷன் இருக்கிறது என்றால் செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்படி இந்த சேவை மூலம் எவ்வளவு லாபம் ஏற்பட்டு விடுகிறது? எவ்வளவு உயர்ந்த தொடர்பு கிடைத்து விடுகிறது. கடலின் கரை மற்றும் எப்பொழுதும் ஞான சர்ச்சை, தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை, இது P.தவி தான் இல்லையா? அப்படி எவ்வளவு பாக்கியம். மாதர்கள் என்ன நினைக்கிறீர்கள்? தயாரான பாக்கியம் உள்ளங்கையில் வந்து விடுகிறது எப்படி கிருஷ்ணனின் படத்தில் உள்ளங்கையில் சொர்க்கம் இருக்கிறது என்றால் சங்கமயுகத்தில் பாக்கியத்தின் உருண்டை கையில் இருக்கிறது. அந்த அளவு பாக்கியம் நிறைந்தவர்கள் நீங்கள். இங்கு சேவை இப்பொழுது சாதாரணமாகத் தென்படுகிறது ஆனால் இது சாதாரணம் இல்லை. இது அதிசயமான ரேகை. எவ்வளவு நேரம் இந்த லாட்டரி கிடைக்கிறதோ, இதே லாட்டரியை நீங்கள் அழியாததாக ஆக்க முடியும். எங்கே இருந்தாலும் இங்கே உள்ள நிலை மாதிரி உருவாக்க முடிய வேண்டும். அந்த அளவு பயிற்சி உள்ளவர் ஆகி விடுங்கள். இங்கே சகஜயோகியின் அனுபவம் ஆகிறது தான் இல்லையா? கடும் உழைப்பு

முடிவடைந்து விடுகிறது. அப்படி இதே சகஜயோகத்தின் அனுபவத்தை பரம்பரை பரம்பரையாக கொண்டு வந்து கொண்டே இருங்கள். சங்கமயுகத்தில் பரம்பரை இருக்கிறது. இந்த அனுபவத்தை மதுபன்னில் விட்டுச் செல்லாதீர்கள். உடன் எடுத்துச் செல்லுங்கள். மதுபன்னில் இருந்து கீழே இறங்கியவுடன் மீட்டரும் கீழே இறங்கி விட்டது என்று பலர் கூறுகிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். இதே பயிற்சியின் லாபத்தை எடுங்கள். சேவை செய்து கொண்டும் சகஜயோகியின் நிலை மேல் கவனம் வையுங்கள். உடலால் செய்யும் சேவையில் மட்டும் பிஸியாகி விடுங்கள் என்று அப்படி வேண்டாம். உடலின் சேவையின் கூடவே மனநிலையும் எப்பொழுதும் உயர்ந்ததாக இருக்கட்டும். அப்பொழுது தான் சேவையின் லாபம் இருக்கிறது. சக்திகளும் நல்ல அன்பானவர்கள், களைப்பற்றவர்கள். கைகளில் வலி இல்லையே? பாப்தாதா அன்புடன் கால்கள் மற்றும் கைகளைப் பிடித்து விடுகிறார்கள். அன்பு தான் காலை பிடித்து விடுவது. நல்லது. மதுபன்னில் சேவையின் விதை போட்டீர்கள் என்றால் நிரந்தரமாக உயர்ந்த கர்மங்களின் பலனை விதைத்தீர்கள். நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு செயலையும் செய்து கொண்டே தாமரை மலர் இருக்கையில் அமர்ந்திருக்கக்கூடிய சகஜ மற்றும் நிரந்தர யோகி ஆகுக!**

நிரந்தர யோக சொரூபமாக இருப்பதற்காக தாமரை மலரின் ஆசனத்தில் எப்பொழுதும் அமர்ந்திருங்கள் ஆனால் யார் லேசாக இருக்கிறாரோ அவர் தான் தாமரை மலரில் அமர முடியும். எந்தவிதமான சுமை அதாவது பந்தளம் இருக்க வேண்டாம். மனதின் எண்ணங்களின் சுமை, சம்ஸ்காரங்களின் சுமை, உலகின் அழியும் பொருள்களின் கவர்ச்சியின் சுமை, குடும்ப உறவினர்களின் பற்றுதலின் சுமை ஆகிய இந்த அனைத்து சுமைகளும் எப்பொழுது அகலுமோ அப்பொழுது தாமரை மலர் ஆசனத்தில் அமர்ந்து நிரந்தர யோகி ஆக

**சுலோகன்: சகித்துக் கொள்ளும் குணத்தை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் அசத்தியத்தின் ஆதாரத்தை எடுக்க வேண்டியதாக இருக்காது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகான் நிலையின் ஆதாரம் எண்ணம், சொல், செயலின் சோதனை!

இன்று பாப்தாதா தன்னுடைய சரித்திர பூமி. காம பூமி, வரதான பூமி. மகான் தீர்த்த பூமி. மகான் யக்ஞ பூமியின் அனைத்து உடனிருப்பவர்களையும் சந்திப்பதற்காக வந்திருக்கிறார்கள். என்றால் மகாள் தூய்மையான பூமியில் வசிப்பவர்கள். இந்த பூமியில் வருபவர்களுக்குக் கூட மகத்தாள மதுபன் நிவாசி பங்கு இருக்கிறது என்றால், இங்கே வசிப்பவர்களுக்கு எவ்வளவு மகத்தான பங்கு இருக்கிறது என்று யோசித்து பாருங்கள். மகான் ஆத்மாக்களின் வசிக்குமிடமும் மகான் என்று தான் வர்ணிக்கப்படுகிறது. எப்பொழுது வருபவர்களும் தன்னை பாக்கியசாலி என்று அனுபவம் செய்கிறார்கள், அளேக அனுபவங்களைப் பெறுகிறார்கள் என்றால், இங்கே இருப்பவர்களின் அனுபலம் என்னவாக இருக்கும்! யார் ஞானக்கடலிலேயே இருக்கிறார்களோ அந்த மாதிரியான ஆத்மாக்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள். அந்த மாதிரி அனைத்து மதுபன் நிவாசிகள் தன்னை இந்த அளவு மகான் என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்படி உயர்ந்த ஸ்தானமாக இருக்கிறது அதே போல் மனநிலையும் உயர்ந்ததாக இருக்கிறதா? கீழேயோ வருவதில்லையே மதுபன் வாசிகளுக்கு எத்தனை விதமான லிஃப்ட்டின் கிஃப்ட் (பரிசு) இருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதாவது எத்தனை என்று எண்ணியிருக்கிறீர்களா அல்லது எண்ண முடியாத அளவு இருக்கிறதா? மதுபனின் மகிமையின் பாடலை அனைவரும் பாடுகிறார்கள் ஆனால் மதுபன் வாசி அந்த பாடலைப் பாடுகிறாரா? மதுபன் வாசிகளின் உருவத்தை தூர இடங்களில் இருப்பவர்களும் தன்னுடைய இதயத்தில் எவ்வளவு உயர்ந்த சித்திரமாக வரைகிறார்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? அந்த மாதிரி தன்னுடைய சித்திரத்தை சைத்தன்யத்தில் தயார் செய்திருக்கிறீர்களா? எப்படி ஸ்தூல மலை இருக்கிறதோ அதே போன்று உயர்ந்த நிலையின் மலையாக இருக்கிறீர்களா? கீழே வருவதற்கு அவசியம் இருக்கிறதா? மதுபனிற்கு இரண்டு கோடுகள் இருக்கின்றன. ஒன்றோ மதுபன் நிவாசி மதுபன்னின் கோட்டிற்கு உள்ளே இருக்கிறார்கள். இன்னொன்று எப்பொழுதும் ஸ்ரீமத்தின் கோட்டிற்கு உள்ளே இருக்கிறார்கள். அப்படி இரண்டு கோடுகளுக்கு உள்ளே இருக்கிறீர்கள். இரண்டு கோடுகளுக்கு உள்ளே

இருப்பவர்களின் நிலை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும், இன்று பாப்தாதா தன்னுடைய பூமியில் வசிப்பவர்களை சந்திக்க வந்திருக்கிறார்கள். தந்தையின் சரித்திர பூமி தான் இல்லையா. அதனால் பூமியில் இருப்பவர்கள் மேல் விசேஷ அன்பு இருக்கும் இல்லையா?

பாவம் இன்றைய பக்தர்களோ பூமியின் மண்ணை நெற்றியில் இட்டுக்கொள்வதற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நீங்கள் எப்பொழுதும் அங்கே வசிக்கிறீர்கள் என்றால் நீங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். இதய சிம்மாசனதாரிகளோ அனைவரும் தான் ஆனால் மதுபனில் இருப்பவர்கள் அடுப்படியிலும் இருக்கிறார்கள் என்றால், இதயத்திலும் இருக்கிறார்கள். இரண்டு ஆகி விட்டது தான் இல்லையா? அனைவரையும் விட மதுபன் வாசிகளுக்கு சுடச்சுட பொருட்கள் உடனே கிடைக்கின்றன. அனைவரையும் விட நல்ல அனுபவங்கள் நிறைந்த பிக்னிக்கை மதுபன் வாசிகள் செய்கிறார்கள். அனைவரையும் விட அதிகமாக சந்திப்பு விழாவை மதுபன் வாசிகள் செய்கிறார்கள். அனைத்தையும் விட அதிகமாக நாலாபறங்களின் செய்திகளின் ஞானம் நிறைந்தவர்களாகவும் மதுபன் வாசிகள் இருக்கிறார்கள். மதுபன் வாசிகளை சந்திப்பதற்காக அனைவரும் வர வேண்டியதாக இருக்கிறது. அப்படி இந்த அளவு உயர்ந்த பாக்கியம் மற்றும் வர்ணனையை யார் செய்கிறார்? தந்தை குழந்தைகளின் பாக்கியத்தை வர்ணனை செய்கிறார். மதுபன் வாசிகளுக்கு எவ்வளவு உயர்ந்த பாக்கியம் இருக்கிறது. ஒருவேளை ஒரு விஷயத்தையாவது எப்பொழுதும் நினைவு வைத்தீர்கள் என்றால், ஒருபொழுதும் கீழே வர முடியாது. இப்பொழுது தந்தை எந்தளவு மதுபன் வாசிகளின் பாக்கியத்தின் மகிமை செய்தார், அந்த அளவு மகான் ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? பாருங்கள், மதுபனின் மகிமையைக் கேட்டு வெளிநாட்டினர் கூட மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் மனதில் நாமும் மதுபன் வாசி ஆகி விட வேண்டும் என்ற ஊக்கம் வருகிறது. இன்று வெளிநாட்டினர் கேலரியில் அமர்ந்திருக்கிறார்கள். கேலரியில் அமர்ந்து பார்ப்பதில் மகிழ்ச்சியாக இருக்கும். இந்த மாதிரி பார்ப்பவர்கள் சில நேரம் மதுபன் வாசிகள், சில நேரம் வெளிநாட்டினர். மதுபன் வாசிகளுக்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் வைத்து சக்திசாலி ஆக வேண்டும். அது எந்த விஷயம்? அந்த ஒரு விஷயத்தில் அனைத்தும் அடங்கியிருக்கிறது.

எந்த எண்ணத்தை வைத்தாலும், வார்த்தைகளைப் பேசினாலும், காரியம் செய்தாலும், உறவு மற்றும் தொடர்பில் வந்தாலும் இவை அனைத்தும் தந்தைக்குச் சமமானதாக இருக்கிறதா என்ற ஒரு சோதனை மட்டும் செய்யுங்கள். எது

என்னுடைய எண்ணமோ அது தந்தையின் எண்ணமாக இருக்கிறதா? என்னுடைய வார்த்தைகள் தந்தையின் வார்த்தைகளா? ஏனென்றால் நாங்கள் எதை தந்தையிடமிருந்து கேட்போமோ அதை மட்டும் தான் கூறுவோம் என்று அனைவரின் உறுதிமொழி தந்தையிடம் இருக்கிறது. தந்தை என்ன கூறுவாரோ அதை மட்டும் தான் கேட்போம். தந்தை நினைப்பதற்காக என்ன கொடுத்திருக்கிறாரோ அதை மட்டும் தான் நினைப்போம். இது தானே உங்கள் அனைவரின் உறுதிமொழி இல்லையா? எப்பொழுது இந்த உறுதிமொழி இருக்கிறது என்றால், இந்த சோதனையை மட்டும் செய்யுங்கள். இந்த சோதனை செய்வது கடினமோ இல்லை தான் இல்லையா? முதலில் சமமானதாக ஆக்குங்கள். பிறகு நடைமுறையில் கொண்டு வாருங்கள். முதலில் ஒவ்வொரு எண்ணமும் தந்தைக்குச் சமமானதாக இருக்கிறதா என்ற சோதனை செய்யுங்கள். யாரெல்லாம் துலாபர்யுகத்தின் இராஜாக்களாக, இராஜகுடும்பத்தினராக இருந்து சென்றிருக்கிறார்களோ அவர்கள் எந்தவொரு பொருளையும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால் முதலில் அவற்றின் சோதனை நடக்கும். பிறகு அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அப்படி துவாபரயுகத்து இராஜாக்கள் உங்கள் எதிரில் என்னவாக இருக்கிறார்கள். நீங்களோ இருந்தும் நல்ல இராஜா ஆகுபவர்கள் ஆனால் கீழே இறங்கி விட்ட இராஜாக்களுக்கும் இந்த அளவு உபசரணை நடக்கிறது. அப்படி உங்கள் அனைவரின் எண்ணமும் புத்திக்கான உணவாகும். வார்த்தைகளும் வாய்க்கான உணவே தான். காரியம் கைகள் மற்றும் கால்களுக்கான உணவாகும். எனவே அனைத்தையும் சோதனை செய்ய வேண்டும் இல்லையா? முதலில் செய்து விட்டு பின்னால் யோசிப்பது என்ற இதை என்னவென்று கூறுவது? இரட்டை புத்திசாலி.

இந்த ஒரு விஷயத்தை மட்டும் எப்பொழுதம் தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரமாக ஆக்கி விடுங்கள். ஸ்தூலமாகக் கூட சிலருடைய சம்ஸ்காரமாக அந்த மாதிரி பொருட்களை ஏற்றுக்கொள்ளாத சம்ஸ்காரமாக இருக்கும். முதலில் சோதனை செய்வார்கள், நன்கு பார்ட்டார்கள், பின்பு ஏற்றுக்கொள்வார்கள். நீங்களோ மகான் தூய்மையான ஆத்மாக்கள் மிக உயர்ந்த ஆத்மாக்கள். அந்த மாதிரி ஆத்மாக்கள் சோதனை செய்யாமல் எண்ணத்தை ஏற்றுக் கொள்கிறார்கள், வார்த்தைகளைப் பேசிவிடுகிறார்கள். காரியங்களை செய்து விடுகிறார்கள் என்றால் அது மகான் நிலையாக இருக்காது. அப்படி மதுபன் வாசிகளுக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் தான். சோதிக்கும் இயந்திரமோ இருக்கிறது தான் இல்லையா? பயிற்சி தான் இயந்திரம் ஆகும்

## 1981 அவ்யக்த முரளி

மதுபனைச் சேர்ந்தவர்களின் மகிமையையும் அதிகமானவர்கள் பாடுகிறார்கள். களைப்பற்ற தன்மையின் நறுமணம் வெகுகாணமாக வந்து கொண்டிருக்கிறது. எப்படி களைப்பற்ற தன்மையின் நறுமணம் வருகிறது. இந்த சான்றிதழோ கிடைத்து விட்டது. இதன் கூடவே வேறு என்ன சேர்த்துக்கொள்வீர்கள்? எப்படி களைப்பற்றவராக இருக்கிறீர்களோ அதே போலவே எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் இருப்பவர்களாக இருக்க வேண்டும். எப்பொழுது ரிசல்ட்டைப் பார்த்தாலும் அனைவரின் ரிசல்ட் ஒரே சீரான நிலையில் முதல் நம்டரில் இருக்க வேண்டும். இரண்டாவது, மூன்றாவது நம்பரே கூடாது. ஏனென்றால், மதுபன் அனைவருக்கும் லைட் மற்றும் மைட் (மார்க்கம் மற்றும் சக்தி) கொடுக்கக்கூடியது. ஒருவேளை லைட் ஹவுஸ், மைட் ஸ்வுஸே ஆடிக் கொண்டிருக்கிறது என்றால், மற்றவர்களது நிலைமை என்ன ஆகும்? மதுபன் வாசிகளின் அனைத்து வாயுமண்டலமும் மிக விரைவில் நாலாபுறங்களிலும் பரவுகிறது. இங்கே உள்ள சிறு விஷயம் கூட வெளியில் பெரிய ரூபத்தில் சென்றடைகிறது. ஏனென்றால் நீங்கள் பெரிய மனிதர்கள் இல்லையா? எப்பொழுதம் (தந்தையின்) குடைநிழலில் இருப்பவர்கள். சொர்க்கத்திலோ பிராப்தி கிடைக்கும் ஆனால் இங்கே கூட அதிகமான பிராப்திகள் கிடைக்கின்றன. மதுபன் வாசிகளுக்கு அனைத்தும் தயாராக கிடைக்கிறது, ஒரு வேலையை செய்தார் மற்ற அனைத்தும் தயாராக கிடைக்கிறது. எங்கிருந்து வருகிறது? எவ்வளவு வருகிறது? என்று எந்த எண்ணமும் வைப்பதற்கு அவசியமே இல்லை. சேவை மட்டும் செய்யுங்கள் மற்றும் பலனாக நன்றாக அருந்துங்கள். 36வகை உணவு கூட மதுபன்னைச் சேர்ந்தவர்களுக்கு அடிக்கடி கிடைக்கிறது. எனவே 36 குணங்களையும் தாரணை செய்ய வேண்டியதாக இருக்கும். ஒவ்வொரு மதுபன் வாசியும் தூய்மையின் ஒளிக் கிரீடம் அணிந்தவராக கண்டிப்பாக ஆக வேண்டும் ஆனால் இரட்டை கிரீடம். ஒன்று குணங்களின் கிரீடம் மற்றொன்று தூய்மையின் கிரீடம் அந்த கிரீடத்தில் குறைந்தது 36 வைரங்கள் கண்டிட்டாக. இருக்க வேண்டும்.

இன்று பாப்தாதா பிரத்யேகமாக மதுபன் வாசிகளுக்கு மற்றும் பொதுவாக அனைவருக்கும் குணங்களின் கிரீடம் அணிவிப்பு விழா செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் யார் பார்த்தாலும் கிரீடம் அணிந்தவராகத் தென்பட வேண்டும். ஒவ்வொரு குணம் என்ற இரத்தினம் பிரகாசித்துக் கொண்டு மற்றவர்களையும் பிரகாசிக்க வைப்பதாக இருக்க வேண்டும். (பாப்தாதா யோக பயிற்சி (ட்ரில்) செய்வித்தார்) அனைவரும் அன்பில் மூழ்கியிருக்கும் நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த அனுபவம் எவ்வளவு

அதீந்திரிய சுகம் நிறைந்தது. அனைத்து குணங்களினால் நிரம்பிய உயர்ந்த நிலை மிகவும் பிடித்திருக்கிறது தான் இல்லையா? இதே நிலையில் இரவும் பகலும் கடந்து விட்டால் கூட, எப்பொழுதும் இதே மிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். எப்பொழுதும் இதே நினைவில் சக்தி நிறைந்த ஆத்மாவாக இருங்கள்.

பாப்தாதா நிரந்தரமாக குழந்தைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சந்தித்துக் கொண்டே இருப்பார்கள். அனேக குழந்தைகள் இருந்த போதிலும் ஒவ்வொரு குழந்தையையும் தந்தை சந்திக்கிறார். ஏனென்றால், உடல் பந்தனத்திலிருந்து விடுபட்ட தந்தை மற்றும் பிரம்மாபாபா இருவர்களும் ஒரு நொடிக்குள் அனேகர்களுக்கு பாஸனா (உணர்வுகளை) கொடுக்க முடியும்.

**தாதிகளுடன்**: இராஜ குடும்பத்தினராக ஆகி விட்டீர்களா அல்லது இப்பொழுது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? இராஜ காரியங்களை நடத்து விப்பவர்கள் உருவாகி விட்டார்களா அல்லது இப்பொழுது உருவாக வேண்டுமா? ஒருவர் நடத்து விப்பவர், ஒருவர் காரிய நடவடிக்கைகளில் வருபவர். யார் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பாரோ அவர் இராஜ்யத்தை நடத்து விப்பவர். மேலும் யார் சம்மந்தத்தில் இருப்பார்களோ அவர்கள் இராஜ்ய காரிய நடவடிக்கைளில் வருபவர்கள் அப்படி இராஜ்ய காரிய நடவடிக்கைகளை நடத்து விப்பவர்களாக இப்பொழுது ஆகிக் கொண்டு இருக்கிறீர்கள் தான் இல்லையா? இராஜ்ய காரிய நடவடிக்கைகளை மடத்து விப்பவர்களின் விசேஷம் என்னவாக இருக்கும்? சிம்மாசனத்திலேயோ அனைவரும் அமர மாட்டார்கள், சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவரின் உறவினராகவோ ஆவீர்கள் ஆனால் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கையில் வரையறை இருக்கிறது தான் இல்லையா? இராஜ குடும்பத்தில் வருபவர்களுக்கும் மேலும் இராஜ சிம்மாசனத்தில் அமர்பவர்களுக்கும் இடையில் கூட வித்தியாசம் இருக்கும். சொல்வதோ அவரும் நம்பர் ஒன், நம்பர் இரண்டு விஷ்வ மகாராஜனின் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று தான் சொல்வார்கள். வித்தியாசமாக என்ன இருக்கும்? சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவராக யார் ஆவார்கள். அதற்கும் கூட ஏதாவது நியமங்கள் இருக்கும் தான் இல்லையா? இந்த விஷயத்தில் யோசனை செய்யுங்கள் ஆனால்

சங்கமயுகத்திலோ இதய சிம்மாசனத்திற்கு உரியவராக அனைவரையும் தந்தை ஆக்குகிறார். எதிர்காலத்தில் இராஜா - மகாராஜாவாகவோ ஆவீர்கள் ஆனால் முதல் நம்பரில் உள்ள ஆசனம் எதில் லட்சுமி நாராயணன் அமர்வார்களோ அந்த

# 1981 அவ்யக்த முரளி

சிம்மாசனதாரியாக யார் ஆவார்கள்? சிறு சிறு ஆசனம் மேலும் இராஜ தர்பாரோ கூடும் ஆனால் விஷ்வ மகாராஜனின் ஆசனத்திற்கான விசேஷ ஆதாரம் ஒவ்வொரு விஷயத்தில், ஒவ்வொரு பாடத்தில் தந்தையை முழுமையாகப் பின்பற்றி நடப்பவர். ஒருவேளை ஒரு பாடத்தில் கூட பின்பற்றி நடப்பதில் குறை இருந்து விடுகிறது என்றால் முதல் ஆசனத்திற்கு உரியவராக ஆக முடியாது. நானிலிருந்து நாராயணன், நாரியிலிருந்து லட்சுமி பதவியையோ பெறுவார்கள் ஆனால் முதல் நம்பரின் கிரீடம் மற்றும் ஆசனம் பெறுவதற்காக இருவர்களும் ஒவ்வொரு விஷயத்திலும் பின்பற்றி நடப்பவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் ஆசனமும் அதன் பின்னால் கிடைக்கும் என்று பாப்தாதா கூறுகிறார்கள். ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு சம்ஸ்காரத்திலும், ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதன் ஆதாரத்தில் வரிசை எண்ணும் உருவாக வேண்டும். ஆசனமும் கிடைக்கும், ஆனால் அதிலேயும் வரிசை எண் இருக்கும். இரண்டாவது லட்சுமி நாராயணனுக்கும் எட்டாவது லட்சுமி நாராயணனுக்கும் வித்தியாசம் இருக்கும் தான் இல்லையா? பின்பற்றி நடப்பதில் இந்த வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இதில் ஆழமான இரகசியம் இருக்கிறது. மகாராஜா ஆவதற்கும் மேலும் மகாராணி ஆவதற்கும் கூட இரகசியம் இருக்கிறது. யார் யார் எந்த இராஜ்யத்தின் அதிகாரி ஆகுகிறார்கள். எந்த ரேகைகளின் கணக்குப்படி ஆகுகிறார்கள். இதுவும் இரகசியம் தான் இல்லையா என்று பாப்தாதாவும் இராஜ்யத்தை பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

தந்தையைப் பின்பற்றி நடப்பதிலும் கூட மிகப் பெரிய ஆழமான விளைவுகள் இருக்கின்றன. வாழ்க்கையில் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். குழந்தைப் பருவ வாழ்க்கையில் தந்தையைப் பின்பற்ற வேண்டும். வாலிப வாழ்க்கையில் தந்தையைப் பின்பற்ற வேண்டும், சேவையின் வாழ்க்கையில் தந்தையைப் பின்பற்ற வேண்டும், பிறகு இறுதி வாழ்க்கையிலும் தந்தையைப் பின்பற்ற வேண்டும். ஸ்தாபனை காரியத்தின் கூடவே சகயோகத்தில் எவ்வளவு காலமாக, எத்தனை சதவிகிதத்தில் பின்பற்றியிருக்கிறேன். பாலனை காரியத்தில் எந்த அளவு பின்பற்றியிருக்கிறேன். தன்னுடைய மற்றும் மற்றவர்களின் தடைகளை அழிக்கும் காரியத்தில் எந்த அளவு பின்பற்றியிருக்கிறேன். இந்த கணக்கின் மதிப்பெண்கள் ஒன்றாகக் கூட்டி மொத்தமாக்கப்படுகிறது. மொத்த கணக்குப்படி இறுதி வரிசை எண் உருவாகும்.

இப்பொழுது நீங்கள் அனைவரும் உயரம் தாண்டுதல் செய்ய முடியும். கோடியில் சிலர் தான் அந்த அதிசயத்தைக் காண்பிக்க முடியும். இப்பொழுது அந்த கோடியில் சிலர் யார்? அதைத் தன்னிடம் கேளுங்கள். காலதாமதமாக வந்திருக்கிறேன், அதனால் செய்ய முடியாது என்று அப்படி அல்ல. செய்ய முடியும். அதற்காக அந்த அளவு பெரிய உயரே தாண்டுதல் செய்ய வேண்டியதாக இருக்கும். உயரம் தாண்டுங்கள். பாப்தாதாவும் அதிகப்படியான உதவி கொடுப்பார்கள்.

**தனிப்பட்ட சந்திப்பு:** எப்படி தந்தை குழந்தைகளின் உயர்ந்த விஷயங்களைத் தெரிந்திருக்கிறாரோ அதே போல் நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்களா? அந்த அளவு போதை இருக்கிறதா அல்லது சில நேரம் இருக்கிறது, சில நேரம் இருப்பதில்லை என்று அப்படி நினைக்கிறீர்களா? விஷயங்களை, பிரச்சனைகளை பார்க்கிறீர்களா அல்லது தந்தையைப் பார்க்கிறீர்களா? யாரைப் பார்க்கிறீர்கள்? ஏனென்றால் எவ்வளவு குழுவோ (கூட்டமாக) அந்த அளவே பிரச்சனைகளும் விஷயங்களும் இருக்கவே தான் இருக்கும். விஷயங்கள் பிரச்சனைகள் ஏற்படுவது என்பது அதிகமானவர்கள் இருக்கும் குழுவில் கண்டிப்பாக இருக்கும். பிரச்சனைகள், விஷயங்களின் நேரத்தில் தந்தையின் நினைவு இருக்கிறதா? பிரச்சனைகள் அகன்றது என்றால் தந்தை நினைவு வரும் என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் பிரச்சனைகள் அகற்றுவதற்காகத் தான் தந்தையின் நினைவு இருக்கிறது. எப்பொழுது முன்னேறிச் செல்வீர்களோ அப்பொழுது தான் பிரச்சனைகளும் அகலும். பிரச்சனைகள் அகலட்டும், அப்பொழுது தான் நான் முன்னேற முடியும் என்று அப்படியில்லை. நாம் முன்னேறினோம் என்றால் பிரச்சனைகள், விஷயங்கள் பின்னுக்குச் சென்று விடும். பாதை முன்னேறிச் செல்வதில்லை நடப்பவர் தான் முன்னேறிச் சென்று கொண்டிருப்பார். எப்பொழுதாவது பாதை முன்னுக்குச் செல்கிறதா என்ன? பாதையை கடப்பவர் யாராவது பாதை நகர்ந்து சென்றது என்றால், நானும் கடந்து செல்வேன் என்று நினைக்கிறாரா? பாதையோ எப்பொழுதும் அதே இடத்தில் தான் இருக்கும் ஆனால் அதை எப்படி கடந்து செல்வது என்று முடிவு செய்பவர் கடந்து செல்வார். பக்கத்து காட்சிகள் நகர்ந்து செல்லாது ஆனால் பார்ப்பவர் முன்னேறிச் சென்று கொண்டிருட்பார். அப்படியானால் இந்த சக்தி இருக்கிறதா? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த பாடம் எண்ணம், சொல், செயலில் நிரந்தரமாக நினைவில் இருக்கிறதா? வேறு எந்த நபரும் இல்லை என்ற இதுவும் ஒரு பாடம் ஆகும் ஆனால் வேறு ஏதாவது சாதனம் இருக்கிறதா? ஏதாவது தடை இருக்கிறதா? ஏதாவது வீணான எண்ணம் இருக்கிறதா? ஒருவேளை ஒரு தந்தை மற்றும் இன்னொன்று வீணான எண்ணமும் இருக்கிறது என்றால் இரண்டு ஆகி விட்டது

இல்லையா? எண்ணத்திலும் வீணானது இருக்க வேண்டாம், வார்த்தைகளிலும் வேறு எதுவும் இருக்க வேண்டாம். ஆத்மாக்களுடன் தொடர்பு வைத்து நடந்து கொண்டே நினைவில் பாபா இருக்க வேண்டும். நபர் அல்லது தொடர்பின் விஸ்தாரம் இருக்க வேண்டாம். அந்த மாதிரி இருக்கிறதா? இன்று உடல் மேல். நாளை மனதின் மேல், நாளை மறுநாள் பொருட்களின் மேல் மேலும் சில நேரம் நபர்கள் மேலேயோ நேரம் சென்று விடுகிறதா? நபர் செல்வார் சாதனம் வரும், சாதனம் செல்லும் நபர் வருவார் இந்த வரிசையோ இருக்கும். ஏனென்றால், இதை மாயா தெரிந்திருக்கிறது. கொஞ்சம் அது வருவதற்காக வாய்ப்பு கிடைக்கிறது என்றால், அது மாறுவேடத்தில் வரும். ஒரே ரூபத்தில் வராது. இங்கிருந்து, அங்கிருந்து மூலையிலிருந்து கூரையிலிருந்து மாறு வேடத்தில் பல பக்கங்களிலிருந்தும் வரக்கூடும் ஆனால் பகுத்தறிபவர், ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த பாடத்தின் ஆதாரத்தினால் அதை தூரத்திலிருந்தே நமஸ்காரம் செய்விப்பார். நமஸ்காரம் செய்ய மாட்டார், செய்விட்டார். அப்படி ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற சூழ்நிலை நாலாபுறங்களிலும் இருக்க வேண்டும். ஏனென்றால் அனைத்து ஞானமோ கிடைத்து விட்டது. எத்தனை பாய்ன்ட்டுகள் (ஞானத்துளிகள்) இருக்கின்றன. பாய்ன்ட்டுகள் இருந்த போதிலும் பாய்ன்ட் (புபுள்ளி) ரூபத்தில் இருக்க வேண்டும். இது தான் எந்த நேரம் யாராவது கீழே இழுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் அந்த நேரம் செய்ய வேண்டிய அதிசய காரியம் ஆகும். சில நேரம் பிரச்சனைகள், விஷயங்கள் கீழே இழுக்கும், சில நேரம் ஏதோ ஒரு நபர் காரணமாகி விடுவார். சில நேரம் வாயுமண்டலம். சில நேரம் ஏதாவது ஒரு பொருள் காரணமாவது நடக்கத் தான் செய்யும். இது நடக்கக்கூடாது என்று அந்த மாதிரி இருக்கவே முடியாது ஆனால் நீங்கள் அதில் ஒரே சீரான நிலையில் இருங்கள். அதற்கான வழியை யோசியுங்கள். ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்யுங்கள். அனைவரும் இவர் ஒரு நல்ல வழி கூறினார் என்று பாராட்டும் அளவிற்கு அந்த மாதிரி கண்டுபிடிப்பு இருக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: நினைவின் மந்திரம் மூலமாக எண்ணம் மற்றும் காரியத்தில் அழியாத சித்தியை (வெற்றியை) அடையக் கூடிய சித்தி சொரூபம் ஆகுக!**

நீங்கள் குழந்தைகள் சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் செய்தி கொடுப்பவர்கள். எனவே யாருடனாவது விவாதம் செய்வதில் தன்னுடைய மனதை நிலை குலையச் செய்யக் கூடாது. நினைவின் மந்திரத்தை உபயோகியுங்கள். எப்படி யாராவது வார்த்தைகளினால் அல்லது வேறு ஏதாவது முறையினால் வசம் ஆவதில்லை

என்றால் மந்திரம், தந்திரம் செய்வர்கள். உங்களிடம் ஆத்மீக பார்வையின் கண் மற்றும் மன்மனாபவ என்ற மந்திரம் இருக்கிறது. அதன் மூலம் தன்னுடைய எண்ணங்களை சித்தி ஆக்கி, சித்தி சொரூபம் ஆக்க முடியும்.

**சுலோகன்: செய்யும் காரியத்தின் உணர்வில் இருப்பதற்கு பதிலாக ஆத்ம உணர்வில் இருப்பவாக ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குப் பிரியமானவராக, அனைவருக்கும் பிரியமானவராக, தன் மனதிற்குப் பிரியமானவராக எப்படி ஆவது?

இன்று பாப்தாதா விசேஷமாக எதற்காக வந்திருக்கிறார்? இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுடன் ஆன்மீக உரையாடல் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். வெகு தொலை தூரங்களிலிருந்து அனைத்து குழந்தைகளும் மதுபனிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் மதுபனின் தந்தை. வந்திருக்கும் குழந்தைகளுக்கு பிரத்யேகமாக ஞானத்தின் ஆன்மீக உரையாடல் மூலம் உபசரிப்பதற்காக வந்திருக்கிறார். இன்று பாப்தாதா யாருக்காவது எந்த விஷயத்திலாவது கடினம் அனுபவம் ஆகவில்லையே என்று குழந்தைகளிடமிருந்து கேட்பதற்காக வந்திருக்கிறார். தந்தை மற்றும் உங்களுடைய சந்திப்பும் சுலபமாகி விட்டது இல்லையா? எப்பொழுது சந்திப்பு சுலபமானது. அறிமுகம் சுலபமாகக் கிடைத்தது, எளிய மார்க்கம் (வழி) கிடைத்தது. இருந்தும் ஏதாவது கடினம் இல்லையே? கடினம் இல்லை ஆனால் யாராவது கடினமாக ஆக்கி விடவில்லையே? தந்தை மூலமாக என்னென்ன பொக்கிஷம் கிடைத்திருக்கிறதோ அதன் சாவியை எப்பொழுது போட விரும்புகிறீர்களோ அப்பொழுது போடுங்கள். அந்த மாதிரி விதி உங்களிடம் வந்து விட்டதா? விதி இருக்கிறது என்றால், சித்தியும் (பலன்) அவசியம் இருக்கும். விதியில் குறை இருக்கிறது என்றால் சித்தியும் ஏற்படுவதில்லை. உங்களுடைய நிலைமை என்ன?

அனைவரும் உயரே பறந்துக் கொண்டிருக்கிறீர்களா? உயர்ந்த தந்தையின் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளாக ஆகி விட்டீர்கள் என்றால், நடந்து செல்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது! உயரே பறக்கத் தான் வேண்டும். பாதையில் நடந்து சென்றீர்கள் என்றால் இடையில் எங்காவது தடைவர முடியும், ஆனால் பறப்பதில் எந்த தடையும் இருக்காது. அனைவரும் பறக்கும் பறவைகள். ஞானம் மற்றும் யோகாவின் இறகுகள் அனைவரையும் நன்றாகப் பறக்க வைத்துக்

கொண்டிருக்கின்றன. பறந்து பறந்து களைப்பு ஏற்படுவதில்லையே? அனைவருக்கும் களைப்பற்றவர் ஆகுக என்ற வரம் கிடைத்து விட்டதா? விஷயமும் மிக சுலபமானதே தான். அனுபவம் செய்ய வேண்டும் மற்றும் அனுபவத்தை சொல்ல வேண்டும். அனுபவத்தை சொல்வது மிக சுலபமானதாக இருக்கும் தான் இல்லையா? தன்னுடைய விஷயத்தைத் தான் கூறுகிறீர்கள். எனவே மிக சுலபமானதே தான். உறவுகளின் விஷயங்களைக் கூறுவதில் என்ன கடினம் இருக்க முடியும்? இரண்டு விஷயங்களை மட்டும் கூற வேண்டும். ஒன்று தன்னுடைய குடும்பத்தின் அதாவது சம்மந்தத்தின் விஷயம் மற்றும் இரண்டாவது பிராப்தியின் விஷயம். எனவே பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளை மகிழ்ச்சியாக இருப்பவர்களாகத் தான் பார்க்கிறார். எப்பொழுதாவது முழுநாளில் ஒரே இரசனை நிறைந்த சீரான நிலைக்குப் பதிலாக வேறு இரசனை ஈர்க்க வில்லையே? ஒரே இரசனையில் இருப்பவர்களாக ஆகி விட்டீர்களா? பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவராக ஆகி விட்டீர்களா? இப்பொழுதோ கீதையின் யுகம் முடிவடைய வேண்டும். அனைவரும் ஞானத்தின் பலனான பிராப்தியில் வந்து விட்டீர்கள் இல்லையா? நினைவு சொரூபம் ஆவது என்ற இது தான் ஞானத்தின் பலன். அப்படியானால் இப்பொழுது முயற்சி செய்வது முடிவடைந்து விட்டது. சுயசொரூபத்தின் வர்ணனையாக என்ன கூறுகிறீர்களோ, அந்த அனைத்து குணங்களும் எப்பொழுதும் அனுபவத்தில் இருக்கிறது தான் இல்லையா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது ஆனந்த சொரூபம் ஆகி விடுங்கள், எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அன்பு சொரூபம் ஆகி விடுங்கள். எந்த சொரூபத்தை விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அதே சொரூபத்தில் நிலைத்திருக்க முடியுமா? இப்படியும் இல்லாமல் ஏற்கனவே அப்படி ஆகியிருக்கிறீர்கள் தான் இல்லையா? தந்தையின் குணமாக என்ன இருக்கிறதோ அதுவே குழந்தைகளின் குணமாகும். எது தந்தையின் கடமையாக இருக்கிறதோ, அதுவே குழந்தைகளின் கடமை. எது தந்தையின் நிலையோ அதுவே குழந்தைகளின் நிலை என்ற இவற்றைத் தான் சங்கமயுகத்தின் பிராப்தி என்று கூறுவது. அப்படியானால் பிராப்தி ஆனவர்களா அல்லது முயற்சி செய்பவர்களா? நீங்கள் பிராப்தி சொரூபமா ர்களா அடைய வேண்டும். தில்லை. எப்ப ஆகும் ன்ற இந்த பேச்சு றிவிட்டது இல்லையா? இன்று தரையில், நாளை ஆகாயத்தில் அப்படி மேலே கீழே சென்று வருபவர்களாக இல்லையே? இன்று கேள்விக்குறி இடுவது. நாளை முற்றுப்புள்ளி வைப்பது என்று அப்படி செய்யவில்லையே? ஒரே இரசனை அதாவது ஒரே முழுமையான மூட் (மனநிலையில்) இருப்பவர். மூடும் (மனநிலையும்) மாறக்கூடாது. அனேக குழந்தைகளுடைய மூட் மாறுகிறது என்பதை பாப்தாதா வதனத்திலிருந்து பார்க்கிறார். சில நேரம் ஆச்சரியப்படும் மூட். சில

# 1981 அவ்யக்த முரளி

நேரம் கேள்விக்குறியின் மூட் மற்றும் சில நேரம் குழப்பத்தின் மூட். சில நேரம் டென்ஷன் மற்றும் சில நேரம் அட்டென்ஷனின் ஊஞ்சலோ ஆடுவதில்லையே? மதுபனில் இருந்து பிராப்தி அடைந்த சொரூபத்தில் செல்ல வேண்டும். முயற்சியும் எதுவரை செய்து கொண்டே இருப்பீர்கள் தந்தை என்னவாக இருக்கிறாரோ அப்படியே குழந்தைகள். தந்தைக்கு எப்பொழுதாவது மூட் ஆஃப் ஆகிறதா? இப்பொழுதோ தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். குழந்தைகள் இல்லையா? குழந்தைகளோ தந்தையை விட பெரியவர்களாக ஆக வேண்டும். புகார்கள் அனைத்தும் முடிவடைந்து விட்டனவா? உண்மையில் விஷயம் மிகச் சிறியதாக இருக்கும் ஆனால் யோசித்து யோசித்து சிறிய விஷயத்தை பெரியதாக்கி விடுகிறீர்கள். அடிக்கடி யோசிக்கும் காரணத்தினால் அந்த விஷயம் சிறியதிலிருந்து பெரியதாகி விடுகிறது. இது ஏன் வந்தது. இது ஏன் நடந்தது என்று யோசிக்கும் காரியத்தைச் செய்யாதீர்கள். பரீட்சை வந்தது அதைச் செய்ய வேண்டும். பரீட்சை ஏன் வந்தது என்று கேள்வி எழுமா என்ன? வேஸ்ட் மற்றும் பெஸ்ட்டை (வீணானது மற்றும் சிறந்தது) ஒரு நொடியில் தீர்மானித்து அதை ஒரு நொடியில் முடிவு கட்டுங்கள். வீணானது என்றால் அரைக் கல்பத்திற்காக அதை வீணான காகித பெட்டியில் போட்டுவிடுங்கள். வீணான காகித பெட்டி மிகப் பெரியது. நீதிபதி ஆகுங்கள். வக்கீல் ஆகாதீர்கள். வக்கீல் சிறிய வழக்கையும் பெரியதாக்கி விடுவார். மேலும் நீதிபதி ஒரு நொடியில் ஆம் அல்லது இல்லை என்று தீர்ப்பளித்து விடுவார். வக்கீல் ஆகிறீர்கள் என்றால் கருப்பு கோட் வந்து விடுகிறது. இது தந்தையின் குணமா அல்லது இல்லையா என்று ஒரு நொடிக்கான தீர்ப்பு தான். இல்லை என்றால் வீணான காகித பெட்டியில் போட்டுவிடுங்கள். ஒருவேளை தந்தையின் குணமாக இருக்கிறது என்றால் சிறந்ததின் கணக்கில் சேமிப்பு ஆக்குங்கள். பாப்தாதாவின் உதாரணமோ எதிரில் இருக்கிறது தான் இல்லையா? அதேபோல் செய்ய வேண்டும். அதாவது பின்பற்ற வேண்டும். எந்தவொரு புது மார்க்கத்தையும் உருவாக்க வேண்டாம். எந்தவொரு புது ஞானத்தையும் கண்டுபிடிக்க வேண்டாம். தந்தை என்ன கூறுகிறாரோ அதன் சொரூபமாக வேண்டும். அனைத்து வெளிநாட்டினரும் 100 சதவிகிதம் பிராப்தி அடைந்து கொண்டிருக்கிறீர்களா? சங்கமயுகத்தின் பிராப்தியின் பலன் - "தந்தைக்குச் சமமாக ஆவது". எதிர்கால பிராப்தி "தேவதை பதவி". அப்படி தந்தைக்குச் சமமானவர் ஆகி தந்தையின் கூடவே அதே நிலையில் அமருவதற்கான அனுபவத்தை கொஞ்ச நேரமோ செய்வீர்கள் தான் இல்லையா? எந்தவொரு இராஜா ஆசனத்தில் அமர்கிறார் என்றால் கொஞ்ச நேரமாவது அமருவார் இல்லையா? இப்பொழுது அமர்ந்தார் உடனே இறங்கி விட்டார் என்று அப்படி இல்லையே. அப்படி தந்தைக்குச் சமமான நிலை அதாவது முழுமையான

நிலையின் ஆசனதாரி ஆவது என்பது தான் சங்கமயுகத்தின் பிராப்தி. இந்த பிராப்தியையும் அடைய வேண்டும் இல்லையா? மேலும் அதிக காலம் அடைய வேண்டும். நீண்ட காலத்தின் சம்ஸ்காரத்தை இப்பொழுது நிரப்ப வேண்டும். நிரம்பிய வாழ்க்கை வேண்டும். நிரம்பிய நிலை கொஞ்ச காலம் மட்டுமில்லை ஆனால் முழு வாழ்க்கையும் இருக்க வேண்டும். பரிஷ்தா வாழ்க்கை, யோகி வாழ்க்கை, சகஜ வாழ்க்கை. வாழ்க்கை கொஞ்ச காலம் இருக்கும். இப்பொழுது பிறந்தார். அடுத்த நேரம் சென்றுவிட்டார் என்றால் அதை வாழ்க்கை என்று கூறமாட்டோம். அடைந்து விட்டோம் என்று கூறுகிறீர்கள். அப்படி என்ன அடைந்தீர்கள்? ஏறுவது. இறங்குவதை மட்டும் அடைந்து விட்டீர்களா? கடும் உழைப்பை அடைந்து விட்டீர்களா? பிராப்தியை அடைந்து விட்டீர்களா? தந்தைக்குச் சமமான வாழ்க்கையை அடைந்துயவிட்டீர்களா? கடின உழைப்பை எவ்வளவு காலம் செய்வீர்கள்? அரைக்கல்பம் அனேக விதமான கடின உழைப்பை செய்தீர்கள். குடும்ப விவகாரம், பக்தி, பிரச்சனைகள் அப்படி எவ்வளவு கடின உழைப்பு செய்தீர்கள். சங்கமயுகமோ அன்பாக இருப்பதற்கான யுகம். கடின உழைப்பிற்கான யுகம் இல்லை. சந்திப்பிற்கான யுகம். ஜோதி மற்றும் விட்டில் பூச்சிகள் ஒன்றர இணையும் யுகம் ஆகும். உழைப்பு என்று கூறுகிறீர்கள், ஆனால் உழைப்பு இல்லவே இல்லை. குழந்தை ஆவது என்றால் கடின உழைப்பு செய்வதா என்ன? ஆஸ்தியாக கிடைத்ததா அல்லது கடின உழைப்பில் கிடைத்ததா? குழந்தையோ தலையின் கிரீடமாக இருப்பார். வீட்டின் அலங்காரமாக இருப்பார், தந்தையின் குழந்தையாக இருப்பவர் எஜமானன் ஆகுபவராக இருப்பார். அப்படி எஜமானன் ஏன் கீழே வருகிறார். உங்களுடைய பெயரைப் பாருங்கள் எவ்வளவு உயர்ந்தது. எவ்வளவு உயர்ந்த பெயர் அப்படி பெயரும் மற்றும் நீங்கள் செய்யும் செயலும் ஒன்றாக இருக்கிறது தான் இல்லையா? உயர்ந்த மேடையில் எப்பொழுதும் தந்தையுடன் இருங்கள். உண்மையான ஸ்தானமோ அது தான். தன்னுடைய ஸ்தானத்தை ஏன் விடுகிறீர்கள்? உண்மையான ஸ்தானத்தை விடுவது என்றால் வேறு வேறு விஷயங்களில் அலைவது. ஓய்வாக அமருங்கள், போதையில் அமருங்கள் அதிகாரத்துடன் அமருங்கள். கீழே வந்த பிறகு இப்பொழுது என்ன செய்வது என்று கூறுகிறீர்கள். கீழே ஏன் வர வேண்டும். பிறகு அதன் காரணமாக கொஞ்சம் சுமையும் அனுபவமும் ஆகிறது. சுமையை தன் தலை மேல் வைத்துக் கொள்ளாதீர்கள். எப்பொழுது நான், எனது என்பது வருகிறதோ அப்பொழுது சுமை தலை மேல் வந்து விடுகிறது. நான் என்ன செய்வது, எப்படி செய்வது. செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பெயர் மட்டும் உங்களுடையது, செய்யும் காரியம் தந்தையினுடையதாக இருக்கிறது. அன்றைய நாளில் பொம்மையை பார்த்தீர்கள் அது அதுவாகவே

இயங்கிக் கொண்டிருந்ததா அல்லது யாராவது இயக்கிக் கொண்டிருந்தார்களா? அறிவியல் இயக்கி வைக்க முடியும் என்றால் தந்தை இயக்கிவைக்க முடியாதா. இதுவோ குழந்தைகளின் பெயரை புகழடையச் செய்ய வேண்டும் என்பதற்காக தந்தை குழந்தைகளை பொறுப்பாளர் ஆக்கி விடுகிறார். ஏனென்றால் தந்தை இந்த பெயர் ரூபத்திலிருந்து விலகியிருக்கிறார். எப்பொழுது தந்தை சுமையைக் கொடுத்து விடு என்று அவரே வாய்ப்பளிக்கிறார் என்றால் நீங்கள் நடனம் ஆடுங்கள் மற்றும் உயரே பறந்து மட்டும் செல்லுங்கள், ஏன் சுமையைத் தூக்குகிறீர்கள்? எப்படி சேவை நடக்கும், எப்படி சொற்பொழிவு நிகழ்த்துவோம். இந்த கேள்விக்கோ இடமே இல்லை. தன்னை ஒரு கருவி என்று மட்டும் புரிந்து தொடர்பை பவர் ஹவுஸுடன் இணைத்து அமர்ந்து விடுங்கள். பிறகு சொற்பொழிவு செய்ய முடிகிறதா அல்லது இல்லையா என்று பாருங்கள். அந்த பொம்மை நடக்க முடியும் என்றால் உங்களுடைய வாய் பேச முடியாதா? உங்களுடைய புத்தியில் திட்டம் போட முடியாதா? எப்படி என்று கூறியவுடனே அந்த வயருக்கு மேல் இரப்பர் வந்து விட்டது என்பது போல் ஆகும். இரப்பர் வந்து விட்ட காரணத்தினால் கனக்ஷன் (தொடர்பு) இணைவதில்லை. மேலும் உடனடி பலன் தென்படுவதில்லை. எனவே களைப்படைந்து விடுகிறீர்கள். என்னவாகும் என்று தெரியவில்லை என்று கூறுகிறீர்கள். தந்தை கருவியாக்கியிருக்கிறார் என்றால் அவசியம் ஏதோ ஒன்று இருக்கும் இல்லையா? ஒருவேளை ஏதாவது ஒரு இடத்திலிருந்து 8-பேர் மட்டும் தான் இருக்கிறார்கள் என்றால் மற்ற இடங்களிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள். ஏன் மனமுடைந்து போகிறீர்கள்? அக்கம் பக்கத்திற்குச் செல்லுங்கள், சுற்றி வாருங்கள். சுற்றுப்பகுதியோ மிகப் பெரியது. ஒரு இடத்திலிருந்து 8-பேர்கள் உருவானால் கூட குறைந்தது இல்லை. இருந்தும் ஒரு மூலையில் மறைந்திருந்தவர்களை உருவாக்கினீர்கள் என்றால் உங்களுக்கு எவ்வளவு மகிமை செய்வார்கள் தந்தையின் கூடவே பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களுக்கும் உள்ளப்பூர்வமாக ஆசீர்வாதங்கள் கொடுக்கிறார்கள் தான் இல்லையா? எந்த இடத்திலிருந்தாவது ஒரு இரத்தினம் உருவானால் கூட அந்த ஒருவருக்காகவும் செல்லத் தான் வேண்டும் இல்லையா? அவரை விட்டுவிடுவீர்களா என்ன? பிறகு அந்த ஆத்மா வஞ்சிக்கப்பட்டு இருந்து விடும். எவ்வளவு உருவாகுமோ அந்த அளவு உருவாக்குங்கள், பிறகு முன்னேறிச் செல்லுங்கள். இப்பொழுதோ உலகின் ஒரு மூலை வரை சென்றடைந்து இருக்கிறீர்கள். காடும் மிகப் பெரியது, வேட்டை மிருகங்களும் அதிகமாக இருக்கின்றன. ஏன் யோசிக்கிறீர்கள்? யோசிப்பதற்கான காரணமாக என்ன இருக்கிறது? புத்தியில் வீணானது நிரம்பிவிட்ட காரணத்தினால் டச்சிங் (உணர்வது) ஏற்படுவதில்லை. பகுத்தறியும் சக்தி காரியம் செய்வதில்லை,

## 1981 அவ்யக்த முரளி

எவ்வளவு தெளிவாக இருக்குமோ அந்த அளவு எந்த பொருள் எப்படி இருக்குமோ அது தெளிவாகத் தென்படும். அப்படி ஏன், என்ன என்ற காரணங்களினால் நிர்ணய சக்தி டச்சிங் பவர் (உணர்த்துதலை புரிந்து கொள்ளும் சக்தி) காரியம் செய்வதில்லை. பிறகு களைப்பு ஏற்படுகிறது அல்லது மனமுடைந்து போய்விடுகிறார்கள். எந்த இடங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறீர்களோ அங்கே ஏதோ ஒரு மறைந்திருந்த இரத்தினம் உருவாகியிருக்கிறது அதனால் தான் சென்றீர்கள் இல்லையா? ஒரு இடத்திலிருந்து ஒருவர் கூட உருவாகவில்லை என்ற அப்படி ஒரு ஸ்தானம் கூட கிடையாது. சில இடங்களில் வாரிசு உருவானார்கள், சில இடங்களில் பிரஜைகள், சில இடங்களில் செல்வந்தர்கள் உருவானார்கள். அனைவரும் வேண்டும் இல்லையா? அனைவருமே இராஜாவாக ஆகமாட்டார்கள். பிரஜையும் வேண்டும். பிரஜை உருவாக்கும் இந்தக் காரியத்தை பொறுப்பாளராகியிருக்கும் குழந்தைகள் தான் செய்ய வேண்டும் அல்லது நீங்கள் இராஜ குடும்பத்தினரை உருவாக்குவீர்கள் மற்றும் பாபா பிரஜைகளை உருவாக்குவாரா? இருவர்களையும் உருவாக்க வேண்டும் இல்லையா, இரண்டு விஷயங்களை மட்டும் பாருங்கள் ஒன்று தொடர்பு தெளிவாக இருக்கிறதா? இன்னொன்று மரியாதைகளின் கோட்டிற்கு உள்ளே இருக்கிறேனா? ஒருவேளை இரண்டு விஷயங்களும் சரியாக இருக்கிறது என்றால் ஒருபொழுதும் மனமுடைந்து போகமாட்டீர்கள். யாருடைய தொடர்பு தந்தையுடனோ மற்றும் பொறுப்பாளர் ஆகியிருப்பவருடனோ சரியாக இருக்கிறது என்றால், அவர் ஒருபொழுதும் வெற்றி அடையாதவராக இருக்க முடியாது. தந்தையுடன் மட்டும் தொடர்பு இருக்கிறது என்றால் அதுவும் சரியில்லை. குடும்பத்துடனும் வேண்டும், ஏனென்றால் தந்தையிடமிருந்தோ சக்தி கிடைக்கும் ஆனால் சம்மந்தத்தில் யாருடன் வர வேண்டும்? தந்தையுடன் மட்டும் தானா? இராஜ்யம் என்றால் பரிவாரத்தின் தொடர்பில் வருவது. மூன்று சான்றிதழ்கள் பெற வேண்டும். ஒன்று மட்டும் அல்ல.

ஒன்று தந்தைக்குப் பிரியமானவர் என்றால் தந்தையின் சான்றிதழ். இன்னொன்று மற்றவர்களுக்கும் பிரியமானவர் என்றால், தெய்வீக குடும்பத்தினரிருந்து திருப்தியின் சான்றிதழ். மூன்றாவது மனதிற்குப் பிரியமானவர் தன்னுடைய மனதிலும் திருப்தி இருக்க வேண்டும். தன் மேலேயும் குழப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டாம். செய்ய முடியுமா, நான் இந்த மார்க்கத்தில் செல்ல முடியுமா. .. தெரியவில்லை, அப்படி தன்னுடைய மனதின் பிரியமானவர் என்றால் மனதின் திருப்தியின் சான்றிதழ். இந்த மூன்று சான்றிதழ்கள் வேண்டும். மும்மூர்த்தி இல்லையா? அப்படி இந்த மும்மூர்த்தி சான்றிதழ்கள் வேண்டும். இரண்டின்

மூலமாகக்கூட காரியம் நடக்காது. மூன்றும் தேவை. சிலர் நான் என் மேலேயும் திருப்தியாக இருக்கிறேன். தந்தை மேலும் திருப்தியாக இருக்கிறேன் என்றாலும் நடக்காது. எப்பொழுது தந்தை திருப்தியாக இருக்கிறார். நீங்களும் திருப்தியாக இருக்கும்போது பரிவாரம் திருப்தியாக இல்லை என்பது இருக்கவே முடியாது. பரிவாரத்தைத் திருப்திபடுத்துவதற்காக ஒரே ஒரு சின்ன விஷயம் மட்டும் இருக்கிறது. "மரியாதை கொடுங்கள் மற்றும் மரியாதையைப் பெறுங்கள். இந்த இசைத்தட்டு இரவு பகலாக பாடிக் கொண்டே இருக்க வேண்டும். மரியாதை கொடுப்பது என்ற இசைத்தட்டு நிரந்தரமாக ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் ஆனால் நீங்கள் வள்ளலாகி கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். பதிலுக்கு அவர் கொடுக்கிறாரோ அல்லது கொடுக்கவில்லையோ நீங்கள் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். இதில் சுயநலமற்றவர் ஆகுங்கள். நான் இவ்வளவு கொடுத்திருக்கிறேன் அவரோ ஒன்றுமே கொடுக்கவில்லை. நான் நூறு தடவை கொடுத்திருக்கிறேன். அவரோ ஒரு தடவை கூட கொடுக்கவில்லை. அப்படி வேண்டாம். இதில் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாதவராக ஆகுங்கள். பிறகு பரிவாரம் இயல்பாகவே திருப்தியாக இருக்கும். இன்று இல்லை என்றாலும் நாளை ஆகி விடும். நீங்கள் கொடுப்பது சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும், அந்த சேமிப்பானது அவசியம் பலன் கொடுக்கும். மேலும் தந்தைக்குப் பிரியமானவராக ஆவதற்காக என்ன தேவை இருக்கிறது? தந்தையோ மிகவும் கள்ளம் கபடமற்றவர். தந்தை யாரை பார்த்தாலும் அனைவரும் நல்லதிலும் நல்லவர்களாகவே தென்படுகிறார்கள் நல்லவர் இல்லை அப்படி யாருமே தென்படவில்லை. ஒவ்வொரு பாண்டவரும் ஒவ்வொரு சக்தியும் ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்கு இருக்கிறார். அப்படி தந்தைக்குப் பிரியமானவர் ஆவதற்காக -உண்மையான உள்ளத்தில் தந்தை திருப்தியாக இருக்கிறார்; யாராக இருந்தாலும் உண்மையாக இருப்பது, சத்தியமாக இருப்பது தந்தையை வெற்றி அடைந்து விடுகிறது மேலும் மனதிற்குப் பிரியமானவராக ஆவதற்கு என்ன தேவை? மனம் சொல்லும் வழியில் நடக்கக்கூடாது. மனதிற்கு விருப்பமானது அது வேறு ஆகும். மனதிற்கு பிரியமானவராக ஆவதற்கான மிக சுலபமான சாதனம் - ஸ்ரீமத்தின் கோட்டிற்கு உள்ளேயே இருங்கள். எண்ணத்தை செய்தாலும் கூட ஸ்ரீமத்தின் கோட்டிற்கு உள்ளே இருக்கட்டும். பேசுகிறீர்கள். காரியம் செய்கிறீர்கள் அப்படி என்ன செய்தாலும் கோட்டிற்கு உள்ளே இருக்கட்டும். அப்படி எப்பொழுதும் தன் மேலேயும் திருப்தியாகி மற்றவர்களையும் திருப்தி செய்ய முடியும். எண்ணம் என்ற விரல் கூட வெளியில் இருக்க வேண்டாம்.

எவ்வளவு ஈடுபாடு, எவ்வளவு திட எண்ணம் இருக்கிறது என்று பாப்தாதாவும் தெரிந்திருக்கிறார். இடையிடையில் மட்டும் கொஞ்சம் மென்மையானவர்களாக ஆகி விடுகிறீர்கள். எப்பொழுது மென்மையானவர் ஆகி விடுகிறீர்களோ அப்பொழுது அதிக சினுங்கல்கள் செய்கிறீர்கள். அன்பு தான் இவர்களுடைய பயணசீட்டு, அதனால் தான் இங்கு வந்து சேருகிறார்கள். அன்பு இல்லை என்றால் அன்பின் பயணச்சீட்டு இல்லாமல் இங்கே எப்படி வந்து சேர முடியும்? இதே பயணச்சீட்டு தான் மதுபன் நிவாசி ஆக்குகிறது. நாலாபுறங்களிலும் உள்ள சேவைக்கு பொறுப்பாளர் ஆக்குகிறது. பாப்தாதாவோ பாராட்டுக்களோ கொடுத்திருக்கிறார் இல்லையா? என்ன உறுதிமொழி செய்து சென்றீர்களோ அதைக் கடைபிடிக்க வேண்டும். மற்றபடி வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கும். ஸ்தாபனையோ செய்து விட்டீர்கள் இல்லையா? சுயமுன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம் -இரண்டின் சமநிலை இருந்தது என்றால் எப்பொழுதும் வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கும்.

வெகு காலமாக சுதந்திரமாக இருந்தவர்கள் தன்னை ஒரு குழு ரூபத்தில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் ஒரு விசேஷம் என்று பார்த்தோம். இதுவும் மிக நல்ல மாற்றம். ஒவ்வொருவரும் தனியாக இருப்பவர்கள் நான்கு ஆறு பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் சம்ஸ்காரத்தை ஒத்துப்போக வைத்திருக்கிறார்கள் என்ற இதுவும் அன்பின் பிரதிபலன் கொடுப்பதாகும். பாண்டவ பவன், சக்தி பவன் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற இதுவும் விசேஷம் தான். பாப்தாதா இந்த பிரதிபலனை பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஒருவரின் பெயரை மனதில் வைப்பது, சிக்கனமாக இருப்பது இதுவும் பிரதிபலனைக் கொடுப்பது தான் இல்லையா? தன்னுடைய குடும்பத்தை பராமரிப்பதற்கு மற்றும் சேவையை செய்வதற்கு இரண்டிலும் பாதி பாதியாக்கி நடந்துக் கொள்வது என்ற புதிய கண்டுபிடிப்பும் நன்றாக இருக்கிறது. இரண்டு காரியங்கள் ஆகி விட்டன இல்லையா? சம்பாதித்தீர்கள் மற்றும் ஈடுபடுத்தினீர்கள் அது சேவைக்காகவோ மற்றும் தனக்காகவோ இருக்கலாம் ஆனால் இங்கே சம்பாதித்தீர்கள் மற்றும் ஈடுபடுத்தினீர்கள் என்றால் இங்கே வங்கி கணக்கில் இருப்பதாக ஆவதில்லை ஆனால் எதிர்காலத்தில் சேமிப்பாகி விடுகிறது. புத்தியோ அனைத்திலிருந்தும் விடுபட்டு ஃப்ரீயாக இருக்கிறது தான் இல்லையா? வந்தது மற்றும் ஈடுபடுத்தினீர்கள். அப்படி கவலையற்ற மகாராஜா. பாண்டவர்கள் மற்றும் சக்திகள் இருவரிடையே பந்தயம் இருக்கிறது. தீபம் எரிந்தது மற்றும் எழுப்புவதற்காக செல்ல தொடங்கினார்கள். நல்ல இலட்சியம் வைத்திருக்கிறார்கள். பாரதத்தில் உதவிக் கரங்களை உருவாக்குவதில் கடுமையாக முயற்சி செய்கிறார்கள். மேலும்

அங்கே ஏற்கனவே உருவாகிய உதவிக்கரங்கள் சுலபமாக வந்து விடுகிறார்கள். இதுவும் வரதானம் ஆகும். பிற்காலத்தில் வருபவர்களுக்காக இது ஒரு -ஃப்ட் ஆகும். இங்கே உள்ளவர்களுக்கு பந்தனத்தை துண்டிப்பதில் காலம் எடுக்கிறது. மேலும் இவர்களுடைய பந்தனம் ஏற்கனவே வெட்டப்பட்டு இருக்கிறது. அப்படி லிஃப்ட் ஆகி விட்டது தான் இல்லையா? மனதின் பந்தனம் மட்டும் இருக்க வேண்டாம். நல்லது!

**வரதானம்: எப்பொழுதும் சுயமரியாதையில் நிலைத்திருந்து பணிவான நிலை மூலமாக அனைவருக்கும் மரியாதை கொடுக்கக்கூடிய மரியாதைக்குரிய, பூஜைக்குரியவர் ஆகுக!**

எது தந்தையின் மகிமையாக இருக்கிறதோ அது தான் உங்களுடைய சுவமானம், சுவமானத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் பணிவானவர் ஆகி விடுவீர்கள், பிறகு அனைவரிடமிருந்து இயல்பாகவே மரியாதை கிடைத்துக் கொண்டே இருக்கும். மரியாதை கேட்பதினால் கிடைக்காது ஆனால் மரியாதை கொடுப்பதினால், சுவமானத்தில் நிலைத்திருப்பதினால், மரியாதையை தியாகம் செய்வதினால் அனைத்து மரியாதைக்குரியவர் மற்றும் பூஜைக்குரியவர் ஆவதற்கான பாக்கியம் கிடைத்து விடுகிறது. ஏனென்றால் மரியாதை கொடுப்பது, கொடுப்பதல்ல ஆனால் பெறுவது.

**சுலோகன்: அனைத்தையும் தெரிந்தும், கூடவே செய்பவராகவும் ஆகி, சக்தியற்ற ஆத்மாக்களுக்கு அனுபவங்களின் பிரசாதத்தைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 29.03.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞானத்தின் சாரம் -நான் மற்றும் என்னுடைய பாபா !

பாப்தாதா அனைத்து குழந்தைகளை சம்பன்ன சொரூபமாக ஆக்குவதற்காக தினசரி வெவ்வேறு முறையில் ஞானத்துளிகளைக் கூறிக் கொண்டே இருக்கிறார். அனைத்து துளிகளின் சாரம் -அனைத்தையும் சாரத்தில் கொண்டு வந்து புள்ளி ஆகி விடுங்கள். இந்த பயிற்சி நிரந்தரமாக இருக்கிறதா? எந்தக் காரியத்தையும் செய்து கொண்டே நான் ஜோதி பிந்து, இந்த கர்மேந்திரியங்கள் மூலமாக இந்தக் காரியத்தை செய்விப்பவன் என்ற நினைவு இருக்கிறதா? இந்த முதல் பாடத்தை சொரூபத்தில் கொண்டு வந்திருக்கிறீர்களா? தொடக்கமும் இது தான் மேலும் முடிவிலும் இதே சொரூபத்தில் நிலைத்திருந்து செல்ல வேண்டும். அப்படி ஒரு நொடியின் ஞானம், ஒரு நொடியில் ஞான சொரூபமாக ஆகியிருக்கிறீர்களா? விஸ்தாரத்தை சுருக்கமாக ஒரு நொடியில் கொண்டு வருவதற்கான பயிற்சி இருக்கிறதா? எந்தளவு விஸ்தாரத்தில் வருவது கலபமாக இருக்கிறதோ, அந்தளவு சார சொரூபமாவது சுலபமாக அனுபவம் ஆகிறதா? சார சொரூபத்தில் நிலைத்திருந்து பின்பு விஸ்தாரத்தில் வர வேண்டும் என்ற இந்த விஷயத்தை மறந்து விடுவதில்லையே? சார சொரூபத்தில் நிலைத்திருந்து விஸ்தாரத்தில் வருவதினால் எந்த விதமான விஸ்தாரத்தின் ஈர்ப்பு இருக்காது. விஸ்தாரத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டுக் கொண்டே வாணனை செய்து கொண்டே ஏதோ ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்று அனுபவம் செய்வீர்கள். அந்த மாதிரி பயிற்சி எப்பொழுதுமே நிலைத்திருக்க வேண்டும். இதைத் தான் சுலபமான நினைவு என்று கூறுவது.

ஞான வாழ்க்கையிலும் அஞ்ஞான வாழ்க்கையிலும், ஒவ்வொரு காரியத்திலும் இரண்டு வார்த்தைகள் உபயோகிக்கப்படுகின்றன. அவை யாவை? "நான் மற்றும் என்னுடையது", இரண்டு வார்த்தைகளில் ஞானத்தின் சாரமும் இருக்கிறது. நான் ஜோதி பிந்து மற்றும் சிரேஷ்ட ஆத்மா பீரம்மா குமார் அல்லது குமாரி மற்றும் என்னுடையவரோ ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. என்னுடைய பாபா இதில் அனைத்தும் வந்து விடுகிறது. என்னுடைய பாபா என்றால்,

என்னுடைய ஆஸ்தியும் அதில் வந்து விடுகிறது. அப்படி இந்த நான் மற்றும் என்னுடைய என்ற இரண்டு வார்த்தைகளோ உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? என்னுடைய பாபா என்று கூறுவதினால் அனேக விதமான என்னுடையது என்பவை உள்ளடங்கி விடுகிறது. அப்படி இரண்டு வார்த்தைகளை நினைவில் கொண்டு வருவது கடினமா அல்லது சுலபமா? இதற்கு முன்பும் இந்த இரண்டு வார்த்தைகளைப் பேசினீர்கள், இப்பொழுதும் இதே இரண்டு வார்த்தைகளை கூறுகிறீர்கள் ஆனால் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? 'நான் மற்றும் என்னுடையது" என்ற இந்த முதல் பாடத்தை மறக்க முடியுமா? இதையோ சின்னக் குழந்தை கூட நினைவு செய்ய முடியும். நீங்கள் ஞானம் நிறைந்தவர்கள் தான் இல்லைய? அப்படி ஞானம் நிறைந்தவர்கள் இரண்டு வார்த்தைகளை நினைவு செய்ய முடியாது என்று இருக்க முடியுமா என்ன? இதே இரண்டு வார்த்தைகளினால் மாயாவை வென்றவர், தடையற்றவர், மாஸ்டர் சர்வசக்திவான் ஆக முடியும். இரண்டு வார்த்தைகளை மறக்கிறீர்கள் என்றால் மாயா ஆயிரம் ரூபங்களில் வருகிறது. இன்று ஒரு ரூபத்தில் வரும், நாளை இன்னொரு ரூபத்தில் வரும். ஏனென்றால், மாயாவின் என்னுடையது என்னுடையது என்பது மிக நீளமானது. மேலும் என்னுடைய பாபாவே ஒரே ஒருவர் தான். ஒருவரின் எதிரில் மாயாவின் ஆயிரம் ரூபங்களும் முடிவடைந்து விடுகிறது. அந்த மாதிரி மாயாவை வென்றவர் ஆகி விட்டீர்களா? மாயாவிற்கு விவாகரத்து கொடுப்பதில் ஏன் காலம் எடுத்துக் கொள்கிறீர்கள்? ஒரு நொடிக்கான விஷயம், இதில் பல வருடங்கள் ஏன் ஆகிறது? விட்டீர்கள் என்றால் விடுபடும். என்னுடைய பாபா பிறகு அவரின் நினைவிலேயே மூழ்கியிருங்கள். தந்தைக்கு அடிக்கடி இதே பாடத்தைத் தான் கற்பிக்க வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் மற்றவர்களுக்கு கற்பிக்கவும் செய்கிறீர்கள். இருந்தும் மறந்து விடுகிறீர்கள். மற்றவர்களுக்கு நினைவு செய்யுங்கள், நினைவு செய்யுங்கள் என்று கூறுகிறீர்கள். பிறகு நீங்களே ஏன் மறந்து விடுகிறீர்கள்? மறக்காதவராக ஆவதற்கு எந்த தேதியை நிர்ணயம் செய்வீர்கள். அனைவருக்கும் ஒரே தேதி இருக்குமா அல்லது வேறு வேறாகவும் இருக்க முடியுமா? எத்தனை பேர்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்களோ அத்தனை பேர்களுக்கும் ஒரே தேதியாக இருக்க முடியுமா? பிறகு தேவையற்ற, வீணான) விஷயங்களைப் பேசுவது முடிந்து விடும். குஷியான விஷயங்களைக் கண்டிப்பாகக் கூறுங்கள் ஆனால் பிரச்சனைகளைப் பேசாதீர்கள். எப்படி கண்காட்சி மற்றும் நிகழ்ச்சிகளைச் செய்கிறீர்கள் என்றால், திறப்பு விழாவிற்காக கத்திரிக்கோல் மூலம் மலர் மாலையை வெட்ட வைக்கிறீர்கள். அப்படி இன்று என்ன செய்வீர்கள்? நீங்களே கத்திரிக்கோலைக் கையில் எடுப்பீர்கள் அதிலேயும் (கத்திரிக்கோலிலும்) இரண்டு பக்கமும் ஒன்றாக இணையும் போது ஏதாவது ஒன்று

வெட்டப்படுகிறது, அப்படி ஞானம் மற்றும் யோகா இரண்டின் இணைவது மூலம் மாயாவின் பிரச்சனைகளின் பந்தனம் அழிந்து விட்டது என்ற இந்த குஷியான செய்தியைக் கூறுங்கள். இன்று இதே பிரச்சனைகளின் பந்தனத்தை துண்டிப்பதற்கான நாள் ஆகும். ஒரு நொடிக்கான விஷயம் தான் இல்லையா?' தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா'? யார் யோசித்த பிறகு இந்த பந்தனத்தை துண்டிப்பீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பிறகோ அனைத்து வெளிநாட்டினரும் தீவிர முயற்சி செய்பவர்களின் பட்டியலில் பந்து விடுவார்கள். கேட்கும் நேரத்திலேயே அனைவரின் முகம் மாறிவிட்டது. அப்படி எப்பொழுது நிரந்தரமாக ஆகி விட்டீர்கள் என்றால் என்னவாகி விடும்? அனைவரும் நடைமுறையில் போகும்போதும் வரும்போதும் அவ்யக்த வதனத்தின் பரிஷ்தாக்களாகத் தென்படுவீர்கள். பிறகு சங்கமயுகம் பரிஷ்தாக்களின் யுகமாக ஆகி விடும். இதே பரிஷ்தாக்கள் மூலமாக பின்பு தேவதைகள் வெளிப்படுவார்கள். பரிஷ்தாக்களை தேவதைகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேவதைகளின் பிரவேசம் சம்பன்ன உடலில் ஆகும் இல்லையா? இவர்கள் 16-கலைகள் நிரம்பியவர்களாக ஆகட்டும். பிறகு வரமாலையை அணிவிக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை கலைகள் தயாராகி இருக்கின்றன? சூட்சும வதனத்தில் சம்பன்ன பரிஷ்தா சொரூபம் மற்றும் தேவதைகளின் சந்திப்பின் காட்சி மிக நன்றாக இருக்கும். பரிஷ்தாக்களுக்குப் பதிலாக எப்பொழுதும் முயற்சி செய்யும் நிலையே இருக்கிறது என்றால், தேவதைகளும் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். நேரத்திற்கு ஏற்றாற்போல் அருகில் வந்து கொண்டும், சம்பன்னமாக இல்லாத காரணத்தினால் பின் தங்கியும் விடுகிறார்கள். இந்த வரமாலை அணிவிக்கும் தேதியையும் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த தேதி எதுவாக இருக்கும்? தேதி நிச்சயிக்கப்படுவதினால் எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம் வந்து விடுகிறது. அந்த தேதியோ இன்றாக ஆகி விட்டது. அப்படி இதுவும் அருகாமையானதாக ஆகி விட்டது இல்லையா? ஏனென்றால், தடையற்றவர் ஆகுக! என்ற நிலை சிறிது காலம் இடைவிடாதிருக்க வேண்டும். அப்பொழுது தான் வெகு காலம் தடையற்ற இராஜ்யம் செய்ய முடியும். இப்பொழுதோ பிரச்சனைகள் மற்றும் சமாதானத்தின் ஞானம் நிறைந்தவர்களாகவும் ஆகி விட்டீர்கள். எந்த விஷயத்தை யாரிடம் கேட்கிறீர்களோ அதற்கு முன்பு ஞானத்தின் ஆதாரத்தினால் இது இந்த மாதிரி இருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளவும் செய்கிறீர்கள். மற்றவர்களுக்காக கஷ்டப்படுவதற்குப் பதிலாக, நேரத்தை இழப்பதற்குப் பதிலாக அதே ஞானத்தின் லைட் மற்றும் மைட்டின் ஞான ஒளி மற்றும் சக்தி) ஆதாரத்தில் ஒரு நொடியில் முடித்து விட்டு ஏன் முன்னேறிச் செல்லக்கூடாது. என்ன நடக்கிறது

என்றால் மாயா தூரத்திலிருந்தே அந்த மாதிரி நிழல் போடுகிறது. அதன் மூலம் பலமற்றோராக ஆக்கி விடுகிறது. நீங்கள் அந்த நேரத்திலேயே தொடர்பை சரி செய்யுங்கள். தொடர்பை சரி செய்வதினால் மாஸ்டர் சர்வசக்திவானாக இயல்பாகவே ஆகி விடுவீர்கள்.

மாயா தொடர்பைத் தான் தொய்வாக்குகிறது, அதன் பாதுகாப்பை மட்டும் செய்யுங்கள். எங்கேயோ தொடர்பு தொய்வான காரணத்தினால் தான் பலமின்மை வந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். என்ன ஆனது, ஏன் ஆனது என்று இதை யோசிக்காதீர்கள். ஏன் என்பதற்குப் பதிலாக தொடர்பையே சரி செய்து விட்டீர்கள் என்றால் அனைத்தும் முடிந்து விடும். சகயோகத்திற்காக நேரம் கொடுங்கள் அது ஒன்றும் பாதகம் இல்லை. யோகத்தின் வாயுமண்டலம், வைப்ரேஷனை உருவாக்குவதற்காக சகயோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள், மற்றபடி மற்ற வீணான விஷயங்கள் பேசுவது மற்றும் விஷயத்தின் விஸ்தாரத்தில் செல்வது இதற்காக யாருடனும் ஒத்துப் போகாதீர்கள். அது நற்சிந்தனையாளராக ஆக்கி விடும் இதுவோ பரசிந்தனை ஆகி விடும். அனைத்து பிரச்சனைகளுக்குமான மூல காரணம் தொடர்பு தொய்வாகுவது. இந்த ஒரு விஷயம் தான் இருக்கிறது. நாடகத்தில் எனக்கு இல்லை, எனக்கு சகயோகம் கிடைக்கவில்லை. எனக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்ற இவை அனைத்தும் வீணான விஷயங்கள். அனைத்துமே கிடைத்து விடும், நீங்கள் தொடர்பை சரியாக வைத்தீர்கள் என்றால் அனைத்து சக்திகளும் உங்கள் எதிரில் சுற்றிக் கொண்டே இருக்கும். எங்காவது செல்வதற்குக் கூட நேரமே கிடைக்காது. பாப்தாதாவின் எதிரில் சென்று அமர்ந்து விட்டீர்கள் என்றால் தொடர்பை இணைப்பதற்காக பாப்தாதா உங்களுடைய சகயோகி ஆகி விடுவார். ஒருவேளை ஓரிரு விநாடி அனுபவம் ஆகவில்லை என்றாலும் குழப்பம் அடைந்து விடாதீர்கள். துண்டிக்கப்பட்டிருக்கும் தொடர்பை இணைப்பதில் ஒரு விநாடி அல்லது நிமிடமும் ஆகலாம். எனவே தைரியத்தை இழக்காதீர்கள், நிச்சயம் என்ற அஸ்திவாரத்தை அசைக்காதீர்கள். மேலும் நிச்சயத்தை இன்னும் அதிகமாக பரிபக்குவம் ஆக்குங்கள். பாபா என்னுடையவர், நான் பாபாவினுடையவன் என்ற இதே ஆதாரத்தினால் நிச்சயத்தின் அஸ்திவாரத்தை இன்னும் உறுதியாக்குங்கள். தந்தையையும் தன்னுடைய நிச்சபத்தின் பந்தனத்தில் கட்டிப் போட முடியும். தந்தையும் செல்ல முடியாது. இந்த அளவு அதிகாரம் குழந்தைகள் உங்களுக்கு இந்த நேரம் கிடைத்திருக்கிறது. அதிகாரத்தை ஞானத்தை உபயோகியுங்கள். குடும்பத்தின் சகயோகத்தை உபயோகியுங்கள். புகார் எடுத்துக் கொண்டு இங்கு வராதீர்கள். சகயோகம் வேண்டும் என்றும் கேட்காதீர்கள். நிகழ்ச்சியை நிர்ணயம்

செய்யுங்கள், என்ன செய்வேன், எப்படிச் செய்வேன் என்று பயப்படாதீர்கள் ஆனால் சும்மந்தத்தின் ஆதாரத்தில் சகயோகத்தின் ஆதாரத்தினால் செல்லுங்கள். புரிந்ததா? ஒரு நொடியில் கீழே இறங்குவது, ஒரு நொடியில் மேலே செல்வது என்ற இந்த சம்ஸ்காரத்தை மாற்றம் செய்யுங்கள். இரட்டை வெளிநாட்டினர் கீழே இறங்குவதிலும் விரைவாக இறங்கி விடுகிறார்கள். மேலே செல்வதிலும் விரைவாகச் சென்றுவிடுகிறார்கள். நடனமும் அதிகம் ஆடுகிறார்கள் ஆனால் பயப்படும் நடனத்தையும் நன்றாக ஆடுகிறார்கள். இப்பொழுது இதையும் பரிவர்த்தனை செய்யுங்கள். நீங்கள் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்கள், பிறகு இந்த நடனத்தை ஏன் ஆடுகிறீர்கள்?

உண்மை மற்றும் தெளிவு என்ற லிஃப்ட்டின் காரணமாக முன்னேறிக் கொண்டும் இருக்கிறீர்கள். இந்த விசேஷம் நம்பர் ஒன் ஆக இருக்கிறது. இந்த விசேஷத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். இப்பொழுது பயப்படும் நடனத்தை மட்டும் விட்டு விட்டீர்கள் என்றால் மிக வேகமாக முன்னேறிச் செல்வீர்கள். வரிசை எண்ணை மிக முன்னுக்கு எடுத்து விடுவீர்கள். இறுதியில் வந்தவரும் வேகமாகச் செல்வார், வேகமாகச் சென்று முதலில் வருவார் என்ற இந்த விஷயமோ அனைவருக்கும் உறுதியாக இருக்கிறது தான் இல்லையா'? குஷியின் நடனத்தையோ வேண்டும் என்றால் நன்றாக ஆடுங்கள். தந்தையின் கையை விடுகிறீர்கள் என்றால். இவர் எங்கே போய்க் கொண்டிருக்கிறார் என்று தந்தைக்கும் பிடிப்பதில்லை. தந்தையின் கையோடு கை கோர்த்திருந்தது என்றால் பிறகு பயப்படும் நடனமோ இருக்கவே முடியாது. மாயாவின் கரத்தை எப்பொழுது பிடிக்கிறீர்களோ அப்பொழுது தான் அந்த நடனம் இருக்கிறது. தந்தைக்கு உங்கள் மேல் அந்தளவு அன்பு இருக்கிறது அதன் காரணமாக நீங்கள் இன்னொருவருடன் செல்வதைப் பார்க்கவும் முடியாது. எவ்வளவு அலைந்து திரிந்து கடினங்களைச் சந்தித்து பிறகு தந்தையிடம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்று தந்தை தெரிந்திருக்கிறார் என்றால், குழப்பமடைய எப்படி விடுவார்? சாகார ரூபத்திலும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள், ஸ்தூலமாகவும் குழந்தைகள் எங்காவது செல்கிறார்கள் என்றால் பாப்தாதா குழந்தைகளிடம் வா குழந்தையே, வா குழந்தையே .... என்று கூறினார். எப்பொழுது மாயா தன்னுடைய ரூபத்தை காண்பிக்கிறது என்றால், இந்த வார்த்தையை நினைவு செய்யுங்கள்.

அமிர்தவேளையின் நினைவை சக்திசாலியாக ஆக்குவதற்காக முதலில் கன்னுடைய சொரூபத்தை சக்திசாலி ஆக்குங்கள். புள்ளி ரூபமாக ஆகி அமர்ந்தாலும் சரி அல்லது ஃபரிஷ்தா ரூபத்தில் அமர்ந்தாலும் சரி. என்ன காரணம்

என்றால் சுயம் தன்னுடைய ரூபத்தை மாற்றுவதில்லை. தந்தையை மட்டும் அந்த ரூபத்தில் பார்க்கிறீர்கள். தந்தையை புள்ளி ரூபத்தில் அல்லது ஃபரிஷ்தா ரூபத்தில் பார்ப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள் ஆனால் எதுவரை நீங்களே அந்த மாதிரி ஆகவில்லையோ அதுவரை சந்திப்பை செய்ய முடியாது. தந்தையை மட்டும் அந்த ரூபத்தில் பார்ப்பதற்கான முயற்சி செய்வதோ பக்தி மார்க்கத்திற்குச் சமமாக ஆகி விடுகிறது. எப்படி அவர்கள் தேவதைகளை அந்த ரூபத்தில் பார்க்கிறார்கள். மேலும் அவர்கள் எப்படி இருந்தார்களோ அப்படியே இருப்பார்கள். அந்த நேரம் வாயுமண்டலம் குஷியானதாக இருக்கும் கொஞ்ச நேரத்திற்கு பிரபாவம் ஏற்படும் ஆனால் அந்த அனுபவம் ஆவதில்லை. எனவே முதலில் சுய சொரூபத்தை மாற்றுவதற்கான பயிற்சி செய்யுங்கள். பிறகு மிக சக்திசாலியான நிலை அனுபவம் ஆகும்.

**தாதிகளுடன்:** விதவிதமானவர்களைப் பார்த்து குஷி ஏற்படுகிறது தான் இல்லையா? இருந்தாலும் இவர்கள் நல்ல தைரியம் உள்ளவர்கள். தன்னுடைய அனைத்தையும் மாற்றம் செய்வது மேலும் மற்றவர்களை தன்னுடையவர்களாக ஆக்குவது, இதுவும் இவர்களுடைய தைரியம் தான். அந்த அளவு மாறிவிட்டார்கள்! அவர்கள் நம்முடைய பரிவாரத்தை சேர்ந்தவர்கள் என்று தென்படுகிறார்கள். இதுவும் நாடகத்தில் இவர்களுடைய விசேஷ பங்காகும். என்னுடையவர்கள் என்ற உணர்வின் மூலமாகத் தான் இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் பார்த்து குஷி ஏற்படுகிறது. முதலிலோ ஒரே பாரதத்தைச் சேர்ந்தவர்களாக அனேக மரங்கள் அடங்கிய ஒரு கெட்டி மரமாக இருந்தது ஆனால் இப்பொழுது உலகின் நாலாபுறங்களில் உள்ள மூலைகளில் சென்று அனேக சம்ஸ்காரம், அனேக மொழிகள், அனேக உணவு பழக்கவழக்கங்கள் உடைய அனைத்து ஆத்மாக்களும் ஒரே மரத்தினுடையவர்களாக ஆகி விட்டார்கள். இதுவும் அதிசயம் தான். அனைவரும் ஒன்றாக இருந்தார்கள், மேலும் இருக்கிறார்கள், இன்னும் இருப்பார்கள். அந்த மாதிரியே அனுபவம் செய்கிறார்கள். அனைவரின் அன்பு விசேஷமாக கிடைத்தே விடுகிறது.

**பாண்டவர்களுடன்:** அனைவரும் பெரும் வள்ளல்கள் தான் இல்லையா? யாருக்காவது குஷி கொடுப்பது -இது அனைத்தையும் விட மிகப் பெரிய புண்ணிய காரியம். இது சேவை ஆகும். பாண்டவர்களோ எப்பொழுதும் ஒரே சீரான நிலையில், ஒற்றுமையில் இருக்கக்கூடிய சிக்கனத்தை கடைபிடிப்பவர்கள் தான் இல்லையா? அனைத்து பாண்டவர்களும் மகிமைக்குத் தகுதியானவர்கள் பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறார்கள். பக்தர்களுக்காகவோ இப்பொழுதும்

# 1981 அவ்யக்த முரளி

பூஜைக்குரியவர்களாகத் தான் இருக்கிறீர்கள், பிரத்யக்ஷமாக மட்டும் ஆகவில்லை (பாண்டர்வகளின் பூஜை கணேசர் மற்றும் ஹனுமானின் ரூபத்தில் மட்டும் தான் நடக்கிறது) இல்லை). இன்னும் தேவதைகளும் இருக்கிறார்கள். கணேசர் யார் என்றால், யார் அனைத்து விஷயங்களையும் வயிற்றுக்குள் நிரப்பி வைப்பவர். ஹனுமான் வால் மூலமாக அசுர சம்ஸ்காரங்களை எளிப்பவர். வாலும் சேவைக்காகத் தான் இருக்கிறது, கேட்க வேண்டும் என்ற வால் இல்லை. விஷயத்தை உள்ளடக்கி வைப்பவர்கள். அங்கு இங்கு பரப்புபவர்கள் இல்லை என்ற விசேஷம் பாண்டவர்களினுடையது. அனைவரும் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? பாண்டவபதி மற்றும் பாண்டவர்கள் எப்பொழுதும் இணைந்த ரூபத்தில் இருக்கிறார்கள். பாண்டபெதி பாண்டவர்களின்றி எதையும் செய்ய முடியாது. எப்படி சிவசக்தி இருக்கிறார்களோ அதே போல் பாண்டவபதியை முன்னுக்கு வைத்திருக்கிறோம். அப்படியானால் இணைந்த ரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? எப்பொழுதாவது தன்னை தனிமையில் இருப்பதாக உணர்வதில்லையே? நண்பன் யாராவது வேண்டும் என்று அப்படி உணரவில்லையே? யாரிடம் சொல்வது. எப்படிச் சொல்வது என்ற அந்த நிலை இல்லையே? யார் எப்பொழுதும் இணைந்த ரூபத்தில் இருக்கிறாரோ அவர் எதிரில் பாப்தாதா நடைமுறையில் அளைத்து உறவுகளினால் எதிரில் இருக்கிறார். எவ்வளவு ஈடுபாடு இருக்குமோ அந்த அளவு விரைவில் தந்தை எதிரில் இருப்பார். அவரோ நிராகாரமானவர். ஆகாரமாக இருக்கிறார். அவருடன் எப்படி பேசுவது என்று அப்படி இருக்க வேண்டாம். யார் அவர்களுக்குள் பேசிக் கொள்வதிலும் நேரத்தை செலவிடுவார்களோ அவர்கள் தேடுவார்கள். இங்கேயோ தேடுவதற்கும் மற்றும் நேரம் கொடுப்பதற்கான அவசியமே இல்லை. எங்கே அழைத்தாலும் அங்கே ஆஜராகி விடுவார். எனவே தான் அழைத்தேன் வந்தார் என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? இப்பொழுது நாளாக நாளாக எப்படி நடைமுறையில் இன்று பாப்தாதா வந்தார். எதிரில் வந்து கையைப் பிடித்தார், புத்தியால் அல்ல, கண்களால் பார்ப்பீர்கள். அனுபவம் ஏற்படும் அந்த மாதிரி அனுபவம் ஏற்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள் ஆனால் இதில் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற பாடம் மட்டும் உறுதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதாவது எல்லைக்குட்பட்ட வைராக்கியம் வருவதில்லையே? எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியமோ இருக்க வேண்டும். அனைவரும் யக்ஞ சேவையின் பொறுப்பு என்ற சவாலை எடுத்துக் கொண்டீர்கள். இப்பொழுது நாம் அனைவரும் ஒருவர். நம் அனைவரின் அனைத்துக் காரியமும் ஒன்று என்பது

மட்டும் நடைமு றயில் தென்பட வேண்டும். இப்பொழுது ஒரு ரிக்கார்டை நடப்பதை பதிவது) தயார் செய்ய வேண்டும், அது என்ன? அந்த ரிக்கார்ட் வாயினுடையது அல்ல. ஒவ்வொருவருக்கும் ரிகார்டு (மரியாதை) கொடுப்பதின் ரிக்கார்ட். இந்த ரிக்கார்ட் தான் (இசைத்தட்டு நாலாபுறங்களிலும் ஒலிக்கும். மரியாதையைக் கொடுக்க வேண்டும் மரியாதை பெற வேண்டும். சிறியவர்களுக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இந்த மரியாதையைக் கொடுக்கும் இசைத்தட்டு உருவாக வேண்டும். இப்பொழுது நாலாபுறங்களிலும் இந்த இசைத்தட்டிற்கான அவசியம் இருக்கிறது.

சுயமுன்னேற்றம் மற்றும் உலக முன்னேற்றம் இரண்டிற்குமான திட்டம் சேர்ந்தே இருக்க வேண்டும். தெய்வீக குணங்களின் மகத்துவத்தை சிந்தனை செய்யுங்கள். ஒவ்வொரு குணத்தையும் கடைபிடிப்பதில் என்ன பிரச்சனை வருகிறது என்று சிந்தியுங்கள். அதை அகற்றிவிட்டு குணத்தைக் கடைபிடித்து நாலாபுறங்களிலும் அனைவரும் அனுபவம் செய்யும் அளவிற்கு நறுமணத்தை பரப்புங்கள். புரிந்ததா?

**வரதானம்: ஒரே பலம் மற்றும் ஒரே ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையின் ஆதாரத்தில் அடைய வேண்டிய இலக்கை அருகில் அனுபவம் செய்யக்கூடிய தைரியம் உள்ளவர்கள் ஆகுக!**

உயர்ந்த இலக்கை சென்றடைவதற்கு முன்பு சூறாவளி, புயல் வரத்தான் செய்யும், படகு அக்கறை செல்வதற்கு முன்பு இடையில் நீர்ச்சுழிகளை கடந்து செல்லத்தான் வேண்டும். எனவே அவசரத்தில் பயப்படாதீர்கள், களைப்படையாதீர்கள் மற்றும் நிற்காதீர்கள். துணைவனை துணையாக வைத்துக் கொண்டீர்கள் என்றால் ஒவ்வொரு கடினமும் சுலபம் ஆகி விடும், தைரியம் உள்ளவராகி தந்தையின் உதவிக்கு பாத்திரமானவர் ஆகுங்கள். ஒரே பலம் ஒரே நம்பிக்கை என்ற இந்த பாடத்தை எப்பொழுதும் உறுதியாக வைத்துக் கொண்டீர்கள் என்றால் இடையில் உள்ள நீர்ச்சுழிகளை சுலபமாக கடந்து சென்றுவிடுவீர்கள். பிறகு அடைய வேண்டிய இலக்கு அருகில் அனுபவம் ஆகும்.

**சுலோகன்: யார் இயற்கையையும் சேர்த்து ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுபபாவனை வைக்கிறாரோ அவர் தான் உலகிற்கு நன்மை செய்பவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞான மார்க்கத்தின் நினைவுச்சின்னம் பக்தி மார்க்கம்!

இன்று மதுபன்னின் பூமியில் எந்த சந்திப்புக் கூட்டம் நடக்கிறது? இன்று அனேக நதிகள் மற்றும் கடலின் சந்திப்புக் கூட்டமாகும். ஒவ்வொரு சிறிய மற்றும் பெரிய ஞான நதிகள் பதீத பாவனர் (தூய்மையில்லாதவர்களை தூய்மைப்படுத்துபவர்) தந்தைக்குச் சமமாக பதீத பாவனிகள். தந்தை தன்னுடைய சேவையின் துணைவர்களாக இருப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாரத தேசத்திலிருந்து வெளிநாடு வரை பதீத பாவனி நதிகள் சென்றடைந்து விட்டன. பாரதம் மற்றும் வெளிநாட்டின் ஆத்மாக்கள் தூய்மையாகி மகிமையின் பாடலை எவ்வளவு பாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மனதின் பாடல் பிறகு துவாபரயுகத்தில் வாய் மூலம் பாடும் பாடலாக ஆகி விடுகிறது. இப்பொழுது தந்தை சிரேஷ்ட ஆத்மாக்களின் கிரேஷ்ட காரியத்தின், சிரேஷ்ட வாழ்க்கையின் கீர்த்தனை பாடுகிறார். பிறகு பக்தி மார்க்கத்தில் கீர்த்தனை ஆகி விடும். இப்பொழுது அதீந்திரிய சுகத்தின் பிராப்தியின் காரணமாக குஷியில் ஆத்மாக்களின் மனம் நடனமாடுகிறது. மேலும் பிறகு பக்தியில் கால்களால் நடனம் ஆடுவார்கள். இப்பொழுது சிரேஷ்ட ஆத்மாக்களின் குணங்களின் மாலையை ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் வர்ணனை செய்கிறார்கள். பிறகு பக்தி மார்க்கத்தில் மணிகள் அடங்கிய மாலையை ஜபித்துக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது நீங்கள் அனைவரும் சுயம் தந்தைக்கு போக் சுவீகாரம் (பிரசாதம் படைப்பது) செய்விக்கிறீர்கள், இதன் பலனாக பக்தியில் உங்கள் அனைவருக்கும் போக் அதாவது பிரசாதம் படைப்பார்கள். எப்படி இப்பொழுது நீங்கள் அனைவரும் தந்தை ஏற்றுக் கொள்ளாத எந்தவொரு பொருளையும் ஏற்றுக் கொள்வதில்லை, 'முதலில் தந்தை' இந்த அன்பு எப்பொழுதும் இதயத்தில் இருக்கிறது, அதேபோலவே பக்தியில் தேவ ஆத்மாக்கள் நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. முதலில் தேவதை பின்பு நாம். எப்படி இப்பொழுது முதலில் தந்தை பிறகு நாம் என்று கூறுகிறீர்கள். அப்படி அனைத்தையும் காப்பி செய்திருக்கிறார்கள். நீங்கள் நினைவு சொருபமாக ஆகிறீர்கள். அவர்கள் நினைவுச் சின்னத்தின் நினைவு சொரூபமாக இருக்கிறார்கள். எப்படி நீங்கள்

# 1981 அவ்யக்த முரளி

அனைவரும் துண்டிக்க முடியாதபடி அந்த ஒரே ஒருவரின் நினைவில் இருக்கிறீர்கள், யாரும் அசைக்கவே முடியாது. மாற்ற முடியாது, அதே போலவே நௌகா பக்தன், உண்மையான பக்தன் முதலில் பக்தன் தன்னுடைய இஷ்ட தேவதை மேல் உள்ள நிச்சயத்தில் துண்டிக்க முடியாத மற்றும் உறுதியான நிச்சயபுத்தி உடையவராக இருப்பார். அனுமானின் பக்தனுக்கு இராம் கிடைத்து விட்டால் கூட அவர் அனுமானின் பக்தனாகவே இருட்பார். அந்த மாதிரி உறுதியான விஸ்வாசம் உள்ளவராக இருப்பார்கள். உங்களுடைய ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை என்ற இதை காப்பி செய்திருக்கிறார்கள்.

நீங்கள் அனைவரும் இப்பொழுது ஆன்மீக யாத்திரிகர்கள் ஆகிறீர்கள். உங்களுடையது நினைவின் யாத்திரை மற்றும் அவர்களுடையது நினைவுச் சின்னத்தின் யாத்திரை. நீங்கள் தற்சமயம் ஞான ஸ்தம்பம். சாந்தி ஸ்தம்பத்தின் நாலாபுறங்களிலும் ஞானக் கல்வியின் நினைவு சொரூப மகாவாக்கியத்தின் காரணமாக சுற்றி வருகிறீர்கள் மேலும் அனைவரையும் இதில் ஈடுபடுத்துகிறீர்கள். நீங்கள் ஞானக்கல்வியின் காரணமாக சுற்றி வருகிறீர்கள். ஒரு பக்கத்தைக் கூட விடுவதில்லை. எப்பொழுது நாலாபக்கங்களிலும் சுற்றி வந்து முடிவடைகிறது என்றால், அனைத்தையும் பார்த்தோம். அனுபவம் செய்தோம் என்று அப்பொழுது தான் நினைக்கிறீர்கள். பக்தர்கள் உங்களுடைய நினைவு சொரூபத்தைச் சுற்றி வரத் தொடங்கினார்கள். எதுவரை சுற்றி வருவதில்லையோ அதுவரை பக்தி முழுமையாகவில்லை என்று நினைக்கிறார்கள். அனைவரின் அனைத்து காரியம் மற்றும் குணம் சூட்சம சொரூபத்திலிருந்து ஸ்தூல ரூபமாக பக்தியில் காப்பி செய்திருக்கிறார்கள் எனவே பாப்தாதா அனைத்து தேவ ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் ஒருவர் மேல் உறுதியான நிச்சய புத்தியை வையுங்கள் என்று அறிவுரை கூறுகிறார். ஒருவேளை நீங்கள் இப்பொழுது ஒருவரின் நினைவில் ஒரு சீரான இரசனையை அனுபவம் செய்யவில்லை. ஒருமித்த நிலையில் இருப்பதில்லை. உறுதியானவராக ஆவதில்லை என்றால் உங்களுடைய பக்தர் உறுதியான நிச்சயபுத்தி உடையவராக இருக்கமாட்டார். இங்கு உங்களுடைய புத்தி அலைகிறது மற்றும் பக்தர்கள் கால்களால் அலைவார்கள். சில நேரம் யாரையாவது தேவதை ஆக்குவார்கள், சில நேரம் வேறு யாரையாவது ஆக்குவார்கள். இன்று இராமின் பக்தனாக இருப்பார். நாளை கிருஷ்ணனின் பக்தன் ஆகி விடுவார். அனைத்து பிராப்திகளும் ஒருவர் மூலமாக' என்ற அந்த நிலை உங்களுடையதாக இருக்கவில்லை என்றால் பக்த ஆத்மாக்களும் வெவ்வேறு பிராப்திக்காக வேறு வேறு தேவதைகளிடம் அலைவார்கள். நீங்கள் உங்களுடைய உயர்ந்த மதிப்பு மரியாதையிலிருந்து விலகிச் சென்றுவிடுகிறீர்கள் என்றால் உங்களுடைய

பக்தர்களும் பிரச்சனைகளுக்கு உள்ளாகிறார்கள். எப்படி இங்கே நீங்கள் நினைவு மூலமாக ஆன்மீக அனுபவங்களை செய்வதற்குப் பதிலாக தன்னுடைய பலஹீனங்களின் காரணமாக பிராப்திகளுக்குப் பதிலாக முறையீடுகள் செய்கிறீர்கள். மனமுடைந்து போய் முறையீடு செய்கிறீர்கள் அல்லது அன்போடும் முறையீடு செய்கிறீர்கள் என்றால் உங்களுடைய பக்தர்களும் முறையீடு செய்து கொண்டே இருப்பார்கள். முறையீடுகளையோ அனைவரும் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். எனவே இப்பொழுது அதை நாம் கூறுவதில்லை.

இரக்க மனமுடையவர் ஆகுங்கள், எப்பொழுதும் இரக்கத்தின் பாவனை வையுங்கள் என்று தந்தை கூறுகிறார் ஆனால் இரக்கத்திற்குப் பதிலாக அகம்பாவம் அல்லது (வகம் பாவம் யூகம் செய்யும் உணர்வு ஆகி விடுகிறது. அதனால் பக்தர்களிலும் அப்படி ஆகிறது. யூகம் செய்வது என்றால் இதைச் செய்யலாமா, அந்த மாதிரி ஆகுமா, ஆகாதா, அப்படியோ ஆகி விடாதே. இதில் தான் இரக்கத்தை மறந்து விடுகிறார்கள். தனக்காகவும் இரக்க மனம் மற்றும் அனைவருக்காகவும் இரக்க மனம் வேண்டும். தனக்காகவும் யூகம் செய்வது இருக்கிறது. மேலும் மற்றவர்களுக்காகவும் யூகம் (அனுமானம்) செய்வது இருக்கிறது. ஒருவேளை யூகத்தின் நோய் அதிகரித்து விட்டது என்றால் கேன்சருக்கு சமமான நோய் ஆகி விடும். முதல் நிலையில் இருப்பவர் இருந்தாலும் பிழைத்துக் கொள்வார் ஆனால் கடைசி நிலையில் உள்ளவர் பிழைப்பது கடினம். உயிரோடும் இருக்க முடியாது, இறக்கவும் முடியாது. அதே போல் இங்கேயும் முழுமையான அஞ்ஞானி ஆக முடியாது; ஞானியாகவும் ஆக முடியாது. அவர்களுடைய அடையாளமாக ஒரே ஒரு சுலோகனை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பார்கள் அல்லது நான் அப்படித் தானே இருக்கிறேன் என்று கூறுவார் அல்லது மற்றவர்களுக்காக இவர் இப்படித் தான் என்று கூறுவார். எவ்வளவு தான் மாறுவதற்கு முயற்சி செய்தாலும் மீண்டும் மீண்டும் இப்படி கூறுவது இருக்கும். கேன்சர் நோய் உள்ளவர் நன்றாக சாப்பிடுவார். குடிப்பார். வெளி ரூபம் நல்லதாக தென்படும், ஆனால் உள்ளே சத்து இல்லாதவராக இருப்பார். யூகத்தின் நோய் உள்ளவர் வெளிமுகமாக தன்னை நன்றாக நடத்திக் கொள்வார், வெளிப்படையாக எந்தக் குறையும் இருக்காது. வேறு யாராவது வைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் ஆனால் உள்ளுக்குள்ளேயே ஆத்மா அதிருப்தியாக இருக்கும் காரணத்தினால் குஷி மற்றும் சுகத்தின் பிராப்தியில் பலஹீனமானவராக ஆகிக் கொண்டே இருப்பார். அதே மாதிரி தான் இன்னும் ஒன்று அகம்பாவம். இரக்க உணர்வின் அடையாளம் ஒவ்வொரு வார்த்தையில், ஒவ்வொரு எண்ணத்தில் ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை. இரக்க உணர்வு உள்ளவர்களுக்கு எங்கு

பார்த்தாலும் தந்தையே தந்தை தான் தென்படுவார். மேலும் அகம்பாவம் உள்ளவர்களுக்கு எங்கு சென்றாலும், எங்கே பார்த்தாலும் நானே நான் தான். அவர் நான் நான் என்ற மாலையை ஜபிப்பவர். மேலும் அவர்கள் (இரக்க மனமுடையவர்கள்) தந்தையின் மாலையை ஜபிப்பவர்கள். நான் என்பது தந்தையில் உள்ளடங்கி விட்டது. இதைத் தான் அன்பில் ஐக்கியமாகி விட்டார் என்று கூறுவது. அவர் அன்பில் ஐக்கியமான ஆத்மா! மேலும் இவர் நான் நான் என்பதில் ஐக்கியமாகியிருக்கும் ஆத்மா. இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? உங்களை காப்பி செய்பவர்கள் முழு கல்பத்திலும் இருக்கிறார்கள். பக்தர்களின் மாஸ்டர் பகவான் நீங்கள், சத்யுகம், திரேதாயுகத்தில் பிரஜைகளுக்கான பிரஜாபிதா நீங்கள். சங்கமயுகத்தில் பாப்தாதாவின் பெயர் மற்றும் காரியத்தை பிரத்யக்ஷம் செய்வதற்கு ஆதாரமானவர்கள் நீங்கள். தன்னுடைய உயர்ந்த காரியம் மூலமாகவும், மாற்றம் மூலமாகவும் தந்தையின் பெயரை புகழடையச் செய்யுங்கள். விரும்பினால் வீணான காரியங்கள் மூலமாக, சாதாரண நடத்தை மூலமாக தந்தையின் பெயருக்கு களங்கமும் ஏற்படுத்துங்கள். இது குழந்தைகள் உங்கள் கையில் இருக்கிறது.

விநாஷ நேரத்தில் உலகிற்காக பெரிய நன்மை செய்பவர்கள் மகாவரதானி, மகாதானி, மகான் புண்ணிய ஆத்மாக்களின் சொரூபத்தில் இருப்பார்கள். அப்படி அனைத்து காலத்திலும் எவ்வளவு மகானாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு காலத்திலும் ஆதாரர் நீங்கள். அந்த மாதிரி தன்னை நினைக்கிறீர்களா? தொடக்கத்திலும், மத்தியிலும் மேலும் இறுதியிலும் அப்படி மூன்று காலங்களின் அறிமுகம் நினைவு வந்தது. நீங்கள் ஒருவர் மட்டும் அல்ல, உங்களுக்கு பின்னால் அனேகர்கள் உங்களை காப்பி செய்பவர்கள் இருக்கிறார்கள். எனவே எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்திலும் கவனம் வேண்டும். நல்லது

**டீச்சர்களுடன்::** டீச்சர்களின் வாஸ்தவமான சொரூபமே நிரந்தர சேவாதாரி. இதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் சேவாதாரியின் விசேஷம் என்ன? சேவாதாரி எந்த விஷயத்தினால் வெற்றி அடைபவர் ஆகிறார்? சேவையில் எப்பொழுதும் மூழ்கியிருக்கும் சேவாதாரியின் விசேஷமாக நான் என்ன சேவை செய்து கொண்டிருக்கிறேன். நான் சேவை செய்தேன் என்ற இந்த சேவை உணர்வின் தியாகமும் இருக்க வேண்டும். இதைத் தான் நீங்கள் தியாகத்தினையும் தியாகம் என்று கூறுகிறீர்கள். நான் சேவை செய்தேன் என்றால் சேவை வெற்றி அடையாது. நான் செய்யவில்லை, ஆனால் நான் செய்பவன். தந்தை செய்விப்பவர் என்றால் தந்தையின் மகிமை வரும். எங்கு நான் சேவாதாரி, நான் செய்தேன், நான்

செய்வேன் என்றிருந்தால் இந்த நான் என்ற தன்மை சேவாதாரியின் கணக்குப்படியும் 'நான் என்பது வருகிறதோ அது சேவையில் வெற்றி அடைய விடாது. ஏனென்றால் சேவையில் எப்பொழுது நான் என்பது கலந்து விடுகிறதோ அது சுயநலம் நிரம்பிய சேவை ஆகி விடுகிறது. தியாகம் நிரம்பிய சேவையாக இருப்பதில்லை. உலகிலும் கூட இரண்டு விதமான சேவாதாரிகள் இருக்கிறார்கள். ஒருவர் சுயநலமாக செய்யும் சேவாதாரிகள், இன்னொருவர் அன்பின் காரணமாக தியாகம் செய்து சேவை செய்பவர். அப்படி நீங்கள் எந்த மாதிரியான சேவாதாரிகள்? நான் என்பது பாபாவின் அன்பில் ஐக்கியமாகி விட்டது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா, இவரைத் தான் உண்மையான சேவாகாரி என்று கூறுவது, நான் மற்றும் நீ என்ற பாஷை முடிவடைந்தது. செய்விப்பவர் பாபா, நான் ஒரு கருவி. யார் வேண்டும் என்றாலும் கருவி ஆகி விடலாம். நான் என்பது எப்பொழுது வருகிறதோ, நான் என்ற தன்மை என்னவாக இருக்கும்? மே, மே நான், நான் என்று யார் கூறுவார்? (ஆடு). நான், நான் என்று கூறுவதினால். பற்றுதலின் கிரீடம் வந்து விடுகிறது. எப்படி ஆட்டின் கழுத்து எப்பொழுதும் குனிந்து இருக்கும் மற்றும் சிங்கத்தின் கழுத்து எப்பொழுதும் மேல் நோக்கி இருக்கும். அப்படி எங்கு நான் என்பது வந்து விடுகிறதோ அங்கு ஏதாவது விருப்பத்தின் காரணமாக குனிந்து விடுவார்கள். எப்பொழுதும் போதையில் தலை உயர்ந்து இருக்காது. ஏதாவது ஒரு தடையின் காரணமாக தலை வெள்ளாட்டிற்கு சமமாக கீழே இருக்கும். குடும்ப வாழ்க்கை கூட வெள்ளாட்டிற்குச் சமமான வாழ்க்கை ஆகும். ஏனென்றால் வளைந்து கொடுக்கிறார்கள் இல்லையா? பணிவின் காரணமாக வளைந்து கொடுப்பது என்பது வேறு ஆகும். அதை மாயா தலைகுனிய வைக்கவில்லை. இதுவோ மாயா வெள்ளாடாக ஆக்கி விடுகிறது. வலுக்கட்டாயமாக தலையைக் குனிய வைத்து விடுகிறது. கண்களை குனிய வைத்து விடுகிறது. சேவையில் நான் எனது என்பது கலப்பது என்றால் பற்றுதல் கிரீடம் அணிந்தவர் ஆவது. அது நபரின் பற்றுதலின் கிரீடமாகவும் இருக்கலாம், தான் செய்யும் பாகத்தின் பற்றுதலின் கிரீடமாகவும் இருக்கலாம், பொருட்களின் உடையதாகவும் இருக்கலாம் அல்லது வாயுமண்டலத்தினுடையதாகவும் இருக்கலாம். ஏதாவது ஒன்றின் பற்றுதலின் கிரீடம் அணிந்தவர் ஆகி விடுவார். தன்னுடைய சம்ஸ்காரங்களின் பற்றுதலின் கிரீடமணிந்தவராக ஆகி விடுகிறார்கள். பற்றுதலின் கிரீடம் என்றால் பர்வஷ் அதாவது மற்றதின்/மற்றவர்களின் வசமானவர்கள். யார் பற்றுதலின் கிரீடம் அணிந்தவராக இருப்பாரோ அவர் கண்டிப்பாக பிறரது வசமாகத் தான் இருப்பார். சேவாதாரியில் இந்த சம்ஸ்காரம் இருக்கவே முடியாது.

# 1981 அவ்யக்த முரளி

சேவாதாரிகள் சவால் கொடுப்பவர்களாக இருப்பார்கள். எப்பொழுதுமே தலைநிமிர்ந்து சவால் கொடுப்பார்கள், தவறு நடந்தது என்றால் அந்த மாதிரி தலைகுனிந்து பேசுவார்கள். சேவாதாரி என்றால் சவால் விடுபவர்கள். மாயாவிற்கும் மற்றும் உலகின் ஆத்மாக்களுக்கும் தந்தையின் சவால் விடுபவர்கள், சவால் கூட யார் தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களுக்கு கூால் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் தான் கொடுக்க முடியும். முதலில் தன்னுடைய சம்ஸ்காரங்களுக்கு சவால் கொடுக்க வேண்டும். பிறகு பொதுவாக என்ன தடை வருகிறதோ அதற்கு சவால் கொடுக்க வேண்டும். தடை ஒருபொழுதும் அந்த மாதிரி சேவாதாரியை நிறுத்த முடியாது. சவால் விடுபவர் மாயாவின் மலை போன்ற ரூபத்தை ஒரு நொடியில் கடுகாக்கி விடுவார். நீங்களும் மாயாவின் நாடகம் போடுகிறீர்கள் தான் இல்லையா, அதில் என்ன கூறுகிறீர்கள். மலையையும் கடுகாக்கி விடுவோம் என்று கூறுகிறீர்கள். அப்படி உண்மையான சேவாதாரி என்றால் தந்தைக்குச் சமமானவர். ஏனென்றால் தந்தை முதன்முதலில் தன்னை என்னவென்று கூறுகிறார்? நான் உலக சேவகள் என்று கூறுகிறார். சேவாதாரி ஆவது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது. ஒரு ஜென்மத்தின் சேவை அனேக ஜென்மங்களுக்குக் கிரீடம் அணிந்த சிம்மாசனதாரி ஆக்கி விடுகிறது. சங்கமயுகம் சேவைக்கான யுகம் தான் இல்லையா? அதுவும் எவ்வளவு காலம்? சங்கமயுகத்தின் ஆயுளே சிறியது. மேலும் அதிலேயும் ஒவ்வொருவருக்கும் சேவையின் வாய்ப்பு எவ்வளவு குறைவான நேரம் கிடைக்கிறது. நல்லது. உதாரணமாக யாராவது ஐம்பது அறுபது வருடம் சேவை செய்தார் என்றால் 50X30 வருடங்களிலிருந்து 60-3ஐ கழித்து விடுங்கள். மீதமிருக்கும் அனைத்துமே பிராப்தி தான். 60 வருடங்களின் சேவை மற்ற அனைத்தும் பலன்கள் ஏனென்றால், சங்கமயுகத்தின் முயற்சியின் அனுசாரம் பூஜைக்குரியவர் ஆவீர்கள். பூஜைக்குரியவரின் கணக்குப்படி வரிசைக்கிரமமான பூஜாரி ஆவீர்கள். பூஜாரியாகவும் நம்பர் ஒன் ஆவீர்கள். பூஜைக்குரிய நிலையின் கணக்குப்படி வரிசைக்கிரமமான பூஜாரி ஆவீர்கள். பூஜாரியும் நம்பர் ஒன் ஆகிறீர்கள். பிறகு இறுதி ஜென்மத்தில் கூட பாருங்கள் எவ்வளவு நன்றாக இருந்தீர்கள், யார் நல்ல முயற்சியாளரோ அவருடைய கடைசி ஜென்மம் கூட இவ்வளவு நல்லதாக இருக்கிறது என்றால் வரும் காலங்களில் என்னவாக இருக்கும். இதை சுகத்தின் கணக்குப்படி துக்கம் என்று கூறுகிறோம். யாராவது ஒரு செல்வந்தர் கொஞ்சம் ஏழையாக ஆகி விட்டார் என்றால், அதைப் பெரிதாகச் சொல்வார்கள் இல்லையா? ஏதாவது ஒரு பெரிய மனிதனுக்கு கொஞ்சம் அரை டிகிரி கூட காய்ச்சல் வந்து விட்டது என்றால் இன்னாருக்கு காய்ச்சல் வந்து விட்டது என்று பெரிய செய்தியாகக் கூறுவார்கள் ஆனால் ஒருவேளை ஏழைக்கு ஐந்து டிகிரியையும் விட அதிகமாக காய்ச்சல் வந்து விட்டால்

கூட யாரும் கேட்கக் கூட மாட்டார்கள். அப்படி நீங்களும் அந்தளவு துக்கம் ஆவதில்லை ஆனால் அதிகமான சுசுத்தை ஒப்பிடும்பொழுது துக்கமானவர் என்றே கூறப்படும். கடைசி ஜென்மத்தில் கூட பிச்சைக்காரராக ஆகவில்லை தானே வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்பவராக ஆகவில்லை தானே! எனவே முயற்சி செய்வதற்கான நேரம் மிகக் குறைவு மேலும் பிராப்திக்கான நேரம் மிக அதிகம் என்று கூறினோம். பிராப்தியும் எவ்வளவு உயர்ந்தது மேலும் எவ்வளவு காலத்திற்கானது என்ற இந்த நினைவும் இருக்கிறது என்றால் அவருடைய நிலை என்னவாகி விடும்? சிரேஷ்டமாக ஆலா? அப்படி சேவாதாரி ஆவது என்றால் முழுக் கல்பத்திலும் பிராப்தியை அடைவதற்கு அதிகாரி ஆவது. சங்கமயுகம் முழுமையாக சேவையே செய்து கொண்டிருப்போமா என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். எப்பொழுது பலனை அனுபவிப்பீர்களோ அப்பொழுது எவ்வளவு காலம் தான் பலனை அனுபவிப்போம் என்று சொல்வீர்களா என்ன? இப்பொழுதோ கிடைக்கும் என்ற நினைவு இருக்கிறது தான் இல்லையா? ஒன்றுக்கு இலட்சம் மடங்கு என்ன ஆகிறது அப்படி கணக்கும் இருக்கும் இல்லையா? சேவாதாரி ஆவது என்றால் முழுக் கல்பத்திற்காக எப்பொழுதும் சுகமானவர் ஆவது. இது குறைந்த பாக்கியம் இல்லை. டீச்சர்கள் என்று கூறினாலும் சரி சேவாதாரி என்று கூறினாலும் சரி, உழைப்பிற்கு ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கிறது. மேலும் உழைப்பு கூட என்னவாக இருக்கிறது? இங்கேயே மாணவர்களுக்காக தீதி, தாதி ஆகி விடுகிறீர்கள். பட்டம் கிடைத்து விடுகிறது தான் இல்லையா? பத்து வருடங்களின் மாணவன் கூட இரண்டு வருடங்களாக வருபவர் யார் டீச்சர் ஆகி விடுகிறாரோ அவரை தீதி என்று கூறத் தொடங்கி விடுகிறார். இங்கேயும் உயர்ந்த நிலையிலோ பார்க்கிறார்கள் இல்லையா? மரியாதை கொடுக்கிறார்கள் தான் இல்லையா? ஒருவேளை உண்மையான சேவாதாரியாக இருக்கிறார் என்றால், இங்கேயும் மரியாதை கிடைப்பதற்கு தகுதியானவர் ஆகி விடுகிறார். ஒருவேளை கலப்படமாக இருக்கிறார் என்றால் இன்று தீதி என்று கூறுவார்கள், நாளை அவரை எதிர்த்து ஏதாவது கூறியும் விடுவார்கள். சேவை கலப்படமாக இருக்கிறது என்றால் மரியாதையும் கலப்படமே கலப்படம் தான். எனவே சேவாதாரி என்றால் தந்தைக்குச் சமமானவர். சேவாதாரி என்றால் தந்தையின் அடி மீது அடி எடுத்து வைப்பவர், கொஞ்சம் கூட முன்னுக்குப் பின்னுக்கு எடுத்து வைக்காதவர். எண்ணம், சொல், செயல், தொடர்பு அனைத்திலும் தந்தையின் அடி மேல் அடி எடுத்து வைப்பவர். முற்றிலும் காலடி மேல் காலடி வைப்பவரைத் தான் அடி மேல் அடியெடுத்து வைப்பவர் என்று கூறுவது என்ன நினைக்கிறீர்கள்? இது அந்த மாதிரியான குரூப் தான் இல்லையா? டீச்சர்களோ எப்பொழுதும் சகஜயோகிகள் தான் இல்லையா?

டீச்சர்களே கடின உழைப்பை அனுபவம் செய்கிறார்கள் என்றால் மாணவர்களின் நிலைமை என்னவாகும். நல்லது!

**வரதானம்: முற்றுப்புள்ளி மூலமாக சிரேஷ்ட ஸ்திதி (நிலை) என்ற பதக்கத்தைப் பெறக்கூடிய மகாவீர் ஆகுக!**

இந்த முடிவுமில்லாத தொடக்கமும் இல்லாத நாடகத்தில் ஆன்மீக சேனையின் சேனைகளுக்கு யாரும் பதக்கம் கொடுப்பதில்லை ஆனால் நாடகப்படி அவர்களுக்கு உயர்ந்த நிலை என்ற பதக்கம் இயல்பாகவே பிராப்தி ஆகி விடுகிறது. இந்த பதக்கம் யார் ஒவ்வொரு ஆத்மாவின் பங்கை பார்வையாளராகி பார்த்துக் கொண்டே முற்றுப்புள்ளியை சுலபமாக இட்டு விடுகிறாரோ அவர்களுக்குத் தான் கிடைக்கிறது. அந்த மாதிரி ஆத்மாக்களின் அஸ்திவாரம் அனுபவத்தின் ஆதாரத்தில் இருக்கும்.எனவே ஏதாவது பிரச்சனை என்ற மதில்சுவர் அவரை நிறுத்த முடியாது.

**சுலோகன்: ஒவ்வொரு சூழ்நிலை என்ற மலையைக் கடந்து தன்னுடைய இலட்சியத்தை அடையக் கூடிய பறக்கும் பறவை ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்திசாலியான கர்மங்களின் ஆதாரம் -தர்மம்!

இன்று பாப்தாதா தன்னுடைய உலகை மாற்றம் செய்யும் மற்றும் உலகிற்கு நன்மை செய்யும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதிலிருந்து பிராமண வாழ்க்கை ஏற்பட்டதோ அப்பொழுதிலிருந்தே இந்த மகான் கடமையின் எண்ணம் கொண்டீர்கள். பிராமண வாழ்க்கையின் முக்கியமான கர்மமே (செயலே) இது தான். மனித வாழ்க்கையில் ஒவ்வொரு ஆத்மாவின் விசேஷமாக இரண்டு தாரணைகள் இருக்கின்றன. ஒன்று தர்மம், இன்னொன்று கர்மம். தர்மத்தில் நிலைத்திருக்க வேண்டும் மற்றும் கர்மம் செய்ய வேண்டும். தர்மம் இன்றி வாழ்க்கையின் கர்மத்தில் வெற்றி கிடைக்க முடியாது. தர்மம் என்றால் விசேஷ தாரணை (கடைபிடித்தல்). நான் என்னவாக இருக்கிறேன்? இதே தாரணை அதாவது தர்மத்தின் ஆதாரத்தினால் நான் என்ன செய்ய வேண்டும் என்பது புத்தியில் தெளிவாகிறது. யதார்த்த தர்மம் அதாவது தாரணை இருந்தாலும் சரி, யதார்த்தமற்றது இருந்தாலும் சரி! சக்தியற்ற கர்மமும் யதார்த்தமற்ற தாரணை அதாவது நான் மனிதன் என்னுடைய தர்மமே மனித தர்மம், இதைத் தான் நீங்கள் தேக அபிமானம் என்று கூறுகிறீர்கள். இதே தர்மத்தின் ஆதாரத்தில் கர்மமும் தவறாக நடந்தன. அந்த மாதிரி பிராமண வாழ்க்கையிலும் நான் சிரேஷ்ட ஆத்மா என்ற இந்த யதார்த்த தாரணை இருக்க வேண்டும். நான் ஆத்மா அமைதி, ஆனந்தம் மற்றும் சுக சொரூபமானவன். இதே ஆதாரத்தில் என்னுடைய கர்மமும் மாறிவிட்டது. ஒருவேளை கர்மத்தில் உயர்ந்ததற்கு பதிலாக சாதாரண கர்மம் நடந்து விட்டது என்றால், அதன் ஆதாரமும் இதே தர்மம் அதாவது நான் சிரேஷ்ட ஆத்மா, சிரேஷ்ட குணங்களின் சொரூபமானவன் என்ற இந்த தாரணையின் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. அப்படியானால் அஸ்திவாரம் எது? இதன் காரணமாகத் தான் தர்ம ஆத்மா என்ற வார்த்தை கூறப்படுகிறது. நீங்கள் அனைவரும் தர்ம ஆத்மா தான் இல்லையா? தர்ம ஆத்மாக்கள் மூலமாக இயல்பாகவே வீணானவை மற்றும் சாதாரண கர்மம் முடிவடைந்து விடுகின்றன. எனவே நான் எப்பொழுதும் தர்மத்தில் நிலைத்திருக்கிறேனா என்று முதலில் சோதனை செய்யுங்கள். பிறகு கர்மம் தானாகவே சக்தி நிறைந்ததாக நடந்துக் கொண்டே இருக்கும். நான் யார்?

# 1981 அவ்யக்த முரளி

இது தான் முதல் பாடம். 'நான் யார்' என்ற கேள்வியில் முழு ஞானமும் வந்து விடுகிறது. நான் யார் என்ற இந்த கேள்விக்கே பதில் தேடினீர்கள் என்றால், எவ்வளவு நீண்ட பட்டியல் உருவாகி விடும்! இப்பொழுதே ஒரு நொடியில் ஒருவேளை நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால் எத்தனை பட்டங்கள் நினைவில் வந்து விடும். ஏனென்றால் கர்மத்தின் ஆதாரத்தில் அனைவரையும் விட அதிகமான பட்டங்கள் உங்களுக்குத் தான் இருக்கிறது. தந்தையின் பட்டமாக என்ன இருக்கிறதோ அவை அனைத்தும் உங்களுடையதும் தான். அனைத்திலும் மாஸ்டர் ஆகி விட்டீர்கள் இல்லையா? முழுக் கல்பத்தில் இவ்வளவு பெரிய பட்டங்களின் பட்டியல் வேறு யாருக்கும் இருக்காது. தேவதைகளுக்கும் இருக்காது. உங்களுடைய பட்டங்களை மட்டும் எழுதத் தொடங்கினீர்கள் என்றால், ஒரு சிறிய புத்தகமே தயாராகி விடும். இந்த சங்கமயுகத்தின் பட்டங்கள் உங்களுடைய கல்விக்குக் கிடைத்த பட்டங்கள் ஆகும். அவர்களுடைய பட்டங்கள் எவ்வளவு தான் பெரியதாக இருந்தாலும், உங்கள் கல்விக்கு எதிரில் அவை ஒன்றுமே இல்லை. அந்த அளவு போதை இருக்கிறதா? இருந்தும் நான் யார்? என்ற வார்த்தை தான் வரும். தினசரி புதுப்புது பட்டங்களை நினைவில் வையுங்கள். அதாவது அந்த பட்டங்களின் தாரணை சொரூபமான தர்ம ஆத்மா ஆகி, செயல்களைச் செய்யுங்கள். காரியம் செய்து கொண்டே தர்மத்தை விடாதீர்கள். தர்மம் மற்றும் கர்மத்தின் இணைப்பு ஏற்படுவது இந்த சங்கமயுகத்தின் விசேஷம் ஆகும்.

எப்படி ஆத்மா மற்றும் பரமாத்மாவின் துண்டிக்கப்பட்ட சம்மந்தத்தை தந்தை இணைத்து விட்டாரோ. அதே போன்று தர்மம் மற்றும் கர்மத்தின் சம்மந்தத்தையும் இணைத்து விட்டீர்கள் என்றால், தர்ம ஆத்மாவாக பிரத்யக்ஷம் ஆவீர்கள், இன்று பாப்தாதா யார் தர்மம் மற்றும் கர்மத்தை இணைத்து நடந்துக் கொள்கிறார்கள், ஒன்றைப் பிடிக்கிறார்கள், ஒன்றை விட்டு விடுகிறார்கள் என்ற அனைத்து குழந்தைகளின் இந்தக் காட்சியைத் தான் பார்த்துக் கொண்டிருந்தனர். எப்படி கர்ம யோகா இருக்கிறது என்றால், கர்மம் மற்றும் யோகாவின் இணைந்த நிலை, ஒருவேளை இரண்டில் ஒன்றை விட்டு விட்டீர்கள், எப்படி ஊஞ்சல் ஆடுவதற்கு இரண்டு கயிறுகளும் அவசியமாக இருக்கிறது. ஒருவேளை ஒரு கயிறு அறுந்து விட்டது, அல்லது மேலும் கீழுமாக ஆகி விட்டது அல்லது சிறியதும் பெரியதுமாக ஆகி விட்டது என்றால், என்ன நிலைமை ஆகும். இதே நிலை தான் ஏற்படும். அதே போலவே தர்மம் மற்றும் கர்மம் இரண்டின் இணைதல் மூலம் அனைத்து பிராப்திகளினாலும் ஊஞ்சலாடிக் கொண்டே இருப்பீர்கள். மேலே கீழே சென்றுவிடுவதினால் பிராப்தியின் ஊஞ்சலில் இருந்து பிராப்தியற்ற சொரூபத்தை அனுபவம் செய்து விடுகிறீர்கள். நடைமுறையில் சோதனை செய்யத்

தெரிவதில்லை. எனவே ஆடுவதற்குப் பதிலாக என்ன செய்வது, எப்படி செய்வது? என்று கதற ஆரம்பிக்கிறீர்கள். எப்படி அஞ்ஞானிகளிடம் நான் யார் என்ற இந்த கேள்விக்கு விடை தெரியவில்லை என்று கூறுகிறீர்கள். அதேபோல் நான் யார் என்று தன்னிடம் கேளுங்கள்! இதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? இதில் கூட மூன்று நிலைகள் இருக்கின்றன ஒன்று தெரிந்து கொள்வது, இரண்டாவது தன்னை ஏற்றுக் கொள்வது, மூன்றாவது ஏற்றுக் கொண்டு நடந்துக் கொள்வது அதாவது அதனுடைய சொருபம் ஆவது! அப்படி நீங்கள் எந்த நிலை வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? தெரிந்து கொள்வதிலோ அனைவரும் பாஸ் தான் இல்லையா? மேலும் மூன்றாவது எண்ணில் இருக்கும் ஏற்றுக் கொண்டு நடந்துக் கொள்வது அதாவது சொரூபம் ஆவது இதில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சொரூபம் ஆகி விட்டீர்கள் என்றால், சொரூபத்தை எப்பொழுதாவது மறக்க முடியுமா? தன்னை தேகம் என்று உணர்வது தவறாகும் ஆனால் சொரூபம் வரை வந்து விட்டீர்கள் என்றால் மறக்க வைத்தாலும் மறக்க முடியாது. மறக்கிறீர்கள் தான் இல்லையா? அதே போல் ஒவ்வொரு பட்டத்தையும் எதிரில் வைத்து அதை சொரூபத்தில் கொண்டு வந்திருக்கிறேனா என்று பாருங்கள். எப்படி தினசரி பாப்தாதா சுயதரிசன சக்கரதாரியின் பட்டத்தை நினைவூட்டுகிறார். எனவே சுயதரிசன சக்கரதாரி என்ற சங்கமயுகத்தின் சொரூபத்தைத் தெரிந்து கொள்ளும் அளவில் கொண்டு வந்திருக்கிறீர்களா அல்லது ஏற்றுக் கொள்ளும் வரையிலா அல்லது சொரூபமாகவே கொண்டு வந்திருக்கிறீர்களா? எப்பொழுதுமே சுயதரிசனம் சுற்றிக் கொண்டு இருக்கிறதா அல்லது பரதரிசனம் சுயதரிசனத்தை மறக்க வைத்து விடுகிறதா? இந்த உடலைப் பார்ப்பது கூட பரதர்சனம் (வெளிமுகமாகவே பார்த்துக் கொண்டிருப்பது) தான். நான் சுயம் ஆத்மா. தேகம் விலகி இருப்பதாகும், இயற்கையும் விலகியது. இயற்கையின் உணர்வில் வருவது கூட இயற்கையின் வசமாவது, இதுவும் பரதர்சனத்தின் பிறவற்றின்) சக்கரம். எப்பொழுது தன்னுடைய தேகத்தைப் பார்ப்பதும் பரதர்சனம் என்றால் மற்றவர்களின் உடலைப் பார்ப்பதை எப்படி சுயதர்சன சக்கரம் என்று கூறுவோம். வீணான எண்ணம் அல்லது பழைய சம்ஸ்காரம் என்ற இதுவும் தேக உணர்வின் சம்மந்தத்தில் வருவது. ஆத்மீக சொரூபத்தின் சம்ஸ்காரம், எது தந்தையின் சம்ஸ்காரமாக இருக்கிறதோ அது தான் ஆத்மாவின் சம்ஸ்காரம். தந்தையின் சம்ஸ்காரத்தை தெரிந்திருக்கிறீர்களா? அவர் எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர், பரோபகாரி, இரக்க மனமுடையவர், வரமளிப்பவர் அந்த மாதிரியான சம்ஸ்காரம் இயற்கையான சொரூபத்தில் உருவாகியிருக்கின்றனவா? சம்ஸ்காரத்தை உருவாக்குவது என்றால், எண்ணம், சொல் மற்றும் செயல் இயல்பாகவே அதன்படி இருக்கும். சம்ஸ்காரம் அந்த மாதிரியானது அது

# 1981 அவ்யக்த முரளி

ஆத்மாவை இயல்பாகவே தனக்கு ஏற்றபடி நடத்திக் கொண்டே இருக்கும். இதை வேறு வார்த்தைகளில் - இது என்னுடைய நேச்சர் என்று கூறுகிறார்கள். தந்தைக்குச் சமமான நேச்சர் ஆகி விட வேண்டும் - எப்பொழுதும் வரம் அளிப்பவர், எப்பொழுதும் உபகாரி, எப்பொழுதும் இரக்க மனம் உடையவர். அப்படி கடின உழைப்பு செய்ய வேண்டும். எப்பொழுது நான் யார் என்பதை சொரூபத்தில் கொண்டு வருகிறீர்களோ, இதே தர்மத்தை செய்யும் காரியங்களில் கடைபிடிப்பீர்களோ அப்பொழுது தான் சொரூபம் வரை கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கூறுவோம். இல்லை என்றால் தெரிந்தவர் மற்றும் ஏற்றுக் கொண்டவர் பட்டியலில் சென்றுவிடுவீர்கள். என்னுடைய தர்மமே இது தான் என்ற நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். இதே தர்மத்தில் எப்பொழுதும் நிலைத்திருங்கள், என்ன நடந்தாலும் சரி, அது நபர் மூலமாகவோ, இயற்கை மூலமாகவோ அல்லது சூழ்நிலை மூலமாகவோ இருந்தாலும், உங்களுடைய சுலோகனாக உயிரே சென்றாலும் தர்மத்தை விடமாட்டோம்' என்று இருக்கிறது. இதே சுலோகனை மற்றும் உறுதிமொழியை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

இந்த நேரம் சென்ற கல்பத்து பழைய குழந்தைகளாக இருந்தவர்கள் புதிய குழந்தைகளாக வந்திருக்கிறார்கள். பழையதிலும் பழையதாக இருக்கிறீர்கள். மேலும் புதியவர்களாகவும் இருக்கிறீர்கள், புதிய குழந்தைகள் என்றால், அனைவரையும் விட சிறிய, அனைவரையும் விட செல்லமானவர்கள். புதிய இலை பார்ப்பதற்கு அனைவருக்கும் நன்றாக இருக்கும். அதனால் புதியவராக இருந்தாலும் கூட அதிகாரத்தில் (உரிமையை அடைவதில்) நம்பர் ஒன். அந்த மாதிரி எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டே இருங்கள். அனைத்தையும் விட முதல் அதிகாரம் தூய்மையின் அதிகாரம். அதன் ஆதாரத்தில் சுகம், சாந்தி அனைத்து அதிகாரங்களும் பிராப்தியாக கிடைத்து விடுகின்றன. அப்படி முதலில் தூய்மையின் அதிகாரத்தைப் பெறுவதில் எப்பொழுதும் நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும். அப்பொழுது பிராப்தியிலும் கூட நம்பர் ஒன் ஆகி விடுவீர்கள். தூய்மையின் அஸ்திவாரத்தை ஒருபொழுதும் பலஹீனம் ஆக்காதீர்கள். அப்பொழுது தான் கடைசியில் வந்தாலும் வேகமாகச் செல்பவராக ஆக முடியும். பாப்தாதாவிற்கும் குழந்தைகள் மீண்டும் தங்களுடைய அதிகாரத்தைப் பெறுவதற்கு வந்து சேர்ந்து விட்டார்கள் என்று பார்த்து குஷி ஏற்படுகிறது. எனவே நன்றாக முயற்சி செய்யுங்கள். இப்பொழுது கூட வெகு காலதாமதம் என்ற அறிக்கைப் பலகை மாட்டப்படவில்லை. அனைத்து இடங்களும் காலியாக இருக்கின்றன, யார் என்று நிச்சயம் செய்யப்படவில்லை. எந்த எண்ணைப் பெற விரும்புகிறீர்களோ அதைப் பெற முடியும், அந்த அளவு கவனம் வைத்து நடந்துக்

கொண்டே இருங்கள். அதிகாரி ஆகிக் கொண்டே இருங்கள். தகுதிகளை நடைமுறையில் கடைபிடித்து தகுதியானவர் ஆகிக் கொண்டே இருங்கள்.

அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் உயர்ந்த தர்மம் மற்றும் காரியம் செய்யும், எப்பொழுதும் தர்ம ஆத்மா,எப்பொழுதும் சுயதரிசன சக்கரதாரி சொரூபம் உள்ள, எப்பொழுதும் அனைத்து பிராப்தி சொரூபமான, அம்மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களாக ஆகப்போகும் குமாரிகளின் குரூப்போடு பாப்தாதாவின் சந்திப்பு:** இந்த குரூப் உலகிற்கு நன்மை செய்யப் போகும் குரூப் தான் இல்லையா? இந்த இலட்சியத்தை வைத்திருக்கிறீர்கள் தானே! தனக்கு நன்மை செய்து உலகிற்கும் நன்மை செய்பவராக ஆவோம் என்ற இதே உறுதியான எண்ணம் வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? பாப்தாதா பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாக்களைப் பார்த்து இந்த ஒவ்வொரு குமாரியும் அனேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்வதற்குப் பொறுப்பாளராக ஆகப் போகிறவர்கள் என்று குஷி அடைகிறார். பொதுவாக குமாரியை 100-பிராமணர்களையும் விட உத்தமமானவர் என்று கூறுவார்கள், ஆனால் 100-கூட ஒரு எல்லைக்குட்பட்டதாக ஆகி விட்டது. இவர்கள் அனைவருமோ எல்லைக்கப்பாற்பட்ட உலகிற்கு நன்மை செய்பவர்கள். எல்லைக்கப்பாற்பட்டவர்கள் தான் நீங்கள் இல்லையா? எல்லைக்குட்பட்டது எண்ணத்தில் கூட இல்லை. பிறகு அனைவரும் போட்டியில் ஒருவர் இன்னொருவரைவிட முன்னுக்கு இருக்கிறீர்களா அல்லது வரிசைக்கிரமமாக இருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள். ஒவ்வொருவரிடமும் அவரவர்களின் விசேஷமோ இருக்கும் ஆனால் இங்கே அனைத்து விசேஷங்களில் நிரம்பியவராக இருக்கிறீர்களா? எப்பொழுது அனைத்து விசேஷங்களையும் தாரணை செய்வீர்களோ அப்பொழுது தான் முழுமையானவர் ஆக முடியும். அப்படியானால் என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்கள்? விஷயம் மிகச் சிறியது தான். பெரிய விஷயம் ஒன்றும் இல்லை, எண்ணம் உறுதியாக இருக்கிறது என்றால் பிராப்தி இயல்பாகவே ஆகி விடுகிறது. ஒருவேளை எண்ணம் மட்டும் இருக்கிறது, அதில் திடத்தன்மை இல்லை என்றால் கூட வித்தியாசம் ஏற்பட்டுவீடும். சில நேரம் எண்ணமோ இருக்கிறது, செய்யத் தான் வேண்டும் என்று கூறுகிறீர்கள் -இதை திட எண்ணம் என்று சொல்லமாட்டோம். திட எண்ணம் என்றால் செய்யத் தான் வேண்டும், நடக்கத் தான் வேண்டும். அப்படி 'வார்த்தை' வெளியாகி விடுகிறது. ஆகவோ வேண்டும் என்று அப்படியில்லை ஆனால் கண்டிப்பாக ஆக வேண்டும். இந்த இலட்சியத்தை

வைத்தீர்கள் என்றால் நம்பர் ஒன் ஆகி விடுவீர்கள். சகஜ வாழ்க்கை அனுபவம் ஆகிறதா? கடினம் இல்லையே? கல்லூரியின் சூழ்நிலை பிரபாவமோ ஏற்படுத்துவதில்லையே? உங்களுடைய சூழ்நிலை அவர்கள் மேல் பிரபாவம் ஏற்படுத்துகிறதா? எப்பொழுதும் தடையற்றவராக இருக்க வேண்டும். தன்னைப் பார்ப்பது என்றால் தடையற்றவர் ஆவது. தந்தையின் சம்ஸ்காரமாக இருப்பது தன்னுடைய சம்ஸ்காரம், பிறகு எப்படி கருவி என்ற அளவில் செய்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் செய்விப்பவர் தந்தை. செய்பவர் செய்விப்பவர் என்று என்ன வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ, அது இந்த நேரத்தின் நடைமுறை அனுபவம் ஆகும். நல்ல உதாரணம் ஆகியிருக்கிறீர்கள். எப்பொழுதும் உண்மையானவர் ஆகி நிரூபணம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். யார் நிரூபணம் கொடுக்கிறாரோ அவரைத் தான் உண்மையானவர் என்று கூறுவோம். எப்பொழுதாவது உங்களுக்குள் பிரச்சனை எதுவும் இல்லையே? ஞானம் நிறைந்தவராக ஆனதினால் ஒவ்வொருவரின் சம்ஸ்காரத்தையும் தெரிந்து சம்ஸ்காரத்தை மாற்றம் செய்வதில் முழு ஈடுபாட்டுடன் இருக்கிறீர்கள். இவரோ அப்படிப்பட்டவர் தான் என்று யோசிப்பதில்லை ஆனால் இவர் அந்த மாதிரியானவரிலிருந்து இப்படி எப்படி ஆவது என்று இதை யோசிப்பீர்கள். இரக்க மனம் உடையவர் ஆவீர்கள். வெறுப்பு நிறைந்த பார்வை இல்லாமல் இரக்கப் பார்வை இருக்கும். ஏனென்றால் ஞானம் நிறைந்தவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? சகஜ வாழ்க்கை மேலும் உயர்ந்த பிராப்தி, இந்த மாதிரியான பாக்கியம் வேறு எப்பொழுதாவது கிடைக்க முடியுமா? சேவைக்குத் தகுதியான நல்ல உதவிக்கரங்கள், அந்த மாதிரியே கரங்கள் உருவாகிக் கொண்டிருந்தது என்றால் மிக நல்லது தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. சக்திகளோ வெற்றி அடைபவர்களாக இருக்கிறார்கள். சக்திகளுக்கு வெற்றி இல்லை என்பது இருக்கவே முடியாது.

**எல்லா பிராமணக் குழந்தைகள் பற்றி இந்த வருஷத்திற்காக விசேஷ சமிக்ஞை: 1)** இந்த வருடம் ஒவ்வொரு குழந்தைக்கும் தான் மூன்று சான்றிதழ்களையும் (மனதிற்கு விருப்பமானவர், மக்களின் விருப்பமானவர் மற்றும் தந்தைக்கு விருப்பமானவர்) பெற வேண்டும் என்ற இந்த விசேஷ கவனம் வைக்க வேண்டும். மனதிற்கு விருப்பமானவரின் சான்றிதழ் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு பாப்தாதாவின் அறையில் சென்று செய்ய முடியும். ஏனென்றால் அந்த நேரம் தந்தை கண்ணாடி ஆகி விடுகிறார். மேலும் என்னென்ன நடக்கிறதோ அது அந்தக் கண்ணாடியில் தெளிவாகத் தென்படுகிறது. ஒருவேளை அந்த நேரம் தந்தையின் எதிரில் தன்னுடைய மனம்

நான் சரியாக இருக்கிறேன் என்று சான்றிதழ் கொடுக்கிறது என்றால், சரி என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை அந்த நேரம் மனதில் இது சரியில்லை என்று வருகிறது என்றால், தன்னை மாற்றம் செய்ய வேண்டும். ஒருவேளை உதாரணமாக அதிகமானவர்கள் ஏதாவது ஒரு விஷயத்திற்காக சில சமிக்ஞைகள் கொடுக்கிறார்கள் ஆனால் நான் தவறாக இருக்கிறேன் என்று தானே நினைப்பதில்லை, இருந்தும் எப்பொழுது மற்றவர்களுக்காக மேலே இருந்து இந்த கவனம் வைக்க வேண்டும் என்ற டைரக்ஷன் கிடைக்கிறது என்றால், பிறகு அந்த நேரம் தன்னுடைய புத்தியை செலவழிக்கக் கூடாது. ஏனென்றால் ஒருவேளை சத்தியத்தின் சக்தி இருக்கிறது என்றால், இதனை சத்திய நிலை மகான் நிலை' என்று கூறப்படுகிறது. மேலும் யார் சுயம் அவரே வளைந்து கொடுக்கிறாரோ அவர் தான் மகான். ஒருவேளை உதாரணமாக நன்மை ஏற்பட வேண்டும் என்ற காரணத்தினால் வளைந்து கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் அது வளைந்து கொடுப்பது அல்ல ஆனால் அது மகான் நிலை! அனேகர்களின் சேவைக்காக மகானாக இருப்பவருக்கு வளைந்து கொடுக்கத் தான் வேண்டி உள்ளது. எனவே இந்த விசேஷ கவனம் வையுங்கள். இதில் தான் அலட்சியம் வந்து விடுகிறது. நான் சரியாக இருக்கிறேன். சரியாகத்தான் இருக்கிறீர்கள் ஆனால் யார் சரியாக இருக்க முடியுமோ அவர் தன்னை வளைந்து கொடுக்கச் செய்யவும் முடியும். ஒருவேளை உதாரணமாக என்னுடைய நடத்தை மூலமாக மற்றவர்களுக்கு ஏதாவது எண்ணம் உருவாகிறது என்றால் தன்னை வளைத்துக் கொள்வதில் நஷ்டம் என்ன? இருந்தும் அனைவரின் ஆசீர்வாதமோ கிடைத்து விடும். இந்த ஆசிர்வாதம் கூட லாபமாக ஆனது இல்லையா? ஏன், என்ன என்பதில் செல்லாதீர்கள். இது ஏன், இது அப்படி ஆகுமா, இப்படி ஆகுமா என்ற இவற்றிற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். இப்பொழுது இந்த விசேஷத்தை நாலாபுறங்களிலும் கலங்கரை விளக்கைப் போன்று சமமாக பரப்புங்கள். இதைத் தான் ஒருவர் கூறினார், இன்னொருவர் ஏற்றுக் கொண்டார் அதாவது அனேகர்களுக்கு சுகம் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆனார் என்று கூறுவது. இதில் நான் கீழே வந்து விட்டேன் என்ற இதை நினைக்காதீர்கள். அப்படி வேண்டாம். தவறு செய்தேன் அதனால் நான் பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறேன், சேவைக்காக ஸ்தூலமாகவும் கொஞ்சம் உழைக்க வேண்டியது இருக்கிறது தான் இல்லையா? எனவே உயர்ந்தவராக, மகான் ஆத்மா ஆவதற்காக கொஞ்சம் கொஞ்சம் பரிவர்த்தனையும் மாற்றம் செய்தீர்கள் என்றால் கூட பாதகம் என்ன! இதில் அர்ச்சுனன் ஆகுங்கள். இதன் மூலம் சூழ்நிலை உருவாகும். ஒருவர் மூலம் இன்னொருவர், இன்னொருவர் மூலம் மூன்றாமவர். ஒருவேளை ஏதோ தவறு இருக்கிறது. மேலும் ஒப்புக் கொண்டீர்கள் என்றால் இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் தவறு இல்லை மற்றவர்களுக்காக

செய்ய வேண்டியதாக இருக்கிறது என்ற இது தான் மகான் நிலை. இதில் ஒருவேளை இவர் இதைச் செய்தார் அதாவது கீழே இறங்கி விட்டார் என்று யாருக்காவது புரிய வைக்கிறார் என்றால் கூட மற்றவர்கள் புரிந்து கொள்வதினால் ஒன்றும் ஆவதில்லை. தந்தையின் பட்டியலிலோ வரிசை எண் முன்னுக்கு இருக்கிறது இல்லையா? இதை அழுத்தி வைப்பது என்று கூறுவதில்லை. பிராமணர்களிடம் எதுவரை அழுத்துவார்கள், எதுவரை செத்துக் கொண்டிருப்போம். எதுவரை சகித்துக் கொள்வோம் என்ற மொழியும் இருக்கிறது தான் இல்லையா? ஒருவேளை இங்கே அழுத்துகிறார்கள் என்றால் கூட அனேகர்கள் உங்களுடைய கால்களை அழுத்திவிடுவார்கள். இது அழுத்தப்படுவது அல்ல ஆனால் அனேகர்களுக்காக பூஜைக்குரியவர் ஆவது மகான் ஆவது. நல்லது.

**2) இந்த வருடம் ஏதாவது புது திட்டத்தை உருவாக்குங்கள்.** எப்படி பற்றுதலை வென்ற குடும்பத்தின் கதை கூறுகிறீர்கள். அதில் எந்த உறவினரிடம் சென்றாரோ அவர்களுக்கு ஞானம் சொன்னார் என்று கூறுகிறீர்கள், அப்படி இங்கேயும் குழந்தைகள் உங்களை யாராவது சந்திக்க வருகிறார்கள் என்றால் கூட அவர்களுக்கு நான் ஏதோ பரிஷ்தாவை சந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். வந்தவுடனேயே அவர் மேல் மந்திரம் போடப்பட்டு விட வேண்டும். எங்கே சென்றாலும், யாரைச் சந்தித்தாலும் அவருக்கு மந்திர சக்தியின் அனுபவம் தான் ஆக வேண்டும். எப்படி தொடக்க காலத்தில் தந்தையைப் பார்த்தார், முரளி கேட்டார், பரிவாரத்தை பார்த்தார், மகிழ்ச்சி அடைந்துச் சென்றார் என்றால் அதேபோல் இப்பொழுதும் ஏதோ யோசித்து கொண்டு வந்தவர் பல மடங்கு அனுபவம் செய்து திரும்பிச் செல்ல வேண்டும். அந்த மாதிரி இப்பொழுது திட்டத்தை உருவாக்குங்கள். திட எண்ணம் மூலம் அனைத்தும் நடக்க முடியும். ஒருவேளை ஒருவர் அந்த மாதிரி அனுபவம் செய்விக்கிறார் என்றால் அனைவரும் அவரைப் பின்பற்றி செய்வார்கள்.

**3) இந்த வருடம் விசேஷமாக சகிப்புத்தன்மையை ஒவ்வொருவரும் தாரணை செய்ய வேண்டும்! (சாரம்):** குழுவிலும் ஒருவர் ஏதாவது சொல்லும்போது நாம் மௌனமாக இருந்தால் அப்படி சொல்பவரால் எது வரை சொல்ல முடியும்? அவரும் மௌனமாகி விடுவார். பிறரை மாற்ற நாம் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். தந்தையும் கூட எத்தனை குழந்தைகளின் சமஸ்காரத்தை மாற்றினார்! பிரம்மாபாபாவையே அவமதித்தனர் எனில் நீங்கள் எம்மாத்திரம்? எப்போது தந்தை அனைத்தையும் சகித்துக் கொண்டு மாற்றம் செய்தார் என்றால் 'ஃபாலோ ஃபாதர்'! இதற்குத் தேவை தைரியம்!

**குஜராத் பார்ட்டிகளுடன் (சாரம்):** எப்படி சாகாரத்தில் வந்து போவது சகஜமாக இருக்கிறதோ அது போல் கர்மாதீத் நிலையில் இருப்பதற்கான பயிற்சி உள்ளதா? உடனுக்குடன் நிமித்தமாகி கர்மயோகி ஆகி கர்மம் செய்வது மற்றும் முடிந்தவுடன் கர்மாதீத் நிலையில் நிலைக்க வேண்டும். இதற்காக, ஒன்று, டபுள் லைட் ஆக வேண்டும்; இரண்டாவது, ஆத்மா என புரிந்து கொள்வதால் லைட் ஆகி விடுவீர்கள். யார் சதா நினைவு மற்றும் சேவையில் இருக்கிறாரே அவருக்கு பிரத்யக்ஷ பலன் கிடைக்கிறது. எப்போது சர்வ சக்திவானின் குழந்தைகள் ஆகி விட்டீர்களோ அப்போது சகஜ யோகிகள் தானே! நல்லது.

**வெளிநாட்டினருடன் (சாரம்):** இப்போது ஒவ்வொருவரும் சேவையை தீவிர கதியில் செய்வதற்கான திட்டம் தீட்ட வேண்டும். நாம் அமைதித் தூதுவராகி செல்கிறோம் என்பதை சதா நினைவில் வையுங்கள். எங்கு சென்றாலும் அமைதியின் கிரணங்களைப் பரப்புங்கள். எப்போது அனைவருக்கும் அமைதியின் செய்தி கிடைக்கிறதோ அப்போது உங்களை சாந்தி தேவன்-தேவி என ஏற்றுக் கொள்வார்கள். நல்லது.

**வரதானம்: திருப்தியின் விசேஷம் மற்றும் உயர்ந்த தன்மை மூலமாக அனைவரின் இஷ்டமானவராக ஆகக்கூடிய வரமளிப்பவர் ஆகுக!**

யார் எப்பொழுதும் தன் மேலும் மற்றவர்கள் மேலும் திருப்தியாக இருக்கிறாரோ அவர் தான் அனேகர்களின் இஷ்ட மற்றும் அஷ்ட தேவதை ஆக முடியும். அனைத்தையும் விட மிகப் பெரிய குணம் என்று கூறினாலும், தானம் என்று கூறினாலும் அல்லது விசேஷம் மற்றும் உயர்ந்த நிலை என்று கூறினாலும் அது திருப்தி தான். திருப்தியான ஆத்மா தான் பிரபுவிற்குப் பிரியமானவர், மக்களுக்குப் பிரியமானவர் மேலும் தனக்கும் பிரியமானவராக இருப்பார். அந்த மாதிரி திருப்தியான ஆத்மா தான் வரமளிக்கும் ரூபத்தில் பிரசித்தி ஆவார். இப்பொழுது இறுதி நேரத்தில் மகாதானி ரூபத்தையும் விட அதிகமாக வரதானி ரூபம் மூலமாக சேவை நடக்கும்.

**சுலோகன்: யாருடைய நெற்றியில் எப்பொழுதும் வெற்றித் திலகம் மின்னிக் கொண்டிருக்கிறதோ அவர் தான் வெற்றி இரத்தினம் ஆவார்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 07.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிந்தனை சக்தி மூலமாக சர்வ சக்திகளின் சொரூபத்தின் அனுபவம்!

இன்று பாப்தாதா தன்னுடைய சென்ற கல்பத்து காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட அனைத்து குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படி தந்தை மிக அன்புடன் குழந்தைகளை எப்பொழுதும் நினைவு செய்கிறாரோ அதே போலவே குழந்தைகளும் எப்பொழுதும் தந்தையை நினைவு செய்வதில் மற்றும் உயர்ந்த வழிப்படி நடப்பதில் இரவு பகலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் ஈடுபாட்டை, குழந்தைகள் உள்ளப்பூர்வமாக மற்றும் உயிருக்குயிராக அன்பு மற்றும் சிநேகத்துடன் எப்பொழுதும் சேவையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து குழந்தைகளுக்கு அஞ்சலி கொடுக்கிறார். குழந்தைகளின் பாக்கியத்தின் பின்னால் இருக்கும் தியாகத்தைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதும் தியாகத்திற்காக வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். அனைத்து குழந்தைகளின் ஒரே எண்ணமாக இருக்கின்ற, தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் மற்றும் தன்னை சம்பன்னம் ஆக்க வேண்டும் என்ற இதையும் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். என்னவாக இருந்தோம் மற்றும் என்னவாக ஆகி விட்டோம் என்ற இந்த வித்தியாசத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே அனைவரும் இதே ஈஸ்வரிய போதையில் இருக்கிறார்கள். இதைப் பார்த்து பாப்தாதாவும் ஆஹா சங்கமயுகத்து குழந்தைகளே ஆஹா என்று பெருமிதத்துடன் கூறுகிறார். அந்த அளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் தங்களுடைய இந்த கடைசி ஜென்மம் வரையிலும் தங்களுடைய அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை நெற்றியில் மகிமை மூலமாக, வாயில் பாடல்கள் மூலமாக மற்றும் கைகளினால் சித்திரங்கள் மூலமாக, கண்களில் அன்பு மூலமாக எதிர்காலத்தின் அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை வரைந்து கொண்டே இருக்கிறார்கள். இன்று வரையிலும் கூட உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய நல்லகால தருணங்களை அது மீண்டும் எப்பொழுது வரும் என்று நினைவு செய்து கொண்டிருக்கிறீர்கள். மிகவும் ஈடுபாட்டுடன் வரவழைப்பு கோலாகலத்துடன் நடந்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் நீங்கள். உங்களுடைய அதிர்ஷ்டத்தை சுயம் தந்தை மகிமையாகப் பாடுகிறார். இறுகி காலத்து பக்தர்களோ உங்களுடைய

பாதங்களையும் பூஜை செய்கிறார்கள். உங்களுடைய காலடிகளில் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மட்டும் தான் உங்களிடம் கேட்கிறார்கள். அந்த அளவு மகான் ஆத்மாக்கள் நீங்கள். எனவே பாப்தாதாவும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எப்பொழுதும் தன்னுடைய அந்த மாதிரியான சிரேஷ்ட சொரூபத்தை, சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் சித்திரத்தை நினைவில் வையுங்கள், இதனால் என்ன ஆகும்? சக்திசாலியான நினைவு மூலம், சம்பள்ள சித்திரத்தின் மூலம் சரித்திரமும் எப்பொழுதும் சிரேஷ்டமாகத் தான் இருக்கும். எப்படி சித்திரமோ அப்படி சரித்திரம் என்று கூறப்படுகிறது. எப்படி நினைவோ அப்படி நிலை. எனவே எப்பொழுதும் சக்திசாலியான நினைவு வைத்தீர்கள் என்றால் நிலையும் இயல்பாகவே சக்திசாலி ஆகி விடும். எப்பொழுதும் தன்னுடைய அனைத்து குணங்கள், அனைத்து சக்திகள் நிரம்பிய சம்பூர்ளை சித்திரத்தை எதிரில் வையுங்கள். அந்த மாதிரி சித்திரத்தை வைப்பதினால் இயல்பாகவே சரித்திரம் சிரேஷ்டமாக ஆகி விடும். கடின முயற்சி செய்வதற்கு அவசியம் இருக்காது. எப்பொழுது சிந்தனை சக்தியின் குறை இருக்கிறதோ அப்பொழுது கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. முழுநாளும் இதே சிந்தனை செய்து கொண்டிருங்கள். தன்னுடைய உயர்ந்த சித்திரத்தை எப்பொழுதும் எதிரில் வைத்தீர்கள் என்றால் சிந்தனை சக்தி மூலம் கடின முயற்சி முடிவடைந்து விடும். அதிகமாக கேட்டும் இருக்கிறீர்கள், வர்ணனையும் அதிகமாக செய்கிறீர்கள். இருந்தும் நடைமுறையில் சில நேரம் தன்னை பலமற்றவராக ஏன் அனுபவம் செய்கிறீர்கள்? கடின உழைப்பை ஏன் அனுபவம் செய்கிறீர்கள்? கடினம் என்ற எண்ணம் ஏன் வருகிறது, இதற்கான காரணம் என்ன? கேட்டதின் பிறகு சிந்திப்பதில்லை. எப்படி உடலின் சக்திக்காக மிக அதிகமான ஜீரண சக்தி தேவையாக இருக்கிறது. அதே போல் ஆத்மாவை சக்திசாலியாக ஆக்குவதற்காக சிந்தனை சக்தியும் அந்த அளவே அவசியமாக இருக்கிறது. சிந்தனை சக்தி மூலம் தந்தையிடமிருந்து கேட்ட ஞானம் தன்னுடைய அனுபவமாக ஆகி விடுகிறது. எப்படி ஜீரண சக்தி மூலம் உணவு உடலில் சக்தியாக இரத்தத்தின் ரூபத்தில் நிரம்பிவிடுகிறது. உணவின் சக்தி தன்னுடைய உடலுக்கு தேவையான சக்தி ஆகி விடுகிறது. வேறு வேறாக இருப்பதில்லை. அதே போல் ஞானத்தின் ஒவ்வொரு துளியின் சிந்தனை சக்தி மூலமாக தனக்கு சக்தி ஆகி விடுகிறது. எப்படி ஆத்மா என்ற முதல் ஞானத்துளியை கேட்ட பிறகு சிந்தனை சக்தி மூலமாக நினைவு சொரூபமாக ஆகி விடும் காரணத்தினால், நினைவு நான் தான் எஜமானன்' என்று சக்தி நிரம்பியதாக ஆக்கி விடுகிறது. இந்த அனுபவம் சக்தி சொரூபம் ஆக்கி விடுகிறது ஆனால் எப்படி ஆனது? சிந்தனை சக்தியின் ஆதாரத்தில். அப்படி ஆத்மாவின் முதல் ஞானத்துளி அனுபவ சொரூபம் ஆகி விட்டது அல்லவா. இதே விதமாக நாடகத்தின் ஞானம் - நாடகம் என்று

சொல்வதற்கும் மற்றும் கேட்பதற்கு மட்டும் அல்ல, ஆனால் நடைமுறையில் தன்னை கதாநாயக (முக்கிய) நடிகன் என்று அனுபவம் செய்தீர்கள் என்றால் சிந்தனை சக்தி மூலம் அனுபவ சொரூபம் ஆகி விடுவது என்ற இது தான் முக்கியமான ஆத்மீக சக்தி ஆகும். அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய சக்தி அனுபவ சொரூபம் ஆகும்.

அனுபவி எப்பொழுதும் அனுபவத்தின் அதிகாரத்துடன் நடந்துக் கொள்வார், அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றம் அடைவதில்லை. அனுபவி யாராவது அவரை நிலை குலைய வைத்தால், கேட்ட மற்றும் சொன்ன விஷயங்களினால் ஆடிப் போகமாட்டார்கள். அனுபவியின் ஒரு வார்த்தை ஆயிரம் வார்த்தைகளையும் விட அதிக மதிப்புள்ளதாக இருக்கிறது. அனுபவி எப்பொழுதும் தன்னுடைய அனுபவங்களின் பொக்கிஷங்களினால் நிரம்பியவராக இருக்கிறார். அந்த மாதிரி சிந்தனை சக்தியின் மூலமாக ஒவ்வொரு ஞானத்துளியின் அனுபவி எப்பொழுதும் சக்திசாலியாக, மாயா தாக்க முடியாதவராக, தடையால் தாக்கமடையாதவராக, எப்பொழுதும் அங்கதனுக்குச் சமமாக ஆடாதவராக, மற்றவர்களை அசைப்பவராக இருப்பார். ஆகவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

எப்படி உடலின் அனைத்து நோய்களுக்கான காரணம் ஏதாவது வைட்டமின்களின் குறையாக இருக்கிறது என்றால் ஆத்மாவின் பலஹீனத்திற்கு காரணம் கூட சிந்தனை சக்தி மூலமாக ஒவ்வொரு ஞான விஷயத்தின் அனுபலத்தின் வைட்டமினின் குறை ஆகும். எப்படி அதில் கூட பல வகையான ஏ, பி, சி என வைட்டமின்கள் இருக்கின்றன இல்லையா. அதேபோல் இங்கேயும் ஏதோ ஒரு அனுபவத்தின் குறை இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். வைட்டமின் ஏ- ஆத்மாவின் வைட்டமின், வைட்டமின் பி -தந்தையினுடையது, வைட்டமின் சி டிராமா, கிரியேஷன் (படைப்பு) அல்லது சர்க்கிள் அதாவது சக்கரம் என்று கூறுங்கள். அப்படி ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். இதிலோ புத்திசாலிகள் தான் இல்லையா, அப்படி எந்த வைட்டமினின் குறை இருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். ஆத்மாவின் அனுபவத்தின் குறை, பரமாத்மா சம்மந்தத்தின் குறை, நாடகத்தின் ஆழமான அனுபவத்தின் குறை தொடர்பில் வருவதற்கான விசேஷங்களின் அனுபவத்தின் குறை. அனைத்து சக்திகளின் சொரூபத்தின் அனுபவத்தின் குறை. நிச்சயமாக ஏதாவதொன்று இருக்கும் மேலும் இந்த குறைகளை சிந்தனை சக்தி மூலம் நிரப்புங்கள். கேட்பது மட்டுமே ஆன சொரூபம் அல்லது சொற்பொழிவு நிகழ்த்தும் சொரூபம் என்ற இதன் மூலமாக மட்டும் ஆத்மா சக்திசாலி ஆக முடியாது. ஞான சொரூபம் என்றால் அனுபவ சொரூபம்.

அனுபவங்களை அதிகரியுங்கள். அதற்கான ஆதாரம் சிந்தனை சக்தி, சிந்தனை செய்பவர் இயல்பாகவே அதில் மூழ்கியிருப்பார். மூழ்கிய நிலையில் யோகாவில் ஈடுபட வேண்டியதாக இருக்காது ஆனால் நிரந்தரமாக யோகாவில் ஈடுபாட்டில் இருப்பது தான் அனுபவத்தை ஏற்படுத்தும். கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. மூழ்கியிருப்பது என்றால் அன்புக் கடலில் மூழ்கியிருப்பது. அந்தமாதிரி யாரும் பிரிக்க முடியாத அளவிற்கு மூழ்கியிருப்பது அப்படிப்பட்ட நிலையிலிருந்து கடின உழைப்பிலிருந்தும் விடுபடுங்கள். வெளிமுகமாக இருப்பதை விட்டீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபடுவீர்கள். மேலும் அனுபவங்களின் உள்நோக்குமுக சொரூபத்தில் எப்பொழுதும் மூழ்கியிருங்கள். அனுபவங்களினாலும் கடல் இருக்கிறது இல்லையா. ஒன்றிரண்டு அனுபவம் இல்லை, அளவற்ற அனுபங்கள். ஒன்றிரண்டு அனுபவங்கள் செய்து விட்டீர்கள் என்ற அனுபவத்தின் குளத்தில் குளிக்காதீர்கள். கடலின் குழந்தைகள் அனுபவங்களின் கடலில் மூழ்கி விடுங்கள். நீங்கள் குளத்தின் குழந்தைகளோ இல்லை தானே. இந்த தர்ம தந்தைகள், மகான் ஆத்மாக்கள் என்று கூறிக் கொள்பவர்கள் அனைவரும் குளங்கள். நீங்களோ குளத்திலிருந்தோ வெளியில் வந்து விட்டீர்கள் இல்லையா, அனேக குளங்களின் தண்ணீரை குடித்தாகி விட்டது, இப்பொழுதோ ஒரு கடலில் மூழ்கி விட்டீர்கள் இல்லையா!

அந்த மாதிரி எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து அனுபவங்களின் கடலில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண சித்திரத்தை எதிரில் வைத்து சிரேஷ்ட சரித்திரவானாக ஆகும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் உள்நோக்குமுகமாக இருக்கும், அனைவரையும் சுகமானவர்களாக ஆக்கும் ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி இரட்டை ஹீரோ (கதாநாயக) ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்

**பார்ட்டிகளுடன்: எப்பொழுதும் தன்னை தந்தையின் அருகில் இருக்கும் இரத்தினமாக நினைக்கிறீர்களா?** அருகில் இருக்கும் இரத்தினத்தின் அடையாளம் என்னவாக இருக்கும்? அருகாமையில் இருப்பது என்றால் சமமாக ஆவது. அருகாமை என்றால் தொடர்பில் இருப்பது தொடர்பில் இருப்பதினால் என்னவாகும்? அதன் வண்ணம் அதாவது பிரபாவம் ஏற்படும் இல்லையா. யார் எப்பொழுதும் தந்தையின் அருகில் அதாவது தொடர்பில் இருப்பவர்களோ அவர்களுக்கு தந்தையின் பிரபாவம் ஏற்படும், அதனால் தந்தைக்குச் சமமாக ஆகி

விடுவார்கள். அருகில் என்றால் சமநிலை அப்படி அனுபவம் செய்கிறீர்களா? ஒவ்வொரு குணத்தை எதிரில் வைத்துக் கொண்டே எந்தெந்த குணத்தில் தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். ஒவ்வொரு சக்தியை எதிரில் வைத்து நான் எந்த சக்தியில் சமமாக ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். உங்களுடைய பட்டமே மாஸ்டர் சர்வ குண ரம்பன்னம், மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதாகும். அப்படி இந்தப் பட்டம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? அனைத்து சக்திகளும் வந்து விட்டது என்றால் வெற்றி கிடைத்து விட்டது. பிறகு ஒருபொழுதும் தோல்வி ஏற்பட முடியாது. யார் தந்தையின் கழுத்தின் ஹார் (மாலை) ஆகி விட்டாரோ அவருக்கு ஒருபொழுதும் ஹார் தோல்வி ஏற்பட முடியாது. எனவே நான் தந்தையின் கழுத்தின் மாலையாக இருக்கிறேன் என்ற இந்த நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள், இதனால் மாயாவிடம் தோல்வி அடைவது முடிவடைந்து விடும். தோல்வி அடைபவராக இன்றி தோல்வி அடையச் செய்பவராக ஆகி விடுவீர்கள். அந்த மாதிரி டோதை இருக்கிறதா? அனுமானை மகாவிர் என்று கூறுகிறார்கள் இல்லையா. மகாவீர் என்ன செய்தார்? இலங்கையை எரித்து விட்டார் இல்லையா. அவர் எரியவில்லை, வால் மூலமாக இலங்கையை எரித்து விட்டார். அப்படி நீங்களும் இலங்கையை எரிக்கக்கூடிய மகாவீர் தான் இல்லையா. தனக்கு அதிகாரம் உள்ளது என்று நினைத்து மாயா வரட்டும் ஆனால் நீங்கள் அதனுடைய அதிகாரத்தை அழித்து அடிமையாக்கி விடுங்கள். அனுமானின் விசேஷமாக அவர் எப்பொழுதும் சேவாதாரியாக இருந்தார் என்று காண்பிக்கிறார்கள். அவர் தன்னை சேவகள் என்று நினைத்தார். அப்படி இங்கே யார் எப்பொழுதும் சேவாதாரியாக இருக்கிறாரோ அவர் தான் மாயாவின் அதிகாரத்தை அழிக்க முடியும். யார் சேவாதாரியாக இல்லையோ அவரால் மாயாவின் இராஜ்யத்தை எரிக்க முடியாது. அனுமானின் இதயத்தில் எப்பொழுதும் இராம் அமர்ந்திருந்தார் இல்லையா. ஒரு இராமை தவிர வேறு யாரும் இல்லை என்று இருந்தார். அப்படி தந்தையைத் தவிர வேறு யாருமே இதயத்தில் இருக்கக் கூடாது. தன்னுடைய உடலின் நினைவு கூட இதயத்தில் இருக்க வேண்டாம். உடல் கூட பிறருடையது என்று கூறினோம் இல்லையா, எப்பொழுது உடல் கூட நம்முடையது இல்லை என்றால் இன்னொருவர் இதயத்தில் எப்படி வர முடியும்.

குடும்ப வாழ்க்கையில் இருந்துக் கொண்டே தன்னை குடும்பஸ்தன் என்று நினைக்காமல் டிரஸ்டி என்று புரிந்து கொள்ளுங்கள். குடும்பஸ்தன் என்று நினைப்பதினால் முந்தைய கடந்த காலத்து சுமை தலையில் வந்து விடுகிறது. டிரஸ்டி என்றால் டபுள் லைட் அதாவது சுமையற்றவர். எப்பொழுது ஆத்மீக

சொரூபத்தில் இருக்கிறீர்கள் என்றால் டிரஸ்டி, உடலின் நினைவு இருக்கிறது என்றால் குடும்பஸ்தன். குடும்பஸ்தன் என்றால் மோகம் -மாயாவின் வலையில் மாட்டிக் கொண்டிருப்பவர், டிரஸ்டி என்றால் எப்பொழுதும் இலேசாக ஆகி குஷியில் பறப்பவர். டிரஸ்டி என்றால் மாயாவின் வலை முடிந்தது.

**வரதானம்: அனைத்து பொறுப்புக்களின் கமையை தந்தைக்கு கொடுத்து விட்டு எப்பொழுதும் தன்னுடைய முன்னேற்றத்தை செய்யக்கூடிய சகஜயோகி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தந்தையின் காரியத்தை நிறைவேற்றும் பொறுப்பிற்காக உறுதி மேற்கொள்கிறார்களோ அவர்களுக்கு தந்தையும் அந்த அளவே சகயோகம் கொடுக்கிறார். என்னென்ன வீணானதின் கமை இருக்கிறதோ அதை மட்டும் தந்தையிடம் விட்டு விடுங்கள். தந்தையின் குழந்தையாகி தந்தையிடம் பொறுப்புக்களின் சுமையை கொடுத்து விடுவதினால் வெற்றியும் அதிகம், முன்னேற்றமும் சுலபமாக ஏற்படும். ஏன் மற்றும் என்ன என்ற கேள்வியிலிருந்து விடுபட்டு இருங்கள். முக்கியமாக முற்றுப்புள்ளி இடும் நிலையில் இருந்தீர்கள் என்றால் சகஜயோகி ஆகி அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

**சுலோகன்: மனம் மற்றும் புத்தியில் நேர்மை இருக்கிறது என்றால் தந்தை மற்றும் பரிவாரத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் ஆகி விடுவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 11.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியத்தின் சக்தி மூலம் உலக மாற்றம்!

இன்றைய இந்த சபை எந்த மாதிரியான சபை? இது விதியை உருவாக்குபவர்களின் சபை, சித்தியை (வெற்றியை) வழங்குபவர்களின் சபை. தன்னை அந்த மாதிரி விதியை உருவாக்குபவர் அல்லது சித்தி அதாவது வெற்றியை வழங்குபவர் என்று நினைக்கிறீர்களா? இந்த சபையின் விசேஷங்களை தெரிந்திருக்கிறீர்களா? விதியை உருவாக்குபவர்களின் விசேஷ சக்தி எது, அதன் மூலமாக ஒரு நொடியில் அனைவரையும் விதி மூலமாக வெற்றி சொரூபியாக ஆக்க முடியும். அதை தெரிந்திருக்கிறீர்களா? அது தான் சத்தியம் அதாவது உண்மை நிலை சத்தியத்திற்கு மகான் (மேன்மை) தன்மை இருக்கிறது. சத்தியம் தான் மரியாதைக் சூரியது. அந்த சத்தியத்தை அதாவது மகான் தன்மையை தெளிவான ரூபத்தில் தெரிந்திருக்கிறீர்களா? விசேஷ விதி சத்தியத்தின் ஆதாரத்தில் இருக்கிறது. முதல் அஸ்திவாரம் தன்னுடைய ஞானம் அதாவது தன்னுடைய சொரூபத்தின் சத்தியத்தை பாருங்கள், சத்திய சொரூபம் எது மற்றும் முன்பு என்னவென்று நம்பியிருந்தீர்கள்? அப்படி முதலாவதாக சத்தியமான ஆத்மா சொரூபம் என்பதானதை. எதுவரை இந்த சத்தியத்தை தெரிந்திருக்க வில்லையோ அதுவரை மகான் தன்மை இருந்ததா? மகானாக இருந்தீர்கள் அல்லது மகானின் பூஜாரியாக இருந்தீர்கள். எப்பொழுது தன்னைத் தானே தெரிந்து கொண்டீர்கள் என்றால் என்ன ஆகி விட்டீர்கள்? மகான் ஆத்மா ஆகி விட்டீர்கள். சத்தியத்தின் அதிகாரம் மூலம் மற்றவர்களுக்கும் நாம் ஆத்மா என்றும் கூறுகிறீர்கள். இதே விதமாக சத்தியமான தந்தையின் சத்தியமான அறிமுகம் கிடைப்பதினால் பரமாத்மா எங்களுடைய தந்தை என்று அதிகாரத்துடன் கூறுகிறீர்கள். ஆஸ்தியின் அதிகாரத்தின் சக்தியினால் தந்தை எங்களுடையவர் மற்றும் நாங்கள் தந்தையினுடையவர்கள் என்று கூறுகிறீர்கள். அதே போல் தன்னுடைய படைப்பின் அல்லது சிருஷ்டி சக்கரத்தின் சத்தியமான அறிமுகத்தை இப்பொழுது இந்த சிருஷ்டி சக்கரம் முடிவடைந்து மீண்டும் நடந்தது போல் அப்படியே நடக்க வேண்டும் என்று அதிகாரத்துடன் கூறுகிறீர்கள். இப்பொழுது நடப்பது சங்கமயுகமேயன்றி கலியுகம் அல்ல. முழு உலகின் வித்வான்கள்,

# 1981 அவ்யக்த முரளி

பண்டிதர்கள் மற்றும் அனேக ஆத்மாக்கள் சாஸ்திரங்களின் அனுசாரம் கலியுகம் தான் நடக்கிறது என்று நம்பினாலும், நீங்கள் ஐந்து பாண்டவர்கள் அதாவது கோடியில் சிலர் மிகக் குறைந்த ஆத்மாக்கள், இப்பொழுது நடப்பது கலியுகம் அல்ல சங்கமயுகம் என்று சவால் விடுகிறீர்கள் என்றால் எந்த அதிகாரத்தோடு இதைக் கூறுகிறீர்கள்? சத்தியத்தின் மகான தன்மை காரணமாக கூறுகிறீர்கள். வாருங்கள் மற்றும் வந்து புரிந்து கொள்ளுங்கள் என்று உலகிற்கு செய்தி கொடுக்கிறீர்கள். தூங்கிக் கொண்டிருக்கும் கும்பகர்ணர்களை எழுப்பி நேரம் வந்து விட்டது என்று கூறுகிறீர்கள். இது தான் சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சக்குரு மூலமாக சத்தியத்தின் சக்தி கிடைத்திருக்கிறது. இது தான் சத்தியம் என்று அனுபவம் செய்கிறீர்கள்.

சத்தியத்திற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று சத்தியம், இன்னொன்று சத்தியம் என்றால் அழியாதது. அப்படி தந்தை சத்தியமாகவும் இருக்கிறார். அழியாதவராகவும் இருக்கிறார் எனவே தந்தை மூலமாக என்ன அறிமுகம் கிடைத்திருக்கிறதோ அவை அனைத்தும் சத்தியம் மற்றும் அழியாதவை. பக்தர்கள் கூட தந்தையின் மகிமையாக "சத்தியம், சிவம், சுந்தரம்" என்று பாடுகிறார்கள். சத்தியமானவர் என்றும். அழியாதவர் என்றும் நம்புகிறார்கள். காட் இஸ் ட்ரூத் அதாவது கடவுள் உண்மையானவர் என்றும் நம்புகிறார்கள். எனவே தந்தை மூaxமாக சத்தியத்தின் அதிகாரம் கிடைத்து விட்டது. இந்த ஆஸ்தியும் கிடைத்து விட்டது தான் இல்லையா. சத்தியத்தின் அதிகாரம் உள்ளவர்களின் மகிமையும் கேட்டிருக்கிறீர்கள். அதன் அடையாளமாக என்ன இருக்கும்? சிந்தி மொழியில் எங்கு "சத்தியம் உள்ளதோ அங்கு மனம் சதா குஷியில் நடனமாடும்' என்ற பழமொழி இருக்கிறது. இன்னும் பழமொழிகள் இருக்கின்றன - 'சத்தியத்தின் படகு ஆடும் அசையும் ஆனால் மூழ்காது. உங்களையும் அசைப்பதற்கு மிகுந்த முயற்சி செய்கிறார்கள் தான் இல்லையா. இது பொய், இது கற்பனை என்று கூறுகிறார்கள் இல்லையா ஆனால் உண்மை இருக்கிறது என்றால் குஷியில் மனம் நடனமாடும். நீங்கள் சத்தியத்தின் மகான் நிலையின் போதையில் எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்கள். குஷியில் நடனமாடிக் கொண்டே இருக்கிறீர்கள். எவ்வளவு தான் அவர்கள் உங்களை ஆட்டுவதற்கு முயற்சி செய்கிறார்களோ அந்த அளவே என்ன ஆகிறது? உங்களுடைய ஊஞ்சலை ஆட்டுவதினால் இன்னும் அதிகமாகவே ஆடுகிறீர்கள். இது அசைப்பது அல்ல ஆனால் ஊஞ்சலில் ஆட்டுவது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அசைவதல்ல ஆனால் ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். சத்தியத்தின் சக்தி முழு இயற்கையையும் (தூய்மையாக) சதாபிரதானமாக ஆக்கி விடுகிறது. யுகத்தை

சத்யுகமாக ஆக்கி விடுகிறது. அனைத்து ஆத்மாக்களின் சத்கதியின் எதிர்கால பாக்கியத்தை உருவாக்கி விடுகிறது. ஒவ்வொரு ஆத்மாவும் உங்களுடைய சத்தியத்தின் சக்தி மூலமாக அவரவர்களின் சக்திகேற்றபடி அவர்களின் தர்மத்தில், அவர்களுடைய நேரத்தில் முக்திக்குப் பிறகு ஜீவன் முக்தியில் தான் அவதரிப்பார்கள். ஏனென்றால் விதியை உருவாக்குபவர்களின் மூலமாக சங்கமயுகத்தின் இறுதி வரை தந்தையை நினைவு செய்வதற்கான விதியின் செய்தி அவசியம் கிடைக்க வேண்டும். பின்பு சிலருக்கு வாய்மொழி மூலமாக, சிலருக்கு படங்கள் மூலமாக, சிலருக்கு செய்திகள் மூலமாக, சிலருக்கு உங்கள் அனைவரின் சக்திசாலியான எண்ண அலைகள் மூலமாக, சிலருக்கு இறுதி விநாச லீலையின் கூச்சல் குழப்பம் மூலமாக, வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலம் மூலமாக கிடைக்கும். இந்த அனைத்து அறிவியலின் சாதனங்கள். உங்களுடைய இந்த செய்தி கொடுக்கும் காரியத்தில் சகயோகியாக இருக்கும்.

சங்கமயுகத்தில் இயற்கை சகயோகி ஆவதற்கான தன்னுடைய பங்கை தொடங்கி விடும். அனைத்து பக்கங்களிலிருந்தும் இயற்கையின் தலைவனை மற்றும் மாஸ்டர் இயற்கையின் தலைவர்களை வரவழைப்பார்கள். அனைத்து பக்கங்களிலிருந்தும் தானாகவே வலிய வந்து அர்ப்பணம் மற்றும் சகயோகம் செய்வர். பின்பு என்ன செய்வீர்கள்? ஒவ்வொரு இயற்கையின் தத்துவத்தை தேவதையின் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். இந்த மாதிரி பக்தியில் மகிமை செய்யப்பட்டிருக்கிறது. தேவதை என்றால் கொடுப்பவர். அப்படி இறுதியில் இந்த அனைத்து இயற்கையின் தத்துவம் உங்கள் அனைவருக்கும் சகயோகம் கொடுக்கக்கூடிய வள்ளல் ஆகி விடுவார்கள். இந்த கடலும் உங்களுக்கு சகயோகம் கொடுக்கும். முழு உலகில் நாலாபுறங்களிலும் உள்ள பொருட்களை பாரத பூமியில் கொண்டு வருவதில் சகயோகியாக இருப்பார்கள். எனவே கடல் தன்னிடமுள்ள இரத்தினங்கள் நிரப்பிய தட்டுக்களை கொடுத்தன என்று கூறுகிறார்கள். அதே போலவே பூமி (நிலம்) அதிர்பு பூகம்பம் போன்றவற்றால் அனைத்து மதிப்புள்ள பொருட்கள் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுக்காக ஒரு இடத்தில் பாரதத்தில் ஒன்றாக கொண்டு வந்து சேர்ப்பதில் சகயோகியாக இருக்கும். இந்திர தேவன் (மழைக்கு அதிபதி) என்று கூறுகிறார்கள் இல்லையா. அப்படி மழையும் நிலத்தை சுத்தப்படுத்தும் சகயோகத்தில் ஆஜராகி விடும். இந்த அனைத்து குப்பைகளையும் நீங்களோ சுத்தப்படுத்த மாட்டீர்கள். இந்த முழு இயற்கையின் சகயோகம் கிடைக்கும். காற்று சிலவற்றை அகற்றும், சிலவற்றை மழை தன்னுடன் எடுத்துச் செல்லும். அக்னியையோ தெரிந்தே இருக்கிறீர்கள். அப்படி இறுதியில் இந்த அனைத்து தத்துவங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்கு சகயோகம் கொடுக்கும்

தேவதை ஆவார்கள். மேலும் அனைத்து ஆத்மாக்களும் அனுபவம் செய்வார்கள். பிறகு பக்தியில் இப்பொழுது சகயோகம் கொடுக்கும் காரியத்தின் காரணமாக தேவதை ஆவீர்கள். அந்தக் காரியத்தின் அர்த்தத்தை மறந்து மனிதர்கள் தத்துவங்களுக்கு தேவதை ரூடங்களை கொடுத்து விடுகிறார்கள். எப்படி சூரியன் தத்துவமாகும் ஆனால் அதற்கு மனித ரூபம் கொடுத்து விட்டார்கள். அப்படி விதியை உருவாக்குபவராகி என்ன காரியம் செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா?

அவர்களுடையது விதானசபை அதாவது சட்டசபை மேலும் இது விதியை உருவாக்குபவர்களின் சபை. அங்கு சபையின் உறுப்பினர்கள் இருப்பார்கள், இங்கு அதிகாரியாக மகான் ஆத்மாக்கள் இருட்பார்கள். அப்படி சத்தியத்தின் மகான் தன்மை எவ்வளவு என்று புரிந்து கொண்டீர்களா? சத்தியம் பாரஸ் என்ற உலோகத்திற்கு சமமானது. எப்படி பாரஸ் இரும்பையும் தங்கமாக்கி விடுகிறது. உங்களுடைய சத்தியத்தின் சக்தி ஆத்மாவை, இயற்கையை, காலத்தை, அனைத்து பொருட்களை, அனைத்து சம்மந்தத்தை, சம்ஸ்காரங்களை, உணவை, செயல்பாட்டை அனைத்தையும் சதோபிரதானம் அதாவது மிக தூய்மையாக ஆக்கி விடுகிறது. தமோகுணத்தின் அதாவது மிக மோசமான தரத்தின் பெயர் அடையாளத்தை அழித்து விடுகிறது. சத்தியத்தின் சக்தி உங்களுடைய பெயரை, ரூபத்தை சத்தியம் அதாவது அழியாததாக ஆக்கி விடுகிறது. அரைக் கல்பம் உணர்வுள்ள (சாகார) ரூபத்தில், அரைக்கல்பம் மூர்த்திகளின் சிலை) ரூபத்தில். அரைக் கல்பம் பிரஜைகள் உங்களுடைய பெயர் புகழை பாடுவார்கள், அரைக்கல்பம் பக்தர்கள் உங்களுடைய பெயர், புகழை பாடுவார்கள். உங்களுடைய வார்த்தை சத்தியவாக்கின் ரூபத்தில் வர்ணிக்கப்படுகிறது. இன்று வரையிலும் கூட ஒன்று அல்லது பாதி வார்த்தைகளை கேட்பதினால் தன்னை மகான் என்று அனுபவம் செய்கிறார்கள். உங்களுடைய சத்தியத்தின் சக்தி மூலம் உங்களுடைய தேசமும் அழியாததாக ஆகி விடுகிறது. வேஷமும் அழியாததாக ஆகி விடுகிறது. அரைக்கல்பம் தேவதை வேஷத்தில் இருப்பீர்கள், அரைக் கல்பம் தேவதைகளின் வேஷத்தில் நினைவுச்சின்னம் இருக்கும் இன்று வரையிலும் கூட பக்தர்கள் உங்களுடைய விக்ரகங்களை நல்ல நல்ல ஆடைகளினால் அலங்கரித்து கொண்டிருக்கிறார்கள். செய்த காரியம் மற்றும் சரித்திரம் இவை அனைத்தும் சத்தியமாக ஆகி விட்டது. செய்த காரியத்தின் நினைவாக பாகவதத்தை எழுதி விட்டார்கள். சரித்திரங்களின் அனேக கதைகள் எழுதிவிட்டார்கள். இவை அனைத்தும் சத்தியமாக ஆகி விட்டது. எந்தக் காரணத்தினால்? சத்தியத்தின் சக்தியின் காரணமாக. உங்களுடைய தினசரி நடவடிக்கைகள் கூட சத்தியமாகி

விட்டது. உணவு அருந்துவது, அமிர்தம் குடிப்பது இவை அனைத்தும் சத்தியமாகி விட்டது. உங்களுடைய விக்கிரகங்களையும் தூக்குகிறார்கள், அமர வைக்கிறார்கள், சுற்றி வலம் வருகிறார்கள், பிரசாதம் படைக்கிறார்கள், அமிர்தம் அதாவது தீர்த்தம் வைக்கிறார்கள் மற்றும் குடிக்கிறார்கள். ஒவ்வொரு காரியமும் செயலும் நினைவுச் சின்னமாக ஆகி விட்டது. இந்த அளவு சக்தியை தெரிந்திருக்கிறீர்களா? இந்த அளவு அதிகாரத்தோடு அனைவருக்கும் சவால் விடுகிறீர்களா அல்லது சேவை செய்கிறீர்களா? புதியவர்கள் வந்திருக்கிறார்கள் இல்லையா. நாங்கள் வெகு சிலர் தான் என்று நினைக்காதீர்கள், ஆனால் சர்வ சக்திவான் உங்களுடைய துணைவனாக இருக்கிறார். நீங்கள் சத்தியத்தின் சக்தி உள்ளவர்கள். நீங்கள் ஐவர் மட்டும் இல்லை ஆனால் உலகை படைப்பவர் உங்களுடன் துணைவனாக இருக்கிறார். இதை தங்கு தடையின்றி தயக்கமில்லாமல் சொல்லுங்கள். ஏற்றுக்கொள்வார்களா அல்லது ஏற்றுக் கொள்ளமாட்டார்களா, சொல்லலாமா, எப்படிச் சொல்வது என்ற இந்த எண்ணமோ வருவதில்லையே. எங்கு சத்தியம் இருக்கிறதோ, அங்கு சத்தியமான தந்தை இருக்கிறார் எப்பொழுதும் வெற்றி தான். நிச்சயத்தின் ஆதாரத்தில் அனுபவி ஆகி சொன்னீர்கள் என்றால் வெற்றி எப்பொழுதும் உங்களுடன் இருக்கும்.

நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள் என்றால் பாப்தாதாவும் வந்திருக்கிறார், நீங்களும் வர வேண்டியதாக இருக்கிறது என்றால் பாப்தாதாவிற்கும் வர வேண்டியதாக இருக்கிறது. தந்தைக்கும் மற்றவரின் உடலில் அமர வேண்டியதாக இருக்கிறது இல்லையா. உங்களுக்கு இரயில் வண்டியில் அமர வேண்டியதாக இருக்கிறது என்றால் தந்தைக்கும் மற்றவரின் உடலில் அமர வேண்டியதாக இருக்கிறது. சிரமம் தெரிகிறதா என்ன? இப்பொழுதோ உங்களுடைய பேரன் பேத்திகளோ வரப்போகிறார்கள். பக்தர்களும் வருவார்கள் என்றால் என்ன செய்வீர்கள். பக்தர்களோ உங்களை அமரவே விட மாட்டார்கள். இப்பொழுதோ சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள். பிறகு சௌகரியத்தை கொடுத்து விட வேண்டியதாக இருக்கும். இருந்தும் மூன்றடி நிலமோ கிடைத்திருக்கிறது இல்லையா. பக்தர்களோ நின்று கொண்டே தபஸ்யா செய்கிறார்கள். உங்களுடைய நினைவு சின்னமான சிலைகளை பார்ட்டதற்காக வரிசையில் நிற்கிறார்கள். அப்படி நீங்களும் அனுபவத்தையோ செய்யுங்கள். பருவத்தின் பழத்தை அருந்துவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா. புதுப்புது குழந்தைகளுக்கு பப்தாதா விசேஷமாக அன்பு கொடுக்கிறார். ஏனென்றால் இந்த இறுதியில் வந்திருப்பவர்கள் மிக வேகமாக முன்னேறுவார்கள் என்று தெரியும். எப்பொழுதும் முழு ஈடுபாடு மூலமாக விக்ன விநாஷக் ஆகி வெற்றி ரத்தினம் ஆவீர்கள். எப்படி உலகியல் ரூபத்தில் கூட

பெரியவர்களை விட சிறியவர்கள் நன்றாக ஓடுவார்கள். அப்படி நீங்கள் அனைவரும் கூட பந்தயத்தில் நன்றாக ஓடி நம்பர் ஒன்னில் வந்து விடுங்கள். அந்த மாதிரி ஊக்கம் உற்சாகம் வைக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா எப்பொழுதுமே சகயோகியாக இருக்கிறார். உங்களுடைய யோகம் மற்றும் தந்தையின் சகயோகம். இரண்டின் மூலமாக எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு முன்னேறிச் செல்ல முடியும். இப்பொழுது வாய்ப்பு இருக்கிறது, பிறகு இந்த நேரமும் முடிவடைந்து விடும்.

அந்த மாதிரி எப்பொழுதும் சத்தியத்தின் மகான் நிலையில் இருக்கக்கூடிய, அனைத்து ஆத்மாக்களின் விதியை உருவாக்கக்கூடிய, சத்கதி வழங்கக்கூடிய, உலகை தன்னுடைய சத்தியத்தின் சக்தி மூலமாக சதோபிர தானமாக ஆக்கக்கூடிய, அந்த மாதிரி பாப்தாதாவின் எப்பொழுதும் அன்பிற்குரிய மற்றும் சகயோகி குழந்தை களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்: 1) எப்பொழுதும் தன்னை சக்திசாலியான ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா?** சக்திசாலியான ஆத்மாவின் ஒவ்வொரு எண்ணமும் சக்திசாலியாக இருக்கும். ஒவ்வொரு எண்ணத்தில் சேவை நிரம்பியிருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் தந்தையின் நினைவு நிரம்பியிருக்க வேண்டும். ஒவ்வொரு காரியத்தில் தந்தை மாதிரியான சரித்திரம் நிரம்பியிருக்க வேண்டும். அப்படி தன்னை அந்த மாதிரியான சக்திசாலியான ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? வாயிலும் (வார்த்தையிலும்) தந்தை. நினைவிலும் தந்தை மற்றும் காரியத்திலும் தந்தையின் சரித்திரம் இப்படிப்பட்டவரைத்தான் தந்தைக்குச் சமமான சக்திசாலியானவர் என்று கூறுவது. நீங்கள் அந்த மாதிரி இருக்கிறீர்களா? 'பாபா' என்பது ஒரு வார்த்தை ஆனால் அந்த ஒரு வார்த்தையே மந்திர வார்த்தை ஆகும். எப்படி மந்திரத்தில் சொரூபம் மாறிவிடுகிறது அப்படி ஒரு தந்தை என்ற வார்த்தை சக்தி நிறைந்த சொரூபம் ஆக்கி விடுகிறது. குணம் மாறிவிடுகிறது. காரியம் மாறி விடுகிறது, வார்த்தைகள் மாறிவிடுகிறது. இந்த ஒரு வார்த்தை தான் மந்திரத்தின் வார்த்தை ஆகும். அப்படி அனைவரும் மந்திரவாதிகள் ஆகி விட்டீர்கள் இல்லையா. மந்திரம் போடத் தெரியும் இல்லையா. பாபா என்று கூறினீர்கள் மற்றும் பாபாவின் குழந்தையாக ஆக்கினீர்கள், இது தான் மந்திரம்.

**2) வரதானி பூமியில் வந்து வரமளிக்கும் வள்ளல் மூலமாக வரதானத்தைப் பெறுவதற்கான பாக்கியத்தை உருவாக்கியிருக்கிறீர்களா?** பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மூலமாக எப்படி விரும்புகிறீர்களோ அப்படி தன்னுடைய

# 1981 அவ்யக்த முரளி

பாக்கியத்தின் ரேகையை போட முடியும் என்ற வர்ணனை என்னவாக இருக்கிறதோ அது இந்த நேரத்தின் வரதானம் ஆகும். அப்படி வரதானத்தின் நேரத்தை, வரதானத்தின் ஸ்தானத்தை காரியத்தில் கொண்டு வந்தீர்களா? என்ன வரதானம் பெற்றிருக்கிறீர்கள்? எப்படி தந்தை சம்பன்னமாக இருக்கிறார் அப்படி தந்தைக்குச் சமமாக ஆவதற்கான திட எண்ணத்தை வைத்தீர்களா குழந்தையாக இருப்பவர் நாளை எஜமானன்' என்று குழந்தைகளுக்காக மகிமை பாடுவார்கள். அப்படி குழந்தைகள் தந்தையின் எஜமானர்கள். எஜமானத் தன்மையின் போதையில் இருப்பதற்காக தந்தைக்குச் சமமாக தன்னை சம்பன்னமாக ஆக்க வேண்டியதாக இருக்கும். தந்தையின் விசேஷம் சர்வ சக்திவான் அதாவது அனைத்து சக்திகளின் விசேஷம் இருக்கிறது. அப்படி யார் குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன் ஆகிறாரோ அவரிடமும் அனைத்து சக்திகளும் இருக்கும். ஒரு சக்தியின் குறை கூட இருக்காது. ஒருவேளை ஒரு சக்தியின் குறை இருந்தால் கூட சர்வ சக்திவான் என்று கூறப்பட மாட்டீர்கள், சக்திவான் என்று மட்டுமே அழைக்கப்படும். அப்படியானால் நீங்கள் யார்? சர்வ சக்திவான் என்றால் அவர் என்ன விரும்புகிறாரோ அதை செய்ய முடியும், ஒவ்வொரு கர்ம இந்திரியங்களும் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். நினைத்தார் மற்றும் நடந்தது ஏனென்றால் மாஸ்டர் இல்லையா. அப்படி நீங்கள் அனைவரும் சுயராஜ்ய அதிகாரி தான் இல்லையா. முதலில் சுயராஜ்யம் பிறகு உலக இராஜ்யம்.

டெல்லி தலைநகரத்தில் இருப்பவர்கள் சுயராஜ்ய அதிகாரி தான் இல்லையா? இதற்கு வெகு காலத்தின் சம்ஸ்காரம் வேண்டும். ஒருவேளை இறுதியில் ஆனீர்கள் என்றால் உலக இராஜ்யமும் எப்பொழுது கிடைக்கும்? ஒருவேளை உலகத்தின் இராஜ்யத்தை தொடக்கத்தில் பெற வேண்டும் என்றால் தொடக்கத்திலிருந்து இந்த சம்ஸ்காரமும் வேண்டும். நீண்ட காலத்து இராஜ்யம், நீண்ட காலத்தின் சம்ஸ்காரம். மாஸ்டர் சர்வ சக்திவானின் முன் எதுவும் பெரிய விஷயம் இல்லை. டெல்லி நிவாசிகள் இப்பொழுது என்ன நினைத்து கொண்டிருக்கிறீர்கள்? மகா யக்ஞம் செய்தோம் முடிந்து விட்டது அப்படி யோசிக்கவில்லையே முன்னேறும் கலையின் பக்கம் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. என்ன செய்திருக்கிறீர்களோ அதை விட இன்னும் அதிகம். இன்னும் அதிகம் செய்து செய்து தன்னுடைய இராஜ்யம் வந்து விடும். இப்பொழுதோ மற்றவர்களின் இராஜ்யத்தில் தன்னுடைய காரியத்தை செய்ய வேண்டியதாக இருக்கிறது, பிறகு நம்முடைய இராஜ்யம் ஆகி விடும். இயற்கையும் உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கும். இயற்கை வாய்ப்பு கொடுக்கும்போது ஆத்மாக்கள் என்ன செய்வார்கள். ஆத்மாக்களும் பின்பு தலை வணங்குவார்கள். அப்படியானால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? இருந்தும்

என்ன செய்திருக்கிறீர்களோ அது நாடகத்தின் அனுசாரம் தைரியம், உல்லாசத்தோடு காரியத்தை வெற்றிகரமாக செய்திருக்கிறீர்கள் அதற்காக பாப்தாதா உங்களுடைய தைரியத்தின் மேல் குஷி அடைகிறார். என்னென்ன கடின உழைப்பு செய்திருக்கிறீர்களோ அதுவோ சேமிப்பாகி விட்டது. தற்சமயமும் உருவாகியிருக்கிறது மேலும் எதிர்காலமும் உருவாகியிருக்கிறது.

சேவையின் விதை அழியாததாக இருக்கும் காரணத்தினால் கொஞ்சம் சப்தம் வெளியானது மேலும் வெளியாகிக் கொண்டே இருக்கும். விதை போடப்பட்டதினால் அனேக ஆத்மாக்களுக்கு குப்த ரூபத்தில் செய்தி கிடைத்தது. உங்கள் அனைவரின் களைப்போ அகன்று விட்டது தான் இல்லையா, இருந்தும் பாப்தாதாவின் அன்பு, சகயோகம் எப்பொழுதும் கிடைப்பதினால் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். உயர்ந்த காரியம் செய்வதற்கு மற்றும் பொறுப்பாளர் ஆவதற்காக டெல்லிக்கும் இந்த வரதானம் கிடைத்திருக்கிறது. இருந்தும் சேவையின் ஜென்ம பூமி இல்லையா. சேவையின் சரித்திரத்தில் பெயரோ வருகிறது தான் இல்லையா. மேலும் அனேகர்களுக்கு சேவை செய்வதற்காக சாதனம் கிடைத்து விடுகிறது. சேவையின் பூமியில் இருப்பவர்களோ வரதானி ஆகி விட்டார்கள் இல்லையா, மிக நல்ல உழைப்பு செய்திருக்கிறீர்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய தெய்விக, ஆன்மீக ஜென்மத்தின் நினைவு மூலமாக மரியாதையின் கோட்டிற்கு உள்ளே இருக்கக்கூடிய மரியாதா புருஷோத்தமர் ஆகுக!**

எப்படி ஒவ்வொரு குலத்தின் மரியாதையின் கோடு இருக்கிறது. அதே போல் பிராமண குலத்தின் மரியாதைகளின் கோடு இருக்கிறது. பிராமணன் என்றால் தெய்வீக மற்றும் ஆன்மீக ஜென்மம் எடுத்த மரியாதா புருஷோத்தமர். அவர்கள் எண்ணத்தில் கூட எந்த ஈர்ப்பின் வசமாகி மரியாதைகளை மீறி நடக்க முடியாது. யார் மரியாதையின் கோட்டை எண்ணத்தில் கூட தாண்டுகிறார்களோ அவர்கள் தந்தையின் ஆதரவை அனுபவம் செய்ய முடிவதில்லை. குழந்தைகளுக்குப் பதிலாக வேண்டும் என்று யாசிக்கும் பக்தன் ஆகி விடுகிறார்கள். பிராமணன் என்றால் அழைப்பது, யாசிப்பது முடிவடைந்தது. ஒருபொழுதும் இயற்கை அல்லது மாயாவின் பற்றுதலின் கிரீடம் இல்லாதவர். அவர்கள் எப்பொழுதும் தந்தையின் தலையின் கிரீடமாக இருக்கிறார்கள்.

**சுலோகன்: அமைதியின் தூதுவனாகி தன்னுடைய தபஸ்யா மூலமாக உலகில் அமைதியின் கிரணங்களை பரப்புங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக ரோஜாவின் விசேஷம்!

இன்று தோட்டத்து உரிமையாளர் தன்னுடைய ஆன்மீக ரோஜா குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலாபுறங்களிலும் உள்ள ஆன்மீக ரோஜா குழந்தைகள் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். ஸ்தூலமாக எங்கே அமர்ந்திருந்தாலும் (இன்று பாதி சகோதர சகோதரிகள் கீழே சிறிய ஹாலில் அமர்ந்து முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்) ஆனால் பாப்தாதா அவர்களையும் தன்னுடைய கண்களின் எதிரிலே தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது கூட பாப்தாதா குழந்தைகளின் எண்ணங்களை கேட்டுக் கொண்டிருக்கிறார். அனைவரும் நேரெதிரில் அமர்ந்து முரளி கேட்க விரும்புகிறார்கள் ஆனால் கீழே அமர்ந்திருந்தபோதிலும் குழந்தைகளை பாப்தாதா நேரெதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ஆன்மீக ரோஜாவின் நறுமணம் பாப்தாதாவிடம் வந்து கொண்டிருக்கிறது. அனைவரும் வரிசைக்கிரமமாகவோ இருக்கிறார்கள் ஆனால் இந்த நேரம் அனைவரும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இதே ஆன்மீக நறுமணத்தில் நம்பர் ஒன் நிலையில் இருக்கிறார்கள். எனவே ஆன்மீக நறுமணம் வதனம் வரையிலும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. ஆன்மீக நறுமணத்தின் விசேஷங்களை தெரிந்திருக்கிறீர்களா. (பாபாவின் உறைவிடம் எதன் ஆதாரத்தில் ஆன்மீக நறுமணம் நிரந்தரமாக ஒரே சீராக மற்றும் வெகு தொலை தூரம் வரை பரவுகிறது. அதாவது பிரபாவத்தை ஏற்படுத்துகிறது? இதற்கான மூல ஆதாரம் ஆன்மீக உள்உணர்வு எப்பொழுதுமே ஆத்மா, ஆத்மாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறது, ஆத்மாவுடன் பேசிக் கொண்டிருக்கிறது என்பது உள் உணர்வில் இருக்க வேண்டும். ஆத்மா தான் தனித்தனியான தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறது. நான் ஆத்மா எப்பொழுதும் பரமாத்மாவின் குடை நிழலில் இருந்து கொண்டிருக்கிறேன். நான் ஆத்மா, என்னுடைய ஒவ்வொரு எண்ணமும் பரமாத்மாவின் ஸ்ரீமத்திற்குப் புறம்பாக இருக்க முடியாது. ஆத்மா என்னை செய்விப்பவர் மேலான (சுப்ரீம்) பரமாத்மா ஆவார். செய்விப்பவரின் ஆதாரத்தில் நான் கருவி, செய்பவன். நான் செய்பவன் மற்றும் அவர் செய்விப்பவர். அவர் என்னை நடத்திக் கொண்டிருக்கிறார், நான் நடந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கட்டளையின் போதும் ஆத்மா எனக்காக எண்ணம், சொல் மற்றும்

செயலில் எப்பொழுதும் எஜமானன் பாபா ஆஜராக இருக்கிறார். எனவே எஜமானரின் எதிரில் எப்பொழுதும் ஆத்மா நான் "சரி எஜமானே' என்று இருக்கிறேன். எப்பொழுதும் ஆத்மா மற்றும் பரமாத்மாவுடன் இணைந்திருக்கிறேன். பரமாத்மா ஆத்மா நான் இன்றி இருக்க முடியாது. மேலும் நானும் பரமாத்மா இன்றி தனியாக இருக்க முடியாது. அந்த மாதிரி ஒவ்வொரு விநாடியும் எஜமானரின் கூடவே இருப்பதை அனுபவம் செய்பவர்கள் எப்பொழுதும் ஆன்மீக நறுமணத்தில் அழியாதவர்களாக மற்றும் ஒரே சீரான நிலையில் இருப்பார்கள். இது தான் மணம் நிறைந்த ஆன்மீக ரோஜாவின் நம்பர் ஒன் விசேஷம் ஆகும்.

அந்த மாதிரியானவரின் பார்வையிலும் எப்பொழுதும் பரமாத்மா நிரம்பியிருப்பவராக இருப்பார். அவர் தந்தையின் பார்வையிலும் தந்தை அவருடைய பார்வையிலும் நிரம்பியிருப்பவராக இருப்பார்கள். அந்த மாதிரி ஆன்மீக ரோஜாவிற்கு உடல் மற்றும் உடலின் உலகம் மற்றும் பழைய உடலின் உலகத்தின் பொருட்கள், நபர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் இவர்களுக்குத் தென்படாதவர்களாக இருப்பார்கள். உடல் மூலமாக பேசிக் கொண்டிருக்கிறேன், ஆனால் ஆத்மாவைப் பார்க்கிறேன், ஆத்மாவுடன் பேசுகிறேன். ஏனென்றால் அவருடைய கண்களின் உலகத்தில் எப்பொழுதும் ஆன்மீக உலகம், பரிஷ்தாக்களின் உலகம், தேவதைகளின் உலகம் இருக்கிறது. எப்பொழுதும் ஆன்மீக சேவையில் இருட்டார்கள். பகலானாலும் இரவானாலும், அவர்களை பொருத்தளவில் எப்பொழுதும் ஆன்மீக சேவை. அந்த மாதிரி ஆன்மீக ரோஜாக்களிடம் அனைத்து ஆத்மாக்களும் தன்னைப் போன்று ஆஸ்திக்கு உரியவர்களாகி விட வேண்டும் என்ற ஆன்மீக பாவனை எப்பொழுதும் இருக்கிறது. மற்றவர்கள்/மற்றதின் வசமான ஆத்மாக்களுக்கு தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் சக்திகளின் சகயோகம் கொடுத்து அவர்களுக்கும் அனுபவம் செய்விக்க வேண்டும். யாருடைய பலஹீனங்களையும் மற்றும் குறைகளையும் பார்க்க மாட்டார்கள். தன்னால் தாரணை செய்யப்பட்ட குணங்களின், சக்திகளின் சகயோகம் **கொடுக்கும் வள்ளலாக ஆகுங்கள். பிராமண வாரத்தைப்** பொருத்தளவில் சகயோகி, மற்ற ஆத்மாக்களுக்காக மகாதானி. இவர் இந்த மாதிரியானவர் என்ற இந்த பாவனையின்றி இவரையும் தந்தைக்குச் சமமாக ஆக்க வேண்டும் என்ற சுபபாவனை இருக்கும். கூடவே இது தான் உயர்ந்த விருப்பமும் ஆகும். இந்த அனைத்து ஒன்றுமில்லாத, துக்கமான, அமைதியில்லாத ஆத்மாக்கள் எப்பொழுதும் அமைதியான சுக ரூபமான, அனைத்தும் நிறைந்தவராக ஆகி விட வேண்டும். அவருடைய மனதில்

எப்பொழுதுமே உலக மாற்றம் மிக விரைவில் எப்படி ஏற்படும் என்ற எண்ணம் தான் இடைவிபாது ஓடிக் கொண்டிருக்கும். இவரைத் தான் ஆன்மீக ரோஜா இன்று மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்களின் சேவைக்கான வாய்ப்பு ஆகும். மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் ஒரு மகா வார்த்தையை நினைவு வைத்தார்கள் என்றால், அனைவரும் மகான் அதாவது நம்பர் ஒன் ஆகி விடுவார்கள். மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்களின் லட்சியமாக என்ன இருக்கிறது? மகான் ஆக வேண்டும். தன்னையும் மகான் ஆக்க வேண்டும். உலகையும் மகான் ஆக்க வேண்டும். இது தான் எப்பொழுதும் நினைவில் இருக்கிறது தான் இல்லையா?

மேலும் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் நாடகத்தில் கதாநாயகனின் பங்கேற்றுச் செய்பவர்கள். ஆவதும் கதாநாயகன், ஆக்குவதும் கூட சுதாநாயகனாகத்தான். ஆந்திரா என்றால் இருளை அகற்றுபவர்கள். அனைத்து விதமான இருளையும் அகற்றுபவர்கள். ஆந்திராவில் ஏழ்மையின் இருளும் அதிகம் இருக்கிறது. அப்படி ஏழ்மையை அகற்றி அனைவரையும் நிரம்பியவர்கள் ஆக்க வேண்டும். அப்படி ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் உலகில் எப்பொழுதும் செல்வம் நிறைந்ததாக ஆக்குபவர்கள். உடலின் ஏழ்மையும் இல்லை. பணம் செல்வத்தின் ஏழ்மையும் இல்லை மற்றும் மனதின் சக்திகளின் ஏழ்மையும் இல்லை. உடல், மனம், செல்வம் மூன்று ஏழ்மையையும் அகற்றுபவர்கள். இந்த இருளை அகற்றி எப்பொழுதும் வெளிச்சத்தை கொண்டு வருபவர்கள். அப்படி ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் மாஸ்டர் ஞான சூரியன் ஆகி விட்டார்கள். மதராஸ் (சென்னை) என்றால் எப்பொழுதும் ராஸில் (நடனத்தில் மூழ்கியிருப்பவர்கள், சம்ஸ்காரத்தை இணைக்கும் நடனம் மேலும் குஷியின் நடனமும் இருக்கிறது. மேலும் பிறகு ஸ்தூலமாகவும் நடனம் செய்பவர்கள். மத என்றால் மூழ்கியிருப்பதையும் கூறுவது. சந்திப்பு என்றால் பெறுவது, அப்படி பெற்றுவிட்டீர்கள் இல்லையா? இறுதியிலோ கண்களின் சந்திப்பு வரை சென்றடைய வேண்டும். பாப்தாதாவை பொருத்தளவில் கீழே அமர்ந்திருப்பவர்கள் மற்றும் மேலே அமர்ந்திருப்பவர்கள் அனைவருமே முக்கியமானவர்கள் வி.ஐ.பி!

**டீச்சர்களுடன் சந்திப்பு:** பாப்தாதா அனைத்து பொறுப்பிலிருப்பவர்களாக ஆகியிருக்கும் சேவாதாரிகளை எந்த ரூபத்தில் பார்க்க விரும்புகிறார்? இதை தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதா அனைத்து சேவாதாரிகளையும் எப்பொழுதும் தனக்குச்சமமான, எப்படி தந்தை காரியம் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அவதரித்திருக்கிறார். அதே போல் ஒவ்வொரு சேவாதாரியும் சேவைக்காக

அவதரித்திருக்கும் அவதாரமாக ஆகி விட வேண்டும். நாடகத்திட்டப்படி ஒரு அவதாரம் இந்த பூமியில் வருகிறார் என்றால் எவ்வளவு மாற்றம் செய்து விடுகிறார். அவரும் ஆத்ம சக்தி உள்ளவர். மேலும் இதுவோ இந்த அளவு பரமாத்மா சக்தி சொரூபமானவர்கள் நாலாபுறங்களிலும் அவதாரமாக அவதரித்து விட்டார்கள் என்றால் என்னவாகி விடும்? சுலபமாக மாற்றம் ஆகி விடும். எப்படி தந்தை (பிரம்மாவின் உடலை) கடனாக எடுக்கிறார், பந்தனத்தில் வருவதில்லை, எப்பொழுது விரும்புகிறாரோ வருகிறார், எப்பொழுது விரும்புகிறாரோ சென்று விடுகிறார், முற்றிலும் பந்தனமற்ற நிலை. அதே போல் அனைத்து சேவாதாரி உடலின் சம்ஸ்காரங்களின், சுபாவத்தின் பந்தனங்களிலிருந்து விடுபட்டு எப்பொழுது விரும்புகிறார்களோ எப்படி விரும்புகிறார்களோ அந்த மாதிரி சம்ஸ்காரத்தைக் கடைப்பிடிக்க முடிய வேண்டும். எப்படி உடலை நடத்த விரும்புகிறீர்களோ அப்படி நடத்த முடியும். எப்படி சுபாவத்தை உருவாக்க விரும்புகிறீர்களோ அப்படி உருவாக்க முடிய வேண்டும். என்னுடைய சுபாவமே அந்த மாதிரி, நான் என்ன செய்வது என்று அப்படி இருக்கக்கூடாது. என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய பந்தனம் என்று அந்த மாதிரி எதுவும் இல்லை ஆனால் எப்படி தந்தை முற்றிலும் பந்தனமற்றவராக இருக்கிறார். அதே போல் பந்தனமற்றவராக இருக்க வேண்டும். சிலர் நாமோ பிறப்பு இறப்பின் சக்கரத்தின் காரணமாக உடலின் பந்தனத்தில் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள், ஆனால் இது பந்தனமா என்ன? இப்பொழுதோ உடல் உங்களுடையதே இல்லை. பின்பு உங்களுடைய பந்தனம் என்று எங்கிருந்து வர முடியும். எப்பொழுது உடலில் இருந்து கொண்டே இறந்தவர் ஆகி விட்டார் என்றால் உடல் யாருடையதாக ஆனது? உடல், மனம், பணம் மூன்றையும் அர்ப்பணம் செய்திருக்கிறீர்களா அல்லது இரண்டை மட்டும்தான் அர்ப்பணம் செய்திருக்கிறீர்கள், ஒன்றைச் செய்யவில்லையா? எப்பொழுது என்னுடைய உடலே இல்லை, என்னுடைய மனமே இல்லை என்கிறபோது பந்தனம் இருக்க முடியுமா? என்ன செய்வது பல ஜென்மங்களின் சம்ஸ்காரம். உடலின் கணக்கு வழக்கு என்ற வார்த்தைகள் கூட பலஹீனத்தின் வார்த்தைகள் ஆகும் ஆனால் இப்பொழுது பழைய ஜென்மத்தின் பழைய கணக்கு சங்கமயுகத்தில் முடிவடைந்தது, புதியது தொடங்கப்பட்டது. இப்பொழுது அந்த பக்கத்தின் பழைய பதிவேடு முடிவடைந்தது. புதியது தொடங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தப் பக்கத்தின் பழைய பதிவேடு முடிவடைந்து விட்டதா அல்லது இது வரையிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறதா? முடிக்கவில்லையா என்ன? பாப்தாதா என்ன பார்க்க விரும்புகிறார் என்று புரிந்து கொண்டீர்களா? இத்தனை அனைத்து அவதாரங்களும் வெளிப்பட்டு விட்டார்கள் என்றால் உலகத்தில் குழப்பம் ஏற்பட்டு

விடும் இல்லையா? அவதாரம் என்றால் மேலே இருந்து வரக்கூடிய ஆத்மா. மூலவதனத்தின் நிலையில் நிலைத்திருந்து மேலே இருந்து கீழே வந்து விடுங்கள். கீழே இருந்து மேலே செல்லாதீர்கள். நீங்கள் இருப்பதே பரந்தாமநிவாசி, ஆத்மா சதோபிரதான ஆத்மா. தன்னுடைய ஆதி அனாதி சொரூபத்தில் இருங்கள். இறுதியின் நினைவில் இருக்காதீர்கள். அனாதி, ஆதி நிலையில் இருங்கள், பின்பு என்னவாகி விடும்? தானும் பந்தனமற்றவர், மேலும் யாருக்கு சேவை செய்வதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அவர்களும் பந்தனமற்றவர்களாகி விடுவார்கள். இல்லையென்றால் அவர்களும் ஏதாவது பந்தனத்தில் கட்டப்பட்டு விடுகிறார்கள். சுயம் தன்னை அவதரித்து இருக்கும் ஆத்மா என்று புரிந்து காரியம் செய்யுங்கள். பின்பு மற்றவர்களும் உங்களைப் பின்பற்றி நடப்பார்கள். எப்படி சாகார பாபாவை பார்த்திருக்கிறீர்கள், என்ன நினைவு இருக்கிறது. தந்தையின் கூடவே நானும் கர்மாதீத் நிலையில் இருக்கிறேன் மேலும் தேவதை நிலையில் குழந்தைப் பருவத்தில் இருப்பேன். அனாதி, ஆதி ரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறது என்றால் தந்தையைப் பின்பற்றி நடப்பது, டீச்சர்களுடன் திருப்தியாக இருக்கிறீர்களா என்று கேட்கவே அவசியம் இல்லை. டீச்சர்களிடம் கேட்பது என்றால் அவர்களை அவமதிப்பது. எனவே பாப்தாதா அவமதிக்கவோ முடியாது இல்லையா? தந்தைக்குச் சமமாக பொறுப்பிலிருப்பவராக இருக்கிறீர்கள். பொறுப்பிலிருப்பவரின் அர்த்தமே எப்பொழுதும் செய்பவர்-செய்விப்பவரின் நினைவு சொரூபத்தில் இருப்பது. இதே நினைவு சக்திசாலியான நினைவு ஆகும். செய்பவன் ஆனால் செய்பவர் செய்விப்பவரின் ஆதாரத்தில் செய்பவன். பொறுப்பாளர் ஆகியிருக்கிறேன், ஆனால் பொறுப்பாளராக ஆக்கியிருப்பவரை மறக்கக்கூடாது. நான் என்பது இருக்க வேண்டாம், எப்பொழுதும் பாப்தாதா தான் சொல்லில். மனதில், காரியத்தில் இருக்க வேண்டும். இந்தப் பாடத்தை உறுதியாக்குங்கள்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரையிலும் என்னென்ன உயர்ந்த வழிகளை தந்தை கூறியிருக்கிறாரோ அதே வழிப்படி முழு நாளின் நடவடிக்கைகளை செய்கிறீர்களா?** எழுவது எப்படி. நடப்பது எப்படி, உணவு அருந்துவது எப்படி, காரிய விவகாரத்தை எப்படி செய்ய வேண்டும், இந்த அனைத்திற்குமாக உயர்ந்த வழி கிடைத்திருக்கிறது. அந்த உயர்ந்த வழிப்படி ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே தன்னுடைய மனநிலை உயர்ந்ததாக இருப்பதற்காக எந்தவொரு வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும் டிரஸ்டி. ஒருவேளை காரியம் செய்து கொண்டிருக்கும்போது நான் ஒரு

டிரஸ்டி என்ற நினைவு இருக்கிறது என்றால் மனநிலை உயர்ந்ததாக ஆகி விடும். ஏனென்றால் டிரஸ்டியாகி நடந்து கொள்வதினால் முழு சுமையும் தந்தை மேல் வந்து விடுகிறது, நீங்கள் எப்பொழுதும் டபுள் லைட் சுமையற்றவராக ஆகி விடுகிறீர்கள். டபுள் லைட் ஆக இருக்கும் காரணத்தினால் மிக உயரமாக தாண்டுகல் செய்ய முடியும். ஒருவேளை குடும்பஸ்தன் என்று நினைத்தீர்கள் என்றால் வால் வந்து விடுகிறது. முழு சுமையும் உங்கள் மேல் வந்து விடுகிறது. சுமையுள்ளவர் உயரம் தாண்டுதல் செய்ய முடியாது. இன்னும் அதிகமாக மூச்சு வாங்கிக் கொண்டே இருப்பார். டிரஸ்டி என்று புரிந்து கொள்வதினால் மனநிலை எப்பொழுதும் உயர்ந்ததாக இருக்கும். எனவே எப்பொழுதும் டிரஸ்டியாகி இருக்க வேண்டும் என்ற உயர்ந்த வழியை நினைவில் வையுங்கள்.

**2) பாப்தாதா மூலமாக அனைத்து குழந்தைகளுக்கும் நம்பர் ஒன் ஸ்ரீமத்தாக என்ன கிடைத்திருக்கிறது?** நம்பர் ஒன் ஸ்ரீமத் தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் ஆத்மா என்று புரிந்து தந்தையை நினைவு செய்யுங்கள் என்பதாகும். ஆத்மா என்று புரிந்து கொள்வதினால் மட்டும் கூட தந்தையின் சக்தி கிடைக்காது. நினைவு நிலைத்திருக்காததற்கான காரணமே ஆத்மா என்று புரிந்து தந்தையை நினைவு செய்வ தில்லை. ஆத்மாவிற்கு பதிலாக தன்னை சாதாரண உடலிலிருப்பவர் என்று நினைவு செய்கிறீர்கள் எனவே நினைவு நிலைத்திருப்பதில்லை. பொதுவாகவே எப்பொழுது இரண்டு பொருட்களை இணைக்கிறார்கள் என்றால் முதலில் அவை இரண்டையும் சமமானதாக ஆக்குவார்கள். அதே போலவே ஆத்மா என்று புரிந்து நினைவு செய்தீர்கள் என்றால் நினைவு சுலபமாகி விடும். ஏனென்றால் சமமாக ஆகி விட்டது இல்லையா? இந்த முதல் ஸ்ரீமத்தையே நடைமுறையில் எப்பொழுதும் கொண்டு வந்து கொண்டே இருங்கள். இது தான் முக்கியமான அஸ்திவாரம். ஒருவேளை அஸ்திவாரம் பலஹீனமாக இருக்கிறது என்றால் முன்னேறும் கலை இருக்க முடியாது. இந்த நேரம் முன்னேறும் கலையில் அடுத்த நேரம் கீழே வந்து விடுவார். ஓடு வீட்டிற்குக் கூட ஒருவேளை அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்றால் கட்டிய வீடு இடிந்து விழுந்து விடும். அதே போலவே ஒருவேளை அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்றால், மாயா கீழே விழ வைத்து விடும். எனவே அஸ்திவாரத்தை எப்பொழுதும் உறுதியானதாக ஆக்குங்கள். சுலபமான விஷயத்தின் மீதும் அடிக்கடி கவனம் இருக்க வேண்டும். ஒருவேளை கவனம் கொடுக்கவில்லை என்றால் சுலபமான விஷயமும் கடினமாகி விடும்.

**(3) எப்பொழுதும் நானே தான் ஒவ்வொரு கல்பத்திலும் அதிகாரி ஆத்மாவாக இருக்கிறேன், நானே தான் இருந்தேன், நானே தான் இருக்கிறேன். மேலும் நானே தான் ஒவ்வொரு கல்பத்திலும் இருப்பேன் என்ற இந்த போதை இருக்கிறதா?** சென்ற கல்பத்தின் காட்சிகள் நினைவில் அந்த மாதிரி தெளிவாக வருகிறதா? இன்று பிராமணனாக இருக்கிறேன் நாளை தேவதை ஆவேன், நானே தான் தேவதையாக இருந்தேன் என்ற இந்த போதை இருக்கிறதா? நான் தான் அது. அது தான் நான் ! என்ற இந்த மந்திரம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? இந்த ஒரு போதையிலேயே இருந்தீர்கள் என்றால், எப்படி போதையில் அனைத்து விஷயங்களும் மறந்து விடுகிறது. உலகமே மறந்து விடுகிறது, அதே போல் இந்த போதையில் இருப்பதினால் இந்த பழைய உலகமே சுலபமாக மறந்து விடும். அந்த மாதிரி தன்னுடைய நிலையை அனுபவம் செய்கிறீர்களா? எனவே இன்று நான் பிராமணன் நாளை தேவதை ஆவேன் என்ற இந்த போதை எவ்வளவு நேரம் இருந்தது என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள், எப்பொழுது காரிய விவகாரத்தில் செல்கிறீர்கள் என்றாலும் இந்த போதை நிலைத்திருக்கிறதா அல்லது லேசாகி விடுகிறதா? யார் எப்படி இருப்பாரோ அவருக்கு அந்த நினைவு இருக்கும். எப்படி ஜனாதிபதி இருக்கிறார் என்றால் அவர் எந்தக் காரியத்தையும் செய்து கொண்டிருந்தாலும் தான் ஜனாதிபதி என்பதை மறப்பதில்லை. எனவே நீங்களும் எப்பொழுதும் உங்களுடைய பதவியை நினைவில் வையுங்கள். இதனால் எப்பொழுதும் குஷி இருக்கும், போதை இருக்கும். எப்பொழுதும் இந்த போதை ஏறி இருக்க வேண்டும். நானே தான் தேவதை ஆவேன், இப்பொழுது கூட பிராமணன் உச்சங்குடுமி நிலையில் இருக்கிறேன். பிராமணனோ தேவதைகளையும் விட உயர்ந்தவன். இந்த போதையை மாயா எவ்வளவு தான் முறிக்க முயற்சி செய்தாலும் முறிக்க முடியாது. மாயா எப்பொழுது வருகிறது என்றால், எப்பொழுது அவரை தளிமையாக்கி விடுகிறதோ அப்பொழுது வருகிறது. தந்தையிடமிருந்து பிரித்து விடுகிறது. கொள்ளையடிப்பவர்கள் கூட தனிமையாக்கி பிறகு தாக்குவார்கள் இல்லையா? எனவே எப்பொழுதும் இணைந்தவராக இருங்கள், ஒருபொழுதும் தனிமையாக ஆகக்கூடாது. நான் மற்றும் என்னுடைய பாபா என்ற இந்த நினைவில் இணைந்திருங்கள்.

**4) அனைவரும் தன்னை மகான் பாக்கியசாலி என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா?** பாருங்கள் வரதான பூமியில் வரதானங்களினால் பையை நிரப்புவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்கள் என்றால் இது எவ்வளவு பெரிய பாக்கியம். அந்த மாதிரி பாக்கியம் உலகத்தில் எத்தனை ஆத்மாக்களுக்கு

இருக்கிறது? கோடியில் சிலருக்கு, அந்தச் சிலரிலும் சிலருக்கு எனவே இதுவரை கோடியிலும் சிலர் மேலும் சிலரிலும் சில ஆத்மா என்று கேட்டே வந்தோம். வர்ணனையும் செய்து வந்தோம். அது நானே தான் என்ற இந்த குஷியை எப்பொழுதும் வையுங்கள். எவ்வளவு குஷி இருக்கிறது? எப்பொழுதும் இந்த குஷியிலேயே ஆஹா என்னுடைய பாக்கியமே என்று பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருங்கள். இந்தப் பாடலை பாடிக் கொண்டே இருங்கள், மேலும் இந்தப் பாடலின் கூடவே குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். ஆஹா என்னுடைய பாக்கியமே! மேலும் ஆஹா என்னுடைய பாபா! என்ற இந்த பாடலை பாடத்தெரியும் இல்லையா? ஆஹா நாடகம் ஆஹா! என்ற இந்தப் பாடலையும் பாடிக் கொண்டே இருங்கள். நீங்கள் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள், தந்தையோ எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையையும் அன்பான குழந்தை என்று தான் கூறுகிறார். அப்படி அன்பான குழந்தையாகவும் இருக்கிறீர்கள் என்றால் அதிர்ஷ்டமான குழந்தையாகவும் இருக்கிறீர்கள். ஒருபொழுதும் தன்னை சாதாரணமாக நினைக்காதீர்கள். நீங்கள் மிக உயர்ந்தவர்கள். பகவான் உங்களுடையவர் ஆகி விட்டார் என்றால். வேறு என்ன வேண்டும்? எப்பொழுது விதையை தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள் என்றால் மரமோ வந்தே விட்டது தான் இல்லையா? எனவே எப்பொழுதும் இந்தக் குஷியிலேயே இருங்கள். உங்களுடைய குஷியைப் பார்த்து மற்றவர்களும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய சுயசொரூபம் மற்றும் சுயதேசத்தின் சுயகௌரவத்தில் நிலைத்திருக்கக்கூடிய மாஸ்டர் விடுவிப்பவர் ஆகுக!**

இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு ஆத்மாவும் ஏதாவது ஒரு விஷயத்தின் பந்தனத்தின் (கட்டுப்பாடு) வசமாகி இருக்கிறார். சிலர் உடலின் துக்கத்தின் வசமாகி இருக்கிறார், சிலர் உறவின், சிலர் விருப்பங்களின், சிலர் தன்னுடைய துக்கம் கொடுக்கும் சுபாவம் சம்ஸ்காரத்தின், சிலர் பிரபுவை அடைவது கிடைக்காத காரணத்தின், அழைப்பது, கதறுவது துக்கத்தின் வசமாகி இருக்கிறார்கள். அந்த மாதிரி துக்கம் மற்றும் அமைதியின்மையின் வசமான ஆத்மாக்கள் தன்னை விடுவிக்க விரும்புகிறார்கள் என்றால் அவர்களை துக்கம் நிறைந்த வாழ்க்கையிலிருந்து விடுவிப்பதற்காக தன்னுடைய சுயசொரூபம் மற்றும் சுயதேசத்தின் சுயகௌரவத்தில் நிலைத்திருந்து இரக்க மனமுடையவராகி மாஸ்டர் விடுவிப்பவர் ஆகுங்கள்.

**சுலோகன்: எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருப்பதற்காக ஒரே சீரான நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்திருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.04.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நம்பர் ஒன் அதிர்ஷ்டசாலியின் விசேஷங்கள்!

இன்று பாக்கியத்தை அளிக்கும் தந்தை தன்னுடைய சிரேஷ்ட பாக்கியசாலி ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் அவரவர்களின் முயற்சி மூலம் எப்படி அதிர்ஷ்ட ரேகையை போட்டிருக்கிறார்கள். வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் சிலர் நம்பர் ஒன் எதிர்காலத்தை உருவாக்கியிருக்கிறார்கள். சிலர் இரண்டாம் நம்பரில் உருவாக்கியிருக்கிறார்கள். முதல் நம்பரின் எதிர்காலத்தில் அனைத்து பிராப்தி சொரூபம் இருக்கிறது. சர்வ குணங்களினாலும், ஞான பொக்கிஷத்தினாலும், அனைத்து சக்திகளினாலும் எப்பொழுதும் பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள். இப்பொழுதிலிருந்தே பிராப்தி இல்லை (கிடைக்காத) என்ற எந்த ஒரு பொருளும் இல்லை என்றிருக்கும் அந்த அதிர்ஷ்டசாலியின் வாழ்க்கை ஒவ்வொரு விநாடியில், ஒவ்வொரு மூச்சில், ஒவ்வொரு எண்ணத்திலும் அளவற்ற பொக்கிஷத்தை பிராப்தி செய்பவர். அந்த மாதிரி ஆத்மாவின் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியிலும் முன்னேறும் கலையின் அனுபவம் ஆகிறது. நாலாபுறங்களிலும் அனேக விதமான பொக்கிஷங்களே பொக்கிஷங்கள் தான் தென்படுகின்றன. ஒவ்வொரு ஆத்மாவும் மிக அன்பு நிறைந்த அனாதி சம்மந்தத்தின் சொரூபத்தினால் தன்னுடையவர்கள் என்ற அனுபவம் ஆகிறது. ஒவ்வொரு ஆத்மாவும் ஒரு தந்தையின் குழந்தை ஆன காரணத்தினால் சகோதரன் சகோதரன் என்ற அனுபவம் ஆகிறது. ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் இந்த அனைத்து ஆத்மாக்களும் எப்பொழுதும் சுகம், சாந்தி நிறைந்தவராக ஆகி விட வேண்டும் என்ற இந்த சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் தான் வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரம் எல்லைக்கப்பாற்பட்ட அன்பு இருக்கிறது. எல்லைக்குட்பட்டதில் துக்கம் இருக்கிறது மற்றும் எல்லைக்கப்பாற்பட்டதில் துக்கம் இருக்காது. ஏனென்றால் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் வருவதினால் எல்லைக்கப்பாற்பட்ட சம்மந்தம் எல்லைக்கப்பாற்பட்ட ஞானம் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு, எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக அன்ட, துக்கத்தை அகற்றி சுக சொரூபமாக ஆக்கி விடுகிறது. ஆன்மீக ஞானத்தின் காரணமாக ஒவ்வொரு ஆத்மாவின் கர்ம

கதையின், பங்கின், சம்ஸ்காரங் களின் லைட் மைட் இருக்கும் காரணத்தினால் என்னவெல்லாம் பார்ப்பார்களோ, கேட்பார்களோ, தொடர்பில் மற்றும் சம்மந்தத்தில் வருவார்களோ அந்த ஒவ்வொரு காரியத்திலும் மிகவும் விலகியிருப்பவராகவும், மிகவும் அன்பானவராகவும் இருப்பார். விலகியிருந்து அன்பானவராக இருப்பதில் சமநிலை இருக்கும். எந்த நேரம் அன்பானவராக ஆக வேண்டும். எந்த நேரம் விலகியிருப்பவராக ஆக வேண்டும் என்ற இந்த பாகத்தை செய்வதின் விசேஷம் ஆத்மாவை எப்பொழுதும் சுகம் மற்றும் அமைதி நிறைந்தவராக ஆக்கி விடுகிறது. ஆன்மீக சம்மந்தம் இருக்கும் காரணத்தினால் புத்தியின் ஒருமித்த நிலையின் காரணமாக நிர்ணய சக்தி, உள்ளடக்கும் சக்தி, எதிர்நோக்கும் சக்தி, சர்வ சக்திகள் ஒவ்வொரு ஆத்மாவின் பாகத்தை மற்றும் தன்னுடைய பாகத்தை மிக நல்ல முறையில் தெரிந்து பாகத்தில் வருகிறார்கள், எனவே ஆடாத அசையாதவராக மற்றும் சாட்சியாக இருக்கிறார்கள். அந்த மாதிரி எதிர்காலம் உள்ள ஆத்மா ஒவ்வொரு எண்ணம் மற்றும் செயலை, ஒவ்வொரு விஷயத்தை மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து பார்க்கிறார்கள். எனவே கேள்விக்குறி முடிவடைந்து விடுகிறது. இது ஏன், இது என்ன என்பது கேள்விக்குறி. எப்பொழுதும் முற்றுப்புள்ளி. அனைவருக்கும் மூன்று புள்ளிகளின் திலகம் இடப்பட்டு இருக்கிறது தான் இல்லையா? அதில் ஆச்சரியம் ஏற்படுவதில்லை. ஒன்றும் புதிதல்ல. என்ன நடந்தது என்றில்லாமல், என்ன செய்ய வேண்டும் என்பது இருக்க வேண்டும். இவர் தான் நம்பர் ஒன் எதிர்காலம் உள்ளவர்.

நீங்கள் அனைவரும் நம்பர் ஒன் எதிர்காலம் உள்ளவரின் பட்டியலில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைவருக்கும் ஃபர்ஸ்ட் கிளாஸ் (முதல் வகுப்பு) விருப்பம் தான் இல்லையா? நீங்கள் அனைவரும் தந்தையிடமிருந்து முழுமையான ஆஸ்தியை ப்பெறுவதற்காகத் தான் வந்திருக்கிறீர்கள். சந்திரவம்சியாக ஆவதற்குத் தயாரா? சூர்யவம்சி என்றால் ஃபர்ஸ்ட் கிளாஸ் ஆகி விட்டார். எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த எதிர்காலத்தை நினைவில் வைத்து சக்தி சொரூபத்தில் இருங்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா. எது தந்தையின் குணமோ அதுவே என்னுடைய குணம். எப்பொழுதும் தன்னுடைய அனாதி உண்மையான சொரூபத்தின் நினைவில் இருக்கிறீர்கள் தான் இல்லையா.? மாயாவின் போலியான சொரூபத்தின் அன்னபப்பறவையாக ஆகி விடுவதில்லையே! எப்படி நாடகம் போடுகிறீர்கள் என்றால், போலியான முகத்தை போட்டுக் கொள்கிறீர்கள் இல்லையா, எப்படி குணமோ அப்படி காரியம் அதே போலவே முகத்தை தயார் செய்து விடுகிறீர்கள். எனவே போலியான சொரூபத்தின் மேல் சிரிப்பு வருகிறது தான் இல்லையா! அதே போல் மாயாவும் போலியான குணம் மற்றும் காரியத்தின்

சொரூபம் ஆக்கி விடுகிறது. சிலரை கோபக்காரராகவும், சிலரை பேராசைக்காரராகவும் ஆக்கி விடுகிறது. சிலரை மிக துக்கமானவராகவும், சிலரை அமைதியற்றவராகவும் ஆக்கி விடுகிறது ஆனால் உண்மையான சொரூபம் இந்த விஷயங்களிலிருந்து தனித்தன்மையானது. எனவே எப்பொழுதும் அந்த சொரூபத்தில் நிலைத்திருங்கள். நல்லது எப்படி பக்தியில் இறுதியாக மூழ்கி எழுவது இருக்கிறது தான் இல்லையா? அதற்கும் மகத்துவம் இருக்கிறது. அதே போல் இங்கேயும் நீங்கள் அனைவரும் கடலில் மூழ்கி எழ வந்திருக்கிறீர்கள் மற்றும் அதில் மூழ்குவதற்கு வந்திருக்கிறீர்கள். அனைத்து விதமான பழக்க வழக்கங்களை இப்பொழுதிலிருந்தே தொடங்கி விடுகிறீர்கள். சங்கமயுகமே சந்திப்பதற்கான யுகம். அந்த மாதிரி இன்று எல்லைக்கப்பாற்பட்ட முக்கியமான நாள்.

ஒவ்வொரு மண்டலத்திற்கும் அவரவர்களின் மகிமை இருக்கிறது. குஜராத் என்றால் எங்கு இரவு ராத் கடந்து சென்று விட்டது (குஜர் கயி). அதாவது எப்பொழுதும் பகல். எப்பொழுதும் வெளிச்சமே வெளிச்சம். இருள் அகன்று விட்டது. உபி.யின் விசேஷம் அங்கு சீனி அதிகம் தயாராகிறது. உ.பி-யில் எப்பொழுதும் நாலாபுறங்களிலும் ஸ்தூலத்திலும் மற்றும் சூட்சுமத்திலும் இனிமையே இனிமை தான்!

இராஜஸ்தானோ உலகின் புது இராஜ்யத்திற்கான அஸ்திவாரம் போடுபவர்கள். இராஜஸ்தானில் தான் மகான் தீர்த்த ஸ்தலம் இருக்கிறது. இராஜஸ்தானின் விசேஷம் இருக்கிறது. ஏனென்றால் இராஜஸ்தான் தான் பாப்தாதாவின் கர்மபூமி மற்றும் சரித்திர பூமி. இராஜஸ்தானிற்கு எப்பொழுதுமே சர்வ சிரேஷ்ட மகிமை இருக்கிறது.

பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் அகால்தக்த் அதாவது ஆழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்கள். பஞ்சாபைப் சேர்ந்தவர்களுக்கு அகால்தக்த் ஒருபொழுதும் மறப்பதில்லை. எப்பொழுதும் அகாலமூர்த் தந்தையுடன் அகால் சொரூபத்தில் இருப்பார்கள். தில்லி திலாராமின் தில்-ஐ அதாவது இதயத்தைப் பறிப்பவர்கள். பெயரும் தில்லி அதாவது தில்'ஐ அதாவது இதயத்தை பறித்து விட்டார்கள். அப்படி பாப்தாதாவின் இதயத்தில் என்ன இருக்கிறது? முழு உலகத்திலும் நிரந்தரமாக சுகம் மற்றும் சாந்தியின் கொடி பறக்கட்டும். எப்பொழுதும் நிம்மதியின் புல்லாங்குழல் இசைக்கட்டும். தில்லியைச் சேர்ந்தவர்கள் இந்த லட்சியத்தை எடுத்துக் கொண்டு மகான் யக்ஞத்தில் மகா கடமையையும் செய்திருக்கிறார்கள். எப்பொழுதும் அனைவரின் சகயோகம் என்ற

விரல் மூலம் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த முழக்கத்தை முழு உலகிற்கும் மிக சப்தமாக கூறியிருக்கிறார்கள். தில்லி மேல் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. ஏனென்றால் அனைவரும் இராஜ்ய அதிகாரியாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி சேவையில் புதுப்புது காரியத்தில் இதயத்தை பறிப்பவர்கள். மும்பையின் அரசாங்கமும் மிக அழகாக உருவாகிக் கொண்டிருக்கிறது, விஸ்தாரத்தை அடைந்து கொண்டிருக்கிறது. அதே போலவே பாண்டவர்களின் சேவையிலும் வளர்ச்சி நன்றாக இருக்கிறது. சகயோகி மற்றும் அதிகாரி. இரண்டு விதமான ஆத்மாக்களும் சேவையின் வளர்ச்சி அடைவதற்காக நல்ல பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். வரதானம் கிடைத்திருக்கிறது தான் இல்லையா?

மத்திய பிரதேசத்தில் ஒரு நிராகார தந்தையின் நினைவுச்சின்னம் நன்றாக இருக்கிறது. அதே போலவே பிராமண ஆத்மாக்களிலும் ஒரு தந்தையோடு அன்பில் மூழ்கியிருக்கக்கூடிய முதல் நம்பரில் வரக்கூடிய இதே ஆர்வத்தில் இருப்பவர்களின் பந்தயம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. விதியும் இருக்கிறது மற்றும் விருத்தியும் (வளர்ச்சியும்) அடைந்திருக்கிறது. இப்பொழுதோ அனைவரின் விசேஷங்களையும் கேட்டீர்கள் இல்லையா? அனைவரின் ஒன்றாக மூழ்கி எழுவது ஆகி விட்டது இல்லையா? ஞானக்கடல் மற்றும் நதிகளின் இணைதல் ஆகி விட்டது. இணைவது என்றால் பெறுவது பொக்கிஷத்தை பெற்றுவிட்டீர்கள் தான் இல்லையா? உயர்ந்த எதிர்காலத்தின் ரேகை போடப்பட்டது தான் இல்லையா? பாப்தாதாவின் ஒரு சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும் எப்பொழுதும் குஷியாக இருக்க வேண்டும். அனைவரையும் எப்பொழும் குஷிப்படுத்த வேண்டும். நாலாபுறங்களிலும் இப்பொழுது குஷியின் இசையை முழக்குங்கள். ஏனென்றால் நீங்களோ மிகவும் அதிர்ஷ்டசாலி ஆத்மாக்கள் தான்!

அந்த மாதிரி உயர்ந்த எதிர்காலம் உள்ள, எப்பொழுதும் அனைத்து குஷிகளின் பொக்கிஷத்தினால் நிரம்பி அனைவருக்கும் சுகத்திற்கான வழி கூறக்கூடிய, மாஸ்டர் சுக வள்ளல், எப்பொழுதும் அனைவரின் சங்கடங்களை அகற்றும், விக்ன விநாஷக் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிஜி அவர்களுடன் சந்திப்பு:** மகாவீரர்களின் சிரேஷ்ட சேவையின் சொரூபம் எது? எப்படி மற்ற அனைத்து சக்திகளும் படங்களில் காண்பிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அனைத்து சக்திகளில் சேவைக்காக விசேஷ சக்தி எது?

## 1981 அவ்யக்த முரளி

அனைவரும் வாய்மொழி மூலம், விதவிதமான சாதனங்கள் மூலம், திட்டங்கள், நிகழ்ச்சிகள் மூலமாக சேவையோ செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய விசேஷ சேவை எது? எப்படி இந்த பழைய உலகத்தில் மற்றும் சரித்திரத்தில், முந்தைய காலங்களில் பறவைகள் மூலமாக செய்தி அனுப்பினார்கள். அந்த பறவைகள் செய்தியைக் கொடுத்து விட்டு பிறகு திரும்பி வந்து விடும். உங்களுடைய சேவை எது? அவர்கள் பறவைகள் மூலமாக செய்தி அனுப்பினார்கள் என்றால், நீங்கள் எண்ணத்தின் சக்தி மூலமாக எந்த ஆத்மாவிற்கும் சேவை செய்ய முடியும், எண்ணம் என்ற பொத்தானை அழுத்தினீர்கள் மற்றும் அங்கு செய்தி சென்றடைந்தது, எப்படி இறுதி வாகன உடல் மூலமாக சகயோகம் கொடுக்க முடியும். அதே போல் எண்ணத்தின் சக்தி மூலமாக அனேக ஆத்மாக்களின் பிரச்சனைக்கு தீர்வு செய்ய முடியும். தன்னுடைய சிரேஷ்ட எண்ணத்தின் ஆதாரத்தினால் அவர்களுடைய வீணான மற்றும் பலஹீனமான எண்ணத்தை பரிவர்த்தனை செய்ய முடியும். இந்த விசேஷ சேவை நேரத்திற்கு ஏற்றபடி அதிகரித்துக் கொண்டே இருக்கும். பிரச்சனைகள் அந்த மாதிரி வரும் அப்பொழுது ஸ்தூல சாதனங்கள் இல்லாமல் ஆகி விடும். பிறகு என்ன செய்ய வேண்டியதாக இருக்கும். தன்னுடைய எண்ணத்தை அந்த அளவு சக்திசாலியாக ஆக்க வேண்டும் அதனுடைய பிரபாவம் தொலைதூரம் வரை சென்றடைகிற மாதிரி! எவ்வளவு சக்தி அதிகமாக இருக்குமோ அந்த அளவு தொலைதூரம் வரை பரவும், அப்படி எண்ணத்திலும் அந்த அளவு சக்தி வந்து விடும். நீங்கள் இங்கே எண்ணத்தை உருவாக்கினீர்கள், பிறகு பலன் அங்கே கிடைத்து விடும். எப்படி தந்தை பக்தியின் பலனைக் கொடுக்கிறார். அதே போல் நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள், ஈஸ்வரியக் குடும்பத்தில் சகயோகத்தின் பலனைக் கொடுப்பீர்கள், அவர்களும் அந்த பலனின் விதவிதமான அனுபவங்களைச் செய்வார்கள். இந்த சேவையும் தொடங்கி விடும்.

மிகவும் புதியவர்களைப் பார்த்து, பரிவாரத்தின் வளர்ச்சியைப் பார்த்து, சேவையின் வெற்றியைப் பார்த்து குஷி ஏற்படுகிறது தான் இல்லையா? இதுவும் தன்னுடைய இராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இராஜ்யத்திலோ அனைத்து விதமான ஆத்மாக்கள் தேவையாக இருக்கிறார்கள். தொடர்பில் இருப்பவர்களும் வேண்டும், சோதாரிகளும் வேண்டும், உறவினர்களும் வேண்டும் மற்றும் உரிமை உள்ளவர்களும் வேண்டும். இப்பொழுதோ சப்தம் மிக வலுவாக பரவிக் கொண்டிருக்கிறது. அங்கே இங்கே பார்த்து இது எங்கே இருந்து வரும் சப்தம் என்று தெரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். கேட்க முடிகிறது ஆனால் இப்பொழுது தெளிவாகக் கேட்க முடிவதில்லை. எங்கிருந்து ஓசை வருகிறது, எந்த பக்கம் செல்ல வேண்டும் என்ற அதைப் புரிந்து கொள்ளவில்லை, எப்பொழுது

தெளிவாகும் என்றால் எப்பொழுது வார்த்தைகளின் கூடவே சிரேஷ்ட எண்ணத்தின் சக்தி அவர்கள் வரை சென்றடையுமோ அப்பொழுது தான். இப்பொழுது கவனம் தொடங்கியிருக்கிறது. ஒவ்வொரு சீசனுக்கும் அவரவர்களின் பிரத்யேகமான மிகவும் இரம்மியமான பங்கு இருக்கிறது. பாப்தாதாவை பொறுத்தவரையிலோ அனைவரும் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள். அனைத்து காரியங்களும் சுலபமாக மற்றும் இயல்பாகவே வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கும். நீங்கள் எவ்வளவு பெரிய பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள்.

சத்யுகத்தின் தொடக்கத்தின் ஜனத்தொகையை தன்னுடைய கண்களால் பார்ப்பீர்களா அல்லது இல்லையா? அல்லது கனவில் பார்ப்பீர்களா மற்றும் செய்தித்தாள்கள் மூலம் கேட்பீர்களா -என்ன நடக்கும்? இப்பொழுதோ ஒரு ஆயிரம் பேர்களைக் கூட அமர வைக்க முடியாது. பிறகு எங்கே அமர வைப்பீர்கள். அனைவரும் பிராமண பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள். எந்த நாள் அனைவரும் இந்த மதுபன் பூமியில் ஒன்றாகச் சேர்ந்து விடுகிறார்கள் என்றால், பிறகு குழப்பம் தொடங்கி விடும். அனைவரும் விரல் கொடுத்தார்கள் என்று ஒற்றுமையின் படத்தை (கோவர்த்தன மலை) காண்பித்திருக்கிறீர்கள் இல்லையா? சூட்சுமத்திலோ கொடுக்கவே செய்கிறீர்கள் ஆனால் இவ்வளவு பெரிய பரிவாரம், பரிவாரத்தையோ பார்க்க வேண்டும் இல்லையா? இதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? சத்யுகத்திலோ உங்களுடைய பிரஜைகள் மட்டும் இருப்பார்கள். இங்கேயோ உங்களுடைய பக்தர்களும் வருவார்கள். இரட்டை வம்சாவளி இருக்கும். பக்தர்களுக்கு நம்முடைய இஷ்ட தேவி தேவதைகள் ஒன்றாக கூடியிருக்கிறார்கள் என்று தெரிந்து விட்டது என்றால். என்ன செய்வார்கள்? அவர்களும் கேட்க மாட்டார்கள் ஆனால் வந்து சேர்ந்து விடுவார்கள். எப்படி இப்பொழுது கூட அனேகர்கள் வந்து சேர்ந்து விடுகிறார்கள் தான் இல்லையா? பக்தர்களும் சாதக பறவை மாதிரி இருக்கிறார்கள். சக்திகளின் பெயர் புகழ் அடைந்து கொண்டிருக்கிறது என்று பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். சர்வ சக்திவான் குப்தமாக இருக்கிறார். மேலும் சக்திகள் பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கிறார்கள். எனவே சிவன், சக்திகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். பாப்தாதா வதனத்திலிருந்து பார்த்துக் கொண்டே இருக்கிறார், எவ்வளவு வரிசையில் நிற்கிறார்கள் என்ற இதையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு சைத்தன்ய மூர்த்திகளின் கோவில்களின் வெளியே வரிசையோ தொடங்கி விட்டது தான் இல்லையா? குழந்தைகளின் சேவையைப் பார்த்தும் பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். தந்தையையும் விட லட்சக்கணக்கான மடங்கு

அதிகமாக பிரத்யக்ஷ ரூபத்தில் சேவையின் மைதானத்தில் வந்து விட்டீர்கள், இன்னும் வருவார்கள்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு -(உபிமண்டலம்):** எப்பொழுதும் தன்னை உலகிற்கு சரியான மார்க்கம் காண்பிக்கும் ஆன்மீக வழிகாட்டி என்று நினைக்கிறீர்களா? வழிகாட்டிகளின் பெயர் என்னவாக இருக்கிறது? உபி-யில் வழிகாட்டிகள் அதிகம் இருப்பார்கள் இல்லையா? அந்த வழிகாட்டிகள் என்ன செய்கிறார்கள் மற்றும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அவர்கள் எந்த யாத்திரை செய்விக்கிறார்கள். மேலும் நீங்கள் எந்த யாத்திரை செய்விக்கிறீர்கள். நீங்கள் அந்த மாதிரி யாத்திரை செய்விக்கிறீர்கள் அதன் பலனாக பல ஜென்மங்களுக்கு யாத்திரை செய்வதிலிருந்து விடுபட்டு விடுவார். மேலும் அவர்கள் அடிக்கடி யாத்திரை செய்து கொண்டே இருக்கிறார்கள். அப்படி நீங்கள் நிரந்தரமாக முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் இலக்கை சென்றடைய வைக்கும் வழிகாட்டிகள். பாதியில் விட்டுச் செல்பவரோ அலைகழிப்பவரோ நீங்கள் இல்லை. இலக்கு வரை சென்றடையச் செய்பவர். எப்படி தந்தையின் காரியம் இருக்கிறது. தந்தை வழி காண்பித்திருக்கிறார் இல்லையா? அதே போல் குழந்தைகளுடைய காரியமும் அது தான், மார்க்கத்தைக் கூட யார் தெரிந்திருக்கிறாரோ அவர் தான் காண்பிக்க முடியும். மார்க்கம் என்றால் என்ன? ஞானம் மற்றும் யோகா. இதே மார்க்கம் மூலமாகத் தான் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் இலக்கை சென்றடைந்து கொண்டிருக்கிறீர்கள். வழியின் பாதியில் என்னென்ன பக்கத்து காட்சிகள் வருகின்றனவோ அதில் நின்று விடவில்லையே? ஏனென்றால் மாயா பக்கத்து காட்சிகளின் ரூபத்தில் உங்களை நிறுத்துவதற்கு முயற்சி செய்கிறது. ஏதாவது சூழ்நிலை மற்றும் விஷயம் அந்த மாதிரி வரும் அது நிறுத்துவதற்கு முயற்சி செய்யும் ஆனால் உறுதியான யாத்திரீகன் நிற்பதில்லை, இலக்கை சென்றடைபவர் இல்லையா? ஒருவேளை இந்த அனைத்து வழிகாட்டிகளும் தயாராகி விட்டார்கள். என்றால், அனேக ஆத்மாக்களுக்கு மார்க்கத்தைக் காண்பித்து விடுவார்கள். உலகில் எத்தனை ஆத்மாக்கள் இருக்கின்றனர். அனைவருக்கும் மார்க்கத்தைக் காண்பிக்க வேண்டும் இல்லையா?

**ஒவ்வொரு குரூப்போடும் தனித்தனியான சந்திப்பு:**

**1) அனைவரும் எப்பொழுதும் பார்வையாளர் நிலையில் நிலைத்திருந்து, உங்களது ஒவ்வொரு (பாகம்) பார்ட்டையும் செய்கிறீர்களா?** பார்வையாளர் என்ற ஆசனம் எப்பொழுதும் நிலைத்திருக்கிறதா? சில நேரம் பார்வையாளருக்குப் பதிலாக தன்னுடைய பங்கை செய்து செய்து அந்த பங்கில் பார்வையாளரின்

நிலை மறந்து விடுவதில்லையே யார் பார்வையாளராக இருப்பாரோ அவர் ஒருபொழுதும் எந்த பங்கிலும் சஞ்சலம் அடைபவராக ஆக முடியாது. விலகியிருப்பார் அன்பாகவும் இருட்டார். நல்லதில் நல்லது. தீயதில் தீயது என்று அந்த மாதிரி இருக்க மாட்டார். பார்வையாளர் என்றால், எப்பொழுதும் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே நன்மை பயக்கும் உள்உணர்வில் இருப்பவர். என்னென்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதில் நன்மை அடங்கியிருக்கிறது. ஒருவேளை ஏதாவது மாயாவின் தடையும் வருகிறது என்றால், அதிலேயும் லாபம் எடுத்து அறிவுரை பெற்று முன்னேறிச் செல்வார்கள், நிற்க மாட்டார்கள். நீங்கள் அந்த மாதிரியானவர்களா? இருக்கையில் அமர்ந்து காட்சிகளைப் பார்க்கிறீர்களா? பார்வையாளர் என்பது தான் இருக்கை. இந்த இருக்கையில் அமர்ந்து நாடகத்தை பார்த்தீர்கள் என்றால் மிகுந்த மகிழ்ச்சி வரும். தன்னை எப்பொழுதும் பார்வையாளர் என்ற இருக்கையில் அமர வையுங்கள், பிறகு ஆஹா நாடகமே ஆஹா என்ற இந்த பாடலைத் தான் பாடிக் கொண்டே இருப்பீர்கள்.

**2) அனைவரும் தீவிரமாக முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா?**
புதியவர்களாக இருப்பவர்கள் ஒவ்வொரு கல்பத்திலும் பழையவர்கள், பழையவர்கள் என்று புரிந்து கொள்வதினால் தன்னுடைய அதிகாரத்தை எடுத்து விடுவார்கள். நான் ஒவ்வொரு கல்பத்தின் உரிமையுள்ளவன் என்று நினைக்கிறீர்களா? கடைசியில் வந்திருந்தும் வேகமாகச் செல்ல வேண்டும். அதற்கான சலபமான வழி - நிரந்தரமான நினைவு. நினைவில் இடைவெளி வரக்கூடாது. எப்பொழுதுமே கர்மயோகி, காரியமும் செய்யுங்கள் மற்றும் நினைவிலும் இருங்கள். யார் நிரந்தர கர்மயோகியின் நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் சகஜமாகவே கர்மாதீத் முழுமையாக பாவ கர்மங்களை அழித்த நிலை) ஆக முடியும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது காரியத்தில் வாருங்கள் மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விலகியவர் ஆகி விடுங்கள்.

**3) எப்பொழுதும் சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் இருந்து கொண்டே உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உள்உணர்வில் இருக்கிறீர்களா?**
எப்பொழுதும் நான் உலகிற்கு நன்மை செய்பவன், எனவே அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற இதே உள்உணர்வு இருக்கிறதா? எப்பொழுதுமே இந்த உள்உணர்வு இருந்தது என்றால், அதன் மூலமாக உலகிற்கு நன்மை செய்ய முடியும். வாய்மொழி மூலமாகவோ, உள்உணர்வு மூலமாகவோ ஆனால் எப்பொழுதும் நன்மை செய்பவரின் நினைவிலிருங்கள், எந்த அளவு இந்த உள்உணர்வு

இருக்குமோ அந்த அளவே முன்னேறிச் சென்று கொண்டிருப்பார்கள். யார் எந்த அளவு சேவை செய்கிறாரோ அந்த அளவே மற்றவர்களின் குஷியின் பலனாக தனக்குள்ளும் குஷியின் பிராப்தியின் அனுபவம் ஆகும். இது மற்றவர்களின் சேவை இல்லை எப்பொழுதும் முன்னேறும் கலையின் பக்கம் செல்பவர் நிற்பதற்கான நேரம் இப்பொழுது இல்லை. ஒருவேளை நின்று கொண்டே இருந்தீர்கள் என்றால் லட்சியம் வரை எப்படிச் சென்றடைவீர்கள்? ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு விநாடியில் முன்னேறும் கலை கவனத்தை கீழ்கோடிட்டீர்கள் என்றால் எப்பொழுதும் முன்னேறும் கலை இருந்து கொண்டே இருக்கும். நல்லது.

**4) எந்தளவு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவு எந்த வித குழப்பத்திலும் ஆடாதவராக இருப்பீர்கள்! (சாரம்):** எதுவும் புதிதில்ல -இந்த பாடம் பக்காவாக இருந்தால் குழப்பமடையவே முடியாது, பக்கக் காட்சிகளைப் (side scenes) பார்த்தாலும் நிற்காமல் முன்னேறுவீர்கள். தைரியமுள்ள குழந்தைகளுக்குத் தந்தையும் நிச்சயம் உதவுவார். இன்று இங்கு உள்ளீர்கள், நாளை உங்கள் ராஜ்யத்தில். வார்த்தையின் சேவையை விட அதிகம் மனஸா சேவை செய்ய வேண்டும். பக்கக் காட்சிகள் வரும் போகும் ஆனால் வர்ணனை செய்யாதீர்கள், சிந்திக்கவும் செய்யாதீர்கள் -இதற்குத்தான் கூறப்படுகிறது முற்றுப்புள்ளி!

**5) சதா தன்னை ஆன்மீக சேவாதாரி என புரிந்துள்ளீர்களா? (சாரம்):** எழுந்தாலும் அமர்ந்தாலும் போனாலும் வந்தாலும் சேவாதாரிக்கு சதா சேவையின் ஞாபகம்தான் இருக்கும். உடல்நிலை சரியில்லை என்றாலும் படுத்தபடியே மனஸா சேவை செய்ய முடியும், ஏனெனில் புத்தி சரியாக உள்ளதல்லவா; மனஸா சேவை புத்தி மூலம் தான் செய்யப்படுகிறது. எந்தளவு சேவை செய்கிறீர்களோ அந்தளவு இயற்கையும் உங்களுக்கு ஜென்ம ஜென்மத்திற்கு தாசியாகி சேவை செய்யும். சேவை செய்வது என்றாலே பலனை அடைவது. குஷியின் பிராப்தி! பலருக்கும் பாக்கியத்தை உருவாக்கக் கூடியவர்களே மாஸ்டர் பாக்ய விதாதா ஆவார்கள்.

**6) சதா ஞானக் கடலின் விதவிதமான அலைகளில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்களா? (சாரம்):** இதுவரை தந்தை மூலம் கிடைக்கப் பெற்ற ஞான கருத்துகளை சிந்தனை செய்து சதா மகிழ்ச்சியாய் இருங்கள். ஏதாவது ஒரு கருத்தை தினமும் புத்தியிலிருத்தி, அதை அனுபவம் செய்வதால் ஞான சொரூபமாகி விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: எல்லைக்குட்பட்ட பொறுப்புகளை எல்லைக்கப்பாற்பட்டதில் பரிவர்த்தனை (மாற்றம்) செய்யக்கூடிய நினைவு சொரூபமான பற்றுதலை வென்றவர் ஆகுக!**

பற்றுதலை வென்றவர் ஆவதற்காக தனது நினைவு சொரூபத்தை பரிவர்த்தனை செய்யுங்கள். எப்பொழுது நான் குடும்பஸ்தன், என்னுடைய வீடு, என்னுடைய உறவினர்கள் என்ற இந்த நினைவு இருக்கிறதோ அப்பொழுது பற்றுதல் வருகிறது. இப்பொழுது இந்த எல்லைக்குட்பட்ட பொறுப்பை எல்லைக்கப்டாற்பட்ட பொறுப்பில் மாற்றம் செய்து விடுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பை ஏற்று செய்தீர்கள் என்றால், எல்லைக்குட்பட்டது இயல்பாகவே நிறைவேறிவிடும் ஆனால் ஒருவேளை எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பை மறந்துபோய் எல்லைக்குட்பட்ட பொறுப்பை மட்டும் எடுத்துச் செய்கிறீர்கள் என்றால், அதன் மூலம் இன்னும் நிலைகுலைந்து போகிறீர்கள். ஏனென்றால், இந்த கடமை பற்றுதலின் கடமை ஆகி விடுகிறது. எனவே தன்னுடைய நினைவு சொரூபத்தை பரிவர்த்தனை செய்து பற்றுதலை வென்றவர் ஆகுங்கள்.

**சுலோகன்: அந்த மாதிரி மிக வேகமாக உயரே பறந்து செல்லுங்கள் அதன் மூலம் விஷயங்கள் / பிரச்சனைகள் என்ற மேகத்தை ஒரு நொடியில் கடந்து சென்று விட வேண்டும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 02.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடுவதற்கான ஆதாரம்!

இன்று உலகின் நாலாபுறங்களிலும் நினைவில் இருக்கும் குழந்தைகளை பாப்தாதா சாகாரம் (ஸ்தூல உடலில்) மற்றும் ஆகாரத்தில் சூட்சும உடலில்) நேரெதிரில் பார்த்துக் கொண்டே, அவர்களுடைய நினைவிற்குப் பிரதிபலனாக பல கோடி மடங்கு அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். சிலர்

உடலால், சிலர் மனதால் சந்திக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், ஒருவரின் நினைவிலேயே நிலைத்திருக்கிறார்கள். பாப்தாதாவோ கஜானாக்களை ஏற்கனவே கொடுத்து விட்டார். சாகார பாபா மூலமாக மற்றும் ஆகார அவ்யக்த ரூபம் மூலமாக அனைத்து கஜானாக்களின் அதிபதிகளாக உங்களை ஆக்கி விட்டார். எப்பொழுது அனைத்து கஜானாக்களின் அதிபதியாக ஆகி விட்டீர்கள் என்றால் இன்னும் மிச்சம் வேறு என்ன இருக்கிறது? ஏதாவது இருக்கிறதா? பாப்தாதாவோ எஜமானர்களுக்கு சலாம் வணக்கம் செய்வதற்காக வந்திருக்கிறார். பார்க்கும்பொழுது மாஸ்டர் ஆக ஆகியே விட்டீர்கள், இன்னும் மிச்சம் என்ன இருக்கிறது?

கேட்பதின் கணக்கைப் போட்டு பாருங்கள் மற்றும் கூறுபவரின் கணக்கையும் பாருங்கள். அளவற்று கேட்டு விட்டீர்கள், அளவற்று கூறிவிட்டோம். கேட்டு கேட்டு கூறுபவர்களாகவும் ஆகி விட்டீர்கள். அப்படி யானால் மற்றவர்களுக்கு கூறுபவர்கள் என்ன கேட்க வேண்டும். உங்களுடைய பாடலே இருக்கிறது, அனுபவத்தின் பாடலைப் பாடுகிறீர்கள் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் -இன்னும் அடைவதற்கு மிச்சம் என்ன இருக்கிறது. இது யாருடைய பாடல் பிரம்மாபாபாவினுடையதா அல்லது பிராமணர்களின் பாடலாகவும் இருக்கிறதா? உங்களுடைய பாடல் இது தான் இல்லையா? எனவே தந்தையும் இன்னும் செய்ய வேண்டிய வேலை மிச்சம் என்ன இருக்கிறது என்று கேட்கிறார். தந்தை உங்களில் நிரம்பி விட்டார், மேலும் நீங்கள் தந்தையில் நிரம்பி விட்டீர்கள், எப்பொழுது நிரம்பி விட்டீர்கள் என்றால் மிச்சம் என்ன பாக்கி இருக்கிறது? நிரம்பிவிட்டீர்களா அல்லது நிரம்பிக் கொண்டிருக்கிறீர்களா? என்ன சொல்வது? நிரம்பிவிட்டீர்களா அல்லது நிரம்பிக் கொண்டிருக்கிறீர்களா? நதி மற்றும் கடலின் சந்திப்போ நடந்தே விட்டது தான் இல்லையா? நிரம்புவது என்றால் சந்திப்பது. அப்படி சந்தித்து விட்டீர்கள் இல்லையா? கடல் கங்கையை விட்டு விலகி தனியாக இல்லை மற்றும் கங்கை கடலை விட்டு விலகி தனியாக இல்லை. கங்கை மற்றும் கடலின் அழியாத சந்திப்பு. நிரம்பிவிட்டார்கள் என்றால் சமமாக ஆகி விட்டார்கள். சமமாக ஆகுபவர்களுக்கு பாப்தாதாவும் அன்பின் வாழ்த்துக்களைக் கூறுகிறார்.

இந்த தடவை பாப்தாதா பார்ப்பதற்கு மட்டும் வந்திருக்கிறார். எஜமானர்களின் கட்டளையை ஏற்றுக் கொண்டு சந்திப்பதற்காக வந்து விட்டோம். எஜமானர்களிடம் முடியாது என்று சொல்ல முடியாது. ஆக 'வந்தேன் ஐயா' என்ற பாடத்தை படித்து வந்து விட்டோம். அதே போல் நீங்களும் தான். பாப்தாதா தொடக்க காலத்திலிருந்தே

# 1981 அவ்யக்த முரளி

'நீங்களும் அந்த மாதிரி ஆகுங்கள் என்ற வரதானத்தைத் தான் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எண்ணம் மற்றும் சொரூபம் இரண்டிலும் நீங்களும் அதே போல் ஆகுக என்ற வரம் பெற்றவர்கள். தர்மம் மற்றும் கர்மம் இரண்டிலும் அதே போல் ஆகுக என்ற வரம் பெற்றவர்கள். அந்த மாதிரி வரம் பெற்றவர்கள் எப்பொழுதும் நெருக்கம் மற்றும் சமநிலையின் அனுபவியாக இருப்பார்கள். பாப்தாதா அந்த மாதிரி நெருக்கமான மற்றும் சமமான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அமிர்தவேளையில் தொடங்கி நாளின் முடிவு நேரம் வரை ஒரே ஒரு வார்த்தையை மட்டும் தர்மம் மற்றும் கர்மத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் எப்பொழுதும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். அந்த சந்திப்பின் ஊஞ்சலில் இயற்கை மற்றும் மாயா இரண்டுமே உங்களுடைய ஊஞ்சலை ஆட்டுபவர்களாக, வேலைக்காரர்களாகி விடுவார்கள். அனைத்து கஜானாக்கள் உங்களுடைய இந்த உயர்ந்த ஊஞ்சலின் அலங்காரம் ஆகி விடும். சக்திகளை, குணங்களை கடின முயற்சி செய்து தாரணை செய்ய வேண்டியதாக இருக்காது ஆனால் இவை உங்களுடைய அலங்காரமாகி உங்களின் எதிரில் இயல்பாகவே தந்தை மற்றும் உங்களின் சந்திப்பு என்ற ஊஞ்சலில் சமநிலையில் அதாவது நிரம்பியிருப்பவர்களாக இருப்பீர்கள். அந்த மாதிரி ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடுவதற்கான ஆதாரம் தந்தைக்குச் சமமான நிலை என்ற ஒரே வார்த்தை தான்,

சமமாக இல்லை என்றால், தன்னுள் நிரப்பிக் கொள்ள முடியாது. ஒருவேளை அவ்வாறு நிரப்பத் தெரியாது என்றால், சங்கமயுகத்தை இழந்தீர்கள். ஏனென்றால் சங்கமயுகம் தான் நதி மற்றும் கடல் ஒன்றரக் கலப்பதற்கான சந்திப்பாகும். சந்திப்பு என்றால், நிரப்பிக் கொள்வதாகும். சந்திப்பை செய்ய வேண்டும். அப்படியானால் அவ்வாறு நிரப்பிக் கொள்ளத் தெரியுமா? சந்திப்பை செய்யவில்லை என்றால் என்ன செய்கிறீர்கள்? குழப்பம் செய்கிறீர்கள். ஆக ஒன்று சந்திப்பு ! இல்லை என்றால் குழப்பம், பிரச்சனை குழந்தைகள் தனியாக இருக்கிறேன் என்று கூறுகிறார்கள் ஆனால் தனியாக ஆகவே கூடாது என்று தந்தை கூறுகிறார். எதை தனிமை என்று கூறுகிறீர்களோ அதிலேயும் உடன் இருக்கிறார். சங்கமயுகமே இணைந்திருப்பதற்கான யுகம், தந்தையிடமிருந்தோ பிரிந்து தனியாக ஆக முடியாது தான் இல்லையா? நிரந்தரமான துணைவன் ஆவார். மற்றபடி சின்னஞ்சிறு குழந்தைகள் பிரச்சனையில் மாட்டிக்கொள்கிறார்கள். பிரச்சனைகளும் ஒன்றல்ல அனேகம் இருக்கின்றன. சந்திப்பு ஒன்று மற்றும் பிரச்சனைகள் அனேகம். சந்திப்பில் இருந்தீர்கள் என்றால் பிரச்சனைகள் முடிவடைந்து விடும். இப்பொழுதோ நிரம்பிய நிலையில் பிராப்தி அடைந்தவராசு

ஆகுங்கள். அற்ப காலத்து பிராப்திக்கு முடிவு கட்டி, சம்பன்ன நிலையின் நிரம்பிய பிராப்தியை அனுபவத்தில் கொண்டு வாருங்கள். நல்லது.

அந்த மாதிரி தந்தைக்குச் சமமான. எப்பொழுதும் தந்தையுடன் சந்திப்பு செய்வதின் ஊஞ்சலில் ஆடக்கூடிய, என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்று அந்த மாதிரி அனைத்து பிராப்தி சொரூபமான, எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம் மற்றும் சொல்லில், காரியத்தில், சரிங்க அப்படியே ! மற்றும் நான் ஆஜராகி விட்டேன் ஐயா ! என்று சொல்லக்கூடிய, அந்த மாதிரி மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு ஸ்தூலமாக மற்றும் சூட்சுமமாக சந்திப்பை செய்பவர்களுக்கு, பாரதம் மற்றும் வெளிநாட்டின் அனைத்து குழந்தைகளுக்கு, இன்று குழந்தையாக இருப்பவர்கள் நாளை எஜமானர்களாக ஆகக்கூடிய எஜமானர்களுக்கு தந்தையின் சலாம் மற்றும் அன்பு நினைவுகள் !, கூடவே உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு -கர்நாடகா மண்டலம்: 1) நீங்கள் அனைவரும் எப்பொழுதும் சாட்சி நிலையில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா?** யார் சாட்சியாகி காரியம் செய்கிறாரோ அவர்களுக்கு இயல்பாகவே தந்தையின் துணையின் அனுபவம் ஆகிறது. சாட்சியாக இல்லை என்றால் தந்தையும் துணைவனாக இல்லை. எனவே எப்பொழுதும் சாட்சி நிலையில் நிலைத்திருங்கள். தன்னுடைய உடலிலிருந்தும் சாட்சியாக இருக்க வேண்டும். எப்பொழுது உடலின் ஈம்மந்தம் மற்றும் உடலின் சாட்சியாகி விடுகிறீர்களோ பின்பு இயல்பாகவே இந்த பழைய உலகத்திலிருந்தும் சாட்சியாகி விடுகிறீர்கள். பார்த்துக் கொண்டும், தொடர்பில் வந்து கொண்டும் எப்பொழுதும் விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருப்பீர்கள். இந்த நிலை தான் சகஜயோகியின் நிலையை அனு பவம் செய்விக்கும். அப்படி எப்பொழுதும் சாட்சியாக இருப்பது என்ற இதைத் தான் உடன் இருந்து கொண்டும் ஒட்டாமல் (பற்றற்று) இருப்பது என்று சொல்வது அப்படியானால் எப்பொழுதும் அந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? எந்த விதமான மாயாவின் தாக்குதலும் இருக்கக் கூடாது. தந்தைக்கு பலியாகுபவர்கள் மாயாவின் தாக்குதலிலிருந்து எப்பொழுதும் பாதுகாட்டாக இருப்பார்கள். பலியாகுபவர்கள் மேல் தாக்குதல் இருக்க முடியாது. அப்படித் தான் இல்லையா? எப்படி முதல் வாய்ப்பு கிடைத்திருக்கிறது அதே போல் பலியாவதிலும் மற்றும் மாயாவின் தாக்குதலிலிருந்து விலகியிருப்பதிலும் முதல் எண்ணில் இருக்க வேண்டும். முதல் என்பதின் அர்த்தமே வேகமாகச் செல்வது, அப்படி இந்த நிலையில் எப்பொழுதும்

முதலில் இருப்பவர். எப்பொழுதும் குஷியாக இருங்கள். எப்பொழுதும் அதிர்ஷ்டசாலியாக இருங்கள்.

**2) எப்படி தந்தையின் குணங்களை வர்ணனை செய்கிறீர்கள், அதே போல் தன்னுள்ளும் அந்த அனைத்து குணங்களை அனுபவம் செய்கிறீர்களா?** எப்படி தந்தை ஞானக்கடல், சுகத்தின் கடலாக இருக்கிறாரோ, அதே போலவே தன்னிலும் ஞான சொரூபம், சுக சொரூபமாக அனுபவம் செய்கிறீர்களா? ஒவ்வொரு குணத்தின் அனுபவம், வர்ணனை மட்டும் இல்லை, ஆனால் அனுபவம் இருக்க வேண்டும். எப்பொழுது சுகசொரூபமாக ஆகி விடுவீர்களோ அப்பொழுது சுகரொரூப ஆத்மா மூலமாக சுகத்தின் கிரணங்கள் உலகில் பரவும். ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் ஞான சூரியன் ஆவீர்கள். எப்படி சூரியனின் கிரணங்கள் முழு உலகிலும் செல்கிறதோ, அதே போல் ஞான சூரிய குழந்தைகள் உங்களுடைய ஞானம், சுகம், ஆனந்தத்தின் கிரணங்கள் அனைத்து ஆத்மாக்கள் வரை சென்றடையும். சொல்வது. கேட்பதையோ மிக அதிகம் செய்தாகி விட்டது. இப்பொழுது அனுபவத்தை அதிகரியுங்கள். சொல்வது என்றால் சொரூபம் ஆவது, கேட்பது என்றால் சொரூபம் ஆவது.

**3) எப்பொழுதும் குஷியின் கஜானாக்களுடன் விளையாடுபவர்கள் தான் நீங்கள் இல்லையா?** குஷியும் ஒரு கஜானா. அந்தக் கஜானா மூலமாக அனேக ஆத்மாக்களை அனைத்தும் நிறைந்தவர்களாக ஆக்க முடியும். விசேஷமாக இன்றைய நாட்களில் இந்தக் கஜானாவின் அவசியம் இருக்கிறது. மற்ற அனைத்தும் இருக்கிறது ஆனால் குஷி இல்லை. உங்கள் அனைவருக்கும் குஷியின் சுரங்கமே கிடைத்திருக்கிறது. எண்ணிலடங்கா சுஜானாக்கள் கிடைத்திருக்கின்றன. குஷியின் கஜானாவிலும் பல வகைகள் இருக்கின்றன. சில நேரம் சில விஷயத்தின் குஷி மற்றும் சில நேரம் வேறு சில விஷயத்தின் குஷி இருக்கிறது. சில நேரம் குழந்தைத்தனத்தின் குஷி என்றால், சில நேரம் எஜமானத்தன்மையின் குஷி இருக்கிறது. எத்தனை விதமான குஷியின் கஜானா கிடைத்திருக்கிறது அவற்றை வர்ணனை செய்தே மற்றவர்களையும் அனைத்தும் நிரம்பியவர்களாக ஆக்க முடியும். எனவே இந்த பொக்கிஷங்களை எப்பொழுதும் நிலைத்து வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் எப்பொழுதும் கஜானாக்களின் அதிபதி ஆகுங்கள். எப்பொழுதும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள். தந்தையோ சக்திகளைக் கொடுத்து விட்டார். இப்பொழுது அவற்றை காரியத்தில் கொண்டு வாருங்கள். கிடைத்து விட்டது என்ற இந்த குஷியில் மட்டும் இருக்காதீர்கள், ஆனால் என்ன

கிடைத்திருக்கிறதோ அதை தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் உபயோகப்படுத்தினீர்கள் என்றால் எப்பொழுதும் அனைத்தும் நிறைந்தவராக அனுபவம் செய்வீர்கள்.

**4) சதா வரதானி ஆத்மாக்கள் தானே?** பாரதத்தில் இச்சமயம் யாரை அதிகம் நினைவு செய்து கொண்டுள்ளனர்? வரதானிகளை! தேவிகள் என்றாலே வரதானிகள்! பக்தர்கள் அழைப்பதை உணர முடிகிறதா அல்லது ஞானத்தின ஆதாரத்தில் தெரிந்து கொள்கிறீர்களா? ஒன்று, தெரிந்து கொள்வது, இன்னொன்று அனுபவம் செய்வது! வரதானியின் விசேஷம் என்ன? சதா தந்தைக்குச் சமமாக மற்றும் சமீபமாக இருப்பது! சமம் என்றால் சம்பன்னம்! இப்படி சம்பன்னமாக இருப்பவர்தான் சதா வரதானியாக இருப்பார். நல்லது.

**வரதானம்: காரணத்தை நிவாரணத்தில் மாற்றம் செய்து எப்பொழுதும் முன்னேறிச் செல்லக்கூடிய சக்தி சொரூபமானவர் ஆகுக!**

ஞான மார்க்கத்தில் எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அந்த அளவு மாயா பற்பல ரூபங்களில் சோதனை செய்வதற்கு வரும், ஏனென்றால் இந்த சோதனைகள் தான் முன்னேறிச் செல்வதற்கான சாதனமே அன்றி, கீழே விழத் தள்ளுவதற்கானது அல்ல ஆனால் நிவாரணத்திற்குப் பதிலாக காரணத்தை யோசிக்கிறீர்கள் என்றால் நேரம் மற்றும் சக்தி வீணாகிறது. காரணத்திற்குப் பதிலாக நிவாரணத்தை யோசியுங்கள் மற்றும் ஒரு தந்தையின் நினைவிலேயே முழுமையாக மூழ்கியிருந்தீர்கள் என்றால் சக்தி சொரூபம் ஆகி தடையற்றவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: யார் தன்னுடைய பார்வை, உள் உணர்வு மற்றும் நினைவின் சக்தி மூலம் அமைதியின் அனுபவத்தை செய்விக்கிறாரோ அவர் தான் மகாதானி!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 04.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ண சக்தியின் மகத்துவம்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் இறுதி நிலை அதாவது சம்பன்னம் மற்றும் சம்பூர்ண நிலை என்ற இந்த சக்திசாலி நிலையின் அனுபவம் தான் செய்விக்கிறார். அந்த நிலையில் எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானக்கடல், அனைத்து குணங்களும் நிரம்பிய, ஒவ்வொரு எண்ணத்திலும் ஒவ்வொரு மூச்சிலும், ஒவ்வொரு விநாடியும் எப்பொழுதும் பார்வையாளர் நிலையில் இருந்து தந்தையின் துணையின், பிராமண குடும்பத்தின் அனைத்து உயர்ந்த ஆத்மாக்களின் அன்பு, சகயோகத்தின் துணையின் அனுபவம் எப்பொழுதுமே இருக்கும். அந்த அனுபவம், எப்படி அறிவியல் சாதனங்கள் மூலமாக தூரத்திலிருக்கும் பொருள் அருகில் இருப்பதாக அனுபவம் ஆகிறதோ அந்த மாதிரி அனுபவம் ஆகும். அந்த மாதிரி திவ்ய புத்தி மூலமாக எவ்வளவு தான் தூரத்திலிருக்கும் ஆத்மாக்களையும் அருகில் அனுபவம் செய்வீர்கள். எப்படி ஸ்தூலமாக உடனிருக்கும் ஆத்மாவை தெளிவாகப் பார்க்கிறீர்கள், பேசுகிறீர்கள், சகயோகம் கொடுக்கிறீர்கள், பெற்றுக் கொள்கிறீர்கள், அதே போல் அமெரிக்காவில் அமர்ந்திருக்கும் ஆத்மாவாக இருந்தாலும், திவ்ய திருஷ்டி மூலமாக, திவ்ய திருஷ்டி என்றால் ட்ரான்ஸ் இல்லை, ஆனால் ஆன்மீகம் நிறைந்த திவ்ய திருஷ்டி. அந்த திருஷ்டி மூலமாக இயற்கையான ரூபத்தில் ஆத்மா மற்றும் ஆத்மாக்களின் தந்தை தென்படுவார். ஆத்மாவை நான் பார்க்க வேண்டும் என்ற இந்த கடின முயற்சி இருக்காது, உழைப்பு இருக்காது ஆனால் நாள் ஆத்மாவே ! மேலும் பிற அனைவரும் ஆத்மாக்களே! எப்படி துவாபர்யுகத்திலிருந்து ஆத்ம உணர்வு மறைந்து விட்டதோ உடலின் உணர்வு அந்த மாதிரி மறைந்திருக்கும் ஆத்மாவைத் தவிர வேறு எதுவுமே தென்படாது. ஆத்மா நடந்து சென்று கொண்டிருக்கிறது. ஆத்மா செய்து கொண்டிருக்கிறது. எப்பொழுதும் நெற்றியின் மணியின் பக்கம் உடலின் கண்களும் மற்றும் மனதின் கண்களும் செல்லும். தந்தை மற்றும் ஆத்மாக்கள் -இதே நினைவு நிரந்தரமாக, இயற்கையாக இருக்கும். அந்த நேரத்து மொழி என்னவாக இருக்கும்? உயர்ந்த எண்ணத்தின் மொழியாக இருக்கும். பேசும் மொழியாக இராது, ஆத்மீக ஈர்ப்பு செய்வதாக இருக்கும். பேசுவதினால் அல்ல, ஆனால் மனநிலை மூலமாக உயர்ந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பு மூலமாக

சுலபமாகவே சொரூபத்தை அனுபவம் செய்விக்கும். வாய்க்குப் பதிலாக கண்களே சொரூபத்தை அனுபவம் செய்விக்கும் சாதனம் ஆகி விடும், கண்களின் மொழி எண்ணத்தின் பாஷை ஆகும். எண்ணத்தின் சக்தி உங்களுடைய வாயிலிருந்து வரும் பேச்சின் வேகத்தை விட மிக அதிவேகமாக காரியம் செய்யும். எனவே உயர்ந்த எண்ணத்தின் சக்தியை அந்த மாதிரி கொஞ்சம் கூட வீணான அசுத்தம் இல்லாத அளவிற்கு சுத்தமானதாக ஆக்குங்கள். இதைத் தான் வைன் கிளியர் அதாவது மார்க்கம் தெளிவாக இருக்கிறது என்று சொல்வது.

இந்த எண்ணத்தின் சக்தி மூலமாகத் தான் காரியம் வெற்றி அடைவதின் சித்தியை அனுபவம் செய்வீர்கள். எந்த ஆத்மாக்களுக்கு, எந்த ஸ்துல கரியங்களை அல்லது உறவு தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களின் சம்ஸ்காரங்களை வாய்மொழி மூலமாகவோ பிற சாதனங்கள் மூலமாகவோ மாற்றிக் கொண்டு சம்பூர்ண வெற்றியை அனுபவம் செய்வதில்லை. அந்த அனைத்து எதிர்பார்ப்புகளும் எண்ணத்தின் சக்தி மூலமாக ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது என்பது போல் வெற்றி கிடைத்து விடும். நாலாபுறங்களிலும் எப்படி ஸ்தூல ஆகாயத்தின் விதவிதமான நட்சத்திரங்களைப் பார்க்கிறீர்கள். அதே போல் உலகின் வாயுமண்டலத்தின் ஆகாயத்தின் நாலாபுறங்களிலும் வெற்றி நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருட்பதாகக் காண்பீர்கள். தற்சமயம் நம்பிக்கை நட்சத்திரங்கள் மற்றும் வெற்றி நட்சத்திரங்கள் இரண்டும் தென்படுகின்றன ஆனால் இறுதி நேரம், இறுதி நிலையில் தந்தையின் நினைவின் எல்லையில் மூழ்கியிருக்கும் உயர்ந்த நிலையில் வெற்றி நட்சத்திரங்கள் தான் இருப்பார்கள். இந்த ஆன்மீகக் கண், இந்த ஆன்மீக உருவம் அந்த மாதிரி தெய்வீகக் கண்ணாடி ஆகி விடும், அந்த கண்ணாடியில் ஒவ்வொரு ஆத்மாவும் கடின உழைப்பு மற்றும் முயற்சியின்றி ஆத்மீக சொரூபத்தைத் தான் பார்ப்பார்கள். ஒரு நொடியில் இந்தக் கண்ணாடி மூலமாக ஆத்மீக சொரூபத்தின் அனுபவம் செய்யும் காரணத்தினால் தந்தையின் பக்கம் ஈர்க்கப்பட்டு, ஆஹா பிரபு ! என்ற பாடலை பாடிக் கொண்டே, தேக உணர்விலிருந்து சுலபமாகவே அர்ப்பணம் ஆகி விடுவார் ஆஹா, உங்களுடைய பாக்கியமே ! ஆஹா, என்னுடைய பாக்கியமே ! என்ற இந்த பாக்கிய அனுபவத்தின் காரணமாக உடல் மற்றும் உடலின் சம்மந்தத்தின் நினைவை தியாகம் செய்து விடுவார்கள். ஏனென்றால், பாக்கியத்தின் எதிரில் தியாகம் செய்வது மிக சுலபம். நீங்கள் அனைவரும் கூட இந்த சகஜ தியாகம் மற்றும் பாக்கியத்தை பெற விரும்புகிறீர்களா அல்லது கொடுப்பவராக ஆக விரும்புகிறீர்களா? இவ்வளவு வருடங்களின் கடின உழைப்பு மூலமாக இறுதி நேரத்தில் சுலபமாக தியாகம்

மற்றும் பாக்கியம் நிறைந்தவராக ஆகி விடுவோம் என்று அப்படி யோசிக்கவில்லையே?

என்ன விருப்பம்? இறுகி நேரத்தில் சுலபமாக அவசியம் அனுபவம் செய்வீர்கள் ஆனால் எவ்வளவு காலத்திற்கு அனுபவம் ஆகும்? எவ்வளவு குறைந்த காலத்தின் அனுபவமோ அந்த அளவே கொஞ்ச காலத்திற்காகப் பிராப்தி இருக்கும். நீங்கள் அனைவரும் நீண்ட காலத்தின் துணைவர்களாகவும் மற்றும் நீண்ட காலத்து இராஜ்ய அதிகாரிகளாகவும் இருக்கிறீர்கள். இறுதி நேரத்தின் பலஹீனமான ஆத்மாக்களுக்கு மகாதானி வரதானி ஆகி, அனுபவத்தின் தானம் மற்றும் புண்ணிய காரியத்தை செய்யுங்கள். இந்த ஒரு நொடியின் சக்திசாலியான நிலை மூலமாக செய்த புண்ணியம் தான் அரைக் கல்பத்திற்க பூஜைக்குரியவராகவும், மகிமைக்குத் தகுதியான வராகவும் ஆக்கி விடும். ஏனென்றால், இறுதி காலத்தில் ஆத்மாக்களின் இறுதி நேரத்தில் சம்பூர்ண ஆத்மாக்கள் உங்கள் மூலமாக பிராப்தியின் அனுபவம் மற்றும் சம்பூர்ண சொரூபத்தின் பிரத்யக்ஷத்தின் சம்பன்ன சொரூபம். இந்த இறுதி அனுபவத்தின் சம்ஸ்காரத்தைத் தான் ஆத்மாக்கள் எடுத்துக் கொண்டு அரைக்கல்பத்திற்காக தன்னுடைய வீட்டில் ஓய்வாக இருப்பவராக இருப்பார். சிலர் பிரஜை ஆவார்கள். சிலர் பக்தர்கள் ஆவார்கள். என்வே இறுதி நேரத்தின் இறுதி நினைவின் மூலமாக துவாபர்யுகத்தில் பக்தி நிறைந்த வாழ்க்கையில் அதாவது உயர்ந்த பக்த மாலையில் உயர்ந்த மணி ஆத்மாக்களாக ஆகி விடுவார்கள். சிலர் உலக அதிகாரியின் ரூபத்தில் பார்ட்பார்கள், சிலர் பிரஜை ஆவதின் சம்ஸ்காரத்தின் காரணமாக உங்களுடைய இராஜ்யத்தில் பிரஜை ஆகி விடு வார்கள். சிலர் மிக உயர்ந்த பூஜைக்குரிய சொரூபத்தில் பார்க்கிறார்கள் என்றால் பக்த ஆத்மாக்கள் ஆகி விடுவார்கள். அந்த மாதிரி உயர்ந்த நிலை மூலமாக அந்த அளவு சித்தியை அடைந்து விடுவீர்கள். அந்த மாதிரி உயர்ந்த நிலையின் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? எண்ணத்தின் கஜானாவின் மகத்துவத்தைத் தெரிந்து கொண்டு உயர்ந்த எண்ணத்தின் சக்தியை சேமித்துக் கொண்டிருக்கிறீர்களா? இறுதி நிலை என்னவென்று புரிந்து கொண்டீர்களா? பாப்தாதாவும் சப்தத்திலிருந்து விலகிச் செல்வாரா அல்லது சப்தத்திலேயே வருவாரா? சப்தத்தில் குறைவாக வர வேண்டும் என்ற பயிற்சி செய்தீர்கள் என்றால், சப்தத்தில் லிருந்து விலகியிருக்கும் நிலை இயல்பாகலே ஈர்ப்பதாக இருக்கும். சப்தத்திலிருந்து விலகிச் செல்லும் வாசல் தான் முதலில் திறக்கும் இல்லையா? அப்படியானால் வாசலைத் திறக்கும் திறப்பு விழாவை எப்பொழுது செய்வீர்கள். மற்ற திறப்பு விழாவையோ அதிகமாக மதுபனில் செய்கிறீர்கள் இல்லையா? இதன் திறப்பு விழாவை பாப்தாதா

தனியாகச் செய்வாரா அல்லது உங்களுடன் சேர்ந்து செய்வாரா? அப்படியானால் தயாராக இருக்கிறீர்களா? நல்லது. பிறகு அடுத்த தடவை இதனுடைய கணக்கை எடுப்போம். கணக்கை எடுக்க வேண்டும் தான் இல்லையா? நல்லது.

அந்த மாதிரி அனைத்து சித்தி சொரூப ஆத்மாக்களுக்கு எண்ணத்தின் சக்தி மூலமாக அனைவரின் உயர்ந்த விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, தன்னுடைய சம்பன்ன கண்ணாடி மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் இயற்கையான சொரூபத்தைக் காண்பிக்கக்கூடிய, தந்தையை வெளிப்படுத்தி அனைத்து சக்திகளின் வரதானி சொரூபம் உள்ள புண்ணிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் !

**டீச்சர்களுடன்**: இது சேவாதாரி குரூப். டீச்சர்கள் இல்லை சேவாதாரிகள், தந்தையும் முதன்முதலில் சேவாதாரி ஆகி வருகிறார். அனைத்தையும் விட உயர்ந்த பட்டமாக உலக சேவகன் என்பதைத்தான் தந்தை தன் மேல் வைத்திருக்கிறார். எப்படி தந்தையின் பட்டமோ, அதே போல் தான் குழந்தைகளினுடையதும் இருக்கிறது. சேலாதாரி என்று புரிந்து கொள்வதினால் இயல்டாகவே தடையற்றவர் ஆகி விடுகிறார்கள். ஏனென்றால், சேவாதாரி என்றால் தியாகி மற்றும் தபஸ்வி. எங்கு தியாகம் மற்றும் தவம் இருக்கிறதோ அங்கு பாக்கியம் அவரது எதிரில் வேலைக்காரன் போல் கண்டிப்பாக வரும், அப்படி நீங்கள் அனைவரும் சேவாதாரிகள் தான் இல்லையா? டீச்சர் ஆகி இருக்க வேண்டாம், சேவாதாரி ஆகி இருங்கள். இல்லை என்றால் என்ன ஆகிறது. ஒருவேளை நீங்கள் உங்களை டீச்சர் என்று நினைத்தீர்கள் என்றால், வருபவர்கள் கொஞ்சம் முன்னேறிச் சென்றார்கள் என்றாலும், தன்னை டீச்சர் என்று நினைக்கத் தொடங்கி விடுவார்கள். டீச்சர் என்று நினைப்பதால் ஏதாவது ஆசனம் கிடைக்க வேண்டும். ஏதாவது ஸ்தானம் (பதவி) கிடைக்க வேண்டும் என்று சூட்சும விருப்பம் உருவாகிறது இதுவும் மாயாவின் மிகப் பெரிய தடை ஆகும். டீச்சராக இருக்கிறேன் என்றால் இருக்கை வேண்டும், மரியாதை வேண்டும். மதிப்பு வேண்டும் ஆனால் சேவாதாரியோ பெறுபவராக அன்றி கொடுப்பவராக இருப்பார். எனவே எப்படி பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் நீங்கள் இருப்பீர்களோ அதே போலவே உங்களைப் பார்த்து பிற சேவாதாரிகளும் எப்பொழுதும் இருப்பார்கள். பின்பு நாலாபுறங்களிலும் தியாகம், தவத்தின் சூழ்நிலை இருக்கும். எங்கு தியாகம் மற்றும் தவத்தின் சூழ்நிலை இருக்கிறதோ அங்கு எப்பொழுதும் தடைகளை அழித்து வெல்கின்ற நிலை இருக்கும். நீங்கள் அனைவரும் சேவாதாரிகள் தான் இல்லையா? டீச்சர் என்று கூறுவதினால் நாங்களும் ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை என்று மாணவர்கள் கூறுகிறார்கள்.

எனவே தன்னையும் சேவாதாரி என்று நினையுங்கள் மற்றும் அவ்வாறு புரிந்து, நடக்கவும் செய்யுங்கள். அனைத்து தடைகளின் வேராக இருப்பது தன்னை ஆசிரியர் என்று நினைத்து மேடையில் அமர்வது. பின்பு டீச்சரை பின்பற்றுபவர்களாக ஆவார்களேயன்றி, தந்தையைப் பின்பற்றுபவர்களாக ஆக வளர்ச்சியையோ அடைந்து கொண்டே இருக்கிறீர்கள், இப்பொழுது வளர்ச்சியின் கூடவே விதிப்பூர்வமான வளர்ச்சியை அடைந்து கொண்டே செல்லுங்கள். விதியில் குறை இருக்கிறது என்றால் வளர்ச்சியிலும் அதிக தடை இருக்கும். எனவே விதிப்பூர்வமான வளர்ச்சியை அடைபவராக ஆகுங்கள். நன்றாகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) அனைவரும் எப்பொழுதும் சுகக்கடல் தந்தையின் நினைவில் இருந்து கொண்டே சுகசொரூபத்தின் அனுபவம் செய்கிறீர்களா?** ஏனென்றால் நீங்கள் சுகக்கடலின் குழந்தைகள். எனவே எப்படி தந்தை சுகத்தின் கடலாக இருக்கிறாரோ அதே போல் குழந்தைகளும் சுகசொரூபமாக இருக்கிறார்கள். மாஸ்டர் தான் இல்லையா? அப்படி துக்கமான உலகத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும் சுகசொரூபமாக இருக்கிறீர்கள். ஒருபொழுதும் துக்கத்தை உணர்வதில்லையே? உலகத்தில் எவ்வளவு தான் துக்கத்தின், அமைதியின்மையின் பாதிப்பு இருந்தாலும், நீங்கள் விலகியிருப்பவராகவும், அன்பானவராகவும் இருக்கிறீர்கள். ஏனென்றால் நீங்கள் சுகக்கடலின் உடன் இருக்கிறீர்கள். அந்த மாதிரி எப்பொழுதும் சுகமானவராக, எப்பொழுதும் சுகங்களின் ஊஞ்சலில் ஆடுபவராக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? எண்ணத்தில் கூட துக்கம் இல்லை. துக்கத்தின் எண்ணம் வருவது கூட மாஸ்டர் சுகக்கடலின் குழந்தைகளுக்கு இல்லை. ஏனென்றால், ஆத்மா துக்கத்தின் உலகிலிருந்து பிரிந்து வந்து சங்கமயுகத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள். விட்டு விட்டீர்கள் தான் இல்லையா?. விட்டு விட்டீர்களா அல்லது துக்கமான உலகத்தில் இருக்கிறீர்களா? ஏதாவது கயிறு கட்டப்பட்டிருக்கவில்லையே? அனைத்து கயிறுகளும் அறுந்து விட்டனவா? எப்பொழுது அனைத்து கயிறுகளும் அறுந்து விட்டனவோ சுகத்தின் கடலில் நீந்திக் கொண்டே இருங்கள்.

**2) நம்பர் ஒன் அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாவின் அடையாளங்கள்:**

(1) நம்பர் ஒன் அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மா அனைத்து பிராப்தி சொரூபமாக இருப்பார்.

2) அவர் சர்வ குணங்கள். சர்வ கஜானாக்கள். அனைத்து சக்திகளின் பிராப்தி எனும் ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருப்பார்.

3) இப்பொழுதிலிருந்து அவருடைய வாழ்க்கையில் பிராப்தி இல்லாத பொருள் ஒன்றுமே இருக்காது. ஒவ்வொரு விநாடி ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு எண்ணமும் அளவில்லா சுஜானாக்களை பிராப்தி செய்விப்பதாக இருக்கும்.

4) அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் முன்னேறும் கலையின் அனுபவம் இருக்கும்.

5) அவர்களுக்கு நாலாபுறங்களிலும் அனேசு விதமான கஜானாக்களே கஜானாக்கள் தான் தென்படும்.

6) அவருக்கு ஒவ்வொரு ஆத்மாவும் மிக அன்பான, அனாதி சம்மந்தத்தின் (சகோதரன் - சகோதரன்) சொரூபத்தில் தன்னுடையவராக அனுபவம் ஆகும்.

7) அவருடைய மனதில் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் இந்த அனைத்து ஆத்மாக்களும் எப்பொழுதும் சுகமானவர்களாக மற்றும் அமைதி நிறைந்தவர்களாக ஆகி விட வேண்டும் என்ற சுபபாவனை மற்றும் நல்ல விருப்பங்கள் தான் வெளிப்படையான ரூபத்தில் இருக்கும்.

8) அவர் எல்லைக்கு அப்பாற்பட்ட நிலையில் இருப்பார். எனவே எல்லைக்கு அப்பாற்பட்ட சம்மந்தம், எல்லைக்கு அப்பாற்றபட்ட ஞானம், எல்லைக்கு அப்பாற்பட்ட உள்உணர்வு, எல்லைக்கு அப்பாற்பட்ட ஆன்மீக அன்பு இருக்கும் காரணத்தினால் சுக சொரூபம் இருக்கும்,

9) ஆன்மீக ஞானத்தின் காரணமாக ஒவ்வொரு ஆத்மாவின் கர்ம கதையின் பங்கின் சம்ஸ்காரங்களின் லைட் மற்றும் மைட் (சக்தி) இருக்கும் காரணத்தினால், என்னென்ன பார்க்கிறாரோ, கேட்கிறாரோ, தொடர்பு சம்மந்தத்தில் வருகிறாரோ ஒவ்வொரு காரியத்திலும் மிகவும் விலகியிருப்பவராகவும் மிகவும் அன்பானவராகவும் இருப்பார்.

10) ஒவ்வொருவருடனும் ஆன்மீக சம்மந்தம் இருக்கும் காரணத்தினால் புத்தியின் ஒருமித்த நிலை இருக்கும். மேலும் ஒருமித்த நிலையின் காரணமாக நிர்ணய சக்தி, உள்ளடக்கும் சக்தி, எதிர்நோக்கும் சக்தி இருக்கும். எனவே ஆத்மாவின் பங்கு மற்றும் தன்னுடைய பங்கை மிக நல்ல முறையில் தெரிந்து பங்கில் வருவார்கள். அவருடைய நிலை உறுதியானதாகவும் மற்றும் சாட்சி நிலையிலும் இருக்கும்.

11) அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மா ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை ஒவ்வொரு விஷயத்தை மூன்று காலத்தையும் தெரிந்தவர் என்ற நிலையிலிருந்து பார்ப்பார்கள். எனவே கேள்விக்குறி இருக்காது. எப்பொழுதும் முற்றுப்புள்ளி இருக்கும்.

12) அவர்களுக்கு எந்த விஷயத்திலும் என்ன ஆனது, ஏன் ஆனது என்ற ஆச்சரியமும் இருக்காது. எப்பொழுதும் ஒன்றும் புதிதல்ல என்ற நிலை இருக்கும். இது தான் நம்பர் ஒன் அதிர்ஷ்டம் நிறைந்தவரின் அடையாளங்கள்,

**3) மகாவீரர்களின் உயர்ந்த சேவையின் சொரூபம் மற்றும் அவர்களின் விசேஷ சேவை:** எண்ணத்தின் சக்தி மூலமாக சேவை செய்வது. எப்படி முந்தைய காலத்தில் பறவைகள் மூலமாக செய்தி அனுப்பினார்கள், நீங்கள் எண்ணத்தின் சக்தி மூலமாக எந்தவொரு ஆத்மாவிற்காகவும் சேவை செய்ய முடியும். எண்ணத்தின் பொத்தானை அழுத்தியவுடன் செய்தி சென்றடைந்து விடும். எப்படி சூட்சும உடல் மூலமாக சேவை செய்ய முடியும், அதே போல் எண்ணத்தின் சக்தி மூலமாக அனேக் ஆத்மாக்களின் பிரச்சனைகளைத் தீர்வு செய்ய முடியும், தன்னுடைய உயர்ந்த எண்ணத்தின் ஆதாரத்தினால் அவர்களுடைய வீனான மற்றும் பலஹீனமான எண்ணத்தை பரிவர்த்தனை (மாற்றம்) செய்ய முடியும். இந்த விசேஷ சேவை, நேரத்திற்கு தகுந்தாற்போல் அதிகரித்துக் கொண்டே இருக்கும். நல்லது.

**வரதானம்: மாஸ்டர் சர்வ சக்திவானின் நினைவு மூலமாக மாயாவை வென்றவரிலிருந்து உலகை வென்றவர், வெற்றி அடைபவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் மாயா ஏன் வந்து விட்டது தெரியவில்லை என்று அதிகமாக யோசிக்கிறார்களோ, மாயாவும் அவ்வாறு பயந்திருப்பவரைப் பார்த்து தாக்குதல் செய்து விடுகிறது. எனவே யோசிப்பதற்கு பதிலாக எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நினைவில் இருந்தீர்கள் என்றால், வெற்றி அடைபவர் ஆகி விடுவீர்கள், வெற்றி இரத்தினமாக ஆக்குவதற்கு காரணமானதே இந்த மாயாவின் சிறு ரூபமாகும் எனவே தன்னை மாயாவை வென்றவர், உலகை வென்றவர் என்று புரிந்து மாயா மீது வெற்றியை அடையுங்கள், பலஹீனமானவராக ஆகாதீர்கள். சவால் விடுபவராக ஆகுங்கள்.

**சுலோகன்: ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்தும் நல் ஆசீர்வாதங்களை அடைய வேண்டும் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தில் நிலைத்திருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞானசூரியன் தந்தையின் மாஸ்டர் ஞான சூரிய குழந்தைகளுக்கு சேவைக்கான வாழ்த்து! (தாதிஜீ, சகோதரிகள் ஜெயந்தி மற்றும் லச்சு ஆகியோர் வெளிநாட்டு சேவை செய்து திரும்பி வந்தவுடன் பாப்தாதா கூறிய மகாவாக்கியங்கள்).

இன்று உலகின் கண்மணியானவர் தன்னுடைய கண்களின் நட்சத்திரங்களைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். கண்ணின் மணிகளோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறார். முழு உலகின் பார்வை யார் மேல் இருக்கிறதோ, அவருடைய பார்வை யார் மேல் இருக்கிறது? யாரை முழு உலகமும் நினைவு செய்கிறதோ, அவர் யாரை நினைவு செய்கிறார்? யாருடைய மகிணமயை முழு உலகமுமே பாடுகிறதோ, சுபம் அவரே யாருடைய மகிமையைப் பாடுகிறார்? அப்படியானால் பெரியவராக யார் ஆனார்? குழந்தைகளா அல்லது தந்தையா? அப்படி பாப்தாதா அந்த மாதிரி கண்ணின் மணிகளோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எந்தக் குழந்தைகள் தந்தைக்காக மற்றும் சேவைக்காக தன்னையே அர்ப்பணம் செய்திருக்கிறார்களோ, அந்த மாதிரி குழந்தைகளுக்கு பிரதிபலனைக் கொடுப்பதற்காக பாப்தாதாவும் அர்ப்பணமாகிறார்.

தந்தையின் எதிரில் இன்று அந்த மாதிரி விலைமதிக்கமுடியாத இரத்தினங்கள் இருக்கிறார்கள். அவர் எங்கே இருந்தாலும், உடலால் தூரமான இடத்தில் இருந்தாலும், இன்றைய சபையில் உங்கள் அனைவரின் உடன் இருக்கிறார். தந்தையின் எதிரில் ஸ்தூலமாக அமர்ந்திருக்கிறீர்கள். இன்று யார் எதிரில் தந்தை அமர்ந்திருக்கிறார் என்று தெரிந்திருக்கிறீர்களா? இன்று தந்தையின் எதிரில் தேடிக் கண்டெடுக்கப்பட்ட மிகப்பிரிய மான எப்பொழுதும் இதயசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் 9 இரத்தினங்கள் எதிரில் இருக்கிறார்கள். அஷ்ட மற்றும் இஷ்ட

# 1981 அவ்யக்த முரளி

ஆத்மாக்கள் எதிரில் இருக்கிறார்கள். எங்களை பாப்தாதா நினைவு செய்கிறார் என்று அவர்களும் தெரிந்திருக்கிறார்கள். திவ்ய தரிசனத்தில் அவர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி இரத்தினங்களின் விசேஷங்களை பாப்தாதா எப்பொழுதும் மாலையாக நினைவு செய்கிறார். தந்தை அந்த மாதிரி இரத்தினங்களைப் பார்த்து என்ன பாடல் பாடுகிறார்? அந்தப் பாடலை கேட்டிருக்கிறீர்களா? அது எது? பாப்தாதாவின் பாடல் நீளமானது அல்ல. மிகச் சுருக்கமானது. ஆஹா என்னுடைய குழந்தைகளே ஆஹா என்பது தான் தந்தையின் பாடலாகும். அப்படியானால் இந்தப் பாடலை கேட்க முடிகிறதா? எத்தனை தடவைகள் கேட்கிறீர்கள்? குழந்தைகள் என்ன பதில் கூறுகிறீர்கள்? தந்தையோ ஒருவர், மேலும் அவருக்கு அனேக் குழந்தைகள் இருக்கிறார்கள் ! அப்படி தந்தை அனைத்து குழந்தைகளின் பாடலைக் கேட்கிறார். பாடலைக் கேட்கும் பொழுது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. சிலர் ஒரு மாதிரியாக பாடுகிறார்கள். சிலர் வேறு மாதிரி பாடுகிறார்கள். எப்படி பாடுகிறார்கள் என்று கூறலாமா? சிலர் 'ஆஹா பாபா ஆஹா என்று கூறுகிறார்கள், சிலர் ‘ஆஹா என்னுடைய பாபா ஆஹா என்று கூறுகிறார்கள். மேலும் சிலர் 'ஆம் பாபா ஆம்' என்று கூறுகிறார்கள். இன்னும் கூறலாமா - சிலர் வேறு வழியில்லை என்ற நிர்பந்தத்தில் பாடுகிறார்கள். அப்படி என்ன நிர்பந்தம்? ஏனென்றால் தந்தையை நினைவு செய்யாமல் எதுவுமே கிடைக்காது. எனவே நினைவு செய்ய வேண்டும் என்று தெரிந்திருக்கிறார்கள், ஆஹா பாபா ஆஹா என்ற பாடலை பாடவே தான் வேண்டும். ஒருவருக்கு மனதின் வீணையின் இசை இருக்கிறது. மேலும் இன்னொருவருக்கு வாயின் இசை இருக்கிறது. அப்படி பாப்தாதாவோ பாடலை கேட்பார் தான் இல்லையா? எந்தப் பாடல் பாடுகிறார். தந்தை மற்றும் குழந்தைகளின் கதைகளைக் கூறலாமா என்ன? ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் கதை இருக்கிறது. அனைத்து கதைகளையும் ஒன்றாக்கினோம் என்றால் எத்தனை ஆகி விடும்? ஒவ்வொருவரது தினசரி கதை கூட வேறு வேறாகும். அப்படி தந்தை கேட்க வேண்டுமா அல்லது இல்லையா? நீங்கள் அனைவரும் பாபா அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று முறையீடு செய்கிறீர்கள் இல்லையா? அங்கேயும் இதே வேலை தான் செய்கிறார். எவற்றை உடலில் இருக்கும் போது செய்திருந்தாரோ அவற்றையே தற்போது செய்கிறார். சாகாரத்தில் நேரம் அதிகம் எடுத்தது. மேலும் இப்பொழுது நேரம் குறைவாக ஆகிறது.

இன்று விசேஷமாக குழந்தைகள் செய்த சேவைக்கான பிரதிபலனை வழங்குவதற்காக வந்திருக்கிறார். எப்படி குழந்தைகள் அன்போடு சேவையின்

பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கிறார்களோ அதே போன்று தந்தையும் குழந்தைகளின் அன்பிற்கு கட்டுப்பட்டுள்ளார்.

(ஜெயந்தி சகோதரியுடன்) இன்று எங்கே சந்தித்து கொண்டிருக்கிறீர்கள்? இன்று விசேஷமாக பாப்தாதா எங்கே வந்திருக்கிறார்? மதுபன்னிலோ வரத்தான் செய்கிறார், ஆனால் இது எந்த சபை இதனிடையில் சந்தித்து கொண்டிருக்கிறீர்கள்? லண்டனில் விசேஷமாக எங்கே சந்திப்பீர்கள்? பாப்தாதா இன்று தோட்டத்தில் சந்தித்து கொண்டிருக்கிறார், இது அல்லாவின் தோட்டம் தான் இல்லையா? ஏனென்றால், தோட்டத்தில் சந்திப்பது என்றால் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் சந்திப்பது. பாப்தாதாவிற்காக இந்த தோட்டம் அனைத்தையும் விட மிகவும் நல்லது. அந்த தோட்டங்களோ வைகுண்டத்தின் தோட்டங்கள், அவற்றின் எதிரே இவ்வுலகிலுள்ள இந்த தோட்டங்கள் ஒன்றுமே இல்லை. நல்லது. இங்கே வந்து ஆஜராகி விட்டோமில்லையா? மாஸ்டர் எஜமானருக்கு எதிரில் ஆஜராகி வந்தாகி விட்டது.. அனைவரையும் பார்த்தும் குஷி ஏற்படுகிறது. சேவையை ஊக்கம் மற்றும் உற்சாகம் நிறைந்து செய்து வெற்றி அடைந்ததற்காக அனைவருக்கும் பாராட்டுக்கள்! சேவையில் முழுமையாக ஈடுபட்டு ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்குச் செல்வதற்கான பந்தயத்தை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள். போட்டியில்லை, பந்தயம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே வெளிநாட்டு சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் பெரும்பான்மையான இரத்தினங்கள் பிரதிபலனை நன்றாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

லண்டன் அஸ்திவாரம், எனவே வருடங்களுக்குள் என்னென்ன சேவை செய்திருக்கிறீர்களோ அதற்கு பலனாக பாப்தாதா எந்த தீபத்தை ஏற்றுவார்? நாலாபுறங்களிலுமுள்ள வெளிநாட்டு குழந்தைகளிலிருந்து முக்கியமாக யார் சேவையில் இரவு பகலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அந்த விசேஷ ஆத்மாக்களின் விசேஷத்தின் தீபத்தை பாப்தாதா ஏற்றுவார். குணங்கள் என்ற எண்ணெய் விட்டு, விசேஷங்களின் தீபத்தை ஏற்றிக் கொண்டிருக்கிறோம். பாராட்டுக்கள் உரித்தாகுக! சேவைக்கான டாராட்டுக்கள் உரித்தாகுக! ஹாங்காங்கைச் சேர்ந்தவர்களுக்கும் இதே பாடலை கூறுங்கள். அவர்களுக்கும் 10-வருடங்கள் ஆகி விட்டது. இன்று இரு நாட்டவர்களுக்கும். 10-வருடங்களுக்கான வாழ்த்துக்கள்! லண்டனில் இருக்கும் நெருக்கமான குழந்தைகள் வெளிநாட்டில் மாஸ்டர் ஞான சூரியனின் சொரூபத்தில் சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் கிரணங்களை மிக நன்றாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள், எனவே ஞான

# 1981 அவ்யக்த முரளி

சூரியன் தந்தை மாஸ்டர் ஞான சூரிய குழந்தைகளுக்கு. வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களும் தியாகம் மற்றும் பாக்கியம், தியாகத்தின் மூலமாக பாக்கியத்தை அடைந்ததற்கான நிரூபணத்தை மிக நன்றாகக் காண்பித்திருக்கிறார்கள். பப்தாதா ஆஸ்திரேலியாவின் சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கு ஒரே சீராக, ஆடாத அசையாமல் இருந்ததற்கான சான்றிதழை வாழ்த்துக்களாகக் கொடுக்கிறார். அதே போலவே நைரோபிடைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களின் விசேஷத்தின் காரணமாக பாப்தாதா வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். அது என்ன விசேஷம்? மிக உணர்வுப்பூர்வமாக தந்தை மற்றும் தந்தையின் சேவையில் ஈடுபடுவதில் மிக நல்ல குழந்தைகள்! அவர்கள் சூழ்நிலைகளைப் பார்ப்பதில்லை, சேவையைப் பார்க்கிறார்கள். சேவையில் நாம் அனைவரும் ஒருவர், இந்த நிரூபணம் கொடுப்பதின் விசேஷத்தை மிக நன்றாகக் காண்பித்திருக்கிறார்கள். சேவை மேல் அன்பு என்றால், பாப்தாதா மேல் அன்பு. அகற்றுவது மற்றும் உள்ளடக்குவது இரண்டின் நல்ல அதிசயத்தை காண்பித்திருக்கிறார்கள். எனவே பாப்தாதா அந்த மாதிரி விசேஷம் உள்ள குழந்தைகளை மகாவீர் குழந்தைகள் என்று கூறுகிறார்.

அமெரிக்காவும் குறைந்தது அல்ல, அமெரிக்காவைச் சேர்ந்தவர்களோ செய்தியை வலுவாக பரப்பக்கூடிய மைக்கை பிடித்து விட்டார்கள். சேவைக்கான சாதனம் சகஜமாக மற்றும் உயர்ந்ததாகக் கிடைத்து விட்டது. அமெரிக்காவில் என்னென்ன சேவை நிலையங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் வி.ஐ.பி க்களின் சேவையில் மிக நல்ல வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வெளிநாட்டில் வி.ஐ.பி களுக்கு சேவை செய்வது கடினம் இல்லை தான் இல்லையா? இப்பொழுது லண்டனிலும் நல்ல பெயர் கிடைத்திருக்கிறது.

அப்படி இந்த வருடம் விசேஷ நபர்களுக்கு சேவை செய்வதற்கான வரதானம் வெளிநாட்டினருக்குக் கிடைத்திருக்கிறது. எத்தனை வருடங்கள் கடினமாக இருந்தது? மேலும் எப்படி சுலபமாகி விட்டது என்ற அது தெரிய வந்ததா? வெளிநாட்டில் நாலாபுறங்களில் உள்ள முக்கியமான இடங்களின் பெயரை கூறினோம் ஆனால் இன்னும் நாலாபுறங்களிலும் உள்ள மற்ற இடங்களிலும் சேவையின் அலை மிக நன்றாகப் பரவியுள்ளது. கயானாவாக இருந்தாலும், ஜெர்மனியாக இருந்தாலும், மொரிசீயசும் இருக்கிறது. அனைவரின் பெயரையும் கூற வேண்டும். ஒவ்வொரு இடத்திற்கும் அவரவர்களுக்கென்ற விசேஷம்

இருக்கிறது. இப்பொழுது இவர்கள் விசேஷ நிகழ்ச்சி மூலம் விசேஷ ஆத்மாக்களைத் தயார் செய்திருக்கிறார்கள், அதே போல் நாலாபுறங்களிலும் நல்ல ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. எனவே அனைவரின் பெயரையும் குறித்துக் கொள்ளுங்கள்.

**தாதி அவர்கள் மற்றும் லச்சு சகோதரி வெளிநாட்டு சேவை செய்து திரும்பி வந்திருக்கிறார்கள். தாதியுடன்:** பேலன்ஸ் (சமநிலை) மற்றும் பிளசிங் ஆசீர்வாதம்) இரண்டின் அனுபவம் செய்தீர்களா? பயணம் நன்றாக இருந்ததா? (லச்சு சகோதரியுடன்) இவரும் வெளிநாட்டு யாத்திரை செய்து வந்திருக்கிறார். இவரும் தபஸ்யா செய்தார் இல்லையா? இவரும் அதிர்ஷ்டசாலிதான் சிறு வயது பருவத்திலிருந்தே உயர்ந்த சங்கத்தில் இருந்திருக்கிறார். மிக நெருக்கமாக இருந்திருக்கிறார். இந்த மாதிரி பாக்கியம் கூட அனைவருக்கும் இருக்காது. இப்பொழுது வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து என்ன செய்தீர்கள்? எங்காவது சொற்பொழிவு நிகழ்த்தினீர்களா? இப்பொழுது பயிற்சி செய்யுங்கள். வகுப்பு எடுப்பதற்கும் பயிற்சி செய்யுங்கள். மிக அதிகமாக நேரடியாக கேட்டிருக்கிறீர்கள். நகத்தில் மறைத்து வைத்து கூறும் விஷயங்களையும் கேட்டிருக்கிறீர்கள். அதற்கு பிரதிபலனோ கொடுக்க வேண்டும் இல்லையா? நல்லது. சேவை செய்யும் குழந்தைகள் எங்காவது செல்கிறார்கள் என்றால் சேவைக்கான நிரூபணத்தை அவசியம் கொடுக்கிறார்கள். கொடுத்தீர்கள் தான் இல்லையா? சேவைக்குக் தகுதியானவர் என்றால் சேவை! சேவை மற்றும் சேவை. பார்ப்பதும் சேவை, பேசுவதும் சேவை, நடப்பதும் சேவை மற்றும் செய்வதும் சேவை. ஐந்து படங்களை காண்பிக்கிறீர்கள் இல்லையா -தீயதை பார்க்காதீர்கள், தீயதை பேசாதீர்கள் காண்பித்தீர்கள். இங்கே ஆம் என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். அப்படி இந்த ஐந்து விஷயங்களில் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். இங்கே ஆம் என்று கூறுகிறார்கள். இதைத் தான் சேவைக்குத் தகுதியானவர் என்று கூறுவது. அப்படி சேவைக்குத் தகுதியானவரின் படமாக என்ன ஆனது? சேவை செய்வது மிக நன்றாக இருந்தது தான் இல்லையா? ஒவ்வொரு ஸ்தானத்தின் விசேஷங்களினால் சம்பன்னம் ஆகி ஆகி நாலாபுறங்களிலும் சேவையில் முழுமை நிலை வந்து விடும். எனவே இந்த அனுபவமும் நன்றாக இருக்கிறது.

யமுனை நதிக்கரையும் வந்திருக்கிறது (டெல்லி குரூப்). மேலும் கூடவே யமுனை நதிக்கரையில் நாடகம் செய்பவர்கள் கர்நாடகாவும் வந்திருக்கிறது. பாம்பேயோ அதிகப்படியாக (கொசுறு) வந்துள்ளது. நல்லது! யமுனை நதிக்கரையும் இருக்கிறது. மேலும் யமுனை நதியின் நடுவில் தோட்டமும் இருக்கிறது. அப்படி

அதன் நடுவில் பாப்தாதாவுடன் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும் சேவைக்கான அஸ்திவாரமோ டெல்லி! மேலும் அனைவரும் சேவைக்கான கால்களை பதித்ததும் டெல்லியில் தான். பெரும்பான்மையான மகாரதிகள் சேவைக்காக டெல்லியில் கால் பதித்திருக்கிறார்கள். நல்லது. டெல்லி என்ன செய்ய வேண்டும்? என்று பின்பு கூறுவோம். இன்றோ தோட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறோம் இல்லையா?

அந்த மாதிரி விளையாட்டில் விளையாட்டை பார்க்கக்கூடிய, வாழைப்பழம் (ஹிந்தியில் கேளா) மற்றும் சந்திப்பு (ஹிந்தியில் இரண்டையும் அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் தையின் குணத்தின் மகிமை பாடக்கூடிய, கூடவே தன்னை தந்தைக்குச் சமமாக மாஸ்டர் குணம் நிறைந்தவராக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் உலகின் நற்சிந்தனையாளர். எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யக்கூடிய விஷ்வ கல்யாணகாரி, அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் !

**தீதி அவர்களுடன்:** பறக்கும் பறவை ஆகி சேவையின் பங்கை செய்து கொண்டே தன்னுடைய ஓய்வு ஸ்தானத்தில் வந்து சேர்ந்து விட்டீர்களா? கருக்கமான மற்றும் இனிமையான பயணமாக இருந்ததா? பாப்தாதாவும் குழந்தைகளின் தைரியம் மற்றும் சேவையின் ஊக்கத்திற்கான மன தைரியமானது மருந்தின் வேலையைச் செய்து விடுகிறது. எத்தனை பேர்களுக்கு ஆசீர்வாதம் கொடுத்தீர்கள். இப்பொழுது விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய பங்கே ஆசிர்வாதம் கொடுப்பது தான், கண்களினாலானாலும் சரி, நெற்றியின் மணியின் மூலமாக இருந்தாலும் சரி, பேசுபவர்களோ அதிகம் இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது நீங்கள் அனைவரும் செய்ய வேண்டிய காரியம் ஆசீர்வாதம் வழங்குவது ! எப்படி சாகார பாபாவைப் பார்த்திருக்கிறீர்கள், இறுதி கர்மாதீத் நிலையின் பங்கு என்னவாக இருந்தது? ஆசீர்வாதம் கொடுப்பது. சமநிலையின் விசேஷமும் இருந்தது மற்றும் ஆசீர்வாதத்தின் அதிசயமும் இருந்தது. நீங்களும் தந்தையைப் பின்பற்றி நடங்கள். இது தான் மிக சுலபமான சேவை, கூடவே சக்திசாலியானதும் இது தான். பொதுவாகவே எந்தவொரு பொருள் சக்திசாலியானதாக இருக்கிறதோ, அது எவ்வளவு சக்திசாலியானதோ அந்த அளவே அதனுடைய ரூபத்தில் மிகச் சிறியதாக இருக்கும். எப்படி விதை சக்திசாலியாக இருக்கிறது, ஆனால் விதை எவ்வளவு சிறியதாக இருக்கிறது. அணு சக்திசாலியானது, எவ்வளவு சிறியதாக இருக்கிறது? அதே போல் ஆத்ம நினைவிலிருந்து ஆசிர்வாதம் கொடுப்பது இதுவும் மிக சுலபமானது மற்றும் சக்திசாலியானது. நேரமும் குறைவு. கடின உழைப்பும்

குறைவு மற்றும் ரிசல்ட் அதிகம் ! மேலும் அதுவும் அதிக காலத்திற்காக, இந்த நேரம் கேட்டீர்கள் உடன் அந்த நேரமே மறந்தீர்கள் என்று அப்படி இல்லை. அனுபவம் ஆகி விடுகிறது இல்லையா? அப்படி சக்திசாலியான ஆத்மாக்கள் உங்களுடைய இந்த நேரத்து சேவை ஆசீர்வாதம் கொடுப்பது.

**ஜெயந்தி சகோதரியுடன்:** உங்களில் எத்தனை ஆத்மாக்கள் நிரம்பியிருக்கிறார்கள்? இன்று எத்தனை ஆத்மாக்கள் உங்களில் நிரம்பியிருக்கிறார்கள்? சேவையில் மிக நன்றாக வேகமாக முன்னேறி இருக்கிறீர்கள். ஆத்மா உங்களுக்கு குடும்பத்தின், ஆன்மீக குடும்பத்தின், பரலோகத்தின் ஆக, மூவர்களின் வாழ்த்துக்கள் கிடைத்திருக்கிறது. உங்களுடைய பங்கை மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அனைவராலும் விரும்பப்படுபவர் தான் இல்லையா? இந்த விஷயத்தின் நினைவின் காரணமாகத் தான் உங்கள் வாழ்க்கையில் வெற்றி இருக்கிறது. சேவையின் வெற்றிக்கான ஆதாரமே செய்பவர் செய்விப்பவர் தந்தையின் நினைவு இருப்பது. எனவே தான் பாதுகாப்பாகவும் இருக்கிறீர்கள். மேலும் வெற்றியும் அடைந்து கொண்டிருக்கிறீர்கள்

இல்லையா? தந்தையைப் பின்பற்றி நடந்தீர்கள், ஆனால் பொறுப்பாளர் ஆகியிருக்கும் தன்னுடைய தாதியையும் (ஜானகி தாதி) பின்பற்றி நடந்தீர்கள், குணங்களைப் பின்பற்றினீர்கள். மிக நல்லது தான்! ஜனக்கிற்கு விசேஷ அன்பு கொடுங்கள். அவருக்கும் உடனடி பலனாக நோயற்ற உடல் கிடைத்திருக்கிறது. உடல்-காயா கல்பதரு ஆகி விட்டது தான் இல்லையா?

பொதுவாக கயானாவின் அஸ்திவாரத்தின் ஆதாரத்தில் அமெரிக்காவின் வி.ஐ.பி.க்கள் உருவானார்கள். அமெரிக்காவின் அஸ்திவாரமும் கயானா தான். வெளிநாட்டில் முதல் நம்பர் வி.ஐ.பி தம்பதியினர் கயானாவைச் சேர்ந்தவர்கள் தான். எனவே மிக மிக அன்பிற்குரியவர்கள், இருவர்களின் சேவையில் விசேஷம் இருக்கிறது, ஒருவர் இன்னொருவரை விட முன்னால் இருக்கிறார். அந்த மாதிரி ஆயிரத்தில் ஒருவர் தான் மலராக இருப்பார்கள். அதன் காரணமாக பெயரும் நன்றாகப் பரவிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பெண் குழந்தைகளும் மிக நல்ல குழந்தைகள். வீட்டையும் மிக நன்றாக தயார் செய்திருக்கிறார்கள். தடையை தடையற்றதாக ஆக்கி விட்டார்கள். எனவே முழு பரிவாரமும் அன்பான பரிவாரம் ஆகி விட்டது. அன்பானவர் களும் தான் கூடவே (பாபாவின்) அன்பில் ஐக்கியமாகி இருப்பவர்களும் தான். மேலும் வந்திருக்கும் அனைத்து பிராமணர்களின் ஈடுபாடு

தந்தை மற்றும் சேவையில் மிக நன்றாக இருக்கிறது. அதிக கடின உழைப்பு செய்பவர்கள் இல்லை. மிக நல்லவர்கள். சில சில இடங்களில் கடின உழைப்பு குறைவாக செய்யும் இந்த விசேஷம் இருக்கிறது. கயானாவின் விசேஷம் உழைப்பு குறைவு, ஆர்வத்தில் மிக நன்றாக இருக்கிறார்கள். எனவே அனைவருக்கும் நினைவு கொடுங்கள். மேலும் இதே விசேஷத்தின் பரிசையும் கொடுங்கள்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: சங்கம யுகத்தில் மிகப் பெரிய கஜானாவாக என்ன கிடைத்திருக்கிறது?** குஷியின் கஜானா! குஷியின் கஜானாவால் எப்பொழுதும் நிரம்பி இருங்கள். சில நேரம் குஷி அதிகம் மேலும் சில நேரம் குறைவான குஷி என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுது அழியாத குறைவில்லாத எல்லையற்ற சுஜானாவாக இருக்கிறது என்றால் சில நேரம் குறைவாக மற்றும் சில நேரம் அதிகமாக அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுதும் கஜானாவை பிராப்தி செய்வதில் ஒரே சீரான நிலையில் இருங்கள். குஷியில் இருக்கிறார்கள் என்ற இது மட்டுமல்ல ஆனால் குஷியில் ஒரே சீராக மற்றும் நிரந்தரமாக இருக்கிறார்கள் என்று இருக்க வேண்டும். வரிசை எண் இதன் ஆதாரத்தில் தான் உருவாகும். நிரந்தரம் மட்டும் இருக்கிறது. ஒரே சீரான நிலை இல்லை என்றால் கூட இரண்டாம் நம்பர் ஆகி விடு ஆனால் நிரந்தரமாக மற்றும் ஒரே சீராக அப்படி இரண்டுமே இருக்கிறது என்றால், நம்பர் ஒன் ஆகி விடும். ஒருவேளை ஏதாவது பிரச்சனையில் வந்து விடுகிறீர்கள் என்றால், குஷியின் ஊஞ்சல் தொய்வாகி விடுகிறது. வேகமாக ஆடுவதில்லை, நின்று நின்று ஆடும். எனவே எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். சங்கமயுகம் அனுபவம் செய்வதற்கான யுகம். இது தான் இந்த யுகத்தின் விசேஷம் ஆகும். எனவே இந்த யுகத்தின் விசேஷத்தின் லாபத்தை எடுங்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய பூஜையை நினைவில் வைத்து, ஒவ்வொரு காரியத்தை பூஜைக்கு உரியதாக ஆக்கக்கூடிய பரம பூஜைக்குரியவர் ஆகுக!**

குழந்தைகள் உங்களின் ஒவ்வொரு சக்தியின் பூஜை. தேவி தேவதைகளின் ரூபத்தில் நடக்கிறது. சூரிய தேவதை, வாயு தேவதை, பூமா தேவி அதே போலவே பயமற்ற நிலையின் சக்தியின் பூஜை காளி தேவியின் ரூபத்தில் இருக்கிறது. எதிர்கொள்ளும் சக்திக்கான பூஜை துர்காவின் ரூபத்தில் இருக்கிறது. திருப்தியாக இருப்பது மற்றும் திருப்தி படுத்துவதின் சக்தியின் பூஜை சந்தோஷி மாதாவின் ரூபத்தில் இருக்கிறது. காற்றிற்குச் சமமாக லேசாக இருக்கும் சக்தியின் பூஜை

பவன் புத்திரர் ஹனுமான் ரூபத்தில் இருக்கிறது. அப்படி தன்னுடைய இந்த பூஜையை நினைவில் வைத்து ஒவ்வொரு காரியத்தையும் பூஜைக்குரியதாக ஆக்குங்கள் அப்பொழுது தான் பரம் பூஜைக்குரியவர் ஆவீர்கள்.

**சுலோகன்: வாழ்க்கையில் திருப்தி மற்றும் சரளத்தன்மையின் சமநிலை வைப்பது தான் மிகப் பெரிய விசேஷம் ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 08.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபாவின் ஒரு நல்விருப்பம்!

இன்று பாப்தாதா வெற்றி இரத்தினங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்று பக்தர்கள் விஜயதசமியை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பக்தர்கள் செய்வது எரிப்பது மற்றும் குழந்தைகள் உங்களுடையது சந்திப்பைக் கொண்டாடுவது. எரித்த பிறகு சந்திப்பைக் கொண்டாட வேண்டும். பக்தி மார்க்கத்திலும் கூட இராவணனை எரித்த பிறகு அதாவது வெற்றி அடைந்த பிறகு எந்த சந்திப்பை காண்பிக்கிறார்கள்? பக்தியின் விஷயங்களையோ மிக நன்றாக தெரிந்திருக்கிறீர்கள். இராவணன் இறந்த பிறகு என்ன நிலை ஆகி விடுகிறது? அதற்கான அடையாளம் என்ன? 'பரதனை சந்திப்பது'. இது சகோதரத்துவத்தின் நிலை. சகோதரன் சகோதரனின் திருஷ்டியின் பார்வை) அடையாளம் சேவை மற்றும் அன்பு அன்பின் அடையாளமாக தீபமாலையைக் (தீபாவளியை) காண்பித்திருக்கிறார்கள். சேவையின் வெற்றிக்கான ஆதாரம் சகோதரத்துவத்தை காண்பித்திருக்கிறார்கள். இது இல்லாது தீபாவளியைக் கொண்டாட முடியாது. தீபாவளி இன்றி இராஜதிலகமும் இட முடியாது. எனவே இன்றைய நினைவாக விஜயதசமியைக் கொண்டாடுகின்றனர், இதற்கான ஆதாரம், முதலில் அஷ்டமியை கொண்டாடுவார்கள், அஷ்டமி இன்றி வெற்றி கிடையாது. ஆக நீங்கள் எதுவரை வந்து அடைந்துள்துள்ளீர்கள்? அஷ்டமியை கொண்டாடினீர்களா? நீங்கள் அனைவரும் நவதுர்கா ஆகி விட்டீர்களா? அஷ்ட சக்திகள் மற்றும் ஒரு சக்திவான்!. சர்வ சக்திவான் தந்தையுடன் அஷ்ட சக்தி சொரூபம், அந்த மாதிரி நவதுர்காவாக ஆகி விட்டீர்களா? துர்கை என்றால், தர்குணத்தை (தீயகுணத்தை) அழித்து, அனைத்து குணங்களும் நிரம்பியவராக ஆவது ! அப்பொழுது தான் தசரா கொண்டாட முடியும். அப்படி குழந்தைகள் தசராவைக் கொண்டாடினார்களா என்று பார்ப்பதற்காக பாப்தாதா வந்திருக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் நான் தசரா கொண்டாடினேனா? அல்லது அஷ்டமியை கொண்டாடினேனா என்று நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் மற்றும் ஏற்றுக் கொண்டும் இருக்கிறீர்கள். அழியாத பற்றவைக்கும் குச்சியை ஏற்றினீர்களா அல்லது சிறிது நேரம் எரியும் குச்சியை ஏற்றினீர்களா? இராவணனை எரித்தீர்களா அல்லது அனைத்து

வம்சத்தையும் எரித்தீர்களா? இராவணனை அழித்தீர்களா மற்றும் இராவணன் இராஜ்யத்தையும் அழித்தீர்களா?

இன்று சூட்சும வதனத்தில் பிரம்மாபாபாவின் ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. எந்த நேரத்தில்? (வகுப்பு நேரத்தில்) பாப்தாதாவும் குழந்தைகளின் ஆன்மீக உரையாடலைக் கேட்கிறார்கள். பெரும்பான்மையான அனைத்து குழந்தைகளும், தசராவை கொண்டாடினீர்களா என்ற கேள்வி எப்பொழுது கேட்கப்படுகிறதோ அப்பொழுது இல்லை என்பதிலும் கை உயர்த்துவதில்லை. ஆம் என்பதிலும் கை உயர்த்துவதில்லை. ஒருவேளை எழுதுகிறார்கள் என்றால் கூட பதில் தருவதிலும் மிகவும் சாதுர்யமானவர்கள். பொய்யும் எழுதுவதில்லை ஆனால் தெளிவாகவும் எழுதுவதில்லை. அனைவரிடமிருந்தும் மூன்று, நான்கு பதில்கள் வருகின்றன. மேலும் அந்த பதில்களிலிருந்தே ஏதாவது ஒரு பதிலைக் கொடுப்பார்கள். அப்படி பிரம்மாபாபாவின் ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. பிரம்மாபாபாவோ வீட்டின் கதவுகளின் திறப்பு விழாவிற்காக குழந்தைகளை அழைத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் இன்றைய கேள்விக்கான அனைவரின் பதில் காகிதத்தின் மேல் எழுதப்படவில்லை, ஆனால் மனதின் எண்ணம் மூலம் தந்தையின் எதிரில் தெளிவாக இருக்கிறது. வகுப்பு நேரத்தில் குழந்தை (தாதி) கேள்வி கேட்டார்கள். மேலும் அனைவரின் பதிலை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். பதிலின் சாரத்தையோ கூறிவிட்டோம். கூறுவதற்கும் அவசியம் இல்லை, தந்தையை விட நீங்கள் அதிகம் தெரிந்திருக்கிறீர்கள். பதிலைப் பார்த்துக் கொண்டே பிரம்மாபாபா என்ன செய்தார்? மிக நல்லதொரு விஷயத்தைக் கூறினார், பிரம்மாபாபாவின் விசேஷம் நிரம்பிய சம்ஸ்காரத்தை அறிவீர்கள். விசேஷத்தின் சம்ஸ்காரத்தின் பாகத்தைத் தான் நடித்து வந்தார். அது என்னவாக இருக்கும்? அந்த விஷயத்தின் சம்மந்தம் பிரம்மாபாபாவின் ஆரம்ப காலத்து பிரவேசத்தின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்டது. எப்பொழுது ரிசல்ட்டை பார்த்தாரோ உடன் ஒரு நொடிக்காக பிரம்மாபாபா மிகுந்த யோசனையில் ஆழ்ந்து விட்டார். இன்று எமது ஒரு விஷயத்தை நிறைவேற்ற வேண்டும் என்ன அது? என்று கூறினார். பிரம்மாபாபா கூறினார். இன்று என்னிடம் சாவியைக் கொடுத்து விடுங்கள். எந்த சாவி? அனைவரின் புத்தியை மாற்றம் செய்வதற்கான, சம்பன்னம் (முழுமை) ஆக்குவதற்கான சாவி. எப்படி தொடக்கத்தில் கூட சாவியின் போதை இருந்தது, கஜானா இருக்கிறது, சாவியும் இருக்கிறது. திறக்க மட்டும் தான் செய்ய வேண்டும். அந்த மாதிரி பிரம்மாபாபா இன்றும் சம்பன்னமாக ஆக்கும் சாவியை தந்தையிடமிருந்து வேண்டும் என்று கேட்டார். அந்தக் காட்சியை இவ்வுலகில்

கண்ணெதிரே அனுபவம் செய்யக் கூடியவர்கள் பிரம்மாபாபா மற்றும் தந்தையிடையே எந்த ஆன்மீக உரையாடல் நடந்தது என்று புரிந்து கொள்ள முடியும். இப்பொழுது பிரம்மாபாபாவிடம் சாவியை கொடுக்க முடியுமா? மேலும் பிரம்மாவிடம் தந்தை இல்லை, முடியாது என்று கூற முடியுமா? குழந்தைகளும் முடியாது என்று சொல்வதில்லை. ஆம் என்றும் சொல்வதில்லை ஆனால் பிரம்மாபாபாவிற்கு குழந்தைகளை எப்பொழுதும் சம்பன்னமானவர்களாக பார்ப்பதற்கான ஆவல் அதிகமாக உள்ளது என்பது உண்மை. ஆக வேண்டும் என்றில்லாமல், இப்பொழுதே ஆகி விட வேண்டும். எப்பொழுதெல்லாம் குழந்தைகளின் விஷபங்கள் பேசப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் பிரம்மாபாபாவின் முகம் தீப மாலை மாதிரி ஆகி விடுகிறது, அந்த மாதிரி தீவிரமான ஊக்கம் மற்றும் மாஸ்டர் கடலுக்கு சமமாக உயர்ந்த அலை உருவாகிறது. அந்த ஊக்கம் என்ற உயர்ந்த அலையில் அனைவரையும் சம்பன்னமாக ஆக்கி, தீப ஒளியில் ஏற்றி விட வேண்டும். பிரம்மாபாபாவின் சாகார சரித்திரத்திலும், பிரம்மாபாபாவிற்கு பிறந்ததிலிருந்தே ஒரு வார்த்தை பிடிக்காது என்ற இதையும் அனுபவம் செய்திருக்கிறீர்கள். அது எது? தன்னுடைய காரியத்திலும் அது பீடிக்காது, குழந்தைகள் காரியத்திலும் அது பிடிக்காது. எப்பொழுதாவது செய்து விடுவோம்' என்ற இந்த வார்த்தை பிடிக்காது. ஒவ்வொரு விஷயத்திலும் அப்பொழுதே செய்தார் மற்றும் செய்வித்தார். சேவையின் திட்டத்தில் பாருங்கள், மாற்றத்தில் பாருங்கள். இப்பொழுதே செல்லுங்கள். இப்பொழுதே செய்யுங்கள், ரயில் புறப்படும் சிறிது நேரம் தான் உள்ளது என்றாலும், செல்லுங்கள், செல்லுங்கள், ரயிலுக்கு தாமதமாகி விடும் என்று கூறுவார். அப்படி எந்த சம்ஸ்காரமாக இருந்தது. இப்பொழுதே செய்ய வேண்டும், பிறகு என்பது இல்லாமல் இருந்தது. எப்படி 'இப்பொழுதே' என்ற விசேஷ வார்த்தைதான் கேட்டீர்கள். அதே போல் இன்று கூட சூட்சும வதனத்தில் இப்பொழுதே நடக்க வேண்டும் என்ற இந்த மொழி தான் இருந்தது. இன்னும் ஒரு சிரிப்பூட்டும் விஷயத்தைக் கூறுகிறோம், அது என்னவாக இருக்கும்? பிரம்மாபாபா அவரே சம்பன்னமாக இருக்கும் காரணத்தினால் குழந்தைகள் எப்பொழுதாவது என்று ஏன் கூறுகிறார்கள் என்று பார்க்க முடிவதில்லை. எனவே அடிக்கடி தந்தையிடம் இவர்கள் ஏன் மாறுவதில்லை, ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று கூறுகிறார். இதுவரையிலும் இதை ஏன் கூறுகிறார்கள்? அவருக்கு மிகுந்த ஆச்சர்யமாக இருக்கிறது. நாடகத்தின் விஷயம் வேறாக இருந்தது, இது ரமணீகரமான சிரிப்பூட்டும் விஷய மாகும். நாடகத்தை தெரிந்திருக்கவில்லை என்று அப்படியில்லை ஆனால் பார்த்து பார்த்து, அன்பின் காரணமாக தந்தையுடன் சிரித்துக் கொள்கிறார். தந்தையுடன் சிரிப்பூட்டும் விஷயங்களைப் பகிர்ந்து

கொள்வதற்கோ அனுமதி இருக்கிறது தான் இல்லையா. தந்தையும் புன்முறுவலிட்டுக் கொள்கிறார். அப்படி இப்பொழுது பிரம்மாபாபா என்ன விரும்புகிறார் என்பதையோ தெரிந்து விட்டீர்கள் இல்லையா? இப்பொழுது விடுபட்டவராகி, முக்திதாமத்தின் வாசலைத் திறப்பதற்காகத் தந்தையுடன் துணைவர்களாக ஆகுங்கள். இது தான் குழந்தைகள் மேல் உள்ள பிரம்மாபாபாவின் நல் விருப்பம் ஆகும். முதலில் தந்தையின் நல் விருப்பம் என்ற தீபத்தை ஏற்றி தீபாவளி கொண்டாடுங்கள். இந்த ஒரு தீபத்தின் மூலமே தீபாவளி இயல்பாக ஆகி விடும். புரிந்ததா? நல்லது. பிறகு பரதனின் சந்திப்பின் இரகசியத்தைக் கூறுவோம். நல்லது.

அந்த மாதிரி பாப்தாதாவின் உயர்ந்த எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய அழியாத திட எண்ணம் என்ற தீக்குச்சியை ஏற்றி அழியாத வெற்றி அடைபவராக ஆகக்கூடிய, சாகார தந்தைக்குச் சமமாக, எப்பொழுதும் 'இப்பொழுதே' என்ற பாஷையை காரியத்தில் கொண்டு வரக்கூடிய, பின்னர் எப்பொழுதாவது என்பதை அழித்து, அனைவருக்கும் சாகார தந்தையின் உருவம் மற்றும் முகத்தைக் காண்பிக்கக்கூடிய அந்த மாதிரி வெற்றி இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**குமாரிகளுடன்**: குமாரிகளோ பறக்கும் பறவைகள், ஏனென்றால், குமாரிகள் எப்பொழுதும் இலேசாக இருப்பவர்கள். குமாரி என்றால், எந்த சுமையும் இல்லாதவர். இலேசான பொருள் மேலே பறக்கும் இல்லையா. எப்பொழுதும் மேலே செல்பவர் என்றால் உயர்ந்த நிலைக்குச் செல்பவர். நீங்கள் அப்படித் தான் இல்லையா? எதுவரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள். யார் தந்தையின் ஸ்ரீமத்தின் அனுசாரம், அதே கோட்டிற்கு உள்ளே எப்பொழுதுமே இருப்பவர்களோ அவர்கள் எப்பொழுதும் மேலே பறந்து கொண்டே இருப்பார்கள். அப்படி கோட்டிற்கு உள்ளே இருப்பவர்கள் யார்? உண்மையான சீதை. அப்படி நீங்கள் அனைவருமே உண்மையான சீதைகள் தான் இல்லையா? உறுதியாகவா? கோட்டிற்கு வெளியே கால் வந்தது என்றால், இராவணன் வந்து விடுவான். யாராவது காலை வெளியில் வைத்தார்கள் என்றால், நான் கடத்தி சென்று விட வேண்டும் என்று இராவணன் காத்துக் கொண்டிருக்கிறான். அப்படி குமாரிகள் என்றால் உண்மையான சீதைகள். இங்கிருந்து வெளியில் சென்ற பிறகு மாறி விடாதீர்கள். ஏனென்றால், மதுபன்னில் வாயுமண்டலத்தின் வரதானத்தின் பிரபாவம் இருக்கிறது. இங்கு அதிகப்படியான லிஃப்ட் கிடைக்கிறது. அங்கே கடின உழைப்பு செய்து நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கும். குமாரிகளைப் பார்த்து பாப்தாதாவிற்கு ஆயிரம் மடங்கு

குஷி ஏற்படுகிறது. ஏனென்றால், கசாப் கடைகாரனிடமிருந்து தப்பித்து விட்டார்கள். எனவே குஷி இருக்கும் இல்லையா? நல்லது. இப்பொழுது திடமான உறுதிமொழி எடுத்துக் கொண்டு செல்லுங்கள்.

**பாண்டவர்களுடன்**: அனைத்து பாண்டவர்களும் சக்தி சொரூபமாக இருக்கிறீர்கள் இல்லையா? சக்தி மற்றும் பாண்டவர்கள் இணைந்திருக்கிறீர்களா? சர்வ சக்திவானின் எதிரில் சக்தி ஆகி விடுகிறார்கள் மற்றும் தனது பங்கைச் செய்வதில் பாண்டவர்கள். சர்வ சக்திவானை சக்தியாகி, நினைவு செய்யவில்லை என்றால். மகிழ்ச்சி ஏற்படாது. ஆத்மா சீதை அவர் ராம் ! அப்படி இந்த பங்கை செய்வதிலும் மிகுந்த மகிழ்ச்சி இருக்கிறது. இந்த பங்கு தான் சங்கமயுகத்தின் அனைத்தையும் விட அதிசயமான ஒன்றாகும். இதில் பாண்டவர்கள் சக்திகளாகி விடுகிறார்கள் மற்றும் சக்திகள் சகோதரர் ஆகி விடுகிறார்கள். இதிலிருந்து தேக உணர்வை மறந்து விட்டார்கள் என்பது நிருபணமாகிறது. ஆத்மாவில் இரண்டு சம்ஸ்காரமும் இருக்கிறது ஏனென்றால், சில நேரம் ஆணின் பங்கையும், சில நேரம் பெண்ணின் பங்கையும் செய்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சங்கமயுகத்தில் காதலி ஆகி காதலனை நினைவு செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி இருக்கிறது. சக்தியாகி சர்வ சக்திவானை நினைவு செய்ய வேண்டும். சீதையாகி ராமை நினைவு செய்ய வேண்டும்.

**தாய்மார்களுடன்**: சக்தி சேனை எப்பொழுதும் ஆயுதங்கள் தரித்தவர்கள் தான் இல்லையா? சக்திகளின் அலங்காரமே ஆயுதங்கள் தான்! யார் எப்பொழுதுமே ஆயுதம் ஏந்தியவரோ அவர் தான் எப்பொழுதும் மகாதானி, வரதானியாக இருக்கிறார். அனைத்து ஆயுதங்களும் தன்னிடம் எப்பொழுதும் இருக்கின்றனவா? சில நேரம் மட்டுமல்ல, எப்பொழுதுமே ! சக்திகளின் தபஸ்யா சர்வ சக்திவானை இங்கே கொண்டு வந்தது. இப்பொழுது சக்திகள் சர்வ சக்திவானை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்த) செய்ய வேண்டும். ஒவ்வொரு அடியிலும் வரதானங்கள் கொடுத்து கொண்டே செல்லுங்கள். சுபபாவனையுடன் அனைவருக்கும் வரதானம் கொடுக்க வேண்டும்.

சுகக்கடலின் குழந்தைகள் எப்பொழுதும் சுகசொரூபத்தில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதும் சந்திப்பு கொண்டாட்டத்தின் குஷியில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்கள் தான் இல்லையா? உணவு சாப்பிட்டுக் கொண்டும், அருந்திக் கொண்டும், சென்று கொண்டும் கூட எண்ண அளவில் கூட சோகம் மற்றும் துக்கத்தின் உணர்வு வர வேண்டாம். எப்பொழுதும் சுகசொரூபமானவர்கள்.

துக்கத்திற்கு விவாசுரத்து கொடுப்பவர்கள். ஏனென்றால், துக்கமான உலகில் அரைக் கல்பம் இருந்தோம். இப்பொழுதோ சுகமாக இருப்பதற்கான வாய்ப்பு. சுகக்கடல் கிடைத்திருக்கிறார் என்றால், எதற்காகத் துக்கம் இருக்கும். எப்பொழுதுமே சுகமானவர் என்ற இந்த வரம் தான் தந்தையிடமிருந்து நிரந்தரமாக கிடைத்து விட்டது. நல்லது.

**கேள்வி: எப்பொழுது ஸ்தூல சாதனம் முடிவடைந்து விடுமோ அந்த நேரம் சேவை செய்வதற்காக இப்பொழுதிலிருந்தே எந்த விஷயத்தின் மேல் கவனம் வேண்டும்?**

பதில்: தன்னுடைய எண்ணங்களை சக்திசாலியாக ஆக்குவதில் கவனம் வேண்டும். அதன் மூலம் அதனுடைய பிரபாவம் வெகு தூரம் வரை சென்றடைய வேண்டும். எண்ணத்தில் அந்த அளவு சக்தி வந்து விட வேண்டும். அதன் மூலம் நீங்கள் இங்கே எண்ணத்தை உருவாக்கினீர்கள், மேலும் அங்கு பலன் கிடைத்தது. எப்படி தந்தை பக்தியின் பலனைக் கொடுக்கிறார், அதே போல் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஈஸ்வரிய குடும்பத்தில் சகயோகத்தின் பலனைக் கொடுங்கள், மேலும் அந்த பலனின் விதவிதமான அனுபவம் செய்யுங்கள். தற்பொழுது இம்மாதிரி சேவையைத் தொடங்குங்கள்.

**கேள்வி: பாப்தாதா மூலமாக எந்தெந்த அழியாத கஜானாக்கள் கிடைத்திருக்கின்றன? அந்த கஜானாக்கள் மூலமாக என்ன பிராப்திகள் ஆகியது?**

பதில்: 1) முதலில் மிகப்பெரிய கஜானாவான ஞானச் செல்வம். அதன் மூலம் பழைய உடல் மற்றும் உலகத்திலிருந்து விடுபட்டு ஜீவன் முக்தி நிலையின் பிராப்தி கிடைக்கிறது. மேலும் முக்திதாமம் செல்கிறோம். 2) யோகாவின் கஜானா மூலம் அனைத்து சக்திகளும் பிராப்தி ஆகிறது. 3) தாரணை செய்யும் கஜானா மூலம் அனைத்து குணங்களின் பிராப்தி ஆகிறது. 4) சேவையின் கஜானா மூலம் ஆசீர்வாதங்களின் கஜானா, குஷியின் கஜானா பிராப்தி ஆகிறது. 5) சங்கமயுகத்து நேரத்தின் கஜானா அனைத்தையும் விட மிகப்பெரிய விலைமதிக்க முடியாத கஜானா, அதன் மூலம் அனைத்து கஜானாக்களையும் சேமிக்க முடிகிறது.

**கேள்வி: சங்கமயுகத்தின் காலம் ஏன் விலைமதிக்க முடியாதது?**

பதில்: ஏனென்றால், சங்கமயுக காலத்தில் தான் பரமாத்ம தந்தை மற்றும் பரமாத்ம குழந்தைகளின் இனிமையான சந்திப்பு நடக்கிறது. அது வேறு எந்த யுகத்திலேயும் கிடையாது. 2) சங்கமயுக காலத்தில் தான் பாப்தாதா மூலமாக அனைத்து

கஜானாக்களும் பிராப்தி ஆகின்றன. மேலும் வேறு எந்த யுகத்திலும் சேமிப்பு கணக்கு, சேமிப்பு செய்வதற் கான வங்கியே இல்லை. 3) சங்கமயுக காலத்தில் ஒரு பிறவியில் அனேக பிறவிகளுக்கான கஜானாவை சேமிக்க முடியும்.

**கேள்வி: கஜானாக்களை கொடுப்பவர் ஒருவர், அனைவருக்கும் ஒரே மாதிரி ஒரே நேரத்தில் கொடுக்கிறார், ஆனால் கஜானாவை தாரணை செய்வதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். ஏன்?**

பதில்: ஏனென்றால், தாரணை செய்வதில் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்ற முயற்சி இருக்கிறது. ஒன்றோ தன்னுடைய முயற்சி மூலம் பிராப்தியை உருவாக்க முடியும், இரண்டாவது எப்பொழுதும் சுயம் தான் திருப்தியாக இருப்பது மற்றும் அனைவரையும் திருப்திப்படுத்துவது, அப்படி திருப்தியின் விசேஷம் மூலம் கஜானாவை சேமிக்க முடியும். மேலும் மூன்றாவது, சேவை மூலமாக குஷியின் கஜானாவை பிராப்தி செய்ய முடியும்.

**கேள்வி: உறவு தொடர்பில் வந்து கொண்டே எந்த விஷயத்தின் கவனம் இருந்தால் சேவை யில் புண்ணியம் மற்றும் ஆசீர்வாதங்களின் கணக்கை மிகச் சுலபமாக சேமிப்பு செய்ய முடியும்?**

பதில்: எப்பொழுதும் தான் ஒரு கருவி என்ற உணர்வு, பணிவாக இருப்பது, சுயநல மற்று இருப்பது, ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் இருந்தது என்றால், சேவையில் அல்லது உறவு தொடர்பில் வந்து கொண்டே புண்ணியத்தின் கணக்கு மற்றும் ஆசீர்வாதங்களின் கணக்கை மிக சுலபமாக சேமிக்க முடியும். நல்லது.

**கேள்வி: எந்த வார்த்தை பிராமணர்களின் பாஷையினுடையதாக இருக்க முடியாது?**

பதில்: விரும்பாவிட்டாலும் நடந்து விடுகிறது என்ற இந்த வார்த்தையை மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்கள் சொல்ல முடியாது. விருப்பம் ஒன்று மற்றும் செய்யும் காரியம் இன்னொன்றாக இருக்கிறது என்றால் சிவசக்தி என்று கூற மாட்டோம். சிவசக்தி என்றால் அடிமை அல்ல, அதிகாரி. அடிமைத்தனத்தின் வார்த்தைகள் பிராமண பாஷையினுடையது. அல்ல.

**கேள்வி: தந்தையின் நினைவில் மூழ்கியிருப்பது அக்னியின் காரியம் செய்கிறது, எப்படி?**

பதில்: எப்படி அக்னியில் ஏதாவது பொருளை போட்டீர்கள் என்றால் அதனுடைய பெயர், ரூபம், குணம் அனைத்தும் மாறி விடுகிறது. அதே போல் எப்பொழுது தந்தையின் நினைவில் மூழ்கியிருக்கும் அக்னியில் இருக்கிறீர்கள் என்றால் பரிவர்த்தனை ஆகி விடுகிறீர்கள் தான் இல்லையா.மனிதனிலிருந்து பிராமணன் ஆகி விடுகிறீர்கள், பிறகு பிராமணனி லிருந்து பரிஷ்தா ஆகி தேவதை ஆகி விடுகிறீர்கள். ஆக எப்படி பரிவர்த்தனை ஆனது? மூழ்கியிருக்கும் அக்னி மூலமாக தன்னுடையது என்பது எதுவும் இல்லை. மனிதன், மனிதனாக இருக்கவில்லை. பரிஷ்தா ஆகி விட்டார். எப்படி பச்சை மண்ணை அச்சில் போட்டு நெருப்பில் போடுகிறார்கள் என்றால் செங்கல்லாக ஆகி விடுகிறது அதே போல் இதுவும் பரிவர்த்தனை ஆகி விடுகிறது எனவே இந்த நினைவைத் தான் ஜுவாலா ரூபம் என்று கூறுவது. ஜுவாலாமுகியும் பிரசித்தியாக இருக்கிறது என்றால் ஜுவாலாதேவி மற்றும் தேவதைகளும் பிரசித்தியாக இருக்கிறார்கள். நல்லது.

**வரதானம்: ஒரு தந்தையில் முழு உலகத்தை அனுபவம் செய்யக்கூடிய எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுக!**

யார் தந்தையை மட்டும் தன்னுடைய உலகம் என்று நினைக்கிறார்களோ அவர்கள் தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர்களாக ஆக முடியும். யாருக்கு தந்தை தான் உலகம் என்றிருக்கிறதோ, அவர் தன்னுடைய உலகத்தில் மட்டும் தான் இருப்பார். மற்றதில் செல்ல மாட்டார் என்றால் சுலபமாகவே விலகி விடுகிறார்கள். உலகத்தில் நபர் மற்றும் பொருள்கள், சாதனங்கள் அனைத்தும் வந்து விடுகிறது. தந்தையின் செல்வமாக இருப்பது என்னுடைய செல்வம். இந்த நினைவில் இருப்பதினால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆகி விடுவார். யாரையும் பார்த்தும் பார்க்காமல் இருப்பார்கள். தென்படவே மாட்டார்கள்.

**சுலோகன்: சக்திசாலியான நிலையை அனுபவம் செய்வதற்காக ஏகாந்தம் மற்றும் ரமணீகரத்தின் சமநிலை வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உள்நோக்குப் பார்வை உடையவர் தான் எப்பொழுதும் பந்தனமற்றவராகவும், யோக சொரூபமானவராகவும் இருப்பார்!

இன்று பாப்தாதா தன்னுடைய நிரந்தர சகயோகி, நிரந்தர சக்தி சொரூப, எப்பொழுதும் விடுபட்டிருக்கும் மற்றும் யோக சொரூபமான விசேஷமான குழந்தைகளை அமிர்தவேளையிலிருந்து விசேஷ ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் இரண்டு விஷயங்களை விசேஷமாகப் பார்த்தார். ஒரு விஷயம் விடுபட்டவராக (முக்த்) எந்த அளவு ஆகியிருக்கிறார். இரண்டாவது விஷயம் -ஜீவன்முக்த்தாக எந்த அளவு ஆகியிருக்கிறார்? ஜீவன்முக்த் என்றால் யோக சொரூபமானவர்! பாப்தாதாவிடமும் குழந்தைகளின் மனதின் எண்ணங்களின் கோடுகள் ஒவ்வொரு விநாடியும் மிகத் தெளிவாகத் தென்படுகின்றன. கோடுகளைப் பார்த்து புன்முறுவலிட்டுக் கொண்டே பாப்தாதா விசேஷமாக ஒரு விஷயத்தின் சித்திரத்தை பார்த்தார். அந்த சித்திரத்தில் இரண்டு விதமான லட்சணங்களைப் பார்த்தார்.

ஒன்று எப்பொழுதும் உள்நோக்குப் பார்வை உடையவர். அதன் காரணமாக சுயம் அவரும் எப்பொழுதும் சுகக்கடலில் மூழ்கிக் கொண்டே மற்ற ஆத்மாக்களுக்கும் சுகத்தின் எண்ணம் மற்றும் வைப்ரேஷன் (எண்ண அலைகள்) மூலமாக, உள்உணர்வு மற்றும் வார்த்தை மூலமாக, சம்மந்தம் மற்றும் தொடர்பு மூலமாக எப்பொழுதும் சுகத்தின் அனுபவத்தை செய்விக்கிறார்.

இரண்டாவது -வெளிமுகமாக இருப்பவர். அவர்கள் எப்பொழுதும் வெளிமுகமாக இருக்கும் காரணத்தினால், வெளிமுகம் என்றால் உடல் உணர்வு, நபர்களின் எண்ணம், சுபாவம் மற்றும் தேக உணர்வின் வைப்ரேஷன், எண்ணம், வார்த்தைகள் மற்றும் சம்மந்தம், தொடர்பு மூலமாக ஒவ்வொருவரையும் வீணானதின் பக்கம் திசை திருப்பக்கூடிய எப்பொழுதும் அற்ப காலத்தின் லட்டு சாப்பிட்டு பிறரையும் இதையே சாப்பிடக் கொடுக்கக்கூடி எப்பொழுதும் ஏதேனும் வித

விதமானசிந்தனையில் இருக்கக்கூடிய உள்மனதின் சுகம், சாந்தி மற்றும் சக்தியிலிருந்து எப்பொழுதும் விலகியிருக்கக்கூடிய, அவ்வப்போது சிறிதளவு மட்டுமே குஷியை அனுபவம் செய்யக்கூடிய அந்த மாதிரி வெளிமுகமானவர்களையும் பார்த்தோம்.

தீபாவளி வந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? வியாபாரிகளோ தங்களது அல்வப்போது கணக்கைப் பார்ப்பார்கள். பழைய கணக்கையும், புதிய கணக்கையும் பார்ப்பார்கள். தந்தை என்ன பார்ப்பார்? தந்தையும் ஒவ்வொரு குழந்தையின் பழைய கணக்குகள் எதுவரை முடிவடைந்து இருக்கிறது, புது கணக்கில் என்னென்ன சேமித்திருக்கிறார்கள் என்ற இந்தக் கணக்கைத் தான் பார்க்கிறார். அப்படி இன்று இந்த வேறுபாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஏனென்றால் பிரம்மாபாபா இந்த நேரம் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நேற்று கூட கூறியிருந்தோம் (திறப்பு விழாவிற்காக) திறப்பு விழாவிற்காக என்ன தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள்? யார் மூலமாவது திறப்பு விழாவை செய்விக்கிறீர்கள் என்றால், என்ன செய்வீர்கள்? எந்தப் பொருட்களை வைப்பீர்கள். திறப்பு விழாவிற்காக எந்த ரிப்பனை அல்லது மலர் மாலையை கட்டுகிறீர்களோ முதலில் அதை கத்திரிக்கோலால் வெட்டுவீர்கள். இவ்வாறு திறப்பு விழா நடக்கிறது. மேலும் அந்த கத்திரிக்கோலைக் கூட எங்கே வைக்கிறீர்கள்? மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தட்டில் வைக்கிறீர்கள். இதன் மூலம் என்ன நிரூபணம் ஆகிறது? பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கு முன்பு தன்னை குணங்களின் மலர்களால் அலங்கரிக்க வேண்டும். பின்பு இயல்பாகவே பந்தனமற்றவராக ஆகி விடுவீர்கள், ஆக திறப்பு விழாவிற்கான ஏற்பாட்டை எப்படி செய்ய வேண்டும்? ஒரு பக்கம் தன்னை சம்பன்னம் முழுமை) ஆக்க வேண்டும், ஆனால் சம்பன்னம் ஆவதற்கு முன்பு வெளிமுகமான பந்தனங்களிலிருந்து விடுபட வேண்டும். அந்த மாதிரி தயாராகியிருக்கிறீர்களா? வெளிமுகமாக இருப்பதின் ருசி வெளியிலிருந்து மிக நன்றாக கவர்ந்திழுக்கும். எனவே அதற்கு கத்திரி போடுங்கள். இந்த ருசி தான் சூட்சும பந்தனம் ஆகி வெற்றியின் லட்சியத்திலிருந்து தூரமாக்கி விடுகிறது. புகழ், பெருமை கிடைத்து விடுகிறது ஆனால் 'பிரத்யக்ஷம்' மற்றும் 'வெற்றி' கிடைக்க முடியாது. எனவே இப்பொழுது திறப்பு விழாவிற்கான தயார் செய்யுங்கள். திறப்பு விழாவிற்கு தயார் செய்பவர்கள் எப்பொழுதும் மலர்களின் தோட்டத்தில் பாப்தாதா மூலமாக நடப்பட்ட பூச்செடிகள், மலர்களின் சிறப்புக்களின் நறுமணத்தை எடுப்பதில், மேலும் அந்த நறுமணத்தை நுகர்வதில் எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். அதாவது அவருடைய 'வாழ்க்கை' என்ற தட்டில் எப்பொழுதும் மலரே மலர் தான் நிரம்பி இருக்கும். அந்த மாதிரி

தயாராகியிருக்கிறீர்களா? இதில் நம்பர் ஒன் ஆக யார் செல்வீர்கள்? மதுபனைச் சேர்ந்தவர்களா அல்லது டெல்லியைச் சேர்ந்தவர்களா? உயர்ந்த பதவி கிடைக்கும். பாப்தாதாவுடன் சேர்ந்து திறப்பு விழா செய்பவர்கள்,

இதை விட பெரிய பாக்கியம் வேறு ஏதாவது இருக்கிறதா? சமமாக (பாபாவிற்கு) இருக்கும் ஆத்மாக்கள் தான் உடன் சேர்ந்து திறப்பு விழா செய்வார்கள். திறப்பு விழா செய்வது என்றால், நிரந்தரமாக சூட்சும வதனவாசி ஆவது அல்லது மூலவதனவாசி ஆவது என்று அப்படி நினைக்கவில்லையே? பிரம்மாபாபாவுடன் மூலவதன நிவாசியாக அனைவரும் ஆவார்களா அல்லது குறைந்தவர்கள் தான் ஆவார்களா? என்ன நினைக்கிறீர்கள்? அனைவரும் சேவை ஸ்தானத்தை (சென்டர்) விட்டு விட்டு உடன் செல்வீர்களா? உடன் செல்வீர்களா அல்லது நின்று விடுவீர்களா? (உடன் செல்வோம்). நல்லது. பிரம்மாபாபா சூட்சும வனத்திற்குச் சென்று விட்டார். பிறகு நீங்கள் இங்கேயே ஏன் அமர்ந்து விட்டீர்கள்? அப்படியானால் என்ன செய்வீர்கள்? (தாதியுடன்) உடன் செல்வோம், நல்லது. தீதி, தாதி இருவருடன் செல்வீர்களா? என்ன ஆகும்? இதுவும் விசித்திர இரகசியம் ஆகும்! அப்படி ஏதாவது நிறைவேறாத ஆசைகள் இருந்து விடவில்லையே? (சங்கமயுகம் பிடித்திருக்கிறது) பாப்தாதாவே சென்று விடுவார். இருந்தும் இங்கேயே இருப்பீர்களா? எதுவரையிலும் இருக்க வேண்டும்? உடன் (பாபாவுடன்) செல்பவரோ தர்மராஜிற்கு டாடா காண்பிப்பார், தர்மராஜிடம் செல்லவே மாட்டார். நல்லது. தந்தையோ தெளிவான கணக்கைப் பார்க்க விரும்புகிறார். கொஞ்சமாவது பழைய கணக்கு அதாவது வெளிமுகத்தின் கணக்கு எண்ணம் மற்றும் சம்ஸ்கார ரூபத்தில் இருந்து விடக்கூடாது. எப்பொழுதும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட மற்றும் யோக சொரூப, இந்த வெளிமுகமான வாயுமண்டலத்தை அகற்றுவதற்காக இவ்வருடம் விசேஷமாக சமிக்ஞை தருகிறோம். சேவை செய்யுங்கள், அதிகமாகச் செய்யுங்கள் ஆனால் வெளிமுகமானவரிலிருந்து உள்முகமானவராகிச் செய்யுங்கள். அது உள்நோக்குப் பார்வை உடைய முகம் மூலம் உருவாகும். சேவையில் வெளிமுகத்தில் அதிகம் வந்து விடுகிறீர்கள். எனவே சேவை நல்லது தான், சேவை அதிகமாக செய்கிறார்கள். இது பெயரை நாலாபுறங்களிலும் பரவ மட்டும் செய்விக்கிறது. இவர்களுடைய தந்தை மிக நல்லவர், தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று வெளிப்படுத்துவதின் (பிரத்யக்ஷத்தின்) வெற்றி குறைவாக இருக்கிறது. எனவே வெளிமுகமாக இருப்பதின் ரிசல்ட்டாக அதிகம் பாராட்டுவார்கள் ஆனால் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக ஆக மாட்டார்கள் என்று கூறியிருந்தோம். 'தந்தையின் குழந்தையாக ஆகி விட வேண்டும்' என்ற இது தான் மகிழ்ச்சி நிறைந்தவர் ஆவது.

அந்த மாதிரி எப்பொழுதும் உள்நோக்குப் பார்வையுடைய, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருக்கும். மற்ற ஆத்மாக்களையும் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் தன்னை குணம் நிரம்பியவராக, தந்தைக்குச் சமமானவராக, எப்பொழுதும் சுகக்கடலில் மூழ்கியிருக்கும். எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டில்லி மண்டலம்:** (1) பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளும் மிகப் பிரியமானவர்கள். ஏனென்றால். பாப்தாதா விசேஷங்களின் ஆதாரத்தில் நாடகத்தின் அனுசாரம் தேர்ந்தெடுத்து இந்த பிராமண குடும்பத்தின் பூச்செண்டை உருவாக்கியிருக்கிறார். இது சைத்தன்ய மலர்களின் பூச்செண்டு தான் இல்லையா? ஒவ்வொரு மலரின் விசேஷம், வண்ணம் ரூபம் அதனதனுடையதாக இருக்கும். சிலவற்றில் நறுமணம் அதிகமாக இருக்கும். சிலவற்றில் வண்ணம், ரூபம் பூச்செண்டில் அலங்கரிப்பதற்கானதாக இருக்கும் ஆனால் இரண்டுமே அவசியம் தான்! ரோஜா மலர்களால் மட்டுமே பூச்செண்டை உருவாக்குங்கள், அடுத்து பலவகையான மலர்களாலானதையும் உருவாக்குங்கள். அதில் எது அழகாக இருக்கும்? எனவே பல வகைகளும் தேவை ஆனால் ரோஜா மலர்களையோ எப்பொழுதும் மத்தியில் வைப்பார்கள் மற்றும் மற்ற பல்வேறு வகையான மலர்களையும் ஓரங்களில் வைப்பார்கள். அப்படி நான் யார்? இதை ஒவ்வொருவரும் தன்னைத் தானே தெரிந்திருக்கிறீர்கள். பாப்தாதாவின் எல்லைக்கப்பாற்பட்ட மலர் செண்டில் என்னுடைய இடம் எங்கிருக்கிறது என்ற அதையும் தெரிந்திருக்கிறீர்கள். ஏனென்றால், மலர்செண்டின் உள்ளேயோ இருக்கிறீர்கள் இல்லையா? இதுவோ உறுதி தான்! எனவே தான் மதுபன்னின் உள்ளே வந்திருக்கிறீர்கள். டில்லியின் பாண்டவ பவனின் பாண்டவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? நினைவுச்சின்னத்தில் கூட பாண்டவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற இந்த செய்தியைத் தான் கேட்டார்கள் இல்லையா. பாண்டவ பவன் அடுத்த மதுபன். அப்படி பாண்டவ பவனில் இருப்பவர்கள் சேவைக்கான என்ன திட்டத்தை உருவாக்கி கொண்டிருக்கிறா அனைவரின் சேவையின் காரணமாக பாண்டவ பவனின் பக்கம் செல்லும் அளவிற்கு அந்த மாதிரி ஏதாவது சேவை செய்யுங்கள், இது புது விஷயம் இல்லையா? அந்த மாதிரி ஏதாவது திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? இவ்வுலகில் பாண்டவ பவன் தான் விசேஷ பவன் ஆகும். அப்படி விசேஷத்தில்

வி.ஐ.பி-யின் ஸ்தானம் ஆகி விட்டது என்றால், எப்படி வி.ஐ.பி-யின் ஸ்தானமாக இருக்கிறதோ அப்படி வி.ஐ.பி-களின் சேவையும் நடக்க வேண்டும் இல்லையா. டெல்லி வி.ஐ.பி-க்களின் நகரம். மேலும் ஸ்தானமும் வி.ஐ.பி இடம், மேலும் செய்பவர்கள் நீங்களும் நல்ல மகாவீர் வி.ஐ.பி-க்கள். எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்? தன்னுடைய தினசரி நடவடிக்கைகளை அந்த மாதிரி உருவாக்குங்கள். இப்பொழுது பாருங்கள் இங்கே (மதுபனில்) எவ்வளவு பெரிய காரியம் நடக்கிறது. தினசரி நடவடிக்கைகளை உருவாக்கியதின் காரணமாக நாலாபுறங்களின் காரியத்தில் வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். சேவை அதிகரித்து கொண்டிருக்கிறது, ஆனால் தினசரி செயல்பாடுகளை உருவாக்கிய காரணத்தினால் அனைத்து காரியங்களும் சரியாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த கவனம் இருக்கிறது. காலையிலிருந்து இரவு வரைக்குமான தன்னுடைய நிச்சயிக்கப்பட்ட நிகழ்ச்சியின் தினசரி டைரியை உருவாக்குங்கள். ஏனென்றால் நீங்கள் வெளியுலக ஆத்மாக்கள் இல்லை, பொறுப்பான ஆத்மாக்கள். உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்கள், அப்படி எவ்வளவு பெரிய மனிதனாக இருப்பாரோ, அவருடைய தினசரி நடவடிக்கைகள் முன்பாகவே உருவாக்கப்படும். பெரிய மனிதரின் அடையாளம், மிகச் சரியாக இருப்பது! மிகச் சரியாக இருப்பதற்கான சாதனம் தினசரி நடவடிக்கைகளை உருவாக்குவது. ஒரு நபர் பத்து நபர்களின் காரியத்தைச் செய்ய முடியும். ஏற்கனவே உருவாக்கியதனால் நேரம், சக்தி மிச்சமாகி விடும். இதன் காரணமாக ஒன்றிற்குப் பதிலாக பத்து காரியம் நிறைவேறிவிடுகிறது. நல்லது -எப்பொழுதும் திருப்தியாக இருக்கும் ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? எப்பொழுதும் தந்தையுடன் இருக்கிறீர்கள். அதாவது எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்கள். தந்தை மற்றும் நீங்கள் எப்பொழுதும் இணைந்திருக்கிறீர்கள் என்றால் அவ்வாறு இணைந்திருப்பதின் சக்தி எவ்வளவு பெரியது ஒரு காரியத்திற்குப் பதிலாக ஆயிரம் காரியங்களைச் செய்ய முடியும். ஏனென்றால், ஆயிரம் புஜங்கள் உடைய தந்தை உங்களுடன் இருக்கிறார்.

**2) அனைவரும் சகஜயோகிகள் தான் இல்லையா?** தந்தையினுடையவர் ஆவது என்றால், சகஜயோகி ஆவது. ஏனென்றால், குழந்தை என்றால் பாக்கியசாலி, குழந்தைகளைத் தவிர தந்தைக்கு வேறு என்ன தான் இருக்கிறது? தாய் இருந்த போதிலும் பிராப்திக்கான ஆதாரம் தந்தை அன்பின் சம்மந்தத்தில் தாய் நினைவில் வருவார். பிராப்தியின் சம்மந்தத்தில் தந்தை நினைவில் வருவார். யோகா செய்ய வேண்டும் என்பதில்லாமல். விரும்பாவிட்டாலும் கூட ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமே பார்வையில் வர வேண்டாம். தந்தையினுடையவர் ஆவது என்றால் சகஜயோகி ஆவது. நல்லது.

**3) சகஜ முயற்சியாளர் மற்றும் சகஜயோகி குழந்தைகளின் முக்கிய அடையாளங்கள்:**

1) சகஜ முயற்சியாளர் என்றால், இமயமலை மாதிரி வந்திருக்கும் பிரச்சனைகளையும் பறக்கும் கலையின் ஆதாரத்தில் ஒரு நொடியில் கடந்து அனைத்து பிராப்திகளை சகஜமாக அடைபவராக இருப்பார்.

2) எப்பொழுதும் தற்சமயத்து மற்றும் எதிர்காலத்து பிராப்தியை அடைவதின் அனுபவியாக இருப்பார். அவர்களுக்கு பிராப்தி, எப்படி இந்த ஸ்தூல கண்கள் மூலமாக ஸ்தூல பொருள் தெளிவாக தென்படுகிறதோ அதே போல் எப்பொழுதும் தெளிவாகத் தென்படும்.

3) சகஜ முயற்சியாளர் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு அதிகமாக வருமானத்தின் அனுபவம் செய்வார். எந்தவொரு சக்தியிலிருந்து, எந்தவொரு குணத்தின் கஜானாவிலிருந்து, ஞானத்தின் பாய்ன்ட்டின் (துளியின்) கஜானாவிலிருந்து, குஷியிலிருந்து, போதையிலிருந்து ஒருபொழுதும் காலியாக இருக்க மாட்டார்.

4) சகஜ முயற்சியாளர் சென்று கொண்டிருக்கும் மார்க்கத்தில் ஒருபொழுதும் கீழே விழ மாட்டார். மேலும் மார்க்கம் வளைந்து நெளிந்திருக்கிறது என்று சொல்லி, விழுந்து காயப்படுத்திக் கொள்ள மாட்டார். அவர் வழிகாட்டியாகி வழியை கலபமாகக் கடந்து செல்வார் மற்றும் பிறரையும் கடந்து செல்ல வைப்பார்.

5) அவர் அன்பில் இருக்க மட்டும் மாட்டார், ஆனால் அன்பிலேயே ஐக்கியமாகி இருப்பார். ஐக்கியமாகி இருப்பது என்றால் மூழ்கியிருப்பது. மூழ்குவது என்றால் சமம் ஆவது. அவர் சுலபமாகவே நாலாபுறங்களின் எதிர்மறை அதிர்வலைகளிலிருந்து வாயுமண்டலத்திலிருந்து விலகி இருப்பார்.

6) சகஜ முயற்சியாளர் ஒருபொழுதும் அலட்சியமானவராக இருக்கமாட்டார். அவர் எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்வார். அந்த மாதிரி சகஜ முயற்சியாளர் தான் சகஜயோகி வாழ்க்கையின் அனுபவம் செய்ய முடியும். சகஜ முயற்சி என்றால், அலட்சியம் இராது.

**கேள்வி: எந்த வார்த்தை பிராமணர்களின் பாஷையினுடையதாக இருக்க முடியாது?**

பதில்: விரும்பாவிட்டாலும் நடந்து விடுகிறது என்ற இந்த வார்த்தையை மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்கள் சொல்ல முடியாது. விருப்பம் ஒன்று மற்றும் செய்யும் காரியம் இன்னொன்றாக இருக்கிறது என்றால் சிவசக்தி என்று கூற மாட்டோம். சிவசக்தி என்றால் அடிமை அல்ல, அதிகாரி. அடிமைத்தனத்தின் வார்த்தைகள் பிராமண பாஷையினுடையது அல்ல.

**கேள்வி: தந்தையின் நினைவில் மூழ்கியிருப்பது அக்னியின் காரியம் செய்கிறது, எப்படி?**

பதில்: எப்படி அக்னியில் ஏதாவது பொருளை போட்டீர்கள் என்றால் அதனுடைய பெயர், ரூபம், குணம் அனைத்தும் மாறி விடுகிறது. அதே போல் எப்பொழுது தந்தையின் நினைவில் மூழ்கியிருக்கும் அக்னியில் இருக்கிறீர்கள் என்றால் பரிவர்த்தனை ஆகி விடுகிறீர்கள் தான் இல்லையா. மனிதனிலிருந்து பிராமணன் ஆகி விடுகிறீர்கள், பிறகு பிராமணனிலிருந்து பரிஷ்தா ஆகி தேவதை ஆகி விடுகிறீர்கள். ஆக எப்படி பரிவர்த்தனை ஆனது? மூழ்கியிருக்கும் அக்னி மூலமாக தன்னுடையது என்பது எதுவும் இல்லை. மனிதன், மனிதனாக இருக்கவில்லை. பரிஷ்தா ஆகி விட்டார். எப்படி பச்சை மண்ணை அச்சில் போட்டு நெருப்பில் போடுகிறார்கள் என்றால் செங்கல்லாக ஆகிவிடுகிறது அதே போல் இதுவும் பரிவர்த்தனை ஆகி விடுகிறது எனவே இந்த நினைவைத் தான் ஜுவாலா ரூபம் என்று கூறுவது. ஜுவாலாமுகியும் பிரசித்தியாக இருக்கிறது என்றால் ஜுவாலாதேவி மற்றும் தேவதைகளும் பிரசித்தியாக இருக்கிறார்கள். நல்லது.

**வரதானம்: நிர்விகாரி மற்றும் பரிஷ்தா சொரூபத்தின் நிலையின் அனுபவம் செய்யக்கூடிய ஆத்ம அபிமானி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் ஆத்ம அபிமானியாக ஆகுகிறார்களோ அவர்கள் சுலபமாகவே நிர்விகாரி ஆகி விடுகிறார்கள். ஆத்ம அபிமானி நிலை மூலமாக மனதின் எண்ணங்களிலும் விகாரமற்ற நிலையின் அனுபவம் ஆகிறது. அந்த மாதிரி நிர்விகாரி, யாருக்கு எந்த விதமான தூய்மையின்மை மற்றும் ஐந்து தத்துவங்களின் ஈர்ப்பு கவர்ச்சிக்க முடியாதோ அவரைத் தான் பரிஷ்தா என்று கூறுகிறோம். இதற்காக உடலில் இருந்து கொண்டே தன்னுடைய நிராகார ஆத்ம அபிமானி நிலையில் நிலைத்திருங்கள்.

**சுலோகன்: வாழ்க்கையில் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்வதற்காக விசேஷமாக அமிர்தவேளையில் ஏகாந்த பிரியராக ஆகுங்கள்!**

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# 12.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிகழ்காலம் தான் எதிர்காலத்திற்கான ஆதாரம்!

இன்று விருட்சபதி தந்தை, விருட்சத்தின் (கல்ப விருட்சத்தின்) தன்னுடைய முதன்முதல் இலைகள் மற்றும் விருட்சத்தின் ஆதாரமான சிரேஷ்ட ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பிராமண ஆத்மாக்கள் தான் புதிய விருட்சத்தின் கன்றாவார்கள். புதிய மரத்தின் ஆதாரமே கன்றின் மேல் தான் இருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு ஆத்மாவும் புதிய விருட்சத்தின் கன்றாவீர்கள், எனவே ஒவ்வொரு ஆத்மாவும் மிக மதிப்புள்ளவர்கள். எப்பொழுதும் தன்னை அந்த மாதிரி மிக மதிப்புள்ள ஆதாரமான விருட்சத்தின் கன்று என்று புரிந்து நடந்து கொண்டிருக்கிறீர்களா? கன்றில் என்ன பலஹீனம் இருக்குமோ அது முழு விருட்சத்தின் பலஹீனமாக ஆகும். நீங்கள் ஒவ்வொருவரும் அந்த அளவு பொறுப்பு இருக்கிறது என்று உணருகிறீர்களா? நானோ சிறியவன் மற்றும் காலம் தாழ்ந்து வந்திருப்பவன். பொறுப்பு பெரியவர்களிடம் மட்டுமே இருக்கிறது என்று அப்படி நினைக்கவில்லையே? எப்பொழுது ஆஸ்தியை பெறுவதில் புதியவர்கள், சிறியவர்களானாலும் பெரியவர்களானாலும் ஒவ்வொருவரும் தன்னை முழுமையான அதிகாரம் உள்ளவர் என்று நினைக்கிறீர்கள், ஒருவர் கூட சந்திர வம்சத்தின் ஆஸ்தியைப் பெறுவதற்கு தயார் ஆவதில்லை, சூரிய வம்சத்தினராக ஆவோம் என்று தான் நீங்கள் அனைவரும் உரிமையை வைக்கிறீர்கள். கூடவே சங்கம யுகத்தின் பிராப்தியின் மேல், தந்தையின் மேல் தன்னுடைய முழு உரிமையை செலுத்துகிறீர்கள். முதலில் சிறியவர்கள் எங்களுடைய தந்தை என்ற வார்த்தையைத் தான் கூறுகிறீர்கள். சிறியவர்கள் மேல் தந்தைக்கு அன்பு அதிகமாக இருக்கிறது, எனவே எங்களுடைய பாபா தான், முதலில் எங்களுக்கு அனைத்து அதிகாரமும் இருக்க வேண்டும். அன்புடன் தன்னுடைய அதிகாரத்தை வர்ணனை செய்கிறீர்கள். ஆக எப்படி தந்தையின் மேல், பிராப்தியின் மேல் தன்னுடைய அதிகாரம் இருக்கிறது என்று நினைக்கிறீர்களோ அதே போல் பொறுப்பிலும் சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் அதிகாரி ஆவீர்கள், அனைவரும் துணைவர்களாக இருக்கிறீர்கள். அந்த அளவு பொறுப்பின் அதிகாரி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? சுயமாற்றம், உலகமாற்றம் இரண்டின்

# 1981 அவ்யக்த முரளி

பொறுப்பின் கிரீடம் அணிந்திருப்பவராக இருப்பவர், உலக இராஜ்யத்தின் கிரீடம் அணிவதற்கு உரியவராக இருப்பார். சங்கமயுகத்தின் கிரீடம் அணிந்தவராக இருப்பவர் நாளை எதிர்காலத்தின் கிரீடம் அணிந்தவர். நிகழ்காலம் இல்லை என்றால் எதிர்காலம் இல்லை. நிகழ்காலம் தான் எதிர்காலத்தின் ஆதாரம். சோதனை செய்யுங்கள் மற்றும் ஞானத்தின் கண்ணாடியில் சங்கமயுகத்து பிராமணன் மற்றும் எதிர்காலத்து தேவ பதவி உடையவர் என்ற இரண்டு சொரூபத்தையும் பாருங்கள். இரண்டு ரூபங்களையும் பாருங்கள். மேலும் பிறகு பிராமண வாழ்க்கையில் இரட்டை கிரீடம் இருக்கிறதா அல்லது ஒரு கிரீடம் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். ஒன்று தூய்மையின் கிரீடம், இன்னொன்று நடைமுறை வாழ்க்கையில் படிப்பு மற்றும் சேவையின் கிரீடம். இரண்டு கிரீடமும் சமமாக இருக்கிறதா? சம்பூர்ணமாக இருக்கிறதா? அல்லது ஏதாவது குறை இருக்கிறதா? ஒருவேளை இங்கே ஏதாவது ஒரு கிரீடம் அரைகுறையாக இருக்கிறது அது தூய்மையின் விஷயத்திலானாலும், படிப்பு மற்றும் சேவையின் விஷயத்திலானாலும், பிறகு அங்கேயும் சிறிய கிரீடத்தின் அதிகாரியாக மற்றும் ஒரு கிரீடம் அணிந்தவராக அதாவது பிரஜை பதவி அடைபவராக ஆக வேண்டும். ஏனென்றால் பிரஜைக்கும் ஒளியின் கிரீடம் என்னவோ இருக்கும்; அதாவது தூய்மையான ஆத்மாக்களாக இருப்பார்கள் ஆனால் விஷ்வ ராஜன் மற்றும் மகாராஜாவின் கிரீடம் கிடைக்காது. சிலர் மகாராஜன், சிலர் ராஜன் அதாவது ராஜா, மகாராஜா மற்றும் உலக மகாராஜா (சக்ரவர்த்தி) அப்படி இதன் ஆதாரத்தினால் தான் வரிசைக்கிரமமான கிரீடம் அணிந்தவராக ஆவார்கள்.

இதே விதமாக ஆசனத்தைப் பாருங்கள் -நிகழ்காலத்தில் பிராமண வாழ்க்கையில் எவ்வளவு காலம் அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் மற்றும் இதயசிம்மாசனதாரி அப்படி இரண்டின் ஆசனதாரியாக எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள்? அழியாத ஆசனதாரியாக நிரந்தரமாக இருப்பது அதாவது எப்பொழுதுமே இருப்பது என்றால் இதயசிம்மாசனதாரியாகவும் நிரந்தரமாக எப்பொழுதுமே இருப்பது. இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது. பிராமண வாழ்க்கையில் சில நேரம் மட்டும் தான் ஆசனதாரியாக இருக்கிறார் என்றால் எதிர்காலத்தில் முழுமையான அரைக் கல்பம் ஆசனதாரியாக அதாவது இராஜ குடும்பத்தில் வர முடியாது. ஏனென்றால் ராஜ குடும்பத்தினர் தான் சிம்மாசனதாரிகள் என்று வர்ணனை செய்யப்படுகிறார்கள். அப்படி இங்கே எப்பொழுதுமே ஆசனதாரியாக இருப்பவர் தான் எதிர்காலத்தில் எப்பொழுதுமே இராஜ்ய அதிகாரி சிம்மாசனதாரியாக இருப்பார். ஆக தன்னுடைய கண்ணாடியில்

# 1981 அவ்யக்த முரளி

நிகழ்காலம் எப்படி இருக்கிறது மற்றும் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று பாருங்கள், இதே முறையில் திலகத்திலும் அழியாத மற்றும் அழிக்க முடியாத திலமிகட்டவராக இருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள். சங்கமயுகத்தில் தான் தேவர்களுக்கெல்லாம் தேவனின் மாங்கல்யம் மற்றும் பரமாத்மா ஈஸ்வரனின் குழந்தையின் பாக்கியத்தின் திலகம் பிராப்தி ஆகிறது. அப்படி இந்த சமங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகம் அழியாதது. மாயா மாங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகத்தை அழித்தோ விடுவதில்லையே. இங்கே இருக்கும் சுமங்கலி, பாக்கியத்தின் திலகத்தை எப்பொழுதுமே இட்டுக் கொண்டு இருப்பவர் தான் எதிர்காலத்தில் நிரந்தரமான இராஜ திலகம் இட்டுக் கொண்டவர். ஒவ்வொரு பிறவியிலும் இராஜ திலகம் இடுவதற்கான விழா இருக்கும். இராஜாவுடன் சேர்ந்து இராஜ குடும்பத்தினருக்கும் திலகமிடும் நாள் கொண்டாடப்படும். அங்கே உள்ள ஒவ்வொரு பிறவியிலும் இராஜ திலகத்தின் விழா மற்றும் இங்கே பிராமண வாழ்க்கையில் எப்பொழுதும் தந்தையுடன் சந்திப்பு செய்வதற்கான விழா, தன்னை எப்பொழுதும் முன்னேறச் செய்வதற்கான விழா, தன்னை எப்பொழுதும் முன்னேறும் கலையில், ஒவ்வொரு விதமான சேவையின் அதாவது உடல், மனம், பொருள், மக்கள் அப்படி அனைவரின் சேவையின் ஊக்கம். உற்சாகம் சதா காலத்திற்கும் இருக்கும். இப்பொழுதைய உற்சாகம் எதிர்காலத்தின் உற்சவமாக இருக்கும்.

இதே விதமாக உடல், மனம், செல்வத்திற்கும் சம்மந்தம் இருக்கிறது. இங்கே தொடக்கத்திலிருந்து இதுவரை, மேலும் இப்பொழுதிலிருந்து இறுதிவரை தன்னுடைய உடலை எவ்வளவு காலம் சேவையில் சமர்ப்பணம் செய்தீர்கள். மனதை எவ்வளவு நேரம் நினைவு மற்றும் மனசேவையில் ஈடுபடுத்தினீர்கள்? மனதால் செய்யும் சேவை சுபபாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் வைப்பது. இதிலேயும் சேவை எல்லைக்குட்பட்டிருந்ததா, எல்லைக்கப்பாற்பட்டிருந்ததா? அனைவருக்காகவும் சுபபாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் இருந்ததா? அல்லது சிலருக்காக இருந்தது மற்றும் வேறு சிலருக்காக இருக்கவில்லை என்று அப்படி இருந்ததா? இதே விதமாக பணத்தை தனக்காக ஈடுபடுத்தினேனா? சுயநலமாக ஈடுபடுத்தினேனா அல்லது சுயநலமற்று சேவையில் ஈடுபடுத்தினேனா? நம்பிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒன்றின் மேல் ஏமாற்று காரியமோ செய்வதில்லையே? எல்லைக்கப்பாற்பட்டதிற்குப் பதிலாக எல்லைக்குட்பட்டதிலேயோ ஈடுபடுத்தவில்லையே? இந்த சோதனையின் ஆதாரத்தில் அங்கேயும் பிராப்தியின் சதவிகிதத்தின் ஆதாரத்தில் வரிசைக்கிரமமான பதவி கிடைக்கிறது. அனைத்திலும் முழுமையான சதவிகிதம்

என்றால் முழுமையான காலம் மற்றும் முழுமையான பிராப்தி. இல்லையென்றால் தன்னுடைய வாழ்க்கை நிலையிலும் மேலும் காலத்திலும் வித்தியாசம் ஏற்பட்டு விடும் முழு காலம் இருந்தவர்கள் மற்றும் முழுமையான பிராப்தியை அடைபவர்களுக்கு 01.01.01 என்ற ஆண்டில் முதன் முதலில் சம்பூர்ண மலராக சதோபிரதான இயற்கை மற்றும் முழு இராஜ்ய பாக்கியம் இருக்கும். ஆண்டும் ஒன்று, பிராப்தியும் ஒன்று அப்படி இயற்கையின் சுகமும் ஒன்று அதாவது முதல் தரமானதாக இருக்கும். இல்லையென்றால் இரண்டு, மூன்று என்பது தொடங்கி விடும்.

பிராமணன் மற்றும் தேவதை, இப்பொழுது இந்த இரண்டு ரூபங்கள் மூலம் சோதனை செய்யுங்கள். சங்கமயுகத்தைச் சேர்ந்தவர் மற்றும் சத்யுகத்தைச் சேர்ந்தவர் என்ற இந்த இரண்டு சொரூபங்களையும் எதிரில் வையுங்கள். சங்கமயுகத்தில் இருக்கிறது என்றால் சத்யுகத்தில் கண்டிப்பாக இருக்கும். அது நிச்சயம்! எனவே பிராமண வாழ்க்கையின் 16-ஆன்மீக அலங்காரங்களையும் பாருங்கள். 16-கலைகளையும் பாருங்கள். நீங்களே உங்களைப் பாருங்கள். மேலும் என்னென்ன குறை பார்த்தீர்களோ அதை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? தன்னை கண்ணாடியில் பாருங்கள். நல்லது.

இன்று மகாராஷ்ட்ராவின் சேவைக்கான வாய்ப்பு என்றால் மஹான் ஆவதற்கான விஷயங்கள் கூறுவோம் இல்லையா? மகாராஷ்ட்ரா என்றால் இப்பொழுதும் மஹான் மேலும் எதிர்காலத்திலும் மஹான். நல்லது.

அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரிகளுக்கு, அனைவருக்காகவும் எப்பொழுதும் நற்சிந்தனை வைத்திருக்கும், எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் சுமங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் திலகம் இட்டிருப்பவர்களுக்கு, அந்த மாதிரி நிகழ்காலத்தின் இராஜ அலங்காரம் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

இன்று மின்சாரம் இடையிடையே அதிகமாக தடை ஏற்பட்டு சென்றும் பிறகு வந்து கொண்டும் இருந்தது. மின்சாரத்தின் இடையூறினால் புத்தியின் நிலை மேலே கீழே செல்லவில்லையே என்று பாபா கூறினார். உங்களுடைய இந்த ஸ்தூல உலகத்தின் பாடலாக தந்தைக்கு கூறுகிறார்கள் 'உன்னுடைய உலகத்தின் நிலைமை என்னவாகி விட்டது என்று பார்' என்று பக்தர்கள் பாடுகிறார்கள். ஆக

தந்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார், பக்தர்களின் பாடல் ஒலியும் வந்து கொண்டிருக்கிறது. மேலும் பார்த்துக் கொண்டும் இருக்கிறோம். எப்பொழுது பெயரே சாரமற்ற உலகம் என்றிருக்கிறது என்றால் எந்தவொரு சாதனத்திலும் என்ன சாரம் இருக்கும்? நல்லது.

**மகாராஷ்ட்ரா மண்டலத்தின் பார்ட்டிகளுடன்:** சங்கமயுகத்தின் மிகப் பெரிய கஜானா எது? தந்தை தான் அனைத்தையும் விட மிகப் பெரிய கஜானா. தந்தை கிடைத்து விட்டார் என்றால் அனைத்தும் கிடைத்து விட்டது. தந்தை, இல்லையென்றால் ஒன்றும் இல்லை. சத்யுகத்தில் கூட இந்த மிகப் பெரிய கஜானா இருக்காது. இந்த கஜானா இருக்காது, இதனால் அடைந்த பிராப்தி இருக்கும். ஆக அந்த மாதிரி யுகத்தில் எதில் அனைத்து கஜானாக்களும் கிடைக்கின்றன. சங்கமயுகத்தில் சத்யுகத்தையும் விட உயர்ந்த கஜானா கிடைக்கிறது. அந்த மாதிரி யுகத்தில் எந்த யுகத்தில் அனைத்து கஜானாக்களும் பிராப்தி ஆகின்றனவோ மேலும் பிராப்தி செய்யும் ஆத்மாக்களும் நீங்களே தான் என்றால், அந்த மாதிரி ஆத்மாக்கள் நிரம்பியவர்களாக இருப்பார்கள் இல்லையா. பிராமணர்களின் வாழ்க்கையில் பிராப்தி இல்லாத (அடையாத) பொருள் ஒன்றும் இல்லை. தேவதைகளின் வாழ்க்கையில் தந்தையின் பிராப்தியின்மை இருக்கும் ஆனால் பிராமணர்களின் வாழ்க்கையில் எந்தவொரு பிராப்தியின்மையும் இருக்காது. எனவே பிராப்தியில்லை என்ற ஒரு பொருள் கூட பிராமணர்கள் எங்களுடைய கஜானாவில் இல்லை என்ற இந்த அழியாத பாடல் மனதில் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கட்டும். கஜானாக்களின் அதிபதிகளாக இருக்கிறீர்களா அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? குழந்தை ஆவது என்றால் அதிபதி ஆவது. அதிபதியாகவோ ஆகி விட்டீர்கள் மற்றபடி பாதுகாப்பது எந்த அளவு வந்திருக்கிறது? இதில் ஒவ்வொருவருக்கும் வரிசைக்கிரமம் இருக்கிறது. எனவே குழந்தையாக இருக்கும் நாள் நாளை அதிபதி ஆவேன் என்ற இந்த குஷியிலேயே எப்பொழுதும் நடனமாடிக் கொண்டிருங்கள்.

2) அனைவரும் நிச்சப்புத்தி உடைய வெற்றி அடைபவர்கள் தான் இல்லையா? நிச்சயத்தில் ஒரு பொழுதும் மேலே கீழே ஆவதில்லையே? ஆடாத அசையாத மஹாவீரர்கள் தான் நீங்கள் இல்லையா? மஹாவீரரின் விசேஷம் என்ன? எப்பொழுதும் ஆடாத அசையாதவர். எண்ணம் மற்றும் கனவில் கூட வீணான எண்ணம் வராத நிலை. இதைத் தான் ஆடாத அசையாத மஹாவீரர் என்று கூறுவது. நீங்களும் அப்படித் தான் இருக்கிறீர்கள் இல்லையா? என்னென்ன நடக்கிறதோ அதில் நன்மை அடங்கியிருக்கிறது. எதை இப்பொழுது நீங்கள்

தெரிந்து கொள்ள முடியவில்லையோ அதை இன்னும் வரும் நாட்களில் தெரிந்து கொண்டே இருப்பீர்கள். எந்தவொரு விஷயத்தையும் ஒரு காலத்தின் பார்வையோடு பார்க்காதீர்கள். மூன்று காலங்களையும் தெரிந்தவராகிப் பாருங்கள். இது என்ன இப்பொழுது? இது ஏன் இப்பொழுது? என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம் மூன்று காலங்களையும் தெரிந்தவராகி பார்ப்பதினால் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதில் நன்மை இருக்கிறது என்ற இந்த எண்ணம் தான் எப்பொழுதும் இருக்கும். அந்த மாதிரியே மூன்று காலங்களையும் தெரிந்தவராகி நடந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? சேவைக்கு ஆதாரமானவர்கள் எந்தளவு உறுதியாக இருப்பார்களோ அந்த அளவே சேவையின் கட்டிடம் உறுதியாக இருக்கும். பாபா என்ன கூறுகிறாரோ அதைச் செய்து கொண்டே இருங்கள். பிறகு பொறுப்பு பாபாவினுடையதாகி விடுகிறது. அதைப் பற்றி பாபாவுக்குத் தெரியும், பாபாவின் காரியத்திற்கு தெரியும், எப்படி பாபா நடத்துகிறாரோ அப்படி நடந்தீர்கள் என்றால், அதில் நன்மை நிரம்பியிருக்கிறது. அந்த மாகிரி நடந்து கொள், அந்த மாதிரி இரு! என்று பாபா கூறுகிறார் என்றால். சரி பாபா! என்று கூற வேண்டுமேயன்றி அப்படி ஏன் என்பது இருக்க கூடாது. சரி ஐயா, புரிந்ததா? சரி ஐயா மற்றும் இதோ வந்து விட்டேன்! ஐயா என்றிருக்க வேண்டும். பிறகு பறக்கும் கலையில் சென்று கொண்டே இருப்பீர்கள். நிற்க மாட்டீர்கள். ஏனென்றால் லேசாகி விடுகிறீர்கள் இல்லையா?

3) அனைவரும் தன்னை எப்பொழுதும் உலகத்தில் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலர் என்று அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? இது என்னுடைய வர்ணனை தான் என்று அனுபவம் ஆகிறதா? ஒன்று ஞானத்தின் ஆதாரத்தினால் தெரிந்து கொள்வது, இன்னொன்று யாருடைய அனுபவத்தையாவது கேட்டு அதன் ஆதாரத்தில் நம்புவது. மேலும் மூன்றாவது, தானே அனுபவம் செய்து உணருவது. ஆக நான் சென்ற கல்பத்தின் கோடியிலும் சிலரான, அந்த சிலரிலும் சிலரான உயர்ந்த ஆத்மா என்று உணருதல் ஏற்படுகிறதா? அந்த மாதிரி ஆத்மாக்களின் அடையாளமாக என்ன இருக்கும்? அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் எப்பொழுதும் விளக்கொளி தந்தையின் மீது விட்டில் பூச்சியாகி விழுபவர்களாக இருப்பார்கள். சுற்றி வருபவர்களாக இருக்க மாட்டார்கள். வந்தார், சுற்றி வந்தார். கொஞ்சம் பிராப்தி செய்தார் என்று அந்த மாதிரி இருக்காது ஆனால் பலியாவது என்றால் இறந்து விடுவது -அந்த மாதிரி எரிந்து இறக்கக்கூடிய விட்டில்பூச்சிகள் தான் நீங்கள் இல்லையா? எரிவது தான் தந்தையின் குழந்தை ஆவது. யார் எரிகிறாரோ அவர் தான் ஆகிறார். எரிவது என்றால் பரிவர்த்தனை ஆவது. நல்லது.

எப்பொழுதும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரே சீரான நிலையில் இருக்க வேண்டும், அதற்கான சுலபமான வழி என்ன? ஏனென்றால் அனைவரின் லட்சியமும் ஒன்று, எப்படி ஒரு தந்தை, ஒரு வீடு, ஒரே ஒரு இராஜ்யம் இருக்குமோ அதே போல் இப்பொழுதும் ஒரே சீரான நிலை ஆனால் ஒரே சீரான நிலையில் இருப்பதற்காக சுலபமான வழி என்ன கிடைத்திருக்கிறது. ஒரு வார்த்தையில் கூறுங்கள். அந்த ஒரு வார்த்தை டிரஸ்டி. ஒருவேளை டிரஸ்டி ஆகி விடுகிறீர்கள் என்றால். விலகியிருப்பவராகவும் பற்றற்ற அதே சமயம் அன்பானவராகவும் இருப்பதினால் ஒரே சீரான நிலை ஏற்பட்டுவிடுகிறது. எப்பொழுது குடும்பஸ்தன் என்றால், அனேசு விதமான என்னுடையது என்னுடையது என்பது அதிகம் ஆகி விடுகிறது. சில நேரம் என்னுடைய வீடு, சில நேரம் என்னுடைய குடும்பம்... குடும்பச் சூழ்நிலை என்றால், அனேக விதமான உறவு ரசனைகளில் அலைவது. டிரஸ்டி நிலை என்றால், ஒரு ரசனையில் இருப்பது. டிரஸ்டி எப்பொழுதும் லேசானவராக எப்பொழுதும் முன்னேறும் கலையிலும் செல்வார். இந்த முழு குரூப்பும் டிரஸ்டி குரூப் தான் இல்லையா. கொஞ்சமாவது என்னுடையது என்பது இருக்கிறது என்றால் என்னுடையது என்றால் குடும்பச் சூழ்நிலை. எங்கு என்னுடையது இருக்குமோ அங்கு பாசம் இருக்கும். பாசம் உள்ளவர்களை டிரஸ்டி என்றில்லாமல் குடும்பஸ்தர்கள் என்று கூறுவோம். குடும்பஸ்தினராகவோ அரைக்கல்பம் இருந்தீர்கள். மேலும் குடும்ப வாழ்க்கையில் என்ன பிராப்தி கிடைத்தது என்பதை அனுபவமும் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது டிரன்டி ஆகுங்கள். ஒருவேளை கொஞ்சமாவது குடும்பஸ்தன் என்ற நிலை இருக்கிறது என்றால் அதை மதுபன்னில் விட்டு விட்டு செல்லுங்கள். எது துக்கத்தின் உணர்வுகளை உருவாக்குமோ அதை விட்டுச் செல்ல வேண்டும். மேலும் எது சுகம் கொடுக்கக் கூடியதோ அதை எடுத்துச் செல்ல வேண்டும். நல்லது.

**இனிமையான தாதி அவர்கள் அம்பாலா மேளாவில் செல்வதற்காக பாப்தாதாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டிருந்தார்கள். பாப்தாதா கூறினார்:** பாப்தாதா அனேக குழந்தைகளின் குஷியைப் பார்த்து குஷி அடைகிறார் சேவைக்காக எங்கே சென்றாலும், அனேக கஜானாக்கள் அனேகர்களுக்கு கிடைத்து விடுகிறது. எனவே நாடகத்தில் இதுவரையிலும் செல்ல வேண்டும் என்பது தான் நடந்து கொண்டிருக்கிறது. நின்று விடும் என்றால் ஒரு நொடியில் நின்று விடும். எப்படி சாகார பாபாவை பார்த்திருக்கிறீர்கள், தயாராகியிருந்தார், அவருடைய டங்கு முடிவடைந்து தயார் ஆகியிருந்த போதிலும் செல்ல முடியவில்லை. அதே போல் இதுவும் நாடகத்தில் முடிவடைந்தது என்றால்.

ஒரு நொடியில் தீடீரென்று நடக்கும். அதுவரை செல்லவும் வேண்டும். புத்துணர்வு ஆக்கவும் வேண்டும். அனைவரின் இதயத்தை குஷிப் படுத்துவது, இதுவும் மிகப் பெரிய புண்ணியம். அனைவரும் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா? அழைக்கும் போது எதிரில் பிரத்யக்ஷம் ஆகத் தான் வேண்டும். ஜட விக்கிரகங்களையும் ஆவஹானம் (அழைத்தல்) செய்கிறார்கள் என்றால், அதிலேயும் உயிரோட்டம் இருப்பதாக அனுபவம் ஆகிறது. இந்த ஆவஹானம் செய்வதும் இங்கிருந்து தான் தொடங்கியது. எனவே அனைவருக்கும் அன்பு நினைவுகளைக் கொடுத்து இப்பொழுது வாய்மொழியின் கூடவே எண்ண சக்தியின் சேவை செய்யுங்கள். இது தான் இறுதி சக்திசாலியான சேவை ஆகும். அதையும் செய்யுங்கள் என்று கூறுங்கள். எண்ணத்தின் சக்தி மற்றும் வாய்மொழியின் சக்தி, மனசேவை மற்றும் வாய்மொழி சேவை இரண்டின் இணைந்த ரூபத்தில் சேவை செய்தால், சுலபமாக வெற்றி கிடைக்கும். ஒன்றின் மூலம் ஒரு ரிசல்ட் இருக்கும், இணைந்த சேவை மூலம் இருமடங்கு ரிசல்ட் இருக்கும். முதலில் எண்ணத்தின் ஈக்தி பிறகு வாய்மொழியின் சக்தி அப்படி மனம் மற்றும் வாய்மொழி இரண்டின் சேவை சேர்ந்தே இருக்க வேண்டும். வாய்மொழியில் மனசேவை செய்ய முடியவில்லை என்று அப்படியும் இருக்க வேண்டாம்; மேலும் மனசேவையில் வார்த்தைகள் கூற முடியவில்லை என்று அப்படியும் இருக்க வேண்டாம். வாய்மொழியின் சேவை செய்பவர்கள் குறைவாக இருக்கிறார்கள். மற்றபடி மேற்பார்வை செய்பவர்கள், வேறு காரியத்தில் யார் இருக்கிறார்களோ அவர்கள் மனசேவை செய்ய வேண்டும். இதன் மூலம் வாயுமண்டலம் யோகம் நிறைந்ததாக ஆகிறது. கூட்டத்தில் சந்திப்பு அதிகமாக இருக்கிறது, ஆனால் சந்திப்பின் கூடவே சேவைக்கான லட்சியமும் இருக்க வேண்டும். நான் சேவை செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். பிறகு வாயுமண்டலம், சூழ்நிலை சக்திசாலியாகி விடும். மேலும் சேவையும் இரண்டு மடங்கு நடந்து விடும். ஊக்கம் உற்சாகத்தோடு செய்து கொண்டிருக்கிறீர்கள். இதுவும் மிக நல்லது தான் ஆனால் ஊக்கம் உற்சாகத்தின் கூடவே இந்த லட்சியத்தை வைப்பதும் அவசியம். நல்லது. அனைவருக்கும் மிகுந்த நினைவுகளைக் கூறுங்கள்.

**வரதானம்: சாதாரண தன்மை மூலமாக மஹான் N**ஈர்ப்பார்கள். சிம்பிள் என்றால் சாதாரணம். சாதாரண நிலை மூலம் தான் மகான் நிலை பிரசித்தி ஆகிறது. யார் சாதாரணம் அதாவது சிம்பிளாக இல்லையோ அவர்கள் பிரச்சனைக்குரியோர் ஆகி விடுகிறார்கள்.

**சுலோகன்: மேரா பாபா (என்னுடைய பாபா) என்று உள்ளப்பூர்வமாகக் கூறுனீர்கள் என்றால், மாயா மூர்ச்சையடையச் செய்ததனால் மூடிய கண்கள் திறந்து விடும்.**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 14.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பொக்கிஷங்களின் சாவி ஒரு வார்த்தை -பாபா!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை தன்னுடைய பாக்கியசாலி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாக்கியசாலியாகவோ அனைவரும் ஆகியிருக்கிறார்கள் ஆனால் பாக்கியசாலி வார்த்தையின் முன்பு சௌபாக்கியசாலி எங்கே, பலகோடி மடங்கு பாக்கியசாலி எங்கே! பாக்கியசாலி என்ற வார்த்தை மேலே கூறிய இரண்டிற்கும் கூறப்படுகிறது. எங்கே நூறு மேலும் எங்கே பலகோடி, வித்தியாசம் உள்ளதில்லையா. பாக்கியத்தை உருவாக்குபவர் ஒரே ஒருவர் தான். உருவாக்குவதற்கான விதியும் ஒன்றே தான். காலம் மற்றும் வேளையும் ஒன்றே தான். இருந்தும் வரிசைக்கிரமம் ஆகி விட்டார்கள். உருவாக்குபவரின் விதி எவ்வளவு உயர்ந்தது மற்றும் சுலபமானது, எப்படி உலகியல் முறையில் கூட இன்றைய நாட்களில் யார் மேலேயாவது கிரஹங்களின் சோதனை காரணமாக அதிர்ஷ்டம் மாறி விடுகிறது என்றால், அந்த சோதனையை அகற்றுவதற்காக, உயர்ந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக எத்தனை விதமான விதிகளைச் செய்கிறார்கள். எவ்வளவு நேரம், எவ்வளவு சக்தி மற்றும் செல்வத்தை செலவு செய்கிறார்கள். இருந்தும் அற்ப காலத்தின் எதிர்காலம் உருவாகிறது. ஒரு ஜென்மத்திற்குக் கூட உத்திரவாதம் கிடையாது. ஏனென்றால், அவர்கள் உருவாக்குபவர் மூலமாக எதிர் காலத்தை மாற்றுவதில்லை, அற்பமான, அற்ப சித்தியை பெற்றிருக்கும் நபர் மூலமாக அற்ப காலத்தின் பிராப்தி அடைகிறார்கள். அவர் அற்பமான நபர் மேலும் இங்கே உருவாக்குபவர், உருவாக்குபவர் மூலமாக அழியாத எதிர்காலத்தின் ரேகையை போட்டுக் கொள்ள முடியும். ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்கும் இரண்டு தந்தைகளும் இந்த நேரம் குழந்தைகளுக்காக ஆஜராக இருக்கிறார்கள். எந்த அளவு உருவாக்குபவரிடமிருந்து பாக்கியத்தைப் பெற விரும்புகிறீர்களோ அந்த அளவு இப்பொழுது பெற முடியும். இந்த நேரம் பாக்கியத்தை உருவாக்குபவர் பாக்கியத்தைக் கொடுப்பதற்காக வந்திருக்கிறார். நாடகத்தின் அனுசாரம் இந்த நேரத்திற்கு வரதானம் இருக்கிறது. பாக்கியத்தின் நிரம்பிய களஞ்சியம் திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. உடலின் களஞ்சியம், மனதின், செல்வத்தின்,

இராஜ்யத்தின், இயற்கையை தாசியாக (வேலைக்காரர்) ஆக்குவதின், பக்தனாக ஆக்குவதற்காசு இப்படி அனைத்து பாக்கியத்தின் களஞ்சியங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. யாருக்கும் உருவாக்குபவர் மூலமாக விசேஷ பிராப்திக்கான வாய்ப்பு கிடைப்பதில்லை, அனைவருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்பு. ஏதாவது விஷயத்தின் காரணமாகவும் பந்தனத்தின் ரூபத்தில் இல்லை. பிற்காலத்தில் வந்ததின் காரணமாக, இல்லறத்தில் இருக்கும் காரணமாக, உடல் நோயின் காரணமாக, ஆயுளின் காரணமாக, ஸ்தூல பட்டம் அல்லது படிப்பின் காரணமாக, எந்த விதமான காரணத்தின் பூட்டு களஞ்சியத்தில் போடப்பட வில்லை. இரவு பகலாக பாக்கியத்தை உருவாக்குபவரின் களஞ்சியம் நிரம்பி மற்றும் திறந்திருக்கிறது. எந்தவொரு காவலாளியும் இல்லை. இருந்தும் பாருங்கள், பெறுவதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். பாக்கியத்தை உருவாக்குபவர் வரிசைக்கிரமத்தில் கொடுப்பதில்லை. இங்கே பாக்கியத்தைப் பெறுவதற்காக (க்யூ) வரிசையோ இல்லை தானே! அமிர்தவேளையில் பாருங்கள். பாரதம் மற்றும் வெளிநாட்டின் அனைத்து குழந்தைகளும் ஒரே நேரத்தில் பாக்கியத்தை உருவாக்குபவருடன் சந்திப்பை செய்வதற்கு வருகிறார்கள் என்றால் சந்திப்பு நடந்து விடுகிறது. சந்திப்பதே கிடைப்பதாகி விடுகிறது. யாசிப்பதோ இல்லை ஆனால் மிகப் பெரிய தந்தையை சந்திப்பது என்றால் பாக்கியத்தின் பிராப்தியை அடைவது. ஒன்று தந்தை குழந்தைளுக்கு கிடைப்பது மற்றும் இன்னொன்று ஏதாவது பொருள் கிடைப்பது, அப்படி சந்திப்பும் ஆகி விடுகிறது மற்றும் பாக்கியம் கிடைப்பதும் ஆகி விடுகிறது. ஏனென்றால் பெரிய மனிதர் ஒருபொழுதும் யாரையும் வெறும் கையோடு அனுப்ப முடியாது. ஆக தந்தையோ உருவாக்குபவர், வரமளிப்பவர், நிரம்பிய களஞ்சியம் உடையவர். காலியாக எப்படி அனுப்ப முடியும்? இருந்தும் பாக்கியசாலி, சௌபாக்கியசாலி, பலமடங்கு பாக்கியசாலி, பல கோடி மடங்கு பாக்கியசாலியாக ஏன் ஆகிறார்கள்? கொடுப்பவரும் இருக்கிறார், பாக்கியத்தின் பொக்கிஷமும் நிரம்பி இருக்கிறது. நேரத்தின் வரதானமும் இருக்கிறது. இந்த அனைத்து விஷயங்களின் ஞானம் அதாவது அறிவும் இருக்கிறது. அறியாத வராகவும் இல்லை, இருந்தும் ஏன் வித்தியாசம்? (நாடகத்தின் அனுசாரம்) நாடகத்திற்கும் இப்பொழுது வரதானம் இருக்கிறது, எனவே நாடகம் என்று கூற முடியாது.

விதி கூட பாருங்கள் எவ்வளவு சரளமானது. எந்தவொரு கடின உழைப்பையும் கூறுவதில்லை. தடுமாறவும் வைப்பதில்லை. செலவு செய்விப்பதில்லை. விதியும் ஒரே ஒரு வார்த்தை தான். அது எந்த ஒரு வார்த்தை? ஒரு வார்த்தையை தெரிந்திருக்கிறீர்களா? ஒரே ஒரு வார்த்தை தான். அனைத்து பொக்கிஷங்களின்

மற்றும் உயர்ந்த பாக்கியத்தின் சாவி. சாவியும் அது தான். விதியும் அது தான். அது என்ன? 'பாபா' என்ற வார்த்தை தான் சாவி மற்றும் விதி. அப்படி சாவியோ அனைவரிடமோ இருக்கிறது தான் இல்லையா? இருந்தும் ஏன் வித்தியாசம்? ஏன் சாவி மாட்டிக் கொள்கிறதா? வலது பக்கத்திற்குப் பதிலாக இடது பக்கம் திருப்பி விடுகிறீர்கள். சுயசிந்தனைக்குப் பதிலாக பரசிந்தனை, இது தவறான பக்கம் சுற்றிய சாவி. சுயதரிசனத்திற்குப் பதிலாக பரதரிசனம். மாறுவதற்கு பதிலாக பழி வாங்கும் பாவனை, சுயபரிவர்த்தனைக்குப் பதிலாக மற்றவர்கள் மாற வேண்டும் என்ற ஆசை வைப்பது. வேலை என்னுடையது, பெயர் கிடைப்பது தந்தைக்கு என்ற இதற்கு பதிலாக பெயர் எனக்கு, செய்வது தந்தை என்று இந்த விதமாக சாவியை தவறாகச் சுற்றி விடுகிறார்கள். எனவே கஜானாக்கள் இருந்தபோதிலும் பாக்கியம் இல்லாதவராகி கஜானாவை அடைய முடிவதில்லை. பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தைகள் என்னவாக ஆகி விடுகிறார்கள். கொஞ்சம் அஞ்சலி பெறுபவர்களாகி விடுகிறார்கள். வேறு என்ன செய்கிறார்கள்?

இன்றைய நாட்களின் உலகத்தில் மதிப்பு நிறைந்த பொருட்களை பாதுகாப்பு பெட்டகம் அல்லது இரும்பு பெட்டியில் வைக்கிறார்கள். அதை திறப்பதற்கான விதியாக இரண்டு சாவிகள் போடுகிறார்கள் மற்றும் இரண்டு முறை சாவியைத் திருப்ப வேண்டியதாக இருக்கும். ஒருவேளை இந்த விதியைக் கடைபிடிக்கவில்லை என்றால் வைக்கப்பட்ட பொருட்களை எடுக்க முடியாது. பாதுகாப்பு பெட்டகத்தில் நீங்கள் பார்த்திருக்கலாம் -நீங்கள் ஒரு சாவியை போடுவீர்கள். இன்னொரு சாவியை வங்கியைச் சேர்ந்தவர்கள் போடுவார்கள். அப்படி இரண்டு சாவி இருக்கும் இல்லையா? ஒருவேளை நீங்கள் உங்களுடைய சாவியை மட்டும் போட்டு திறக்க விரும்பினீர்கள் என்றால் கூட திறக்க முடியாது. அப்படி இங்கேயும் நீங்கள் மற்றும் தந்தை இருவர்களின் நினைவின் சாவி தேவையாக இருக்கிறது. அனேக குழந்தைகள் தன்னுடைய போதையில் வந்து நான் அனைத்தையும் தெரிந்து கொண்டேன் என்று கூறுகிறார்கள். நான் என்ன விரும்புகிறேனோ அதைச் செய்ய முடியும், செய்விக்க முடியும். தந்தையோ என்னை எஜமானன் ஆக்கி விட்டார் என்று கூறுகிறார்கள். அப்படி தவறாக நான் என்ற போதையில் தந்தையுடன் இருக்கும் சம்மந்தத்தை மறந்து, தானே அனைத்தும் என்று நினைக்கத் தொடங்குகிறார்கள். மேலும் ஒரே சாவி மூலமாக பொக்கிஷத்தைத் திறக்க விரும்புகிறார்கள். அதாவது பொக்கிஷத்தை அனுபவம் செய்ய விரும்புகிறார்கள் ஆனால் தந்தையின் உதவியின்றி மற்றும் துணையின்றி பொக்கிஷம் கிடைக்காது, எனவே இரண்டு சாவிகள் வேண்டும். சில குழந்தைகள் பாப்தாதா அதாவது இரண்டு தந்தைகளுக்குப் பதிலாக, தந்தை (சிவபாபா)

மூலமாக பொக்கிஷத்தின் எஜமானன் ஆவதற்கான விதியைக் கடைபிடிக்கிறார்கள். இதன் காரணமாகவும் பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகி விடுகிறார்கள். எங்களுக்கு நிராகாரமான தந்தையுடன் நேரடி தொடர்பு இருக்கிறது, சாகார பிரம்மாபாபாவும், நிராகார சிவபாபாவிடமிருந்து தான் பெற்றார். எனவே நாங்களும் நிராகார சிவபாபா மூலமாகவே அனைத்தையும் பெற்று விடுவோம், சாகார பாபாவின் அவசியம் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்கள் ஆனால் அந்த மாதிரியான சாவி உடைந்த சாவி ஆகி விடுகிறது. எனவே வெற்றி கிடைப்பதில்லை. இதில் வேடிக்கை என்ன வென்றால், தன்னுடைய பெயரை பிரம்மா குமார், குமாரி என்று கூறுவார்கள் மற்றும் தொடர்பை சிவபாபாவுடன் பைத்துக் கொள்வார்கள். அப்படியானால் தன்னை சிவகுமார், குமாரி என்று கூறுங்களேன்! ஏன் பிரம்மாகுமார். குமாரி என்று கூறுகிறீர்கள்? உங்களுடைய குடும்பப் பெயரே சிவவம்சி பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்றால், இரண்டு தந்தைகளின் சம்மந்தம் உள்ளதில்லையா?

இன்னொரு விஷயம் -சிவபாபாவும் பிரம்மா மூலமாகத்தான் தன்னை பிரத்யக்ஷம் செய்திருக்கிறார். பிரம்மா மூலமாக பிராமணர்களைத் தத்தெடுத்திருக்கிறார். தனியாகச் செய்யவில்லை. பிரம்மா அம்மா தந்தையின் அறிமுகம் கொடுத்தார். பிரம்மா தாய் குழந்தைகளை வளர்த்து தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுவதற்கான தகுதியானவர் ஆக்கினார். மூன்றாவது விஷயம் இராஜ்ய பாக்கியத்தின் பலனை அடைவதில் யாருடன் வருவீர்கள்? நிராகாரமானவரோ நிராகார உலக வாசியாக ஆகி விடுவார், சாகார பிரம்மாபாபாவின் கூடவே இராஜ்ய பாக்கியத்தின் பலனை அனுபவிப்பீர்கள். இவ்வுலகில் கதாநாயகனின் பங்கை ஏற்று செய்வதின் சம்மந்தம் சாகார பிரம்மாபாபாவுடன் இருக்கிறதா அல்லது நிராகாரமானவருடன் இருக்கிறதா? எனவே சாகார பாபா இன்றி அனைத்து பாக்கியத்தின் களஞ்சியத்தின் எஜமானனாக எப்படி ஆக முடியும்? அப்படி உடைந்த சாவியைப் போடாதீர்கள். பாக்கியத்தை உருவாக்குபவர் பிரம்மா மூலமாகத்தான் பாக்கியத்தை விநியோகித்தார். பிரம்மா குமார், குமாரியைத் தவிர வேறு யாருக்கும் பாக்கியம் உருவாக முடியாது. உங்களுடைய நினைவுச்சின்னத்திலும் கூட பிரம்மா எப்பொழுது பாக்கியத்தை விநியோகித்தாரோ அப்பொழுது தூங்கிக் கொண்டிருந்தீர்களா? என்று கூட ஒரு பேச்சு உள்ளது, தூங்கிக் கொண்டிருந்தீர்களா அல்லது காணாமல் போய் விட்டீர்களா? எனவே தலைகீழாகச் சாவியை போடாதீர்கள். இரண்டு சாவிகளையும் போடுங்கள். இரண்டு தந்தையும் இருக்கிறார்கள். மேலும் நீங்கள் மற்றும் தந்தையும் இருவர்கள், இந்த சுலபமான விதியின் மூலம் நிரந்தரமாக பாக்கியத்தின் பொக்கிஷங்களினால் பலகோடி

மடங்கு பாக்கியசாலி ஆக முடியும். காரணத்திற்கு நிவாரணம் செய்தீர்கள் என்றால், எப்பொழுதும் சம்பன்னம் ஆனவர்கள் ஆகி விடுவீர்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி பாக்கியத்தை உருவாக்குபவரின் நிரந்தரமாக உயர்ந்த பாக்கியம் நிறைந்த குழந்தைகளுக்கு, சகஜ விதி மூலமாக உருவாக்குபவரையும் தன்னுடையவராக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் அனைத்து பாக்கியத்தின் பொக்கிஷங்களோடு விளையாடக்கூடிய, 'பாபா, பாபா என்று சொல்ல வேண்டியது இல்லை ஆனால் 'பாபாவை'த் தன்னுடையவராக்கி மற்றும் பொக்கிஷங்களை அடைய வேண்டும், அந்த மாதிரி எப்பொழுதும் கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: அதிகமாக கேட்டோ இருக்கிறீர்கள், கேட்ட பிறகு சொரூபமாக ஆகியிருக்கிறீர்களா?** கேட்பது என்றால், சொரூபம் ஆவது. இதைத் தான் மனதிற்கு ரசனை என்று சொல்வது. கேட்பது மட்டும் இருக்கிறது என்றால் அது காதுக்கு ரசனையாக ஆகி விட்டது ஆனால் கேட்பது மற்றும் ஆவது இது தான் மனதிற்கு ரசனை. மந்திரமே மன்மனாபவ! அதாவது மனதால் என் ஒருவனை மட்டும் நினைவு செய் என்றிருக்கிறது. மனதை தந்தையோடு இணைக்க வேண்டும். எப்பொழுது மனம் இணைந்து விடுகிறதோ, மேலும் மனம் எங்கே இருக்குமோ, அங்கே சொருபமும் கலபமாக ஆகி விடும். பாருங்கள் எப்படி ஏதாவது ஒரு இடத்தில் அமர்ந்திருந்து மனம், சுகம் மற்றும் குஷியின் விஷயங்களில் சென்று விடுகிறது என்றால் சொரூபமே அதுவாக ஆகி விடுகிறது. அப்படி மனதின் ரசனை என்றால் எங்கு மனம் இருக்குமோ அந்த மாதிரி ஆகி விடுவார்கள். இப்பொழுது காது ரசனைக்கான காலம் முடிந்து போயிற்று மேலும் மனதின் ரசனைக்கான காலம் நடந்து கொண்டிருக்கிறது. ஆக இப்பொழுது என்னவாகி விட்டீர்கள்? பாக்கியத்தின் கஜானாக்களின் எஜமானன், மிக உயர்ந்த பாக்கியவான் ஆகி விட்டீர்கள் இல்லையா? எப்படி தந்தையோ அப்படி நாங்கள். அந்த மாதிரி நினைக்கிறீர்கள் தான் இல்லையா? சாவியையும் கூறியிருக்கிறோம், மேலும் விதியையும் கூறியிருக்கிறோம். இப்பொழுது சாவியைப் போடுவது உங்களுடைய வேலை சாவி போட்டு திறக்கத் தெரியும் இல்லையா? ஒருவேளை சாவியைத் தவறாக சுற்றிவிட்டீர்கள் என்றால், மிகக் கடினமாகி விடும். சாவியும் உடைந்து விடும் கஜானாவும் சென்று விடும். அப்படி நீங்கள் அனைவரும் நேராக சாவி போடக்கூடிய பல கோடி மடங்கு பாக்கியசாலிகள் தான் இல்லையா? பல கோடி மடங்கு பாக்கியசாலியின் அடையாளமாக என்ன இருக்கும்? அவருடைய ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு இருக்கும். மேலும் அவர் ஒவ்வொரு அடியிலும்

பல மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்வார். ஒரு அடி கூட பல மடங்கு வருமானத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டதாக இருக்காது. எனவே இரு மடங்கு, ஒரு மடங்கு என்று தாமரை மலரையும் கூறுகிறார்கள். ஒருவேளை தாமரை மலருக்குச் சமமாக இல்லை என்றால் கூட, தன்னுடைய பாக்கியத்தை உருவாக்க முடியாது. சேற்றில் மாட்டிக்கொள்வது என்றால், பாக்கியத்தை இழப்பது, அப்படி பதமாபதம் பாக்கியசாலி என்றால் பதம் (தாமரை) சமமாக இருப்பது. மேலும் பல மடங்கு வருமானம் செய்வது அப்படி இந்த இரண்டுமே அடையாளங்கள். எப்பொழுதும் விலகியிருப்பவராக மற்றும் தந்தைக்குப் பிரியமானவராக ஆகியிருக்கிறீர்களா? விலகி இருக்கும் நிலை தான் தந்தைக்குப்பிரியமானது. யார் எந்தளவு விலயிருப்பாரோ அந்த அளவு இயல்பாகவே தந்தைக்குப் பிரியமானவராக ஆகி விடுகிறார். ஏனென்றால், தந்தையும் எப்பொழுதும் விலகியிருக்கிறார். அப்படி அவரும் தந்தைக்குச் சமமாக ஆகி விட்டார் இல்லையா? அப்படி ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு அடி என்றால் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு வார்த்தையில், ஒவ்வொரு காரியத்தில் பல மடங்கு வருமானம் ஆகிறதா என்று சோதனை செய்யுங்கள். வார்த்தைகளும் சக்திசாலியான, காரியமும் சக்திசாலியானதாக, எண்ணமும் சக்திசாலியானதாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். சக்தி நிறைந்த நிலையில் வருமானம் இருக்கும், வீணானதில் வருமானம் சென்று விடும். எனவே ஒவ்வொருவரும் தன்னுடைய சார்ட்டை நீங்களே சோதனை செய்யுங்கள். செய்வதற்கு முன்பு சோதனை செய்வது, இது தான் யதார்த்தமான சோதனை ஆனால் செய்த பிறகு சோதனை செய்தீர்கள் என்றால் எதைச் செய்து விட்டோமோ அதுவோ நடந்து விட்டது இல்லையா? எனவே முதலில் சோதனை செய்ய வேண்டும், பிறகு செய்ய வேண்டும். முதலில் யோசிப்பது பிறகு செய்வது, இது தான் விவேகம் நிறைந்த மற்றும் ஞானம் நிறைந்தவரின் அடையாளம். செய்த பிறகு ஒருவேளை யோசித்தீர்கள் என்றால் பாதியை இழந்தீர்கள், பாதியை அடைந்தீர்கள். செய்வதற்கு முன்பு யோசித்தீர்கள் என்றால், எப்பொழுதுமே அடைந்தீர்கள். ஞானம் நிறைந்த ஆத்மா அதாவது விவேகமானவர் இரவு மற்றும் காலையில் மட்டும் சோதனை செய்வதில்லை, ஆனால் ஒவ்வொரு நேரமும் முதலில் சோதனை செய்வார் பிறகு செய்வார். எப்படி பெரிய மனிதர்கள் முதலில் உணவை சோதனை செய்விப்பார்கள், பிறகு அருந்துவார்கள். அப்படி இந்த எண்ணமும் புத்திக்கான உணவாகும். எனவே குழந்தைள் நீங்கள் எண்ணத்திற்கும் சோதனை செய்து பிறகு ஏற்றுக் கொள்ள வேண்டும் அதாவது காரியத்தில் கொண்டு வர வேண்டும். எண்ணமே சோதனை ஆகி விட்டது என்றால் வார்த்தைகள் மற்றும் காமம் இயல்பாகவே சோதனை

செய்ததாக ஆகி விடும். தையே எண்ணம் தான் இல்லையா? உங்களை மாதிரி பெரியவர்கள் கல்பத்திலேயே வேறு யாரும் இருந்ததே இல்லை.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** சேவாதாரியின் விசேஷமே தியாகம் மற்றும் தபஸ்யா. எங்கு தியாகம் மற்றும் தபஸ்யா இருக்கிறதோ அங்கு சேவாதாரியின் வெற்றி எப்பொழுதுமே இருக்கும். சேவாதாரி என்றால், யாருக்கு ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லையோ அவர் தான். ஒரு தந்தை தான் முழு உலகம். எப்பொழுது உலகமே தந்தையாகி விட்டார் என்றால், வேறு என்ன வேண்டும்? தந்தையைத் தவிர வேறு எதுவும் தென்பட வேண்டாம். அனைத்துக் காரியங்களைச் செய்து கொண்டே சென்றாலும், வந்தாலும் மற்றும் உணவு அருந்தினாலும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த எண்ணத்தை மட்டுமே வைப்பது என்றால், வெற்றி அடைபவர் ஆவது. வெற்றி குறைவாக இருக்கிறது என்றால் அவசியம் பாப்தாதாவுடன் வேறு யாரோ இடையில் வந்து விட்டார்கள். இதை சோதனை செய்யுங்கள். வெற்றி அடைபவரின் அடையாளம் ஒரு தந்தையில் முழு உலகமும் இருக்கிறது.

**குமாரிகளுடன் சந்திப்பு:** குமாரிகளைப் பார்த்து பாப்தாதா மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். ஏன்? ஏனென்றால், ஒவ்வொரு குமாரியும் அனேகர்களை விழித்தெழச் செய்வதற்குப் பொறுப்பாளர் ஆவார். அப்படி குமாரிகளின் எதிர்காலத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். ஒவ்வொரு குமாரியும் உலகிற்கு நன்மை செய்பவராக ஆவார். குடும்பத்திற்கு மட்டும் நன்மை செய்பவராக இன்றி, உலகிற்கு நன்மை செய்பவராக ஆவார். ஒருவேளை குமாரி குடும்பஸ்தர் ஆகி விட்டார் என்றால் குடும்பத்திற்கு மட்டும் நன்மை செய்பவர் ஆகி விட்டார் ஆனால் பிரம்மாகுமாரி ஆகி விட்டார் என்றால், உலகிற்கே நன்மை செய்பவர் ஆகி விடுகிறார். நீங்கள் அனைவரும் என்னவாக ஆகிறவர்கள்? பொதுவாகப் பார்த்தீர்கள் என்றால், குமாரிகளுக்கு பக்தி காலத்தின் இறுதியில் கூட பூஜை நடக் கிறது அப்படி இறுதி வரையிலும் அந்த அளவு பூஜை நடக்கிறது. குமாரிகளின் வாழ்க்கைக்கு மிகுந்த மகத்துவம் உண்டு. குமாரிகளுக்கு பிராமண வாழ்க்கையில் லிஃப்ட்டும் இருக்கிறது. குமாரிகள் எவ்வளவு விரைவில் சேவை நிலையத்தின் பொறுப்பாளர் ஆகி விடுகிறார். குமாரர்களுக்கு காலம் தாழ்த்தி வாய்ப்பு கிடைக்கிறது. குமாரி ஒருவேளை பந்தயத்தில் முன்னேறிச் சென்றார் என்றால், தன்னை மிக அதிகமாக முன்னேறச் செய்ய முடியும். ஒரு குமாரி அனேக சேவை நிலையங்களைக் கவனிக்க முடியும். டிராமா அனுசாரம் இந்த லிஃப்ட் கிஃப்ட்டின் ரூபத்தில் கிடைத்திருக்கிறது. கடும் உழைப்புக்குப் பிறகு அல்ல. குமாரிகளின்

விசேஷம் என்ன? குமாரி வாழ்க்கை என்றால் சம்பூர்ண தூய்மை. ஒருவேளை குமாரி வாழ்க்கையில் இந்த விசேஷம் இல்லை என்றால், அவருக்கு எந்த மகத்துவமும் இல்லை. பிரம்மாகுமாரி என்றால் மனதளவில் கூட தூய்மையின்மையின் எண்ணம் இருக்க வேண்டாம். அப்பொழுது தான் பூஜைக்குரியவர். இல்லையென்றால் உடைந்து விடுகிறது. மேலும் உடைந்ததற்கு பூஜை இருக்காது. அப்படி இந்த விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? இவ்வளவு அனைத்து குமாரிகளும் சேவாதாரி ஆகி விட்டார்கள் என்றால், எவ்வளவு சென்டர்கள் திறக்கப்பட்டு விடும். பாப்தாதா யாருக்கும் குடும்ப சேவையை விடுவதற்கும் சொல்வதில்லை ஆனால் சமநிலை இருக்க வேண்டும். எந்த அளவு இந்த சேவையில் பிஸியாக ஆகிக் கொண்டே போனால் அது தானாகவே விடுபட்டு விடும். வேலையை விடுங்கள் என்று யாருக்கும் கூறாதீர்கள். இல்லையென்றால் யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள், எப்படி அஞ்ஞானியிடம் பீடி குடிப்பதை விடுங்கள், சிகரெட் குடிப்பதை விடுங்கள் என்றால், விடுபடுவதில்லை, அனுபவத்தின் மூலம் விட்டு விடுகிறார்கள். அதே போலவே நீங்களும் எப்பொழுது இந்த சேவையில் பிஸியாகி விடுவீர்களோ. அப்பொழுது அது விடுபட்டு விடும். இதுவரையிலும் குஜராத்திற்கு சீர்வரிசையில் சென்டர் கிடைக்கவில்லை, மும்பைக்கு கிடைத்திருக்கிறது. குஜராத் என்ன விரும்புகிறதோ அதைச் செய்ய முடியும். குறை ஒன்றும் இல்லை, எண்ணம் மற்றும் சிஸ்டத்தை மட்டும் இன்னும் தொடங்கவில்லை. அனைத்து குமாரிகளும் பாப்தாதாவின் குலவிளக்கு தான் இல்லையா? தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருந்தீர்கள் என்றால், இந்த வாழ்க்கையில் தந்தையினுடையவராக ஆகி விட்டீர்கள். இதே வாழ்க்கை உங்களை முன்னேற்றவும் செய்யும் மேலும் கீழே தள்ளவும் செய்யும். அப்படி அனைவரும் ஏறும் கலையின் பாதையில் வந்து சேர்ந்து விட்டீர்கள் தான் இல்லையா. நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை வைத்துக் கொண்டே பலமடங்கு வருமானத்தை சேமிக்கக்கூடிய பதம்பதி (பல மடங்கு செல்வந்தர்) ஆகுக!**

தந்தை, குழந்தைகளுக்கு மிக உயர்ந்த நிலையில் இருப்பதற்கான எச்சரிக்கை கொடுக்கிறார். எனவே இப்பொழுது கொஞ்சம் கூட கவனக்குறைவாக இருப்பதற்கான நேரம் இல்லை, இப்பொழுதோ ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை வைத்துக் கொண்டே, ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் செய்து, பதம்பதி (பல மடங்கு செல்வந்தர்) ஆகுங்கள். எப்படி பதமாபதம் பாக்கியசாலி

என்று பெயர் இருக்கிறதோ அதே போல் காரியமும் இருக்க வேண்டும். ஒரு அடி கூட பல மடங்கு வருமானம் இன்றி இருக்க வேண்டாம். எனவே மிக யோசித்து புரிந்து ஒவ்வொரு அடியையும் ஸ்ரீமத்படி எடுத்து வையுங்கள். ஸ்ரீமத்தில் மனம் சொல்லும் வழியை கலக்காதீர்கள்.

**சுலோகன்: மனதை கட்டளைக்கு ஏற்றபடி நடத்து வித்தீர்கள் என்றால், மன்மனாபவத்தின் நிலை இயல்பாகவே இருக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து சூழ்நிலைகளுக்கான சமாதானம் -பறக்கும் பறவை ஆகுங்கள்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் கண்களின் மொழி மூலமாக இந்த உலகத்திலிருந்து விலகி அவ்யக்த வதனவாசி ஆவதற்காக சமிக்ஞை கொடுக்கிறார். எப்படி பாப்தாதா அவ்யக்த வதனவாசியாக இருக்கிறாரோ அது போலவே நீங்களும் அந்த மாதிரி ஆகுக! என்ற வரதானம் கொடுக்கிறார். பரிஷ்தாக்களின் உலகத்தில் இருந்து கொண்டே இந்த பௌதீக உலகத்தில் காரியம் செய்வதற்காக வாருங்கள். காரியம் செய்தீர்கள், கர்மயோகி ஆனீர்கள் பிறகு பரிஷ்தா ஆகி விடுங்கள். இந்தப் பயிற்சியைத் தான் எப்பொழுதும் செய்து கொண்டே இருங்கள். நான் பரிஷ்தாக்களின் உலகத்தில் இருப்பவன், அவ்யக்த பரிஷ்தா சொரூபத்தில் இருக்கிறேன் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். தரையில் வசிப்பவன் அல்ல, ஆகாயத்தில் வசிப்பவன். பரிஷ்தா என்றால் இந்த விகார உலகம், விகாரம் நிறைந்த பார்வை, உள்உணர்விலிருந்து விலகியிருப்பவர். இந்த அனைத்து விஷயங்களிலிருந்து விடுபட்டு இருப்பவர். அவர் எப்பொழுதும் தந்தையின் பிரியமாவைர் மற்றும் தந்தை அவருடைய பிரியமானவர். இருவர்களும் ஒருவர் இன்னொருவரின் அன்பில் மூழ்கியிருப் பவர்கள். அந்த மாதிரி பரிஷ்தாவாக ஆகியிருக்கிறீர்களா? எப்படி தந்தை விலகியிருப்பவராக இருந்த போதிலும் (உடலில்) பிரவேசம் செய்து காரியம் செய்வதற்காக வருகிறார், அதே போல் பரிஷ்தா ஆத்மாக்களும் கர்ம பந்தனத்தின் காரணமாக இன்றி ஆனால் சேவையின் பந்தனத்திற்காக உடலில் பிரவேசம் செய்து காரியம் செய்து கொண்டே மேலும் எப்பொழுது விரும்புகிறார்களோ அப்பொழுது விடுபட்டு சென்று விடுகிறார்கள். அந்த மாதிரி கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும் இதைத் தான் பரிஷ்தா என்ற கூறுவது.

தந்தையின் குழந்தை ஆனீர்கள் என்றால், பழைய உடல் மற்றும் உடலின் உலகத்தின் சம்மந்தம் முடிவடைந்தது, எனவே இதை மாஜீவா ஜீவன் அதாவது உடலில் இருந்து கொண்டே இறந்து மறுவாழ்வு வாழ்வது என்று கூறுகிறீர்கள்.

அப்படியானால் பழைய கர்மங்களின் கணக்கு முடிவடைந்தது, புதிய பிராமண வாழ்க்கைக்கான கணக்கு தொடங்கியது. உடலில் இருந்து கொண்டே இறந்து வாழ்பவனாக ஆகியிருக்கிறேன் என்ற இதை அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள் மற்றும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? என்ன கூறலாம்? ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? இறந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது இறந்து விட்டீர்களா? எப்பொழுது இறந்து விட்டீர்களோ அப்பொழுது பழைய கணக்கு முடிவடைந்தது. பிராமண வாழ்க்கை கர்ம பந்தனத்தின் வாழ்க்கையாக இருப்பதில்லை. கர்மயோகி வாழ்க்கையின் வாழ்க்கையாக இருக்கும். எஜமானன் ஆகி காரியம் செய்கிறீர்கள் என்றால் கர்ம பந்தனமாக ஆகவில்லை, ஆனால் கர்மேந்திரியங்களின் எஜமானன் ஆகி என்ன விரும்புகிறீர்களோ, எப்படிப்பட்ட காரியத்தை விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் காரியம் செய்ய விரும்புகிறீர்களோ அந்த மாதிரி கர்மேந்திரியங்கள் மூலம் செய்விப்பவராக இருப்பவர். அப்படி பிராமணன் என்றால் பரிஷ்தா. கர்ம பந்தனம் உள்ள ஆத்மா அல்ல, ஆனால் சேவையின் சுத்த பந்தனம் உள்ளவர். இந்த உடல் சேவைக்காக கிடைத்திருக்கிறது. உங்களுடைய கர்ம பந்தனத்தின் கணக்கு வழக்கு உள்ள வாழ்க்கையின் கணக்கு முடிவடைந்தது. இது புதிய வாழ்க்கை இதையோ அனைவரும் புரிந்து கொள்கிறீர்கள் இல்லையா. பழைய கணக்கு இதுவரையிலும் இருந்து விடவில்லையே? மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? டீச்சர்கள் என்ன நினைக் கிறீர்கள்? கணக்கு வழக்கை முடிப்பதில் திறமை நிறைந்தவர்களா அல்லது மந்தமானவர்களா? முடிக்கத் தெரியும் தான் இல்லையா? பரிஷ்தா ஆகி விட்டீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். நடந்து செல்பவர், ஓடுபவர், உயரம் தாண்டிச் செல்பவர், இவர்கள் அனைவரையும் விட உயரே பறந்து செல்பவர்களாக ஆகி விட்டீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் இல்லையா? அனாதி ரூபத்திலோ பறப்பவர்களாகத் தான் இருக்கிறீர்கள். ஆத்மா பறக்கும் பறவை, நடந்து செல்லும் பறவை அல்ல. அப்படி அனாதி சம்ஸ்காரமாக என்ன இருந்ததோ அதை சுமையின் காரணமாக மறந்து விட்டீர்கள், பரிஷ்தாவிற்குப் பதிலாக கர்ம பந்தனம் உள்ள, பறக்கும் பறவைக்குப் பதிலாக கூண்டில் அடைக்கப்பட்ட பறவை ஆகி விட்டீர்கள், இப்பொழுது மீண்டும் பறக்கும் பறவையின் அனாதி சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். அதாவது பரிஷ்தா ரூபத்தில் நிலைத்திருங்கள். பாப்தாதா போலவே நீங்களும் ஆகுங்கள் என்ற வரம் பெற்றவராக ஆகுங்கள். இதைத் தான் சுலபமான முயற்சி என்று கூறுவது. விதவிதமான சூழ்நிலைகளில் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்ற கடின

உழைப்பு செய்கிறீர்கள் இல்லையா? இதன் மூலம் சூழ்நிலை பெரியதாகவும் மற்றும் நீங்கள் சிறியவர்களாகவும் ஆகி விடுகிறீர்கள். சூழ்நிலை சக்திசாலியானதாக மற்றும் நீங்கள் பலஹீனமானவர்களாகி விடுகிறீர்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அது இயற்கையின் ஆதாரத்தினால் ஏற்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், தன்னுடைய உடலின் சம்மந்தம் மூலமாக உருவான சூழ்நிலையாக இருந்தாலும், உலகியல் குடும்பம், ஆன்மீக குடும்பத்தின் சம்மந்தத்தின் ஆதாரத்தில் எந்த சூழ்நிலையாக இருந்தாலும், தன்னுடைய மற்றும் மற்றவர்களின் சம்ஸ்காரத்தின் ஆதாரத்தில் ஏதாவது எதிர்மறையான சூழ்நிலையாக இருந்தாலும், அனைத்து சூழ்நிலைகளிலும் என்ன? மற்றும் ஏன் என்ற கேள்விக்கான ஒரே பதில் -பறக்கும் பறவை ஆகி விடுங்கள். சூழ்நிலை கீழேயும் மேலும் நீங்கள் மேலே சென்று விடுவீர்கள். மேலே இருந்து பார்க்கும் பொழுது கீழே இருக்கும் பொருள் எவ்வளவு தான் பெரியதாக இருந்தாலும் ஆனால் சிறியதாக அனுபவம் ஆகும், எனவே அனைத்து சூழ்நிலைகளையும் சுலபமாக கடந்து செல்வதற்கான சுலபமான வழி -பரிஷ்தா ஆகுங்கள், பறக்கும் பறவை ஆகுங்கள். சுலபமான முயற்சி என்ன என்று புரிந்து கொண்டீர்களா? என்னுடைய இந்த சுபாவம், சம்ஸ்காரம், பந்தனம் இருக்கிறது என்ற இந்த என்னுடைய என்பதின் பந்தனத்தை உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்த பிறகும் முடிக்கவில்லையா? பரிஷ்தா நிலையின் மொழி என்னுடையது, என்னுடையது என்பதல்ல. பரிஷ்தா என்றால் என்னுடையதாக என்ன இருந்ததோ அது உன்னுடையதாக ஆகி விட்டது. இந்த என்னுடையது, என்னுடையது என்பது தான் தரையில் வாழ்பவராக ஆக்குகிறது. மேலும் உன்னுடையது. உன்னுடையது தான் ஆசனதாரியாக ஆக்குகிறது. அப்படி பரிஷ்தா ஆவது என்றால் என்னுடைய, என்னுடைய என்ற பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆவது. ஆன்மீக வாழ்க்கையில் கூட என்னுடையவர் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. அந்த மாதிரி பரிஷ்தாவாக ஆகியிருக்கிறீர்களா? மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர்கள் என்னவாக ஆவீர்கள்? பரிஷ்தா ஆகத் தெரியும் தான் இல்லையா? அனைத்து பிரச்சனைகளுக்கும் ஒரே ஒரு சமாதானத்தை நினைவில் வையுங்கள் -பறக்கும் பறவை ஆவது மற்றும் ஆக்குவது. புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி தந்தைக்குச் சமமான அப்பக்த ரூபமுடைய பரிஷ்தா சொரூபமானவர்களுக்கு, எனக்கு ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அந்த மாதிரி விலகிய மற்றும் அன்பான நிலையில் இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் கர்மேந்திரியங்களை வென்று, கர்மயோகி மற்றும் கர்மாதீத் நிலை என்ற இந்தப் பயிற்சியில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் பந்தனத்திலிருந்து

விடுபட்ட மற்றும் சேவையின் சம்பந்தத்தில் இருக்கக்கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக நீங்களும் அந்த மாதிரி ஆகுக என்ற வரம் பெற்ற குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த சந்திப்பு: (1) எப்பொழுதும் தன்னை இந்த உலக நாடகத்திற்குள் கதாநாயக பாத்திரம் ஏற்று நடிபவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா?** யார் கதாநாயக பாத்திரம் செய்பவராக இருப்பாரோ அவருக்கு ஒவ்வொரு அடியிலும் தன் மேல் கவனம் இருக்கும், அவர் ஒவ்வொரு அடியையும் அந்த மாதிரி எடுத்து வைப்பார் அதைப் பார்த்து அனைவரும் ஆஹா! ஆஹா! என்று பாராட்டி இன்னும் ஒரு தடவை என்று கூறுவார்கள். ஒருவேளை கதாநாயக பாத்திரத்தைச் செய்பவர்களின் ஏதாவது ஒரு அடி மேலே கீழே சென்று விட்டது என்றால், அவரை கதாநாயகன் என்று சொல்ல முடியாது. நீங்கள் அனைவரும் இரட்டை கதாநாயகர்கள். கதாநாயக விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர்களாகவும் இருக்கிறீர்கள். மேலும் வைரம் மாதிரியான வாழ்க்கையை உருவாக்குபவர்களாகவும் இருக்கிறீர்கள். அந்த மாதிரி தன்னுடைய சுயகௌரவத்தை அனுபவம் செய்கிறீர்களா? ஒன்று தெரிந்து கொள்வது, இன்னொன்று தெரிந்து அதன் படி நடப்பது! அப்படி தெரிந்திருக்கிறீர்களா மற்றும் தெரிந்து நடந்து கொள்கிறீர்களா? எப்பொழுதும் தன்னுடைய கதாநாயக பாத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சியோடு இருங்கள், ஆஹா! நாடகமே ஆஹா! மேலும் ஆஹா என்னுடைய பாத்திரமே ஆஹா! ஒருவேளை சிறிது சாதாரண காரியம் நடந்து விட்டது என்றாலும் கதாநாயகன் என்று கூற முடியாது. எப்படி தந்தை கதாநாயக் பாத்திரம் ஏற்று செய்பவராக இருக்கிறார் என்றால், அவருடைய ஒவ்வொரு காரியமும் மகிமை பாடப்படுகிறது மற்றும் பூஜை செய்யப்படுகிறது. அந்த மாதிரி தந்தையுடன் எந்த சகயோகி ஆத்மாக்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கும் கதாநாயக பாத்திரம் இருக்கும் காரணத்தினால் அவருடைய ஒவ்வொரு காரியமும் மகிமைக்கும் மற்றும் பூஜைக்கும் உரியதாக ஆகி விடுகிறது. சொரூபம் ஆன பிறகு ஒருபொழுதும் மறக்க முடியாது.

**2) வாழ்க்கையை உயர்ந்ததாக ஆக்குவதற்கான சுலபமான வழி எது?** எப்பொழுது தன்னை டிரஸ்டி என்று புரிந்து கொண்டு நடக்கிறீர்களோ அப்பொழுது உயர்ந்த வாழ்க்கை உருவாகிறது. டிரஸ்டி என்றால், விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர். அப்படி அனைவரையும் தந்தை டிரஸ்டி ஆக்கி விட்டார். நீங்கள் டிரஸ்டி தான் இல்லையா? டிரஸ்டி ஆகி இருப்பதினால் குடும்பஸ்தனின் உணர்வு இயல்பாகவே அகன்று விடுகிறது. குடும்பஸ்தனின் நிலை தான் உயர்ந்த

வாழ்க்கையிலிருந்து கீழே கொண்டு வருகிறது. டிரஸ்டிக்கு என்னுடையது என்று எதுவும் இருப்பதில்லை. எங்கு என்னுடையது என்பது இருப்பதில்லையோ அங்கு பற்றுதலை வென்ற நிலை இயல்பாக வந்து விடுகிறது. எப்பொழுதும் பற்றுதலை வென்றவர் என்றால் எப்பொழுதும் சிரேஷ்ட மற்றும் சுகமானவர். பற்றுதலில் துக்கம் இருக்கும். எனவே பற்றுதலை வென்றவர் ஆகுங்கள்.

**3) எப்பொழுதும் கர்மயோகி ஆகி ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா?** செய்யும் கர்மம் அதாவது காரியம் மற்றும் யோகா இரண்டும் இணைந்திருக்கிறதா? எப்படி உடல் மற்றும் ஆத்மா இணைந்திருந்து காரியம் செய்கிறதோ, அதே போன்று கர்மம் மற்றும் யோகா இரண்டும் இணைந்திருக்கிறதா? காரியம் செய்து கொண்டே நினைவு மறக்க வேண்டாம். மேலும் நினைவில் இருந்து கொண்டே காரியம் மறந்து விட வேண்டாம். சிலர் அந்த மாதிரியும் செய்கிறார்கள், எப்பொழுது கர்ம சேத்திரத்தில் செல்கிறார்கள் என்றால் நினைவு மறந்து விடுகிறது. இதன் மூலம் காரியம் மற்றும் நினைவு பிரிந்து விட்டது என்று நிரூபணம் ஆகிறது ஆனால் இவை இரண்டும் இணைந்திருக்கின்றன. உங்களுடைய பட்டமே கர்மயோகியாகும். காரியம் செய்து கொண்டே நினைவிலிருப்பவர் எப்பொழுதும் விலகியிருப்பவராகவும், அன்பானவராகவும் இருப்பார், லேசானவராக இருப்பார், எந்தவொரு காரியத்தின் சுமை அனுபவம் செய்ய மாட்டார். கர்மயோகியைத் தான் வேறு வார்த்தைகளில் தாமரை மலர் என்று கூறுவது. அப்படியானால் தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறீர்களா? ஒருபொழுதும் ஏதாவது சேறு அதாவது மாயாவின் வைப்ரேஷன் தொடுவல்லையே? எப்பொழுதாவது மாயா வருகிறதா அல்லது விடைபெற்று சென்று விட்டதா? மாயாலை தன்னுடன் அமர வைத்தோ விடுவதில்லையே. மாயாவை அமர வைப்பது என்றால் தந்தையிடமிருந்து விலகுவது, எனவே மாயாவின் ஞானம் நிறைந்தவராகி தூரத்திலிருந்தே விரட்டி விடுங்கள். ஞானம் நிறைந்தவர் அனுபவத்தின் ஆதாரத்தில் மாயா எப்பொழுது மற்றும் எப்படி உருவாகிறது என்று தெரிந்திருக்கிறார். பலவீனத்தினால் மாயாவின் ஜென்மம் ஏற்படுகிறது. எந்தவிதமான பலஹீனம் இருந்தால் மாயா வரும். எப்படி பலஹீனம் மூலம் அனேக நோய்களின் கிருமிகள் உருவாகி விடுகின்றன. அதே போல் ஆத்மாவின் பலஹீனத்தினால் மாயாவிற்கு ஜென்மம் கிடைத்து விடுகிறது. காரணம் தன்னுடைய பலஹீனம் மேலும் அதற்கான நிவாரணம் . தினசரி முரளி. முரளி தான் சூடான உணவு. சக்தி நிறைந்த உணவு என்னென்ன சக்திகள் வேண்டுமோ. அந்த அனைத்தும் நிரம்பிய தினசரி உணவு கிடைக்கிறது. யார் தினசரி சக்தி நிறைந்த உணவை அருந்துகிறாரோ அவர் பலஹீனமானவராக ஆக

முடியாது. தினசரி இந்த உணவை அருந்துகிறீர்கள் தான் இல்லையா? இந்த உணவிற்கு வீரதம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. தினசரி அந்த மாதிரி சக்தி நிறைந்த உணவு கிடைப்பதினால் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருப்பீர்கள். உணவின் கூடவே உணவை ஜீரணம் செய்வதற்கான சக்தியும் வேண்டும். ஒருவேளை கேட்பதற்கு மட்டுமான சக்தி இருக்கிறது. சிந்திப்பதற்கான சக்தி இல்லை என்றாலும் சக்திசாலியாக ஆக முடியாது. கேட்பதற்கான சக்தி என்றால், உணவு அருந்தினீர்கள் மற்றும் சிந்தனை சக்தி அதாவது உணவை ஜீரணம் செய்தீர்கள். இரண்டு சக்தி உள்ளவர் பலஹீனம் ஆக முடியாது.

**இல்லறத்தில் இருப்பவர்களுடன்:** அனைவரும் இல்லறத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும் விலகியிருப்பவராகவும் மற்றும் அன்பான நிலையில் இருப்பவர்களாகவும் தான் இருக்கிறீர்கள் இல்லையா. குடும்பத்தின் எந்தவொரு உலகியல் சம்மந்தம் மற்றும் உலகியல் வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷனிலோ வந்து விடவில்லையே? இந்த அனைத்து உலகியல் விஷயங்களிலிருந்தும் விலகி ஆன்மீக சம்மந்தத்தில், வாயுமண்டலத்தில், வைப்ரேஷனில் இருக்கிறீர்களா? குடும்பத்தன்மை இல்லை தான் இல்லையா? வீட்டின் சூழ்நிலையையே அதே மாதிரி ஆன்மீகமாக ஆக்கியிருக்கிறீர்களா? குடும்பத்தின் வீடாக அனுபவம் ஆகாமல் சேவை நிலையத்தின் வாயுமண்டலம் அனுபவம் ஆகிறதா? யார் வந்தாலும் இது குடும்பத்தினர் வாழும் இடம் இல்லை. ஆன்மீகமான இடம் என்று அனுபவம் செய்ய வேண்டும். எந்த விதமான குடும்பத்தின் உணர்வுகள் வர வேண்டாம். வருபவர்கள் இது ஒன்றும் சாதாரண வீடு அல்ல, ஆனால் கோயில் ஆகும் என்று அனுபவம் செய்ய வேண்டும். இது தான் தூய்மையான இல்லறத்தினரின் சேவையின் பிரத்யக்ஷ சொரூபம். ஸ்தானமும் சேவை செய்ய வேண்டும். வாயுமண்டலமும் சேவை செய்ய வேண்டும்.

எப்படி சேவை நிலையத்தில் ஒருவேளை யாராவது சுபாவம் சம்ஸ்காரத்தின் வசமாகி கொஞ்சம் ஒரு மாதிரியாக நடந்து கொள்கிறார் என்றால் அனைவரும் அந்த மாதிரி இருக்கக்கூடாது என்று சொல்வார்கள். அதே போலவே உங்களுடைய வீட்டிலும், இந்த இடத்தில் அந்த மாதிரி ஒரு காரியம் கூட நடக்கக்கூடாது என்று உணர்தல் இருக்க வேண்டும். இந்த மாதிரி காரியத்தை நான் செய்யக் கூடாது என்ற உணர்வு இதயத்தில் வர வேண்டும். எப்படி சேவை நிலையத்தில் ஏதாவது குறைகளைப் பார்க்கிறீர்கள் என்றால், சரி செய்து விடுகிறீர்கள், அதே போல் தனது குடும்பத்தின் இடத்தையும் மற்றும் நிலையையும் சரி செய்து விட வேண்டும். வீடு குடும்பமாக அன்றி கோயிலாகத் தென்பட வேண்டும். எப்படி கோயிலின்

வாயுமண்டலம் அனைவரையும் ஈர்க்கிறது அதே போல் உங்களுடைய வீட்டிலிருந்து தூய்மையின் நறுமணம் வர வேண்டும். எப்படி அகர்பத்தியின் நறுமணம் நாலாபுறங்களிலும் பரவுகிறது. இதே விதமாக தூய்மையின் நறுமணம் தொலைதூரம் வரை பரவ வேண்டும், இதைத் தான் தூய்மையான இல்லறம் என்று கூறுவது. நல்லது.

**வரதானம்: தன்னுடைய வெற்றி உறுதியானது என்று புரிந்து எப்பொழுதும் கவலையின்றி இருக்கக்கூடிய நிச்சயபுத்தி உடையவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் எப்பொழுதும் தந்தை மேல், தன்னுடைய வாழ்க்கைப் பங்கின் மேல், மேலும் வாழ்க்கை நாடகத்தின்படி ஒவ்வொரு விநாடி நடப்பதில் 100-சதவிகிதம் நிச்சயபுத்தி உடையவராக இருக்கிறாரோ அவருடைய வெற்றி உறுதியானது. உறுதியான வெற்றி ஏற்படும் காரணத்தினால் எப்பொழுதும் கவலையின்றி இருப்பார். அவருடைய முகத்திலிருந்து ஒருபொழுதும் கவலையின் ரேகைகள் தென்படாது. அவருக்கு இந்தக் காரியம் மற்றும் இந்த எண்ணம் ஏற்கனவே சித்தியானது என்ற நிச்சயம் எப்பொழுதும் இருக்கும். அவருக்கு ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் கேள்வி எழ முடியாது.

**சுலோகன்: கேட்பது கூறுவதில் பாவனையை மற்றும் உள்நோக்கத்தை மாற்றி விடுவது தான் வாயுமண்டலத்தைக் கெடுப்பது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு பிராமணனும் சைத்தன்ய நட்சத்திர மண்டலத்தின் அலங்காரம்!

இன்று ஞான சூரியன், ஞான சந்திரன் தங்களுடைய நட்சத்திர மண்டலத்தை பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள். நட்சத்திரங்களின் நடுவே ஞான சூரியன், ஞான சந்திரன் இருவர்களுமே சேர்ந்து வந்திருக்கிறார்கள். பொதுவாக இந்த பௌதீக உலகத்தில் சூரியன், சந்திரன் மற்றும் கூடவே நட்சத்திரங்கள் சேர்ந்திருப்ப தில்லை ஆனால் சைத்தன்ய நட்சத்திரங்கள் சூரியன் மற்றும் சந்திரனின் உடன் இருக்கிறார்கள், நட்சத்திரங்களின் ஆன்மீகக் கூட்டம். இன்று பாப்தாதா விதவிதமான நட்சத்திரங்களை பார்க்கிறார். ஒவ்வொரு நட்சத்திரத்திலும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது. சின்ன சின்ன நட்சத்திரங்களும் இந்த நட்சத்திர மண்டலத்தை மிக நல்ல அழகானதாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களும் இருக்கத் தான் இருக்கிறார்கள் ஆனால் சிறியவர்களின் மின்மினுப்பு கூட்டத்தின் அழகை அதிகரிக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு நட்சத்திரத்தின் அவசியம் எவ்வளவு இருக்கிறது என்ற இந்த விஷயத்தைப் பார்த்து பார்த்து தான் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். சிறியதிலும் சிறிய நட்சத்திரமும் மிக அவசியமாக இருக்கிறது. மகத்துவம் நிறைந்த காரியம் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்றால் இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் மகத்துவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். எப்படி வெளியுலக குடும்பத்தில் தாய் தந்தையர் ஒவ்வொரு குழந்தையின் குணங்களின், செய்யும் காரியங்களின், நடத்தையின் விஷயங்களை பேசுகிறார்கள். அதே போலவே எல்லைக்கப்பாற்பட்ட தாய் தந்தையாகிய ஞான சூரியன் மற்றும் சந்திரன் எல்லைக்கப்பாற்பட்ட பரிவாரத்தின் மற்றும் அனைத்து நட்சத்திரங்களின் விசேஷங்களை பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். பிரம்மாபாபா அல்லது சந்திரன் இன்று உலகின் நாலாபுறங்களிலும் மூலை மூலையில் மின்னிக் கொண்டிருக்கும் தன்னுடைய நட்சத்திரங்களை பார்த்து பார்த்து விசேஷமாக குஷியில் ஆடிக் கொண்டிருந்தார். ஞான சூரியன் தந்தையோ ஒவ்வொரு நட்சத்திரங்களின் அவசியம் மற்றும் விசேஷத்தை கூறிக் கொண்டே அந்த அளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார், அதை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது. அந்த நேரத்தின்

# 1981 அவ்யக்த முரளி

சித்திரத்தை புத்தியின் நினைவு என்ற கேமரா மூலம் படம் பிடிக்க முடியுமா? சாகாரத்தில் யார் யாரெல்லாம் அனுபவம் செய்திருந்தார்களோ அவர்களோ நல்ல முறையில் தெரிந்து கொள்ள முடியும். முகம் எதிரில் வந்து விட்டது தான் இல்லையா? என்ன தென்படுகிறது? கண்களில் முத்து ஜொலிக்கும் மாதிரி அந்த அளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார்கள். இன்று எப்படி வைர வியாபாரி ஒவ்வொரு வைரத்தின் மகத்துவத்தை வர்ணனை செய்கிறார், அதே போல் சந்திரன் ஒவ்வொரு வைரத்தின் மகிமை செய்து கொண்டிருந்தார். உங்கள் அனைவரின் மகிமையாக என்ன கூறியிருப்பார் என்று நீங்கள் புரிந்து கொள்ள முடியுமா? தன்னுடைய மகான் நிலையின் மகிமையை தெரிந்திருக்கிறீர்களா?

அனைவரின் ஒரு முக்கியமான விஷயத்தின் விசேஷம் மற்றும் மகான் நிலை மிகத் தெளிவாக இருக்கிறது. அது யாராக இருந்தாலும் யானைப்படையோ (மகாரதியோ) அல்லது காலாட்படையோ, சின்ன நட்சத்திரமோ அல்லது பெரிய நட்சத்திரமோ ஆனால் தந்தையை தெரிந்திருக்கும் விசேஷம், தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கும் விசேஷமோ அனைவரிலும் இருக்கிறது தான் இல்லையா. தந்தையை சாஸ்திரங்களின் அதிகாரம் உள்ள மிகப் பெரியவர்கள், மதத்தின் அதிகாரம் உள்ளவர்கள், அறிவியலின் அதிகாரம் உள்ளவர்கள். இராஜ்யத்தின் அதிகாரம் உள்ளவர்கள், பெரிய பெரிய அழியும் பட்டங்களின் அதிகாரம் உள்ளவர்கள் அனைவருமே தந்தையை தெரிந்திருக்கவில்லை ஆனால் நீங்கள் அனைவரும் தந்தையை தெரிந்து கொண்டீர்கள். அவர்கள் இதுவரையிலும் வாருங்கள் வாருங்கள் என்று அழைத்துக் கொண்டே தான் இருக்கிறார்கள். சாஸ்திரவாதிகளோ இப்பொழுது கணக்கைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானிகளோ தங்களுடைய கண்டுபிடிப்புகளில் அந்தளவு மூழ்கியிருக்கிறார்கள். அதனால் தந்தையின் விஷயங்களை கேட்பதற்கும் மற்றும் புரிந்து கொள்வதற்கும் நேரமே இருப்பதில்லை. தன்னுடைய காரியங்களிலேயே மூழ்கியிருக்கிறார்கள். இராஜ்ய அதிகாரம் உள்ளவர்கள் தன்னுடைய இராஜ்யத்தின் நாற்காலியை பாதுகாப்பதிலேயே பிஸியாக இருக்கிறார்கள், நேரமே இருப்பதில்லை. மதத்தலைவர்களோ தங்களுடைய மதம் அழிந்து விடக்கூடாது என்று அதை பாதுகாப்பதிலேயே பிஸியாக இருக்கிறார்கள். இந்த என்னுடைய என்னுடையது என்பதிலேயே மிகவும் பிஸியாக இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் வரவழைப்பதற்கு பதிலாக சந்திப்பு செய்பவர்கள், இந்த விசேஷம் மற்றும் மகான் தன்மை உங்கள் அனைவரிடமும் இருக்கிறது. என்னிடம் என்ன விசேஷம் இருக்கிறது மற்றும் என்னிடமோ ஒரு குணமும் இல்லை என்று அப்படி நினைக்கவில்லையே. என்னில் ஒரு குணமும் இல்லை என்ற

வார்த்தையோ பக்தர்களினுடையது. குணங்களின் கடல் தந்தையின் குழந்தை ஆவது என்றால் குணம் நிறைந்தவர் ஆவது. அப்படி ஒவ்வொருவரிலும் ஏதாவது குணத்தின் விசேஷம் இருக்கிறது. மேலும் தந்தை அந்த விசேஷத்தைக் தான் பார்க்கிறார். எப்படி இராஜ பரிவாரத்தின் ஒவ்வொரு நபரிலும் அந்த அளவு சம்பன்னம் அவசியம் இருக்கிறது. அவர் ஒருபொழுதும் யாசிப்பவராக இருக்க முடியாது என்று தந்தை தெரிந்திருக்கிறார். அந்த மாதிரி குணங்களின் கடல் தந்தையின் குழந்தைகள் ஏதாவது குணத்தின் விசேஷம் இன்றி குழந்தை என்று கூற முடியாது. அப்படி நீங்கள் அனைவரும் குணம் நிறைந்தவர்கள் மகான். விசேஷ ஆத்மாக்கள், சைத்தன்ய நட்சத்திர மண்டலத்தின் அலங்காரம் ஆவீர்கள். நீங்கள் யார் என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? நீங்கள் பலமற்றவர் அல்ல, பலம் நிரம்பியவர்கள் ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள். அந்த மாதிரி ஆன்மீக போதை எப்பொழுதும் இருக்கிறதா? ஆன்மீக நிலையில் ஒருபொழுதும் அபிமானம் இருக்காது, சுவமானம் இருக்கும். சுவமானம் என்றால் சுயம் ஆத்மாவின் உணர்வு. சுவமானம் மற்றும் அபிமானம் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. எனவே எப்பொழுதும் சுவமானம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருங்கள். அபிமானம் என்ற ஆசனத்தை விட்டு விடுங்கள். அபிமானத்தின் ஆசனம் மேலோட்டமாக மிக அலங்கரிக்கப்பட்டதாக இருக்கும். பார்க்கும் பொழுது இதயத்திற்கு பிடித்ததாக ஓய்வாக அமரலாம் என்ற விருப்பம் இருக்கும் ஆனால் உள்ளே முட்களின் ஆசனம் இருக்கும். இந்த அபிமானத்தின் ஆசனம் எப்படி சாப்பிட்டாலும் வேதனை அடை மற்றும் சாப்பிடாவிட்டாலும் வேதளை அடை என்ற பழமொழி இருக்கிறது, இந்த ஆசனமும் அதே போல் தான். ஒருவர் மற்றவரை பார்த்து நானும் ருசி பார்த்து விட வேண்டும் என்று யோசிக்கிறார்கள். இன்னார் இன்னார் அனுபவம் செய்திருக்கிறார். எனவே நானும் ஏன் அனுபவம் செய்யக்கூடாது. அப்படி விடவும் முடியாது, மேலும் எப்பொழுது அமருகிறார்களோ அப்பொழுது முள்ளோ கண்டிப்பாக குத்தும், அந்த மாதிரி வெளிப்படையாக மிக நன்றாக இருப்பதாக தோன்றும். ஏமாற்றம் அளிக்கும் அபிமானத்தின் ஆசனத்தில் அமருவதற்கு ஒருபொழுதும் முயற்சி செய்யாதீர்கள். சுவமானத்தின் ஆசனத்தில் எப்பொழுதும் சுகமானவராக, எப்பொழுதும் உயர்ந்த எப்பொழுதும் அனைத்து பிராப்தி சொரூபத்தின் அனுபவம் செய்யுங்கள். தந்தையை தெரிந்து கொள்வது மற்றும் சந்திப்பு செய்வதற்கான விசேஷத்தை மட்டும் நினைவில் வைத்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். எப்படி சந்திரன் நட்சத்திரங்களை டார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அதே போல் தந்தையை பின்பற்றி நடங்கள் - நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சுவமானத்தின் ஆசனத்தில் அமர்ந்திருக்கக்கூடிய, எப்பொழுதும் தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து விசேஷங்கள் மூலமாக மற்றவர்களையும் விசேஷ ஆத்மாவாக ஆக்கக்கூடிய, சந்திரன் மற்றும் ஞான சூரியனை எப்பொழுதும் பின்பற்றி நடக்கக்கூடிய, அந்த மாதிரி நம்பிக்கைக்குரிய, கட்டளைப்படி நடக்கும் உண்மையான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி அவர்களுடன்:** நீங்களும் அனைவரின் விசேஷங்களை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? (சென்ற இடங்களை) சற்றி வந்ததில் என்ன பார்த்தீர்கள்? சிறியவர்களின் விசேஷத்தையும், பெரியவர்களின் விசேஷத்தையும் பார்த்தீர்கள் இல்லையா. அப்படி விசேஷத்தை வர்ணனை செய்வதில், கேட்பதில் அனைவரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்கள். அனைவரும் மகிழ்ச்சி அடைந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள் இல்லையா (தாகி அவர்கள் அம்பாலா மற்றும் பிரோஸாபாத் மேளாவின் செய்தியை வகுப்பில் கூறினார்) அதே போலவே எப்பொழுதும் அனைவரும் விசேஷத்தை மட்டுமே வர்ணனை செய்கிறார்கள் என்றால் என்னவாகி விடும் எப்படி விசேஷ காரியத்தில் எப்பொழுதும் குஷியின் இசை ஒலிக்கும் இல்லையா. அதே போல் பிராமண பரிவாரத்தில் நாலாபுறங்களிலும் குஷியின் இசை தான் ஒலித்துக் கொண்டே இருக்கும். சுறுக்கமான மற்றும் இனிமையான பயணமாக இருந்தது. குஷிகளின் சுரங்கத்தைப் பெற்று அனைவரையும் குஷியால் அனைத்தும் நிறைந்தவராக ஆக்கி வந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு ஸ்தானத்தின் தைரியம் மற்றும் உற்சாகம், ஒன்று இன்னொன்றை விட உயர்ந்தது. தந்தையும் குழந்தைகளின் தைரியம் மற்றும் உற்சாகத்திற்காக ஒவ்வொரு குழந்தையின் மகிமையின் குணங்களின் மலர் மழை பொழிகிறார். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) ஒவ்வொருவரும் தன்னுடைய உயர்ந்த எதிர்காலத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா?** எவ்வளவு உயர்ந்த எதிர்காலத்தை உயர்ந்த காரியங்கள் மூலமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? எவ்வளவு உயர்ந்த காரியமோ அந்த அளவே எதிர்காலத்தின் ரேகை நீளமானதாகவும் தெளிவானதாகவும் இருக்கிறது. எப்படி கைகள் மூலமாக எதிர்காலத்தை பார்க்கிறார்கள் என்றால், என்ன பார்க்கிறார்கள்? ரேகை நீளமாக இருக்கிறதா, இடையிடையில் துண்டிக்கலோ படவில்லையே என்று பார்க்கிறார்கள். அதே போல் இங்கேயும் அந்த மாதிரி தான். ஒருவேளை எப்பொழுதும் உயர்ந்த காரியம் செய்பவராக இருக்கிறார் என்றால் எதிர்காலத்தின்

ரேகையும் நீளமானதாக மற்றும் நிரந்தரமாக தெளிவானதாக மற்றும் உயர்ந்ததாக இருக்கிறது. ஒருவேளை சில நேரம் உயர்ந்ததாக, சில நேரம் சாதாரணமானதாக இருக்கிறது என்றால் ரேகையும் இடையிடையே துண்டிக்கப்பட்டிருக்கும், அழியாததாக இருக்காது. சில நேரம் நிற்பார்கள், சில நேரம் முன்னேறிச் செல்வார்கள், எனவே எப்பொழுதும் உயர்ந்த காரியம் செய்பவராக இருக்க வேண்டும். தந்தையோ எதிர்காலத்தை உருவாக்கும் சாதனத்தையோ தந்து விட்டார் -உயர்ந்த காரியம். எதிர்காலத்தை உருவாக்குவது எவ்வளவு சுலபமானதாக இருக்கிறது. உயர்ந்த காரியம் செய்யுங்கள், மேலும் பல கோடி மடங்கு பாக்கியசாலியின் எதிர்காலத்தை அடையுங்கள். உயர்ந்த காரியத்தின் ஆதாரம் உயர்ந்த நினைவு உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் நினைவில் இருப்பது என்றால் உயர்ந்த காரியம் நடப்பது. அந்த மாதிரி நீங்கள் நல்ல எதிர்காலம் உள்ளவர்கள் தான் இல்லையா. அனைவருமே எதிர்காலம் உள்ளவர்கள் தான் ஆனால் உயர்ந்ததாக இருக்கிறதா அல்லது சாதாரணமானதாக இருக்கிறதா என்ற இதில் வரிசை எண் வந்து விடுகிறது. நிரந்தரமான எதிர்காலத்தின் ரேகையை போட்டு விட்டீர்களா அல்லது சின்னஞ்சிறியதை போட்டிருக்கிறீர்களா? நீளமானது தான் இல்லையா, அழியாதது தான் இல்லையா. இடையிடையே அழியக்கூடியது அல்ல, எப்பொழுதுமே இருக்கக்கூடியது. அந்த மாதிரி எதிர்காலம் உள்ளவர்கள். இப்போதைக்கும் நல்ல எதிர்காலம் உள்ளவர் மற்றும் அனேக ஜென்மங்களுக்கும் நல்ல எதிர்காலம் உள்ளவர்.

**2) அனைவரும் தன்னை இந்த நாடகத்திற்குள் தந்தையுடன் அன்பான மற்றும் சகயோகி ஆத்மாக்கள் என்று அப்படி புரிந்து நடந்து கொள்கிறீர்களா?** ஆத்மாக்கள் நமக்கு இந்த அளவு உயர்ந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது, இந்த பதவி எப்பொழுதும் நினைவிருக்கிறதா? எப்படி உலகில் கூட உயர்ந்த பதவியில் இருக்கும் ஆத்மாவின் உடன் காரியம் செய்பவர்களும் எவ்வளவு உயர்ந்ததாக நினைக்கிறார்கள் ஆனால் உங்களுடைய பங்கு, உங்களுடைய காரியம் சுயம் தந்தையுடன் இருக்கிறது. அப்படியென்றால் எவ்வளவு உயர்ந்த, பங்காக ஆகி விட்டது. அந்த மாதிரி நினைக்கிறீர்களா? முன்போ சிறிதளவு தரிசனம் கிடைத்து விடட்டுமே என்று அழைத்துக் கொண்டு மட்டும் இருந்தீர்கள். இந்த ஆசையைத் தான் வைத்திருந்தீர்கள் இல்லையா. அதிகாரி ஆவதற்கான ஆசை மற்றும் எண்ணத்தையோ நினைத்துக்கூட பார்க்க முடியாது, அசம்பவம் என்று நினைத்தீர்கள் ஆனால் இப்பொழுது அசம்பவ விஷயமாக என்ன இருந்ததோ அது சம்பவமாக மற்றும் நடந்தேறிவிட்டது, இந்த நினைவு இருக்கிறதா? எப்பொழுதும் இருக்கிறதா அல்லது சில நேரம் இருக்கிறதா? ஒருவேளை சில நேரம்

இருக்கிறது என்றால் பிராப்தியாக என்ன அடைவீர்கள்? சில நேரம் இராஜ்யம் கிடைக்கும். சில நேரம் இராஜா ஆவீர்கள். சில நேரம் பிரஜை ஆவீர்கள். யார் நிரந்தரமான சகயோகியாக இருக்கிறாரோ அவர் தான் நிரந்தரமான இராஜா. அதிகாரமோ அழியாததாக மற்றும் நிரந்தரமானதாக இருக்கிறது. எவ்வளவு காலம் தந்தை உத்திரவாதம் கொடுத்திருக்கிறாரோ, அரைக்கல்பம் அதில் எப்பொழுதிற்குமான இராஜ பதவியை பிராப்தி செய்ய முடியும் ஆனால் இராஜயோகி இல்லை என்றால் இராஜ்யமும் இல்லை. எப்பொழுது வாய்ப்பு நிரந்தரமாக இருக்கிறது என்றால் சிறிது காலத்திற்காக ஏன் பெற்றுக் கொள்கிறீர்கள். நல்லது.

**3) சங்கமயகத்தை புதிய யுகம் என்றும் கூற முடியும்.** ஏனென்றால் அனைத்தும் புதியதாகி விடுகிறது. புதிய யுகத்தைச் சேர்ந்தவர்களின் ஒவ்வொரு நேரத்தின் ஒவ்வொரு நடத்தையும் புதியது. எழுவதும் புதியது, பேசுவதும் புதியது, நடப்பதும் புதியது. புதியது என்றால் ஆன்மீகம். புதிய கௌரவம், புதிய விஷயம், அனைத்தும் புதியதாக ஆகி விட்டது இல்லையா. நினைவிலும் புதுமை வந்து விட்டது. எப்படி நினைவோ அப்படி நிலையும் ஆகி விட்டது. விஷயங்களும் புதியது, கிடைப்பதும் பதியது, அனைத்தும் புதியது. பார்க்கிறார்கள் என்றாலும் ஆத்மா, ஆத்மாவை பார்ப்பார்கள். முன்பு உடலைப் பார்த்தார்கள், இப்பொழுது ஆத்மாவை பார்க்கிறார்கள். முன்பு தொடர்பில் வந்தார்கள் என்றால் பல விகார பாவனையோடு வந்தார்கள். இப்பொழுது சகோதரன் சகோதரனின் பார்வையோடு தொடர்பில் வருகிறீர்கள். இப்பொழுது தந்தையின் துணைவன் ஆகி விட்டீர்கள், முன்பு உலகியல் குடும்பத்தின் துணைவர்களாக இருந்தீர்கள். பிராமணர்களின் பாஷையும் புதியது, உங்களுடைய பாஷையை உலகத்தினர் புரிந்து கொள்ள முடியாது. பகவான் வந்து விட்டார் என்ற இந்த விஷயத்தை மட்டும் கூறுகிறீர்கள் என்றாலும் ஆச்சரியம் அடைகிறார்கள். புரிந்து கொள்வதில்லை. இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அப்படி உங்களுடைய அனைத்து விஷயங்களும் புதியவை எனவே ஒவ்வொரு நேரமும் தனக்குள்ளும் புதுமையை கொண்டு வாருங்கள். என்ன மனநிலை ஒருநொடி முன்பு இருந்ததோ அது அடுத்த விநாடி இல்லை. அதை விட மேலாக இருந்தது. இதைத் தான் வேகமான முயற்சி என்று கூறுவது. யார் நேரம் முன்னேறும் கலையிலும் சில நேரம் நிற்கும் கலையிலும் இருப்பாரோ அவரை நம்பர் ஒன் முயற்சியாளர் என்று கூறமாட்டோம். நம்பர் ஒன் முயற்சி செய்பவரின் அடையாளம் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு எண்ணத்திலும் முன்னேறும் கலை. இந்த நேரம் 80-சதவிகிதம் இருக்கிறது என்றால் ஒரு விநாடிக்கு பிறகு 81-சதவிகிதம் என்று இருக்க வேண்டும், 80 ற்கு 80

ஆகவே இருக்க வேண்டாம். ஏறும் கலை என்றாலே எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டிருப்பது. பிராமண வாழ்க்கையின் காரியமே முன்னேறுவது மற்றும் மற்றவர்களை முன்னேற்றுவது. உங்களுடைய முன்னேறும் கலையில் அனைவருக்கும் நன்மை இருக்கிறது. அந்த அளவு உங்கள் அனைவர் மேலும் பொறுப்பு இருக்கிறது. நல்லது -ஓம் சாந்தி.

**வரதானம்: வீணானதின் கசிவை முடித்து சக்தி நிறைந்தவர் ஆகக்கூடிய குறைந்த செலவில் நிறைந்த பலன் பெறுபவர் ஆகுக!**

சங்கமயுகத்தில் பாப்தாதா மூலமாக என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அந்த அனைத்து பொக்கிஷங்களை வீணாக செல்வதிலிருந்து பாதுகாத்தீர்கள் என்றால் குறைந்த செலவில் நிறைந்த பலன் அடைபவராகி விடுகிறீர்கள். வீணானவற்றிலிருந்து மிச்சப்படுத்துவது என்றால் சக்தி நிறைந்தவர் ஆவது எங்கு சக்தி நிறைந்த நிலை இருக்கிறது என்றால் அங்கு வீணானவை இருக்கிறது என்பது இருக்க முடியாது. ஒருவேளை வீணானவற்றின் கசிவு இருக்கிறது என்றால் சோதனை செய்து அதை முடித்து விட்டீர்கள் என்றால் வீணானவையிலிருந்து சக்தி நிறைந்தவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: இல்லறத்தில் இருந்து கொண்டே சம்பூர்ண தூய்மையாக இருப்பது -இது தான் யோகி மற்றும் ஞான சொரூப ஆத்மாவிற்கான சவாலாகும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வள்ளலின் குழந்தைகள் நிரந்தர வள்ளல் ஆகுங்கள்!

இன்று இரக்கத்தின் கடல் தன்னுடைய மாஸ்டர் இரக்கக் கடல் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். பக்தர்கள் பாப்தாதா மற்றும் மிக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களை இரக்கம் காட்டுபவரே கிருபை செய்பவரே என்ற பெயரால் மகிமை செய்கிறார்கள். அனைத்து மதங்களின் ஆத்மாக்கள் பாப்தாதாவிடமிருந்து மற்றும் மிக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களிடமிருந்து முக்கியமான ஒன்றை அவசியம் விரும்புகிறார்கள். ஞானம் மற்றும் யோகாவின் விஷயங்கள் ஒவ்வொரு மதத்திலும் வேறு வேறாக இருக்கிறது, அதைத் தான் அவர்களின் நம்பிக்கை என்று கூறுவது ஆனால் ஒரு விஷயம் அனைத்து மதங்களிலும் ஒன்றாகவே இருக்கிறது. அனைத்து ஆத்மாக்களும் இரக்கம் மற்றும் கிருபையை அவர்களுடைய மொழியில் ஆசீர்வாதம் என்று கூறுகிறார்கள், அதை அனைவரும் விரும்புகிறார்கள். அனைத்து ஆத்மாக்கள் உங்களிடமிருந்து இந்த இறுதி ஜென்மத்திலும் கொஞ்சம் கிருபை நிறைந்த பார்வையை எம்மீது செலுத்துங்கள் என்ற இதைத் தான் பக்தர்கள் விரும்புகிறார்கள். கொஞ்சம் எங்கள் மேலேயும் இரக்கம் காட்டுங்கள். அனைத்து மதங்களின் முக்கிய அடையாளமாக இரக்கத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒருவேளை ஏதாவது ஒரு தர்ம ஆத்மா இரக்கம் உடையவராக இல்லை, இரக்க பார்வையுடையவராக இல்லை என்றால் அவரை தர்மத்தலைவர் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தர்மம் என்றால் தயை. அப்படி இன்று பாப்தாதா தயாளு (இரக்கம் நிறைந்தவர்) மற்றும் கிருபாளு (கிருபை நிறைந்தவர்) ஆக எந்த அளவு ஆகியிருக்கிறீர்கள் என்பதை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அனைத்து பிராமண ஆத்மாக்களும் தன்னை ஆதி சனாதன பழைமையான தர்மத்தின் சிரேஷ்ட ஆத்மாக்கள் அதாவது தர்ம ஆத்மாக்கள் என்று நம்பத்தான் செய்கிறார்கள். ஹே தர்ம ஆத்மாக்களே, உங்கள் அனைவரின் முதல் தர்மம் அதாவது தாரணையே, தனக்காகவும், பிராமண குடும்பத்திற்காகவும், உலகின் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் இரக்க மனமுடையவர் மற்றும் கிருபை திருஷ்டி உள்ளவராக இருப்பது, எனவே எப்பொழுதும் இரக்கத்தின் பாவனை மற்றும்

கிருபை திருஷ்டி அனைவருக்காகவும் இருக்கிறதா அல்லது வரிசைக்கிரமமாக இருக்கிறதா என்று உங்களை நீங்களே கேளுங்கள். இரக்க உணர்வு மற்றும் கிருபை திருஷ்டி யார் மேல் வைக்க வேண்டியதாக இருக்கிறது. யார் பலஹீனமான ஆத்மாவோ. பிராட்தி இல்லாத ஆத்மாவோ, ஏதாவது விஷயத்தின் வசமான ஆத்மாவோ, அந்த மாதிரி ஆத்மாக்கள், தயை மற்றும் கிருபையின் ஆசை வைக்கிறார்கள். மேலும் அவர்களுடைய ஆசை இல்லாவிட்டாலும் கூட நீங்கள் வள்ளலின் குழந்தைகள் அந்த ஆத்மாக்களுக்கு நல்ல விருப்பத்தோடு கொடுப்பவர்கள். முழு நாளின் எந்த ஆத்மாக்களின் தொடர்பில் வருகிறீர்களோ, ஞானியாக இருந்தாலும் அல்லது அஞ்ஞானியாக இருந்தாலும், அனைவருக்காகவும் எப்பொழுதும் இதே பார்வை இருக்கிறதா அல்லது வேறு வேறு பார்வையும் இருக்கிறதா? யார் எப்படிப்பட்ட சம்ஸ்காரம் உள்ளவராக இருந்தாலும் இந்த இரக்கம் மற்றும் கிருபையின் பாவனை மற்றும் திருஷ்டியானது, கல்லையும் கூட தண்ணீர் ஆக்க முடியும். எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் அவர்களுடைய நிலையில் நிலைத்து விடுவர், சுபாலத்தின் மோதலில் வருபவர்கள் கூட நல்லோர் ஆகி விட முடியும். கோப அக்னி யோக அக்னியாக மாறிவிடும். அனேக ஜென்மங்களின் கடுமையான கணக்கு வழக்கு ஒரு நொடியில் முடிவடைந்து புதிய சம்மந்தம் ஏற்பட்டு விடும். எவ்வளவு தான் விரோதியாக இருந்தாலும் இந்த விதி மூலம் கட்டி அணைப்பவராகி விடுவார் ஆனால் இவை அனைத்திற்குமான ஆதாரம் 'இரக்க உணர்வு' இந்த மாதிரி சூழ்நிலை மற்றும் இந்த மாதிரி நேரத்தில் இரக்க உணர்வு அவசியம் தேவைப்படுகிறது. தேவையான நேரத்தில் செய்யவில்லை என்றால் மாஸ்டர் இரக்கக்கடல் என்று கூறுவோமா? யாரிடம் இரக்க உணர்வு இருக்குமோ அவர் எப்பொழுதும் நிராகாரி, நிர்விகாரி மற்றும் நிர்அகங்காரியாக இருப்பார். எண்ணத்தில் நிராகாரி, வார்த்தையில் நிர்விகாரி காரியத்தில் நிர்அகங்காரி. இவரைத் தான் இரக்கம் காட்டும் மற்றும் கிருபையான ஆத்மா என்று கூறுவது. அப்படி ஹே. இரக்கத்தில் நிரம்பிய களஞ்சியமாக இருக்கும் ஆத்மாக்களே! தேவையான நேரத்தில் எந்த ஆத்மாவிற்காகவும் இரக்க உணர்வின் அஞ்சலியும் கொடுக்க முடியாதா? நிரம்பிய களஞ்சியத்திலிருந்து அஞ்சலி கொடுத்து விட்டீர்கள் என்றால், முழு பிராமண பரிவாரத்தின் பிரச்சனைகளே முடிவடைந்து விடும். உங்கள் அனைவரின் அனாதி, ஆதி சம்ஸ்காரமே அழியாத வள்ளல் தன்மையினுடையது. தேவதை என்றால், கொடுப்பவர். யுகத்தில் மாஸ்டர் வள்ளல் ஆவீர்கள். அரைக்கல்பம் தேவதை அதாவது கொடுப்பவர்களாக இருக்கிறீர்கள். சங்கம் துவாபர் யுகத்திலிருந்து கூட உங்களுடைய ஜட விக்கிரகங்கள் கொடுக்கக்கூடிய தேவதைகள் என்றே கூறப்படுகிறார்கள். அப்படி முழுக் கல்பத்தின் சம்ஸ்காரம் வள்ளல் தன்மையினுடையது. அந்த மாதிரி வள்ளல்

தன்மையின் சம்ஸ்காரம் உள்ள நிரம்பிய ஆத்மாக்களே. தேவையான நேரத்தில் ஏன் வள்ளல் ஆவதில்லை? ஏதாவது பெற வேண்டும் என்ற பாவனையை வள்ளலின் குழந்தைகள் வைக்க முடியாது. அடுத்தவர் கொடுத்தார் என்றால் தான் நான் கொடுப்பேன் என்பவர் தேவதை அல்ல, யாசிப்பவராக ஆகி விட்டார். அப்படியானால் நீங்கள் எந்த மாதிரி ஆத்மாக்கள்? தேவதையா அல்லது யாசிப்பவரா?

ஹே, ஆசை என்றால் என்னவென்று அறியாத ஆத்மாக்களே! அற்ப காலத்தின் ஆசையின் காரணமாக தேவதைக்குப் பதிலாக யாசிப்பவராக ஆகாதீர்கள். கொடுத்துக் கொண்டே இருங்கள், கொடுத்துக் கொண்டே எத்தனை என்று எண்ணாதீர்கள். நான் எவ்வளவு செய்தேன், இவர் செய்யவில்லை, என்ற இந்த எண்ணிக்கை பார்ப்பது வள்ளல் தன்மையின் சம்ஸ்காரம் இல்லை. பரந்த மனமுடைய தந்தையின் குழந்தைகள் இந்த விஷயங்களில் எண்ணிக்கை செய்வதில்லை. களஞ்சியம் நிரம்பி இருக்கிறது ஏன் எண்ணிக்கை செய்கிறீர்கள்? சத்யுகத்தில் கூட எந்தவொரு கணக்கு வழக்கையும் எண்ணிக்கை செய்வதில்லை. இராஜ குடும்பம், இராஜ வம்சத்தினர் மாஸ்டர் வள்ளலாக இருப்பார்கள். அங்கே இந்த இவ்வளவு கொடுத்தேன், இவ்வளவு செய்தேன் என்ற வியாபார முறை இருக்காது. யார் எவ்வளவு பெற்றுக் கொள்வாரோ அந்த அளவு நிரம்பிவிடுவார். இராஜ வம்சம் என்றால் வள்ளலின் வீடு. இந்த சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும். எங்கே நிரப்ப வேண்டும். சத்யுகத்திலா? இப்பொழுதிலிருந்தே நிரப்ப வேண்டும் இல்லையா. இங்கேயும் கூட தந்தையுடன் வியாபார் கணக்கை செய்கிறார்கள். தந்தை என்னிடம் கேட்கவில்லை, தந்தை என் மூலம் செய்யவில்லை. மேலும் உங்களுக்குள்ளோ இதை மிக அதிகமாக செய்கிறீர்கள். மகாராஜா ஆகுங்கள், வள்ளலின் குழந்தை வள்ளல் ஆகுங்கள். இவர் செய்தார் அதனால் நானும் இதைச் செய்தேன், இவர் இரண்டு கூறினார்: பதிலுக்கு அப்பொழுது நானும் நான்கு கூறினேன். இவர் இரண்டு தடவை சொன்னார் அல்லது செய்தார், நான் ஒரு தடவை செய்தேன். இந்த மாதிரி கணக்கை வள்ளலின் குழந்தைகள் செய்ய முடியாது. யாராவது உங்களுக்கு கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, ஆனால் நீங்கள் கொடுத்துக் கொண்டே இருங்கள். இதைத் தான் இரக்க உணர்வு மற்றும் கிருபை நிறைந்த பார்வை என்று கூறுவது. எனவே ஹே இரக்கமுடைய, கிருபை உடைய ஆத்மாக்களே கொடுப்பவர்களாக ஆகுங்கள். புரிந்ததா?

பாப்தாதாவிடம் அனைத்து குழந்தைகளின் கணக்கு இருக்கிறது. முழு நாளில் எவ்வளவு நேரம் இரக்கமுடையவர் மற்றும் கிருபை உடையவர் ஆகிறார்கள்?

மேலும் எவ்வளவு நேரம் கொடுப்பதற்கான பாவனைக்குப் பதிலாக பெறுவதற்கான எண்ணம் வைக்கிறார்கள் என்ற இந்த முழு நாளின் லீலையை பாப்தாதா பார்க்கிறார்கள். எப்படி நீங்கள் இந்த வீடியோ செட்டை இணைத்திருக்கிறீர்கள் என்றால் பார்க்கவும் செய்கிறீர்கள், மேலும் கேட்கவும் செய்கிறீர்கள். அப்படி பாப்தாதாவிடமோ ஒவ்வொருவருக்காகவும், டி.வி செட் இருக்கிறது. எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுது பொத்தானை அழுத்த முடியும். இது சேவைக்கான சாதனம் மற்றும் அது தந்தை குழந்தைகளின் நிலைமையை தெரிந்து கொள்ளும் சாதனம். இந்த அனைத்து சாதனங்களுமே இறுதி நேரத்தில் அழிந்து விடும். இந்த வீடியோ காரியத்திற்கு உதவாது ஆனால் வில் பவரின் (மனோபலம்) செட் உபயோகத்தில் வரும் ஆனால் அறிவியலைச் சேர்ந்த குழந்தைகள் யார் இந்த அளவு நேரம், சக்தி, பணத்தை செலவு செய்து சாதனத்தை உருவாக்கியிருக்கிறார்களோ. அப்படி குழந்தைகளின் உழைப்பு தந்தையின் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது எனவே தந்தையும் குழந்தைகளின் கடும் உழைப்பைப் பார்த்து, இவர்கள் சேவைக்கான சாதனம் மிக நன்றாக உருவாக்கியிருக்கிறார்கள் என்று குஷி அடைகிறார். இருந்தாலும் அவர்களும் குழந்தைகள் தான் இல்லையா? தந்தை, குழந்தைகளின் கண்டு பிடிப்பைப் பார்த்து குஷி அடைவார் இல்லையா? எந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்களோ, அதே காரியத்தில் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறார்கள். அது அற்ப காலத்திற்கானதாக இருந்த போதிலும் வெற்றியோ இருக்கிறது இல்லையா? எனவே பாப்தாதா வீடியோ செட்டைப் பார்ப்பதில்லை ஆனால் அந்தக் குழந்தைகளை பார்க்கிறார். நல்லது.

இதே சாதனம் மூலமாக பாரதம் மற்றும் வெளிநாட்டில் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகள் பார்க்கிறார்கள் மற்றும் கேட்கிறார்கள் என்றால், பாப்தாதாவும் நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கு, யார் இன்று மதுபன்னில் என்ன நடக்கும் என்ற இந்த ஆர்வத்திலேயே அமர்ந்திருக்கிறார்கள், உடலால் பாரதம் மற்றும் வெளிநாட்டில் இருக்கிறார்கள், ஆனால் சூட்சும ரூபம் மூலமாக மதுபன் நிவாசியாக இருக்கிறார்கள். பாப்தாதா அந்த அனைத்து ஒளி வடிவ உடலிலிருக்கும் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு, விசேஷ அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். பாப்தாதா ஒரு சபையைப் பார்ப்பதில்லை. இரண்டு சபைகளைப் பார்க்கிறார். ஒன்று நேரெதிரில் ஸ்தூலமாக இருக்கும் சபை மற்றும் இன்னொன்று, சூட்சும சபை. அனைவரின் நினைவு வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. நல்லது. அனைத்து கடிதங்களுக்கும் ஒரே ஒரு பதில், அவர்கள் தந்தையை நினைவு செய்கிறார்கள், தந்தை பல மடங்கு அந்த குழந்தைகளை

நினைவு செய்கிறார். எப்படி அவர்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அதே போல் தந்தை ஒவ்வொரு குழந்தைகளின் குணங்களின் மாலையை எப்பொழுதும் நினைவு செய்கிறார். அனைத்து குழந்தைகளுக்கும் சந்திப்பதின் ஒரே ஒரு எண்ணம் தான் இருக்கிறது. மேலும் பாப்தாதாவும் அந்த மாதிரி சந்திப்பைச் செய்யக்கூடிய, எண்ணத்தை வைக்கும் ஆத்மாக்களுக்கு விசேஷமாக அமிர்தவேளையின் சந்திப்பில், அதற்கான பலனைக் கொடுக்கிறார். மேலும் அனைவருக்கும் சேவைக்கான விசேஷ எண்ணத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் இரக்க உணர்வு மற்றும் கிருபை திருஷ்டி வைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் கொடுக்கக்கூடிய, பெறுவதற்கான விருப்பம் வைக்காத, ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி இராஜ வம்ச சம்ஸ்காரம் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் விசேஷ சகயோகி ஆத்மாக்கள். யார் அன்பானவராக இருக்கிறாரோ அவர் தான் சகயோகி ஆக முடியும். எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு சகயோகம் கொடுக்காமல் இருக்க முடியாது. அப்படி சேவாதாரி என்றால் அன்பானவர் மற்றும் சகயோகி. உடன் இருப்பவர்கள், ஒத்துழைப்பு கொடுப்பவர்கள் மற்றும் இறுதியில் உடன் செல்பவர்கள். அப்படி மூன்றிலும் எவரெடியாக இருப்பவர்கள். உடன் இருப்பது மற்றும் ஒத்துழைப்பு கொடுப்பது தற்போது உள்ளது. அடுத்து செல்வது பிற்காலத்தில். எப்பொழுது இரண்டு விஷயங்களுமே சரியாகி விடுகின்றன என்றால், மூன்றாவதின் தேதியும் வந்து விடும். நீங்கள் அனைவரும் பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள் தான் இல்லையா? எந்த அளவு நீங்கள் ஒத்துழைப்பு கொடுப்பீர்களோ, உடன் இருப்பீர்களோ அந்த அளவு உங்களைப் பார்த்து மற்றவர்களுக்கும் ஊக்கம் உற்சாகம் இயல்பாகவே அதிகரிக்கும். ஒருவர் நீங்கள் அனேகர்களுக்கு பொறுப்பாளராக இருக்கிறீர்கள். நான் இல்லை, ஆனால் தந்தை என்னை பொறுப்பாளர் அதாவது கருவியாக்கி இருக்கிறார். நான் என்ற உணர்வு முடிந்து விட்டது தான் இல்லையா? நான் என்பதற்குப் பதிலாக என்னுடைய பாபா, நான் செய்தேன். நான் சொன்னேன் என்பதற்குப் பதிலாக தந்தை செய்வித்தார். தந்தை செய்தார் என்றிருக்க வேண்டும், பிறகு பாருங்கள் வெற்றி சுலபமாக கிடைத்து விடும். உங்களுடைய வாயிலிருந்து எந்த அளவு பாபா பாபா என்பது வெளியாகுமோ அந்த அளவு அனேகர்களை பாபாவின் குழந்தையாக ஆக்க

முடியும். அனைவரது வாயிலிருந்தும் இவருடைய கௌரவத்தில் மற்றும் விஷயத்தில் பாபாவே பாபா தான் என்ற வார்த்தை வெளியாகும். அப்பொழுது தான் மற்றவர்களுக்கும் அந்த கௌரவம் வந்து விடும். எந்த விஷயம் முழு ஈடுபாட்டில் இருக்குமோ அதுவே விஷயமாகவும் ஆகி விடும். பாப்தாதா சின்னஞ்சிறு குமாரிகளின் தைரியம் மற்றும் தியாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். பெரியவர்களோ அனுபவித்து விட்ட பிறகு என்ன தியாகம் செய்திருக்கிறார்கள். அதுவொன்றும் பெரிய விஷயம் இல்லை. அனுபவித்துப் பார்த்தார்கள் பிறகு அதை விட்டார்கள் ஆனால் இவர்களோ விவேகத்தின் காரியத்தை செய்து விட்டார்கள். எந்த அளவு சிறியவர்களோ அந்த அளவு பெரிய புத்திசாலிகள்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு -குஜராத்:** எப்பொழுதும் தன்னை மகாவீர் அதாவது மகான் ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? யாருடைய குழந்தையாக ஆகியிருக்கிறேன் மற்றும் என்னவாக ஆகியிருக்கிறேன் என்ற இதை மட்டும் யோசித்தீர்கள் என்றால், ஒருபொழுதும் தேக உணர்வில் வர முடியாது. தேக உணர்வை விட்டு விலகி மேல் நிலையில் இருங்கள் அதாவது பரிஷ்தா ஆகி மேலே பறந்து கொண்டே இருங்கள். பரிஷ்தாக்கள் கீழே வருவதில்லை. பூமியில் கால் வைப்பதில்லை. இந்த தேக உணர்வு கூட தேகம் என்ற தரை ஆகும். எப்பொழுது பரிஷ்தா ஆகி விட்டீர்களோ பிறகு தேகத்தின் பூமியில் எப்படி வர முடியும். பரிஷ்தா என்றால் மேலே பறப்பவர். நீங்கள் அனைவருமே பறக்கும் பறவைகளா, கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகளாக இல்லையே? அரைக்கல்பமோ கூண்டில் அடைக்கப்பட்டிருந்தீர்கள், இப்பொழுது பறக்கும் பறவை ஆகி விட்டீர்கள். கீழே உள்ள ஈர்ப்பு உங்களை இழுக்க முடியாது. கீழே இருந்தீர்கள் என்றால், வேட்டைக்காரன் வேட்டையாடி விடுவான், மேலே பறந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் யாரும் எதுவும் செய்ய முடியாது. நீங்கள் அனைவரும் பறக்கும் பறவைகள் தான் இல்லையா? கூண்டு அழிந்து விட்டதா? எவ்வளவு தான் அழகான கூண்டாக இருந்தாலும் கூட அதுவும் பந்தனம் தான் இல்லையா? இந்த ஆன்மீக சம்மந்தமும் தங்கக்கூண்டாகும், இதிலேயும் மாட்டிக் கொள்ளக் கூடாது. சுதந்திரமாக இருப்பது என்றால், முழுமையான சுதந்திரம்! எப்பொழுதும் பந்தனமற்ற நிலையில் இருப்பவர் தான் ஜீவன்முக்த் நிலையின் அனுபவம் செய்ய முடியும். நல்லது.

**டெல்லி**: இப்பொழுது டெல்லியில் வியாபாரிகள் யாருமே உருவாகவில்லை. வியபாரி ஒருவர் லட்சக்கணக் கானவர்களை முன்னேறச் செய்ய முடியும் ஏனென்றால் ஒரு வியாபாரி அனேகர்களின் தொடர்பில் வருவார். எத்தனை

பேர்களின் தொடர்பில் வருகிறாரோ அவர்களில் பாதி பேர்கள் கூட செய்தியை கேட்பவர்களாக இருந்தார்கள் என்றால் எவ்வளவு பேர் உருவாகி விடுவார்கள். இதுவும் வியாபாரம். வியாபாரிக்கு எவ்வளவு பங்கு கிடைக்கும். சேவைக்கான வாய்ப்பு வியாபாரிகளுக்கு மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது வியாபாரிகளின் குரூப்பை தயர் செய்து வாருங்கள்.

**சேவாதாரிகளுடன் சந்திப்பு:** எவ்வளவு உயர்ந்த மகத்துவம் யக்ஞத்திற்கு இருக்கிறதோ அந்த அளவு யக்கு சேவாதாரிகளுக்கும் மகத்துவம் இருக்கிறது. இந்த சேவையின் நினைவுச்சின்னம் இன்று வரையிலும் அனேக தர்ம ஸ்தானங்களில் இருக்கிறது. எந்த இடங்கள் எல்லாம் பிற்காலத்தில் தர்ம ஸ்தானமாக ஆகின்றனவோ, அதே ஸ்தானங்களில் சேவைக்காகவும் மகத்துவம் இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்படி சைத்தன்ய மஹாயக்ஞத்தின் சேவாதாரிகளுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. நீங்கள் சேவை செய்து கொண்டிருக்கவில்லை ஆனால் பல மடங்கு பலன் என்ற வெண்ணையை அருந்திக் கொண்டிருக்கிறீர்கள். உலகில் கூட செல்வந்தர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களைப் பற்றி இவர் எப்பொழுதுமே வெண்ணை அருந்திக் கொண்டிருப்பவர் என்று கூறுவார்கள். ஏழையைப் பற்றி இவர் கஞ்சி குடிக்கிறார் என்று கூறுவார்கள் மற்றும் செல்வந்தர்களுக்காக இவர் வெண்ணை சாப்பிடுகிறார் என்று கூறுவார்கள். சேவாதாரி என்றால் வெண்ணை அருந்துபவர். அப்படி யானால் நீங்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் ஆகி விட்டீர்கள். ஒவ்வொரு அடியிலும் இரட்டை வருமானம். மனதின் மூலமாகவும் காரியங்கள் மூலமாகவும் வருமானம். மனம் மூலம் என்றால் நினைவில் இருந்து கொண்டு சேவை செய்கிறீர்கள் என்றால் இரட்டை வருமானம் ஆகி விட்டது இல்லையா. யார் எந்த அளவு வருமானம் செய்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் அவர்களே தெரிந்து கொள்ள முடியும். சேவையின் களஞ்சியம் நிரம்பியிருக்கிறது. மஹா யக்ஞம் என்றால் சேவையின் களஞ்சியம். சேவையின் களஞ்சியம் நிரம்பியிருக்கிறது, யார் எவ்வளவு விரும்புகிறார்களோ அவ்வளவு செய்யலாம். வரையறையும் இல்லை. மேலும் எண்ணி எண்ணி கொடுப்பதும் இல்லை. இந்த வேலை முடிவடைந்து விட்டது; இப்பொழுது நான் என்ன செய்வது என்ற எல்லையும் இல்லை, களஞ்சியம் நிரம்பியிருக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட களஞ்சியம். எனவே எவ்வளவு செய்ய விரும்புகிறீர்களோ அந்த அளவு செய்ய முடியும். இது அனைத்தும் நிறைந்தவராக ஆவதற்கான லாட்டரி. லாட்டரியோ கிடைத்திருக்கிறது. இப்பொழுது லாட்டரியில் நான் எந்த லாட்டரியைப் பெற்றிருக்கிறேன், பல கோடியா, லட்சங்களா,

ஆயிரங்களா அல்லது நூறா, இது உங்கள் மேல் இருக்கிறது. இது மிகப் பெரிய லாட்டரி, பல கோடிகளையும் பெற முடியும்.

பாப்தாதாவும் சேவாதாரி ஆகி வருகிறார். உலகத்தின் அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரம் உள்ளவரின் முதல் சொரூபமே உலக சேவகன் தான் இல்லையா? எப்படி தந்தையோ அதே போல் குழந்தைகளும் என்ற வர்ணனையும் இருக்கிறது. நீங்கள் தடையற்ற சேவாதாரி தான் இல்லையா? சேவையின் இடையில் ஏதாவது தடை வருவதில்லையே? வாயுமண்டலத்தின், உடன் இருப்பவர்களின், சோம்பலின், விதவிதமான தடைகள் இருக்கின்றன. அப்படி எந்த விதமான தடை வந்தாலும் சேவை துண்டிக்கப்பட்டது இல்லையா? துண்டுபடாத, இடைவிடாத சேவை இருக்க வேண்டும். எந்த விதமான தடையிலும் ஒருபொழுதும் வராதீர்கள். தடையற்ற சேவை அதற்குத் தான் மகத்துவம் இருக்கிறது. எண்ண அளவில் கூட கொஞ்சம் கூட தடை வேண்டாம். அந்த மாதிரி இடைவிடாத சேவாதாரி ஒருபொழுதும் எந்தவொரு பாதிப்பிலும் வர மாட்டார். ஒருபொழுதும் ஏதாவது வீணானவற்றின் பாதிப்பில் வராதீர்கள். அப்பொழுது தான் சேவை வெற்றி பெறும். இல்லை என்றால், சேவையில் வெற்றி இருக்காது. நல்லது.

**வரதானம்: சந்தேகத்தின் எண்ணங்களை முடிவுகட்டி மாயாவை வென்றவர் ஆகக்கூடிய வெற்றி இரத்தினம் ஆகுக!**

ஒருபொழுதும் நான் தோல்வி அடைந்து விடுவேனோ என்னவென்று தெரியவில்லையே என்ற இந்த சந்தேகம் நிறைந்த எண்ணம் முன்பாகவே உருவாக வேண்டாம். சந்தேகபுத்தி உடையவராக இருப்பதினால் தான் தோல்வி ஏற்படுகிறது. எனவே நான் வெற்றியை அடைந்தே காண்பிப்பேன் என்ற இந்த எண்ணம் தான் எப்பொழுதும் இருக்க வேண்டும். வெற்றியோ என்னுடைய பிறப்புரிமை, அந்த மாதிரி உரிமை உடையவராகி காரியம் செய்வதினால் வெற்றியின் அதிகாரம் அவசியம் கிடைக்கிறது, இதன் மூலமாகத் தான் வெற்றி இரத்தினம் ஆகி விடுவீர்கள். எனவே மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் வாயிலிருந்து ஒருபொழுதும் தெரியவில்லை என்ற வார்த்தை வெளியாகக்கூடாது.

**சுலோகன்: இரக்க பாவனை சுலபமாகவே பொறுப்புணர்வை வெளிப்படுத்தி விடுகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான பிரியதர்ஷிணியின் அடையாளம்!

இன்று தந்தை எங்கு வந்திருக்கிறார், மேலும் யாரை சந்திக்க வந்திருக்கிறார் என்று தெரிந்திருக்கிறீர்களா? விசேஷமாக எங்கு ரூபத்தில் சந்திக்க வந்திருக்கிறார்? எப்படி தந்தையின் ரூபமோ அதே போல் குழந்தைகளின் ரூபம், அப்படியானால் இன்று எந்த ரூபத்தில் சந்திக்க வந்திருக்கிறார் என்று தெரிந்திருக்கிறீர்களா? பரமாத்மாவிற்கு அனேக ரூபங்கள் உள்ளன என்று தவறாகக் கூறிவிட்டார்கள், அது தவறா அல்லது சரியா? இந்த நேரம் தந்தை அனேக சம்பந்தங்களின் அனேக ரூபங்களில் சந்திக்கிறார். அப்படி ஒருவருக்கு சம்பந்தத்தின் ஆதாரத்தில் மற்றும் காரியங்களின் ஆதாரத்தில் நடைமுறையில் அனேக ரூபம் இருக்கிறது இல்லையா! பக்கதர்கள் செய்வது சரிதான் இல்லையா? இன்று எந்த ரூபத்தில் தந்தை சந்திக்க வந்திருக்கிறார், மேலும் எங்கு சந்தித்துக் கொண்டிருக்கிறார்? இன்றைய முரளியில் (காலை) அந்த சம்பந்தத்தை கேட்டீர்கள். அப்படியானால் தந்தை யாராக இருக்கிறார், மேலும் நீங்கள் யாராகி விட்டீர்கள்? இன்று ஆன்மீக பிரியதர்ஷன் (நாயகி) ஆன்மீக பிரியதர்ஷிணிகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். சந்திப்பதற்காக எங்கு வந்திருக்கிறார்? அனைத்தையும் விட சந்திப்பதற்கு மிகப்பிரியமான் இடம் எது? ஆன்மீக பிரியதர்ஷன் பிரியதர்ஷிணிகள் உங்களைத் தொடக்க காலத்தில் எங்கே அழைத்துச் செல்வார், நினைவு இருக்கிறது தான் இல்லையா? (கடற்கரைக்கு) இன்றும் அனைத்து பொக்கிஷங்கள் மற்றும் குணங்களினால் நிரம்பிய கடலின் கரையில், கூடவே உயர்ந்த நிலை என்ற மலை உச்சியில், குளுமையான நிலவொளியில் ஆன்மீக பிரியதர்ஷன் பிரியதர்ஷிணிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார். கடல் நிரம்பிய நிலைக்கு, மலை உயர்ந்த நிலைக்கு எப்பொழுதும் சீதள சொரூபம் நிலவு. மூன்றுமே சேர்ந்தே இருக்கிறது. இன்று ஆன்மீக பிரியதர்ஷிணிகளைப் பார்த்து ஆன்மீக பிரியதர்ஷன் மகிழ்ச்சி அடைகிறார். மேலும் என்ன பாடல் பாடுகிறார்? (ஒவ்வொருவரும் அவரவர்களின் பாடலைக் கூறுகிறார்கள்) பொதுவாக ஒருவர் ஒருபாடலைத் தான் கேட்க முடியும், ஆனால் தந்தை அனைவரின் பாடலையும் கேட்க முடியும், பிரியதர்ஷன் அந்தப்

பாடலுக்கான பதில் பாட்டு பாடுகிறார். என்ன பாடல் பாடினாலும் அது சரிதான், ஒவ்வொருவரின் அன்பு நிறைந்த வார்த்தைகளை தந்தை அன்போடு தான் கேட்கிறார். பிரியதர்ஷிணிகளுக்கு பிரியதர்ஷனை நினைவு செய்வது சுலபம் தான் இல்லையா? இந்த ஆன்மீக பிரியதர்ஷன் மற்றும் பிரியதர்ஷிணியின் சகஜ மற்றும் நிரந்தர நினைவின் சம்பந்தம். நினைவு செய்ய வேண்டியதாக இருக்காது, ஆனால் நினைவை மறக்க வைத்தாலும் மறக்க முடியாது.

இன்று ஒவ்வொரு பிரியதர்ஷிணியின் சினேகத்தைப் பார்த்து என்ன பார்த்தோம்? பிரியதர்ஷிணிகள் அனேகர்கள் மற்றும் பிரியதர்ஷன் ஒரே ஒருவர், ஆனால் அனேகர்களின் அனுபவம், அவர் என்னுடைய பிரியதர்ஷன் என்று தான் கூறுகிறது. ஏனென்றால் அன்பின் கடல் ஆன்மீக பிரியதர்ஷணன். கடல் எல்லையற்றது எனவே எத்தனை பேர் எவ்வளவு தான் அன்பை எடுத்துக் கொண்டாலும் கடல் குறையாதது, நிரம்பியிருக்கிறது, எனவே எனக்கு குறைவாக கிடைத்திருக்கிறது, உனக்கு அதிகமாக கிடைத்திருக்கிறது என்கிற விஷயம் இல்லை, எடுத்துக் கொள்பவர்கள் எவ்வளவு வேண்டும் என்றாலும் எடுத்துக் கொள்ளட்டும். அன்பின் பொக்கிஷம் நிரம்பி இருக்கிறது, எடுத்துக் கொள்பவர்கள் தான் எடுத்துக் கொள்வதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள், ஆனால் கொடுப்பவர் அனைவருக்கும் நம்பர் ஒன்னாகக் கொடுக்கிறார். எடுப்பவர்கள் உள்ளே நிரப்புவதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். அன்பு வைக்க அனைவருக்கும் தெரியும், ஆனால் அன்பு நிறைந்த உறவு வைத்து நடந்து கொள்வதில் வரிசைகக்கிரமம் ஆகி விடுகிறார்கள், என்னுடைய பிரியதர்ஷன் என்று அனைவரும் கூறுகிறார்கள் ஆனால் என்னுடையவர் என்று கூறிக் கொண்டும் என்ன செய்கிறார்கள்? என்ன செய்கிறார்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? இன்றோ ஆன்மீக உரையாடல் செய்ய வந்திருக்கிறோம், முரளி சொல்ல வரவில்லை, ஆக என்ன செய்கிறார்கள் என்று கூறுங்கள்? மேரா (என்னுடையவர்) என்றும் கூறுகிறார்கள், ஆனால் சில நேரம் எங்காவது ஃபேரா (சுற்றித்திரிந்து விட்டும் வருகிறார்கள், சுற்றியடித்து வந்த பிறகு, எப்பொழுது களைப்பு அடைந்து விடுகிறார்களோ, அப்பொழுது என்னுடைய பிரியதர்ஷன் என்று கூறுகிறார்கள், மேலும் சில பிரியதர்ஷிணிகள் மிகக் குறும்பும் செய்கிறார்கள், என்ன குறும்பு செய்கிறார்கள்? (தீதி - தாதியை பார்த்து), ஸ்துலமாக் உங்கள் எதிரிலேயே நிறைய குறும்புக் காரியங்கள் காண்பிக்கிறார்கள் இல்லையா! நாங்கள் அப்படித் தான் செய்வோம், நாங்கள் அப்படித்தான் நடந்து கொள்வோம், எங்களை மாற்றுவது உங்களுடைய வேலை என்று மிகக் குறும்புத் தனத்தைக் காண்பிப்பார்கள், தந்தை கூறிய விஷயத்தை தந்தையிடமே கூறும்

குறும்புத்தனத்தைக் காண்பிப்பார்கள், ஒரு வார்த்தையை மிக நல்ல முறையில் நினைவு செய்கிறார்கள், நான் எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் நான் உங்களுடையவன், பிரியதர்ஷனும் நீ, என்னுடையவன் தான், ஆனால் சரியான ஜோடியாக இல்லையென்றால் பார்ப்பவர்கள் என்ன கூறுகிறார்கள்? பிரியதர்ஷன் மிகவும் அலங்கரிக்கப்பட்டவர், ஆனால் பிரியதர்ஷிணி அலங்கரிக்கப்படவில்லை என்றால் (ஜோடி பொருத்தம்) அழகாக இருக்குமா? நீங்களே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் -அவர் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஆடை அணிந்திருந்திருக்கிறார், மேலும் பிரியதர்ஷிணி கறுப்பு ஆடை அணிந்திருக்கிறார் என்றால், நன்றாக இருக்குமா? என்ன நினைக்கிறீர்கள்? பிறகு என்ன கூறுகிறீர்கள்? எங்களுடைய கறையை அகற்றுவது உங்களுடைய வேலை, ஆனால் எப்பொழுது பிரியதர்ஷன் ஆடையையே மாற்றிவிடுகிறார் என்றால், அதை ஏன் அணிவதில்லை, கறையை அகற்றுவதிலும் ஏன் நேரத்தை இழக்க வேண்டும், பிரியதர்ஷனுடையவர்கள் ஆவது என்றால், அனைத்தும் பரிவர்த்தனை (மாறி) ஆகவேண்டும், எனவே பழைய கறுப்பான, அனேக கறைகள் படிந்த ஆடையின் நினைவை ஏன் கொண்டு வருகிறீர்கள், மின்னிக் கொண்டிருக்கும் ஆடை அணிந்த, ஜொலித்துக் கொண்டிருக்கும் அலங்காரம் செய்தவராகி பிரியதர்ஷனுடன் ஜொலிக்கும் உலகத்தில் ஏன் இருப்பதில்லை. அங்கு எந்தக் கறையும் படியவே முடியாது.

எனவே ஹே பிரியதர்ஷிணிகளே, எப்பொழுது பிரியதர்ஷனுக்கு சமமாக, சம்பன்னமாக மேலும் எப்பொழுதும் ஜொலிக்கும் சொரூபத்தில் நிலைத்திருங்கள், பிரியதர்ஷனுக்கு இன்னும் ஒரு வி'யத்தில் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. எந்த விஷயத்தில் கடின உழைப்பு செய்ய வேண்டியதிருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? அதுவும் இரமணீகரமான விஷயம். உடன் அழைத்துச் செல்வோம் என்று பிரியதர்ஷன் பிரியதர்ஷிணிகளுக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறார். என்ன செய்கிறார், மேலும் பிரியதர்ஷிணிகள் மிக லேசாக இருக்கிறார், மேலும் பிரியதர்ஷிணிகள் அவ்வளவு சுமையாகி விடுகிறார்கள், அதனால் பிரியதர்ஷனுக்கு அழைத்துச் செல்வதில் கடினமாக உழைக்க வேண்டியதாக உள்ளது. அந்த ஜோடியும் பார்க்க நன்றாக இருக்குமா? லேசாகி விடுங்கள் என்று பிரியதர்ஷன் கூறுகிறார் ஆனால் என்ன செய்கிறார்கள்? லேசாவதற்கான (உடற்) பயிற்சி இருக்கிறது இல்லையா, அதைச் செய்வது இல்லை. பிறகு எப்படி லேசாக முடியும்? ஆன்மீகப் பயிற்சியையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? இந்த நேரம் நிராகாரி, அடுத்த நேரம் அவ்யக்த பரிஷ்தா, மேலும் அதற்கடுத்த நேரம் சாகாரி கர்மயோகி. அடுத்த நேரம் உலக சேவதாரி. ஒரு நொடியில் அந்த சொரூபம் ஆகி விட வேண்டும். இது தான்

ஆன்மீகப் பயிற்சி, மேலும் எந்த சுமையை தன் மீது வைத்துக் கொள்கிறார்கள்? வீணானதின் சுமை மிக அதிகமாக இருக்கிறது, எனவே லேசாக முடிவதில்லை. சிலர் நேரத்தின் வீணானதின் சுமையில், சிலர் எண்ணத்தை மேலும் சிலர் சக்திகளை வீணாக்குகிறார்கள். சிலர் சம்பந்தம் மற்றும் தொடர்பை வீணானதாக்கி விடுகிறார்கள். அந்த மாதிரி வித விதமான சுமை அதிகரிக்கும் காரணத்தினால் பிரியதர்ஷனுக்கு சமமாக டபுள் லைட் ஆக முடிவதில்லை. உண்மையான பிரியதர்ஷிணியின் அடையாளம் பிரியதர்ஷனுக்கு சம்மானவர் அதாவது பிரியதர்ஷன் என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறாரோ அதே போல் சமமானவர் ஆவது. அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? பிரியதர்ஷிணிகளாகவோ இருக்கவே இருக்கிறீர்கள், ஆனால் பிரியதர்ஷனுக்கு சம்மான பிரியதர்ஷிணிகளா? சமமான நிலைதான் அருகாமையைக் கொண்டுவரும். சமநிலை இல்லையென்றால் அருகாமையும் இருக்க முடியாது, 16-ஆயிரம் பட்டத்து இராணிகள் இருந்தார்கள் என்று வர்ணிக்கவும் செய்கிறார்கள். 16-ஆயிரத்தில் வரிசை எண்ணும் இருக்கும் இல்லையா! ஒரு பிரியதர்ஷனுக்கு இத்தனை பிரியதர்ஷிணிகளை காண்பித்தோ இருக்கிறார்கள் ஆனால் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. ஆன்மீக தன்மையை மறந்து விட்டார்கள். எனவே ஆன்மீக பிரியதர்ஷன் பிரியதர்ஷிணிகளுக்கு சமமானவராக ஆகுங்கள். என்று இன்று கூறுகிறார், அதாவது அருகாமையில் இருப்பராக ஆகுங்கள். நல்லது.

நிலவொளியில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? சீதள சொரூபத்தில் இருப்பது என்றால் நிலவொளியில் அமருவது. எப்பொழுதுமே நிலவொளி பரவிய இரவில் இருங்கள். நிலவொளி இரவில் ஆடையும் இயல்பாகவே ஜொலித்துக் கொண்டிருப்பதாக ஆகி விடும். எங்கு பார்த்தாலும் அங்கு ஜொலித்துக் கொண்டிருப்பதைப் பார்ப்பார்கள். மேலும் எப்பொழுதும் கடற்கரையில் இருங்கள். அதாவது எப்பொழுதும் கடலுக்கு சமமாக நிரம்பிய நிலையில் இருங்கள், எங்கே இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? பிரியதர்ஷனுக்கு இந்த கடற்கரைதான் பிரியமானது. நல்லது.

இன்று டெல்லி மற்றும் குஜராத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். டெல்லியைச் சேர்ந்தவர்கள், எங்கள் ஊரிலோ யமுனை நதிக்கரைதான் இருக்கிறது, கடற்கரையே இல்லையே என்று அப்படி நினைக்க வில்லையே? சங்கம யுகத்தில் கடல் இருக்கிறது, எதிர்காலத்தில் நதிக்கரை இருக்கும். சங்கமயுகத்தில் விளையாடியதும் கடற்கரையில் தான் இல்லையா? அந்த மாதிரி சங்கமயுகத்தில் கடலின் கரை மற்றும் எதிர்காலத்தின் விஷயங்கள் யமுனை நதிகரை,

# 1981 அவ்யக்த முரளி

அப்படியானால் டெல்லி மற்றும் குஜராத்திற்கு என்ன சம்பந்தம்? டெல்லி யமுனை நதிக்கரை மற்றும் குஜராத் நடனம் ஆடுபவர்கள். யமுனை நதிகரையில் ஆடிய நடனம் மிகவும் பிரபலமானது இல்லையா! எனவே டெல்லி மற்றும் குஜராத் இருவர்களுமே வந்து விட்டார்கள். நல்லது. வெளிநாட்டினரும் வந்திருக்கிறார்கள். வெளிநாட்டினர் இப்பொழுது அழைக்கிறார்கள். இல்லையா? வாருங்கள் எங்கள் தேசத்தைச் சுற்றிவர பயணம் வாருங்கள். தீதி வரட்டும், தாதி வரட்டும், இவர் வரட்டும் என்று அழைக்கிறார்கள் என்றால் கொஞ்ச நாட்களுக்காக சுற்றி வரச் செல்கிறீர்கள். அதே போல் எதிர்காலத்திலும் சுற்றி வரச் செல்வீர்கள். ஒரு நொடியில் சென்று அடைந்து விடுவீர்கள். காலமே எடுக்காது. ஏனென்றால் விபத்து ஏற்படாது. எனவே வேகத்திற்கு ஒரு வரம்புக்குள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரே நாளில் முழு உலகையும் சுற்றி வரமுடியும். இந்த அணுசக்தி உங்கள் காரியத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். மிக துல்லியமாக்கும் கண்டுபிடிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் இல்லையா? இது உங்களுக்கு எந்த துக்கமும் கொடுக்காது. மிக அதிகமான சேவை எந்த தத்துவம் செய்யும். சூரியன், சூரியனின் கிரணங்கள் வித விதமான வகையில் அதிசயத்தைக் காண்பிக்கும். இவை அனைத்தும் உங்களுக்காக தயாராகிக் கொண்டிருக்கின்றன. கேஸ் எரிப்பதற்கு, கரி எரிப்பதற்கு, மரத்தை எரிப்பதற்கு அவசியம் இருக்காது. அனைத்திலிருந்தும் விடுபட்டு விடுவீர்கள். நல்லது. மிகுந்த வண்ண ஜாலங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். அவர்கள் உழைப்பார்கள், நீங்கள் பழத்தை அருந்துவீர்கள். அங்கு மின் கம்பிகளை இழுப்பதற்கும் அவசியம் இருக்காது. உழைப்பின்றி இயற்கையான முறையின் மூலமாக இயற்கையின் பிராப்தி அகி விடும் ஆனால் இதற்காக, இயற்கையின் சுகத்தை அடைவதற்காகவும் தன்னுடைய உண்மையான இயல்பை உருவாக்குங்கள். அப்பொழுது தான் இயற்கை மூலமாக அனைத்து சுகங்களையும் பிராப்தியாக அடைய முடியும். இயற்கையான இயல்பு என்றால் அனாதி சம்ஸ்காரம் (பரம்தாம சம்ஸ்காரம்) கேட்கும் போதே நன்றாக இருக்கிறது என்றால், எப்பொழுது பலனை அனுபவிப்பீர்களோ அப்பொழுது எவ்வளவு நன்றாக இருக்கும்! இங்கே எப்படி பறவைகள் பறக்கின்றன அதேபோல் அங்கு விமானங்கள் பறக்கும். எத்தனை இருக்கும்? எப்படி இங்கே பறவைக் கூட்டம் வரிசையாக செல்கின்றனவோ, அதேபோல் அங்கு விமானத்தின் கூட்டம் செல்லும். ஒன்று சென்றது என்றால், இன்னொன்று செல்ல முடியாது என்று அப்படி அல்ல. அந்த மாதிரி வேறு வேறு வடிவத்தில் செல்வார்கள். இராஜ குடும்பம் தங்களுக்கென்று வடிவமைக்கப்பட்டதில் அழைத்துச் செல்வார்கள். செல்வந்தர்கள் தங்களுடைய வடிவத்திலான விமானத்தில் செல்வார்கள். எங்கே விரும்பினாலும் அங்கே கீழே இறங்கி விடுவார்கள். இப்பொழுது இயற்கையை வென்றவர் ஆனீர்கள் என்றால்,

இயற்கை சேவகனாகும். இப்பொழுது இயற்கையை வெல்வது குறைவு என்றால், இயற்கை சேவகனாகவும் குறைந்த அளவிலேயே இருக்கும். புரிந்தா - நல்லது.

**மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு:** மதுபன் நிவாசிகள் யார்? மதுபன் நிவாசிகளுக்கு எந்தப் பட்டம் கொடுப்போம்? ஏதாவது புதிய பட்டத்தைக் கூறுங்கள். இந்த நேரம் மதுபனில் எந்த இயந்திரத்தை மாட்டியிருக்கிறீர்கள்? போட்டோ காப்பி எடுக்கும் இயந்திரம் -அந்த மாதிரி மதுபன் நிவாசிகள் போட்டோ காப்பி, எப்படி தந்தையோ அதே போல் குழந்தைகள். அந்த இயந்திரம் எப்படி இருக்கிறதோ இயந்திரத்தின் இந்த விசேஷம் தான் இல்லையா, காப்பிகளில், கொஞ்சம் கூட வித்தியாசம் வருவதில்லை. நீங்கள் மதுபன் நிவாசிகள் போட்டோ காப்பி, மதுபன் இயந்திரம் மற்றும் மதுபன் நிவாசிகள் போட்டோ! உங்களுடைய ஒவ்வொரு காரியமும் படைப்பவரின் கர்ம முறைகளை வெளிப்படுத்த வேண்டும். செய்யும் காரியம் மூலமாகத் தான் பாக்கியத்தின் ரேகைகளைப் போடுகிறீர்கள் என்றால் உங்கள் அனைவரின் ஒவ்வொரு காரியமும் சிரேஷ்ட பாக்கியத்தின் கர்மத்தின் ரேகைகளை போடுவதாக இருக்க வேண்டும். எப்படி பாப்தாதாவின் ஒவ்வொரு காரியமும் தனக்காகவும் மற்றும் அனேகர்களுக்கு பாக்கிய ரேகைகளைப் போடுவதாக இருந்தது. அதேபோலவே தந்தைக்குச் சமமாக ஆகுங்கள். மதுபனில் அத்தனை சாதனங்கள், அந்த அளவு சகயோகம், இந்த அளவு சிரேஷ்ட சங்கம் கிடைத்திருக்கிறது, பிராப்தி இல்லை என்ற பொருள் மதுபன் பெட்டகத்தில் இல்லையென்றால், நீங்கள் அனைவரும் அனைத்து பிராப்தி நிறைந்தவர்கள் என்னவாகி விட்டீர்கள்? சம்பூர்ணம் ஆகி விட்டீர்கள் இல்லையா! எந்த விஷயத்தின் குறை இருக்கிறது? ஒருவேளை குறை இருக்கிறது என்றால், சுயத்தின் தாரணையின் குறை இருக்கிறது. மதுபன் நிவாசிகளுக்கு எப்பொழுதும் தங்களுடைய ஒரு உண்மையான சம்ஸ்காரம் வெளிப்படும், ரூபத்தில் இருக்க வேண்டும், அது எது? செய்யும் காரியத்தில் வெற்றி அடைவதற்கான பிரம்மாபாபாவின் இயற்கையான சம்ஸ்காரமும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். சரி சரி என்று கூறுவதின் கூடவே முதலில் நீங்கள். முதலில் நான் என்றில்லை முதலில் நீங்கள், எப்படி பிரம்மாபாபா ஜகத் அம்பாவை முதன்மையாக வைத்தார் இல்லையா? முதலில் நீங்கள் என்று சொல்பவர்தான் சரிங்க என்று சொல்ல முடியும்,. எனவே முக்கியமான விஷயம் முதலில் நீங்கள் ஆனால் சுபபாவனையுடன் வாயளவில் சொல்வது மட்டுமின்றி, ஆனால் நற்சிந்தனையாளரின் பாவனையோடு இருக்க வேண்டும். சுபபாவனை மற்றும் சிரேஷ்ட விருப்பங்களின் ஆதாரத்தினால் முதலில் நீங்கள் என்று சொல்பவர் அவரே முதன்மையாகி விடுகிறார். முதலில் நீங்கள் என்று கூறுபவர் தான் முதல்

நம்பர் ஆவது. எப்படி தந்தை ஜகத் அம்பாவை முன்னுக்கு வைத்தார். குழந்தைகளை முன்னுக்கு வைத்தார், இருந்தும் நம்பர்ஒன்-ல் சென்றார் இல்லையா? இதில் எந்த சுயநலமும் வைக்கவில்லை, சுயநலமின்றி முதலில் நீங்கள், என்று கூறினார், செய்தும் காண்பித்தார். அதேபோலவே முதலில் நீங்கள், என்ற பாடம் உறுதியாக வேண்டும். இவர் செய்தார் என்றால் நான் செய்தேன், இவர் ஏன் செய்தார், நான் தான் செய்ய முடியாதா என்ன என்ற இந்த பாவனை வேண்டாம். அவர் செய்தார் என்றாலும் பாபாவின் சேவை நடந்தது, இங்கு யாருக்கும் அவர்களுடைய வேலை என்றோ எதுவும் இல்லைதான் இல்லையா, ஒரே ஒரு தந்தையின் காரியம் தான், நீங்கள் அனைவரும் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறீர்கள், இறை சேவையில் என்று தான் எழுதுகிறீர்களேயன்றி, என்னுடைய சேவையில் என்றோ எழுதுவது இல்லையே! எப்படி தந்தை ஒருவர், சேவையும் ஒன்று தான், அதேபோல் தான் இவரும் செய்தார், யார் எவ்வளவு செய்கிறாரோ அவரை இன்னும் முன்னேற்றுங்கள், நான் முன்னேற வேண்டும் என்று இருக்க வேண்டாம், மற்றவர்களை முன்னேற்றி நீங்கள் முன்னேறுங்கள். அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்று முன்னேறிச் செல்ல வேண்டும் இல்லையா! தந்தையுடன் அனைவரும் செல்வீர்கள் என்றால் உங்களுக்குள் கூடவே இருப்பீர்கள் தான் இல்லையா! எப்பொழுது இதே பாவனை ஒவ்வொருவரிலும் வந்து விடும் என்றால் பிரம்மாபாபாவின் போட்டோ காப்பி ஆகி விடுவீர்கள்.

மதுபன் நிவாசிகளை பார்த்தார்கள் என்றால் பிரம்மாவை பார்த்தார்கள், ஏனென்றால் காப்பியோ அவருடையது தான் இல்லையா! பிறகு யாரும் நானோ பிரம்மாபாபாவை பார்க்கவே இல்லை என்று கூறமாட்டார்கள், உங்களுடைய காரியம், உங்களுடைய நிலை பிரம்மாபாபாவைத் தெளிவாகக் காண்பிக்க வேண்டும், இது தான் மதுபன் நிவாசிகளின் விசேஷம். ஏனென்றால், மதுபன் நிவாசிகளை அனைவரும் பின்பற்றி நடப்பார்கள், அப்படி மதுபன்னைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் மாஸ்டர் பிரம்மா. இப்பொழுது பாருங்கள் பிரம்மாபாபாவின் படத்தை யாருக்காவது கொடுத்தீர்கள் என்றால் மிக அன்புடன் பத்திரமாக வைத்துக் கொள்வார்கள்,. மிக நல்ல பரிசு இது தான் என்று நினைக்கிறார்கள், எனவே நீங்கள் அனைவரும் பிரம்மாபாபாவின் படமாகி விடுங்கள், பிரம்மாபாபாவிற்குச் சமமாகி விட்டீர்கள் என்றால் நீங்களும் விலைமதிப்பற்ற பரிசாக ஆகி விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: உளமார்ந்த தபஸ்யா மூலமாக திருப்தியின் சான்றிதழைப் பெறக்கூடிய அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு உரியவர் ஆகுக!**

## 1981 அவ்யக்த முரளி

தபஸ்யாவின் சார்ட்டில் தனக்கு சான்றிதழ் கொடுப்பவர்களே அனேகர் இருக்கிறார்கள், ஆனால் அவைவரின் திருப்தியின் சான்றிதழ் எப்பொழுது கிடைக்கும் என்றால் எப்பொழுது இதயப்பூர்வமான தபஸ்யா இருக்கிறதோ, அனைவருக்குக்காகவும் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ, சுபபாவனை மற்றும் தான் ஒரு கருவி என்ற உணர்வு இருக்கிறதோ அப்பொழுது தான் கிடைக்கும், அந்த மாதிரி குழந்தைகள் அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு உரியவர் ஆகி விடுகிறார், குறைந்தது 95% ஆத்மாக்கள் திருப்தியின் சான்றிதழ் கொடுக்கட்டும், அனைவரது வாயிலிருந்தும் ஆம் இவர் நம்பர் ஒன் என்ற வார்த்தைகள் வெளியாக வேண்டும், அந்த மாதிரி அனைவரின் இதயத்திலிருந்து ஆசீர்வாதங்களின் சான்றிதழைப் பெறுபவர் தான் தந்தைக்குச் சமமாக ஆகிறார்கள்.

**சுலோகன்: நேரத்தை விலைமதிக்க முடியாத்து என்று புரிந்து பயனுள்ளதாக்கினீர்கள் என்றால், அவசியமான நேரத்தில் ஏமாற்றம் அடைய மாட்டீர்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீபாவளி சுபவேளையில் அவ்யக்த பாப்தாதாவினால் வழங்கப்பட்ட மகாவாக்கியங்கள்!

இன்று தீபங்களின் தலைவன் தன்னுடைய தீபமாலையைப் பார்க்க வந்திருக்கிறார். இந்த சைத்தன்ய தீபங்களின் நினைவுச்சின்னமாக ஜட தீடங்களின் தீபாவளியை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பக்தர்கள் ஜடச் சித்திரங்கள் மற்றும் ஜட தீபங்களுடன் தீபாவளி கொண்டாடுவார்கள். மேலும் சைத்தன்ய தீபமான நீங்கள் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தீபங்கள். தீபங்களின் தலைவனுடன் குழந்தையாகி சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் அதாவது தீபாவளி விழாவை கொண்படிக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு தீபமும் எவ்வளவு அழகாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தீபத்தைத் தான் பார்க்கிறார். இவ்வளவு பெரிய தீடாவளி வேறு எங்குமே இருக்க முடியாது. எவ்வளவு தான் அனேக ஸ்தூல தீபங்களை எரிய வைத்தாலும் ஆனால் அந்த மாதிரியான தீப மாலை எது அழியாததோ, அமரஜோதி சொரூபமானதோ, அம் மாதிரி தீப மாலை வேறு எங்கு இருக்க முடியும்? அந்த மாதிரி தீபாவளி, எதிரில் தீபராஜன் மற்றும் தீபராணிகள் அந்த மாதிரி சந்திப்பதை அதாவது விழாவை எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? பார்ப்பவர்களும் நீங்கள்! கொண்டாடுபவர்களும் நீங்கள்! பாப்தாதா குஜராத்தைச் சேர்ந்த தீபங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பாப்தாதாவின் எதிரில் பாரதம் மற்றும் வெளிநாடுகளின் நாலாபுறங்களிலும் உள்ள சைத்தன்ய தீபங்கள் இருக்கின்றன (1000-க்கும் மேலான சகோதர சகோதரிகள் வந்திருக்கிறார்கள் எனவே கீழே 3-4 இடங்களில் முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்) கீழே இருப்பவர்கள், கீழே இருக்கவில்லை, பாப்தாதாவின் கண்களில் இருக்கிறார்கள். இங்கே ஸ்தலத்தில் இடமில்லை ஆனால் பாப்தாதாவின் கண்களில் அந்த மாதிரி தீபங்களுக்கு எப்பொழுதுமே இடம் இருக்கிறது.

# 1981 அவ்யக்த முரளி

இன்று தீபராஜன் தன்னுடைய அனைத்து தீபராணிகளுக்கும் அமர ஜோதியின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எப்பொழுதும் அமரர் ஆகுக! வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் புன்முறுவல் செய்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து டென்னிஸ் சகோதரி வந்திருக்கிறார். இவர் ஒருவரில்லை, ஒருவரில் அனேகர்கள் இருக்கிறார்கள். நாலாபுறங்களிலுள்ள தேசத்தைச் சேர்ந்தவர்களும் நினைவு என்ற அன்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அன்பின் ஆதாரத்தில் தூரமாக இருந்த போதிலும் நேரெதிரிலேயே இருக்கிறார்கள். பாப்தாதா எல்லைக்கப்பாற்பட்ட தீபங்களின் தீபமாலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மதுபனின் முற்றத்தில் இன்று அனேக குழந்தைகள் பரிஷ்தாக்களின் ரூபத்தில் தென்படுகிறார்கள். சாகார ரூபத்தின் சபையோ மிகச் சிறியது ஆனால் ஒளி வடிவத்திலிருக்கும் பரிஷ்தாக்களின் சபை மிகப் பெரியது. இந்த பெரிய ஹால் ஒன்று கட்டிக் கொண்டிருக்கிறீர்களே அதுவும் சிறியது. கடலின் குழந்தைகளின் எதிரில் எவ்வளவு தான் பெரிய வராலைக் கட்டினாலும் கடலுக்குச் சமமாக ஆகி விடுவார்கள், பிறகு என்ன செய்வீர்கள், ஆகாயம் மற்றும் பூமியை இந்த எல்லைக்கப்பாற்பட்ட ஹாலில் நிரப்ப முடியுமா? எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகள் நான்கு சுவர்கள் என்ற எல்லைக்குள் எப்படி நிரம்ப முடியும்? அந்த மாதிரியும் நேரம் வரும் அப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட ஹாலில் இந்த நான்கு தத்துவங்கள் நான்கு சுவர்களின் வேலை செய்யும். சில சீதோஷண நிலை மோசமாகும் காரணமாகக் கூட கூரை அல்லது சுவர்களின் அவசியமே இருக்காது. எதுவரை பெரிய ஹாலைக் கட்டுவீர்கள். இந்த இயற்கை எதிர்காலத்தின் ஒத்திகையை இங்கேயே இறுதியில் உங்களுக்கு காண்பிக்கும். நாலாபுறங்களிலும் எவ்வளவு தான் ஏதாவது தத்துவம் மூலமாக சீற்றம் ஏற்பட்டு நஷ்டம் ஏற்படுகிறது என்றாலும், இயற்கையின் தலைவர்கள் நீங்கள் எங்கே இருப்பீர்களோ அங்கு இயற்கை தாசியாகி சேவை செய்யும். நீங்கள் இயற்கையை வென்றவராக மட்டும் ஆக வேண்டும். இயற்கை, தலைவர்கள் உங்களை இப்பொழுதிலிருந்தே ஆவஹானம் (அழைத்துக் கொண்டு) செய்து கொண்டிருக்கிறது. இந்த தெய்வீக நாளில் இயற்கையானது தலைவர்களுக்கு மாலை அணிவிக்கும். எந்த மாலையை அணிவிக்கும்? சந்தன மாலையா அல்லது ரத்தினங்கள், வைரத்தின் மாலையை அணிவிக்குமா? இயற்கை சகயோகத்தின் மாலையைத் தான் அணிவிக்கும். எங்கு இயற்கையை வென்ற பிராமணர்கள் உங்களுடைய கால் இருக்குமோ, ஸ்தாளம் இருக்குமோ அங்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட முடியாது. வீட்டின் எதிரில் ஓரிரண்டு நஷ்டம் ஏற்படும் ஆனால் நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள். இந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது என்று

எதிரில் தென்படும். புயல் வந்து கொண்டிருக்கிறது. பூமி நகர்ந்து கொண்டிருக்கிறது ஆனால் அங்கே ஈட்டி மாதிரியான சூழ்நிலை மற்றும் இங்கே ஊசிக்குச் சமமான சூழ்நிலை. அங்கு கதறுவது இருக்கும், இங்கே ஸ்திரமானவர்களாக இருப்பீர்கள். அனைவரும் ஸ்தூல மற்றும் சூட்சும ஆதாரத்தைப் பெறுவதற்காக உங்கள் பக்கம் ஓடி வருவார்கள். உங்களுடைய ஸ்தானம் புகலிடம் ஆகி விடும்.

அப்பொழுது தான் அனைவரின் வாயிலிருந்தும் 'ஆஹா பிரபு, உங்களுடைய லீலை அளவற்றது' என்ற வார்த்தை வெளியாகும். புண்ணியம் செய்த நீங்கள் அடைந்திருப்பீர்கள், நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை, இழந்தோம் இந்த வார்த்தைகள் நாலாபுறங்களிலும் இருந்தும் வரும். பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? உருவாக்குபவரின் குழந்தைகள் உருவாக்குபவராக மற்றும் வரம் அளிப்பவராக ஆவீர்கள் ஆனால் இதில் கூட புகலிடம் பெறுபவர்களும் இயல்பாகவே வரிசைக்கிரமமாக இருப்பார்கள். யார் இப்பொழுதிலிருந்து இறுதி வரை அல்லது ஸ்தாபனையின் தொடக்கத்திலிருந்து இதுவரையிலும் சகயோக உணர்வில் இருந்திருக்கிறார்கள், விரோத உணர்வில் இருக்கவில்லை. ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக்கொள்ளாதது அது வேறு விஷயம் ஆனால் ஈஸ்வரிய காரியத்தில் மற்றும் ஈஸ்வரிய குடும்பத்தின் மீது விரோத உணர்வு வைப்பதற்குப் பதிலாக சகயோகத்தின் உணர்வு, காரியம் நல்லது மற்றும் காரியம் செய்பவர்களும் நல்லவர்கள், இந்த செயல் தான் பரிவர்த்தனை செய்ய முடியும். அந்த மாதிரி விதவிதமான சகயோக உணர்வுள்ளவர்கள், அந்த மாதிரி அவசியமான நேரத்தில் இந்த பாவனையின் பலனாக அருகாமையின் முன் வரிசை எண்ணைப் பெறுவார்கள். அதாவது பகலிடத்தின் அதிகாரியாக நம்பர் ஒன் ஆவார்கள், மற்றபடி இந்த பாவனையிலும் சதவிகிதத்தில் இருப்பவர்கள், அந்த சதவிகிதத்தின் அனுசாரம் புகலிடத்தின் அஞ்சலியைப் பெற முடியும். மற்றபடி பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பார்த்துக் கொண்டே இருந்து விடுவார்கள். இப்பொழுது கூட பார்ப்போம், நீங்கள் செய்யும் காரியம் என்ன? அல்லது உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று பார்ப்போம். அனைத்தும் நடக்கும் அந்த நேரம் பார்த்துக் கொள்வோம், அந்த மாதிரி நேரத்திற்காகக் காத்திருப்பவர்கள் புகலிடத்தின் ஏற்பாடுகளின் அதிகாரியாக ஆக முடியாது. அந்த நேரத்திலும் பார்த்துக் கொண்டே இருந்து விடுவார்கள். நம்முடைய வாய்ப்பு எப்பொழுது வருகிறது என்ற இந்த காத்திருத்தலிலேயே இருப்பார்கள். மேலும் தூரத்தில் காத்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கும் மாஸ்டர் ஞான சூரியன் ஆகி சுபாவனை, சீரேஷ்டம் ஆவதற்கான விருப்பங்களின் கிரணங்களை

நாலபுறங்களில் உள்ள ஆத்மாக்களுக்கு, உலகிற்கு நன்மை செய்பவராகி அளிப்பீர்கள். பிறகு எத்தனை விரோதி ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்கள் தன்னுடைய வேதனை அடையும் அக்னியில், தான் எரிந்து கொண்டிருப்பதாக நிம்மதியற்ற நிலையை அனுபவம் செய்வார்கள். மேலும் நீங்கள் சீதளாதேவிகளாகி இரக்கம், தயை மற்றும் கிருபையின் சீதள நீர்த் துளிகளால் விரோதி ஆத்மாக்களையும் சீதளம் ஆக்குவீர்கள் அதாவது ஆதரவு என்ற அரவணைப்பை வழங்குவீர்கள். அந்த நேரம் அவர்கள் உங்களுடைய பக்தர்களாகி அம்மா, அம்மா என்று அழைத்துக் கொண்டே விரோதியிலிருந்து மாறி பக்தன் ஆகி விடுவார்கள். இவர்கள் உங்களுடைய கடைசி பக்தர்கள் அப்படி விரோதி ஆத்மாக்களுக்கும் இறுதியில் பக்தி நிலையின் அஞ்சலியை அவசியம் கொடுப்பீர்கள், வரம் அளிப்பவராகி பக்தன் ஆகுக என்ற வரதானத்தை வழங்குவீர்கள். இருந்தாலும் அவர் உங்களுடைய சகோதரன் தான் இல்லையா? அப்படி சகோதரத்துவத்தின் உறவை வைத்து நடந்து கொள்வீர்கள், அந்த மாதிரி வரம் அளிப்பவராக ஆகியிருக்கிறீர்களா? எப்படி இயற்கை உங்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறது. அதே போல் நீங்கள் அனைவரும் தன்னுடைய அந்த சம்பன்ன நிலையை வரவழைத்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த தீபாவளியை கொண்டாடுங்கள். அவர்கள் லட்சுமியை ஆவாஹனம் (அழைத்தல்) செய்வார்கள். மேலும் நீங்கள் என்ன ஆவாஹனம் செய்வீர்கள்? அவர்களோ! செல்வத்தின் தேவியை ஆவாஹனம் செய்கிறார்கள், நீங்கள் அனைவரும் 'செல்வந்தன் ஆகுக' என்ற நிலையின் ஆவாஹனம் செய்யுங்கள். அந்த மாதிரி தீபாவளியைக் கொண்டாடுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி தீபாவளியின் தீபங்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய செல்வந்தன் ஆகுக என்ற குழந்தைகளுக்கு, எப்பொழுதும் அமரஜோதி ஆகுக என்ற குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுபபாவனையின் பலனைக் கொடுக்கக்கூடிய, வரதானி, மகாதானி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதி, தாதியுடன் சந்திப்பு:** பாப்தாதா இன்று என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்? விசேஷமாக இன்று. இப்பொழுது பிரம்மாபாபா பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்று பிரம்மாபாபாவுடன் ஜகதம்பாவும் வந்திருக்கிறகள். பிரம்மாபாபா, மம்மா இருவரும் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாளில் அம்மாவையும் நினைவு செய்கிறார்கள் இல்லையா? எனவே ஜகதம்பா மற்றும்

# 1981 அவ்யக்த முரளி

பிரம்மாபாபா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? இன்று விசேஷ ரூபத்தில் ஜகத் அம்பாள் மற்றும் சைத்தன்ய எதிர்காலத்தில் லட்சுமி ஆகுபவர், தன்னுடைய விசேஷ சகயோகிகள், தன்னைப் போன்று சகோதரி, சகயோகி துணைவர்களைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தைப் பருவத்தின் தோழிகள் தான் இல்லையா? குழந்தைப் பருவம் நினைவிருக்கிறது தான் இல்லையா? இன்று தன்னுடைய தோழிகளை பாப்தாதாவின் காரியத்தில் சகயோகம் கொடுப்பதில் எப்பொழுதும் வந்தேன் ஐயா' 'கூறுங்கள் ஐயா' என்ற நடைமுறை பாடத்தின் காரியத்தை பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கிறார்.

இன்று தாய் தந்தை தன்னுடைய இராஜ வம்சத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இராஜ சபை எதிரில் வருகிறது. எவ்வளவு அலங்கரிக்கப்பட்ட சபை. அஷ்ட தேவதைகள் அவரவர்களின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். நீங்கள் எங்கே அமர்ந்திருக்கிறீர்கள்? எவ்வளவு சேவையின் ஆசனத்தின் அருகில் இருக்கிறீர்களோ அந்த அளவே இராஜ சிம்மாசனத்திலும் அருகில் இருக்கிறீர்கள். இங்கே தபஸ்யா மற்றும் சேவை தான் ஆசனம் மற்றும் அங்கே இராஜ்ய பாக்கியத்தின் சிம்மாசனம். அப்படி யார் எப்பொழுதும் தடஸ்யா மற்றும் சேவையின் ஆசனத்தில் இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவராக ஆகிறார். இங்கே எந்தளவு சேவையின் சகயோகியாக எப்பொழுதும் இருக்கிறாரோ அந்த அளவே அங்கே இராஜ்யத்தில் எப்பொழுதும் துணைவராக கூட இருப்பார். எப்படி இங்கே ஒவ்வொரு காரியத்திலும் பாப்தாதாவின் நினைவில் துணைவனாக இருக்கிறார். அதே போல் அங்கே ஒவ்வொரு காரியத்திலும் குழந்தைப் பருவத்தில் தொடங்கி இராஜ்யம் செய்வதின் ஒவ்வொரு காரியத்திலும் உடன் இருப்பவராக இருக்கிறார்கள். ஆயுளிலும் தன்னைப் போன்றே இருப்பவர்கள். எனவே படிப்பில், விளையாட்டில், சுற்றி வருவதில், இராஜ்யத்தில், ஒவ்வொரு காரியத்திலும் தன்னைப் போன்றே உடன் இருக்கும் துணைவர்களாக இருப்பார்கள். ஒருவேளை இங்கே ஏதாவது காரியத்திலும் நினைவின் மூலம் துணைவராக ஆகிறார்கள் என்றால், அங்கேயும் அனைத்து காரியத்திலும் துணைவராக ஆவதில்லை. சில சில காரியத்தில் துணைவராக இருப்பர்கள். மேலும் சில காரியத்தில் தனியாக இருப்பர்கள். சில காரிபத்தில் அருகாமையில் இருப்பார்கள், சில காரியத்தில் தூரமாக இருப்பார்கள். யார் எப்பொழுதும் அருகாமையில், எப்பொழுதும் துணைவனாக, எப்பொழுதும் சகயோகியாக, எப்பொழுதும் தபஸ்யா மற்றும் சேவையின் ஆசனத்தில் இருக்கிறாரோ, அவர்கள் அங்கேயும் எப்பொழுதும் உடன் இருக்கிறார்கள். அப்படி நினைவில் வருகிறது இல்லையா? எப்படி இங்கே ஆன்மீக வாழ்க்கையில்,

# 1981 அவ்யக்த முரளி

ஆத்யாத்மீக வாழ்க்கையில் சிறு வயது வாழ்க்கையிலிருந்து இறுதி வரை துணைவர்களாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? குழந்தைப் பருவத்தின் துணைவர்கள், இறுதி வரையிலும் துணைவர்கள், அதே போலவே பிரம்மா ரூடத்தில் யார் தொடக்கத்திலிருந்து இறுதி வரை ஒவ்வொரு காரியத்தில், ஒவ்வொரு சரித்திரத்தில், ஒவ்வொரு சேவையின் நேரத்தில் துணைவர்களாக இருந்தார்கள் அவர்கள் எதிர்காலத்திலும் துணைவர்களாக இருப்பார்கள். நல்லது.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** குஜராத்தின் உண்மையான சேவாதாரிகள். உண்மையான சேவாதாரி என்று கூறுங்கள் அல்லது ஆன்மீக சேவாதாரி என்று கூறுங்கள். ஆன்மீக சேவாதாரி என்றால் உண்மையான சேவாதாரி, குஜராத்தின் ஆன்மீக சேவாதாரிகளிடம் என்ன விசேஷம் இருக்கிறது? (எவரெடி). ஸ்தூல சேவையிலோ எவரெடியாக இருக்கிறீர்கள். ஏனென்றால், சேவையின் என்னென்ன விதவிதமான சதனங்கள் இருக்கின்றன. அதில் எங்கு அழைப்பு இருக்கிறதோ அங்கே சென்றடைபவர்கள் ஆனால் மனதின் எண்ணங்களிலும் எந்த எண்ணத்தை தாரணை செய்ய விரும்புகிறீர்களோ, அதிலேயும் எப்பொழுதும் எவரெடியாக இருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்களோ அதை அந்த நேரத்திலே செய்யுங்கள். இதைத் தான் எவரெடி என்று கூறுவது. மனதின் எண்ணங்களிலும் எவரெடி, சம்ஸ்கார மாற்றம் செய்வதிலும் எவரெடி. ஆன்மீக சம்மந்தம் மற்றும் தொடர்பு வைத்து நடந்து கொள்வதிலும் எவரெடி அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா அல்லது நேரம் எடுக்கிறதா? சம்ஸ்காரத்தை அகற்றுவதில் மற்றும் சம்ஸ்காரத்தை ஒத்துப்போக வைப்பதில் நேரம் எடுக்கிறதா? இதிலேயும் எவரெடி ஆகுங்கள். ஏனென்றால் குஜராத்தின் நடனம் மிகவும் பிரபலமானது. ஒன்று நடனம் ஆடுவது, இன்னொன்று நடனம் ஆடுவதில் இணைந்து ஒத்துப்போவது எப்படி நடனம் ஆடுவதில் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள், அதே போல் தந்தையோடு சம்ஸ்காரத்தை இணைப்பதிலும், உங்களுக்குள் உயர்ந்த சம்ஸ்காரத்தை இணைப்பதிலும் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா? சம்ஸ்காரத்தை இணைத்து ஒத்துப்போக வைப்பது தான் மிகப் பெரிய நடனம் ஆகும். அந்த மாதிரி நடனம் ஆடுகிறீர்களா? இன்று நீங்கள் அனைவரும் இப்பொழுதே நாங்கள் அனைவரும் எப்பொழுதும் சம்ஸ்காரத்தை இணைத்து நடனம் ஆடிக் கொண்டே இருப்போம் என்ற எண்ணத்தை வையுங்கள்.

இன்றைய தினம் ஓட்சுமியின் கூடவே உங்களுக்கும் பூஜை நடக்கிறது. தாயின் கூடவே குழந்தைகளுக்கும் நடக்கிறது. எந்த ரூபத்தில் நடக்கிறது? லட்சுமியுடன் சேர்த்து கணேசரின் பூஜையும் செய்கிறார்கள். கணேசர் குழந்தை தான்

இல்லையா. அப்படி லட்சுமியின் பூஜை மட்டும் இல்லை, ஆனால் நீங்கள் அனைவரும் கணேசர் அதாவது புத்திவான் ஆவீர்கள் மூன்று காலங்களின் ஞானம் நிறைந்தவர். இதைத் தான் கணேசர் அதாவது புத்திவான், அறிவாளி என்று கூறுவது. மேலும் கணேசரைத்தான் விக்ன விநாஷக் தடைகளை அழிப்பவர் என்றும் கூறுகிறார்கள், அப்படி யார் மூன்று உலகங்கள் மற்றும் மும்மூர்த்திகளின் ஞானம் நிறைந்தவராக இருக்கிறாரோ அவர் தான் தடைகளை அழிப்பவர். எனவே நீங்கள் ஞானம் நிறைந்தவராகவும் இருக்கிறீர்கள். மேலும் தடைகளை அழிப்பவராகவும் இருக்கிறீர்கள். எனவே பூஜை நடக்கிறது. அப்படி இன்று உங்களின் பூஜையின் தினம். உங்கள் அனைவரின் தினமும் தான் இல்லையா? எனவே எப்பொழுதும் எந்தவொரு சூழ்நிலையிலும் தடை ரூபம் ஆகாமல் தடைகளை அழிப்பவர் ஆகுங்கள். ஒருவேளை வேறு யாராவது தடை ரூபம் ஆகுகிறார் என்றால், நீங்கள் தடைகளை அழிப்பவர் ஆகி விடுங்கள். பிறகு கடைகள் அழிந்து விடும். அந்த மாதிரி சூழ்நிலை இருக்கிறது, அந்த மாதிரி பிரச்சனைகள் இருக்கிறது. எனவே இதைச் செய்ய வேண்டியதாக ஆனது என்ற இந்த வார்த்தைகள் தடைகளை அழிப்பவரினுடையதில்லை. தடைகளை அழிப்பவர் சூழ்நிலையை மற்றும் பிரச்சனைகளை மாற்றம் செய்பவர். நீங்கள் அந்த மாதிரி தடைகளை அழிப்பவரா? குஜராத் மாநிலம் ஒருவேளை விக்ன விநாஷக் ஆகி விட்டது என்றால், பிறகு எந்தவிதமான தடையின் பேச்சே இருக்காது. பெயர், அடையாளம் கூட இருக்காது. எப்பொழுது உங்களுடைய படைப்பு, எல்லைக்குட்பட்ட சூரியன் இருளை அகற்ற முடியும் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட மாஸ்டர் ஞான சூரியன் நீங்கள் இதை அகற்ற முடியாதா என்ன? எப்படி குஜராத் சேவையில் நம்பர் ஒன் ஆக இருக்கிறது. அதே போல் தடைகளை அகற்றுவதிலும் நம்பர் ஒன் ஆகி விடுங்கள். அப்பொழுது பரிசு கொடுப்போம். மிக நல்ல பரிசு கொடுப்போம். தந்தையின் பரிசாக என்ன கிடைக்கிறதோ அதை நீங்கள் குஜராத்திற்குக் கொடுங்கள்.

**தீபாவளி மற்றும் புது வருடத்திற்கான வாழ்த்துக்கள் -27.10.1981 இரவு 1½-மணி!** எப்பொழுதுமே உங்களுக்கு புது வருடம் தான், ஆனால் ஒவ்வொரு நேரமும் புதியது எனவே ஒவ்வொரு நேரத்திலும் புதிய ஊக்கம், புதிய உற்சாகம், புதிய சேவைக்கான திட்டம். ஒவ்வொரு நேரமும் புதியது, புதியது. இந்த புதுமைக்காக நிரந்தரமான பாராட்டுக்கள். மக்களுக்காக புது வருடம், மேலும் உங்களுக்காக இது புது யுகம். மேலும் புது யுகத்தில் ஒவ்வொரு நேரமும் உற்சாகம் இருக்கும் காரணத்தினால் உற்சவம் இருக்கிறது, ஒவ்வொரு நேரமும் தீபாவளி, ஒவ்வொரு நேரமும் உற்சவம். ஏனென்றால் உற்சவத்தின் அர்த்தமே உற்சாகம்

ஊட்டக்கூடியது. இந்த பிராமண வழ்க்கை தான் உங்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடியது. அதில் ஒவ்வொரு நேரமும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். அந்த மாதிரி புதிய நாள், புதிய வருடம், புதிய விநாடி, எண்ணம் என்று கூறினாலும் ஒவ்வொரு புதிய ரூபத்திற்கும் வாழ்த்துக்கள். தீபாவளியையும் கொண்டாடினீர்கள், புது வருடத்தையும் கொண்டாடினீர்கள். இரண்டிற்குமான சங்கமம் ஆகி விட்டது. குஜராத்தைச் சேர்ந்தவர்கள் அதிஷ்டம் நிறைந்தவர்கள். ஏனென்றால் சங்கமயுகத்திலும் சங்கமத்தை கொண்டாடினார்கள். நல்லது -அழியாத வாழ்த்துக்கள்!

**வரதானம்: தன்னுடைய அனாதி, ஆதி சொரூபத்தின் நினைவு மூலம் பந்தனமற்றவர் ஆகும் மற்றும் ஆக்கக்கூடிய மர்ஜீவா ஆகுக!**

எப்படி தந்தை கடனாக எடுக்கிறார், பந்தனத்தில் வருவதில்லை, அந்த மாதிரி மர்ஜீவா ஜென்மம் எடுத்த குழந்தைகள் நீங்கள் உடலின், கம்ஸ்காரத்தின், சுடாவத்தின் பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அந்த மாதிரி தன்னுடைய சம்ஸ்காரத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள், எட்டடி தந்தை பந்தனமற்றவராக இருக்கிறார். அதே போல் பந்தனம் அற்றவராக ஆகுங்கள். மூல வதனத்தின் நிலையில் நிலைத்திருந்து பின்பு கீழே வாருங்கள். தன்னுடைய அனாதி, ஆதி சொரூபத்தின் நினைவில் இருங்கள். அவதரித்திருக்கும் ஆத்மா என்று உணர்ந்து காரியம் செய்தீர்கள் என்றால் மற்றவர்களும் உங்களை பின்பற்றி செய்வர்கள்.

**சுலோகன்: நினைவின் உள்உணர்வு மூலம் வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவது தான் மனசேவை ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 29.10.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தை மற்றும் குழந்தைகளின் ஆன்மீக சந்திப்பு!

ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆன்மீக சந்திப்பை குழந்தைகள் நீங்கள் மட்டும் தான் செய்ய முடியும். ஒரு தந்தையுடன் ஒரே நேரத்தில் இந்த சந்திப்பை செய்ய முடியும். நீங்கள் அனைவரும் தீபாவளித் திருவிழாவைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். விழாவில் ஒன்று கொண்டாடுவது இரண்டாவது ஒருவர் இன்னொருவரை சந்திப்பது. மூன்றாவது ஏதாவது (பரிசு) கொடுப்பது மற்றும் பெற்றுக் கொள்வது மேலும் நான்காவது விளையாடுவது. நீங்கள் அனைவரும் கூட இந்த நான்கு விஷயங்களையுமே செய்திருக்கிறீர்கள். சந்திப்பு விழாவிலோ வந்திருக்கிறீர்கள் ஆனால் கொண்டாடுவது என்றால், எப்பொழுதும் அழியாத உற்சாகம் நிரம்பிய, ஊக்கம் நிரம்பிய வாழ்க்கையில் எப்பொழுதும் இருப்பதற்கான திட எண்ணம் வைப்பது. இந்த ஆன்மீக சந்திப்பு விழாவை கொண்பாடுவது அழியாத உற்சவத்தைக் கொண்டாடுவது ஓரிரு நாட்களுக்காக மட்டுமில்லை ஆனால் சங்கமயுகமே எப்பொழுதும் உற்சவம் அதாவது உற்சாகத்தை அதிகரிப்பது. அப்படி தீபாவளி கடந்து சென்று விடவில்லை ஆனால் தீப ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. நிரந்தரமாக புது வருடம் வந்திருக்கிறது. ஒவ்வொரு நேரமும் உங்களைப் பொருத்தளவில் புதியது. எப்படி புது வருடத்தில் அதே நாளில் விசேஷமாக புதுப்புது ஆடைகள், புதுப்புது அலங்காரம், புதிய ஊக்கம் மற்றும் விசேஷ குஷிக்கான நாள் என்று புரிந்து அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார்கள். இனிப்பு வழங்குகிறார்கள். அதே போல் ஆன்மீக குழந்தைகள் உங்களைப் பொருத்தளவில் சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிப்பதற்கான மற்றும் அனைவருக்கும் எப்பொழுதும் இனிப்பு வழங்குவதற்கான நாள் ஆகும். அந்த மாதிரி எப்பொழுதும் உற்சாகத்தில் இருங்கள். மேலும் மற்றவர்களுக்கும் உற்சாகம் கொடுங்கள். எப்பொழுதும் வாயில் இனிமையான வார்த்தைகள் வருவது, என்பது தான் இனிப்பு வழங்குவது, மேலும் மற்றவர்களுக்கும் இனிமையான வார்த்தைகள் மூலமாக இனிமையான தந்தையின் நினைவூட்டுவது, சம்மந்தத்தில் கொண்டு வருவது, இது தான் இனிப்பு

வழங்குவது. அப்படி எப்பொழுதுமே வாய் இனித்துக் கொண்டிருக்கிறதா? இனிமையான வார்த்தை என்ற இனிப்பு எப்பொழுதும் உங்கள் வாயிலிருக்கிறது மற்றும் எப்பொழுதும் மற்றவர்களுக்கும் அருந்தக் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள், ஒவ்வொரு நாளும் உயர்ந்த நிலை அதாவது ஒவ்வொரு நாளும் தன்னில் புதுமையை தாரணை செய்து கொண்டே இருக்கிறீர்கள். ஒரு விநாடி சென்றது மேலும் புதிய நிலை. ஒரு விநாடிக்கு முன்பு என்ன நிலையாக இருந்ததோ அது இரண்டாவது விநாடியில் முன்னேறும் கலையின் அனுபவத்தின் காரணத்தினால் எப்பொழுதும் உயர்ந்ததாக மற்றும் புதியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை தாரணை செய்வது என்றால், புதிய ஆடையை அணிவது சத்யுகத்திலோ ஸ்தூலமாக எப்பொழுதும் புதிய ஆடை அணிவீர்கள், உலக மகாராஜா மற்றும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அணிந்த ஆடையை அணிய மாட்டீர்கள். இந்த சம்ஸ்காரத்தை இராஜ்ய அதிகரி ஆத்மாக்கள் இங்கேயே நிரப்ப வேண்டும். ஒவ்வொரு நேரத்தின் புதிய நிலை மற்றும் ஒவ்வொரு நேரம் பாப்தாதா மூலமாக ஞானம், யோகா மூலமாக புதிய அலங்காரம் ஆகிக் கொண்டிருக்கிறது. எப்படி மிக அதிக செல்வம் உடையவர்கள் எப்பொழுதும் புதுப்புது அலங்காரம் செய்வார்கள். அப்படி அனைவரையும் விட உயர்ந்த சம்பன்னமான தந்தை, உயர்ந்த சம்பன்ன குழந்தைகள் உங்களுக்கு தினசரி புதிய அலங்காரம் செய்கிறார் இல்லையா? அப்படி தினசரி புதிய வருடம் ஆனது இல்லையா! புதிய ஆடை புதிய அலங்காரம், புதிய உற்சவம் அதாவது உற்சாகம் மற்றும் எப்பொழுதுமே வாய் இனித்துக் கொண்டிருப்பது, நிரந்தரமாகவே வாயில் இனிப்பை அனுபவம் செய்விக்கும் இனிப்பு இருக்கிறது. எனவே தந்தையும் தினசரி என்ன கூறுகிறார்? (இனிமையிலும் இனிமையான குழந்தைகளே) இது உறுதியாக நினைவில் இருக்கிறது இல்லையா? தந்தையும் இனிமையிலும் இனிமையான குழந்தைகளே என்று கூறுகிறார். மேலும் குழந்தைகளும் என்ன கூறுகிறார்கள்? (இனிமையிலும் இனிமையான பாபா அப்படியானால் வாயில் என்ன ஆயிற்று? அப்படி தினசரி புதிய வருடம் ஆகி விட்டது இல்லையா? புதிய வருடம் என்றால், புதியது என்ன புதிய நேரம் ஆகி விட்டது. அப்படி இந்த விதமாக கொண்டாடினீர்களா? அல்லது உற்சவம் சென்று விட்டது. கூடவே உற்சாகமும் சென்று விட்டதா? அப்படி அற்பகாலத்திற்கு கொண்டாடவில்லையே? இங்கு ஆன்மீக மேளா (சந்திப்பு) என்றால் அழியாத மேளா, இன்னொரு விஷயம் கொண்டாடுவதின் கூடவே சந்திப்பது. அப்படி ஆன்மீக சந்திப்பு செய்வது என்றால், தந்தைக்குச் சமமாக ஆவது. இது ஸ்தூலமான சந்திப்பு இல்லை, ஆனால் குணங்களால் சந்திப்பது, சம்ஸ்காரங்களால் சந்திட்டது. சந்திப்பது என்றால் சமம் ஆவது, எனவே தான் சேர்க்கையின் பிரபாவம் இருக்கிறது என்ற மகிமை பாடுகிறார்கள். அந்த மாதிரி

ஆன்மீக சந்திப்பை செய்தீர்களா? அல்லது ஒவ்வொருவருக்கும் கை கொடுத்தீர்கள். மேலும் கட்டி அணைத்தீர்கள் என்பது மட்டும் தானா? குணங்களின் சந்திப்பு மற்றும் சம்ஸ்காரங்களின் சந்திப்பு, இது நிரந்தரமானது தான் இல்லையா? தினசரி சந்திப்பைக் கொண்டாடுவது. அப்படி மேளாவில் வந்திருக்கிறீர்கள் என்றால். அந்த மாதிரி சந்திப்பை செய்தீர்களா?

மூன்றாவது விஷயம், வாங்குவது மற்றும் கொடுப்பது. உலகியல் முறையில் கூட ஏதாவது திருவிழாவிற்குச் செல்கிறீர்கள் என்றால் பணம் கொடுப்பீர்கள், ஏதாவது பொருளை வாங்குவீர்கள். அவசியம் ஏதாவது வாங்குவார்கள். மேலும் பொருளைப் பெறுவதற்கு முன்பு கொடுப்பதோ இருக்கவே இருக்கிறது. அப்படி எப்பொழுதுமே எடுக்கிறீர்களா? ஒவ்வொருவரிலும் கூட எப்பொழுதும் ஒவ்வொருவரின் விசேஷம் மற்றும் குணங்களை எடுக்கத்தான் செய்கிறீர்கள். எப்பொழுதுமே எடுக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுது எடுக்கிறீர்கள் என்றால், தனக்குள் தாரணை செய்கிறீர்கள். அப்படி எப்பொழுது விசேஷத்தை தாரணை செய்தீர்கள் என்றால், அதற்குப் பதிலாக சாதாரண நிலை இயல்பாகவே அகன்று விடுகிறது. குணத்தை தாரணை செய்கிறீர்கள் என்றால், அந்த குணத்தை தாரணை செய்வதினால் என்ன பலஹீனம் இருந்ததோ அது தானாகவே அகன்று விடுகிறது. அப்படி இது தான் கொடுப்பதாக ஆனது. அப்படி குஜராத்தை சேர்ந்தவர்கள் எடுத்தார்களா மற்றும் கொடுத்தார்களா? கொடுப்பது மற்றும் பெறுவதை செய்தீர்களா? இந்த கொடுப்பது மற்றும் எடுப்பது ஒவ்வொரு நேரமும் நடந்து கொண்டே இருக்கிறது. மேலும் நடந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு விநாடியும் எடுக்கிறீர்கள் மற்றும் கொடுக்கிறீர்கள். ஏனென்றால், எடுப்பதினால் கொடுப்பதும் அதனோடு சேர்ந்து இருக்கிறது. அப்படி கொடுப்பதிலும் பரந்த மனமுடையவர்களாக இருக்கிறீர்களா அல்லது கஞ்சனாக இருக்கிறீர்களா? பரந்த மனமுடையவர் தான் இல்லையா? மேலும் கொடுப்பது கூட என்ன கொடுக்கிறீர்கள். எதனால் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்களோ அதைத் தான் கொடுக்கிறீர்கள்.

எப்பொழுது அனைத்துக் குழந்தைகளும் முற்றிலும் காலியாகி விடுகிறார்களோ அப்பொழுது தான் தந்தை வருகிறார். உடலின் சக்தியம் இல்லை, மனதின் சக்தியும் இல்லை, பணம் செல்வத்தின் சக்தியும் இல்லை. உடலின் சக்தியில் காலியாகி இருக்கிறார்கள் -இதனுடைய நினைவாக சிவனின் ஊர்வலத்தை எப்படிக் காண்பித்திருக்கிறார்கள்? மேலும் மனதின் சக்தி அழிந்ததின் அடையாளமாக - 'எப்பொழுதும் கூவி அழைத்துக் கொண்டிருப்பது' என்பது நினைவாக இருக்கிறது. தினசரி அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள் இல்லையா? பணம் செல்வத்தின்

காலியானதின் அடையாளம் -இப்பொழுது பாருங்கள் கொஞ்சம் தங்கமும் இருக்கிறது. அதன் மீது எப்பொழுதும் அரசாங்கத்தின் பார்வை இருக்கிறது. பயந்து பயந்து அணிகிறார்கள். ஒருவேளை பணம் இருக்கிறது என்றாலும் அதனுடைய பெயர் என்னவாக இருக்கிறது? 'கருப்பு பணம்'. பெயரளவில் எவ்வளவு பெரிய செல்வந்தனோ, அந்த அளவு 90- சதவிகிதம் கருப்பு பணம் இருக்கும். அப்படி பெயரளவில் பணம் இருந்ததா? அல்லது உபயோகத்திற்கானதாக இருந்ததா? அப்படி எப்பொழுது அனைத்து தரப்பிலிருந்தும் காலியாகி விடுகிறீர்களோ, குசேலரின் காய்ந்த அவல் மட்டும் எப்பொழுது இருந்து விடுகிறதோ, அப்பொழுது தந்தை வருகிறார். காய்ந்த அவல் சாப்பிடுவதினால் உடல் ஆரோக்கியத்திற்கு கெடுதல் ஆகி விடும். அவல் மட்டும் கொடுக்கிறீர்கள். அதுவும் காய்ந்தது. மேலும் என்ன பெறுகிறீர்கள்? அனைத்து குணங்கள், அனைத்து சக்திகள், அனைத்து பொக்கிஷங்கள். 36-விதங்களையும் விட அதிக வகைகள் என்றால் பெறுவதாக ஆனதா? அல்லது கொடுப்பதாக ஆனதா? காய்ந்த அவல் கூட மண் படிந்ததைக் கொண்டு வருகிறீர்கள். மண்ணின் நினைவு தான் இருக்கிறது இல்லையா? இப்பொழுதோ மாறி விட்டீர்கள் ஆனால் எப்பொழுது தந்தையிடம் வந்தீர்களோ அப்பொழுது மண் பூசப்பட்டவராகத் தான் இருந்தீர்கள். மண்ணை பார்ப்பது, மண்ணோடு விளையாடுவது மற்றும் வேறு என்ன செய்தீர்கள்? ஆனால் இப்பொழுது இரத்தினங்களோடு விளையாடுகிறீர்கள். அப்படி கொடுப்பது மற்றும் பெறுவது எப்பொழுதுமே இருந்து கொண்டே இருக்கும். கொடுப்பது கூட மண் நிரம்பிய காய்ந்த அவல். இருந்தும் சில குழந்தைகள் மிகுந்த முரண்டு செய்கிறார்கள். கொடுத்து விட்டேன் என்று இன்று சொல்வார்கள் ஆனால் குசேலர் மாதிரி அதை இடுப்பில் மறைத்து வைத்திருப்பார்கள். தந்தையோ எடுக்க முடியும் ஆனால் கொடுப்பவருக்கு புண்ணிய கணக்கு உருவாகுமா? ஒருவேளை பிடுங்கி எடுத்து விடுகிறோம் என்றால், கொடுத்து எடுப்பது என்பதில் குறை ஏற்பட்டு விடும். கொடுப்பது ஒன்று மற்றும் பெறுவது பலமடங்கு. அப்படி சுய இச்சை அதாவது திட எண்ணத்தோடு ஒன்று கொடுப்பது, பல மடங்கு பெறுவது! எனவே நீங்கள் தான் கொடுக்க வேண்டும் ஏனென்றால் கொடுப்பதில் தான் நன்மை இருக்கிறது. அப்படி காடுப்பது, பெறுவது என்றால் என்ன என்று புரிந்து கொண்டீர்களா?

எப்பொழுது அந்த மாதிரி கொண்டாடுவது; சந்திப்பது மற்றும் கொடுக்கல், வாங்கல் ஆகி விடுகிறது என்றால் என்ன ஆகிறது? எப்பொழுதும் தந்தையுடன் குஷியோடு விளையாடுவது. எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடுவது. அந்த மாதிரி மேளாவை (சந்திப்பை) கொண்டாடினீர்களா? இந்த ஆன்மீக மேளாவை

எப்பொழுதும் கொண்டாடிக் கொண்டே இருங்கள். மேலும் ஒவ்வொரு நாளும் மேளா தான். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு விநாடியும் மேளாவை கொண்டாடக்கூடிய எப்பொழுதும் தன்னுடைய மற்றும் அனைவரின் வாயை இனிப்பாக்கக்கூடிய, எப்பொழுதும் புதிய உற்சாகம் வைக்கக்கூடிய அதாவது எப்பொழுதும் உற்சவத்தைக் கொண்டாடக்கூடிய, ஒவ்வொரு விநாடியும் முன்னேறும் கலையின் புதிய நிலை அதாவது புதிய ஆடை அணிந்த புதிய அலங்காரம் தரித்த, எப்பொழுதும் தந்தையுடன் குஷியில் விளையாடக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் ஆன்மீக மேளாலைக் கொண்டாடக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தம்பதிகளுடன் சந்திப்பு:** தன்னுடைய விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? இந்த குரூப்பின் விசேஷம் என்ன? இந்த குரூப் சன்னியாசி மகாத்மாக்களையும் தலை வணங்க வைப்பவர்கள். சன்னியாசி என்றால் இன்றைய நாட்களில் மகான் ஆத்மாக்கள். அப்படி இன்றைய நாட்களின் மகாத்மாக்கள் என்று கூறப்படுபவர்களுக்கும் தன்னுடைய வாழ்க்கை மூலமாக அறிமுகம் கொடுப்பவர்கள் நீங்கள். இதே விசேஷத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தீர்கள் என்றால் ஒவ்வொரு காரியமும் சரித்திரமாகி விடும். எட்டடி பிரம்மாவின் ஒவ்வொரு காரியத்தையும் சரித்திரத்தின் ரூபத்தில் வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா? இங்கே மதுபன்னில் பிரம்மாபாபாவின் சரித்திர பூமி என்று புரிந்து வருகிறீர்கள் தான் இல்லையா? பிரம்மாபாபாவின் ஒவ்வொரு காரியம் சரித்திரம் ஆகி விட்டது. ஏனென்றால், உயர்ந்த காரியமாக இருந்தது, அந்த மாதிரி இந்த குரூப்பின் விசேஷமானது ஒவ்வொரு காரியத்தையும் சரித்திரத்திற்கு சமமாக ஆக்குபவர்கள். ஏனென்றால் இப்பொழுது ஆன்மீகத் தந்தையின் குழந்தைகள், ஆன்மீகமாகி விட்டார்கள். பிரம்மாகுமார், குமாரியின் ஆன்மீக உறவு ஏற்பட்டு விட்டது. ஆன்மீகத் தந்தை, ஆன்மீகக் குழந்தைகள் மற்றும் ஆன்மீக காரியம். ஆன்மீகக் காரியத்தைத் தான் சரித்திரம் என்று கூறுவோம். முழு நாளும் அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரையிலும் ஒவ்வொரு காரியமும் சரித்திரமாக இருக்கட்டும், சாதாரணமானதாக இருக்க வேண்டாம். ஆன்மீகமானதாக இருக்கட்டும். ஆன்மீக வாழ்க்கை உள்ளவர் சாதாரண காரியம் செய்யவே முடியாது.

## 1981 அவ்யக்த முரளி

அனைவரின் இரண்டு சக்கர வண்டி சரியாகச் சென்று கொண்டிருக்கிறது தான் இல்லையா? எப்பொழுதாவது ஏதாவது சக்கரம் மேலேயோ, கீழேயோ செல்வதில்லையே! ஒரு சக்கரம் முன்னுக்கு சென்று கொண்டிருக்கிறது. இன்னொரு சக்கரம் பின்னாலேயே இருந்து விடவில்லையே? உங்கள் அனைவரின் விசேஷமே ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்கு இருங்கள், மேலும் ஒருவர் இன்னொருவரை முன்னுக்கு வைப்பவராகவும் இருக்கிறீர்கள் என்பது தான்! ஒருவர் இன்னொருவரை முன்னுக்கு வைப்பது தான் முன்னால் இருப்பது. நான் ஆண் மற்றும் அவர் தன்னை சக்தி என்று நினைக்கிறார் என்று அப்படியும் வேண்டாம். ஒருவேளை நீங்கள் சக்தி என்றால் அந்த பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல, சக்திகளும் குறைந்தவர்கள் அல்ல. இருபாலாருமே தந்தையின் சகயோகிகள்! எனவே பாண்டவர்கள் முன்னுக்கு இருக்கிறார்களா அல்லது சக்திகள் முன்னுக்கு இருக்கிறார்களா என்ற இதையும் கூற முடியாது. சக்திகளை கேடயம் என்று ஏன் கூறுகிறோம் என்றால், அவர்கள் தன்னை வெகுகாலமாகத் தாழ்ந்தவர்கள் என்றே நினைத்து வந்திருக்கிறார்கள். எனவே போதை ஏறுவதற்காக முன்னுக்கு வைத்திருக்கிறோம். சக்திகளை முன்னுக்கு வைப்பதில் தான் பாண்டவர்களுக்கு லாபம். சக்திகள் பின்னால் இருக்கிறார்கள் என்றால், உங்களையும் பின்னால் இழுத்து விடுவார்கள். ஏனென்றால் சக்திகளிடம் கவர்ந்திழுக்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. எனவே சக்திகளை முன்னுக்கு வைப்பது தான் நீங்கள் முன்னுக்கு இருப்பதாகும். பொதுவாகவே சக்திகள் பாண்டவர்களின் கேடயம். பாண்டவர்கள் எங்காவது இந்த மாதிரி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்றால், தடியடி பெற வேண்டியதாக இருக்கும். பொதுவாக கீதா பாடசாலை திறக்கிறீர்கள் என்றால் சகோதரியை அனுப்புங்கள் என்று கூறுகிறீர்கள். மாதா குரு ஆவார், எனவே மாதர்களில் பாவனை சுலபமாக வந்து விடுகிறது. பிரம்மாபாபாவும் முதுகெலும்பாக இருந்தார். மேலும் சக்திகளை முன்னுக்கு வைத்தார் என்றால் நீங்களும் பிரம்மாவைப் போன்றவர்கள் தான். எப்படி தந்தை சக்திகளை முன்னுக்கு வைத்தார் என்றால் வெற்றி கிடைத்தது அதே போல் நீங்களும் சக்திகளை முன்னுக்கு வைத்தீர்கள் என்றால் வெற்றி கிடைத்து விடும்.

இல்லறத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்படுவதில்லையே? எப்பொழுதாவது ஒரு பாத்திரம் இன்னொரு பாத்திரத்தோடு மோதுவதோ இல்லையே ஏனென்றால் ஏதாவது சட்தம் எழுகிறது என்றால் என்ன கூறுவார்கள்? பகவானின் குழந்தைகள் மேலும் பாத்திரம், பாத்திரத்தோடு மோதுகிறது. பொதுவாகவே பாத்திரம் பாத்திரத்தோடு மோதுகிறது என்றால் அவசியம் சப்தம் எழும் ஆனால் இங்கு சப்தம்

எழ முடியாது. ஏன்? ஏனென்றால் இங்கு இடையில் தந்தை இருக்கிறார். எங்கு இடையில் தந்தை வந்து விட்டாரோ அங்கு சப்தம் இருக்குமா? எப்பொழுது இடையிலிருந்து தந்தையை அகற்றி விடுகிறீர்களோ அப்பொழுது மோதல் ஏற்படுகிறது. சப்தம் எழுகிறது. எனவே எப்பொழுதும் தந்தையை உடன் வைத்துக் கொள்ளுங்கள். தந்தை உடன் இருக்கிறார் என்றால், ஏதாவது ஒரு விஷயம் நடந்தது என்றாலும் சரியாகி விடும். பொதுவாகவே இரண்டு பேர்களின் விஷயத்தில் மூன்றாவது நபர் இடையில் வருகிறார் என்றால் விஷயம் முடிந்து விடுகிறது இல்லையா? அதுபோலவே தந்தையை இடையில் வைத்தீர்கள் என்றால் விஷயம் வளராது, முடிவு ஏற்பட்டு விடும்.

இல்லறத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும் உடலின் சம்மந்தத்தில் விலகியவராக இருங்கள். அப்பொழுது தான் தூய்மையான இல்லற மார்க்கம் என்ற பங்கைச் செய்ய முடியும். நான் ஆண், இவர் பெண் என்ற இந்த உணர்வுகள் கனவில் கூட வர முடியாது. ஆத்மா சகோதரன் சகோதரன் என்றால், ஆண், பெண் எங்கிருந்து வந்தார்கள். தம்பதியோ நீங்கள் மற்றும் தந்தை தான் இல்லையா, பிறகு இவர் என்னுடைய ஜோடி (யுகல்) என்று அப்படி எப்படி கூற முடியும்? இதுவோ ஒரு காரணத்திற்காக சேவைக்காக மட்டும் இருக்கிறது மற்றபடி இணைந்த ரூபமோ நீங்களும் தந்தையும் தான். இருந்தாலும் தைரியம் வைத்ததற்காக பாப்தாதா வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். தைரியத்துடன் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள், மேலும் சென்று கொண்டே இருப்பீர்கள். இந்த தைரியத்திற்கு வாழ்த்துக்கள்!

**குமாரர்களுடன்**: தன்னை எப்பொழுதும் இராஜரிஷி என்று நினைக்கிறீர்களா? அதிகாரி மற்றும் ரிஷி அதாவது தபஸ்வி. சுயத்தின் இராஜ்யம் பிராப்தி ஆவதினால் இயல்பாகவே தபஸ்வி ஆகி விடுகிறார்கள். ஏனென்றால், எப்பொழுது சுயத்தின் இராஜ்யம் இருக்கிறது என்றால் சுயத்தை ஆத்மா என்று புரிந்து கொள்வதால் தந்தையின் குழந்தை ஆவதால், இதுவே தபஸ்யா ஆகி விடுகிறது. ஆத்மா தந்தையின் குழந்தை ஆனது என்றால் தபஸ்வி ஆனது. அப்படி இராஜ்யமும் இருக்கிறது மேலும் ரிஷியாகவும் இருக்கிறீர்கள். அனைவரும் சுயராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? எந்தவொரு கர்மேந்திரியமும் தன் பக்கம் ஈர்க்கக்கூடாது, எப்பொழுதும் தந்தையின் பக்கம் ஈர்க்க வேண்டும். எந்தவொரு நபர் மற்றும் பொருளின் பக்கம் கவர்ச்சி செல்ல வேண்டாம். அந்த மாதிரியான இராஜ்ய அதிகாரி தபஸ்வி குமாராக இருக்கிறீர்களா? முற்றிலும் வெற்றி அடைபவாக இருக்க வேண்டும். ஏனென்றால், வாயுமண்டலமோ கலியுகம் தான் இல்லையா?

மேலும் உடன் இருப்பவர்களும் அன்னப்பறவை மற்றும் கொக்குகளாக இருக்கிறார்கள். அந்த மாதிரி சூழ்நிலையில் இருந்துகொண்டே சுயராஜ்யம் உடையவராக இருந்தீர்கள் என்றால் தான் பாதுகாப்பாக இருப்பீர்கள், கொஞ்சம் கூட உலகின் வைப்ரேஷனின் ஈர்ப்பு இருக்கலாகாது. எந்த புகாரும் இன்றி எப்பொழுதும் முழுமையானவராக இருக்க வேண்டும். குமாரர்களின் புகார் வருகிறது. ஒருவேளை குமார் வெற்றி அடைபவர் ஆகி விடுகிறார் என்றால், அனைவரையும் விட மகான் ஆகி விடுகிறார் ஏனென்றால் அரசங்கமும் இளைஞர்களை முன்னேற்றுகிறது. அதிலேயும் குமாரர்கள் அதிகமாக இருப்பார்கள். குமார் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடியும். ஏனென்றால் மிகுந்த சக்தி இருக்கிறது ஆனால் சக்தியை வீணாக இழக்கவில்லையே எண்ணம் மற்றும் கனவில் தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்றிருந்தால் தான் நம்பர் ஒன் குமார் என்று கூறுவோம். குமார் தடையற்றவர் ஆகி விடுகிறார் என்றால் அனைவரையும் தடையற்றவராக ஆக்க முடியும். குமாரர்களின் பட்டமே விக்ன விநாஷக். எந்த விதமான விக்னம் அதாவது தடை எண்ணம், சொல், செயல் அப்படி எந்த விதமான விக்னத்தின் வசமானவராக இருக்க வேண்டாம். எனவே தான் குழந்தைகளின் பட்டம் விக்ன விநாஷக். கணேஷ் குழந்தை தான் இல்லையா. அப்படி உங்களுடைய நினைவாக விக்ன விநாஷக் என்ற பெயர் பிரசித்தி ஆகி இருக்கிறது. நடைமுறையில் இருந்திருக்கிறீர்கள் அதனால் தான் நினைவுச் சின்னமும் உருவாகியது. விக்ன விநாஷக் ஆவதினால் இயல்பாகவே மனதின் எண்ணங்கள் மூலமாக சேவை நடந்து கொண்டே இருக்கும். வாயுமண்டலமும் தடையற்றதாக ஆகிக் கொண்டே இருக்கும். எப்படி தத்துவங்கள் காரணமாக பருவமும் மாறுகிறது அதே போல் விக்ன விநாஷக் குழந்தைகள் காரணமாக வாயுமண்டலமும் மாறி விடும். எனவே நாலாபுறங்களிலும் விக்ன விநாஷக்கின் அலை பரவி விட வேண்டும். நான் வெற்றி அடையும் வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும் என்ற இந்த எண்ணத்தையே எப்பொழுதும் வையுங்கள். எப்படி சூரியன் அதுவே சக்திசாலியாக இருக்கிறது என்றால் நாலாபுறங்களிலும் தன்னுடைய சக்தி மூலமாக பிரகாசத்தைப் பரப்புகிறது, அந்த மாதிரியே சக்தி நிறைந்தவராக ஆகுங்கள். குமாரர்களுக்கு அவசியம் ஏதாவது ஒரு வேலை தேவையாக இருக்கிறது. ஒருவேளை குமார் எந்த வேலையுமின்றி இருக்கிறார் என்றால் பிரச்சனை ஏற்பட்டு விடுகிறது. குமார் பிஸியாக இருக்கிறார் என்றால், அது அவருக்கும் நன்மை, உலகிற்கும் நன்மை! எனவே விக்ன விநாஷக் ஆகி, வாயுமண்டலத்தை உருவாக்குவதில் பிஸியாக இருங்கள். தன்னுடைய விசேஷத்தை இந்தக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். ஒவ்வொரு குமாரும் அனேகர்களுக்கு சஞ்சீவினி மூலிகை கொடுக்கக்கூடிய மகாவீர் அதாவது

மூர்ச்சையாகி இருப்பவர்களை மீண்டும் உணர்வில் கொண்டு வருபவர்களாக இருக்க வேண்டும். தன்னுடைய இந்தக் காரியத்தை எப்பொழுதும் நினைவில் வைத்து கொள்ளுங்கள். எப்படி உலகிய வேலை மறப்பதில்லையோ அதே போல் இந்த ஆன்மீக வேலையும் எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். சங்கமயுகத்தில் தந்தை மூலமாக என்னவெல்லாம் பட்டம் கிடைத்திருக்கின்றனவோ அதன் நினைவில் இருங்கள். பட்டம் நினைவில் வருவதினால் இயல்பாகவே ஞானம் மற்றும் ஞானத்தை வழங்குபவர் இருவர்களின் நினைவு வந்து விடும். நல்லது.

**வரதானம்: தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை ஆவாஹனம் செய்வதின் (வரவழைப்பதின்) மூலமாக வருவது போவது என்ற சக்கரத்திலிருந்து விடுபடக்கூடிய அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் ஆகும்!**

இப்பொழுது தன்னுடைய சம்பூர்ண நிலை மற்றும் சம்பூர்ண சொரூபத்தை ஆவாஹனம் செய்யுங்கள், பிறகு அதே சொரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கும். பின்பு சில நேரம் உயர்ந்த நிலை, சில நேரம் தாழ்ந்தை நிலையில் வந்து போவதற்கான சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது. அடிக்கடி நினைவு மற்றும் நினைவிழந்த நிலையின் சுழற்சியில் வருகிறீர்கள், இந்த கழற்சியிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். அவர்கள் பிறப்பு இறப்பின் சக்கரத்திலிருந்து விடுபட விரும்புகிறார்கள், மேலும் நீங்கள் வீணான விஷயங்களிலிருந்து விடுபட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் ஆகி விடுகிறீர்கள்.

**சுலோகன்: ஏதாவது தடையின் வசம் ஆவது என்றால், வைரத்தில் கரை ஏற்படுத்துவது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 01.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவையின் வெற்றிக்கான சாவி!

இன்று பாப்தாதா குழந்தைகளை எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்? இன்று உலக சேவாதாரி தந்தை தன்னுடைய சேவாதாரி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார் அதாவது தன்னுடைய இறை சேலாதாரி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் இறை சேவாதாரியாக இருக்கிறாரோ அவருக்கு எப்பொழுதும் இயல்பாகவே தந்தை மற்றும் சேவை இரண்டும் சேர்ந்தே நினைவில் இருக்கிறது. பொதுவாகவே இன்றைய உலகத்தில் கூட யாராவது ஒருவருடைய காரியத்தை செய்யவில்லை மற்றும் உதவி செய்பவராக ஆகவில்லை என்றால் பகவானின் பெயரால் இந்தக் காரியம் செய்யுங்கள் என்று கூறுவார்கள். ஏனென்றால் பகவானின் பெயரால் உதவி கிடைத்து விடும் மற்றும் வெற்றியும் கிடைத்து விடும் என்று நினைக்கிறார்கள். ஏதாவது சம்பவமற்ற காரியம் மற்றம் நம்பிக்கையிழந்த விஷயம் இருக்கிறது என்றாலும் பகவானின் பெயரை கூறுங்கள் காரியம் நடந்து விடும்' என்று கூறுகிறார்கள். இதன் மூலம் என்ன நிரூபணம் ஆகிறது? சம்பவமற்றது சம்பவமாக அல்லது நம்பிக்கையிழந்த நிலையிலிருந்து நம்பிக்கைக்குரிய காரியத்தை தந்தை வந்து செய்தார். அதனால் தான் இன்று வரையிலும் இந்த பழமொழி நடைமுறையில் இருக்கிறது ஆனால் நீங்கள் அனைவருமோ இறைவனின் சேலாதாரிகள் தான். நீங்கள் டகவானின் பெயரை மட்டும் சொல்பவர்கள் அல்ல ஆனால் பகவானின் துணைவர்களாகி உயர்ந்த காரியம் செய்பவர்கள். அப்படி இறை சேவாதாரி குழந்தைகளின் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி நிச்சயிக்கப்பட்டது. இறை சேவாதாரிகள் செய்யும் காரியத்தில் எந்த அசம்பவ விஷயம் கிடையாது. அனைத்தும் சம்பவம் மற்றும் சுலபமானது. இறை சேவாதாரி குழந்தைகளுக்கு உலக மாற்றத்தின் காரியம் கடினமாக அனுபவம் ஆகிறதா? ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்று அனுபவம் ஆகிறது தான் இல்லையா? எப்பொழுதுமே இதையோ அனேக தடவைகள் செய்திருக்கிறோம் என்ற இந்த அனுபவம் தான் செய்கிறீர்கள். எதுவும் புதிய விஷயமாக அனுபவம் ஆவதில்லை. ஆகுமா, ஆகாதா, எப்படி ஆகும் என்ற இந்த கேள்வியே எழுவதில்லை. ஏனென்றால் தந்தையின் துணைவர்களாக இருக்கிறீர்கள். எப்பொழுது இன்று வரையிலும் பகவானின் பெயரை

எடுப்பதினால் மட்டும் காரியம் நடந்தேறி விடுகிறது என்றால் உடன் காரியம் செய்யும் குழந்தைகளின் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி நிச்சயிக்கட்பட்டது. எனவே பாப்தாதா குழந்தைகளை எப்பொழுதும் வெற்றி அடைபவர்கள் என்று கூறுகிறார். வெற்றி நட்சத்திரங்கள் தன்னுடைய வெற்றி மூலமாக உலகை ஒளிமயமாக ஆக்குபவர்கள். தன்னை எப்பொழுதுமே அந்த மாதிரி வெற்றி அடைபவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை நடைமுறையில் எப்பொழுதாவது வெற்றி கிடைக்காமல் அல்லது கடினம் அனுபலம் ஆகிறது என்றால் அதற்கான காரணம் சேலாதாரியாக மட்டும் ஆகிறீர்கள். இறைவனின் சேவாதாரியாக ஆவதில்லை. இறைவனை சேவையிலிருந்து பிரித்து விடுகிறீர்கள். எனவே தனியாக இருக்கும் காரணத்தினால் சுலபமானது கூட கடினம் ஆகி விடுகிறது மற்றும் வெற்றியின் லட்சியம் மிக தூரமாக தென்படுகிறது ஆனால் பெயரே இறைவனின் சேவாதாரிகள் என்றால் இணைந்திருப்பவரை தனியாக பிரிக்காதீர்கள் ஆனால் தனியாக பிரித்து விடுகிறீர்கள். எப்பொழுதும் இந்த பெயர் நினைவிருக்கிறது என்றால் சேவையில் இயல்பாகவே இறை மந்திரம் நிரம்பியதாக இருக்கும். சேவைக் களத்தில் தனக்காக மற்றும் சேவைக்காக விதவிதமான தடைகள் என்ன வருகின்றனவோ அதற்கான காரணமும் கூட தன்னை சேவாதாரி என்று மட்டும் நினைக்கிறீர்கள் என்பது தான் ஆனால் ஈஸ்வரிய சேவாதாரி, சேவை மட்டும் இல்லை ஆனால் இறைவனின் சேவை என்ற இந்த நினைவு மூலம் நினைவு மற்றும் சேவை இயல்பாகவே இணைந்ததாக ஆகி விடுகிறது. நினைவு மற்றும் சேவை எப்பொழுதும் சமநிலையில் இருக்கிறது. எங்கு சமநிலை இருக்கிறேதா அங்கு சுயம் அவரே எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்த மற்றும் மற்றவர்களுக்காக எப்பொழுதும் பிலஸ்ஸிங்க்ஸ் அதாவது கருணை நிறைந்த பார்வை சுலபமாகவே இருக்கிறது. இவர் மேல் கருணை செய்யுங்கள் என்று யோசிப்பதற்கான அவசியமே இருக்காது. கருணை நிறைந்தவராகத் தான் இருக்கிறார். எப்பொழுதும் செய்யும் வேலையே தான் கிருபை செய்வது. அந்த மாதிரி அனாதி சம்ஸ்காரம் சொரூபமாக ஆகியிருக்கிறதா? எது விசேஷ சம்ஸ்காரமாக இருக்குமோ அது இயல்பாகவே காரியம் செய்து கொண்டே இருக்கும். யோசித்து செய்ய மாட்டார்கள் ஆனால் இயல்பாகவே நடந்து விடும். என்னுடைய சம்ஸ்காரம் அந்த மாதிரியானது எனவே அப்படி நடந்தே விட்டது என்று அடிக்கடி கூறுகிறீர்கள். என்னுடைய நோக்கம் அல்ல. என்னுடைய லட்சியம் அல்ல ஆனால் ஆகி விட்டது. ஏன்? சம்ஸ்காரம். அந்த மாதிரி கூறுகிறீர்கள் தான் இல்லையா. நான் கோபப்படவில்லை ஆனால் நான் பேசும் சம்ஸ்காரமே அந்த மாதிரி என்று அநேகர்கள் கூறுகிறார்கள். இதன் மூலம் என்ன நிரூபணம் ஆகிறது? அற்ப காலத்து சம்ஸ்காரம் கூட இயல்பாகவே பேச்சை மற்றும் காரியத்தை

செய்வித்துக் கொண்டே இருக்கிறது. அப்படியானால் அனாதி ஒரிஜினல் சம்ஸ்காரம் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடையதாக என்ன இருந்தது? எப்பொழுதும் சம்பன்னமான மற்றும் வெற்றி அடைந்தவர். எப்பொழுதும் வரம் அளிப்பவர் மற்றும் பெரும் வள்ளல். அப்படி இந்த சம்ஸ்காரம் நினைவில் இருப்பதினால் இயல்பாகவே அனைவருக்காகவும் கருணை பார்வை இருக்கிறது.

அற்ப காலத்து சம்ஸ்காரங்களை அனாதி சம்ஸ்காரங்களினால் பரிவர்த்தனை செய்யுங்கள். அப்படி வரும் விதவிதமான தடைகள் அனாதி சம்ஸ்காரம் வெளிப்படுவதினால் சுலபமாகவே முடிவடைந்து விடும். பாப்தாதாவிற்கு இதுவரையிலும் கூட சுயமாற்றம் மற்றும் உலகமாற்றத்தின் சேவையில் குழந்தைகள் செய்யும் கடின உழைப்பை பார்த்து சகித்துக் கொள்ள முடிவதில்லை. இறைவனின் சேவாதாரிகளாக இருந்தும் கடின உழைப்பா? எப்படி பெயரைக் கூறியே காரியத்தை செய்விக்கிறார்கள் என்றால் நீங்களோ அதிகாரி ஆவீர்கள். உங்களுக்கு கடின உழைப்பு எப்படி இருக்க முடியும்? பிறகு சின்னஞ்சிறு தவறு செய்கிறீர்கள். என்ன தவறு செய்கிறீர்கள் என்று தெரிந்திருக்கிறீர்களா? நன்றாகவே தெரிந்தும் இருக்கிறீர்கள் பிறகு ஏன் செய்கிறீர்கள்? கட்டாயத்தில் வந்து விடுகிறீர்கள். பிறகு 'என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய சுபாவம்' என்று சிறிய தவறு செய்கிறீர்கள். அனாதி காலத்திற்கு பதிலாக மத்திய காலம் என்று நினைத்து விடுகிறீர்கள். மத்திய காலத்தின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை என்னுடைய சம்ஸ்காரம். என்னுடைய சுபாவம் என்று புரிந்து கொள்ளும் இந்த தவறை செய்கிறீர்கள். இது இராவணனின் சுபாவம். உங்களுடையது அல்ல. மாற்றான் பொருளை தன்னுடையதாக்கும் தவறை செய்கிறீர்கள். என்னுடையது என்று கூறுவதினால் மற்றும் புரிந்து கொள்வதினால் என்னுடையது என்பதில் வளைந்து கொடுப்பது இயல்பாகவே வந்து விடுகிறது. எனவே விட விரும்பினாலும் விட முடி வதில்லை. தவறு என்ன என்று புரிந்ததா!

நான் இறைவனின் சேவாதாரி என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நான் செய்தேன் என்றல்லாமல் இறைவன் என் மூலமாக செய்வித்தார். இந்த ஒரு நினைவு மூலம் சுலபமாகவே அனைத்து தடைகளின் விதையை நிரந்தரமாக அழித்து விடுங்கள். அனைத்து விதமான தடைகளின் விதை இரண்டு வார்த்தைகளில் இருக்கிறது. அது என்ன இரண்டு வார்த்தைகள், அந்த வார்த்தைகளிலேயே தடை ரூபம் வருகிறது. தடை வருவதற்கான வாசலை தெரிந்திருக்கிறீர்களா? அப்படி எல்லோருக்கும் தெரிந்த அந்த இரண்டு வார்த்தைகள் எவை? விஸ்தாரமோ அதிகமாக இருக்கிறது ஆனால் இரண்டு

வார்த்தைகளில் சாரம் வந்து விடுகிறது. 1) அபிமானம் மற்றும் 2) அவமானம். சேவையின் சேத்திரத்தில் விசேஷமாக தடை இந்த இரண்டு பாதைகளிலிருந்து வருகிறது. ஒன்றோ 'நான் செய்தேன்', இதில் அபிமானம் மற்றும் என்னையோ ஏன் முன்னுக்கு வைக்கவில்லை, எனக்கு ஏன் இது கூறப்பட்டது, இது எனக்கு அவமானம் கொடுக்கப்பட்டது இதே அபிமானம் மற்றும் அவமானத்தின் பாவனை விதவிதமான தடைகளின் ரூபத்தில் வந்து விடுகிறது. எப்பொழுது நீங்கள் இருப்பதே இறைவனின் சேவாதாரிகள் என்றால், செய்பவர், செய்விப்பவர் தந்தை என்றிருக்கும் போது அபிமானம் எங்கிருந்து வந்தது? மேலும் அவமானம் எங்கிருந்து ஏற்பட்டது. அப்படி மிகச் சிறிய தவறு தான் இல்லையா. எனவே இறைவனை விட்டு பிரியாதீர்கள் என்று கூறப்படுகிறது. சேவையிலும் இணைந்த ரூபத்தை நினைவில் வையுங்கள். இறைவன் மற்றும் இறை சேவை இதைச் செய்ய தெரியாதா? மிகவும் சுலபம். கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அனாதி சம்ஸ்காரத்தின் நினைவு சொரூபமாக இருக்கும். எப்பொழுதும் தன்னை ஒரு கருவி என்று மட்டும் உணர்ந்து மேலும் தந்தையை செய்பவர், செய்விப்பவர் என்று அனுபவம் செய்யும், எப்பொழுதும் சுயம் அனாதி சொரூபத்தில் அதாவது ஆளந்தம் நிறைந்திருக்கும், எந்தவிதமான தடைகளின் விதையை அழிக்கக்கூடிய சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் துணைவனாக இருக்கும் ஈஸ்வரிய சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அதர் குமாரர்களுடன் (இல்லறத்தில் இருக்கும் சகோதரர்களுடன்) சந்திப்பு:**
அனைவரும் தன்னை தந்தை மேல் அன்பு வைத்திருக்கும் மற்றும் சகயோகி உயர்ந்த ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? நான் உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மா ஏனென்றால் தந்தையுடன் என் வாழ்க்கை பங்கை செய்பவன் என்ற இந்த போதை எப்பொழுதும் இருக்கிறதா? முழுச் சக்கரத்திற்குள் இந்த நேரம் தந்தையுடன் சேர்ந்து தன்னுடைய வாழ்க்கை பங்கை செய்வதற்கான பொறுப்டாளர் ஆகியிருக்கிறீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த பங்கை செய்வதற்கு பொறுட்டாளர் ஆகியிருக்கிறீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானுடன் தன் பங்கை செய்யக்கூடியவர்கள் எவ்வளவு உயர்ந்த ஆத்மாக்களாக ஆகி விட்டார்கள். உலகத்திலும் யாராவது 05யர்ந்த பதவியில் இருப்பவருடன் சேர்ந்து வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் எவ்வளவு போதை இருக்கிறது? பிரதம மந்திரியின் தனிச்செயலாளருக்கும் எவ்வளவு போதை இருக்கிறது ஆனால்

# 1981 அவ்யக்த முரளி

நீங்கள் யாருடன் இருக்கிறீர்கள்? உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன் இருக்கிறீர்கள். மேலும் பிறகு அதிலேயும் கூட ஒரு கல்பத்திற்காக இன்றி, அனேக கல்பங்கள் இந்த பங்கை செய்திருக்கிறீர்கள் மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள் என்ற விசேஷமும் இருக்கிறது. இது மாற முடியாது. அந்த மாதிரி போதையில் இருந்தீர்கள் என்றால் தடையற்றவராக இருப்பீர்கள். ஏதாவது தடையோ வருவதில்லை தான் இல்லையா? சூழ்நிலையின், எண்ண அதிர்வலைகளின், தொடர்பில் இருப்பவர்களிடமிருந்து ஏதாவது தடையோ இல்லையே? தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறீர்களா? தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர். தந்தையின் அன்பிற்குரியவனாக எவ்வளவு ஆகியிருக்கிறேன் என்ற கணக்கை விலகியிருக்கும் நிலை மூலம் போட முடியும். ஒருவேளை கொஞ்சம் விலகியிருக்கிறீர்கள், மீதி மாட்டிக்கொள்கிறீர்கள் என்றால் அன்பிற்குரிய வராகவும் அந்த அளவே ஆகிறீர்கள். யார் எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவராக இருக்கிறாரோ அதனுடைய அடையாளம் இயல்பாகவே நினைவில் இருப்பது. மிகப் பிரியமான பொருள் இயல்பாகவே எப்பொழுதும் நினைவு வரும் இல்லையா. இவரோ ஒவ்வொரு கல்பமும் மிகப் பிரியமானவர். தந்தையின் குழந்தையாக ஒரு தடவை ஆகவில்லை, ஒவ்வொரு கல்பத்திலும் ஆகியிருக்கிறீர்கள். எனவே அந்த மாதிரி பிரியமான ஒருவரை எப்படி மறக்க முடியும். எப்பொழுது மறக்கிறீர்கள் என்றால் எப்பொழுது தந்தையையும் விட அதிகமாக யாராவது ஒரு நபரை அல்லது பொருளை பிரியமானது என்று நினைக்கிறீர்களோ அப்பொழுது தான். ஒருவேளை தந்தையை எப்பொழுதும் பிரியமானவர் என்று நினைத்தீர்கள் என்றால் மறக்க முடியாது. நினைவு எப்படி செய்வது என்பதை யோசிக்க வேண்டியதாக இருக்காது ஆனால் மறப்பது எப்படி என்று ஆச்சரியமாக இருக்கும். அப்படி உங்களுடைய பெயர் அதர் குமார் ஆனால் பிரம்மா குமார் ஆகத்தான் இருக்கிறீர்கள். பிரம்மா குமார் வெற்றி அடைபவர்கள் தான் இல்லையா? அதர் குமார் என்றால் அனுபவம் நிறைந்த குமார். அனைத்தையும் அனுபவம் செய்து விட்டீர்கள். அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டார். கடந்த காலத்தின் அனுபவியாகவும் இருக்கிறீர்கள். மேலும் நிகழ் காலத்து அனுபவியாகவும் இருக்கிறீர்கள். ஒவ்வொரு அதர்குமாரும் தன்னுடைய அனுபவங்கள் மூலமாக அனேகர்களுக்கு நன்மை செய்ய முடியும். இது உலகிற்கே நன்மை செய்யும் குரூப் ஆகும். நல்லது.

**மாதர்களுடன் சந்திப்பு:** இல்லறத்தில் இருந்து கொண்டே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற நினைவிலேயே இருக்கிறீர்கள் தான் இல்லையா. இந்த சோதனை செய்கிறீர்களா? ஏனென்றால் இல்லறத்தின்

சூழ்நிலையில் இருந்து கொண்டே அதனுடைய பாதிப்பு ஏற்படக்கூடாது, எப்பொழுதும் தந்தையின் பிரியமானவராக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த விஷயத்தின் சோதனை வேண்டும். ஒரு காரணத்திற்காக மட்டும் இல்லறத்தில் இருக்கிறீர்கள் இருந்தும் தந்தையின் நினைவில் இருக்க வேண்டும். பரிவாரத்தின் சேவையில் எத்தனை விதமான சேவை செய்ய வேண்டியதிருந்தாலும் ஆனால் டிரஸ்டி ஆகி செய்ய வேண்டும். டிரஸ்டியாக இருந்தீர்கள் என்றால் பற்றுதலை வென்றவராக ஆகி விடுவீர்கள். குடும்பஸ்தன் என்ற நிலை இருக்கிறது என்றால் மோகம் வந்து விடும். தந்தையின் நினைவு வரவில்லை என்றால் மோகம் இருக்கிறது. தந்தையின் நினைவு மூலம் குடும்பத்தின் ஒவ்வொரு காரியமும் சகஜம் ஆகி விடும். ஏனென்றால் நினைவின் மூலம் சக்தி கிடைக்கிறது. அப்படி தந்தையின் நினைவின் குடைநிழலின் கீழே இருக்கிறீர்கள் தான் இல்லையா? குடை நிழலின் கீழே இருப்பவர் ஒவ்வொரு தடையிலிருந்தும் விடுபட்டு இருப்பார், மாதர்களோ பாப்தாதாவின் மிகப் பிரியமானவர்கள் ஏனென்றால் மாதர்கள் மிக அதிகமாக சகித்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தை அந்த மாதிரி குழந்தைகளுக்கு சகித்துக் கொண்டதின் பலனாக சகயோகம் மற்றும் அன்பு கொடுக்கிறார். எப்பொழுதும் சுமங்கலியாக இருக்க வேண்டும் இந்த வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த மாங்கல்யம் கிடைத்திருக்கிறது. எங்கு மாங்கல்யம் இருக்கிறதோ அங்கு பாக்கியமோ இருக்கவே இருக்கிறது. எனவே எப்பொழுதும் சுமங்கலியாக ஆகுக.

**உத்திரபிரதேசம் மற்றும் குஜராத் மண்டலங்களை சேர்ந்தவர்கள் பாப்தாதாவின் எதிரில் அமர்ந்திருக்கிறார்கள், அவர்களுடைய விசேஷத்தை பாப்தாதா கூறுகிறார்:** அனைத்து ஸ்தானங்களுக்கும் அதனதன் விசேஷம் இருக்கிறது. உத்திரபிரதேசமும் குறைந்தது அல்ல என்றால் குஜராத்தும் குறைந்தது அல்ல. யார் தொடக்கத்தில் ஸ்தாபனை காரியத்தில் பொறுப்பாளராக ஆனார்களோ அவர்களுக்கும் நாடகத்தில் விசேஷ பங்கு இருக்கிறது. இருந்தாலும் தொடக்கத்தில் வந்தவர்களோ இரட்டை லாட்டரியை பெற்றார்கள் தான் இல்லையா. சாகார பாபா மற்றும் நிராகார பாபா -இரண்டு லாட்டரி கிடைத்தது இதுவும் குறைந்த பங்கா என்ன? ஒவ்வொரு கல்பத்தின் சரித்திரத்தின் எப்பொழுதும் உடன் இருப்பதின் நினைவுச்சின்னம் இதுவும் விசேஷ பாக்கியம். இப்பொழுது கூட பாப்தாதா அவ்யக்த ரூபத்தில் அனைத்து பங்கையும் செய்கிறார் ஆனால் சாகாரத்தில் இருந்தவரோ சாகாரம் தான். சாகார பாபா காலத்தில் வந்தவர்களுக்கு அவர்களுடைய விசேஷம் இருக்கிறது. இவர்களுக்கு அவர்களுடைய விசேஷம். இவர்கள் அவ்யக்த பாப்தாதாவிடமிருந்து சாகார பாபாவின் அன்பை இழுப்பவர்கள். அனேகர்கள் அந்த மாதிரியும் இருக்கிறார்கள் யார் சாகார

பாபாவுடன் இருந்தவர்களையும் விட அதிகமாக இப்பொழுது அனுபவம் செய்கிறார்கள். அப்படி அனைவரும் ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்கு இருக்கிறார். நல்லது.

இன்று உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சேவைக்கான வாய்ப்பு நதிகளின் கரைகளில் உ.பி. அதிகமாக இருக்கிறது. யமுனை நதிக்கரையில் ராஜ்ய தலைநகரத்தையும் மற்றும் நடனத்தையும் காண்பிக்கிறார்கள் ஆனால் உ.பி -யின் பதீத பாவனி மிகவும் பிரபலமானது, அதாவது உ.பி.யின் சேவை ஸ்தானத்தை காண்பித்திருக்கிறார்கள். எனவே அந்த மாதிரி யாராவது உ.பி-யிலிருந்து அவசியம் உருவாவார்கள் அவர்கள் அனேகர்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆவார்கள். அந்த மாதிரி யாராவது தயார் ஆகி விடுவார்கள். எப்படி அமெரிக்கா விலிருந்து ஒருவர் மூலமாக அனேகர்களின் சேவை நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி உபி.யிலிருந்தும் யாராவது ஒருவர் உருவாகி விடுவார் அந்த ஒருவர் மூலம் அனேகர்களின் சேவை நடந்து விடும். செய்தியோ பரவும் தான் எப்பொழுது வெளிநாடிலிருந்து செய்தி வருமோ அப்பொழுது அனைவரும் விழித்து விடுவார்கள். இப்பொழுது மிகப் பெரிய வி.ஐ.பி யாரும் உருவாகவில்லை. இன்று வரையிலும் யாரெல்லாம் வி.ஐ.பி உருவாகியிருக்கிறார்களோ அவர்களையும் விட அதிகம் பெயர் பெற்றவர்கள் என்று அந்த வெளிநாட்டினரைத் தான் கூறுவோம் இல்லையா. அவர் நடைமுறையில் அனேகர்களுக்கு செய்தியை கொண்டு சேர்ப்பதில் காரணமானவர் ஆகிக் கொண்டிருக்கிறார். பாரதமும் முன்னுக்கு செல்ல முடியும், ஆனால் இப்பொழுதைக்கான விஷயம். இறுதியில் வெற்றி முழக்கமோ பாரதத்திலே தான் ஏற்படும் இல்லையா. வெளிநாட்டிலிருந்தும் வெற்றியின் முரசு அடித்து அடித்து பாரகத்தில் வந்து சேருவார்கள் இல்லையா. அவர்களுடைய வாயிலிருந்தும் நம்முடைய பாரதம் என்பது தான் வெளியாகும். பாரதத்தில் தந்தை வந்திருக்கிறார் என்று தான் கூறுவார் களேயன்றி ஐ.நா-வில் தந்தை வந்திருக்கிறார் என்று கூற மாட்டார்கள். பந்தயத்தில் இந்த நேரம் வெளிநாடு முன்னுக்கு சென்று கொண்டிருக்கிறது இப்பொழுதைக்கான விஷயம் இது, நாளை இன்னொருவரும் மாற முடியும். ஒருவர் இன்னொருவரைப் பார்த்து இன்னும் முன்னேறிச் செல்வார்கள். இப்பொழுது உ.பி-பிலிருந்து வி.ஐ.பி யாரையாவது கொண்டு வாருங்கள். பதீத பாவனி யாரையாவது பாவனமாக்கி சூ மந்திரம் போடுங்கள்.

குஜராத் வளர்ச்சி அடைந்ததில் நம்பர் ஒன் ஆகி விட்டது. வி.ஐ.பி-க்களும் மேடையில் வந்து விடுவார்கள். எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்யும் மாதிரி

வி.ஐ.பி இருக்க வேண்டும். குஜராத்தைச் சேர்ந்தவருக்கு குஜராத்தில் செய்தீர்கள், அவரோ சிறிய மைக் ஆகி விட்டார். நாலாபுறங்களிலும் செய்தீர்கள் என்றால் தான் அவரை பெரிய மைக் என்று கூறுவோம். நல்லது.

**வரதானம்: தன்னுடைய சஞ்சலமான உள் உணர்வை பரிவர்த்தனை செய்து சதோபிரதான வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கு பொறுப்பான சிரேஷ்ட ஆத்மா ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தங்களுடைய சஞ்சலமான உள்உணர்வுகளை பரிவர்த்தனை செய்து விடுகிறார்களோ அவர்கள் தான் சதோபிரதான வாயுமண்டலத்தை உருவாக்க முடியும். ஏனென்றால் உள்உணர்வு மூலம் வாயுமண்டலம் உருவாகிறது. எப்பொழுது உள்உணர்வில் இவ்வளவு பெரிய காரியத்தின் நினைவு இருப்பதில்லையோ அப்பொழுது உள்உணர்வும் சஞ்சலமாகிறது. ஒருவேளை ஏதாவது மிக சஞ்சலமான குழந்தை மிகவும் பிஸியாக இருந்த போதும் தன்னுடைய சஞ்சலத்தன்மையை விடவில்லை என்றால் அவரை கட்டி வைப்பார்கள். அதே போலவே ஒருவேளை ஞானம் யோகத்தில் பிஸியாக இருந்த போதிலும் உள்உணர்வு சஞ்சலமாக இருக்கிறது என்றால் ஒரு தந்தையுடன் அனைத்து உறவுகளின் பந்தனத்தில் உள்உணர்வை கட்டி விட்டீர்கள் என்றால் சஞ்சலத்தன்மை சுலபமாக முடிவடைந்து விடும்.

**சுலோகன் : அலட்சியத் தன்மையின் உணர்வை முடிப்பதற்கான வழி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யுத்தம் செய்பவராக இன்றி இதயசிம்மாசனதாரி ஆகுங்கள்!

இன்று தூரதேசத்தில் இருக்கும் பரதேசி (இன்னொரு தேசத்தைச் சேர்ந்த) கந்தை தன்னுடைய குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தைகளுக்கும் சுயதேசத்தின் நினைவு ஊட்டுவதற்காக மற்றும் சக்திசாலியாகி உடன் அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறார். சுயதேசம் நினைவில் வந்து விட்டதில்லையா? இது மாற்றான் தேசம் மற்றும் மாற்றானின் இராஜ்யம். இதில் அனைத்தும் பழையது தான் தென்படுகிறது. நபர்களைப் பாருங்கள் மற்றும் பொருட்களைப் பாருங்கள் அனைத்தும் என்னவாக தென்படுகின்றன? அனைத்தும் இத்துப்போய்விட்டன. நாலாபுறங்களிலும் இருள் சூழ்ந்திருக்கிறது. அந்த மாதிரி தேசத்தில் நீங்கள் அனைவரும் பந்தனத்தில் கட்டப்பட்ட, பந்தனம் நிறைந்த ஆத்மாக்களாக ஆகி விட்டீர்கள், அந்த நேரம் தந்தை வந்து சுயரூபம் மற்றும் சுயதேசத்தின் நினைவூட்டி, பந்தனத்திலிருந்து விடுபட்டவராக ஆக்கி சுபதேசத்திற்கு அழைத்துச் செல்கிறார். கூடவே சுயராஜ்யத்தின் அதிகாரியாக ஆக்குகிறார். அப்படி அனைத்து குழந்தைகளும் தன்னுடைய சுயதேசத்திற்குச் செல்வதற்கு தயாராக இருக்கிறீர்களா? அல்லது எப்படி நீங்கள் ஒரு நாடகத்தை காண்பிக்கிறீர்கள் சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்று விரும்பிய போதிலும் வெகு சிலர் தான் தயார் ஆகிறார்கள். அந்த மாதிரியே பல விஷயங்களை உருவாக்கி 'போகலாம் - போகலாம்' என்று கூறுபவர்களே இல்லையே? கணக்கு வழக்கை முடித்து விட்டீர்களா அல்லது இப்பொழுது இன்னும் கொஞ்சம் மிச்சம் இருக்கிறதா? தன்னுடைய கணக்கு வழக்கை முடித்ததின் நிறைவு விழாவை கொண்டாடி விட்டீர்களா அல்லது இது வரையிலும் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டே இருக்கிறீர்களா? இறுதியில் இந்த நிறைவு விழாவை கொண்டாடுவேம் என்று அப்படி நினைக்கவில்லையே? நிறைவு விழாவை இப்பொழுதிலிருந்தே கொண்டாடினீர்கள் என்றால் தான் இறுதியில் சம்பூர்ண நிலையின் விழாவைக் கொண்டாடுவீர்கள். இந்த பழைய கணக்கு வழக்கை முடிக்க வேண்டும். அதை இப்பொழுது செய்வதினால் வெகுகாலத்திற்கு பந்தனம் அற்றவராக, வெகுகாலத்தின் ஜீவன்முக்தியின் பதவியை அடைபவராக ஆக முடியும். இல்லை

என்றால் இறுதி வரையிலும் யுத்தம் செய்யக்கூடிய யுத்த வீரனாகவே இருந்து விடுவீர்கள். யார் இறுதி வரை யுத்த வீரனின் வாழ்க்கையில் இருக்கிறார்களோ அவருடைய பிராப்தி என்னவாக இருக்கும்? யுத்த வாழ்க்கையோ குழந்தைப் பருவத்தின் வாழ்க்கை. இப்பொழுதோ சுயராஜ்ய அதிகாரி ஆகி விட்டீர்கள். நினைவின் திலகமிட்டு தந்தையின் இதயசிம்மாசனதாரி ஆகி விட்டீர்கள். இதயசிம்மாசனத்தில் இருப்பவர் யுத்தம் செய்பவராக இருப்பாரா என்ன? யுத்தத்தின் பலனாக சிம்மாசனம் மற்றும் கிரீடம் கிடைத்து விட்டது. இந்த தற்சமயத்து பலன் மற்றும் பிரத்யக்ஷ பலன் இன்னும் பிராப்தி ஆகவில்லையா? சங்கமயுகத்தின் பலனை அடைந்து விட்டீர்களா அல்லது இனி தான் அடைய வேண்டுமா? என்ன பாடல் பாடுகிறீர்கள்? என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்றா அல்லது அடைய வேண்டும் என்றா பாடுகிறீர்கள். எப்பொழுது நிகழ் காலத்துடன் எதிர்காலத்தின் சம்மந்தம் இருக்கிறது என்றால், எதிர்கால பலன் 2500-வருடங்களென்ன, தற்சமயத்து பிராப்தி இறுதி நேரத்தின் 5,6-மாதங்கள் இருக்குமா அல்லது 5-நாட்கள் இருக்குமா அல்லது 5 மணி நேரம் இருக்குமா அல்லது சங்கமயுகத்தின் நீண்ட காலம் இருக்குமா? ஒருவேளை சங்கமயுகத்தின் பிராப்தி நீண்ட காலம் இருக்கவில்லை என்றால், எதிர்காலத்தின் பிராப்தி நீண்ட காலம் எப்படி இருக்கும். அங்கே உள்ள 2500-வருடங்கள் இங்கே உள்ள 25-வருடங்களிலும் இருக்காது. நேரடியாக தந்தையின் குழந்தையாகி சதா காலத்திற்கு ஆஸ்தி அடையவில்லை என்றால் என்ன தான் அடைந்திருக்கிறீர்கள்? அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி அவருடைய குழந்தையாகி கஜானாக்களினால் நிரம்பியவர் ஆகவில்லை என்றால் எஜமானனின் குழந்தையாகி என்ன செய்தீர்கள்?

'வெற்றி எனது பிறப்புரிமை ஆகும்' என்று கூறிக் கொண்டே எப்பொழுதும் வெற்றியை அனுபவம் செய்யவில்லை என்றால் பிறப்புரிமை உடையவராகி செய்தீர்கள்? பாக்கியத்தை உருவாக்கும் இரண்டு தந்தைகளின் குழந்தையாகி இருந்தும் நிரந்தரமாக பல கோடி மடங்கு பாக்கியசாலி ஆகவில்லை என்றால், இரண்டு தந்தைகளின் குழந்தைகளாகி என்ன செய்தீர்கள்? உயர்ந்த கர்மங்களின் மற்றும் உயர்ந்த சரித்திரத்தை உருவாக்குவதற்காக சகஜ விதியை வரமளிப்பவராகி தந்தை கொடுத்திருக்கிறார் இருந்தும் சித்தி (வெற்றி) சொரூபம் ஆகவில்லை என்றால் என்ன செய்தீர்கள்?

யுத்தம் செய்வது, கடினமாக உழைப்பது, மெது மெதுவாக நிதானமாக செல்வது -இது தான் விருப்பமா என்ன? யுத்த மைதானம் பிடித்திருக்கிறதா என்ன? இதய

சிம்மாசனம் பிடித்திருக்கவில்லையா என்ன? ஒருவேளை சிம்மாசனம் தான் விருப்பம் என்றால் சிம்மாசனதாரியிடம் மாயா வர முடியாது. சிம்மாசனத்திலிருந்து இறங்கி யுத்த மைதானத்தில் சென்று விடுகிறீர்கள். அப்பொழுது தான் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. எப்படி அனேக குழந்தைகள் இப்படியும் இருக்கிறார்கள், அவர்களால்) சண்டை சச்சரவு செய்யாமல் இருக்கவே முடியாது. மேலும் யாரும் கிடைக்கவில்லை என்றால் கூட தன்னோடே ஏதாவது சச்சரவு செய்து கொண்டே இருப்பார். யுத்தம் செய்யும் சம்ஸ்காரம் இராஜ சிம்மாசனத்திலிருந்து விடுவித்து யுத்த மைதானத்திலிருந்து அழைத்துச் செல்கிறது. இப்பொழுது யுத்தம் செய்யும் சம்ஸ்காரத்தை முழுமையாக அழித்து விடுங்கள். இராஜ்யம் செய்யும் சம்ஸ்காரத்தைக் கடைபிடியுங்கள், பிராப்தியின் பலனை அனுபவிட்பவராக ஆகுங்கள். அப்பொழுது தான் எதிர்காலத்தில் வெகு காலத்திற்கான பிராப்தியின் பலனை அனுபவிப்பவராகவும் ஆவீர்கள், இறுதி வரையிலும் யுத்தம் செய்யும் வாழ்க்கையே இருக்கிறது என்றால் என்னவாக ஆவீர்கள்? சந்திர வம்சியாக ஆக வேண்டியது இருக்கும்.

சூரிய வம்சியின் அடையாளம் - எப்பொழுதும் குஷியோடு நடனமாடிக் கொண்டிருப்பவர். எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஊஞ்சலாடுபவர். சந்திர வம்சத்து இராமரை ஒருபொழுதும் ஊஞ்சலில் வைத்து ஆட்ட மாட்டார்கள். நடனமாடியதாக காண்பிக்கவில்லை. யுத்தம் செய்வதின் வில் அம்பைத் தான் காண்பித்திருக்கிறார்கள். பிற்காலத்து இராஜ்ய பாக்கியம் கிடைக்கும். பாதி நேரத்து இராஜ்யம் வெகு காலமாகவே ஆனது இல்லை இல்லையா? எனவே எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். அனைவருடன் சம்ஸ்காரத்தை இணைக்கும் நடனத்தை ஆடிக் கொண்டே இருங்கள், குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். இதைத் தான் சங்கமயுகத்தின் பிராப்தியின் பலன் சொரூபம். முயற்சி செய்பவர் என்ற இந்த வார்த்தையும் எதுவரை இருக்கும்?

இந்த நேரம் முயற்சி செய்பவர் அடுத்த நேரம் பிராப்தியின் பலன் பெறுபவர். சங்கமயுக்ததின் முயற்சி செய்பவர், சத்யுகத்தின் பிராப்தியின் பலனை அனுபவிப்பவர் என்றல்ல. சங்கமயுகத்தின் பிராப்தியின் பலனை அனுபவிப்பவர் ஆக வேண்டும். இந்த நேரம் விதையை விதையுங்கள். அடுத்த நேரம் பழத்தை அருந்துங்கள், எப்பொழுது அறிவியலைச் சேர்ந்தவர்களும் ஒவ்வொரு காரியத்தின் பிராப்தியின் (பலன்) வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அமைதியின் சக்தி உள்ளவர்கள் தன்னுடைய

வேகத்தை அவர்களையும் விட அதிகமாக தீவிர படுத்துவார்கள் தான் இல்லையா? அல்லது ஒரு ஜென்மத்தில் செய்ய வேண்டும் மற்றும் அடுத்த ஜென்மத்தில் அடைய வேண்டும் என்று அப்படியா? அவர்கள் ஒலியின் வேகத்தை விட அதி வேகமாசு செல்ல விரும்புகிறார்கள். ஒவ்வொரு காரியத்தையும் ஒரு விநாடியின் வேகத்தை விட அதிகப்படுத்த விரும்புகிறார்கள். இந்த அளவு முழு உலகத்தின் விநாஷத்தை அவ்வளவு குறைந்த நேரத்தில் செய்வதற்காகத் தயாராகி விட்டீர்களா? அப்படி ஸ்தாபனையின் காரியத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் ஒரு நொடியில் செய்ய வேண்டும். ஒரு நொடியில் அடைய வேண்டும், என்று அந்த மாதிரி அதிவேகத்தின் அனுபவியாக இருக்க மாட்டீர்களா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என்று புரிந்ததா? பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துங்கள். பிரத்யக்ஷ பலன் என்ற பழம் பிடிக்கவில்லையா? கடினமாக உழைக்கக்கூடிய பழம் பீடித்திருக்கிறதா? கடின உழைப்பின் காய்ந்த பழத்தை அருந்தி அந்த மாதிரி பலஹீனமானவர் ஆகி விட்டீர்கள். கண்ணில்லாத புத்தியில்லாத, சிரேஷ்ட காரியம் செய்யாதவராக ஆகி விட்டீர்கள். இப்பொழுதோ புதிய பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துங்கள். கடின உழைப்பை பாபா மீதான அன்பாக மாற்றி விடுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் இராஜ வம்சத்தின் சம்ஸ்காரம் உள்ளவர்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரி அதாவது குழந்தையாக இருப்பவரிலிருந்து எஜமானன், எப்பொழுதும் சங்கமயுகத்தின் பிராப்தியின் பலனை அனுபவிக்கும் சம்ஸ்காரம் உள்ளவர்களுக்கு, பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துபவர் களுக்கு, அந்த மாதிரி எப்பொழுதும் பிராப்தி சொரூபமான, எப்பொழுதும் அனைத்து பந்தனத்திலிருந்தும் விடுபட்ட, சங்கமயுகத்து ஜீவன்முக்த், அந்த மாதிரி ஆசனம், கிரீடம் அணிந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: 1) எப்பொழுதும் ஆன்மீக போதையில் நிலைத்திருக்கிறீர்களா?** ஆன்மீக போதை என்றால் ஆத்ம அபிமானி ஆவது எப்பொழுதும் காரியங்கள் செய்து கொண்டே ஆத்மாவைப் பார்ப்பது, உணர்வது, இது தான் ஆன்மீக போதை ஆன்மீக போதையில் எப்பொழுதும் அனைத்து பிராப்தியின் அனுபவம் சுலபமாகவே இருக்கும். எப்படி ஸ்தூல போதை உள்ளவர்களும் தன்னை பிராப்தி நிறைந்தவர் என்று நினைக்கிறார்கள், அதே போன்று இந்த ஆன்மீக போதையில் இருப்பவர் அனைத்து பிராப்திகளின் சொரூபம் ஆகி விடுகிறார். இந்த போதையில் இருப்பதினால் அனைத்து விதமான

துக்கங்களும் விலகி விடுகின்றன. துக்கம் மற்றும் அமைதியின்மைக்கு விடை கொடுக்கப்பட்டுவிடுகிறது. எப்பொழுது சதா காலத்திற்காக சுகமளிக்கும் வள்ளலின், சாந்தி அளிக்கும் வள்ளலின் குழந்தைகள் ஆகி விட்டீர்கள் என்றால் துக்கங்களும், அசாந்திக்கு விடை கொடுத்து விட்டீர்கள் தான் இல்லையா, அசாந்தியின் பெயர், அடையாளமே இல்லை. அமைதிக் கடலின் குழந்தைகள் அமைதியற்றவராக எப்படி ஆக முடியும். ஆன்மீக போதை என்றால் துக்கம் மற்றும் அமைதியின்மை முடிவடைந்தது. அதற்கான விடை கொடுக்கும் விழாவைக் கொண்டாடி விட்டீர்களா? ஏனென்றால், தூய்மையின்மை மூலம் துக்கம் மற்றும் அமைதியின்மை உருவாகிறது. எங்கு தூய்மையின்மை இல்லையோ அங்கு துக்கம் அமைதியின்மை எங்கிருந்து வந்தது. பதீத பாவனன் தந்தையின் குழந்தைகள் மாஸ்டர் பதீத பாவனன் ஆகி விட்டீர்கள். யார் மற்றவர்களை தூய்மையில்லாதவர்களில் இருந்து தூய்மையாக ஆக்குபவராக இருப்பாரோ அவரே தூய்மையானவராகத் தான் இருப்பார் இல்லையா? யார் தூய்மையான பவித்ர ஆத்மாக்களாக இருப்பாரோ அவர்களிடம் அமைதி மற்றும் சுகம் இயல்பாகவே இருக்கும். அப்படி நீங்கள் தூய்மையான ஆத்மாக்கள், சிரேஷ்ட ஆத்மாக்கள், விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். உலகத்தில் நீங்கள் மகான் ஆத்மாக்கள், ஏனென்றால் தந்தையின் குழந்தையாக ஆகி விட்டீர்கள். அனைத்தையும் விட மிகப் பெரிய மகான் தன்மை தூய்மை ஆவது! எனவே இந்த மகான் நிலையின் எதிரில் அனைவரும் தலைவணங்குவார்கள். அந்த ஜட விக்கிரகங்கள் யாருடையவை? இப்பொழுது கோயிலுக்குச் சென்றீர்கள் என்றால், என்ன நினைப்பீர்கள்? யாருக்கு பூஜை நடந்து கொண்டிருக்கிறது. இது என்னுடைய ஜட விக்கிரகம் என்று நினைவில் வருகிறது. அப்படி தன்னை மகான் ஆத்மா, என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அந்த மாதிரி தெய்வீகக் கண்ணாடி ஆகுங்கள். அதில் அனேக ஆத்மாக்களுக்கு அவர்களுடைய உண்மையான முகம் தென்படட்டும்.

**2) எப்பொழுதும் ஏறும் கலையில் சென்று கொண்டிருக்கிறீர்களா?** நீங்கள் ஒவ்வொரு அடியிலும் முன்னேறும் கலையின் அனுபவிகள். எண்ணம், சொல், செயல், உறவு மற்றும் தொடர்பு அனைத்திலும் எப்பொழுதும் ஏறும் கலை! ஏனென்றால், இப்பொழுது நடக்கும் நேரமே ஏறும் கலைக்கானது, வேறு எந்த யுகமும் முன்னேறும் கலைக்கானது அல்ல. சங்கம யுகம் முன்னேறும் கலைக்கான யுகம். எனவே எப்படி நேரமோ அப்படியே அனுபவம் இருக்க வேண்டும். ஒரு விநாடி கடந்து சென்றது. அதற்குப் பிறகு ஒரு விநாடி வந்தது என்றால் ஏறும் கலை. அந்த மாதிரி இல்லை என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பு எப்படி இருந்தீர்களோ

அப்படியே இப்பொழுதும் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நேரமும் பரிவர்த்தனை, ஆனால் பரிவர்த்தனை (மாற்றம்) கூட முன்னேறும் கலைக்கானது. எந்த ஒரு விஷயத்திலும் நிற்பவர் அல்ல. ஏறும் கலையில் செல்பவர்கள் நிற்பதில்லை, அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களையும் ஏறும் கலையில் அழைத்துச் செல்வார்கள்.

**கேள்வி: யார் எப்பொழுதும் பறக்கும் பறவையாக இருப்பாரோ அவருடைய அடையாளமாக என்ன இருக்கும்?**

பதில்: அவர் சக்கரவர்த்தியாக இருப்பார். ஆல்ரவுண்ட் (அனைத்து வித சேவையிலும் பங்கை செய்பவர்கள். ஏறும் கலை உள்ளவர்கள் அந்த மாதிரி பந்தனமற்றவர்களாக இருப்பார்கள். எங்கே சேவை நடந்தாலும் அங்கே வந்து சேர்ந்து விடுவார்கள். மேலும் அனைத்து விதமான சேவையில் வெற்றி அடைபவர்களாக ஆகி விடுவார்கள். எப்படி தந்தை ஆல்ரவுண்ட் பங்கை செய்வபராக இருக்கிறார், தோழனாகவும் ஆக முடியம் என்றால் தந்தையாகவும் ஆக முடியும், அதே போல் ஏறும் கலை உள்ளவர்கள் எந்த நேரம் எந்த சேவையின் அவசியம் இருக்கிறதோ அதில் முழுமையாகப் பங்கேற்று செய்ய முடியும், இதைத் தான் 'ஆல்ரவுண்ட் பறக்கும் பறவை' என்ற கூறுவது. நல்லது.

**கேள்வி : சாகார பிரம்மாவின் அனேக புஜங்கள் (கைகள்) ஏன் பிரசித்தி ஆகியிருக்கிறார்கள்? இது யாருடைய நினைவுச்சின்னம்?**

பதில்: இது குழந்தைகளாகிய உங்களின் சகயோகி சொரூபத்தின் நினைவு சின்னமாகும். எப்படி உடலின் விசேஷ காரியம் செய்வது புஜங்களாகும். அதே போல் பாப்தாதாவின் காரியத்தில் சேவை செய்வோர் நீங்கள், அனைத்து குழந்தைகளும் பொறுப்பாளர் ரூபத்தில் இருக்கிறீர்கள். எந்தக் குழந்தைகள் எப்பொழுதும் யதார்த்த ரூபத்தில் துணையை வைத்து நடந்து கொள்ளும் துணைவர்களாக இருக்கிறார்கள் மற்றும் உதவியாளராக இருக்கிறார்கள் என்றால் இவர்களைத் தான் வலது கரம் என்று சொல்வது !

**கேள்வி: வலது கரத்தின் விசேஷம் என்ன?**

பதில்: வலது கரம் எப்பொழுதும் தூய்மையாக அதாவது சுத்தமாக மற்றும் உயர்ந்ததாக இருக்கும். ஏதாவது உயர்ந்த மற்றும் தூய்மையான காரியம் வலது கரம் மூலமாகத் தான் செய்யப்படுகிறது. அதே போன்று பாப்தாதாவின் சகயோகி வலது கரம் எப்பொழுதும் வார்த்தையில், செயலில் மற்றும் தொடர்பில் உன்னதமாக மற்றும் சுத்தமாக அதாவது தூய்மையாக இருக்கிறார்கள்.

2) எப்படி கரங்கள் மூலமாக காரியத்தை செய்விக்கும் சக்தி ஆத்மா, கரங்கள் காரியம் செய்பலைகள் மற்றும் ஆத்மா செய்விப்பவர், அது போலவே வலது கரமாக இருக்கும் சகயோகிகள் எப்பொழுதும் தன்னுடைய செய்விப்பவர் கந்தையை நினைவில் வைத்துக் கொண்டே செய்யும் கருவியாக ஆகிறார்கள். தன்னை செய்விப்பவர் என்று நினைப்பதில்லை, எனவே அவருடைய ஒவ்வொரு காரியத்தில் விலகியிருக்கும் நிலை, அகங்காரமற்ற நிலை மற்றும் பணிவின் புதுஉலக படைப்பின் சிறப்புக்கள் நிரம்பியதாக இருக்கும்.

3) விசேஷமாக வலது கரம் சக்திசாலியாக இருக்கும். வலதுகர சகயோகி ஆத்மா எப்பொழுதும் உலக நன்மை, உலக மாற்றத்தின் காரியத்தின் பொறுப்பின் யை சுலபமாகவே எடுக்க முடியும்.

4) அவருடைய காரியத்தின் வேகம் அதிகமாக இருக்கும். அவர் ஒவ்வொரு பாடத்தையும் தாரணையில் மற்றும் நடைமுறை சொரூபத்தில் கொண்டு வருவதில் தீவிர முயற்சி செய்பவராக இருப்பார் மேலும் எப்பொழுதும் எவரெடியாக இருப்பார்.

**கேள்வி : இடது கரம் சகயோகி புஜங்களின் அடையாளங்கள் என்னவாக இருக்கும்?**

பதில்: (1) அவர்களிடம் சத்தத்தின் கூடவே சுத்தமின்மை அதாவது எண்ணம், சொல் மற்றும் செயலில் சில நேரம் ஏதாவது அசுத்தம் வந்து விடுகிறது. அதாவது சம்பூர்ண சுத்தமானவர்களாக இருப்பதில்லை

2) அவர்களுடைய முயற்சி செய்வதின் வேகம் குறைவாக இருக்கும். செய்யலாம். யோசிக்கலாம் ஆனால் லெஃப்ட் (இடது) அதாவது லேட்-ஆக தாமதமாக) செய்வார்கள். உடன் இருப்பார்கள், காரியம் செய்வார்கள் ஆனால் முழுமையான பொறுப்பை எடுப்பதில் தைரியம் காட்ட மாட்டார்கள். எப்பொழுதும் உற்சாகம், துணிச்சல் வைப்பார்கள் ஆனால் ஆதாரமற்றவர்களாக இருக்க மாட்டார்கள்.

3) அவர்களுடைய நிலை வெகு நேரம் வக்கில் அதாவது லாயரைப் போன்று இருக்கும். சட்டங்களை அதிகம் யோசிப்பார்கள், ஆனால் குறைவான லாபத்தை அடைவார்கள். அவரே அவருக்கு நீதிபதி ஆக முடியாது. ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் கூட இறுதி தீர்ப்பிற்காக நீதிபதியின் அவசியத்தை அனுபவம் செய்வார்கள். இப்பொழுது நான் வலது கரமா அல்லது இடது கரமா? என்று நீங்கள் உங்களையே சோதனை செய்யுங்கள்.

**கேள்வி: அனைத்து குழந்தைகளின் இதயத்தில் உலக மாற்றத்தின் நல்ல எண்ணங்கள் இருக்கின்றன, அந்த எண்ணங்கள் எப்பொழுது நிறைவேறும் ?**

பதில்: எப்பொழுது தன்னை சம்பூர்ணமாக பரிவர்த்தனை (மாற்றம்) செய்வார்களோ அப்பொழுது தான்! எந்த அளவு தன்னுடைய பரிவர்த்தனையில் குறைவு இருக்குமோ அந்த அளவே உலக மாற்ற காரியத்தின் வேகத்திலும் குறைவு இருக்கும். தன்னுடைய மாற்றத்தின் மூலமாகத் தான் நேரத்தின் மாற்றத்தை செய்ய முடியும். தன்னை பார்த்தீர்கள் என்றால், நேரத்தைப் பற்றி இயல்பாகவே தெரிய வந்து விடும். ஏனென்றால். பரிவர்த்தனைக்கான நேரத்தின் கடிகாரம் நீங்கள். உலகத்தின் அதாவது அனைத்து ஆத்மாக்களின் கவனம் இப்பொழுது பொறுப்பாளர் ஆகியிருக்கும் நேரத்தின் கடிகாரம் உங்கள் மேல் இருக்கிறது. இப்பொழுது இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்று பார்ப்பார்கள்.

**வரதானம்: சிந்தனை சக்தி மூலமாக சக்திசாலியாகி தடைகளின் பாதிப்பை அகற்றக்கூடிய அனைத்து கவர்ச்சிகளிலிருந்தும் விடுபட்டவர் ஆகுக!**

தற்சமயம் சிந்தனை சக்தி மூலமாக ஆத்மாவில் அனைத்து சக்திகளையும் நிரப்புவதற்கான அவசியம் இருக்கிறது. இதற்காக உள்நோக்கு பார்வை உடையவராகி ஒவ்வொரு ஞானத் துளியையும் சிந்தித்து கடைந்தெடுத் தீர்கள் என்றால் வெண்ணெய் வெளியாகும்.மேலும் அவர் சக்திசாலி ஆகி விடுவார். அந்த மாதிரியான சக்திசாலி ஆத்மாக்கள் அதீந்திரிய சுகத்தின் பிராப்தியின் அனுபவம் செய்கிறார்கள். அவர்களை அற்ப காலத்தின் எந்தவொரு பொருளும் தன் பக்கம் ஈர்க்க முடியாது, அவருடைய மூழ்கியிருக்கும் நிலை மூலமாக ஆன்மீகத்தின் சக்திசாலியான நிலை என்ன உருவாகிறதோ அதன் மூலம் தடைகளின் பாதிப்பு அகன்று விடுகிறது.

**சுலோகன்: பிராமண உலகத்தில் அனைவரது மரியாதையையும் பெறுபவரே சிம்மாசனதாரி ஆகிறார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசேஷ யுகத்தின் விசேஷ பலன்!

இன்று விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்யும்} தந்தை தன்னுடைய உலக நன்மை காரியத்தின் ஆதாரமூர்த்தி (ஆதாரமான) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இதே ஆதாரமூர்த்திகள் தான் உலகத்தை மாற்றம் செய்யும் விசேஷ ஆத்மாக்கள். அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்களை பாப்தாதாவும் எப்பொழுதும் விசேஷ பார்வையோடு பார்க்கிறார். ஒவ்வொரு விசேஷ ஆத்மாவின் விசேஷமும் எப்பொழுதும் பாப்தாதாவிடம் எதிரில் தெளிவாக இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் மகான். புண்ணிய ஆத்மா ஆவார். புருஷோத்தமர் என்றால் தேவ ஆத்மா. உலக மாற்ற காரியத்திற்குப் பொறுப்பான ஆத்மாக்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னை அந்த மாதிரி புரிந்து நடந்து கொள்கிறீர்களா? என்னவாக இருந்தேன், மேலும் இப்பொழுது என்னவாக ஆகி விட்டேன் என்ற இந்த மிகப் பெரிய வித்தியாசம் எப்பொழுதும் எதிரில் இருக்கிறதா? இந்த வித்தியாசம் மகாமந்திரத்தின் சொரூபமாக இயல்பாகவே ஆக்கி விடுகிறது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தையின் எதிரில் ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதும் விசேஷ ஆத்மாவின் ரூபத்தில் இருக்கிறார், அதே போல் நீங்கள் அனைவரும் தன்னுடைய விசேஷத்தை மற்றும் அனைவரின் விசேஷத்தையும் எப்பொழுதும் பார்க்கிறீர்களா? எப்பொழுதும் சேற்றிலிருக்கும் தாமரையை பார்க்கிறீர்களா அல்லது சேறு மற்றும் தாமரை இரண்டையும் பார்க்கிறீர்களா? சங்கமயுகம் விசேஷ யுகம் மேலும் இதே விசேஷ யுகத்தில் விசேஷ ஆத்மாக்கள் உங்கள் அனைவருக்கும் விசேஷ பங்கு இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் சகயோகிகள் ! விசேஷ ஆத்மாக்கள் செய்யும் காரியம் என்ன? தன்னுடைய விசேஷம் மூலமாக விசேஷ காரியத்தில் இருப்பது அதாவது தன்னுடைய விசேஷத்தை மனதில் மட்டும் அல்லது வாய் மூலம் வர்ணனை மட்டும் செய்வதல்ல, ஆனால் விசேஷத்தின் மூலமாக ஏதாவது விசேஷ காரியம் செய்து காண்பிப்பது. எந்த அளவு தன்னுடைய விசேஷத்தை எண்ணம், சொல் மற்றும் செயலில் சேவையில் ஈடுபடுத்துவீர்களோ அந்த அளவு அதே விசேஷம் வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கும். சேவையில் ஈடுபடுத்துவது என்றால், ஒரு விதையிலிருந்து அனேக பழங்களை உருவாக்குவது. தந்தை மூலமாக இந்த

## 1981 அவ்யக்த முரளி

வாழ்க்கையில் பிறப்புரிமையின் ரூபத்தில் எனக்கு என்ன விசேஷம் கிடைத்திருக்கிறதோ அதை விதை ரூபத்தில் மட்டும் வைத்திருக்கிறேனா மேலும் விதையை சேவையின் நிலத்தில் போட்டு விஸ்தரிப்பை அடைந்திருக்கிறேனா? அதாவது தன்னுடைய சொரூபம் மற்றும் சேவையின் சித்தி சொரூபத்தை அனுபவம் செய்திருக்கிறேனா? பாப்தாதாவோ அனைத்து குழந்தைகளின் விசேஷத்தின் எதிர்காலத்தின் ரேகையை பிறந்தவுடனேயே போட்டு விட்டார். பிறந்ததிலிருந்தே ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் விசேஷத்தின் அதிர்ஷ்ட நட்சத்திரம் மின்னிக் கொண்டு தான் இருக்கிறது. எந்தவொரு குழந்தையும் இந்த அதிர்ஷ்டத்திலிருந்து வஞ்சிக்கப்படவில்லை. நீங்கள் அதிர்ஷ்டத்தை எழுப்பிவிட்டுத் தான் வந்திருக்கிறீர்கள். பிறகு வேற்றுமை ஏன் ஏற்பட்டு விடுகிறது? சிலர் இந்த வரதானம் என்ற விதையை, அதிர்ஷ்டத்தின் விதையை மற்றும் பிறப்புரிமை என்ற விதையை விஸ்தாரத்தில் கொண்டு வருகிறார்கள், சிலர் விதையை காரியத்தில் கொண்டு வராத காரணத்தினால் சக்தியற்ற விதையாக ஆக்கி விடுகிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். எப்படி விதையை சரியான நேரத்தில் காரியத்தில் கொண்டு வரவில்லை என்றால் பலன் என்ற பழம் கொடுக்கும் விதையாக அது ஆவதில்லை. பிறகு சிலர் என்ன செய்கிறார்கள்? விதையை சேவை என்ற நிலத்தில் போடவும் செய்கிறார்கள் ஆனால் பழம் தருவதற்கு முன்பே மரத்தைப் பார்த்து நான் விதையை காரியத்தில் ஈடுபடுத்தி விட்டேன் என்று அதிலேயே குஷி அடைந்து விடுகிறார்கள். இதனுடைய ரிசல்ட் (முடிவு) எப்படி இருக்கும்? மரம் வளர்ந்து விடுகிறது, கிளைகள், சிறு கிளைகள் உருவாகின்றன ஆனால் மரம் மட்டும் வளர்கிறது, பழம் (பலன்) தருவதில்லை, பார்ப்பதற்கு மரம் மிக அழகாக இருக்கும் ஆனால் பழம் தருவதில்லை. அதாவது என்ன விசேஷம் பிறப்புரிமையின் ரூபத்தில் கிடைத்திருக்கிறதோ அதிலிருந்து அவரே வெற்றி என்ற ரூபத்தின் பழத்தை அடைவதில்லை, மேலும் மற்றவர்களையும் அந்த விசேஷத்தின் மூலமாக வெற்றி சொரூபமாக ஆக்க முடிவதில்லை. விசேஷம் என்ற விதையின் மிக உயர்ந்த பழம் 'திருப்தி'. எனவே இன்றைய நாட்களில் பக்தர்கள் சந்தோஷிமா-வின் பூஜையை அதிகம் செய்கிறார்கள். அப்படி திருப்தியாக இருக்க வேண்டும் மற்றும் அனைவரையும் திருப்திப் படுத்த வேண்டும் என்ற இது தான் விசேஷ யுகத்தின் விசேஷ பலனாகும்.

அனேக குழந்தைகள் அந்த மாதிரி பழம் (பலன்) கொடுப்பவர்களாக ஆவதில்லை. மரத்தை வளர வைத்து அதாவது சேவையை விஸ்தாரம் செய்து விடுகிறார்கள் ஆனால் திருப்தி என்ற பழம் தராத மரம் என்ன பிரயோஜனம்? எனவே விசேஷத்தின் வரதானம் விதைக்கு அனைத்து சக்திகளின் நீரை ஊற்றினீர்கள்

என்றால், பழம் தருவதாக ஆகி விடும். இல்லை என்றால் நன்றாக வளர்ந்திருக்கும் மரமும் அவ்வப்பொழுது வரும் புயலினால் ஆடி ஆடி சில நேரம் சில கிளை, சில நேரம் வேறு கிளை என ஓடிந்து கொண்டே இருக்கும். பிறகு என்னவாகும்? மரம் இருக்கும் ஆனால் காய்ந்து போன மரமாக இருக்கும். ஒரு பக்கம் காய்ந்த மரம் - அதில் முன்னேறிச் செல்வதற்கான ஊக்கம், உற்சாகம், குஷி, ஆன்மீக போதை என்ற எந்தவொரு பசுமையும் இல்லை, விதையிலும் பசுமை இல்லை, மரத்திலும் பசுமை இல்லை. இப்பொழுது விசேஷ ஆத்மாக்களின் சம்மந்தம் மற்றும் தொடர்பில் எப்பொழுதும் இருக்கிறீர்கள். ஏனென்றால் பிராமண பரிவாரம், என்றால், விசேஷ ஆத்மாக்களின் பரிவாரம். அப்படி பரிவாரத்தின் தொடர்பில் வந்து கொண்டே ஒவ்வொருவரின் விசேஷத்தையும் பாருங்கள். விசேஷத்தை பார்ப்பதற்கான பார்வையை வையுங்கள் அதாவது, விசேஷமான கண்ணாடியை அணியுங்கள். இன்றைய நாட்களில் கண்ணாடி அணியும் நாகரீகம் இருக்கிறது. மேலும் கட்டாயமும் இருக்கிறது. எனவே விசேஷத்தைப் பார்க்கும் கண்ணாடி அணிந்தீர்கள் என்றால், வேறு எதுவும் தென்படாது. எப்படி அறிவியல் சாதனங்கள் மூலமாக சிகப்பு கண்ணாடி அணிந்தீர்கள் என்றால், பச்சையானதும் சிகப்பாக தென்பட முடியும். எனவே இந்த விசேஷத்தின் பார்வை மூலமாக விசேஷத்தை மட்டும் பாருங்கள். சேற்றைப் பார்க்காமல் தாமரையைப் பாருங்கள். மேலும் ஒவ்வொருவரின் விசேஷம் மூலமாக உலக மாற்றத்தின் காரியத்தில் நான் விசேஷ காரியம் செய்வதற்கு பொறுப்பாளர் ஆகி விடுவேன். அப்படி ஒரு விஷயம் தன்னுடைய விசேஷத்தை காரியத்தில் கொண்டு வாருங்கள், விஸ்தாரம் செய்து பலன் அளிப்பதாக ஆக்குங்கள், இன்னொரு விஷயம் அனைவரிலும் விசேஷத்தையே பாருங்கள். மூன்றாவது விஷயம், -அனைவரின் அந்த விசேஷங்களை காரியத்தில் கொண்டு வாருங்கள். நான்காவது விசேஷம், விசேஷ யுகத்தின் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள்! எனவே எப்பொழுதும் விசேஷ எண்ணம் சொல் மற்றும் செயல் செய்ய வேண்டும். பிறகு என்னவாகும்? விசேஷ நேரம் கிடைத்து விடும். ஏனென்றால். விசேஷம் என்று புரிந்து கொள்ளாத காரணத்தினால் தன் மூலமாக தனக்கே வரும் தடை மற்றும் கூடவே தொடர்பில் வருவதினால் வந்திருக்கும் தடைகளில் அதிக நேரம் செல்கிறது. ஏனென்றால், தன்னுடைய பலஹீனம், மற்றவர்களின் பலஹீனம் இவருடைய கதை மற்றும் கீர்த்தனை இரண்டும் மிக நீளமாக இருக்கும். எப்படி உங்களுடைய வாழ்க்கையின் ஞாபகார்த்த கதையான இராமாயணத்தை' பார்த்தீர்கள் என்றால், கதை மற்றும் கீர்த்தனை இரண்டுமே மிக சுவாரஸ்யமானதாக மற்றும் நீளமாக இருக்கும் ஆனால் அதில் என்ன இருக்கிறது? விசேஷத்தைப் பர்க்காமல் பொறாமையில் வந்ததினால் எவ்வளவு நீளமான கீர்த்தனை மற்றும் கதை ஆகி விட்டது. அப்படி விசேஷத்தை

பார்க்காததினால் லட்சுமி நாராயணனின் கதைக்குப் பதிலாக இராமரின் கதை ஆகி விடுகிறது. மேலும் இதே கதை கீர்த்தனையில் தன்னுடைய, சேவையின் நேரத்தை வீணாக இழக்கிறீர்கள். இன்னும் மகிழ்ச்சியூட்டும் விஷயம் செய்கிறீர்கள், தனியாக மட்டும் நீர்த்தனை கதை செய்வதில்லை ஆனால் கீர்த்தன் மண்டலியையும் தயார் செய்கிறீர்கள் எனவே இந்த வீணான கீர்த்தனை கதையிலிருந்து நேரம் மிச்சப் படுத்துவதின் காரணமாக விசேஷ நேரமும் கிடைத்து விடுகிறது என்று கூறியிருந்தோம். அப்படி என்ன செய்ய வேண்டும். என்ன செய்யக்கூடாது என்று புரிந்து கொண்டீர்களா? எப்படி இன்றைய உலகத்தில் யாருக்காவது பக்தியின் பலனை அடையுங்கள், சகஜ இராஜயோகி ஆகுங்கள் என்று கூறினீர்கள் என்றால், எதில் அதிக ஆர்வம் வைக்கிறார்கள்? பக்தியின் கதை கீர்த்தனையில் அதிக ஆர்வம் வைக்கிறார்கள் தான் இல்லையா? மனதை மகிழச்செய்யும் விஷயம் என்று நினைக்கிறார்கள். அதே போல சில விசேஷ ஆத்மாக்கள் கூட இராம கதையின் மண்டலியில் அல்லது கீர்த்தன் மண்டலியில் மிக மனமகிழ்விற்கான விஷயம் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். அந்த மாதிரி நேரத்தில் அந்த ஆத்மாக்களிடம் இந்த கீர்த்தனை செய்வதை விடுங்கள், அமைதியாக இருங்கள் என்று கூறினீர்கள் என்றால், ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் சம்ஸ்காரம் உருவாகியிருக்கிறது இல்லையா? இப்பொழுது இந்த கீர்த்தன் மண்டலியை முடிவு கட்டுங்கள். புரிந்ததா? விசேஷ ஆத்மாக்களின் சபையில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? மேலும் குரூப்பும் விசேஷமானது. இருவர்களுமே ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்கள். ஒன்று பிரவேசம் செய்த ஆசனம், இன்னொன்று இராஜ சிம்மாசனம். அது இராஜ்யத்தின் சாவி கிடைப்பதற்கான ஆசனம் (கல்கத்தா). மேலும் இது இராஜ்யம் செய்வதற்கான ஆசனம் (டெல்லி அப்படி இரண்டுமே ஆசனம் ஆகி விட்டது இல்லையா, அப்படி இரண்டிற்கும் விசேஷம் இருக்கிறது இல்லையா? சாவி கிடைக்கவில்லை என்றால், இராஜ்யமும் செய்ய முடியாது. எனவே விசேஷத்தை மறக்கக்கூடாது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் விசேஷத்தைப் பார்க்கும். விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்தும் விசேஷ நேரத்தை சேவையில் ஈடுபடுத்தி சேவையின் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்தும் எப்பொழுதும் திருப்தியான ஆத்மாவிற்கு, எப்பொழுது திருப்தியின் கிரணங்கள் மூலமாக அனைவரையும் திருப்தி படுத்தும், அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** 1) **சப்தத்திலிருந்து விலகிச் செல்வதற்கான முறையை தெரிந்திருக்கிறீர்களா?** அசரீரி ஆவது என்றால் சப்தத்திலிருந்து

விலகிச் சென்று விடுவது. உடல் இருக்கிறது என்றால் சப்தம் இருக்கிறது. உடலிலிருந்து விலகி விட்டீர்கள் என்றால் அமைதி, அமைதியின் சக்தி எந்தளவு மகானாக இருக்கிறது என்ற இதன் அனுபவிகள் தான் நீங்கள் இல்லையா? அமைதியின் சக்தி மூலமாக உலகின் படைப்பை செய்து கொண்டிருக்கிறீர்கள். அறிவியலின் சக்தி மூலம் விநாஷம் மற்றும் அமைதியின் சக்தி மூலம் ஸ்தாபனை. நான் என்னுடைய அமைதியின் சக்தி மூலமாக ஸ்தாபனையின் காரியம் செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நான் தான் ஸ்தாபனை காரியத்திற்கு பொறுப்பாளராக இருக்கிறேன் என்றால் நீங்கள் அமைதி ரூபத்தில் நிலைத்திருந்தால் தான் ஸ்தாபனையின் காரியம் செய்ய முடியும். ஒருவேளை நீங்களே குழப்பத்தில் வருகிறீர்கள் என்றால் ஸ்தாபனை காரியம் வெற்றி அடைய முடியாது. உலகில் அனைத்தையும் விட மிக விருப்பமான ஒன்று அமைதி. இதற்காக பெரிய பெரிய மகாநாடுகளைக் கூட்டுகிறார்கள். அனைவரின் லட்சியமே அமைதியைப் பெறுவது. இது தான் அனைத்தையும் விட பிரியமானது மற்றும் சக்திசாலியான ஒன்றாகும். மேலும் நீங்கள் அமைதியோ என்னுடைய இயற்கையான குணம் என்று நினைக்கிறீர்கள். எவ்வளவு சப்தத்தில் வருவது சுலபமாக இருக்கிறதோ அந்த அளவே ஒரு நொடியில் சப்தத்தை விட்டு விலகிச் செல்ல வேண்டும். இதற்கான பயிற்சி இருக்கிறதா? அமைதி சக்தியின் அனுபவியா? எப்படிப்பட்ட அமைதியற்ற ஆத்மாவிற்கும் சாந்த சொரூபம் ஆகி சாந்தியின் கிரணங்கள் கொடுத்தீர்கள் என்றால், அசாந்தியானவரும் சாந்தியாகி விடுவார். சாந்தி சொரூபத்தில் இருப்பது என்றால் அனைவருக்கும் சாந்தியின் கிரணங்களைக் கொடுப்பது. பக்தர்கள் சாந்தி தேவா என்று கூறி நினைவு செய்கிறார்கள் தான் இல்லையா? தேவன் என்றால் கொடுப்பவர். எப்படி சாந்தியின் வள்ளல் என்று தந்தையின் மகிமை இருக்கிறது. அதே போன்று நீங்களும் சாந்தி தேவா ஆவீர்கள். இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய மகாதானம் ஆகும். எங்கு அமைதி இருக்குமோ அங்கு அனைத்து விஷயங்களும் இருக்கும். அப்படி நீங்கள் அனைவரும் சாந்தி தேவா, அமைதியற்ற சூழ்நிலையில் இருந்து கொண்டே தானும் சந்த சொரூபம் மற்றும் அனைவரையும் சாந்தமாக்கக்கூடியவர்கள். எது பாப்தாதாவின் காரியமோ அதுவே குழந்தைகளின் காரியம் ஆகும். பாப்தாதா அமைதியற்ற ஆத்மாக்களுக்கும் அமைதி கொடுக்கிறார் என்றால் குழந்தைகளுக்கும் ஃபாலோ ஃபாதர் செய்ய வேண்டும். பிராமணர்களின் தொழிலே இது தான். நல்லது.

**2) பிராமணர்களின் விசேஷ காரியம் -ஞான சூரியனாகி முழு உலகிற்கும் அனைத்து சக்திகளின் கிரணங்களைக் கொடுப்பது!** அனைவரும் உலகிற்கு

நன்மை செய்பவராகி உலகிற்கு அனைத்து சக்திகளின் கிரணங்களைக் கொடுக்கிறீர்களா? நீங்கள் மாஸ்டர் ஞான சூரியன் தான் இல்லையா? அப்படி சூரியன் என்ன செய்கிறது? தன்னுடைய கிரணங்கள் மூலமாக உலகை ஒளிமயமாக ஆக்குகிறது. நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர் ஞான் சூரியனாகி அனைத்து சக்திகளின் கிரணங்களை உலகிற்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்களா? முழு நாளில் இந்த சேவைக்காக எத்தனை மணி நேரம் கொடுக்கிறீர்கள். பிராமண வாழ்க்கையில் விசேஷ காரியமே இது தான். மற்றவை ஒரு காரணத்திற்காக செய்யப்படுபவை. பிராமண வாழ்க்கை மற்றும் ஜென்மம் கிடைத்திருப்பதே உலக நன்மை காரியம் செய்வதற்காக அப்படியானால் எப்பொழுதும் இந்தக் காரியத்தில் பிஸியாக இருக்கிறீர்களா? யார் இந்தக் காரியத்தில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் தடையற்றவர்களாக இருப்பார்கள். எப்பொழுது புக்தி ஒரு காரியமும் செய்யாமல் வீணாக இருக்கிறதோ அப்பொழுது தடை வருகிறது. எப்பொழுதும் பிஸியாக இருந்தீர்கள் என்றால். நீங்களே தடையற்றவராக மற்றும் மற்றவர்களுக்காகவும் விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவராக இருப்பீர்கள். விக்ன விநாஷக்கிடம் ஒருபொழுதும் விக்னம் அதாவது தடை வர முடியாது. நல்லது.

**3) சங்கம யுகத்தில் பிராமணர்களின் விசேஷ ஸ்தானம் பாப்தாதாவின் இதய சிம்மாசனம்!** அனைவரும் தன்னை பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரி என்று அனுபவம் செய்கிறீர்களா? அந் மாதிரி சிரேஷ்ட ஸ்தானம் ஒருபொழுதும் கிடைக்காது. சத்யுகத்தில் வைரம் பதித்த தங்க சிம்மாசனம் கிடைக்கும், ஆனால் இதய சிம்மாசனம் கிடைக்காது. அப்படி பிராமணர்கள் நீங்கள் அனைவரையும் விட உயர்ந்தவர்கள் மற்றும் உங்களுடைய சிரேஷ்ட ஸ்தானம் இதய சிம்மாசனம். எனவே பிராமணர்களை உயர்ந்ததிலும் உயர்ந்த ஸ்தானமான உச்சங்குடிமியை காண்பித்திருக்கிறார்கள். நான் இதயசிம்மாசனதாரி என்று அந்த அளவு போதை இருக்கிறதா? கிரீடமும் இருக்கிறது, ஆசனமும் இருக்கிறது, திலகமும் இடப்பட்டிருக்கிறது. நினைவு உள்ளவராக ஆகுங்கள் என்ற அழியாத திலகம் இடப்பட்டு இருக்கிறது தான் இல்லையா? முழுக் கல்பத்தில் என்னை மாதிரி வேறு யாருமே இல்லை என்ற இந்த போதையிலேயே இருங்கள். இந்த நினைவு தான் எப்பொழுதும் போதையில் வைக்கும். மேலும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள்.

**4) ஆன்மீக சேவாதாரியின் கடமையே -லைட் ஹவுஸாகி அனைவருக்கும் லைட் கொடுப்பது!**

எப்பொழுதும் தன்னை லைட் ஹவுஸ் என்று நினைக்கிறீர்களா? லைட் ஹவுஸ் என்றால் ஜோதியின் வீடு. அந்த அளவு அளவற்ற ஜோதி அதாவது லைட் இருக்க வேண்டும். அதன் காரணமாக உலகின் லைட் ஹவுஸாகி எப்பொழுதும் லைட்டை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். லைட் ஹவுஸில் எப்பொழுதும் லைட் இருக்கவே இருக்கும். அதனால் தான் லைட் கொடுக்க முடிகிறது. ஒருவேளை லைட் ஹவுஸ் அதுவே லைட் இன்றி இருக்கிறது என்றால் மற்றவருக்கு எப்படி கொடுக்க முடியும்? ஹவுஸில் (வீட்டில்) அனைத்து சாதனங்களும் ஒன்றாக இருக்கும். அப்படி இங்கேயும் லைட் ஹவுஸ் என்றால் எப்பொழுதும் லைட் சேமிப்பாகி இருக்க வேண்டும், லைட் ஹவுஸ் ஆகி லைட் கொடுப்பது தான் பிராமணர்களின் தொழில் ஆகும். உண்மையான ஆன்மீக சேவாதாரிகள் மகாதானி அதாவது லைட் ஹவுஸ் ஆக இருப்பார்கள். வள்ளலின் குழந்தைகள் வள்ளலாக இருப்பார்கள். பெறுபவர்களாக மட்டுமின்றி கொடுப்பவர்களாகவும் இருப்பார்கள். எவ்வளவு கொடுப்பீர்களோ அந்த அளவு இயல்பாகவே அதிகரித்துக் கொண்டே இருக்கும். அதிகரிப்பதற்கான வழி கொடுப்பதுட

**5) அனைத்து வரதானங்களினால் நிரம்பியவர் ஆவதற்கான காலம் சங்கமயுகம்!** இந்த உயர்ந்த காலத்தின் மகத்துவத்தை மற்றும் காலத்தின் வரதானத்தை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. முழுக் கல்பத்தில் வரதானி காலம் எது? சங்கமயுகம். அப்படியானால் இந்த வரதானி காலத்தில் தன்னை வரதானங்களினால் நிரம்பியவராக ஆக்கியிருக்கிறீர்களா? ஏனென்றால் உருவாக்குபவர் மூலமாக வரதானங்களின் களஞ்சியம் நிரம்பியும் இருக்கிறது. மேலும் திறந்ததாகவும் இருக்கிறது என்றும் தெரிந்திருக்கிறீர்கள். யார் எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு தன்னை அனைத்தும் நிரம்பியவராக ஆக்க முடியும். அந்த மாதிரி நிரம்பியவராக ஆக்கியிருக்கிறீர்களா? 'சிறிதளவு பொக்கிஷம் அந்த சிறிதளவிலேயே திருப்தி ஆகாதீர்கள். பெறுவது என்றால் சிறிதளவு அல்ல முழுமையாகப் பெற வேண்டும். யார் அதிகாரி ஆத்மாக்களாக இருட்டார்களோ அவர்கள் சிறிதளவில் குஷி அடைய மாட்டார்கள். ஆக வேண்டும் என்றால் நம்பர் ஒன் ஆக வேண்டும். பெற வேண்டும் என்றால், முழுமையாகப் பெற வேண்டும். அதே போலவே லட்சியம் மற்றும் லட்சணம் இரண்டும் சமமாக இருக்கட்டும். எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்தின் சமநிலை மூலமாகத் தான் தந்தை மூலமாகவும் பிற அனைவர் மூலமாகவும் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும் மற்றும் ஆனந்தம் நிறைந்த வாழ்க்கை உருவாகி விடும். பேலன்ஸ் (சமநிலை) வைத்து பிளஸிங் (ஆசீர்வாதம் பெறுவது மற்றும் பிளஸிங் கொடுப்பது

என்ற இந்த முக்கியமான பரிசை மதுபன்னிலிருந்து பெற்றுச் செல்ல வேண்டும். இது தான் இங்கே உள்ள புத்துணர்வு. நல்லது ஓம் சாந்தி.

**வரதானம்: மன்மனாபவ என்ற விதி மூலமாக மனரசனையின் நிலையை அனுபவம் செய்யும் மற்றும் செய்விக்கும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் இரும்புச் சங்கிலிகள் மற்றும் மெல்லிய நூல்களின் பந்தனத்தைத் துண்டித்து பந்தனமற்ற நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் கலியுகத்தின் ஸ்தூல பொருட்களின் மீதுள்ள ஆர்வம் மற்றும் பற்றுதலிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். அவர்களை தேக அபிமானம் மற்றும் தேகத்தின் பழைய உலகின் எந்த ஒரு பொருளும் சிறிதளவு கூட கவர்ந்திழுப்பதில்லை. எப்பொழுது எந்தவொரு இந்திரியத்தின் சுவையில் அதாவது அழியும் சுவையின் பக்கம் ஈர்ப்பு இல்லையோ அப்பொழுது ஆன்மீக அதீந்திரிய சுகம் மற்றும் மனரசனையின் நிலையின் அனுபவம் ஆகிறது. இதற்காக நிரந்தரமான மன்மனாபவ என்ற நிலை வேண்டும்.

**சுலோகன்: எந்த சேவையில் அனைவரின் ஆசீர்வாதங்களுடன் குஷியின் அனுபவம் ஆகிறதோ அது தான் உண்மையான சேவை!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 08.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இடைவெளியை நிறைவு செய்வதற்கான சாதனம் -துரித தானம் மகா புண்ணியம்!

இன்று பாப்தாதா வதனத்தில் அதிகாலை நேரத்தில் பாப்தாதா இருவர்களுக்கும் இடையே நடந்த ஆன்மீக உரையாடலின் கதையை சித்திரங்களுடன் கூறுகிறார். கதை கேட்பதில் அனைவருக்கும் ஆர்வம் இருக்கும் இல்லையா? இன்றைய கதையாக என்ன இருந்தது? பிரம்மாபாபா வதனத்தின் தோட்டத்தில் சுற்றி நடந்து வந்து கொண்டிருந்தார். நடந்து வந்து கொண்டிருக்கும்பொழுதே அவருடைய எதிரில் யார் இருந்தார்கள்? தந்தையின் எதிரில் எப்பொழுதும் யார் இருக்கிறார்கள்? இதை அனைவரும் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? தந்தை குழந்தைகளின் மாலையை நினைவு செய்து கொண்டிருந்தார். எந்த மாலை? குணமாலை. அப்படி பிரம்மாபாபா குணத்தின் மாலையை நினைவு செய்து கொண்டிருந்தார். சிவபாபா பிரம்மாவிடம் கேட்டார். என்ன ஜபித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பிரம்மாபாபா கூறினார் - 'எது உங்களுடைய வேலையாக இருக்கிறதோ அதுவே என்னுடைய வேலை. குழந்தைகளின் குணமாலையைப் பார்த்துக் கொண்டிருந்தோம். என்னென்ன பார்த்தீர்கள் என்று சிவபாபா கேட்டார். என்ன பார்த்திருப்பார்? சில குழந்தைகளுக்கு நெக்லெஸ் அளவிற்கு மட்டுமான மாலை இருந்தது, மேலும் சில குழந்தைகளினுடையது கால் வரை நீளமான மாலையாக இருந்தது. சில குழந்தைகளின் அனேக முத்துக்களின் மாலையாக இருந்தது. சில குழந்தைகளோ மாலைகளினால் அந்த அளவு அலங்கரிக்கப்பட்டிருந்தார்கள், மாலையே அவர்களுடைய ஆடையாக ஆகி விட்டது.

பிரம்மாபாபா விதவிதமான குணமாலைகளினால் அலங்கரிக்கப்பட்ட குழந்தைகளைப் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய குணமாலையைத் தெரிந்திரு க்கிறீர்களா? எவ்வளவு அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற இந்த தன்னுடைய சித்திரத்தை பார்க்கிறீர்களா? பிரம்மாபாபா சித்திர ரேகையாகி சித்திரங்களின் கோடு போட்டுக் கொண்டிருந்தார் அதாவது சித்திரத்தில் அதிர்ஷ்டத்தின் ரேகைகளை இழுத்துக் கொண்டிருந்தார். நீங்களும் உங்களுடைய சித்திரம் அதாவது எதிர்காலத்தின்

உருவத்தை நீங்களே வணைய முடியும் தான் இல்லையா. புகைப்படம் எடுக்க முடியும் தான் இல்லையா? தன்னுடைய மற்றும் மற்றவர்களின் புகைப்படத்தை எடுக்கத் தெரியுமா? தன்னுடைய புகைப்படத்தை எடுக்கத் தெரியுமா? அப்படி இன்று வதனத்தில் அனைவரின் புகைப்படமும் இருந்தது. எவ்வளவு பெரிய கேமராவாக இருக்கும்? உங்கள் அனைவரின் மட்டுமல்ல, அனைத்து பிராமணர்களின் புகைப்படம் இருந்தது. மாலைகளின் அலங்காரத்தைப் பார்த்து சில குழந்தைகளின் விசேஷமாக என்ன பார்த்தோம் - ஒவ்வொரு குணத்தை வைரங்களின் ரூபத்தில் வகை வகையான ரூபத்தின் கோடுகளை மற்றும் வண்ணமுடையவர்களாக இருந்தார்கள். முக்கியமாக நான்கு விதமான வண்ணம் இருந்தன. அதில் முக்கிய நான்கு பாடங்களின் நான்கு வண்ணங்கள் இருந்தன. பாடத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஞானம் - யோகா -தாரணை மற்றும் சேவை.

**ஞான சொரூபத்தின் அடையாளமாக எந்த வண்ணம் இருக்கும்?** ஞான சொரூபத்தின் அடையாளம் -பொன் நிறம். அதாவது மெல்லிய பொன் நிறம் இருக்கும் காரணத்தினால் அந்த ஒரே ஒரு வைரம் மூலம் அனைத்து வண்ணங்களும் தென்பட்டன. ஒரே ஒரு வைரத்திலிருந்து விதவிதமான வர்ணங்களின் கிரணங்கள் மாதிரி ஜொலிப்பு தென்பட்டது. தூரத்திலிருந்து சூரியன் பிரகாசமாக இருப்பது போல் அனுபவம் ஆகும். மேலும் இது அதையும் விட அழகான சூரியன் ஏனென்றால், அனைத்து வர்ணங்களின் கிரணங்கள் தூரத்திலிருந்தே மிகத் தெளிவாகத் தென்பட்டன. அந்த சித்திரம் கண் எதிரில் வருகிறது தான் இல்லையா? வைரம் எப்படி மின்னிக் கொண்டிருக்கிறது.

**நினைவின் அடையாளம்:** இதுவோ சுலபமானது தான் இல்லையா? நினைவில் இங்கேயும் அமருகிறீர்கள் என்றால் என்ன செய்கிறீர்கள்? சிகப்பு வண்ணம் ஆனால் இந்த சிகப்பு வண்ணத்திலும் பொன் வண்ணம் கலந்திருந்தது, எனவே உங்களுடைய இந்த உலகத்தில் அந்த வண்ணம் இல்லை. சொல்வதற்கோ சிகப்பு வண்ணம் என்று தான் சொல்வோம்.

**தாரணையின் அடையாளம்:** வெண்ணிறம் ஆனால் வெண்ணிறத்திலும் எப்படி சந்திரனின் ஒளியின் இடையில் மெல்லிய நீல நிறத்தை கலக்குங்கள் அல்லது வெள்ளியின் நிறத்தில் மெல்லிய மஞ்சள் நிறத்தை சேர்த்துக்கொள்ளுங்கள். பார்ப்பதற்கு சந்திரன் மாதிரி தான் தென்படும் ஆனால் லேசாக மென்மையான நீல நிறம் இருக்கும் காரணத்தினால் அதனுடைய மினு மினுப்பு இன்னும் அழகாக ஆகி விடும். இங்கே அந்த வண்ணத்தை உருவாக்க முடியாது. ஏனென்றால், அது

பிரகாசமாக மின்னும் வண்ணம் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஆனால் சூட்சும வதனத்தின் வண்ணம் இங்கே எப்படி வர முடியும்?

**சேவையின் அடையாளம்:** பச்சை நிறம். சேவையில் நாலாபுறங்களிலும் பசுமையாக்கி விடுகிறீர்கள் இல்லையா? முட்களின் காடுகளை மலர்களின் தோட்டம் ஆக்கி விடுகிறீர்கள்.

நான்கு வண்ணங்கள் எவை என்று இப்பொழுது கேட்டீர்களா? இந்த நான்கு வண்ணங்களின் வைரங்களினால் அலங்கரிக்கப்பட்ட மாலைகள் அனைவரின் கழுத்தில் இருந்தது. இது வேறு வேறு அளவு மற்றும் மின்னுதலில் வித்தியாசம் இருந்தது. சிலருக்கு ஞான சொரூபத்தின் மாலை இருந்தது. சிலருக்கு நினைவு சொரூபத்தின் மாலை இருந்தது. மேலும் சிலருக்கு நான்கு மாலைகளுமே கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசத்தில் இருந்தன. யாருக்கு நான்கு வண்ணங்களினால் ஆன அனேகமாலைகள் இருந்தனவோ அது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருந்திருக்கும். பாப்தாதா அனைவரது ரிசல்ட்டையும் மாலைகளின் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். தூரத்திலிருந்தே வைரம் மாதிரி மின்னிக் கொண்டிருந்தார்கள். எப்படி, சின்ன சின்ன பல்புகளின் லைட் மாதிரி தென்பட்டது. இப்பொழுது இந்த சித்திரங்கள் மூலமாக ரிசல்ட்டைப் பார்த்து பிரம்மாபாபா கூறினார் - 'நேரத்தின் வேகத்திற்கு ஏற்றபடி அனைத்து குழந்தைகளின் அலங்காரம் முடிவடைந்ததா?' ஏனென்றால் ரிசல்ட்டில் வேற்றுமை இருந்தது. அப்படியானால் இந்த வேற்றுமையை எப்படி சம்பன்னம் ஆக்குவது? குழந்தைகளோ மிக அதிகமாக கடினமாக முயற்சி செய்கிறார்கள். ஞானம் நிறைந்தவராகவோ ஆகி விட்டீர்கள். என்ன வித்தியாசம் இருந்தது என்று இப்பொழுது கூறுங்கள், அதில் சிலருக்கு நெக்லஸ், சிலருக்கு கால் வரை நீளமான மாலைகள். அதுவும் அனேக மாலைகள் இருந்தன. கேட்பதும் ஒன்று தான். மற்றவர்களுக்கு கூறுவதும் ஒன்று தான். அனைவருக்கும் ஒரே ஒரு விதி தான். மேலும் உருவாக்குபவரும் ஒரே ஒருவர் தான். சட்டமும் ஒன்று தான், வேறு என்ன வித்தியாசம் இருந்து விட்டது. எண்ணமும் ஒன்று, உலகமும் ஒன்று. பிறகு ஏன் வித்தியாசம்?

பிரம்மாபாபாவிற்கு குழந்தைகள் மேல் இன்று மிகுந்த அன்பு வந்து கொண்டிருக்கிறது. அனைத்து சித்திரங்களையும் சம்பன்னம் ஆக்குவதற்காக இப்பொழுதே அனைவரையும் மாலைகளினால் அலங்கரித்து விட வேண்டும் என்று தீவிரமான ஊக்கம் வந்து கொண்டிருந்தது. தந்தையோ அலங்கரித்தும் விடலாம்

ஆனால் தாரணை செய்வதற்கான சக்தியும் வேண்டும் இல்லையா? அதைப் பாதுகாப்பதற்கான சக்தியும் வேண்டும் இல்லையா? பிரம்மாபாபா என்ன விஷயம் என்று சிவபாபாவிடம் கேட்டார். குழந்தைகள் உடன் செல்வதற்காக முழுமையாக அலங்கரிக்கப்பட்டவர்களாக ஏன் ஆவதில்லை? அலங்கரிக்கப்பட்டவர்கள் தான் உடன் செல்வார்கள். அதற்குக் காரணமாக என்ன வெளிப்பட்டது? இடைவெளியோ சின்னஞ் சிறியது தான் என்று சிவபாபா கூறினார். அனைவருமே யோசிக்கத் தான் செய்கிறார்கள் ஆனால் சிலர் என்ன யோசிக்கிறார்களோ அதை ஒரே நேரத்தில் செய்து விடுகிறார்கள். அதாவது யோசிப்பது மற்றும் செய்வது சேர்ந்தே இருக்கிறது. அந்த மாதிரியானவர்கள் சம்பன்னம் ஆகி விடுகிறார்கள் ஆனால் சிலர் என்ன யோசிக்கிறார்களோ அதை செய்யவும் செய்கிறார்கள் ஆனால் யோசிப்பது மற்றும் செய்வதற்கு இடையில் இடைவெளி இருந்து விடுகிறது. மிக நன்றாக யோசிக்கிறார்கள் ஆனால் கொஞ்ச காலத்திற்கு பிறகு தான் செய்கிறார்கள். அதே நேரம் செய்வதில்லை. எனவே எண்ணத்தில் அந்த நேரம் எந்தவொரு தீவிரம், ஊக்கம் உற்சாகம் இருந்ததோ அது காலமானதின் காரணமாக சதவிகிதத்தில் குறைந்து விடுகிறது. எப்படி சூடான அப்பொழுது தயாரிக்கப்பட்ட பொருளின் அனுபவம் மற்றும் ஆறிப்போன ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்ட பொருளின் அனுபவத்தில் வித்தியாசம் இருக்கிறது தான் இல்லையா? புத்தம் புது பொருளின் சக்தி, கொஞ்ச நேரம் வைக்கப்பட்ட பொருளின் சக்தியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இடையில் நேரம் கிடைக்கும் காரணத்தினால் மற்றவர்களுக்குக் கூறுவதினால் அனைவரின் சதவிகிதம் குறைந்து விடுகிறது. எப்படி புதிய பொருளின் வைட்டமின்களின் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இன்னொன்று வாய்ப்பு இருக்கும் காரணத்தினால் பிரச்சனைகள் என்ற தடைகளும் வந்து விடுகின்றன. எனவே யோசிப்பது மற்றும் செய்வது சேர்ந்தே இருக்கட்டும். இதைத் தான் துரித தானம் மகாபுண்ணியம்' என்று கூறுவது. இல்லை என்றால் மகாபுண்ணியத்திற்குப் பதிலாக புண்ணியம் என்று மட்டும் ஆகி விடும். அப்படி வித்தியாசம் ஏற்பட்டு விட்டது தான் இல்லையா. மகாபுண்ணியத்தின் பிராப்தி மேலும் புண்ணியத்தின் பிராப்தி வேற்றுமை வந்து விடுகிறது. என்ன காரணம் என்று புரிந்து டீர்களா? சிறிய காரணம் தான். செய்யவும் செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது செய்வதற்குப் பதிலாக எப்பொழுதாவது செய்கிறீர்கள். எனவே அதிகம் உழைக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே பிரம்மாபாபா குழந்தைகளிடம் இப்பொழுது இந்த காரணத்திற்கு நிவாரணம் செய்யுங்கள் என்று கூறினார். இன்றைய கதையை கேட்டீர்களா? இரண்டு தந்தைகளின் இடையே நடந்த கதை. இப்பொழுது என்ன செய்வீர்கள்? நிவாரணம் செய்யுங்கள். நிவாரணம் செய்வது தான் நிர்மானம்

(படைப்பு) செய்வதாக ஆகி விடும். அப்படி தன்னிலும் நவநிர்மாணம் மற்றும் உலகத்திலும் நவநிர்மாணம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட, யோசிப்பதையும் மற்றும் செய்வதையும் (இடைவெளி யில்லாது) சமமாக ஆக்கக்கூடிய, தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் துரித தானம் செய்யும் மகாபுண்ணிய ஆத்மாக்களுக்கு, இரண்டு தந்தைகளின் நல்விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய, அந்த மாதிரி சம்பன்ன ஆத்மாக்களுக்கு, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** சேவாதாரி அமிர்தவேளையிலிருந்து இரவு வரையிலும் சேவையின் மேடையில் இருக்க வேண்டும். ஒருவேளை ஓய்வு எடுக்கிறீர்கள் என்றாலும் மேடையில் இருக்கட்டும். மேடையில் தான் தூங்கும் பங்கை செய்கிறீர்கள் இல்லையா? எப்படி தூங்குகிறார் என்று அனைவரின் பார்வை செல்லும். இந்த முறையில் சேவாதாரி என்றால் 24-மணி நேரங்களிலும் தன்னுடைய பங்கைச் செய்பவர். எனவே ஒவ்வொரு அடி, ஒவ்வொரு விநாடி நீங்கள் முழு உலகிற்கு எதிரில் இருக்கிறீர்கள். சேவாதாரி கதாநாயக பாத்திரம் என்று புரிந்து கொண்டு நடக்க வேண்டும். சென்டரில் அமர்ந்திருக்கவில்லை, ஆனால் மேடையில் இருக்கிறீர்கள். உலகின் மேடையில் இருக்கிறீர்கள். அப்படி இந்த அளவு கவனம் இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் இயல்பாகவே உயர்ந்ததாக இருக்கும் இல்லையா. இயற்கையான கவனம் இருக்கும். கவனம் கொடுக்க வேண்டியதாக இருக்காது ஆனால் ஏற்கனவே இருக்கும். ஏனென்றால் மேடையில் இருக்கிறீர்கள் இல்லையா? மேலும் எப்பொழுதும் தன்னை பூஜைக்குரிய ஆத்மா என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் பூஜைக்குரிய ஆத்மா என்றால் தூய்மையான ஆத்மா. ஒவ்வொரு கல்பத்திலும் பூஜைக்குரியவர். பூஜைக்குரியவர் என்று புரிந்து கொள்வதினால் எண்ணம் மற்றும் கனவும் எப்பொழுதும் தூய்மையாக இருக்கும். அந்த மாதிரி போதை இருக்கிறதா? பொதுவாக பெரும்பான்மையான சேவாதாரிகள் குமாரிகள். குமாரிகள் இரட்டை குமாரிகள் ஆகி விட்டார்கள். பிரம்மா குமாரியாகவும் ஆகியிருக்கிறார்கள் மற்றும் குமாரியாகவும் இருக்கிறார்கள். அப்படி எவ்வளவு மகானாக ஆகி விட்டீர்கள். குமாரிகளுக்கு இப்பொழுது 84-வது இறுதி ஜென்மத்திலும் பாத பூஜை நடக்கிறது. அந்த அளவு தூய்மையாக ஆகியிருந் நீர்கள். அத நன் இந்த அளவு பூஜை நடக்கிறது. குமாரிகளை ஒருபொழுதும் தலைவணங்க விட மாட்டோம். குமாரிகளின் சரணங்களில் அனைவரும் தலை வணங்குவார்கள். கால் பாதங்களைக் கழுவிக் குடிக்கிறார்கள். அப்படியானால் அவர் எந்த குமாரிகள்?

பிரம்மா குமாரிகள் தான் இல்லையா. அப்படி சேவாதாரிகள் நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள். யாருடைய பூஜை நடந்து கொண்டிருக்கிறது? உங்களுடைய பூஜை தான். பாடலும் இருக்கிறது இல்லையா? ஒவ்வொரு வீட்டிலும் பூஜை நடக்கிறது. பூஜைக்குரியவராக ஆகுறீர்கள். எனவே எங்களுடைய பூஜை நடக்கிறது என்று கூறுங்கள். பாப்தாதாவையும் பாருங்கள், நமஸ்காரம் செய்கிறார் இல்லையா. எனவே அந்த அளவு பூஜைக்குரியவராக இருந்தீர்கள் என்றால் தான் தந்தையும் நமஸ்காரம் செய்கிறார். இதே நினைவு சொரூபத்தில் இருப்பதினால் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். தன்னுடைய மற்றும் சேவையின் அனைத்து தடைகளும் அழிந்து விடும். இந்த நினைவில் அனைவரின் விசேஷங்கள் நிரம்பியிருக்கிறது. நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1.வாழ்க்கையின் அனேக பிரச்சனைகளுக்கான தீர்வு தீர்த்த ஸ்தானத்தின் நினைவு!**

பாக்கியத்தை உருவாக்குபவரின் பூமியில் வந்து சேர்வது என்ற இதுவும் மிகப் பெரிய பாக்கியம். இதுவொன்றும் ஏதோ காலியான ஸ்தானம் இல்லை, மகான் தீர்த்த ஸ்தானம். பக்தி மார்க்கத்தில் பொதுவாக தீர்த்த ஸ்தானத்திற்குச் செல்வதினால் பாவம் அழிந்து விடுகிறது என்று நம்புகிறார்கள், ஆனால் எப்பொழுது ஆகிறது, எப்படி ஆகிறது என்று தெரிந்திருக்கவில்லை. இந்த நேரம் நீங்கள் குழந்தைகள் இந்த மகான் தீர்த்த ஸ்தானத்திற்கு வருவதினால் புண்ணிய ஆத்மா ஆகி விடுகிறோம் என்று அனுபவம் செய்கிறீர்கள். இந்த தீர்த்த ஸ்தானத்தின் நினைவு வாழ்க்கையின் அனேக பிரச்சனைகளிலிருந்து கடந்து செல்ல வைத்து விடுகிறது. இந்த நினைவு கூட ஒரு தாடத்தின் காரியம் செய்கிறது. எப்பொழுதெல்லாம் நினைவு செய்கிறீர்களோ அப்பொழுது இங்கே உள்ளே சூழ்நிலையின் அமைதி மற்றும் சுகம் உங்கள் வாழ்க்கையில் வெளிப்பட்டு விடுகிறது. அப்படி புண்ணிய ஆத்மா ஆகி விட்டீர்கள் இல்லையா? இந்த பூமியில் வருவது கூட பாக்கியத்தின் அடையாளம், எனவே நீங்கள் மிகுந்த பாக்கியம் நிறைந்தவர்கள். இப்பொழுது பாக்கியசாலியாகவோ ஆகி விட்டீர்கள் ஆனால் சௌபாக்கியசாவி ஆவது மற்றும் பதமாபதம் பாக்கியசாலி ஆவது என்பது உங்கள் கையில் இருக்கிறது. தந்தையோ பாக்கியராலி ஆக்கி விட்டார், இதே பாக்கியம் அவ்வப்பொழுது சகயோகம் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஏதாவது விஷயம் என்றால் புத்தியால் மதுபன்னிற்கு வந்து சேர்ந்து விடுங்கள். பிறகு சுகம் மற்றும் சாந்தியின் ஊஞ்சலில் ஆடும் அனுபவம் செய்வீர்கள். நல்லது.

**2. சுயதரிசன சக்கரதாரியின் அடையாளம் -வெற்றி சொரூபம்!** அனைவரும் தன்னை சுயதரிசன சக்கரதாரி என்று நினைக்கிறீர்களா? தந்தைக்கு எவ்வளவு

மகிமை இருக்கிறதோ அதே மகிமையின் சொரூபமாக ஆகியிருக்கிறீர்களா? எப்படி தந்தையின் ஒவ்வொரு காரியத்தையும் சரித்திரத்தின் ரூபத்தில் இன்று வரை மகிமை பாடப்படுகிறது. அதே போல் உங்களுடைய ஒவ்வொரு காரியமும் சரித்திரத்திற்குச் சமமாக நடந்து கொண்டிருக்கிறதா? அந்த மாதிரி சரித்திரவானாக (ஒழுக்கமானவர் ஆகியிருக்கிறீர்களா? எப்பொழுதாவது சாதாரண காரியம் நடப்பதில்லையே? யார் தந்தைக்குச் சமமாக சுயதரிசன சக்கரதாரி ஆகியிருக்கிறார்களோ அவர்கள் மூலம் ஒருபொழுதும் சாதாரண காரியம் நடக்க முடியாது. என்ன காரியம் செய்தாலும் அதில் வெற்றி அடங்கியிருக்கும். வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற இந்த எண்ணமும் எழ முடியாது. வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டது என்ற நிச்சயம் இருக்கும். சுயதரிசன் சக்கரதாரி மாயாவை வென்றவராக இருப்பார். மாயாவை வென்றவராக இருக்கும் காரணத்தினால் வெற்றி அடைபவராக இருப்பார். மேலும் யார் வெற்றி அடைபவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் பதமாபதம்பதியாக இருப்பார். அந்த மாதிரி உங்களை பதமாபதம்பதி என்று அனு வம் செய்கிறீர்களா? 21-ஜென்மங்கள் வரை இருக்கும் அளவிற்கு வருமானத்தை சேமித்து விட்டீர்களா? சூரிய வம்சத்தினர் என்றால் 21-ஜென்மங்களுக்கு சேமிப்பு செய்பவர். எனவே எப்பொழுதும் ஒவ்வொரு விநாடியிலும் சேமித்துக் கொண்டே இருங்கள். நல்லது.

**3. சைத்தன்ய தீபாவளியின் தீபங்களின் கடமை -இருளை ஒளிமயமாக ஆக்குவது!** தன்னை எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் தீபம் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் உலகின் தீபம், அழியாத தீபம் ஆவீர்கள். அதன் ஞாபகார்த்தமாகத் தான் இன்று வரையிலும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அப்படியானால் நான் தீபாவளியின் தீபம் என்ற இந்த நிச்சயம் மற்றும் போதை இருக்கிறதா? இதுவரையிலும் உங்களுடைய மாலையை எவ்வளவு ஜபித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஏன் ஜபிக்கிறார்கள்? ஏனென்றால் இருளை ஒளிமயமாக ஆக்குபவர்களாக ஆகியிருக்கிறீர்கள். தன்னை அந்த மாதிரி எப்பொழுதும் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீபம் என்று அந்த மாதிரி அனுபவம் செய்யுங்கள். அணைந்து அணைந்து எரிபவர் அல்ல. எவ்வளவு தான் புயல் வந்தாலும் ஆனால் எப்பொழுதும் ஒரே சீரான. இடைவிடாது ஜோதிக்கு சமமாக எரிந்து கொண்டிருக்கும் தீபம். அந்த மாதிரி தீபங்களை உலகமும் வணங்குகிறது. மேலும் தந்தையும் அந்த மாதிரி தீபங்களுடன் இருக்கிறார். அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருப்பவர்களுடன் இருப்பதில்லை. தந்தை மாதிரி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதி, அகண்ட ஜோதி, அமர ஜோதி அந்த மாதிரி

குழந்தைகளும் எப்பொழுதும் அமர ஜோதி. அமர ஜோதி ரூபத்திலும் உங்களுடைய நினைவுச்சின்னம் இருக்கிறது. சைத்தன்யத்தில் அமர்ந்து கொண்டே தன்னுடைய அனைத்து ஜட நினைவுச் சின்னங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள். நல்லது.

**வரதானம்: உள்நோக்கு பார்வை உடையவராகி தன்னுடைய நேரம் மற்றும் எண்ணங்களின் சேமிப்பு செய்யும் தடைகளை வென்றவர் ஆகுக!**

ஏதாவது புதிய சக்திசாலியான கண்டுபிடிப்பை செய்கிறார்கள் என்றால் பூமிக்கு அடியில் செய்வார்கள். நீங்களும் எந்தளவு உள்நோக்குப்பார்வை உடையவராக அதாவது பூமிக்கு அடியில் இருப்பீர்களோ அந்த அளவு வாயுமண்டலத்திலிருந்து பாதுகாப்பு ஆகி விடும், சிந்தனை சக்தி அதிகரிக்கும். மேலும் மாயாவின் தடைகளிலிருந்தும் பாதுகாப்பாகி விடுவீர்கள். வெளிமுகமாக வந்தும் உள்நோக்குமுகம், சிரித்த முகம், ஆகர்ஷணம் ஈர்ப்பு செய்பவராக இருங்கள். காரியம் செய்து கொண்டும் இந்த பயிற்சியை செய்தீர்கள் என்றால் நேரம் மிச்சமாகி விடும். மேலும் வெற்றியும் அதிகமாக அனுபவம் செய்வீர்கள்.

**சுலோகன்: நோயைக் கண்டு பயப்படாதீர்கள், அதற்கு மருந்து என்ற பழத்தை உண்ணக் கொடுத்து விடை கொடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 11.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்துவின் (புள்ளியின்) மகத்துவம்!

இன்று அன்புக்கடல் தந்தை தன்னுடைய அன்பிற்குரிய, சினேகமான குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். தந்தை மேல் இருக்கும் அன்பின் காரணமாக தொலைதூரங்களிலிருந்து சந்திக்கும் இடத்திற்கு ஓடி வந்து சேர்ந்து விட்டார்கள். பாப்தாதாவும் அந்த மாதிரி அன்பாக இருக்கும் ஆத்மாக்களின் அன்பிற்கான பிரதிபலனாக அன்பு மற்றும் சகயோகத்தை எப்பொழுதும் அளிக்கிறார், இப்பொழுதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும் கொடுத்துக் கொண்டே இருப்பார்.

அனைத்து ஸ்தானங்களில் இருக்கும் அன்பு நிறைந்த ஆத்மாக்கள் இப்பொழுதும் சூட்சும ஃபரிஷ்தாக் களின் ரூபத்தில் இந்த சந்திப்பு நடக்கும் சபையில் நேரெதிரில் இருக்கிறார்கள். பாப்தாதா இரண்டு சபைகளை பார்க்கிறார். ஒன்று ஸ்தூலமான உடலில் இந்த பூமியில் அமர்ந்திருப்பவர்கள், அடுத்தவர்கள் ஒளிவடிவமான உடலில் இருப்போர். அவர்களுக்கு இந்த பூமியின் அவசியம் இல்லை, பூமியிலிருந்து மேலே ஒளி ரூபத்தில் ஒளி வடிவமான உடலில் இருப்பவர்கள். அந்த மாதிரியானவர்கள் குறைந்த இடங்களில் அதிகமாக தென்படுகிறார்கள். ஆக அந்த மாதிரி இரண்டு சபைகளையும் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

பாப்தாதா குழந்தைகளின் அன்பின் சக்தியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அன்பின் சக்தியின் ஆதாரத்தில் ஒரு நொடியில் எவ்வளவு தான் தூரமான இடத்திலிருந்தும் அருகில் வந்து சேர்ந்து விடுகிறார்கள். எந்த அளவு அன்பின் சக்தி மகானாக இருக்கிறதோ, அந்த அளவே நேரெதிரில் வந்து சேர்வதற்கான வேகமும் மகானாக இருக்கிறது. எத்தனை விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் எதிரில் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இரத்தினத்தின் மகிமையும் மகானாகும். எந்தெந்த மகாரதியை வர்ணனை செய்வது! விளக்கொளியின் மேல் விட்டில் பூச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. அனைத்து குழந்தைகளுக்கும் எப்பொழுதும் சகஜயோகி ஆகுக என்ற வரதானத்தை பாப்தாதா கொடுக்கிறார். ஒரு பிந்தியை

## 1981 அவ்யக்த முரளி

(புள்ளியை மட்டும் நினைவு செய்யுங்கள். மிகவும் எளிதாக இடப்படும் மாத்திரை புள்ளி. பாப்தாதா புள்ளியின் கணக்கைத் தான் கூறுகிறார். நீங்களும் பிந்து ரூபம் ஆகுங்கள், நினைவும் பிந்துவை செய்யுங்கள். மேலும் நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் தெரிந்து, செய்த பிறகு புள்ளி மாத்திரை இட்டு விடுங்கள். ஒரு பிந்துவின் மாத்திரையில் நீங்கள், தந்தை மற்றும் படைப்பு. அனைத்தும் வந்து விடுகிறது. அப்படி தெரிந்து கொள்ள வேண்டியதே எது? 'பிந்து' செய்ய வேண்டியதும் எது? 'பிந்துவை நினைவு செய்வது. இந்த பிந்துவின் மாத்திரையின் மகத்துவத்தை, தெரிந்து நிரந்தர சகஜயோகி ஆக முடியும். எவ்வளவு தான் பெரிய விஸ்தாரமானதாக இருந்தாலும் எல்லாம் அடங்கியிருப்பது ஒரு பிந்துவில் விதை பிந்து, அதில் தான் முழு மரமும் அடங்கியிருக்கிறது. ஆத்மா பிந்து, அதில் தான் 84-ஜென்மங்களின் சம்ஸ்காரம் நிரம்பியிருக்கிறது. 5000-வருடங்களின் நாடகத்தை இப்பொழுது சங்கமயுகத்தின் இறுதி நேரத்தில் முடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நாடகத்தின் சக்கரம் முழுமையானது அதாவது சக்கரத்தில் என்ன நடந்து முடிந்து விட்டதோ அதற்கு முற்றுப்புள்ளி அதாவது பிந்தி இடுங்கள். பிந்தி ஆகி இப்பொழுது வீடு செல்ல வேண்டும். பிந்துவுடன் பிந்து ஆகி செல்ல வேண்டும். வீடும் அனைத்து பிந்துக்களின் வீடு. எண்ணம், காரியம், சம்ஸ்காரம் அனைத்தும் உள்ளடங்கி அதாவது புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. முடிந்தது என்பதின் மாத்திரையே பிந்து, அனைத்து குணங்கள், அனைத்து ஞானத்தின் பொக்கிஷங்களின் கடல். ஆனால் கடலும் பிந்துவாக இருக்கிறார். உறவு மற்றும் தொடர்பிலும் வருகிறீர்கள் என்றால் அனைவரின் நெற்றியில் எது மின்னிக் கொண்டிருக்கிறது. பிந்து. அனைத்து காரியங்களையும் செய்வது எது? பிந்து தான் இல்லையா? பூமியிலிருந்து சந்திரன் வரை சென்றடைந்தாலும் கூட சென்றடைந்தது பிந்து தான் இல்லையா நீங்கள் அமைதியின் சக்தி மூலம் மூன்று உலகங்கள் வரை சென்றடைந்தாலும் கூட, சென்றடைந்தது யார்? பிந்து. அறிவியலின் சக்தி அல்லது அமைதியின் சக்தி, படைக்கும் அல்லது உருவாக்கும் சக்தி மற்றும் நிர்வாணத்தில் (பரந்தாமம்-சரீரத்தைக் கடந்து செல்வதற்கான சக்தி என்றால், பிந்து தான் இல்லையா? விதையிலிருந்து இந்த அளவு மரம் வளர்ச்சியை அடைகிறது ஆனால் வளர்ச்சி அடைந்த பிறகு எதில் சென்று உள்ளடங்குகிறது? விதை அதாவது பிந்துவில். எனவே தொடக்கமும் முடிவுமற்றது மற்றும் அழியாதது பிந்துவே தான் இல்லையா? நீங்களும் மூன்று காலங்களின் ஞானம், மூன்று உலகங்களின் ஞானத்தை பிராப்தியாக அடைகிறீர்கள் ஆனால் பிராப்தி செய்வது யார்? பிந்து தொடக்கத்திலிருந்து இறுதி வரை விதவிதமான பங்கைச் செய்தீர்கள் ஆனால் பங்கைச் செய்பவர் யார்? யார் இந்த கதாபாத்திரத்தைச் செய்தார்? பிந்து இல்லையா? அப்படி அனைத்து மகத்துவமும் பிந்துவிற்குத் தான். மேலும்

## 1981 அவ்யக்த முரளி

பிந்துவைத் தெரிந்து கொள்வது என்றால் அனைத்தையும் தெரிந்து கொள்வது. அனைத்தையும் அடைந்தீர்கள். பிந்து ரூபத்தில் நிலைத்திருந்து எந்த எண்ணத்தை உருவாக்குகிறீர்கள், என்ன பாவனை வைக்கிறீர்கள், என்ன வார்த்தை பேசுகிறீர்கள், என்ன காரியம் செய்கிறீர்களோ. எப்படி பிந்து மகானாக இருக்கிறதோ, அதே போல் அனைத்து விஷயங்களும் மகான் ஆகி விடுகிறது. அதாவது இயல்பாகவே உயர்ந்ததாக ஆகி விடுகிறது.

ஆத்மீக சக்தியும் பிந்து. எது ஸ்தாபனையின் சக்தி மற்றும் விநாஷம் செய்யும் அணு சக்தியும் பிந்து. விநாஷமும் பிந்து மூலம் நடக்கிறது, ஸ்தாபனையும் பிந்து மூலம் நடக்கிறது. சிருஷ்டி சக்கரத்தின் தொடக்கத்திலும் பிந்து ஆகி கீழே இறங்குகிறீர்கள். மேலும் இறுதியிலும் பிந்து ஆகி விடுகிறீர்கள். அப்படி தொடக்கம் மற்றும் இறுதியின் சொரூபமும் பிந்து ஆனது. எவ்வளவு சுலபமாகி விட்டது. ஒரு பிந்துவை நினைவு செய்வது கடினமா என்ன? பள்ளியில் கூட சிறு குழந்தைகள் சுலபமாக பிந்து மாத்திரையை இட முடியும் எங்கேயாவது பென்சிலை வைத்தார்கள் என்றால் பிந்து இடப்பட்டு விடும். இந்த அளவு சுலபமான மாத்திரை நினைவில் இருப்பதில்லையா? இதை விட சுலபமானது வேறு என்ன கூற முடியும் ! இதை விட சுலபமானது வேறு ஏதாவது இருக்கிறதா? பக்தியிலோ மிகப் பெரிய ரூபத்தை நினைவு செய்கிறார்கள். புத்தியின் பாவனை மூலமாக சித்திரத்தை உருவாக்குகிறார்கள், அப்பொழுது பக்தி சித்தி ஆகிறது. இங்கோ ஞானம் மூலமாக எதை மட்டும் எதிரில் வைக்கிறோம்? பிந்து. இந்த பிந்துவின் நினைவு மூலமாக நீங்களே சித்தி சொரூபம் ஆகி விடுகிறீர்கள். அப்படியானால் சுலடமானதாக எது ஆனது? புத்தியில் புள்ளி வைப்பதா அல்லது உருவத்தை வெளிப்படுத்துவதா? எனவே சகஜயோகி ஆகுங்கள். பிந்துவைத் தெரிந்து கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் சகஜம். அப்படி அன்பின் பிரதிபலனாக சுலபமான வழி மூலமாக சகஜயோகி ஆகுக ! அப்படியானால் அனைவரும் சகஜயோகி ஆகி விட்டீர்கள் இல்லையா? விஸ்தாரத்தில் செல்கிறீர்கள் என்றால், கடினத்தில் சென்று விடுகிறீர்கள். ஏனென்றால் விஸ்தாரத்தில் செல்வதினால் கேள்விக்குறி அதிகமாக விழுந்து விடுகிறது. எனவே கேள்விக்குறி எப்படி வளைந்து நெளிந்து இருக்கிறது. அதே போல் என்ன என்ன என்ற கேள்விக்குறியின் வளைந்து நெளிந்த மார்க்கத்தில் சென்று விடுகிறீர்கள். பிந்து ஆகி விஸ்தாரத்தில் சென்றீர்கள் என்றால் சாரம் கிடைத்து விடும். பிந்துவை மறந்து விஸ்காரத்தில் செல்கிறீர்கள் என்றால் காட்டில் சென்று விடுகிறீர்கள். அங்கு எந்த சாரமும் இருப்பதில்லை. பிந்து ரூபத்தில் நிலைத்திருப்பவர் சாரம் நிறைந்த, யோகம் நிறைந்த, யுக்தி நிறைந்த சொரூபத்தின் அனுபவம் செய்வார்கள். அவர்களின் நினைவு பேச்சு மற்றும்

காரியம் எப்பொழுதும் சக்தி நிறைந்ததாக இருக்கும். பிந்து ஆகாமல் விஸ்தாரத்தில் செல்பவர் எப்பொழுதும் ஏன், என்ன என்பதின் வீணான பேச்சு மற்றும் காரியத்தில் நேரம் மற்றும் சக்திகளையும் வீணாக இழப்பார்கள். ஏனென்றால் காட்டிலிருந்து வெளியேற வேண்டியதாக இருக்கிறது. அப்படியானால் எப்பொழுதும் என்ன நினைவில் வைத்துக் கொள்வீர்கள்? ஒரே ஒரு விஷயம் - பிந்து ! சுலபம் தான் இல்லையா? இதில் பாஷையை தெரிந்திருக்கிறீர்களோ அல்லது இல்லையோ, ஆனால் பிந்துவே அனைத்து பாஷைகளிலும் இருக்கிறது. மேலும் வேறு எதையும் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், பிந்து எனும் வார்த்தையையாவது தெரிந்து கொள்வீர்கள் !

என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? பிந்து என்ற வார்த்தை தான் அற்புதம் செய்யும் வார்த்தை. மந்திர சக்தி நிறைந்த வார்த்தை. பிந்து ஆகுங்கள். மேலும் கட்டளை இட்டீர்கள் என்றால் அனைத்தும் தயாராக இருக்கும். எண்ணத்தின் கை தட்டினீர்கள் என்றால், மற்ற அனைவரும் தயார் ஆகி விடுவார்கள் ஆனால் பிந்துவின் கைதட்டலை இயற்கையும் கேட்கும், அனைத்து கர்மேந்திரியங்களும் கேட்கும், மேலும் அனைத்து உடன் இருப்பவர்களும் கேட்பார்கள். பிந்துவாகி கைதட்டத் தெரியுமா? நல்லது.

எப்பொழுதும் அனாதி, அழியாத சொரூபத்தின் ரூபத்தில் நிலைத்திருக்கும், பிந்துவின் மகத்துவத்தை தெரிந்து எப்பொழுதும் மகானாக இருக்கும், பிந்து சொரூபமாகி அனைத்து பொக்கிஷங்களின் சாரத்தை அடையும், சாரம் நிறைந்த யோகம் நிறைந்த ஜீவன்முக்த் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** அனைவரும் ஆன்மீக சேவாதாரிகளா? ஆன்மீக சேவாதாரியின் அர்த்தமே ஆன்மீக பொக்கிஷங்களினால் நிரம்பியவர். அப்பொழுது தான் ஆன்மீக சேவாதாரியாக ஆக முடியும். சேவாதாரி என்றால் கொடுப்பவர். சேவை மூலமாக சுகம் கொடுப்பவர். இதைத் தான் சேவாதாரி என்று கூறுகிறோம். கொடுப்பவர் அவசியம் அவரே நிரம்பியவராக இருப்பார். அப்பொழுது தான் மற்றவர்களுக்கும் கொடுக்க முடியும். அப்படி சேவாதாரி என்றால் மாஸ்டர் சகவள்ளல், மாஸ்டர் அமைதியின் வள்ளல், மாஸ்டர் ஞான வள்ளல். வள்ளல் எப்பொழுதும் நிரம்பியவர்களாக இருப்பார்கள். எப்படி அவர்களே இருப்பார்களோ அதே போல் மற்றவர்களையும் ஆக்குவார்கள். ஒருவேளை தனக்குள் ஏதாவது சக்தியின் குறை இருக்கிறது என்றால் மற்றவர்களையும்

அனைத்து சக்திகளும் நிரம்பியவர்களாக ஆக்க முடியாது. ஆன்மீக சேவாதாரி என்றால் அனைத்து சக்திகளும் நிரம்பியவர். ஆன்மீக சேவாதாரி என்றால், எவரெடி (எப்பொழுதும் தயாராக இருப்பவர்). மேலும் ஆல்ரவுண்ட் (அனைத்து சேவைகளையும் செய்பவர்). ஆல்ரவுண்ட் சேவாதாரி தான் உண்மையான சேவாதாரி. நீங்களும் உண்மையான சேவாதாரிபின் அனைத்து லட்சணங்களை தனக்குள் அனுபவம் செய்கிறீர்களா? யார் நிரம்பியவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார், மேலும் அனைவரையும் திருப்திப் படுத்துவார். எந்தவிதமான பிராப்தியின்மையும் அதிருப்தியை உருவாக்கும். அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன என்றால், எப்பொழுதும் திருப்தி. திருப்தியாக இருப்பது மற்றும் திருட்திப்படுத்துவது என்பதற்கான விதி நிரம்பியவர் மற்றும் வள்ளலாக இருப்பது. இரண்டு விஷயங்களும் வேண்டும். யாராவது சம்பன்னமாக இருந்து ஆனால் வள்ளலாக இல்லாவிட்டாலும் திருப்தி செய்ய முடியாது. எனவே வள்ளலாகவும் இருக்க வேண்டும் மற்றும் நிரம்பியவராகவும் இருக்க வேண்டும்.

நான் விசேஷ ஆத்மா என்ற இந்த குஷியோ அனைவருக்கும் இருக்கிறது தான் இல்லையா? முழு உலகத்தில் எவ்வளவு குறைந்த ஆத்மாக்கள் எப்பொழுதும் தந்தையின் சேவையில் ஈடுபட்டிருக்கும் பொறுப்பாளர் ஆகிறார்கள். அப்படி யார் கோடியில் சிலரோ, அந்த சிலரிலும் சிலரோ அந்த ஆத்மாக்கள் பொறுப்பாளர் ஆகிறார்கள். அதில் என்னுடைய பங்கும் இருக்கிறது மற்றும் என்னுடைய பெயரும் இருக்கிறது என்றால், இது எவ்வளவு பெரிய குஷிக்கான விஷபம், கோடியில் சிலர் அந்த சிலரிலும் சிலர் என்ற இந்த மகிமை என்னுடையது தான் என்ற ஆன்மீக போதை இருக்கிறதா? ஆன்மீகப் போதை எப்பொழுதும் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அந்த அளவே பணிவானவராகவும் ஆக்கும். தேக உணர்வின் போதை இருக்கிறது. என்றால் கர்வத்துடன், அபிமானத்துடன் தன்னை உயர்ந்தவர் என்று நினைப்பார். உண்மையான போதையில் இருப்பவர்கள் எப்பொழுதும் பணிவு நிறைந்தவர்களாக இருப்பார்கள். பணிவின் மூலமாகத் தான் அனைவரையும் தன் எதிரில் தலைவணங்க வைப்பார்கள். சுகம் கொடுப்பவர் பணிவு நிறைந்த ஆத்மாவாக ஆக முடியும். அபிமானம் பணிவு நிறைந்தவராக ஆக விடாது. பணிவு நிறைந்தவராக இல்லை என்றால், சேவை நடக்க முடியாது, அப்படி சேவாதாரியின் விசேஷமே எப்பொழுதும் பணிவு நிறைந்தவர். தான் வளைந்து கொடுப்பவராக இருப்பார். அப்பொழுது தான் மற்றவர்களையும் தலை வணங்க வைக்க முடியும். அப்படி நீங்கள் ஆன்மீக சேவாதாரிகள். ஆன்மீகம் என்ற வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அனைத்து காரியங்களையும் செய்து

கொண்டே அதில் ஆன்மீகம் தென்பட வேண்டும். சாதாரண நிலை இல்லை, ஆன்மீகம் தென்பட வேண்டும்.

திருப்தியான ஆத்மாவிற்குத் தான் சேவாதாரி என்ற பட்டப்பெயர் கிடைக்க முடியும். திருப்தி இல்லை என்றால் சேவையை வாங்குவீர்களா? அப்படி நீங்கள் சேவை வாங்குபவர்களா அல்லது சேவை செய்பவர்களா? ஆன்மீக சேவாதாரி வாங்குபவர்கள் அல்ல, இன்று இது நடந்தது; நேற்று இது நடந்தது...... அந்த மாதிரி விஷயங்களின் பின்னால் நேரத்தை இழந்து சேவையை வாங்குவதில்லையே? இவை அனைத்தும் குழந்தைத் தனமான விஷயங்கள். இப்பொழுது குழந்தைத்தனம் முடிவடைந்தது. இப்பொழுது என்னென்ன வாங்கியிருக்கிறீர்களோ அதற்கான பலனைக் கொடுக்க வேண்டும். இப்பொழுது எந்தவொரு வழக்கு விசாரித்தலும் இருக்கக்கூடாது. பெரியவர்களின் அதிகப்படியான நேரத்தை எடுக்கக்கூடாது, கதை கட்டுரைகள் அனைத்தும் முடிந்தது. ஒருவேளை இதுவரையிலும் சேவை வாங்குபவர்களாக இருக்கிறீர்கள் என்றால், இன்றிலிருந்து அதை முடித்து விடுங்கள். புள்ளி இட்டு விடுங்கள். கடந்தது கடந்ததாகி விட்டது, புள்ளி இடப்பட்டது இல்லையா. அப்படி முடிவின் புள்ளியிட்டு விட்டு செல்லுங்கள். முற்றுப்புள்ளி வைத்து எப்பொழுதும் திருப்தியாக இருங்கள் மற்றும் அனைவரையும் திருப்தி படுத்துங்கள். இந்தப் பாடத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நல்லது.

**நிர்மல் சாந்தா தாதியுடன் சந்திப்பு:** மகான் ஆத்மா என்றால் வெற்றி அடைபவர். அப்படி நீங்கள் எப்பொழுதுமே வெற்றி அடைபவர் தான் இல்லையா? யார் எவ்வளவு லேசாக இருக்கிறாரோ, அந்த அளவே சுலபமாக மற்றும் இயல்பாகவே காரியம் நடந்து விடும். யார் அதிகமாக காரியத்தின் சமையை எடுக்கிறார் என்றால் சுமையின் காரணமாக நிர்ணய சக்தி வேலை செய்வதில்லை. எனவே வெற்றியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. காரியம் செய்வதற்கு முன்பு எப்பொழுதும் டபுள் லைட் (லேசாக இருப்பது, வாயுமண்டலமும் லைட், தானும் லைட் ஆக, உடன் இருப்பவர்கள் அனைவரும் லைட் ஆக இருக்கிறார்கள் என்றால், லைட் ஹவுஸின் காரியம் நடந்தே விடுகிறது ஆனால் எந்தவொரு காரியத்தையும் எப்பொழுது தொடங்குகிறார்களோ அப்பொழுது லட்சியத்தை சரியாக வைக்கிறார்கள். பிறகு இடையில் அந்த லட்சியம் உள்ளடங்கி விடுகிறது. தொடக்கம் சக்திசாலியாக இருக்கிறது, இடையில் சதவிகிதம் குறைந்து விடுகிறது. எப்படி தொடக்கத்தில் திட்டமிடும் நேரத்தில் கவனம் வைக்கிறீர்களோ அப்படி எப்பொழுது நடைமுறை காரியங்களில் பிஸியாகி விடுகிறீர்கள் என்றாலும், கவனம் இருக்க வேண்டும்.

முதல், இடை, கடை ஒரே சமமாக இருக்கிறது என்றால் வெற்றி சுலபமாக கிடைத்து விடும். நல்லது.

இந்த தடவை மேளாவில் அமைதி குண்டத்தை உருவாக்குங்கள் அதன் மூலம் சப்தம் இருந்த போதிலும் இவர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்று அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். உள்உணர்வு மற்றும் அனுபவமே மாறி விட வேண்டும். (பாப்தாதா கல்கத்தாவில் வர வேண்டும்) அவசியம், ஆம் அதை நேரம் காண்பிக்கும். ஏனென்றால், குழந்தைகள் அழைத்து தந்தை வரவில்லை என்பது இருக்கவே முடியாது ஆனால் எந்த முறையில் வருவார் என்று இதைப் பாருங்கள். ஏதாவது புதியது நடக்க வேண்டும் இல்லையா? நல்லது. என்ன செய்வீர்களே அதில் வெற்றி கிடைத்து விடும். ஏனென்றால் உண்மையான உள்ளத்தின் மேல் எஜமானர் (சிவபாபா) எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். இந்த மேளாவும் தந்தையின் தரிசனம் காட்டும் ஸ்தானம் ஆகும். பக்தர்கள் தரிசனம் செய்வார்கள், ஆனால் குழந்தைகளோ சந்திப்பார்கள். நல்லது. இதுவும் தனக்காகவும் மற்றும் அன்னிய ஆத்மாக்களுக்காகவும் ஒரு சாதனம். பிராமணர்களும் ஊக்கம் உற்சாகத்தில் வந்து விடுகிறார்கள் மற்றும் அன்னியர்களுக்கும் சேவை நடந்து விடுகிறது.

சங்கமயுகத்தின் இந்த காலமே உயர்ந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கானது. முழு கல்பத்திற்காக உயர்ந்ததிலும் உயர்ந்த எதிர்காலத்தை இப்பொழுது தான் உருவாக்க முடியும். சங்கமயுகத்தில் தான் தந்தை மூலமாக அனைத்து அதிகாரங்களும் பிராப்தி ஆகின்றன. அப்படி நீங்கள் அதிகாரி ஆத்மாக்கள், சிரேஷ்ட ஆத்மாக்கள், சிரேஷ்ட பிராப்தியை அடைபவர்கள். எப்பொழுதும் இதை நினைவில் வைத்தீர்கள் என்றால். சக்திசாலியானவராகி விடுவீர்கள். சக்திசாலி ஆவதினால் மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள். சக்திசாலியான ஆத்மா விக்ன விநாஷக் ஆக இருப்பார். எண்ணத்தில் கூட விக்னம் (தடை) வர முடியாது. மாஸ்டர் சர்வ சக்திவான் விக்ன விநாஷக் ஆக இருப்பார். நல்லது.

**விடைபெறும் நேரத்தில்:** அனைவருமே அதிகமாக கேட்டிருக்கிறீர்கள், இன்னும் கேட்பதற்கு ஏதாவது மிச்சம் இருக்கிறதா என்ன? ஒரே ஒரு விஷயம் மட்டும் இருக்கிறது, அது என்ன? என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது. இன்னும் என்ன பாக்கி இருக்கிறது ! அனைத்தும் முடிவடைந்து விட்டதா? ஏதாவது இன்னும் பாக்கி இருக்கிறதா? இப்பொழுது ஒரு விஷயத்தை மட்டும் பாப்தாதா பார்க்க விரும்புகிறார். அனைவரும் அலங்காரங்கள் நிறைந்த அலங்கரிக்கப்பட்ட

## 1981 அவ்யக்த முரளி

பிரியதர்ஷினிகள் அதாவது 16-கலை நிரம்பியவர். 16-அலங்காரங்கள் தான் 16 கலைகள். அப்படி அனைவருமே 16-கலை நிரம்பியவர் அதாவது 16-அலங்காரங்கள் செய்யப்பட்டவராக ஆகியிருக்கிறீர்களா? இதுவரையிலும் சிலர் 8-கலைகள், சிலர் 10-கலைகள், சிலர் 11-கலைகள். என்றிருக்கிறார்கள் ஆனால் அனைவரும் 16-கலை நிறைந்தவராக ஆகி விட வேண்டும். அனைவரும் அவர்களின் வரிசை எண் அனுசாரம் 16-கலை நிறைந்தவர்களாக இருப்பார்கள் இல்லையா? சொல்வது, செய்வது மற்றும் நினைப்பது அனைத்தும் சமமாகி விட்டது என்றால், சம்பன்னமானவர் ஆகி விடுவீர்கள். பாப்தாதா இப்பொழுது இதே சொரூபத்தில் அனைவரையும் பார்க்க விரும்புகிறார். இதற்காக அனைவரும் ஏற்பாடுகளைச் செய்கிறார்கள், எண்ணத்தையும் வைக்கிறார்கள், அனைவரின் ஆசையும் இது ஒன்று தான். இன்னும் பாக்கி செய்ய வேண்டியதாக என்ன இருக்கிறது? மேடையில் எப்பொழுது அமர்கிறீர்கள் என்றால், இப்பொழுது அனைவரும் சம்பன்னம் ஆக வேண்டும் என்று தான் கூறுகிறீர்கள். அப்படி அனைவரின் விருப்பமும் அது தான் ! ஆனால் பாக்கி என்ன இருந்து விடுகிறது? ஒருவேளை மற்ற அனைத்து ஆசைகளிலிருந்தும் ஆசையென்றால் என்னவென்றே தெரியாதவர்கள் (இச்சாமாத்ரம் அவித்யா) ஆகி விட்டீர்கள் என்றால், இந்த ஆசை நிறைவேறிவிடும். சின்ன சின்ன மற்ற ஆசைகள் இந்த ஆசையை நிறைவேற விடுவதில்லை. நல்லது.

**வரதானம்: நினைப்பது, சொல்வது மற்றும் செய்வது மூன்றையும் சமமாக ஆக்கும் சர்வோத்தம முயற்சியாளர் ஆகுக!**

அனைத்து அறிவுரைகளின் சரம் எந்தவொரு காரியத்தின் மூலம் பார்ப்பதில், எழுவதில், அமர்வதில், நடப்பதில், தூங்குவதில் பரிஷ்கா நிலை தென்பட வேண்டும், ஒவ்வொரு காரியத்திலும் ஆன்மீகம் இருக்க வேண்டும். எந்தவொரு உலகியல் தன்மையும் செய்யும் காரியத்திலோ மற்றும் சம்ஸ்காரத்திலோ இருக்க வேண்டாம். நினைப்பது, செய்வது, சொல்வது அனைத்தும் சமமாக இருக்கட்டும், இதைச் செய்ய வேண்டாம் என்று நினைக்கவோ செய்தோம், ஆனால் செய்து விட்டோம் என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுது மூன்றுமே ஒரே சமமாக மேலும் தந்தைக்குச் சமமாக இருக்கிறது என்றால் தான் உயர்ந்த மற்றும் சர்வோத்தம முயற்சியாளர் என்று கூறுவோம்.

**சுலோகன்: பொறுப்பை எடுத்துக் கொள்வது என்றால், அதிகப்படியான ஆசீர்வாதங்களுக்கு உரியவர் ஆவது!**

# 13.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியின் ஆதாரம் -அமைதி சக்தி!

இன்று நிர்வாண் நிலை அதாவது சப்தத்திலிருந்து விலகிய அமைதி சொரூப நிலையின் அனுபவம் செய்வித்துக் கொண்டிருக்கின்றனர். ஆத்மாக்கள் உங்களுடைய சுயதர்மம், சுகர்மம், சுயசொரூபம், சுயதேசமே அமைதி தான். சங்கமயுகத்தின் விசேஷ சக்தியும் அமைதி சக்தி. அனைத்து சங்கமயுக ஆத்மாக்கள் உங்களுடைய லட்சியமே இப்பொழுது இனிமையான அமைதியான வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பது தான். இதே அனாதி லட்சணம் அதாவது அமைதி சொரூபமாக இருப்பது மற்றும் அனைவருக்கும் அமைதி கொடுப்பது என்ற இந்த சக்தி தான் உலகிற்குத் தேவையாக இருக்கிறது. அனைத்து பிரச்சனைகளின் தீர்வும் இதே அமைதியின் சக்தியின் மூலம் ஆகிறது. ஏன்? அமைதி என்றால், அமைதி சொரூப ஆத்மா ஏகாந்தவாசியாக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் ஒருமித்த நிலையில் இருக்கிறார். மேலும் ஒருமித்த நிலையின் காரணமாக விசேஷமாக இரண்டு சக்திகள் எப்பொழுதும் பிராப்தி ஆகின்றன. ஒன்று பகுத்தறியும் சக்தி இன்னொன்று நிர்ணயம் செய்யும் சக்தி. விசேஷ இந்த இரண்டு சக்திகள் விவகாரங்கள் மற்றும் பரமாத்ம காரியங்கள் ஆகிய இரண்டின் அனைத்து பிரச்சனைகளுக்குமான சகஜ சாதனமாகும். பரமாத்மாவின் மார்க்கத்தில் விக்ன விநாஷக் ஆவதற்கான சாதனம் -மாயாவைப் பகுத்தறிவது மற்றும் பகுத்தறிந்த பிறகு நிர்ணயம் செய்வது. பகுத்தறியாத காரணத்தினால் தான் விதவிதமான மாயாவின் ரூபங்களை தூரத்திலிருந்து விரட்ட முடிவதில்லை. பரமாத்ம காரியத்தில் இருக்கும் குழந்தைகளின் எதிரில் மாயாவும் ராயல் ஈஸ்வரிய ரூபத்தை எடுத்து வருகிறது. அதை பகுத்தறிவதற்காக ஒருமித்த நிலையில் இருக்கும் சக்தியின் தேவையாக இருக்கிறது. மேலும் ஒருமித்த நிலையின் சக்தி, அமைதி சக்தியிலிருந்து பிராப்தி ஆகிறது.

# 1981 அவ்யக்த முரளி

தற்சமயம் பிராமண ஆத்மாக்களில் அதிவேகத்தில் பரிவர்த்தனை (மாற்றம்) ஆவது குறைவாக இருக்கிறது. ஏனென்றால், மாயாவின் ராயல் ஈஸ்வரிய தங்க முலாம் பூசப்பட்டதை உண்மையான தங்கம் என்று நினைத்து விடுகிறார்கள். அந்தக் காரணத்தினால் மற்றும் பகுத்தறியாத காரணத்தினால் என்ன வார்த்தை கூறுகிறார்கள்? நான் என்ன செய்தேனோ மற்றும் என்ன கூறினேனோ அதை சரியாகத்தான் கூறினேன்.

நான் எதில் தவறாக நடந்திருக்கிறேன் ? அந்த மாதிரி தானே நடந்து கொள்ள வேண்டும். என்று கூறுகிறார்கள். தவறு செய்த போதிலும் தன்னைத் தவறானவர் என்று நினைப்பதில்லை. என்ன காரணம்? பகுத்தறியும் சக்தியின் குறைவு. மாயாவின் ராயல் ரூபத்தை உண்மை என்று நினைத்து விடுகிறார்கள். பகுத்தறியும் சக்தி இல்லாத காரணத்தினால் யதார்த்தமாக நிர்ணயமும் செய்ய முடிவதில்லை. சுயமாற்றம் செய்ய வேண்டுமா அல்லது மற்றவர்கள் மாற வேண்டுமா என்று இதை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. எனவே மாற்றம் அடைவதின் வேகத்தை அதிகரிக்க வேண்டியதிருக்கிறது. நேரம் அதிவேகத்தில் முன்னுக்குச் சென்று கொண்டிருக்கிறது ஆனால் நேரத்திற்குத் தகுந்தாற்போல் பரிவர்த்தனை ஆவது மற்றும் சுயத்தின் உயர்ந்த எண்ணங்கள் மூலம் பரிவர்த்தனை ஆவது என்ற இதன் பிராப்தியின் அனுபவத்தில் இரவுக்கும் பகலுக்குமான வித்தியாசம் இருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் பயணிகளின் வாகனங்களை ஓட்டுகிறார்கள் இல்லையா? ஒன்று தானாக இயங்கத் தொடங்குவது மற்றும் இன்னொன்று தள்ளி விட்டு இயக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இரண்டிலும் வேற்றுமை இருக்கிறது தான் இல்லையா? எனவே நேரத்தின் தள்ளுதல் மூலம் பரிவர்த்தனை ஆவது என்ற இந்த முயற்சி செய்வதின் வண்டியைத் தள்ளி விட்டு இயக்குவது. அமர்ந்து செல்வதாக ஆவதில்லை. அமர்ந்து செல்வதற்காக தள்ளி விட்டு இயக்க வேண்டியதாக உள்ளது. நேரத்தின் ஆதாரத்தில் பரிவர்த்தனை ஆவது என்றால், பங்கின் சிறிதளவு பிராப்தியை மட்டும் அடைவது. எப்படி ஒருவர் முதலாளியாக இருப்பார். இன்னொருவர் கொஞ்சம் சிறிதளவு பங்குதாரராக இருப்பார். அப்படி எங்கே எஜமானத்தன்மையின் அதிகாரி! எங்கே சிறிதளவு அஞ்சலி பெறுபவர்கள்? இதற்கான காரணம் என்ன? அமைதி சக்தியின் அனுபவம் இல்லை. அமைதி சக்தியின் மூலம் பகுத்தறியும் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியின் பிராப்தி ஆகின்ற காரணத்தினால் பரிவர்த்தனை தீவிர கதியில் நடந்து விடுகிறது அப்படி அமைதியின் சக்தி எவ்வளவு மகான் என்று புரிந்து கொண்டீர்களா? அமைதியின் சக்தி கோப அக்னியை சீதளமாக்கி விடுகிறது. அமைதியின் சக்தி வீணான எண்ணங்களின் குழப்பத்தை முடிவு

செய்து விடுகிறது. அமைதியின் சக்தி எப்படிப்பட்ட பழைய சம்ஸ்காரமாக இருந்தாலும் அந்த சம்ஸ்காரத்தையும் அழித்து விடுகிறது. அமைதியின் சக்தி அனேக விதமான மனநோயை சுலபமாக அகற்றி விடுகிறது அமைதி சக்தி, அமைதிக்கடல் தந்தையோடு அனேக் ஆத்மாக்களின் சந்திப்பை செய்வித்து விட முடியும் அமைதியின் சக்தி அனேக ஜென்மங்களாக அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு புகலிடம் கிடைத்து விட்டது என்ற அனுபவத்தை செய்விக்க முடியும். மகான் ஆத்மாவாக, தர்ம ஆத்மாவாக ஆக்கி விடுகிறது. அமைதியின் சக்தி ஒரு நொடியில் மூன்று உலகங்களையும் சுற்றி வரச் செய்ய முடியும். எவ்வளவு மகான் என்று புரிந்ததா? அமைதியின் சக்தி குறைந்த உழைப்பு, குறைந்த செலவில் நிறைந்த பலன் உள்ளவராக ஆக்கி விடுகிறது. அமைதியின் சக்தி ஐயோ ஐயோ என்ற அலரலை ஆஹா ஆஹா என்ற வெற்றி முழக்கமாக செய்விக்க முடியும். அமைதியின் சக்தி எப்பொழுதும் உங்கள் கழுத்தில் வெற்றி மாலையை அணிவிக்கும். அப்படி வெற்றியும் கிடைத்து விட்டது. மாலைகளும் உருவாகி விட்டன. இன்னும் வேறு என்ன பாக்கி இருக்கிறது? அனைத்தும் ஆகி விட்டது இல்லையா? அப்படி நீங்கள் எவ்வளவு மகான் என்று கேட்டீர்களா? மகான் சக்தியை காரியத்தில் மிகக் குறைவாக ஈடுபடுத்துகிறீர்கள்.

வார்த்தைகள் மூலம் எப்படி அம்பு எய்வது என்பது தெரிந்து விட்டது, இப்பொழுது அமைதியின் அம்பை எய்யுங்கள். அதன் மூலம் மணலிலும் கூட பசுமையான பயிரை விளைவிக்க முடியும். எவ்வளவு தான் கடுமையான பாறையாக இருந்தாலும் தண்ணீர் எடுக்க முடியும், தற்சமயம் 'அமைதியின் சக்தி' நடைமுறையில் கொண்டு யை வாருங்கள். மதுபனின் பூமி கூட ஏன் கவர்ந்திழுக்கிறது? அமைதியின் அனுபவம் ஆகிறது இல்லையா? அதே போலவேநாலாபுறங்களிலும் உள்ள சேவை நிலையங்கள் மற்றும் இல்லற ஸ்தானங்களை அமைதி குண்டம் ஆக்குங்கள். அதனால் நாலாபுறங்களிலும் அமைதியின் கிரணங்கள் உலகின் ஆத்மாக்களை அமைதியின் அனுபவத்தின் பக்கம் கவர்ந்திழுக்கும் காந்தம் ஆகி விடும். உங்களுடைய அனைத்து ஸ்தானங்களும் அமைதியை பிராப்தி செய்விக்கும் காந்தம் ஆகி விடும், நீங்கள் செல்ல வேண்டியதாக இருக்காது, சுயம் அவர்களே வருவார்கள். அந்த மாதிரியான நேரமும் வரும் ஆனால் எப்பொழுது அனைவரிலும் அமைதியின் மகான் சக்தி நிரந்தரமாக எண்ணம், சொல் மற்றும் காரியத்தில் இருந்து விடுமோ அப்பொழுது தான் மாஸ்டர் சாந்தி தேவா ஆகி விடுவீர்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

# 1981 அவ்யக்த முரளி

(**இன்று காலை மதுபனில் கர்நாடகா மண்டலத்தை சேர்ந்த ஒரு சகோதரர் திடீரென்று மாரடைப்பு காரணமாக உடலை விட்டு விட்டார். அவருடைய இறுதிச் சடங்கு அபுவிலேயே செய்யப்பட்டது**). இன்று என்ன பாடம் கற்றுக் கொண்டீர்கள்? கர்நாடகாவைச் சேர்ந்த குரூப் எந்த பாடத்தை உறுதியாக்கியிருக்கிறார்கள்? எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பதற்கான பாடத்தை உறுதியாக்கியிருக்கிறீர்களா? எப்பொழுதும் உடல், உடல் சம்மந்தப்பட்ட உறவுகள், பதார்த்தங்கள் மற்றும் சம்ஸ்காரங்கள் அனைத்தின் பெட்டி படுக்கை எப்பொழுதுமே தயாராக இருக்க வேண்டும். படங்களில் கூட உள்ளடக்கும் சக்தியில் என்ன காண்பித்திருக்கிறீர்கள்? பெட்டி படுக்கை கட்டப்பட்டு தயாராக இருக்கிறது. இதைத் தானே காண்பிக்கிறீர்கள் இல்லையா? இதை செய்ய வேண்டியதாக இருந்தது, இந்த மாதிரி ஆக வேண்டியதாக இருந்தது. இன்னும் கொஞ்சம் பாக்கி இருந்தது என்று எண்ணம் கூட வர வேண்டாம். ஒரு நொடியில் தயாராக இருக்க வேண்டும். நேரத்தின் அழைப்பு வந்தது. உடனே எவரெடி அப்படி இந்த பாடத்தை உறுதி செய்தீர்கள் தான் இல்லையா? இதுவும் ஆத்மாவின் பாக்கிய ரேகை போடப்பட்டு விட்டது. பொதுவாக இறுதிச் சடங்கின் நேரத்தில் ஒரு புரோகிதரை அல்லது பிராமணரை அழைப்பார்கள். மேலும் அவரோ பிறப்பால் பிராமணன் என்ற பெயர் உள்ளவர். மேலும் இங்கே எத்தனை பிராமணர்களின் கை பட்டது? மகான் தீர்த்த ஸ்தானம். மிக உயர்ந்த பிராமணன் 'நினைவில் இருப்பவராக ஆகுக' என்பதின் சகயோகம் எவ்வளவு உயர்ந்த பாக்கியமாக ஆகி விட்டது. அப்படி எப்பொழுதும் எவரெடியாக இருப்பதற்கான விசேஷ பாடத்தை அனைவரும் படித்து விட்டீர்கள். அவருடைய மனைவியைப் பார்த்து பாபா கூறினார் என்ன பாடம் படித்தீர்கள்? தன்னுடைய வெற்றி சொரூபத்தை காண்பித்தீர்கள். நீங்கள் தைரியம் நிறைந்தவர். சக்தி ரூபத்தின் சொரூபத்தை பிரத்யக்ஷமாக காண்பித்தீர்கள். நல்லது.

எப்பொழுதும் தன்னுடைய சுய சொரூபம், சுயதர்மம், சிரேஷ்ட கர்மம், சுயதேசத்தின் நினைவு சொரூபம், சாந்தி நிறைந்தவர், எப்பொழுதும் சாந்தியின் சக்தி மூலம் அனைவரையும் சாந்த சொரூபம் ஆக்குபவர், அமைதிக்கடலின் அமைதியின் அலைகளில் எப்பொழுதும் மிதந்து கொண்டே அனேகர்களுக்காக தர்ம ஆத்மா, மகான் ஆத்மாவாக ஆகக்கூடிய அந்த மாதிரி அமைதியின் சக்தி சொரூப உயர்ந்த புண்ணிய ஆத்மா ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) மகாவீர் குழந்தைகளின் வாகனம் -உயர்ந்த நிலை, மற்றும் அலங்காரம்!** அனைத்து சக்திகள் அனைவரும் தன்னை மகாவீர் என்று நினைக்கிறீர்கள் இல்லையா? மகாவீர் என்றால் எப்பொழுதும் ஆயுதம் தரித்தவர். சக்திளையும் மற்றும் பாண்டவர்களையும் எப்பொழுதும் வாகனத்தில் காண்பிப்பார்கள் மேலும் ஆயுதமும் காண்பிக்கிறார்கள் ஆயுதம் என்றால் அலங்காரம் அப்படி வாகனத்தில் இருப்பவரும் மேலும் அலங்காரம் செய்யப்பட்டவராக இருக்கிறீர்கள். வாகனம் உயர்ந்த நிலை மற்றும் அலங்காரம் அனைத்து சக்திகள் அந்த மாதிரி வாகனத்தில் அமர்ந்திருக்கும் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டவர் தான் காட்சி அளிப்பவராக ஆக முடியும். எனவே சாட்சாத் ஆகி அனைவருக்கும் தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும். இது தான் மகாவீர் குழந்தைகள் செய்ய வேண்டிய காரியம். மகாவீர் என்றால் எப்பொழுதும் பறப்பவர். நீங்கள் அனைவரும் பறப்பவர்கள் அதாவது பறக்கும் கலை உள்ளவர்கள் தான் இல்லையா? இப்பொழுது ஏறும் கலையும் முடிவடைந்தது, தாண்டிச் செல்வதும் முடிவடைந்தது, இப்பொழுதோ பறக்க வேண்டும். பறந்தார் மற்றும் சென்றடைந்தார். பறக்கும் கலையில் செல்வதினால் மற்ற அனைத்து விஷயங்களும் கீழே இருந்து விடுகின்றன. கீழே உள்ளவற்றை, சூழ்நிலைகளை, நபர்களைக் கடந்து செல்வதற்கான அவசியமே இல்லை. பறந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் நதி, கால்வாய், மலை, மரங்கள் ஆகிய அனைத்தையும் கடந்து சென்று கொண்டே இருப்பீர்கள். பெரிய மலை கூட பந்து ஆகி விடும். பறக்கும் கலை உள்ளவர்களைப் பொருத்தளவில் சூழ்நிலைகளும் ஒரு விளையாட்டு பொம்மை மேலே சென்றீர்கள் என்றால், இவ்வளவு பெரிய பெரிய தேசங்கள், கிராமங்கள் அனைத்தும் எப்படி தென்படு கின்றன. பொம்மை மாதிரி இருக்கிறது தான் இல்லையா? ஒரு மாடல் மாதிரி இருக்கிறது. அப்படி இங்கேயும் பறக்கும் கலையில் உள்ளவர்களைப் பொருத்தளவில் எந்தவொரு சூழ்நிலை மற்றும் தடை விளையாட்டு மற்றும் பொம்மை ஆகும். எறும்புக்குச் சமமானது எறும்பும் இறந்திருக்கிறது உயிரோடு இல்லை, உயிருள்ள எறும்பு கூட சில நேரம் மகாவீரரை விழத்தட்டி விடும். எனவே எறும்பும் இறந்திருக்கிறது, மலையும் கடுகு மாதிரி இல்லை, பஞ்சுக்குச் இல்லையா? சமமாக இருக்கிறது. அப்படி நீங்கள் மகாவீர் தான்.

**2) மாயாவை வென்றவர் ஆவதின் கூடவே இயற்கையை வென்றவராகவும் ஆகுங்கள்!** எப்பொழுதும் மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவராக இருக்கிறீர்களா? மாயாவை வென்றவராகவோ ஆகிக் கொண்டே இருக்கிறீர்கள் ஆனால் இயற்கையை வென்றவராகவும் ஆகுங்கள். ஏனென்றால்,

## 1981 அவ்யக்த முரளி

இப்பொழுது இயற்கையின் சீற்றமோ மிக அதிகமாக நடக்கும் இல்லையா? அந்த மாதிரியான இயற்கையின் சீற்றத்தில் உறுதியாக இருக்க வேண்டும், அந்த மாதிரி உறுதியானவராக ஆகியிருக்கிறீர்களா? சில நேரம் கடல் நீர் தன்னுடைய பிரபாவத்தைக் காண்பிக்கும், சில நேரம் நிலம் தன்னுடைய பிரபாவத்தைக் காண்பிக்கும் ஒருவேளை இயற்கையை வென்றவராக இருந்தீர்கள் என்றால், இயற்கையின் எந்தவொரு சீற்றமும் தன்னை அசைக்க முடியாது. எப்பொழுதும் பார்வையாளர் ஆகி அனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். எப்படி பரிஷ்தாக்களை எப்பொழுதும் உயர்ந்த மலை மேல் காண்பிக்கிறார்கள். நீங்கள் பரிஷ்தாக்கள் எப்பொழுதும் உயர்ந்த நிலையில் அதாவது உயர்ந்த மலை மேல் இருப்பவர்கள். அந்த மாதிரி உயர்ந்த நிலையில் இருக்கிறீர்களா? எவ்வளவு உயர்வாக இருப்பீர்களோ அந்த அளவு இந்த சீற்றத்தின் குழப்பத்தில் இருந்து இயல்பாகவே விலகி இருப்பீர்கள். இங்கே மலை மேல் வருகிறீர்கள் என்றால், கீழே நடக்கும் குழப்பங்களிலிருந்து இயல்பாகவே விலகி இருப்பீர்கள் இல்லையா? நகரங்களில் எவ்வளவு குழப்பம்! மேலும் இங்கு எவ்வளவு அமைதி! எப்பொழுது ஸ்தூல ஸ்தானத்திலும் வித்தியாசம் இருக்கிறது என்றால் உயர்ந்த நிலை மற்றும் சாதாரண நிலையிலும் எவ்வளவு இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கும்!

**கேள்வி: எந்த அறிமுகம் புத்தியில் தெளிவாக இருக்கிறது என்றால், சக்திசாலியான ஆத்மா ஆகி விடுவீர்கள்?**

பதில்: தன்னுடைய மற்றும் நேரத்தின் அறிமுகம் ஒருவேளை புத்தியில் தெளிவாக இருக்கிறது என்றால், சக்திசாலியான ஆத்மா ஆகி விடுவீர்கள், ஏனென்றால் இந்த சங்கமயுகத்தின் நேரமே உயர்ந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கானது. முழு கல்பத்தின் உயர்ந்ததிலும் உயர்ந்த எதிர்காலத்தை இப்பொழுது தான் உருவாக்க முடியும் சங்கமயுகத்தில் தான் தந்தை மூலமாக அனைத்து அதிகாரங்களும் பிராப்தி ஆகின்றன. அப்படி நீங்கள் அதிகாரி ஆத்மாக்கள், உயர்ந்த ஆத்மாக்கள், உயர்ந்த பிராப்தியை அடைபவர்கள். எப்பொழுதும் இதை நினைவில் வைத்தீர்கள் என்றால், சக்திசாலியானவர் ஆகி விடுவீர்கள். சக்திசாலியானவர் ஆவதினால் மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள். சக்திசாலியான ஆத்மா தடைகளை அழிப்பவராக இருக்கும் எண்ணத்திலும் கூட தடை வர முடியாது. மாஸ்டர் சர்வ சக்திவான் எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக இருப்பார். நல்லது.

**வரதானம்: ஞானத்தின் நுண்ணிய விஷயங்களைக் கேட்டு அவற்றை சொரூபத்தில் கொண்டு வரும் ஞான சொரூப ஆத்மா ஆகுக!**

## 1981 அவ்யக்த முரளி

ஞான சொரூப ஆத்மாக்கள் ஒவ்வொரு விஷயத்தின் சொரூபத்தின் அனுபவம் செய்கிறார்கள் எப்படி கேட்பது பிடித்திருக்கிறது, நுட்பமாகவும் அனுபவம் ஆகிறது ஆனால் கேட்பதின் கூடவே உள்ளடக்குவது அதாவது அதன் சொரூபம் ஆவது என்ற இந்த பயிற்சியும் இருக்க வேண்டும். நான் ஆத்மா உடலற்றவன் என்று அடிக்கடி கேட்கிறீர்கள் ஆனால் உடலற்ற நிலையின் அனுபவி ஆகி கேளுங்கள். எப்படி புள்ளியோ, அதே போல் அனுபவமும் இருக்கட்டும். இதன் மூலம் சுத்த எண்ணங்களின் பொக்கிஷம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். மேலும் புத்தி இதிலேயே பிஸியாக இருந்தது என்றால், வீணான எண்ணங்களிலிருந்து சுலபமாக விலகி விடுவார்.

**சுலோகன்: ஞானம் மற்றும் அனுபவத்தின் இரட்டை அதிகாரி தான் கவலையற்ற ஒன்றுமில்லாத சுற்றி வரும் யோகி!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றி மாலையின் வரிசை எண்ணிற்கான ஆதாரம்!

இன்று பாப்தாதா தன்னுடைய தேடிக் கண்டெடுக்கப்பட்ட உயர்ந்த ஆத்மாக்களை மீண்டும் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இதே நேரத்தில் இதே ரூபத்தில் எத்தனை தடவைகள் சந்தித்திருந்திருக்கிறோம் என்ற நினைவு வருகிறதா? அனேக தடவைகள் சந்தித்ததின் நினைவு தெளிவாக அனுபவத்தில் வருகிறதா? ஞானத்தின் ஆதாரத்தில், சிருஷ்டி சக்கரத்தின் கணக்குப்படி புரிந்து கொள்கிறீர்களா அல்லது அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு தெளிவான அனுபவம் இருக்குமோ அந்த அளவே உயர்ந்த மற்றும் நெருங்கிய ஆத்மாவாக இருப்பீர்கள். தற்சமயத்தின் அனைத்து பிராப்தி நிறைந்த மற்றும் எதிர்காலத்தில் உயர்ந்த பலனடைவதற்குரிய ஆத்மாவாக இருப்பீர்கள். இந்த அனுபவத்தின் ஆதாரத்திலேயே ஆத்மா எனக்கு வெற்றி மாலையில் எந்த வரிசை எண் என்று தன்னைத் தானே தெரிந்து கொள்ள முடியும். தற்சமயம் பாப்தாதாவும் குழந்தைகளின் முயற்சி மற்றும் பிராப்தியின் ஆதாரத்தில் வரிசைக்கிரமமாக நினைவு செய்கிறார். அதாவது, மாலை மற்றும் நினைவுச் சின்ன ரூபத்தில் வெற்றி மாலை அதைத் தான் வைஜெயந்தி மாலை என்று கூறுகிறீர்கள். அப்படி இரண்டு மாலைகளிலும் என்னுடைய வரிசை எண் எது என்பதை தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய வரிசை எண்ணை நீங்களே தெரிந்திருக்கிறீர்களா அல்லது பாப்தாதா கூற வேண்டும் என்று கூறுவீர்களா? பாப்தாதாவோ தெரிந்தே இருக்கிறார், ஆனால் உங்களை நீங்களே அவசியம் தெரிந்திருக்கிறீர்கள். வெளிமுகமாக வர்ணனை செய்தாலும், செய்யாவிட்டாலும் மனதளவிலாவது தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆம் என்று கூறுவீர்களா அல்லது இல்லை என்று கூறுவீர்களா? ஒருவேளை இப்பொழுது பாப்தாதா மாலையை உருவாக்குகிறார் என்றால், தன்னுடைய எண்ணை கொடுக்க முடியாதா என்ன? சங்கோஜப்பட்டு கூறவில்லை என்பது வேறு விஷயம். ஒருவேளை தெரிந்திருக்கவில்லை என்றால் என்னவென்று கூறுவது, மற்றவர்களுக்கு சவால் விடுகிறீர்கள், நிச்சயம் மற்றும் பெருமிதத்தோடு நாங்கள் எங்களுடைய 84 ஜென்மங்களின் வாழ்க்கைக் கதையைத் தெரிந்திருக் கிறோம் என்று கூறுகிறீர்கள். அனைவரும் இதைத் தான்

கூறுகிறீர்கள் இல்லையா. அப்படி B4 ஜென்மத்தில் இந்த நிகழ்கால ஜென்மமோ அனைத்தையும் விட உயர்ந்தது இல்லையா? இதை தெரிந்து கொள்ள முடியாதா? நான் யார்? இந்த கேள்வியை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா?

ஒன்று நினைவின் மாலை. எந்த அளவு அன்பு மற்றும் எவ்வளவு நேரம் நீங்கள் தந்தையை நினைவு செய்கிறீர்களோ அந்த அளவு மேலும் அதே அன்போடு தந்தையும் நினைவு செய்கிறார். எனவே தன்னுடைய வரிசை எண்ணை எடுக்க முடியுமா? ஒருவேளை பாதி நேரம் நினைவு இருக்கிறது மேலும் அன்பும் 50 சதவிகிதம் இருக்கிறது அல்லது 75 சதவிகிதம் இருக்கிறது என்றால், அதன் ஆதாரத்தில் 50 சதவிகிதம் அன்பு மற்றும் பாதி நேரம் நினைவு என்றால் மாலையிலும் பாதி மாலை முடிந்த பிறகே வருவீர்கள். ஒருவேளை நினைவு நிரந்தரமாக இருக்கிறது. சம்பூர்ண அன்பும் இருக்கிறது, தந்தையைத் தவிர வேறு எதுவும் தென்படவில்லை எப்பொழுதும் தந்தை மற்றும் நீங்கள் இணைந்திருக்கிறீர்கள் என்றால், மாலையிலும் இணைந்த இருவருடன் சேர்ந்து நீங்களும் இணைந்திருப்பீர்கள். அதாவது கூடவே இருப்பவர்களாக இருப்பீர்கள். எப்பொழுதும் அனைத்து விஷயங்களில் நம்பர் ஒன் ஆக இருப்பார். அப்படி மாலையிலும் கூட நம்பர் ஒன் ஆக இருப்பார். எப்படி உலகியல் படிப்பில் முதல் டிவிசன், இரண்டாவது. மூன்றாவது இருக்கிறது. அதே போல் இங்கேயும் மகாரதி, குதிரைப்படை மற்றும் காலாட்படை என்று மூன்று பிரிவுகள் உள்ளன.

முதல் பிரிவு -எப்பொழுதும் வேகமாக அதாவது பறக்கும் கலை உள்ளவராக இருப்பார். ஒவ்வொரு விநாடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் தந்தையின் துணை, சகயோகம் மற்றும் அன்பின் அனுபவங்களைச் செய்வார். எப்பொழுதும் தந்தையின் துணை மற்றும் கை மேல் கை இருப்பதை அனுபவம் செய்வார். உதவி செய்யுங்கள் என்று கூறமாட்டார். எப்பொழுதும் தன்னை நிரம்பியவராக அனுபவம் செய்வார்.

இரண்டாவது பிரிவு -ஏறும் கலையின் அனுபவம் செய்வார், ஆனால் பறக்கும் கலை இருக்காது. ஏறும் கலையில் வரும் தடைகளைக் கடந்து செல்வதில் சில நேரம் அதிக நேரமும், சில நேரம் குறைந்த நேரமும் ஈடுபடுத்துவார். பறக்கும் கலை உள்ளவர் மேலே அப்படி கடந்து செல்லும் காரணத்தினால் எந்த தடையும் வரவே இல்லை என்று அப்படி அனுபவம் செய்வார். தடையைத் தடை என்று இல்லாமல் பக்கத்து காட்சிகள் என்றும், சாலை ஓரக்காட்சிகள் என்றும் புரிந்து கொள்வார்கள்.

மேலும் ஏறும் கலை உள்ளவர்கள் நிற்பார்கள். இது தடை என்று உணர்வார்கள். எனவே சிறிதளவு அவ்வப்போது கடந்து செல்வதில் களைப்பையும், மனமுடைந்து போவதையும் அனுபவம் செய்வார்கள்.

மூன்றாவது பிரிவு அதையோ தெரிந்திருப்பீர்கள். நிற்பது. நடப்பது மற்றும் கதறுவது. சில நேரம் நடப்பார்கள், சில நேரம் கதறுவார்கள். நினைவு செய்வதில் கடும் உழைப்பு அவர்களுக்கு தேவைப்படும். ஏனென்றால், எப்பொழுதும் இணைந்திருப்பதில்லை. அனைத்து உறவுகளையும் வைத்து ந்து கொள்வதின் முயற்சி செய்வதிலேயே இருப்பார்கள். முயற்சி செய்வதிலேயே எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்கள் முயற்சியில் இருப்பார்கள், மேலும் அவர்களோ பிராப்தியில் இருப்பார்கள்.

இதிலிருந்து 'என்னுடைய வரிசை எண் எது என்று இப்பொழுது புரிந்து கொள்ளுங்கள். மாலையின் தொடக்கத்தில் இருக்கிறேனா அதாவது முதல் பிரிவில் இருக்கிறேனா அல்லது மாலையின் இடையில் இருக்கிறேனா அதாவது இரண்டாவது பிரிவில் இருக்கிறேனா அல்லது மாலையின் இறுதியில் இருக்கிறேனா அதாவது மூன்றாவது பிரிவில் இருக்கிறேனா? அப்படி நினைவு மற்றும் வெற்றி இரண்டின் ஆதாரத்தினால் தன்னைத் தானே தெரிந்து கொள்ள முடியும். அப்படி தெரிந்து கொள்வது சுலபமா அல்லது கடினமா? எனவே ஒவ்வொருவரின் வரிசை எண்ணை எடுக்கலாமா? எடுக்க முடியும் தான் இல்லையா?

பாப்தாதா எப்பொழுதும் அமிர்தவேளையிலிருந்து குழந்தைகளின் மாலையை நினைவு செய்யத் தொடங்குகிறார். ஒவ்வொரு இரத்தினத்தின் மற்றும் மணியின் விசேஷத்தைப் பார்க்கிறார். எனவே அமிர்தவேளையில் சுலபமாகவே தன்னைத்தானே சோதனை செய்ய முடியும். நினைவின் சக்தி மூலம். சம்மந்தத்தின் சக்தி மூலம், தெளிவாக ஆன்மீக தொலைக்காட்சியில் பாப்தாதா எந்த வரிசை எண்ணில் என்னை நினைவு செய்கிறார் என்று பார்க்க முடியும். அதற்காக புத்தியின் லைன் மிகத் தெளிவாக இருக்க வேண்டும் என்பது முக்கியமான விஷயம். இல்லை என்றால், தெளிவாகப் பார்க்சு முடியாது. நான் யார் என்று புரிந்ததா? நல்லது.

இப்பொழுதோ நேரத்தின் அருகாமையின் காரணமாக தன்னை தந்தைக்குச் சமமாசு அதாவது சமநிலை மூலமாக அருகாமையில் கொண்டு வாருங்கள்.

# 1981 அவ்யக்த முரளி

எண்ணம், சொல், செயல் சம்ஸ்காரம் மற்றும் சேவை அனைத்திலும் தந்தைக்குச் சமம் ஆவது என்றால், அருகில் வருவது. பின்னால் வந்திருப்பவர்களாக இருந்தாலும் முதலில் வந்திருப்பவர்களாக இருந்தாலும் சமநிலை மூலமாக அருகில் வர முடியும். அனைவருக்கும் இப்பொழுது கூட வாய்ப்பு இருக்கிறது. இடங்கள் நிச்சயிக்கப்பட்டு விட்டன என்ற அறிவிப்பு ஒலிக்க வில்லை. எனவே என்ன ஆக விரும்புகிறீர்களோ அதுவாக ஆக முடியும். இப்பொழுது 'கால தாமதம்' என்ற அறிவிப்பு பலகை (போர்டும்) போடப்படவில்லை. எனவே என்ன செய்வீர்கள்? மகாராஷ்டிரம் மற்றும் மத்திய பிரதேசம் இருவர்களும் இருக்கிறார்கள் இல்லையா? மகாராஷ்டிரத்தின் பெயரே 'மகா' என்றிருக்கிறது. எனவே மகானாக ஆகியே விட்டார்கள். மத்திய பிரதேசத்திற்கு என்ன விசேஷம் இருக்கிறது? தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதாவின் சேவையின் தொடக்க காலத்தில் முதல் பார்வை மத்திய பிரதேசத்தின் பக்கம் சென்றது. அதற்காக குழந்தை களையும் அனுப்பி வைத்திருந்தோம். அப்படி சேவையின் சேத்திரத்தில் முதல் பார்வை எப்பொழுது மத்திய பிரதேசத்தின் மேல் சென்றதோ மத்திய பிரதேசத்தின் சேவையின் உடனடி பலனைப் பெறுபவர்களும் முதல் நம்பரில் இருப்பார்கள் இல்லையா? எனவே பாப்தாதாவின் விசேஷமான பார்வை பட்டது. எங்கே பார்வை பட்டதோ அங்கு அவர்கள் நம்பர் ஒன் பார்வையினாலேயே நன்மை அடைந்தவர்கள் ஆகி விட்டார்கள் இல்லையா? எனவே இருவருமே மகான்கள்.

மகாராஷ்டிரத்தில் சாகார பாப்தாதாவின் கால்கள் பதிந்தன. சரித்திர பூமியாகவும் மகாராஷ்டிரத்தை ஆக்கினோம். எனவே மகாராஷ்டிரம் என்ன செய்யும்? மகாராஷ்டிரத்திற்கோ இரண்டு பலன்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கும். என்ன இரண்டு பலன்கள் கொடுப்பீர்கள்? என்ன பலன் கொடுக்க வேண்டும் என்று புத்தியை தொடுகிறதா என்று பார்க்கலாம். ஒருவேளை தொடவில்லை என்றால், மகாராஷ்டிரத்தை விட மத்திய பிரதேசம் முதல் நம்பராக ஆகி விடும்.

ஒன்று வாரிசு மற்றும் அடுத்தது, வி.ஐ.பி-க்கள். வாரிசுகளையும் உருவாக்க வேண்டும் மற்றும் வி.ஐ.பி-க்களையும் உருவாக்க வேண்டும். இது தான் இரட்டை பலன். சில இடங்களில் வி.ஐ.பி.க்களை உருவாக்குகிறார்கள். மேலும் சில இடங்களில் வாரிசுகளை உருவாக்குகிறார்கள் ஆனால் இருவர்களையும் உருவாக்க வேண்டும். வாரிசுகளும், பெயர் பெற்றவர்களாக இருக்க வேண்டும். மேலும் வி.ஐ.பி-க்களும் பெயர் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் யார் நம்பர் ஒன் ஆக ஆவீர்கள்? வெளிநாட்டைச் சேர்ந்தவர்களா, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்களா அல்லது மத்திய பிரதேசத்தைச்

சேர்ந்தவர்களா? யார் ஆவீர்கள்? மற்றவர்களும் ஆக முடியும் ஆனால் இன்றோ இவர்கள் எதிரில் அமர்ந்திருக்கிறார்கள். நல்லது. என்ன கேட்டீர்கள்? யார் முதலில் செய்கிறார்களோ அவர்கள் அர்ஜுனன். இதில் யார் முன்னுக்குச் செல்ல விரும்பினாலும், செல்ல முடியும். இப்பொழுது வரிசை எண் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே நம்பர் ஒன்னாக ஆக யார் விரும்பினாலும் அவர்கள் ஆக முடியும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அதற்கான வழியையும் கூறியிருக்கிறோம் - 'பறக்கும் கலை. ஏறும் கலை அல்ல பறக்கும் கலை. அதற்காக எப்பொழுதும் டபுள் லைட் ஆக இருங்கள். இதையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அனைத்தையும் தெரிந்திருக்கிறீர்கள். இப்பொழுது சொரூபம் மற்றும் அனுபவத்தில் கொண்டு வாருங்கள். நல்லது

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் துணையில் இருப்பவர்களுக்கு, ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயலில் தந்தைக்குச் சமமான அதாவது தந்தையின் நெருங்கிய இரத்தினங்களுக்கு, எப்பொழுதும் சொரூபம் மற்றும் வெற்றி சொரூப, வெற்றி மாலையில் அருகாமையின் இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெளிநாட்டு குழந்தைகளின் சேவைக்கு பாராட்டுக்கள் தெரிவித்துக் கொண்டே -சேவைக்காக இன்னும் சமிக்ஞைகள்:** பாப்தாதா சேவைக்காக ஒருபொழுதும் தடை போடுவதில்லை, மிக அதிகமாக சேவை செய்யுங்கள். யாருக்கெல்லாம் அழைப்பு கொடுக்கலாம். வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்காக சேவைக்கான பாராட்டுக்கள் உரித்தாகுக!. அனைவரும் சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி முன்னேறிக் கொண்டிருக்கும் விசேஷ ஆத்மாக்கள் சேவைக்கான பொறுப்பாளர்கள் ஆகி விடுவார்கள். யாரை விசேஷமான வி.ஐ.பி என்று கூறுகிறோமோ. இப்பொழுது வி.ஐ.பி-க்களை உருவாக்கும் நேரம் வந்து சேர்ந்து விட்டது. எனவே சேவை மூலமாக அவர்கள் இயல்பாகவே உருவாகிக் கொண்டே இருப்பார்கள். அனைவருக்கும் விசேஷமாக ஆன்மீகத்தின் அனுபவம் செய்வியுங்கள். அமைதி. சக்தியின் அனுபவம் செய்வியுங்கள். ஞானமோ மிக அதிகமாக இருக்கிறது ஆனால் ஒரு நொடியின் அனுபவம் தான் அவர்களுக்காக புதுமை. முழு வெளிநாடுகளிலும் பெரும்பான்மை போலியானது, எனவே உண்மையான அமைதி, உண்மையான சுகம், உண்மை சொரூபத்தின் அனுபவம் இல்லவே இல்லை. ஒருவேளை அந்த அனுபவம் ஒரு வினாடிக்காக கூட ஏற்பட்டு விட்டது என்றால் புதுமையை அனுபவம் செய்வார்கள். வெளிநாடுகளில்

பொதுவாகவே எப்பொழுதும் புதிய பொருளை விரும்புவார்கள். எனவே இந்த புதுமையை செய்யுங்கள். வேறு எந்த பெயர் பெற்ற மகாத்மா இந்த அனுபவத்தை செய்விக்க முடியாது. ஆத்மா பரமாத்மா என்ற வார்த்தையையோ கேட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள் ஆனால் தொடர்பை ஏற்படுத்தி அனுபவம் செய்வது என்ற இது புதுமையாகும். இதைத் தான் உண்மையின் அனுபலம் செய்வது என்று சொல்வது. இது தான் வழி ஆகும். அனைத்து சேவை செய்யும் நெருங்கிய இரத்தினங்களுக்கு அவரவர்களின் பெயரையும் சேர்த்து நினைவு உரித்தாகுக. நல்லது.

**குமாரர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** குமாரர்களுக்கு நான் குமார் இல்லை, ஆனால் பிரம்மா குமார் ஆன்மீக சேவாதாரி என்ற நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். சோதாரி என்றால் அவரே சம்பன்ன சொரூபம் ஆகி மற்றவர்களுக்கும் கொடுப்பவர். அப்படியானால் எப்பொழுதும் தன்னை அனைத்து பொக்கிஷங்களாலும் நிரம்பியவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? சேவாதாரி என்று உணர்ந்து சேவை செய்தீர்கள் என்றால் வெற்றி அடைபவர்கள் ஆவீர்கள். சேவையின் விசேஷமே எப்பொழுதும் பணிவாக இருப்பது. கருவி மற்றும் பணிவு. இந்த இரண்டு விசேஷங்களும் சேவையில் வெற்றி சொரூபமானவர்களாக ஆக்குகிறது. குமாரர்கள் சேவையின் களத்தில் முன்னேறிச் செல்பவர்களாக இருப்பார்கள் ஆனால் முன்னேறிச் சென்று கொண்டே நான் ஒரு கருவி மற்றும் பணிவு என்ற விசேஷம் இல்லை என்றால் சேவை செய்வார்கள், கடுமையாக உழைப்பார்கள் ஆனால் வெற்றி குறைவாகத் தென்படும். குமாரர்கள் சேவையிலோ திறமை நிறைந்தவர்கள் தான் இல்லையா? அனைவரும் திட்டமிடும் புத்தி உள்ளவர்கள். எட்டடி சேவைக்களத்தில் அங்கு இங்கு ஓடிச் செய்வதில் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறீர்களோ அதே போல் இந்த இரண்டு விசேஷங்களிலும் திறமை நிறைந்தவர்களாக ஆகுங்கள். விசேஷங்கள் நிறைந்த விசேஷ சேவாதாரி ஆகுங்கள். இல்லையென்றால் தற்காலிகமாக வெற்றி கிடைக்கும் ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு குழப்பத்தில் வந்து விடுவீர்கள். இது என்ன இப்படி ஆயிற்று இது ஏன் இப்படி ஆனது என்ற தடைச் சுவர் வந்து விடும். எனவே இரண்டு விஷயங்களை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் சேவை செய்வதில் வேகமும் முதன்மையும் வந்து விடும். குமாரர்களோ சேவை செய்யவே வேண்டும் ஆனால் மரியாதைகளின் கோட்டிற்கு உள்ளே இருந்து செய்ய வேண்டும், பின்பு பாருங்கள் வெற்றி நிச்சயிக்கப்பட்டது.

# 1981 அவ்யக்த முரளி

குமாரர்களுக்கோ அனைத்து விதமான வாய்ப்பு இருக்கிறது, சேவை செய்வதிலும் வாய்ப்பு, முயற்சி செய்வதில் முன்னேறிச் செல்வதற்காகவும் வாய்ப்பு. மேலும் கூடவே தன்னுடைய பரிவாரத்தை முன்னேற்றுவதற் கான வாய்ப்பு இருக்கிறது. குமாரர்கள் வாழ்க்கை அதிர்ஷ்ட வாழ்க்கை. குமார் என்றால் எப்பொழுதும் சுதந்திர மானவர். எந்தவிதமான பந்தனத்தின் வசமாகாதவர். நீங்கள் அந்த மாதிரி சுதந்திரத்தை அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? தன்னுடைய வீணான எண்ணம் கூட ஒரு பந்தனம். இந்த பந்தனமும் பறக்கும் கலையில் இருந்து கீழே கொண்டு வந்து விடுகிறது. அப்படி பந்தனமற்ற குமார், வீணான எண்ணங்களும் முடிந்தது. பந்தனமற்ற ஆத்மா தான் தீவிர வேகத்தில் செல்ல முடியும். பாப்தாதாவிற்கு குமாரர்கள் தன்னுடைய வாழ்க்கையை எவ்வளவு உயர்ந்ததாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் மேல் பெருமிதம் இருக்கிறது. என்னை மாதிரி பாக்கியம் நிறைந்தவர் வேறு யாரும் இல்லை என்று இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். குமாரர்களுக்கு அவர்களுக்கென்ற பாக்கியம், குமரிகளுக்கு அவர்களுக்கென்ற பாக்கியம் இருக்கிறது. குமாரிகள் சுதந்திரமாகி சேவை செய்ய முடியாது. குமாரர்களோ எங்கேயும் தனியாகச் சென்று சேவை செய்ய முடியும். குமாரர்களுக்கு என்ன பந்தனம் இருக்கிறது. குமாரிகளோ இன்றைய உலகத்தின் கணக்குப்படி இருந்தும் பந்தனத்தில் இருக்கிறார்கள். குமாரர்களோ அனைத்து விதமான சேவைகளையும் செய்ய முடியும்.

குமாரர்கள் டபுள் லைட் ஆனவர்கள். எந்தவிதமான சுமையும் இல்லை. எண்ணங்களின் சுமையும் இல்லை, சம்மந்தம் தொடர்பின் சுமையும் இல்லை. குமாரர்கள் இருப்பதே பந்தனமற்றவர்கள் தான் ஏனென்றால், ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டார்கள். ஞானம் நிறைந்தவர் வீணானதின் பக்கம் ஒருபொழுதும் செல்ல முடியாது. வீணான எண்ணம் கூட ஞானம் நிறைந்தவரின் எதிரில் வர முடியாது. எண்ணத்திலும் சக்தி நிறைந்தவர், காரியத்திலும் சக்தி நிறைந்தவர், நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான். நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று எப்பொழுதும் அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால், குமாரர்களுக்குப் பின்னே மாயா மிகவும் சுற்றி சுற்றி வருகிறது. மாயாவிற்கும் குமார் குமாரிகள் மிகவும் பிடித்தமானவர்கள். எப்படி நீங்கள் தந்தைக்கு மிகவும் பிரியமானவர்கள், அதே போல் மாயாவிற்கும் பிரியமானவர்கள். எனவே மாயாவிடமிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்பொழுதும் தன்னை இணைந்திருப்பவர் என்று புரிந்து கொள்ள வேண்டும், தனியாக இல்லை, என்னுடைய ஜோடி உன் இருக்கிறார். எப்பொழுதும் இணைந்திருக்கிறேன் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் மாயா வர முடியாது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: தற்சமயத்தின் விசேஷ கவனம்-வீணான எண்ணங்களின் முடிவு கட்டுதல்!** அனைவரும் தன்னை சக்திசாலியான ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? சக்திசாலியான ஆத்மாக்கள் என்றால் யாருடைய வீணானதின் கணக்கு முடிவடைந்து விட்டதோ, இல்லை என்றால் பிராமண வாழ்க்கையில் வீணான எண்ணம், வீணான பேச்சு, வீணான காரியத்தில் அதிக நேரத்தை வீணான இழந்து விடுகிறார்கள். எவ்வளவு வருமானத்தை சேமிக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்ய முடிவதில்லை. வீணானதின் கணக்கு சக்தி நிறைந்தவர் ஆக விடுவதில்லை. இப்பொழுது வீணானதின் கணக்கை முடிவு கட்டுங்கள். எப்பொழுது புதிய கணக்கை தொடங்குகிறீர்கள் என்றால் பழைய கணக்கை முடித்து விடுகிறீர்கள் இல்லையா? அப்படி தற்சமயம் வீணான கணக்கை முடிவு கட்டி எப்பொழுதும் சக்தி நிறைந்தவராக இருக்க வேண்டும் என்ற இதே விசேஷ கவனம் வையுங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும் எப்படி யாருக்காவது உடலின் மற்றும் பணத்தின் சக்தி இருக்கிறது என்றால், அவர் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடியும். ஒருவேளை சக்தி இல்லை என்றால் விரும்பினாலும் கூட செய்ய முடியாத கட்டாயத்தில் வந்து விடுவார். அதே போல் மாஸ்டர் சர்வ சக்திவான் நீங்கள் என்ன தான் செய்ய முடியாது. கவனம் மட்டும் வேண்டும். அடிக்கடி கவனம் வேண்டும். அமிர்தவேளையில் கவனம் கொடுத்தீர்கள், இரவில் கொடுத்தீர்கள், பாக்கி இடைப்பட்ட நேரத்தில் அலட்சியமானவராக ஆகி விட்டீர்கள் என்றால், முடிவு எப்படி இருக்கும்? வீணானதின் கணக்கு முடியாது. ஏதாவது பழைய கணக்கு இருந்து விடும். எனவே நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அடிக்கடி இதே கவனம் வையுங்கள். மிக நல்ல முறையில் சோதனை வேண்டும். ஏனென்றால் மாயா இப்பொழுது கூட தன்னுடைய வாய்ப்பை எடுத்துக் கொள்வதற்காக மிகவும் பத்திசாலியாக அமர்ந்திருக்கிறது. அது இறுதியில் மிக அதிக புத்திசாலி ஆகி விடுகிறது. ஏனென்றால் நிரந்தரமாக விடை பெற வேண்டும் இல்லையா? எனவே தன்னுடைய புத்திசாலித்தனத்தையோ காண்பிக்கும் இல்லையா? எனவே எப்பொழுதும் கவனம் வையுங்கள். வகுப்பில் சென்றீர்கள், நினைவில் அமர்ந்தீர்கள். அந்த நேரமோ கவனம் இருக்கிறது ஆனால் அடிக்கடி கவனம் வேண்டும். மேலும் யாருக்கு அடிக்கடி கவனம் இருக்கிறதோ அவருடைய அடையாளம் அனைத்து டென்ஷனிலிருந்தும் விடுபட்டு இருப்பார். செல்லமானவர்களாகவோ இருக்கவே இருக்கிறீர்கள், தந்தையின் குழந்தையாக ஆனீர்கள், உயர்ந்த பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னியது, வேறென்ன வேண்டும்?

அடிக்கடி புத்தி மூலமாக கவனம் வையுங்கள் என்ற இந்த சின்னஞ்சிறு வேலை மட்டும் கொடுத்திருக்கிறோம். நல்லது.

**வரதானம்: சங்கம யுகத்தில் ஒவ்வொரு காரியத்தையும் கலையின் ரூபத்தில் செய்யக்கூடிய 16-கலைகள் நிரம்பியவர் ஆகுக!**

சங்கமயுகம் விசேஷமாக காரியம் என்ற கலையை காண்பிப்பதற்கான யுகம். யாருடைய ஒவ்வொரு காரியமும் கலையின் ரூபத்தில் இருக்கிறதோ அவருடைய ஒவ்வொரு காரியத்தின் மற்றும் குணத்தின் மகிமை ஏற்படுகிறது. 16-கலை நிரம்பியவர் என்றால் ஒவ்வொரு நடத்தையும் சம்பூர்ண கலையின் ரூபத்தில் தென்பட வேண்டும். இது தான் சம்பூர்ண நிலையின் அடையாளம். எப்படி சாகார பாபாவிடம் பேசுவதில், நடப்பதில் அனைத்திலும் விசேஷத்தைப் பார்த்தீர்கள். அப்படி இது கலையாக ஆனது. அமர்வது, எழுவதின் கலை, பார்ப்பதின் கலை நடப்பதின் கலை இருந்தது. அனைத்திலும் தனித்தன்மை மற்றும் விசேஷம் இருந்தது. அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடந்து 16 கலை நிரம்பியவர் ஆகுங்கள்.

**சுலோகன்: யார் உடனே பகுத்தறிந்து முடிவு செய்து விடுகிறாரோ அவர் தான் சக்திசாலியானவர்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 18.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண நிலையின் அருகாமையின் அடையாளம்!

இன்று திலாராம் (இதயத்தில் வீற்றிருக்கும்) தந்தை தன்னுடைய இதய சிம்மாசனதாரி குழந்தைகளுடன் இதயத்திலிருக்கும் விஷயங்களைப் பேசுவதற்காக வந்திருக்கிறார். அனைத்து குழந்தைகளும் திலாராமின் இதயத்தில் எந்தவொரு விஷயம் இருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்கள். திலாராம் தந்தையின் இதயத்தில் எப்பொழுதும் அனைவருக்கும் நிம்மதி கொடுக்கும் அந்த மாதிரி இதயமுள்ள குழந்தைகள் இதயத்தில் இருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளுக்காகத் தந்தையின் இதயத்தில் ஒரே ஒரு விஷயம் தான் இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் விசேஷ ஆத்மா உலகத்திற்கு அதிபதி ஆக வேண்டும். உலகத்தின் இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி ஆக வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஒருவர் இன்னொருவரை விட உயர்ந்த அலங்கரிக்கப்பட்ட, குணம் நிறைந்த, சக்தி நிறைந்த நம்பர் ஒன் ஆகி விடவேண்டும். ஒவ்வொருவரின் விசேஷம் இன்னொருவரை விட அதிகமாக ஈர்க்கக்ககூடியதாக இருக்க வேண்டும். உலகம் அதைப் பார்த்து ஒவ்வொருவரின் மகிமை பாட வேண்டும். ஒவ்வொரு உலகத்தின் ஆத்மாக்களுக்காக லைட் ஹவுஸாகவும் மைட் ஹவுஸாகவும் இருக்க வேண்டும். இந்த பூமியில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நட்சத்திரத்தின் உயர்ந்த காரியம், உயர்ந்த எண்ணம் மூலமாக சேமிப்பாகி இருக்கும் விசேஷங்கள் மற்றும் பொக்கிஷங்கள் அந்த அளவு குறைவு இல்லாமல் இருக்க வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு நட்சத்திரத்தின் விசேஷ உலகம் தென்பட வேண்டும். அதை ஒவ்வொருவரும் பார்த்து பார்த்து தன்னுடைய துக்கத்தை மறந்து சுகத்தை அனுபவம் செய்து மகிழ்ச்சி அடைந்து விட வேண்டும். அனைத்து பிராப்திகளும் நிரம்பிய ஒவ்வொருவரின் ஆன்மீக உலகத்தைப் பார்த்து ஆஹா | ஆஹா | என்ற ஆன்மீகப் பாடல் பாட வேண்டும். இது தான் திலாராம் பாப்தாதாவின் இதயத்திலிருக்கும் விஷயம்.

இப்பொழுது குழந்தைகளின் இதயத்தில் என்ன இருக்கிறது? ஒவ்வொருவரும் அவரவர்களின் இதயத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா?

மற்றவர்களின் இதயத்தையும் தெரிந்திருக்கிறீர்களா? அல்லது தன்னுடையகை மட்டும் தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுது உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்யும் போது தன்னுடைய இதயத்திலிருக்கும் ஊக்கம் உற்சாகம் நிறைந்த விஷயங்களைக் கூறுகிறீர்கள் தான் இல்லையா? அதில் முக்கியமாக என்ன வர்ணனை செய்கிறீர்கள்? என்ன தந்தை கூறுகிறாரோ அதைச் செய்து காண்பிப்டோம் மற்றும் தந்தைக்குச் சமமாக கண்டிப்பாக ஆவோம் என்ற விசேஷ இந்த எண்ணம் தான் அனைவரின் மனதில் இருக்கிறது. அப்படி தந்தையின் இதயத்தில் மற்றும் குழந்தைகளின் இதயத்தில் இருக்கும் விஷயம் ஒன்றே தான், இருந்தும் வரிசைக்கிரமமான முயற்சியாளராக ஏன் இருக்கிறார்? ஏன் அனைவரும் நம்பர் ஒன் ஆக இருக்கவில்லை? அனைவரும் நம்பர் ஒன்னாக ஆக முடியுமா என்ன? அனைவரும் உலகின் இராஜாக்களாக ஆக முடியுமா அல்லது அதுவும் முடியாதா? ஒரே ஒருவர் மட்டும் உலக இராஜா ஆவாரா அல்லது மற்றவர்களும் அவரவர்களுடைய நேரத்தில் உலகின் இராஜா ஆவார்களா? பிறகு ஏன் நாங்கள் உலக இராஜ்யத்தை அடைந்து கொண்டிருக்கிறோம் மற்றும் உலக இராஜ்ய அதிகாரியாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறீர்கள்? இராஜ்யத்தில் வருவோம் அல்லது இராஜ்யம் செய்வோம், சிலர் செய்பவர்களாக மற்றும் சிலர் இராஜ்யத்தில் வருபவர்களாக ஆவீர்களா அல்லது அனைவரும் செய்பவர்களாக ஆவீர்களா? எப்படி? பிரஜைகளோ இன்னும் அதிகம் கிடைத்து விடுவார்கள். அதற்காக கவலைப்படாதீர்கள். இராஜ்யத்தில் வருவதற்கு மட்டும் இந்தளவு கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்களா? இராஜ்யத்தை அடைவதற்காக இன்றி இராஜ்யத்தில் வருவதற்காகவா? அப்படியானால் அனைவரும் இராஜ்யம் செய்வீர்கள் இல்லையா? ஒவ்வொரு ய்வரும் நானோ செய்வேன், மற்றபடி யார் வந்தாலும் பராவிட்டாலும் அது அவர்களுக்குத் தெரியும் என்று ஒவ்வொருவரையும் புரிந்து இருக்கிறார். இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இராஜா ஆவதற்கான யோகா கற்றுக் கொண்டிருக்கிறீர்களா அல்லது இராஜ்யத்தில் வருவதற்கான யோகா கற்றுக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் இராஜயோகி தான் இல்லையா? இராஜ்யத்தில் வரக்கூடிய யோகியாக மட்டும் இல்லை தான் இல்லையா? அந்த மாதிரியே அனைவரும் நம்பர் ஒன் ஆவீர்களா அல்லது வரிசைக்கிரமமாகவே இறுதி வரை இருப்பீர்களா?

ஒவ்வொருவரும் தனது நிலைக்கு ஏற்றபடி, தன்னுடைய கணக்குப்படி நம்பர் ஒன் ஆக ஆவார்கள் இல்லையா என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அவர்களைப் பொருத்தளவில் அது தான் நம்பர் ஒன் கோல்டன் நிலையாக இருக்கும் இல்லையா? அனைத்தையும் விட உயர்ந்த நம்பர் ஒன் நிலை, அந்த கணக்குப்படி

இறுதியில் ஆகியே விடுவீர்கள் இல்லையா? தன்னுடைய கணக்குப்படி சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமாக கண்டிப்பாக ஆவீர்கள் இல்லையா? முழு கல்பத்திற்குள் அந்த ஆத்மாவின் நம்பர் ஒன் உயர்ந்த நிலை அது தான் இருக்கும் இல்லையா? அந்த கணக்குப்படி வரிசைக்கிரமமாக இருந்த போதிலும் நம்பர் ஒன் ஆகியே விடுவார்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களுக்கென்ற சம்பூர்ண நிலை இருக்கிறது. எப்படி பிரம்மாவின் முயற்சி செய்யும் மற்றும் சம்பூர்ண நிலை இரண்டையுமே பார்த்தீர்கள். மேலும் சம்பூர்ண நிலை வரை சென்றடைவதினால் என்னென்ன விசேஷங்கள் அவ்யக்த ரூபத்திலும் தனது வாழ்க்கைப் பங்கில் கொண்டு வருவது என்பதை அனுபவமும் செய்து கொண்டிருக்கிறீர்கள். எப்படி பிரம்மாபாபாவின் சம்பூர்ண நிலை மற்றும் முயற்சி செய்யும் நிலை இரண்டின் வித்தியாசத்தை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதே போல் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் சம்பூர்ண நிலையின் சொரூபம் இருக்கிறது. அதை அப்பக்த வதனத்தில் பாப்தாதா தன் எதிரில் வெளிப்படுத்தி பார்த்துக் கொண்டே இருக்கிறார், மேலும் காண்பிக்கவும் முடியும். அந்த சம்பூர்ண சொரூபத்தைப் பார்த்து ஒவ்வொருவரின் சம்பூர்ண சொருபம் எந்த அளவு ஆன்மீக பொலிவும் ஜொலிப்பும் நிறைந்தது என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது சம்பூர்ண நிலையை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் அவசியம் அடையவும் வேண்டும் ஆனால் சில குழந்தைகளின் சம்பூர்ண நிலை அருகாமையில் இருக்கிறது அதனுடைய அடையாளமாக எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள். அவர் எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண நிலை மற்றும் எதிர்கால பிராப்தி அதாவது ஃபரிஷ்தா சொருபம் மற்றும் தேவ பதவியின் சொருபம் இரண்டுமே எப்பொழுதும் அந்த மாதிரி தெளிவான நிளைவில் இருந்தார். அதனால் அவர் எதிரில் செல்பவரும், முயற்சி செய்யும் சொரூபமாக இருந்த போதிலும் ஃபரிஷ்தா ரூபம். எதிர்கால ஸ்ரீகிருஷ்ணனின் ரூபத்தை பார்த்தார்கள் மற்றும் வர்ணனை செய்தார்கள். அந்த மாதிரி குழந்தைகளிலும் கூட சம்பூர்ண நிலையின் அருகாமையில் வரும் அடையாளமாக அவர்களும் அருகாமையின் அனுபவம் செய்வார்கள், மேலும் மற்றவர்களுக்கும் அனுபவம் ஆகும். இது தான் அருகாமையின் அடையாளம். மேலும் சில குழந்தைகளுக்கு இப்பொழுது சம்பூர்ண நிலை தெளிவாக மற்றும் அருகாமையின் அனுபவம் ஆவதில்லை. அவர்களுடைய அடையாளம் எப்படி இருக்கும்? எது தெளிவானதாக மற்றும் அருகில் இருக்கும் பொருளாக இருக்குமோ அதை அனுபவம் செய்வது சுலபமாக இருக்கும். மேலும் தூரத்திலிருக்கும் பொருளை அனுபவம் செய்வது அதில் விசேஷமாக புத்தியை ஈடுபடுத்த வேண்டியதாக இருக்கிறது. அதே போலவே அந்த மாதிரி ஆத்மாக்களும் ஞானத்தின் ஆதாரத்தினால் புத்தியின்

நினைவு மூலமாக சம்பூர்ண நிலையை ஈர்த்து கடின உழைப்பு மூலமாக அதில் நிலைத்திருக்க முடியும்.

இன்னொரு விஷயம் அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு தெளிவாக மற்றும் அருகாமையில் இல்லாத காரணத்தினால் சில நேரம் ஆகத்தான் வேண்டும் ஆனால் நான் ஆக முடியுமா? என்ற எண்ணமும் மனதில் எழுகிறது. தனக்காக கொஞ்சமாவது வீணான எண்ணத்தின் ரூபத்தில் சந்தேகம் எழுகிறது - இதைத் தான் 'சந்தேகத்தின் ராயல் ரூபம் என்று கூறுவது. சந்தேகம் சிறிதளவு உணர்வுகள் மாதிரி கூட வந்தாலும் கையை விட்டு சென்றது ஆனால் நிச்சய புத்தி உடையவர் வெற்றி அடைவார். அதில் கனவளவிலான எண்ணம், லேசான உணர்வு மாத்திரமான எண்ணமும் இறுதி வரிசை எண்ணிலிருந்து தூரமாக்கி விடும். அவருடைய விசேஷ சுபாவம், சம்ஸ்காரமாக இந்த நேரம் மிகுந்த ஊக்கம் உற்சாகத்துடன் பறப்பவராக இருப்பார், மேலும் அடுத்த நேரம் தன் மீதே மனமுடைந்து போகுபவராக இருப்பார். வாழ்க்கையில் அடிக்கடி இந்த படி இறங்குவது மற்றும் ஏறுவதிலேயே இருப்பார். மனம் குஷியாக இருப்பது மற்றும் மனமுடைந்து போவது என்ற ஏணிப்படி! இதற்கு என்ன காரணம்? தன்னுடைய சம்பூர்ண நிலை தெளிவாக மற்றும் அருகில் இல்லை. எனவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வாருங்கள். எப்படி கொண்டு வருவீர்கள்? அதற்கான விதியைத் தெரிந்தும் இருக்கிறீர்கள். தெரிந்திருக்கிறீர்களா? அதுவோ சிரிப்பூட்டும் விஷயம். பாப்தாதா என்ன பார்க்கிறார்? சில குழந்தைகள், அனைவரும் இல்லை, ஆனால் பெரும்பான்மையோர், என்ன செய்கிறார்கள்? உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் செல்லமானவர்களாக ஆன காரணத்தினால் அதிகமாக செல்லமாகி விடுகிறார்கள். அதிக செல்லமானவர்கள் ஆன காரணத்தினால் மிக மென்மை யானவர்கள் ஆகி விடுகிறார்கள். மென்மையானவர்கள் என்றால் குறும்புத் தனம் தான் செய்வார்கள். என்ன குறும்பு செய்கிறார்கள்? தந்தை கூறிய விஷயங்களை தந்தைக்கே கூறுவதில் ஈடுபட்டு விடுகிறார்கள். நீங்கள் மென்மையானவர் ஆகிறீர்கள். மேலும் எங்களுக்காக நீங்கள் செய்யுங்கள் என்று தந்தையிடமே கூறுகிறீர்கள். சகித்துக் கொள்ளும் சக்தியின் உறுதி குறைவாக இருக்கிறது. சகித்துக் கொள்ளும் சக்தி தான் அனைத்து தடைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கான கவசம், கவசம் அணியாத காரணத்தினால் மென்மையானவர் ஆகி விடுகிறார்கள். நான் செய்ய வேண்டும் என்ற இந்த பாடம் உறுதியற்ற நிலையில் இருந்து விடுகிறது ஆனால் மற்றவர்கள் செய்யட்டும் அல்லது தந்தை செய்யட்டும் என்ற இந்த பாடம் மென்மையானவர் ஆக்கி விடுகிறது. இதே

காரணத்தினால் அலட்சியத்தன்மை என்ற திரைச்சீலை வந்து விடுகிறது. மேலும் சம்பூர்ண நிலை அருகிலும் மற்றும் தெளிவாகவும் தென்படுவதில்லை. எனவே மூன்று உலகங்களில் சுற்றி வருவதற்குப் பதிலாக இதே மனம் குஷியடையும் மற்றும் மனமுடைந்து போகும் விஷயங்களில், இதே உலகத்தில் அல்லது இதே ஏணிப்படியில் ஏறுகிறார்கள். இறங்குகிறார்கள். எனவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கும். செல்லமானவர்களாகவோ நன்றாக ஆகுங்கள் ஆனால் அலட்சியம் நிறைந்த செல்லமானவர்களாக ஆகாதீர்கள். அதனால் என்னவாகி விடும்? தன்னுடைய சம்பூர்ண நிலையை சுலபமாக அடைய முடியும். முதலிலோ தன்னுடைய சம்பூர்ண நிலையை, தனக்கு வரனாகப் பெற வேண்டும் அதாவது எப்பொழுதும் ஊக்கம் உற்சாகம் என்ற வரமாலையை அணிய வேண்டும். அப்பொழுது தான் பின்பு லட்சுமியை வரனாக அல்லது நாராயணனை வரனாக அடைவீர்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? உங்கள் அனைவருடைய சம்பூர்ண நிலை முயற்சி செய்து கொண்டிருக்கும் உங்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறது. எப்பொழுது நீங்கள் அனைவரும் சம்பூர்ண நிலையை அடை வீர்களோ அப்பொழுது தான் சம்பூர்ண பிரம்மா மற்றும் பிராமணர் நீங்களும் கூடவே பிரம்ம தத்துவ வீட்டிற்குச் செல்ல முடியும். பிறகு இராஜ்ய அதிகாரியாக ஆக முடியும். நல்லது.

அந்த மாதிரி சம்பூர்ண நிலையின் அருகில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, பிரம்மாபாபாவுடன் சம்பூர்ண நிலையை வரமாகப் பெறக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண நிலையின் அனுபவம் மூலமாக மற்றவர்களுக்கும் சம்பூர்ணம் ஆவதற்கான பிரேரணை கொடுக்கக்கூடிய, ஒவ்வொருவருக்கும் தன்னுடைய தெளிவுத்தன்மை மூலமாக கண்ணாடி ஆகி. சம்பூர்ண நிலையை தெளிவாகக் காண்பிக்கக்கூடிய எப்பொழுதும் மனம் குஷியுடன் இருக்கும், அந்த மாதிரி குஷி நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** நீங்கள் தந்தைக்குச் சமமான ஆன்மீக சேவாதாரிகள்.. அப்படி சேவாதாரிகளுக்கு எந்த பரிசு வேண்டும்? எப்பொழுது சமமானவர்கள் சந்திக்கும்போது பரிசு கொடுப்பார்கள் இல்லையா? அப்படி சேவாதாரி என்றாலே தந்தைக்குச் சமமானவர். தந்தை என்ன பரிசு கொடுப்பார்? அல்லது நீங்கள் கொடுப்பீர்களா? ஞானத்தையோ அதிகமாக கேட்டிருக்கிறீர்கள், முரளியும் கேட்டு விட்டீர்கள். இப்பொழுது வேறு என்ன மிச்சம் இருக்கிறது? சேவாதாரி பாப்தாதாவின் மிக நெருக்கமான ஆத்மாக்கள், நெருக்கமான ஆத்மாக்களுக்கு

## 1981 அவ்யக்த முரளி

பாப்தாதா எந்த பரிசு கொடுப்டார்' சேவாதாரிகளுக்கு இன்று பாப்தாதா விசேஷமாக ஒரு பொன்னான மகாவாக்கியங்களின் பரிசு கொடுக்கிறார். அது என்ன? 'எப்பொழுதும் ஒவ்வொரு நாளும் சுய உற்சாகம் மற்றும் அனைவருக்கும் உற்சாகம் கொடுக்கக்கூடிய உற்சவத்தைக் கொண்டாடுங்கள். இது தான் சேவாதாரிகளுக்காக அன்பின் பரிசாகும். இதே பரிசை பின்பு முரளியில் தெளிவுபடுத்துவோம் ஆனால் பரிசோ சிறியதாக நல்லதாக இருக்கும். இன்று முரளி கூறமாட்பேம் ஆனால் சார ரூடத்தில் உற்சாகத்தில் இருப்பதற்கும் மற்றும் உற்சாகம் ஊட்டுவதற்குமான உற்சவத்தைக் கொண்டாடுங்கள் என்று கூறுகிறோம். இதனால் என்னவாகும்? கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கிறது இல்லையா அது முடிவடைந்து விடும். சம்ஸ்காரத்தை ஒத்துப் போக வைக்கும், சம்ஸ்காரத்தை அகற்றும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள், எப்பொழுதாவது, ஏதாவது விசேஷ உற்சவத்தைக் கொண்டாடுகிறீர்கள் என்றால், அதில் உடலின் நோய், பணத்தின் குறைவு, உறவு தொடர்பின் அனைத்தின் பிரச்சனைகளும் மறந்து விடுகிறது. அதே போல் ஒருவேளை இந்த உற்சவத்தை எப்பொழுதும் கொண்படினீர்கள் என்றால் அனைத்து பிரச்சனைகளும் முடிவடைந்து விடும். பின்பு நேரமும் கொடுக்க வேண்டியது இருக்காது, சக்திகளையும் ஈடுபடுத்த வேண்டியதிருக்காது. அனைவரும் ஃபரிஷ்தா ஆகி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள். ஃபரிஷ்தாக்களின் கால்கள் தரையில் படுவதில்லை என்ற பழமொழியும் இருக்கிறது. யார் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார்களோ அவரைப் பற்றி இவர் பறந்து கொண்டே இருக்கிறார். இவருடைய கால்கள் தரையில் இல்லை என்று கூறுவீர்கள். அப்படி அனைவரும் பறக்கக்கூடிய ஃபரிஷ்தாக்கள் ஆகி விடுவீர்கள். எனவே ஆன்மீக சேவாதாரிகள் இப்பொழுது இந்த சேவை செய்யுங்கள். பாடம் எடுப்பது எடுக்க வைப்பது, கண்காட்சிகள் வைப்பது மற்றும் வைக்கச் செய்வது, மாநாடுகள் செய்வது மற்றும் செய்விப்பது என்று இந்த மாதிரி கடுமையாக உழைத்திருக்கிறீர்கள். இப்பொழுது இந்த கடும் உழைப்பை சுலபமாக்குவதற்கான சாதனம் இது தான் (மேலே என்ன கூறினோமோ). இதன் மூலம் வீட்டில் அமர்ந்து கொண்டே எப்படி விளக்கொளி மேல் விட்டில் பூச்சிகள் அவைகளாகவே ஓடி வந்து விழுகின்றனவோ அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். கடைசியிலும் இந்த கடும் உழைப்பை எது வரை செய்து கொண்டே இருப்பீர்கள். இந்த வழியும் இருக்கிறது என்றால், பரிவர்த்தனை ஆவார்கள் இல்லையா? அப்படி குறைந்த செலவில் மிகுந்த பலன் மற்றும் குறைந்த உழைப்பு, வெற்றி அதிகம் என்பதற்கான சாதனம் இந்த பரிசு பிறகு நீங்கள் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் செய்ய வேண்டியதிருக்காது ஆனால் நிகழ்ச்சிகள் செய்பவர்களாக பலர் பொறுப்பாளர் ஆகி விடுவார்கள்.

அவர்களே உங்களுக்கு அழைப்பு கொடுத்து அழைப்பார்கள். நீங்கள் இப்பொழுது அனைத்து தீதி, தாதிகளை திறப்பு விழாவிற்காக அழைக்கிறீர்கள். பிறகு நீங்களும் தீதி, தாதிகள் ஆகி விடுவீர்கள், திறப்பு விழா செய்யும் காட்சியளிக்கும் மூர்த்தியாக ஆகி விடுவீர்கள். அப்படி இது நல்லது தான் இல்லையா? இதுவரையிலும் கூட பந்தல் போடுங்கள், வழிகாட்டிகளை அழையுங்கள், போடுபவர்களை அழையுங்கள் ... என்ற இந்த உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. நல்லது -இப்பொழுது பரிசு கிடைத்து விட்டது தான் இல்லையா? இப்பொழுது என்ன கொடுப்பீர்கள்? இப்பொழுது 'ஒருபொழுதும் உற்சாகத்தைக் குறைக்க மாட்டோம் மற்றும் மற்றவர்களின் உற்சாகத்தையும் குறைய விட மாட்டோம்' என்ற இந்த எண்ணத்தை வையுங்கள், இதுவே கொடுப்பது ஆனது. என்ன ஆனாலும் சரி, எப்படி ஸ்தூல விரதங்களை கடைப்பிடிக்கிறார்கள், அதிலேயும் பசி மற்றும் தாகம் ஏற்படும் ஆனால் ஏற்பட்ட போதிலும் விரதத்தை விட மாட்டார்கள். மூர்ச்சையாகி விழுந்தாலும் கூட விரதத்தை விட மாட்டார்கள். அதே போல் நீங்களும் எந்தவொரு பிரச்சனை வந்தாலும், யாராவது உற்சாகத்தை அகற்றுபவர் வந்து விட்டாலும், உற்சாகத்தை இழக்க மாட்டோம், மேலும் மற்றவர்களின் உற்சாகத்தையும் குறைக்க மாட்டோம் என்ற விரதத்தை எடுங்கள். அதிகரிப்போம் மற்றும் அதிகரிக்க வைப்போம். பிறகு எப்பொழுதுமே உற்சவம் இருக்கும், எப்பொழுதும் மகாநாடு இருக்கும், எப்பொழுதும் விழாக்கள் இருக்கும், எப்பொழுதும் அகில உலக மாநாடுகள் நடக்கும். நல்லது. கிடைத்ததும் பரிசு அதை பெற்றும் கொண்டீர்கள். வேறு என்ன வேண்டும். நல்லது.

**தனிப்பட்ட சந்திப்பு -பார்ட்டிகளுடன்: 1) தற்போதைய நேரத்திற்காக விசேஷ கவனம் -வீணான எண்ணங்களுக்கு முடிவு கட்டுதல்!** எல்லோரும் தன்னை சக்திசாலியான ஆத்மா என புரிந்து கொண்டுள்ளீர்களா? சக்திசாலியான ஆத்மா என்றால் வீணான கணக்கை முடித்தவர். இல்லையேல் பிராமண வாழ்வில் வீண் எண்ணம், வீண் பேச்சு, வீண் செயல் நிறைய நேரத்தை இழக்கச் செய்கிறது. எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்ய முடிவதில்லை. வீணானவற்றின் கணக்கு சக்திசாலியாக விடுவதில்லை. இப்போது வீணானவற்றின் கணக்கை முடித்து விடுங்கள். எப்போது புதிய வீடு கட்டுகிறீர்கள் எனில் பழையதை இடித்து விடுகிறீர்கள் தானே. எனவே தற்போது இதன மீது விசேஷ கவனம் செலுத்துங்கள், வீணானதை முடித்து விட்டு சதா சக்திசாலியாக இருங்கள். விரும்பியதைச் செய்யக்கூடியவரே மாஸ்டர் சர்வ சக்திவான்! எப்படி யாரிடமாவது உடலின் அல்லது செல்வத்தின் சக்தி இருந்தது எனில் அவரால் விரும்பியதைச் செய்ய முடியுமல்லவா; ஒருவேளை சக்தி இல்லையேல்

விரும்பினாலும் அது ஒரு கட்டாயமாக ஆகி விடுகிறது அல்லவா. மாஸ்டர் சர்வ சக்திவான் உங்களால் செய்ய முடியாதது என ஏதாவது உள்ளதா? தேவை கவனம் மட்டுமே! அடிக்கடி கவனம் தேவை! அமிர்த வேளை கவனம் கொடுத்தீர்கள், இரவு கொடுத்தீர்கள் மற்றும் மதியம் அலட்சியம் வந்து விட்டது எனில் விளைவு என்ன ஆகும்? வீணானதின் கணக்கு முடிவுக்கு வராது. ஏதாவது பழைய கணக்கு இருந்து விடும். எனவே நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதன் மீது அடிக்கடி கவனம் வைக்க வேண்டும். நல்ல விதமாக சோதனை செய்ய வேண்டும். ஏனெனில் மாயா இப்போதும்கூட தனது சந்தர்பத்தை எடுத்துக் கொள்ள புத்திசாலியாக காத்துக் கொண்டிருக்கிறது. அது இறுதியில் அதி புத்திசாலியாகி விடுகிறது ஏனெனில் சதா காலத்திற்கும் பிரியாவிடை பெறுவதற்காக, எனில் அது தனது சாமர்த்தியத்தைக் காட்டும்தானே. எனவே சதா கவனம் வையுங்கள். வகுப்பிற்குச் சென்றீர்கள் எனில் நினைவில் அமர்ந்து விடுவதால் அச்சமயம் கவனம் உள்ளது ஆனால் அடிக்கடி கவனம்! யாருக்கு அடிக்கடி கவனம் (அடென்ஷன்) உள்ளதோ அதன் அடையாளம் -எல்லா 'டென்ஷன்'ல் இருந்தும் தூரமாகி விடுவார். செல்லமானவராகி விட்டீர்கள், தந்தையுடையவராகி விட்டீர்கள், சிரேஷ்ட பாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலிக்கிறது மற்றும் இன்னும் என்ன வேண்டும். இந்த ஒரு சின்ன வேலையைத்தான தருகிறார் -அடிக்கடி புத்தி மூலம் கவனம் வையுங்கள். நல்லது.

**2) மாயாஜீத் ஆவதுடன் கூடவே பிரக்ருதிஜீத் ஆகுங்கள்!** சதா மாயாஜீத், பிரக்ருதிஜீத் ஆக இருக்கிறீர்களா? மாயாஜீத் ஆக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் பிரக்ருதிஜீத் ஆக வேண்டும் ஏனெனில் இப்போது இயற்கையின் குழப்பங்கள் அதிகம் ஏற்படுகின்றது தானே. குழப்பத்தில் ஆடாமல் இருக்க வேண்டும், இப்படி ஆடாவதரதாக ஆகி விட்டீர்களா? எப்போதாவது கடலின் நீர் அதனுடைய பிரபாவத்தைக் காட்டுகிறது எனில் பூமியும் தனது பிரபாவத்தைக் காட்டும். ஒரு வேளை பிரக்ருதிஜீத் ஆனீர்கள் எனில் இயற்கையின் எந்த ஒரு குழப்பமும் உங்களை அசைக்க முடியுயாது. சதா சாட்சியாகி எல்லா விளையாட்டையும் பார்த்துக் கொண்டு இருப்பீர்கள். எப்படி பரிஷ்தாக்களை சதா உயரமான மலை மீது காட்டுகிறார்கள், எனில் பரிஷ்தாக்கள் நீங்கள் சதா உயர்ந்த மேடையில், அதாவது உயர்ந்த மலை மீது இருப்பவர்கள். இத்தகைய உயர்ந்த மேடை மீது இருக்கிறீர்களா? எந்தளவு உயரத்தில் இருப்பீர்களோ அந்தளவு குழப்பங்களிலிருந்து தானாகவே விலகி இருப்பீர்கள். இப்போது பாருங்கள், இங்குள்ள மலை மீது செல்கிறீர்கள் என்றால் கீழே நடக்கும் குழப்பத்திலிருந்து தானாகவே விலகி இருக்கிறீர்கள் அல்லவா! ஊருக்குள் எவ்வளவு குழப்பம் மேலும்

இங்கு எவ்வளவு அமைதி மற்றும் சாதாரண நிலையிலும் இரவு பகலுக்கான வித்தியாசம் எவ்வளவு உள்ளது. நல்லது.

**வரதானம்: குஷியின் கூடவே சக்தியை தாரணை செய்து தடைகளைக் கடந்து செல்லக்கூடிய தடைகளை வென்றவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் சேமிப்பு செய்யத் தெரிந்திருக்கிறார்களோ அவர்கள் சக்திசாலியாக ஆகிறார்கள். ஒருவேளை இந்த நேரம் சம்பாதித்தார்கள், இந்த நேரமே கொடுத்தார்கள், தனக்குள் நிரப்பவில்லை என்றால், சக்தி இருக்காது. கொடுப்பதற்கும் தானம் செய்வதற்கான குஷி மட்டும் இருக்கும். குஷியின் கூடவே சக்தி இருந்தது என்றால், சலலபமாகவே தடைகளைக் கடந்து தடைகளை வென்றவர் ஆகி விடுவார்கள். பிறகு எந்தவொரு தடையும் முழு ஈடுபாட்டை தொந்தரவு செய்யாது. எனவே எப்படி முகம் மூலம் குஷியின் பொலிவு தென்படுகிறது, அதே போன்று சக்தியின் பொலிவும் தென்பட வேண்டும்.

**சுலோகன்: பிரச்சனைகளைக் கண்டு பயப்படுவதற்குப் பதிலாக அவற்றை ஆசிரியர் என்று புரிந்து கொண்டு, பாடம் கற்றுக் கொள்ளுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 21.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள்!

நிரந்தர சகயோகி நிரந்தர குழந்தைகளின் துணைவனான பாப்தாதா தன்னுடைய சகயோகி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு சூட்சும வதனத்தின் பாப்தாதாவின் ரமணீகரமான விஷயத்தைக் கூறுகிறார். நீங்கள் அனைவரும் கூட ஆன்மீக ரமணீகரமானவர்கள் தான் இல்லையா? அந்த மாதிரி குழந்தைகளுக்கு தந்தையும் ரமணீகரமான விஷயத்தைக் கூறுகிறார். இன்று சூட்சும வதனத்தில் பாப்தாதாவின் எதிரில் ஒரு பெரிய அழகான ஆன்மீக பெரிய அழகான ஆன்மீக அர்த்தம் நிறைந்த மரம் வெளிப்பட்டது. மரம் மிக அழகாக இருந்தது. மேலும் மரத்தில் அனேக கிளைகள் இருந்தன. சில கிளைகள் சிறியதாகவும், சில பெரியதாகவும், சில பருமனாகவும், சில மெல்லியதாகவும் இருந்தன ஆனால் அந்த ஆன்மீக மரத்தின் மேல் பல வகையான வண்ணங்களில் மிக அழகான பறவைகள் இருந்தன. ஒவ்வொன்றும் அவரவர்களின் கிளையில் அமர்ந்திருந்தார்கள். பறவைகளின் காரணமாக மரம் மிக அழகாகத் தென்பட்டது. சில பறவைகள் பறந்து வந்து பாப்தாதாவின் விரலிலும் வந்து அமர்ந்தன. சில தோளிலும் வந்து அமர்ந்தன. மேலும் சில முன்னும் பின்னும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன சில பறவைகள் கிளையில் அமர்ந்து கொண்டே, தூரத்திலிருந்தே கண்களால் சந்திப்பு செய்து கொண்டு மிகவும் குஷியாகவும் இருந்தார்கள் ஆனால் இன்னொரு வகையானவை, பறவைகளின் சந்திப்பின் காட்சியை பார்த்தே குஷியாக இருந்தார்கள். அவர்களே அருகில் வரவில்லை. அந்த மாதிரி காட்சியைப் பார்த்து பிரம்மாபாபா புன்முறுவலிட்டுக் கொண்டே, கை தட்டி அந்த மாதிரி பறவைகளை அழைக்க ஆரம்பித்தார். வா குழந்தைகளே. வா குழந்தைகளே என்று கூறி மிக இனிமையாக அழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். இருந்தும் பறவைகள் வரவில்லை. இறக்கைகளும் இருந்தன. இறக்கைகளை அசைத்துக் கொண்டும் இருந்தார்கள் ஆனால் தன்னுடைய கால்களினாலேயே அந்த மாதிரி உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக பறந்து அருகில் வர முடியாமல் இருந்தார்கள். பிறகு என்ன ஆனது? விரும்பியும் பறக்க முடியவில்லை. 'பாபா - பாபா' என்று கூறி மிக அன்போடு அழைக்கத் தொடங்கினார்கள், பேசத்

தொடங்கினார்கள். என்ன கூறியிருந்திருப்பார்கள்? பறக்க வையுங்கள், பறக்க வையுங்கள் என்று கூறத் தொடங்கினார்கள். அல்லது விடுவியுங்கள், என்று கூறத் தொடங்கினார்கள். அதற்கு பாப்தாதா கூறினார் விடுவியுங்கள் என்று விடுவியுங்கள், விடுவியுங்கள் என்றில்லை, ஆனால் விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள் ஆனால் அந்தப் பறவைகளில் சில சாதுர்யமானவர்களாக இருந்தார்கள். சிலர் பலஹீனமானவர்களாக இருந்தார்கள். அவர்கள் கிளையை விடவும் விரும்பவில்லை. மேலும் தந்தையின் துணையையும் பெற விரும்பினார்கள். இரண்டு விஷயங்களையும் சேர்த்தே விரும்பினார்கள். இது தான் சாதுர்யமான பறவைகளாக இருந்தவை. மேலும் பலஹீனமான மற்றும் வெகுளியான பறவைகள் விட விரும்பினார்கள், ஆனால் விடுபடுவதற்கான வழி தெரியவில்லை. மேலும் வெகுளியான பறவைகளுக்கு தன்னுடைய வெகுளித்தன்மையை இதை விடத் தான் வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளவில்லை. அந்த மாதிரி பறவைகளை பார்த்து பாப்தாதா விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள் என்று அடிக்கடி இதைத் தான் கூறினார் ஆனால் அவைகள் தாங்கள் கூறியதையே கூறிக் கொண்டிருந்தார்கள். பாப்தாதா அதற்கான வழியையும் கூறினார் ஆனால் கொஞ்சம் அந்த கிளையை விட்டு விட்டு பிறகு அதை மீண்டும் பிடித்துக் கொண்டார்கள். எனவே அழைத்துக் கொண்டே இருந்தார்கள். சொல்லிக் கொண்டே இருந்தார்கள் ஆனால் பறக்கும் பறவையாகி தந்தையுடன் நெருங்கிய சம்மந்தத்தின் அனுபவத்தையும் மேலும் உலகைச் சுற்றி வரும் அதாவது எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் சுற்றி வருதலின் அனுபவத்தை செய்ய முடியாமல் இருந்தார்கள்.

இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் தன்னிடம் நான் எங்கே இருந்தேன் என்று கேளுங்கள். கிளையில் இருந்தேனா அல்லது தந்தையின் தோளில் இருந்தேனா? அல்லது விரலில் நடனமாடிக் கொண்டிருந்தேனா? அல்லது அக்கம் பக்கத்தில் சுற்றிக் கொண்டிருந்தேனா? உங்களை நீங்களே தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள் இதை உங்களிடமே கேளுங்கள். இந்த பாடத்தை நான் எவ்வளவு உறுதியாக்கியிருக்கிறேன்? 'விட்டு விட்டீர்கள் என்றால் விடுபட்டுவீர்கள் இந்த பாடம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? அல்லது மற்றவர்கள் விட்டார்கள் என்றால் தான் நான் விடுபடுவேனா? அல்லது தந்தை விடுவித்தார் என்றால் தான் நான் விடுபடுவேனா? இந்த மாதிரியான பாடத்தையோ படித்து விடவில்லையே? எந்த விதமான கிளையையும் தன்னுடைய புத்தி என்ற கால்களால் பிடித்தோ அமர்ந்திருக்கவில்லையே? எந்தவொரு பழைய சுபாவம் சம்ஸ்காரம் அல்லது

ஏதாவது ஒரு சக்தியின் குறைவின் காரணமாக, பலமற்றவராக ஆன காரணத்தினால் கிளையிலேயே அமர்ந்து விடவில்லையே? ஒவ்வொரு விஷயத்திலும் விட்டு விட்டீர்கள் என்றால் தான் விடுபட்டுவீர்கள், இதை நடைமுறையில் கொண்டு வருகிறீர்களா? இதே பாடம் தான் பிரம்மாபாபாவை நம்பர் ஒன்-ல் கொண்டு சென்றது. தொடக்கத்தில் இருந்தே விட்டதினால் தான் விடுபட்டார் இல்லையா? என் உடன் இருப்பவர்கள் என்னை விட்டார்கள் என்றால் தான் விடுபடுவேன், உறவினர்கள் விட்டார்கள் என்றால் தான் விடுபடுவேன் என்று அப்படியோ யோசிக்கவில்லையே தடை போடுபவர்கள் தடை போடுவதை விட்டு விட்டார்கள் என்றால் நான் விடுபடுவேன் விதவிதமான சூழ்நிலைகள், பிரச்சனைகள் என்னை விட்டது என்றால் விடுபடுவேன். இந்த மாதிரி எப்பொழுதாவது நினைத்தீர்களா? எப்படி பிரம்மாபாபா எப்பொழுதும் தன்னை இந்தப் பாடத்தில் தான் நடைமுறையில் உறுதியாக செய்து காண்பித்தார். அதே போல் தந்தையைப் பின்பற்றி செய்தீர்களா? இதைத் தான் யார் முதலில் செய்கிறார்களோ அவர்கள் தான் அர்ச்சுனன் என்று கூறுவது. அப்படியானால் நீங்கள் அர்ச்சுனன் ஆகி விட்டீர்கள் இல்லையா? அதாவது தந்தையின் மிக அருகாமையின், சமமாக, இணைந்திருப்பவர் ஆகி விட்டீர்கள். நீங்கள் அனைவரும் கூட 'பாப்தாதா என்று இணைத்து கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி நீங்களும் ஆகியிருக்கிறீர்களா? அல்லது சில நேரம் ஒரு மாதிரியும், சில நேரம் வேறு மாதிரியும் இருக்கிறீர்களா? எப்படி இந்த மின்சாரம் செய்து கொண்டிருக்கிறது (மின்சாரம் அடிக்கடி வருவதும் செல்வதுமாக இருந்தது) அதே போல் நீங்களும் விட்டு விட்டால் விடுபடுவேன் என்றும், சில நேரம் மற்றவர்கள் விட்டார்கள் என்றால் விடுபடுவேன் என்ற இந்த விளையாட்டை விளையாடுவதில்லையே? இந்த மின்சாரத்தினுடையதும் விளையாட்டு தான் இல்லையா? சில நேரம் வருகிறது. சில நேரம் செல்கிறது. இதுவும் விளையாட்டானது இல்லையா? நீங்களும் அந்த மாதிரி விளையாட்டை விளையாடுவதில்லையே? நிரந்தரமாக இருப்பது நன்றாக இருக்கிறதா? அல்லது வருவது, போவது நன்றாக இருக்கிறதா? அப்படி ஒவ்வொரு விஷயத்திலும் அது சுபாவ பரிவர்த்தனையாக இருந்தாலும், சம்ஸ்கார பரிவர்த்தனையாக இருந்தாலும், ஒவ்வொருவரின் தொடர்பில் வருவதினால் சூழ்நிலைகள் அல்லது தடைகளைக் கடந்து செல்வதாக இருந்தாலும், என்ன பாடத்தை உறுதியாக்க வேண்டும்? 'நான் விட்டேன் என்றால் தான் விடுபடுவேன். சூழ்நிலைகள், பிரச்சனைகள் உங்களை விடாது. நீங்கள் விட்டீர்கள் என்றால் தான் விடுபடுவீர்கள். மற்ற ஆத்மாக்கள் சம்ஸ்கார மோதலிலும் வருகிறார்கள். அப்படி நான் விட்டேன் என்றால் தான் விடுபடும் என்ற இதை மட்டும் நினைவு வையுங்கள். இந்த மோதல் விட்டால் தான் நான் விடுபடுவேன் என்று அப்படியில்லை.

ஒருவேளை அம் மாதிரி இவைகள் விட்டது என்றால் நான் விடுபடுவேன் என்றிருக்கிறது என்றால், இந்த மோதல் முடிவடைந்து இன்னொன்று தொடங்கி விடும். இது விட்டது என்றால் நான் விடுபடுவேன் என்று எதுவரை காத்துக் கொண்டே இருப்பீர்கள்? இந்த மாயாவின் தடை அல்லது படிப்பில் இருக்கும் பரீட்சையோ அவ்வப்பொழுது விதவிதமான ரூபத்தில் கண்டிப்பாக வரத் தான் செய்யும். அப்படி தேர்ச்சி அடைவதற்காக நான் படித்தேன் என்றால் பாஸ் ஆவேன் என்பதா அல்லது ஆசிரியர் கேள்வித்தாளை சுலபமானதாக ஆக்கினார் என்றால் பாஸ் ஆகி விடுவேன் என்றிருக்கிறதா? என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது. நான் படித்தேன் என்றால் பாஸ் ஆவேன் என்ற இது சரி தான் இல்லையா? அதே போலவேஇங்கேயும் அனைத்து விஷயங்களையும் நான் சுயம் கடந்து செல்ல வேண்டும். இன்னார் கடந்து சென்றார் என்றால் அந்த மாதிரி இருக்கக்கூடாது. இந்த சூழ்நிலை பிரச்சனை கடந்து சென்றது என்றால் அப்படி இருக்கக்கூடாது. நான் பாஸ் ஆக வேண்டும். நான் கடந்து செல்ல வேண்டும். இதைத் தான் விட்டீர்கள் என்றால் தான் விடுபடுவீர்கள் என்று கூறுவது. காத்திருக்காதீர்கள் ஏற்பாடு செய்யுங்கள். இல்லை என்றால் பறவையாகவும் இருக்கிறீர்கள், இறக்கையும் இருக்கிறது மேலும் மிக அழகாகவும் இருக்கிறீர்கள், தந்தையின் மரத்திலும் அமர்ந்து விட்டீர்கள். அதாவது பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் ஆகி விட்டீர்கள் ஆனால் எந்தவிதமான தன்னுடைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் அல்லது மற்றவர்களின் சுபாவம் சம்ஸ்காரத்தைப் பார்க்கும் மற்றும் வர்ணனை செய்யும் பலஹீனம் இருக்கிறது. முயற்சி செய்வதில் ஆதாரமற்றவராக இல்லாமல் ஆதாரத்துடன் இருக்கிறார் என்றால். எந்தவொரு நபர் அல்லது பொருளின் மேல் பற்றுதல் இருக்கிறது, எந்தவொரு குணம் மற்றும் சக்தியின் குறை இருக்கிறது. இவை அனைத்தும் விதவிதமான கிளைகள். அப்படி இந்த கிளைகளிலிருந்து ஏதாவது ஒரு கிளையைப் பிடித்து அமர்ந்திருக்கவில்லையே? ஒருவேளை ஏதாவது கிளையைப் பிடித்திருக்கிறீர்கள் என்றால் தந்தையின் விரல் மேல் எப்பொழுதும் நடனம் ஆடுபவராக அதாவது எப்பொழுதும் ஸ்ரீமத் என்ற ஆதாரத்தில் செல்லக்கூடிய அந்த மாதிரி நெருக்கத்தை அனுபவம் செய்ய முடியாது மற்றும் எப்பொழுதும் தந்தையின் ஒவ்வொரு காரியத்திலும் சகயோகியாக அதாவது தோளில் நடனமாட முடியாது. ஒருவர் சதா சகயோகி மற்றும் இன்னொருவர் சில நேரம் சகயோகி சில நேரம் வியோகி அதாவது பிரிந்திருப்பவர். ஏன்? ஏனென்றால் ஏதாவது கிளையைப் பிடித்துக் கொள்கிறார்கள் என்றால் சகயோகிக்குப் பதிலாக வியோகி ஆகி விடுகிறார்கள். இப்பொழுது நான் யார்? என்று தன்னைத் தானே கேளுங்கள். அப்படி இன்று எந்த பாடத்தை உறுதியாக்கினோம் என்று புரிந்து கொண்டீர்களா? 'விட்டீர்கள் என்றால் விடுபடும்' என்ற இந்த பாடத்தை

உறுதியாக்கினோம் இல்லையா? கிளையையோ பிடிக்க மாட்டீர்கள் இல்லையா? களைப்படைந்து விடுகிறீர்கள் இல்லையா. பிறகு கிளையைப் பிடித்து அமர்ந்து விடுகிறீர்கள். சில நேரம் தன் காரணமாக களைப்படைந்து விடுகிறீர்கள், சில நேரம் மற்றவர்கள் காரணமாக களைப்படைந்து விடுகிறீர்கள். சில நேரம் சேவையில் களைப்படைந்து விடுகிறீர்கள். எனவே கிளையை பிடித்து கொண்டு 'இப்பொழுது விடுவியுங்கள், இப்பொழுது விடுவியுங்கள் என்று கதறுகிறீர்கள். பிடித்திருப்பது அவரே மற்றும் தந்தை விடுவிக்க வேண்டும். இது ஏன்? எனவே தந்தை எப்பொழுதும் விடுவதற்கான யுக்தி கூறுகிறார். நீங்கள் தானே விடுவீர்கள் இல்லையா? செய்தீர்கள் என்றால் அடைவீர்கள். இதையும் தந்தை செய்தார் என்றால் யார் அடைவார்கள்? தந்தை செய்ய வேண்டும் மற்றும் நீங்கள் அடைய வேண்டுமா? எனவே தந்தை செய்விப்பவராகி அதை செய்யும் பொறுப்பாளராக உங்களை ஆக்குகிறார். அப்படி மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தானில் இருக்கும் பறவைகளோமிக அழகாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? மும்பையில் அழகான பறவைகள் இருக்கிறார்கள் இல்லையா? மேலும் ராஜஸ்தானிலும் இருக்கிறதா? நீங்கள் அனைவருமே தந்தையின் அழகான பறவைகள், இறக்கைகள் உள்ள பறவைகள் ஆனால் கிளையில் அமர்ந்திருக்கும் பறவையா அல்லது பறக்கும் பறவையா என்று இதை சோதனைசய்யுங்கள். அனேகர்களை எவ்வளவு தான் பறக்க வைத்தாலும் மீண்டும் வந்து அமர்ந்து விடுவார்கள். அனேகர்களுக்கு இந்தப் பழக்கமும் இருக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தின் வசம் ஆவது என்றால், கால்களால் கிளையைப் பிடித்துக் கொள்வது வசீகரன மந்திரத்தை மறந்து விடுகிறார்கள் என்றால் வசமாகி விடுகிறார்கள். அப்படி மகாராஷ்டிராவின் பறவைகள் எந்த மாதிரியானவர்கள்? பறக்கும் பறவை, முழு மகாராஷ்டிராவின் குரூப் எந்த விதமான பறவைகளாக இருக்கிறார்கள்? பறக்கும் பறவையா அல்லது கிளையில் அமர்ந்திருக்கும் பறவையா? மேலும் ராஜஸ்தானிலிருந்து எந்த மாதிரி பறவைகள் வந்திருக்கிறார்கள்? விட்டீர்கள் என்றால் தான் விடுபடுவீர்கள் என்றிருக்கிறதா அல்லது விட்டு விட்டீர்கள் மேலும் விடுபட்டு விட்டீர்கள் என்றிருக்கிறதா? களைப்படைந்து விடுகிறீர்கள் என்றால் கிளையை பிடித்து விடுகிறீர்கள். இராஜஸ்தானின் பறவைகளோ மிக அழகானவைகள் என்று பிரசித்தியாகி இருக்கிறது. நடனமாடும் பறவைகள் தான் இல்லையா? யாருடைய வசமாகவோஆவதில்லை தானே? சுற்றி வரும் பறவைகள் என்றால் - இதைச் செய்வோம். இதைச் செய்து காண்பிப்போம் என்று அதிகமாக யோசிப்பவர்கள் ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். அக்கம் பக்கத்தில் பறப்பதில்லை. செய்வோம் செய்வோம், ஆகி விடுவோம். காண்பிப்போம், யோசிப்போம் அந்த மாதிரி வோம், வோம் என்று சொல்பவர்கள் மிக அதிமாக இருக்கிறார்கள். இவர்கள்

அக்கம் பக்கத்தில் சுற்றி வருபவர்கள். நீங்கள் எந்த மாதிரி குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள்? மும்பையிலிருந்து எந்த மாதிரி குரூப்பை கொண்டு வந்திருக்கிறீர்கள்? இராஜஸ்தானிலிருந்து எந்த விதமானதை கொண்டு வந்திருக்கிறீர்கள்? அனைவருமே அழகானவர்கள் தான். ஏனென்றால் தந்தையின் குழந்தை ஆகி விட்டார்கள். பிராமணன் ஆவது என்றால் வண்ணம் பூசப்பட்டு விட்டது. வண்ணமும் வந்து விட்டது. மேலும் இறக்கைகளும் வந்து விட்டன. இன்னும் செய்ய வேண்டியது விட்டீர்கள் என்றால் விடுபடுவீர்கள் என்பது மட்டும் தான். நல்லது - இன்றோ ரமணீகரமான குழந்தைகள் வந்திருக்கிறார்கள் இல்லையா. அதனால் பாப்தாதாவும் சூட்சும வதனத்தின் ரமணீகரமான விஷயங்களைக் கூறினார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தைக்குச் சமமான, பறக்கும் பறவைகளுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் வலம் வருபவர்களுக்கு, எப்பொழுதும் அனைத்து கிளைகளின் பந்தனத்திலிருந்து விடுபட்டிருப்பவர்களுக்கு, எப்பொழுது விரும்பினாலும் பறக்க முடியும் என்று அந்த மாதிரி எப்பொழுதும் சுதந்திரமான பறவைகளுக்கு, எப்பொழுதும் தந்தையின் விரலில் நடனமாடக்கூடிய அதாவது ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் எப்பொழுதும் உயர்ந்த எண்ணம் பேச்சு மற்றும் காரியம் செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான சந்திப்பு: ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா மண்டலங்கள்:**

**1. யாருடைய ஒவ்வொரு நரம்பிலும் இராமின் நினைவின் ஓசை ஒலிக்கிறதோ அவர்கள் தான் உண்மையான சீதைகள்!** உங்களை உண்மையான சீதை என்று நினைக்கிறீர்களா? உண்மையான சீதை என்றால் ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் என்ற காட்டிற்கு உள்ளேயே இருப்பவர். நீங்கள் எப்பொழுதும் கோட்டிற்கு உள்ளே இருக்கிறீர்கள் இல்லையா? இராம் ஒருவர் மற்ற அனைவர்களும் சீதைகள். சீதைக்கு கோட்டிற்கு உள்ளே தான் அமர்ந்திருக்க வேண்டும். எப்பொழுதும் தந்தையின் நினைவு எப்பொழுதும் தந்தையின் ஸ்ரீமத் அந்த மாதிரி கோட்டிற்கு உள்ளே இருக்கக்கூடிய உண்மையான சீதை. ஒரு அடி கூட ஸ்ரீமத் இன்றி எடுத்து வைக்கவில்லை. எப்படி ட்ரெயினை தண்டவாளத்தின் மேல் நிறுத்தி விடுகிறார்கள் என்றால், அது தானாகவே அந்த பாதையில் சென்று கொண்டே இருக்கும். அதே போலவே தினசரி அமிர்தவேளையின் நினைவு என்ற கோட்டின் மேல் நின்று விடுங்கள். அமிர்தவேளை அஸ்திவாரம். அமிர்தவேளை

நன்றாக இருக்கிறது என்றால் முழு நாளும் நன்றாகவே ஆகி விடும். இல்லறத்தில் இருப்பவர்களுக்கு விசேஷமாக அமிர்தவேளையின் அஸ்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும் பிறகு இயல்பாகவே சகயோகம் கிடைத்துக் கொண்டே இருக்கும். உலகத்து குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டும் எப்பொழுதும் ஒரு தந்தையின் உண்மையான சீதையாகி இருங்கள். சீதைக்கு எப்பொழுதும் இராமின் நினைவு தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு நரம்பிலும் இராமின் நினைவின் ஒலி ஒலிக்கட்டும் அந்த மாதிரியான உண்மையான சீதைகள் தான் நீங்கள் இல்லையா? - இதைத் தான் விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர் என்று கூறுவது, எவ்வளவு விலகியிருப்பீர்களோ அந்த அளவு தந்தையின் அன்பிற்குரியவர் ஆகிறீர்கள்.

**2. ஒவ்வொரு அடியிலும் பல மடங்கின் வருமானத்திற்கான சாதனம் - தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள்!** எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானத்தை சேமிப்பதற்கான சாதனம், ஒவ்வொரு அடியிலும் தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். பிறகு எப்படி நினைவு இருக்கிறதோ அப்படி மனநிலை இயல்பாகவே ஆகி விடும். செய்யும் காரியமும் விசேஷமாக ஆகி விடும். எனவே நான் விசேஷ ஆத்மா என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். ஏனென்றால், நீங்கள் என்னை உங்களுடையவராக ஆக்கியிருக்கிறீர்கள். இதை விட பெரிய விசேஷம் என்ன இருக்க முடியும். பகவானின் குழந்தையாக ஆகி விடுவது என்ற இது அனைத்தையும் விட மிகப் பெரிய விசேஷம். எப்பொழுதும் இதே நினைவில் இருப்பது என்றால் பல மடங்கு வருமானத்தை சேமிப்பது. யாருடையவனாக ஆகியிருக்கிறேன் மற்றும் என்னவாக ஆகியிருக்கிறேன் என்ற இதையும் நினைவு வைத்தீர்கள் என்றால் வருமானம் ஆகிக் கொண்டே இருக்கும். உலகின் ஆத்மாக்களின் பார்வை உங்கள் மேல் இருக்கிறது. இந்த அளவு உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்களாக நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் எப்பொழுதும் இதை நினைவில் வைத்து இதை செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த பிராமண வாழ்க்கையில் இருப்பவர்கள் தொடக்கத்திலிருந்து இறுதி வரை மேடையில் தனது வாழ்க்கைப் பங்கை செய்பவர்கள். நான் எல்லைக்கப்பாற்பட்ட உலக மேடையில் இருக்கிறேன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் பிறகுஇயல்பாகவே ஒவ்வொரு காரியத்தின் மீதும் கவனம் இருக்கும். இந்த அளவு கவனம் வைத்து காரியம் செய்தீர்கள் என்றால் வருமானம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும்.

**3. அருகாமையில் இருக்கும் ஆத்மாக்களின் அடையாளம் -எப்பொழுதும் தந்தைக்குச் சமமானவர்கள் எப்பொழுதும் தன்னை தந்தையின் அருகாமையில் இருக்கும் ஆத்மா என்று நினைக்கிறீர்களா?** அருகாமை ஆத்மாக்களின் அடையாளமாக என்ன இருக்கும்? எப்பொழுதும் தந்தைக்குச் சமமானவர்கள், எது தந்தையின் குணமோ அதுவே குழந்தைகளின் குணம். எது தந்தையின் காரியமாக இருக்கிறதோ அது எப்பொழுதும் குழந்தைகளின் காரியம் ஆகும். ஒவ்வொரு எண்ணம் மற்றும் செயலில் தந்தைக்குச் சமமான நிலை இதைத் தான் அருகில் இருக்கும் ஆத்மா என்று கூறுவது. யார் அருகாமையின் ஸ்திதியிலிருப்பவர்களோ அவர்கள் எப்பொழுதும் தடைகளை அழிப்பவர்களாக இருப்பார்கள். எந்த ஒரு தடையின் வசமானவர்களாகவும் இருக்க மாட்டார்கள். ஒருவேளை தடையின் வசமாகி விட்டார் என்றால், அவரை விக்ன விநாஷக் என்று கூற முடியாது. எந்த விதமான தடையையும் கடந்து செல்பவரைத் தான் விக்ன விநாஷக் என்று கூறுவது அப்படி எப்பொழுதாவது ஏதாவது விதமான தடையைப் பார்த்து பயப்படுவதில்லையே? என்ன? மற்றும் எப்படி? என்ற கேள்வி எழுவதில்லை, அனேக தடவைகள் வெற்றி அடைந்தவன் என்ற இது நினைவில் இருக்கிறது என்றால், தடைகளை அழிப்பவராக ஆகி விடுவீர்கள். அனேக தடவைகள் செய்த காரியத்தை மீண்டும் செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரியான சகஜயோகிகள். இந்த நினைவில் இருக்கும் விக்ன விநாஷக் ஆத்மாக்கள் இயல்பாகவே சகஜ யோகியாக இருப்பார்கள்.

**4. சங்கமயுகமே சக்திசாலியான யுகம், இதிலிருந்து வீணானதை அகற்றி சக்திசாலியாக ஆகுங்கள்!** எப்பொழுதும் தன்னை சக்திசாலியான ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? எப்பொழுது சர்வ சக்திவானின் நினைவு இருக்கிறது என்றால் இயல்பாகவே சக்திசாலியாக இருப்பீர்கள். சக்திசாலியான ஆத்மாக்களின் அடையாளமாக என்ன இருக்கும்? எங்கு சக்தி இருக்கிறதோ அங்கு வீணானவை நிரந்தரமாக அகன்று விடுகிறது. சக்திசாலியான ஆத்மா என்றால் வீணானதிலிருந்து விலகி விடுகிறார். எண்ணத்தில் கூட வீணானவை இல்லை. அந்த மாதிரி சக்திசாலியான தந்தையின் குழந்தைகள் நீங்கள் எப்பொழுதும் சக்திசாலியானவர்கள். அரைக்கல்பமோ வீணானதை நினைத்தீர்கள். வீணானதைச் செய்தீர்கள் இப்பொழுது சங்கமயுகம் சக்திசாலியான யுகம் அப்படி சக்திசாலியான யுகம், சக்திசாலியான தந்தை மற்றும் சக்திசாலியான ஆத்மாக்கள். அப்படி வீணானவை முடிந்து விட்டது இல்லையா? நான் சக்திசாலியான யுகத்தைச் சேர்ந்தவன், சக்திசாலியான தந்தையின் குழந்தை, சக்திசாலியான ஆத்மா எப்படி நேரமோ எப்படி தந்தையோ அப்படி குழந்தைகள். கலியுகம் வீணானது. எப்பொழுது

கலியுகத்தை விட்டு விலகி சங்கமயுகவாசி ஆகி விட்டீர்கள் என்றால், வீணானவற்றிலிருந்து விலகி விட்டீர்கள். அப்படி நேரத்தின் நினைவு மட்டும் இருந்தால் கூட நேரத்திற்குத் தகுந்தாற்போல் இயல்பாகவே காரியம் நடக்கும். நல்லது.

**வரதானம்: சாகார ரூபத்தில் பாப்தாதாவை நேரெதிரில் அனுபவம் செய்யக்கூடிய இணைந்த ரூபம் உடையவர் ஆகுக!**

எப்படி சிவசக்தி இணைந்திருக்கிறார்கள், அதே போல் பாண்டவபதி மற்றும் பாண்டவர்கள் இணைந்திருக்கிறார்கள். யார் அந்த மாதிரி இணைந்த ரூபத்தில் இருக்கிறார்களோ எதிரில் அவர்களின் எதிரில் பாப்தாதா சாகாரத்தில் அனைத்து உறவுகளினால் இருக்கிறார். இப்பொழுது நாளாக நாளாக இன்னும் அனுபவம் செய்வீர்கள். எப்படி பாப்தாதா எதிரில் வந்தார், கையைப் பிடித்தார். புத்தியால் இன்றி கண்களால் பார்ப்பீர்கள் அனுபவம் செய்வீர்கள் ஆனால் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற பாடம் மட்டும் உறுதியாகி விட்டது என்றால் எப்படி நிழல் கூடவே வருகிறது அதே போல் பாப்தாதா கண் பார்வையிலிருந்து விலக முடியாது, எப்பொழுதும் நேரெதிரில் இருக்கும் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும்.

**சுலோகன்: மாயாவை வென்றவர், இயற்கையை வென்றவர் ஆகும் உயர்ந்த ஆத்மாக்கள் தான் தனக்கு நன்மை செய்பவர் மற்றும் உலகிற்கு நன்மை செய்பவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தியாகத்தையும் தியாகம் செய்தல்!

இன்று பாப்தாதா யாரை சந்திக்க வந்திருக்கிறார்? அதைத் தெரிந்திருக்கிறீர்களா? இன்று அனேக புஜங்களுடைய தந்தை தன்னுடைய புஜங்களை அதாவது எப்பொழுதும் சகயோகியாக இருக்கும் குழந்தைகளை சந்திக்க வந்திருக்கிறார். எத்தனை விசேஷ சகயோகி ஆத்மாக்கள் தந்தையின் வலது கரமாகி ஒவ்வொரு காரியம் செய்வதிலும் எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பவர்களாக இருக்கிறார்கள். பாப்தாதா சேவைக்கான வழிகாட்டுதலின் சமிக்ஞை கொடுத்தார் மற்றும் வலது கரம் அதாவது விசேஷ புஜங்கள் அதாவது கட்டளைப்படி நடக்கும் குழந்தைகள் ஆம் பாபா, நாங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்' என்று எப்பொழுதும் கூறுகிறார்கள். தந்தை 'ஹே குழந்தைகளே என்று கூறுகிறார். குழந்தைகள் ஆம் பாபா' என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி விசேஷ புஜங்களை தந்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலாபுறங்களிலுமுள்ள விசேஷ புஜங்களிடமிருந்துடத சொல்லுங்கள் பாபா, இப்பொழுதே பாபா, வந்து விட்டேன் பாபா என்று குழந்தைகளின் இந்த வார்த்தைகளைத் தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த மாதிரி குழந்தைகளின் இனிமையான தாலாட்டு பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. தந்தையும் அந்தக் குழந்தைகளை 'முரபி (நெருக்கமான) குழந்தைகளே, உண்மையான குழந்தைகளே ! உலகின் அலங்காரமாக இருக்கும் குழந்தைகளே மாஸ்டர் பாக்கியத்தை உருவாக்குபவர், மாஸ்டர் வரமளிக்கும் வள்ளல் குழந்தைகளே ! என்று கூறி எப்பொழுதும் அழைக்கிறார்.

இன்று பாப்தாதா அந்த மாதிரி குழந்தைகளின் பெயரை ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டிருந்தார். எந்த மாதிரி மாலை உருவாகியிருக்கும் என்று கூறுங்கள்? சின்ன மாலையா அல்லது பெரிய மாலையா? மேலும் அந்த மாலையில் உங்கள் அனைவரின் வரிசை எண் எங்கே இருக்கும்? இறுதி முடிவின் மாலையைப் பற்றி கூறிக் கொண்டிருக்கவில்லை. தற்சமயம் அந்த மாதிரி வலது கரங்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்கிற அந்த மாலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தற்சமயத்தின் வரிசை எண்களை சுலபமாக வரிசைப்படுத்த முடியும் தான்

இல்லையா? மாலையின் வரிசை எண்ணை எண்ணிக் கொண்டே பிரம்மாபாபா ஒரு விசேஷமான விஷயத்தைக் கூறினார். என்ன கூறியிருந்திருப்பார்? இன்றைய முக்கியமான விஷயம் வலது கரம் அதாவது சகயோகத்தினுடையதாக இருந்தது. இந்த சகயோகத்தின் விஷயத்தின் மேல் இல்லறத்தில் இருந்தும் இல்லற உணர்விலிருந்து விலகியிருக்கக்கூடிய, உலகீய விவகாரங்களிலிருந்தும் ஆன்மீக விசயங்களின் மீது எப்பொழுதும் கவனம் வைக்கக்கூடிய அந்த மாதிரி விலகியிருக்கும் மற்றும் தந்தையின் பிரியமான விசேஷ குழந்தைகளின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். வாயுமண்டலத்தின் அக்னியின் வெப்பத்திலிருந்தும் விலகிய நிலை. அந்த மாதிரி அக்னியால் தாக்கப்படாத குழந்தைகளைப் பாப்தாதா பார்த்தார். இன்று அந்த மாதிரி இரட்டை பங்கைச் செய்யும், குடும்பத்தில் ஆன்மீகத்தின் பங்கைச் செய்யக்கூடிய குழந்தைகளின் மகிமை செய்து கொண்டிருந்தோம்.

இரட்டை பங்கைச் செய்பவர்களின் ஒரு விசேஷம் வர்ணனையானது. அந்த மாதிரி ஆசையற்ற குழந்தைகள் அனேகர்கள் இருக்கிறார்கள். யார் சம்பாதிக்கிறார்களோ அவர்கள் சுகத்திற்கான சாதனத்தை எவ்வளவு சேர்க்க முடியுமோ அந்த அளவு சேர்க்க முடியும் ஆனால் சாதாரண உணவு அருந்துகிறார்கள், சாதாரணமாக நடந்து கொள்கிறார்கள் மற்றும் சாதாரணமாக வாழ்கிறார்கள். முதலில் ஆன்மீக சேவையின் விசேஷ பங்கை தனது சம்பாத்தியத்திலிருந்து எடுக்கிறார்கள். குடும்பத்தின் காரியம், உலகீய இல்லறம் உலகீய சம்மந்தம் தொடர்பை வைத்து நடந்து கொண்டும் தன்னுடைய விசால புத்தியின் காரணமாக கோபப்படுவதும் இல்லை. மேலும் ஈஸ்வரிய சம்பாத்தியத்தை சேமிப்பதற்கான இரகசியத்தைத் தெரிந்து கொண்டு அதற்கான விசேஷ பங்கை இரகசியம் தெரிந்து நடந்து கொள்பவராகி, எடுத்தும் விடுகிறார்கள். இந்த விசேஷத்தில் கோபியர்களும் குறைந்தவர்கள் இல்லை. குடும்பத்தில் தன்னை ஆஃப் பார்ட்னர் என்று கூறுகிறார்கள் ஆனால் தந்தையுடன் வியாபாரம் செய்வதில் ஃபுல் பார்ட்னர். அந்த மாதிரி குப்தமான கோபிகைகளும் இருக்கிறார்கள். அந்த மாதிரி உண்மையான உள்ளம் படைத்த பரந்த மனமுடைய கோபிகைகளும் இருக்கிறார்கள் என்றால் பாண்டவர்களும் இருக்கிறார்கள். இன்று அந்த மாதிரி குழந்தைகளின் பெயரை எண்ணிக் கொண்டிருந்தோம் என்று கூறினோம் இல்லையா? அந்த மாதிரி சிக்கனம் செய்து ஆன்மீக காரியத்தில் பரந்த மனதுடன் ஈடுபடுத்துகிறார்கள். தன்னுடைய ஓய்வு நேரத்தையும் தனது ஓய்வுக்காக பயன்படுத்தாமல், பணத்தின் ஒரு பங்கு இருந்த போதிலும் 75-சதவிகிதம் ஆன்மீக காரியத்தில் ஈடுபடுத்துகிறார்கள் மற்றும் ஒரு கருவியாக இருந்து குடும்ப காரியங்களைச்

செய்கிறார்கள். அந்த மாதிரி தியாகம் நிறைந்த குழந்தைகள் எப்பொழுதும் அழியாத பாக்கியம் நிறைந்தவர்கள் ஆனால் அந்த மாதிரி யுக்தி நிறைந்து பங்கைச் செய்பவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இல்லை. விரல் விட்டு எண்ணுபவர்களாகத் தான் இருக்கிறார்கள். இருந்தாலும் இரட்டை பங்கைச் செய்யும் அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களின் மகிமையும் அவசியம் வர்ணிக்கப்பட்டது.

இரண்டாவது நம்பரின் குழந்தைகளும் இருந்தார்கள் -செய்யவும் செய்கிறார்கள் ஆனால் இரண்டாம் நம்பராக ஆகி விடுகிறார்கள். இதே குப்த தானம் மகாதானம், குப்த மகாதானியின் விசேஷம் தியாகத்தினையும் தியாகம் செய்வது. உயர்ந்த காரியத்தின் பலனாக என்ன கிடைக்கிறதோ அது அனைவர் மூலமாக மகிமை செய்யப்படும் பிரத்யக்ஷ பலன், சேவாதாரிக்கு மகிமைக்குரிய உயர்ந்த ஆசனம் கிடைக்கிறது. மதிப்பு மரியாதையின் ஆசனம் கிடைக்கிறது. இந்த சித்தி அவசியம் பிராப்தி ஆகிறது. ஏனென்றால் இந்த சித்திகள் பாதையில் வரும் சின்ன சின்ன தங்கும் இடங்கள். இது இறுதி இலக்கு அல்ல. ஆகையால் இதைத் தியாகம் செய்தவராகி பாக்கியம் நிறைந்தவராக ஆகுங்கள். இதைத் தான் மகாதியாகி என்று கூறுவது. இப்போது தான் சேவை செய்தீர்கள், அதன் பலனை உடனே அந்த நேரமே அனுபவித்து விட்டீர்கள் என்றால் சேமிப்பு ஆவதில்லை. இந்த அற்ப காலத்தின் சித்திகள், செய்யும் காரியத்தின் பிரத்யக்ஷ (வெளிப்படையான) பலனின் ரூபத்தில் அவசியம் பிராப்தி ஆகும். ஏனென்றால் சங்கமயுகம் பிரத்யக்ஷ பலன் கொடுக்கும் யுகம். எதிர்காலத்திலோ அனாதி நியமப்படி கிடைக்கத்தான் செய்யும் ஆனால் சங்கமயுகம் வரதானி யுகம். இப்போது செய்தீர்கள், உடனே, இப்போதே கிடைக்கும் ஆனால் இந்த நேரமே சாப்பிட்டு விடாதீர்கள். இதை பிரசாதம் என்று புரிந்து அனைவருக்கும் கொடுங்கள் அல்லது தந்தையின் எதிரில் 'போக்' வைத்து விடுங்கள். பிறகு ஒன்றிற்கு பல மடங்கு சேமிப்பு ஆகி விடும். அப்படி வியாபாரம் செய்வதில் திறமை நிறைந்தவர்கள் ஆகுங்கள். வெகுளியாக இருக்காதீர்கள் கேட்டீர்களா இது தான் இரண்டாம் நம்பர்.

நல்லது மூன்றாம் நம்பரை பற்றியும் கேட்பீர்களா? மூன்றாம் நம்பர் சேவையில் சகயோகிகளாககுறைவாகத் தான் ஆகிறார்கள் ஆனால் ஆசனத்தை முன்பு மாதிரியே பெற விரும்புகிறார்கள். அனைத்து பொக்கிஷங்களையும் தனது சௌகரியத்திற்காக அதிகமாக ஈடுபடுத்துவார்கள். முதல் நம்பர் ஒருவரின் பெயரால் செய்பவர்கள் மற்றும் சிக்கனமாக இருப்பவர்கள். இரண்டாம் நம்பர் சம்பாதித்தார்கள் மற்றும் உடனேயே சாப்பிட்டார்கள். மூன்றாவது நம்பர்

சம்பாத்தியம் குறைவு மற்றும் சாப்பிடுவது அதிகம், மற்றவர்களின் சம்பாத்தியத்தையும் சாப்பிடுபவர்கள். அவர்கள் கொண்டு வாருங்கள் மற்றும் சாப்பிடுங்கள் என்று அந்த மாதிரியானவர்கள். உயர்ந்த ஆத்மாக்களின் பாக்கியத்தின் பங்கு தியாகம் நிறைந்த குழந்தைகளின் பிரத்யக்ஷ பலன் அப்படி அனைத்து பிராப்திகளையும் தியாகம் செய்பவராகி, தியாகம் செய்கிறார்கள் ஆனால் மூன்றாம் நம்பரைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய பங்கையும் இவர்களே சுவீகாரம் செய்து விடுகிறார்கள். சம்பாதிப்பவர்கள் இல்லை, சாப்பிடுபவர்களாக மட்டும் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் நம்பர் ஒன் குழந்தைகள் சுமையை இறக்கக்கூடியவர்கள், ஆனால் அவர்கள் சுமையை ஏற்றுபவர்கள் ஏனென்றால் தன்னுடைய உழைப்பின் சம்பாத்தியத்தில் சாப்பிடுவதில்லை. அந்த மாதிரி சாப்பிடும், குடிக்கும் ஆத்மாக்களையும் பார்த்தோம். மூன்றாவது எண்ணிலிருப்பவர்களைப் பற்றி இப்பொழுது கேட்டீர்களா? நான் யார் என்று இப்பொழுது யோசியுங்கள். நல்லது - இருந்தாலும் இன்றைய ஆன்மீக உரையாடலில் இல்லறத்திலிருந்து கொண்டே அந்த ஒருவரின் (பாபா) பெயரால் சிக்கனமாக இருக்கும் குழந்தைகளை அடிக்கடி மகிமை செய்தோம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் சரி பாபா, வந்தேன் பாபா என்று கூறுபவர்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய தியாகத்தையும் தியாகம் செய்து மற்றவர்களையும் பாக்கியம் நிறைந்தவர்களாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் பாப்தாதாவுடன் உயர்ந்த வியாபாரம் செய்யக்கூடிய, எப்பொழுதும் சேவையில் அனைத்து பொக்கிஷங்களையும் ஈடுபடுத்தக்கூடிய, அந்த மாதிரி குப்த தானம் செய்து பெரிய பங்கை எடுத்துக் கொள்ளும் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

**ராஜஸ்தான் (ஜெய்ப்பூர்) குரூப்பிற்கு சேவை வளர்ச்சி அடைவதற்காக விசேஷ சமிக்ஞைமட்டும் திட்டம்:** ராஜஸ்தானிலும் ராஜ சிம்மாசனத்தின் ஸ்தானத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள் அப்படி ராஜ சிம்மாசனத்தின் ஸ்தானத்தில் என்னென்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இந்த முழு வருடத்தில் என்னென்ன புதுமை செய்தீர்கள்? மகா தீர்த்தம் செய்வதற்காக யாத்திரிகர்களின் பார்ட்டியை கொண்டு வந்திருக்கிறீர்களா? உலகீய யாத்திரையிலும் குழுவை உருவாக்கி அழைத்துச் செல்வார்கள், முழு ரயிலையும் நிரப்பி அழைத்துச் செல்வார்கள். அப்படி ராஜ சிம்மாசனத்தில் அமர்பவர்கள் இந்த மகா தீர்த்த யாத்திரைக்கு எத்தனை யாத்திரிகர்களை அழைத்து வந்திருக்கிறீர்கள். இராஜஸ்தானின் இராஜ சிம்மாசனத்தினரின் முக்கிய ஸ்தானமான

தலைநகரிலிருந்து எத்தனை பேரை அழைத்து வந்திருக்கிறீர்கள். பஸ்ஸை நிரப்பி அழைத்து வந்திருக்கிறீர்களா? அல்லது ராஜஸ்தானில் யாத்திரிகர்கள் இல்லவே இல்லையா, என்ன நினைக்கிறீர்கள்?. யாத்திரிகர்கள் இல்லையா அல்லது வழிகாட்டிகள் தயாராகவில்லையா? ஒருவேளை இவர்கள் அனைவருமே வழிகாட்டிகள் என்றால் யாத்திரிகர்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும். அப்படி யாத்திரிகர்களை கொண்டு வருவீர்களா அல்லது உங்களை மட்டும் தான் கொண்டு வருவீர்களா? இந்த வருடம் திட்டம் போடுவீர்களா அல்லது அடுத்த வருடமா? நல்லது. ஏதாவது புது திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? எப்படி ஜெய்ப்பூர் அகில உலக புகழ் வாய்ந்த ஸ்தானமாக இருக்கிறது என்றால், இதுவரையிலும் யாருமே செய்யாத ஏதாவது ஒரு விசேஷ சேவையை அவசியம் செய்யுங்கள். முக்கியமான இடத்தில் மிக அழகான நல்ல பெரிய போர்டு (விளம்பர பலகை) வையுங்கள். இதைச் செய்ய முடியும் இல்லையா? அந்த போர்டு அங்கே வந்து போகும் அனைவரின் பார்வையில் படுகிற மாதிரி மிக ஈர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதனுடைய அலங்கரிப்பு மற்றும் அதிலிருக்கும் விஷயங்கள் அந்த மாதிரி இருக்க வேண்டும், விரும்பாவிட்டாலும் அதை அவசியம் அனைவரும் பார்க்க வேண்டும். அந்த வாசகங்களையும் அந்த மாதிரி உருவாக்குங்கள், அதைப் படித்து அனைவரும் இதைச் செய்ய வேண்டும், இங்கே செல்ல வேண்டும் என்கிற எண்ணம் வர வேண்டும். அந்த மாதிரி போவோர் வருவோர்களுக்கு செய்தி கிடைத்து கொண்டிருக்கட்டும். விலாசமும் இருக்கட்டும், மேலும் அங்கே வருவதற்காக விசேஷ அழைப்பும் இருக்கட்டும். அந்த மாதிரி குறைந்த வார்த்தைகளில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய வாசகத்தை உருவாக்குங்கள். மேலும் போர்டு எப்படி இருக்க வேண்டும் என்பதையும் திட்டம் போடுங்கள். அதன் மூலம் அனேகருக்கு செய்தி கிடைத்து கொண்டே இருக்கும். அந்த மாதிரி முக்கியமான இடத்தில் போர்ட்டை வையுங்கள். அதற்காக செலவானாலும் ஒன்றும் பாதகமில்லை. இதை இப்பொழுது செய்து காண்பியுங்கள். ஏதாவது புது கண்டுபிடிப்பு இருக்கட்டும். அது விரும்பாவிட்டாலும் கூட அனைவரின் அகல விரிந்த பார்வையில் செல்ல வேண்டும். அந்த மாதிரி ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள். விலாசம், போன் நம்பர் அனைத்தும் எழுதப்பட்டிருக்க வேண்டும். அழைப்பிதழும் இருக்கட்டும். பிறகு ஏதாவது ஒரு விசேஷ ஆத்மா விழித்தெழுந்து விடும். எந்த இடத்தில் அனைவரும் வந்து போவார்களோ அனைவரின் பார்வை எங்கே செல்லுமோ அந்த இடத்தில் ஏதாவது செய்யுங்கள் ஆனால் அது அந்தளவு ஈர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதைப் பார்க்காமல் யாரும் இருக்க முடியாது என்ற அளவிற்கு இருக்க வேண்டும். நல்லது. இன்னொன்று என்ன செய்வீர்கள்? ஏதாவது விசேஷ ஆத்மாவை ஒவ்வொரு மாதமும் அவசியம் யாத்திரை செய்விக்க

வேண்டும். அந்த மாதிரி லட்சியத்தை வையுங்கள். பஸ்ஸை நிரப்பி வராவிட்டாலும், ஓரிருவரையாவது அவசியம் அழைத்து வர முடியும் இல்லையா? அந்த மாதிரி அனைவருக்கும் செய்தியைக் கூறுவதற்கு பொறுப்பாளர் ஆகிற மாதிரி ஏதாவது விசேஷ ஆத்மாவை அழைத்து வாருங்கள். அனைத்து சாதனமும் இருக்கிறது. செய்யக்கூடியவர்கள் செய்தார்கள் என்றால் சுலபமாகி விடும். ஒரு தடவை தொடர்பு வைத்து பிறகு விட்டு விடாதீர்கள். அடிக்கடி தொடர்பை வைத்துக் கொண்டே இருங்கள். அந்த மாதிரி தொடர்பை வைப்பவர்கள் சொல்வதைக் கேட்காதவர் களாக இருக்க மாட்டார்கள். எனவே என்ன செய்வீர்கள்? நான் செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் நினையுங்கள். மற்றவர்களைப் பார்க்காதீர்கள். இந்த விஷயத்தை யார் முதலில் செய்வார்களோ அவர்கள் அர்ஜுனன். என்னைப் பார்த்து பிறரும் செய்வார்கள் என்றால் என்ன நடக்கும். நான் செய்தேன் என்றால் அனைவரும் செய்ய ஆரம்பித்து விடுவார்கள் என்ற இந்த பாடத்தை அனைவரும் படித்து கொள்ள வேண்டும். இதில் மற்றவர்களைப் பார்க்காமல் தன்னை மைதானத்தில் கொண்டு வாருங்கள். நல்லது. உங்களைப் பொருத்தளவில் சரியாகத் தான் இருக்கிறீர்கள் ஆனால் சேவையிலும் நம்பர் ஒன்னாக ஆக வேண்டும். சேவையிலும் முழு மதிப்பெண்களைப் பெற வேண்டும். நல்லது.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** டீச்சர்களுக்கு இரட்டை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இரு மடங்கு ஏன் கிடைக்கிறது என்றால் அனேகர்களுக்கு கொடுப்பார்கள். ஏனென்றால் ஆசிரியர் என்றால் எப்பொழுதும் மற்றவர்களின் சேவைக்காக வாழ்பவர்கள். ஆசிரியரின் வாழ்க்கை எப்பொழுதும் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை தனக்காக இன்றி சேவைக்காக இருக்கிறது. எப்பொழுது மாஸ்டர் ஆசிரியர் மற்றும் உண்மையான சேவாதாரி, தன்னுடைய ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணமும் மற்றவர்களுக்கு படிப்பிப்பதற்காக இருக்கிறது என்ற லட்சியத்தை வைக்கிறார்கள் என்றால், அந்த மாதிரியான மாஸ்டர் ஆசிரியர் மற்றும் சேவாதாரி எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக இருப்பார்கள். வாழ்வதே சேவைக்காக, போவதும், வருவதும் பேசுவதும், நினைப்பதும் அனைத்துமே சேவைக்காக இருக்கிறது. ஒவ்வொரு நரம்பிலும் சேவையின் ஊக்கம் மற்றும் உற்சாகம் நிரம்பியிருக்கட்டும். எப்படி நரம்புகளில் ரத்தம் செல்கிறது என்றால் வாழ்க்கை இருக்கிறது. அந்த மாதிரி சேவாதாரி என்றால் ஒவ்வொரு நரம்பிலும் அதாவது ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு விநாடியில் சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் ரத்தம் நிரம்பியிருப்பதாக இருக்கட்டும். நீங்கள் அந்த மாதிரியான சேவாதாரிகள் தான் இல்லையா? குட் நைட் சொன்னீர்கள் என்றாலும் சேவை குட் மார்னிங் என்று

சொன்னாலும் சேவை அதில் தன்னுடைய சேவை இயல்பாகவே நிரம்பியிருக்கிறது. இப்படிப்பட்டவரைத் தான் உண்மையான சேவாதாரி என்று கூறுவது. சேவாதாரியின் கனவு கூட எதுவாக இருக்கும்? சேவைக்கானதாக இருக்கும் கனவிலும் கூட சேவை செய்து கொண்டே இருப்பார்கள். நீங்கள் அந்த மாதிரியானவர்கள் தான் இல்லையா?
சேவாதாரிகளுக்கு லிஃப்ட்டும் மிகப் பெரியது. நீங்கள் அனேக உலகீய பந்தனங்களிலிருந்து விடுபட்டு இருக்கிறீர்கள். இங்கேயே ஜீவன்முக்த் நிலையின் பிராப்தி இருக்கிறது. சேவாதாரியின் அர்த்தமே பந்தனமுக்த், ஜீவன்முக்த். எத்தனை எல்லைக்குட்பட்ட பொறுப்புகளிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். மேலும் ஆன்மீக பொறுப்பு கூட தந்தையினுடையது, இதிலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள். சேவை மட்டும் செய்தீர்கள் மற்றும் முன்னேறிச் செல்லுங்கள். பொறுப்பிற்கான சுமை இல்லை. யாருக்காவது எதன் சுமையாவது இருக்கிறதா? சென்டரின் சுமை இருக்கிறதா என்ன? சென்டரை நடத்துவதற்கான சுமை இல்லையா? மாணவர்கள் எப்படி அதிகரிப்பார்கள் என்ற கவலை இல்லையா? (இருக்கிறது) அப்படியானால் சுமையாகத்தான் இருக்கிறது இல்லையா? வெற்றி எப்பொழுது இருக்கும் என்றால், எப்பொழுது நீங்கள் நான் கற்பிப்பவன் இல்லை, ஆனால் தந்தையின் நினைவு மூலம் அவர்களே படிப்பார்கள் என்று எப்பொழுது புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது தான். நான் படிப்பிப்பவன் என்று நினைத்தீர்கள் என்றால் அவர்களால் படிக்க முடியாது. தந்தையிடம் சுமையைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் படித்துக் கொண்டே இருப்பார்கள். எனவே இதிலிருந்தும் கவலையற்றவர்களாக இருக்க வேண்டும். எந்த அளவு நீங்களே லேசாக இருப்பீர்களோ அந்த அளவு சேவை மற்றும் நீங்கள் எப்பொழுதும் மேலே ஏறிக் கொண்டே இருப்பீர்கள் அதாவது முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருப்பீர்கள். நான் எனது என்று வந்து விடுகிறது என்றால் சுமை ஆகி விடுகிறது. மேலும் கீழே வந்து விடுகிறீர்கள். எனவே இந்த சுமையிலிருந்தும் கவலையற்றவராக இருக்க வேண்டும். நினைவின் போதையில் மட்டும் எப்பொழுதும் இருங்கள். தந்தையுடன் இணைந்திருப்பவராக எப்பொழுதும் இருந்தீர்கள் என்றால், எங்கு தந்தை இணைந்திருக்கிறாரோ அங்கு சேவை என்ன பெரிய விஷயம்! சேவை கண்டிப்பாக நடக்கும் இதன் அனுபவிகள் தான் நீங்கள் இல்லையா!

அப்படி ஆசிரியர் என்றால் சேவாதாரிக்கு இதுவும் லிஃப்ட் ஆகி விட்டது இல்லையா? நினைவில் இருங்கள் மேலும் பறந்து கொண்டே இருங்கள். சேவை செய்வதற்கு கருவியாக இருக்கிறீர்கள். செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்றிருக்கிறது என்றால் லேசாகவும் இருப்பீர்கள், மேலும் வெற்றி

அடைபவராகவும் இருப்பீர்கள். ஏனென்றால் எங்கு தந்தை இருக்கிறாரோ அங்கு வெற்றி நிச்சயம் இருக்கிறது. நல்லது.

பாப்தாதா தன்னைப் போன்றவர்களைப் பார்த்து குஷி அடைகிறார். நீங்கள் மாஸ்டர் பாக்கியத்தை உருவாக்குபவர்கள். பாக்கியத்தை உருவாக்குபவரை நினைவு செய்து அனேகர்களின் பாக்கிய ரேகையைப் போடுபவர்கள். திருப்தியானவராகவோ எப்பொழுதும் இருக்கவே இருக்கிறீர்கள். அதை கேட்பதற்கான அவசியம் இருக்கிறதா என்ன? மாஸ்டர் ஆசிரியரிடம் இதைக் கேட்பது கூட அவமரியாதை ஆகி விடும். நீங்கள் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்கள். மேலும் எப்பொழுதும் இருப்பீர்கள். நல்லது.

மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தானின் மேளா முடிவடைந்ததா? இந்த நாளும் நாடகத்தில் பதிவாகிக் கொண்டே இருக்கிறது. மீண்டும் எப்பொழுது வரும் ஒவ்வொரு சமயத்திற்கும், ஒவ்வொரு விநாடிக்கும் அதன் அதன் மகத்துவம் இருக்கிறது. சங்கமயுகமே மகத்துவமான யுகம். மகான் ஆவதற்கான யுகம் மற்றும் மகானாக ஆக்குவதற்கான யுகம். எனவே சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடிக்கும் மகத்துவம் இருக்கிறது. சங்கமயுகத்தில் ஆசிரியர் அதாவது சேவாதாரி ஆவதற்கும் மகத்துவம் இருக்கிறது. இல்லறத்தில் இருந்து கொண்டு விலகியிருப் பதற்கும் மகத்துவம் இருக்கிறது. கோபியர்கள் ஆவதற்கும் மகத்துவம் இருக்கிறது மற்றும் பாண்டவர்கள் ஆவதற்கும் மகத்துவம் இருக்கிறது. அனைத்திற்கும் அதனதன் மகத்துவம் இருக்கிறது ஆனால் பொறுப்பிலிருக்கும் ஆசிரியருக்கு மிக நல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்படி நீங்கள் அனைவரும் வாய்ப்பைப் பெறக் கூடியவர்கள் தான் இல்லையா? நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: ஞானத்தின் பாய்ண்ட்டை தினமும் மீண்டும் படித்து சமாதான, தீர்வு சொரூபமாக ஆகக்கூடிய துக்கமற்ற ஊரின் மகாராஜா ஆகுக!**

ஞானத்தின் பாய்ண்ட்டுகள் டைரியில் மற்றும் புத்தியில் இருக்கிறது. அதை தினமும் மீண்டும் படியுங்கள். மேலும் அவற்றை அனுபவத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் எந்தவிதமான பிரச்சனைக்கும் சுலபமாகவே சமாதானம் (தீர்வு) செய்ய முடியும். ஒருபொழுதும் வீணான எண்ணங்கள் என்ற சுத்தியலினால் பிரச்சனையின் கல்லை உடைப்பதில் நேரத்தை இழக்காதீர்கள். 'நாடகம்' என்ற வார்த்தையின் நினைவு மூலம் உயரம் தாண்டுதல் செய்து முன்னேறிச் செல்லுங்கள். மீண்டும் இந்த பழைய சம்ஸ்காரங்கள் உங்களுடைய தாசன் ஆகி

விடும் ஆனால் முதலில் மகாராஜா ஆகுங்கள் மற்றும் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஆகுங்கள்.

**சுலோகன்: ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுப்பது தான் மரியாதையைப் பெறுவதாகும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 26.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சகயோகி தான் சகஜயோகி!

இன்று பாப்தாதா தன்னுடைய சுயராஜ்ய அதிகாரி, இராஜரிஷி, எதிர்காலத்தில் இராஜ வம்சத்தினராகும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் சகஜயோகிகள் அதாவது இராஜரிஷிகள், டாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் தற்சமயம் வரமளிக்கும் நேரத்தில் விசேஷமாக எந்த வரதானம் கொடுக்கிறார்? சகஜ யோகி ஆகுக. இந்த வரதானத்தை அனுபவம் செய்கிறீர்களா? யோகிகளாகவோ அனேகர் ஆகிறார்கள் ஆனால் சகஜயோகியாக சங்கமயுகத்து சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் மட்டும் தான் ஆகிறீர்கள். ஏனென்றால், வரம் அளிக்கும் தந்தையின் வரதானம் உங்களுக்குத் தான் இருக்கிறது. பிராமணன் ஆனீர்கள் என்றால் இந்த வரதானத்தைப் பெறுபவராக ஆனீர்கள். இந்த ஜென்மத்தில் அனைத்தையும் விட முதல் வரதானமே இந்த சகஜயோகி ஆகுசு என்பது தான். எனவே வரமளிக்கும் தந்தை, இது வரம் அளிக்கும் நேரம் மேலும் நீங்களும் வரதானம் பெறக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் என்ற நினைவு இருக்கிறதா என்று உங்களிடமே நீங்கள் கேளுங்கள். இந்த வரதானத்தை எப்பொழுதும் புத்தியில் நினைவில் வைப்பது என்பது தான் வரதானத்தை வாழ்க்கையில் கொண்டு வருவது. அந்த மாதிரி நான் எப்பொழுதும் அந்த மாதிரி வரதானத்தை பிராப்தி செய்திருக்கும் ஆத்மா, பிராட்தி சொரூபமான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அல்லது கடின முயற்சியும் செய்ய வேண்டியதாக இருக்கிறதா? எப்பொழுதும் வரம் பெறும் ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? இந்த வரதானத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வதற்கான விதியை தெரிந்திருக்கிறீர்களா? அனைத்தையும் விட சகஜமான விதி எது? அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதும் அனைவரின் மற்றும் சேவையில் சகயோகி ஆகுங்கள். சகயோகி தான் சகஜயோகி. அனேக பிராமண ஆத்மாக்கள் சகஜயோகாவின் அனுபவத்தை எப்பொழுதும் செய்ய முடிவதில்லை. யோகா எப்படி செய்வது? எங்கே செய்வது? இதே கேள்வியில் இன்று வரை இருக்கிறார்கள். ஈசுஜயோகாவில் கேள்வி இருப்பதில்லை. கூடவே வரதானம் இருக்கிறது, வரதானத்தில் கடின முயற்சி இருப்பதில்லை. மேலும் சகஜமாக, எப்பொழுதுமே இயல்பாகவே இருக்கிறது. அதாவது சகஜயோகியின் வரம் பெற்ற ஆத்மா இயல்பாகவே நிரந்தர

யோகியாக இருப்பார். அவ்வாறு இருப்பதில்லை என்றால் இதற்கான காரணம் என்ன? கிடைத்திருக்கும் வரதானத்தை மற்றும் பிராமண ஜென்மத்தின் இந்த ஆன்மீகப் பரிசை பாதுகாக்கத் தெரிவதில்லை. நினைவு மூலமாக சக்தி நிறைந்தவர் ஆவதில் அலட்சியமானவர் ஆகி விடுகிறார்கள். இல்லை என்றால் பிராமணன் மேலும் சகஜயோகியாக இல்லை என்றால் பிராமண வாழ்க்கையின் விசேஷமே என்னவாக இருக்கிறது. வரம் பெற்றவராக இருந்தும் சகஜயோகியாக இல்லை என்றால் பின்பு எப்பொழுது ஆவீர்கள்? இது என்னுடைய இந்த ஜென்மத்தின் வரதானம் என்ற போதையை மற்றும் நிச்சயத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இதே வரதானத்தை அனைத்து ஆத்மாக்களுக்காக சேவையில் ஈடுபடுத்துங்கள். சேவையில் சகயோகி ஆவது தான் சகஜயோகி ஆவதற்கான விதி.

அமிர்தவேளையில் தொடங்கி சகயோகி ஆகுங்கள். முழு நாளின் நடவடிக்கையில் சகயோகம் கொடுக்க வேண்டும் என்ற இந்த அடிப்படை லட்சியத்தை நினைவில் வையுங்கள். நான் சகயோகி ஆக வேண்டும். அமிர்தவேளையில் தந்தையுடன் சந்திப்பை செய்து தந்தைக்குச் சமமாக மாஸ்டர் விதை ரூடம் ஆகி, மாஸ்டர் உலகிற்கு நன்மை செய்பவராகி, அனைத்து ஆத்மாக்களுக்கும் தனக்கு கிடைத்திருக்கும் சக்திகள் மூலமாக ஆத்மாக்களின் உள்உணர்வு மற்றும் வாயுமண்டலத்தை பரிவர்த்தனை (மாற்றம்) செய்வதற்காக சகயோகி ஆகுங்கள், விதை மூலமாக முழு மரத்திற்கும் ஆன்மீக நீர் கொடுப்பதின் சகயோகி ஆகுங்கள். அதன் மூலம் அனைத்து ஆத்மாக்கள் என்ற இலைகளுக்கு பிராப்தி என்ற நீர் கிடைத்த அனுபடேம் ஆகட்டும். அதே போல் அமிர்தவேளையில் தொடங்கி முழு நாளும் என்னென்ன காரியம் செய்கிறீர்களோ அந்த ஒவ்வொரு காரியத்திலும் 'சகயோகம் கொடுக்க வேண்டும் என்ற லட்சியம் இருக்கட்டும் வேலை, தொழில் சம்மந்தப்பட்ட விவகாரங்களின் காரியத்தில் சென்றாலும், குடும்பத்தை நடத்துவதற்கான காரியத்தில் இருந்தாலும் ஆனால் உலகியல் விவகாரத்திலும் கூட தனக்காகவும் மற்றும் உடன் இருக்கும் மற்றவர்களுக்காகவும் சபபாவனை மற்றும் நல்விருப்பங்களினால் வாயுமண்டலத்தை ஆன்மீகமாக ஆக்குவதற்கான சகயோகம் கொடுத்தேனா? அல்லது அப்படியே சாதாரண முறையில் தன்னுடைய வேலையை செய்து விட்டு வந்தேனா? எப்படி யாருக்கு வேலை இருக்கிறதோ அதன் பிரகாரம் அவர் எங்கே சென்றாலும் காரியத்தை அவசியம் செய்வார். உங்கள் அனைவரின் விசேஷ பதவியே சகயோகி ஆவது இதை எப்படி மறக்க முடியும்? அப்படி ஒவ்வொரு காரியத்திலும் சகயோகி ஆகிறீர்கள் என்றால் இயல்டாகவே சகஜயோகி ஆகி விடுவீர்கள். ஒரு விநாடி கூட சகயோகி ஆகாமல் இருக்க

வேண்டாம். வாய்மொழி மூலம் சகயோகி ஆகுங்கள் அல்லது மன சக்தி மூலம் சகயோகி ஆகுங்கள். உறவு தொடர்பு மூலம் சகயோகி ஆகுங்கள். ஸ்தூல காரியங்கள் மூலமாக சகயோகி ஆகுங்கள் ஆனால் அவசியம் சகயோகி ஆக வேண்டும். ஏனென்றால் நீங்கள் அனைவரும் வள்ளலின் குழந்தைகள். வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். எனவே என்ன கொடுக்க வேண்டும்? சகயோகம்'

சுயமாற்றத்திற்காக தனக்குத் தானே சகயோகி ஆகுங்கள். சாட்சியாகி, சதா நற்சிந்தனைகளின் உள்உணர்வு மற்றும் ஆன்மீக வாயுமண்டலத்தை உருவாக்கி தனக்குத் தானே சகயோகி ஆகுங்கள். எப்படி இயற்கை தன்னுடைய வாயுமண்டலத்தின் பிரபாவத்தால் அனைவருக்கும் அனுபவம் செய்விக்க முடிகிறது. குளிர் மற்றும் வெட்பத்தை இயற்கை தன்னுடைய வாயுமண்டலத்தின் மீது பிரபாவத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதே போன்று இயற்கையை வென்ற நிரந்தர சகயோகி, சசுஜயோகி ஆத்மாக்கள் தன்னுடைய ஆன்மீக வாயுமண்டலத்தின் பிரபாவத்தின் அனுபவம் செய்விக்க முடியாதா? எப்பொழுதும் தனக்காகவும், பிறருக்காகவும் சகயோகம் கொடுக்க வேண்டும் என்று சுபபாவனை வைத்துக் கொண்டே சகயோகி ஆத்மாக்கள் ஆகுங்கள். அவர் அந்த மாதிரியானவர் அல்லது அந்த மாதிரி யாராவது செய்வர்களா என்று இது போன்று யோசிக்காதீர்கள். எப்படிப்பட்ட வியுமண்டலமாக இருந்தாலும், நபராக இருந்தாலும் 'நான் சகயோகம் கொடுக்க வேண்டும்.

அந்த மாதிரி அனைத்து பிராமண ஆத்மாக்களும் நிரந்தர சகயோகி ஆகி விட்டார்கள் என்றால் என்னவாகி விடும்? அனைவருமே இயல்பாகவே சகஜயோகி ஆகி விடுவார்கள். ஏனென்றால், அனைத்து ஆத்மாக்களுக்கும் சகயோகம் கிடைப்பதால் பலஹீனமானவர்களும் கூட சக்திசாலி ஆகி விடுகிறார்கள். பலஹீனம் முடிந்த பிறகு சகயோகியாகவோ ஆகி விடுவார் இல்லையா? எந்தவிதமான பலஹீனம் கஷ்டத்தையும் கடினத்தையும் அனுபவம் செய்விக்கிறது. சக்திசாலியாக இருக்கிறீர்கள் என்றால், அனைத்தும் சுலபம். எனவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? எப்பொழுதும் சரீரத்தாலோ, மனதாலோ, பணம், செல்வத்தினாலோ, மனசக்தியினாலோ, வாய்மொழி மூலமாகவோ அல்லது காரியங்கள் மூலமாகவோ சகயோகி ஆக வேண்டும். ஒருவேளை யாராவது மனதால் செய்ய முடியவில்லை என்றால் உடலால் மற்றும் பணம் செல்வத்தினால் சகயோகி ஆகுங்கள். மனசக்தி, வாய்மொழி மூலம் செய்ய முடியவில்லை என்றால் செயல் மூலம் சகயோகி ஆகுங்கள். சம்மந்தத்தை இணைப்பதற்கும் மற்றும்

தொடர்பை வைப்பதற்குமான சகயோகி ஆகுங்கள். செய்தி கொடுப்பதின் சகயோகியாக மட்டும் ஆகாமல், தன்னுடைய பரிவர்த்தனை மூலம் சகயோகி ஆகுங்கள். தன்னுடைய அனைத்து பிராப்திகளின் அனுபவத்தைக் கூறுவதின் சகயோகி ஆகுங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும் தன்னுடைய முகம் மூலமாக சகயோகி ஆகுங்கள். யாருக்காவது குணங்களின் தானம் மூலமாக சகயோகி ஆகுங்கள். யாருக்காவது ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பதின் சகயோகி ஆகுங்கள். எதில் சகயோகி ஆக முடியுமோ அதில் நிரந்தர சகயோகி ஆகுங்கள். இது தான் சகஜயோகா ஆகும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இதுவோ சுலடம் தான் இல்லையா? என்ன இருக்கிறதோ அதைக் கொடுக்க வேண்டும். என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். அனைத்தையும் செய்ய முடியவில்லை என்றால் ஒன்றிரண்டையாவது செய்ய முடியும் இல்லையா? ஏதாவது ஒரு விசேஷம் இருந்தாலும் அந்த விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அதாவது சகயோகி ஆகுங்கள். இதையோ செய்ய முடியும் தான் இல்லையா? எனக்குள் எந்த விசேஷமும் இல்லை, எந்த குணமும் இல்லை என்று யோசிக்கவில்லையே அப்படி இருக்கவே முடியாது. பிராமணன் ஆனதே பெரிய விசேஷம் ஆகும். தந்தையைத் தெரிந்து கொண்டதின் பெரிய விசேஷம் இருக்கிறது. எனவே தன்னுடைய விசேஷம் மூலமாக நிரந்தர சகயோகி ஆகுங்கள். நல்லது.

அந்த மாதிரி நிரந்தர சகயோகி அதாவது சகஜயோகி, எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த உள்உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்கும் சகயோகி ஆத்மாக்களுக்கு, பலஹீனமான ஆத்மாக்களுக்கு உற்சாகம் கொடுக்கக்கூடிய சகயோகி ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி அமிர்தவேளையில் தொடங்கி ஒவ்வொரு நேரமும் சகயோகி ஆகும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: அமைதியின் சக்தி மூலம் தெய்விக சுயராஜ்யத்தின் ஸ்தாபனை!** அமைதியின் சக்தி மூலம் முழு உலகத்தின் மேல் தெய்வீக ராஜாங்கத்திற்கான அஸ்திவாரம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அவர்கள் அவர்களுக்குள் சண்டையிட்டு கொண்டிருக்கிறார்கள். மேலும் நீங்கள் தெய்வீக இராஜாங்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள், என்ன ஆக வேண்டும்? என்று அவர்களுக்கு என்ன தெரியும் அவர்களோ அவரவர்களின் முயற்சியை செய்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் என்ன நடக்கப் போகிறது என்பதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். அனைத்து குழந்தைகளும்

# 1981 அவ்யக்த முரளி

அமைதியின் சக்தி மூலம் தெய்வீக சுயராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அவர்களுடையது வர்த்தைகளின் சக்தி அல்லது உடல் பலம், சாஸ்திரங்களின் சக்தி மேலும் உங்களுடையது அமைதியின் சக்தி. இந்த சக்தி மூலமாக தெய்வீசு இராஜ்யம் ஸ்தாபனை ஆகியே விடும் என்ற இந்த உறுதியான நிச்சயம் இருக்கிறது தான் இல்லையா? அவர்களும் தற்சமயத்தில் காரியம் செய்கிற மாதிரி ஏதாவது ஈஸ்வரிய சக்தி வேண்டும் என்று நினைக்கிறார்கள் ஆனால் அவர் (ஈஸ்வரன்) புலப்படாது இருக்கும் காரணத்தினால் தெரிந்து கொள்ள முடிவதில்லை, நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் செய்து கொண்டும் இருக்கிறீர்கள். பஞ்சாபில் வளர்ச்சி ஆகிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? பஞ்சாபும் சேவையின் ஆரம்பகால இடமாகும். அப்படி ஆரம்ப இடத்திலிருந்து ஏதாவது விரேஷ காரியம் நடக்க வேண்டும். ஆன்மீகத் தந்தையின் குழந்தைகளாக ஆன காரணத்தினால் ஆன்மீக சேவை செய்வது ஒவ்வொரு குழந்தைகளின் கடமை ஆகும். எது தந்தையின் காரியமோ அதுவே தான் குழந்தைகளின் காரியம். எப்படி ஆன்மீக சேவை செய்வது ஆன்மீகத் தந்தையின் கடமையாக இருக்கிறதோ. அதே போன்று குழந்தைகளும் இந்தக் காரியத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும். இந்த ஆன்மீக சேவை ஒவ்வொரு அடியிலும் உடனடி பலனை பிராப்தி செய்விக்கிறது. உடனடி பலன் குஷி. எவ்வளவு சேவை செய்கிறீர்களோ அந்த அளவு குஷியின் பொக்கிஷம் அதிகரிக்கிறது. ஒன்றிற்கு பல மடங்கு கிடைக்கிறது. அந்த மாதிரி நினைக்கிறீர்களா? உங்களுடைய பதவியே ஆன்மீக சேவாதாரி. உலகிய ரீதியில் எந்த பதவியில் (வேலை) இருந்தாலும் சரி, ஆனால் ஆன்மீகத்தில் ஆன்மீக சேவாதாரி. உங்களில் யாராவது டாக்டராக இருக்கிறார் என்றால், ஆத்மாவிற்கும் மற்றும் உடலுக்குமான இரட்டை பாக்டர் ஆகுங்கள். அந்த சேவை செய்து கொண்டும் மூல கடமையானது ஆன்மீக டாக்டர் ஆவது அடிக்கடி நோய் வருகிறது, இதன் மூலமாகவோ நிரந்தரமாக நோயே அழிந்து விடும். அந்த மாதிரி மருந்து கொடுக்க வேண்டும் தான் இல்லையா? நோயாளி வருவதே நிரந்தரமாக ஆரோக்கியத்தை அடைவதற்காக. அந்த நிரந்தர ஆரோக்கியம் ஆன்மீக சேவை மூலம் கிடைக்கும். நல்லது.

**லண்டன் குரூப்புடன் பாப்தாதாவின் சந்திப்பு:** லண்டனில் நல்ல நல்ல இரத்தினங்கள் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படி அனைத்து வெளிநாட்டு சேவை நிலையங்களும் ஒன்றிலிருந்து இரண்டாக, இரண்டிலிருந்து மூன்றாக என்று அப்படி திறக்கிறார்கள். இப்பொழுது மொத்தமாக எத்தனை சேவை நிலையங்கள் இருக்கின்றன? (1982-ல் 50) இந்த 50-இடங்களின் அஸ்திவாரம் லண்டன். மரம் மிக அழகானதாக ஆகி விட்டது தான் இல்லையா? எந்த

தண்டிலிருந்து 50 கிளைகள் உருவாகியிருக்கின்றன என்றால் அந்த மரம் எவ்வளவு அழகாக இருக்கும். அப்படி வெளிநாட்டின் மரமும் நன்றாகப் பரந்து விரிந்து பசுமையாக ஆகி விட்டது. பாப்தாதாவும், லண்டனைச் சேர்ந்த குழந்தைகளிடம் மட்டும் இல்லை. அனைத்து குழந்தைகளின் சேவையின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து குஷி அடைகிறார். வெளிநாட்டில் ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. நினைவு செய்வதற்கும் மற்றும் சேவை செய்வதற்கும் இரண்டிற்குமான ஆர்வம் நன்றாக இருக்கிறது ஆனால் மாயாவின் சின்ன ரூபத்தை கண்டும் மிக விரைவில் பயப்படுகிறார்கள் என்ற விஷயமும் இருக்கிறது. எப்படி இங்கே பாரதத்தில் அனேக பிராமணர்கள் எலியைக் கண்டும் பயப்படுவார்கள், கரப்பான் பூச்சியைக் கண்டும் பயப்படுவார்கள். அதே போன்று வெளிநாட்டுக் குழந்தைகள் இந்த விஷயத்தில் பயந்து விடுகிறார்கள், சிறியதை பெரியது என்று நினைத்து விடுகிறார்கள் ஆனால் அது ஒன்றுமே இல்லை, காகிதப் புலியை உண்மையான புலி என்று நினைத்து விடுகிறார்கள். எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அந்த அளவு பயப்படும் சம்ஸ்காரமும் சிறிதளவு சேவைக்களத்தில் வந்து விடுகிறது. வெளிநாட்டுக் குழந்தைகள் மாயாவைக் கண்டு யட்படக் கூடாது, விளையாட வேண்டும். காகிதட்புலியோடு விளையாடுவது இருக்குமா அல்லது பட்படுவது இருக்குமா? பொம்மையாக ஆகி விட்டது தான் இல்லையா? பொம்மையைக் கண்டு பயப்படுபவர்களை என்னவென்று கூறுவது! எந்த அளவு கடுமையாக முயற்சி செய்கிறீர்களோ அந்த கணக்குப்படி அனைத்து வெளிநாட்டினரும் நம்பர் ஒன் இடத்தைப் பிடிக்க முடியும். ஏனென்றால், மற்றொரு மதத்தின் திரைச்சீலைக்கு உள்ளே, இரட்டை திரைச்சீலைக்கு உள்ளே இருந்து கொண்டும் தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள். ஒன்றோ சாதாரண சொரூபம் என்ற திரைச்சீலை மற்றும் இன்னொன்று தர்மத்தின் திரைச்சீலையும் இருக்கிறது. பாரதத்தைச் சேர்ந்தவர்களுக்கோ ஒரே ஒரு திரைச்சீலையை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது ஆனால் வெளிநாட்டு குழந்தைகள் இரண்டு திரைச்சீலைக்கு உள்ளே இருந்து கொண்டு தெரிந்து கொள்டவர்களாக இருக்கிறார்கள். தைரியம் உள்ளவர்களும் அதிகம் இருக்கிறார்கள், அசம்பவத்தை சம்பவமாகவும் ஆக்கியிருக்கிறார்கள். கிரிஸ்தவ அல்லது மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மதத்தைச் சேர்ந்தவர் பிராமணனாக எப்படி ஆக முடியும்? அசம்பவம் நடக்க முடியாது ஆகும் என்று நினைக்கிறார்கள். அந்த அசம்பவத்தையும் சம்பவம் ஆக்கியிருக்கிறீர்கள், தெரிந்து கொள்வதிலும் திறமை நிறைந்தவர்கள் மற்றும் ஏற்றுக் கொள்வதிலும் திறமை நிறைந்தவர்கள். இரண்டிலும் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்கள். மற்றபடி இடையில் எலி வந்து விட்டது என்றால் பயந்து விடுகிறீர்கள். சகஜமான வழி தான் ஆனால் தன்னுடைய வீணான

எண்ணங்களை கலந்து விடுவதினால் சகஜமானது கடினமாகி விடுகிறது. எனவே இதிலும் உயரம் தாண்டுதல் செய்யுங்கள். மாயாவைப் பகுத்தறிந்து தெரிந்து கொள்ளும் கண் பார்வையை துல்லியமாக்குங்கள். தவறாகப் புரிந்து கொள்பவராக ஆகி விடுகிறீர்கள். காகிதத்தை உண்மை என்று நினைப்பது தவறாகப் புரிந்து கொள்வதாகத்தானே அர்த்தம். இல்லையா. இல்லை என்றால் இரட்டை வெளிநாட்டினரின் விசேஷமும் அதிகம். இந்த ஒரு பலஸீனம் மட்டும் இருக்கிறது. பின்பு தன் மீதும் மிகவும் சீரித்துக் கொள்கிறார்கள். இது காகிதப்புலி, உண்மையானது அல்ல என்று எப்பொழுது தெரிந்து கொள்கிறார்களோ அப்பொழுது சிரிக்கிறார்கள். சோதனையும் செய்து விடுகிறார்கள் தன்னை மாற்றவும் செய்து விடுகிறார்கள் ஆனால் அந்த நேரம் பயப்படும் காரணத்தினால் கீழே வந்து விடுகிறார்கள் அல்லது இடை நிலையில் வந்து விடுகிறார்கள். பின்பு மேலே செல்வதற்காக கடுமையாக முயற்சி செய்கிறார்கள் என்றால் சகஜமானதற்குப் பதிலாக கடும் முயற்சி செய்வதின் அனுபவம் ஆகிறது. பார்க்கப்போனால் சிறிது கூட கடின உழைப்பே இல்லை. தந்தையின் குழந்தை ஆனீர்கள், அதிகாரி ஆத்மாவாக ஆனீர்கள், பொக்கிஷத்திற்கு, வீட்டிற்கு, இராஜ்யத்தின் அதிபதி ஆக வேண்டும். வேறு என்ன வேண்டும். அப்படி இப்பொழுது என்ன செய்வீர்கள்? பயப்படும் சம்ஸ்காரத்தை (பழக்கத்தை) இங்கேயே விட்டுச் செல்லுங்கள். புரிந்ததா? பாப்தாதாவும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார், சிரித்துக் கொண் இருக்கிறார். குழந்தைகள் ஆழத்திலும் செல்கிறார்கள் ஆனால் ஆழத்தின் கூடவே சில நேரங்களில் பயப்படவும் செய்கிறார்கள். கடைசியில் வந்தும் வேகமாகச் செல்வதின் சம்ஸ்காரமும் இருக்கிறது. முன்பு வெளிநாட்டினரிடம் விசேஷமாக மாட்டிக் கொள்ளும் சம்ஸ்காரம் இருந்தது. இப்பொழுது வேகமாகச் செல்வதற்கான சம்ஸ்காரம் வேண்டும். ஒன்றில் மட்டும் மாட்டிக்கொள்வதில்லை ஆனால் அனேகர்களிடம் மாட்டிக் கொள்கிறார்கள். ஒரே வாழ்க்கையில் எத்தனை கூண்டுகள் இருக்கின்றன. ஒரு கூண்டிலிருந்து வெளியாகி இன்னொரு கூண்டில் மாட்டிக்கொள்கிறார்கள், அதிலிருந்து வெளிப்பட்டு மூன்றாவதில் மாட்டிக் கொள்கிறார்கள். அந்த மாதிரி எவ்வளவு மாட்டிக் கொள்ளும் சம்ஸ்காரம் இருந்ததோ அந்த அளவே வேகமாக செல்லும் சம்ஸ்காரமும் இருந்தது ஆனால் சின்ன விஷயத்தை பெரியதாக ஆக்காதீர்கள் என்ற இந்த ஒரு விஷயம் மட்டும் கவனத்தில் இருக்க வேண்டும். பெரியதை சிறியதாக ஆக்குங்கள். இப்படியும் நடக்குமா என்ன? இந்தக் கேள்வி கூட இருக்க வேண்டாம். இது என்ன இப்படி ஆயிற்று? அந்த மாதிரியும் நடக்குமா? என்ற இந்த கேள்விகளுக்குப் பதிலாக, என்ன நடக்கிறதோ அதில் நன்மை அடங்கியிருக்கிறது என்றிருக்க வேண்டும். கேள்வி அகன்று விட வேண்டும்.

முற்றுப்புள்ளி. புத்தியை இந்த விஷயத்தில் அதிகம் செலுத்தாதீர்கள். இல்லையென்றால் சக்தி வீணாகச் சென்று விடும். மேலும் தன்னை சக்திசாலியாக அனுபவம் செய்வதில்லை. கேள்விக்குறி அதிகமாக இருக்கும். இப்பொழுது மதுபன் வரதான பூமியில் கேள்விக்குறியை அகற்றிவிட்டு முற்றுப்புள்ளி இட்டுவிட்டுச் செல்லுங்கள். கேள்விக்குறி கடினமானது முற்றுப்புள்ளி கலடமானது. சுலபமானதை வீட்டு விட்டு கடினமானதை ஏன் கையில் எடுக்கிறீர்கள்? அதில் சக்தி வீணாகிறது. மேலும் முற்றுப்புள்ளியில் வாழ்க்கையே சிறந்ததாக ஆகி விடும். அங்கே விணானது, இங்கே சிறப்பானது. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது வீணாக்காதீர்கள். ஒவ்வொரு எண்ணமும் சிறப்பானது. ஒவ்வொரு விநாடியும் சிறப்பானது. நல்லது - யண்டனிலிருப்பவர்களுடன் ஆன்மீக உரையாடல் முடிந்து விட்டது.

லண்டனில் அனைத்து தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் பாப்தாதாவின் பலகோடி மடங்கு அன்பு நினைவுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். ஸ்துலமாக மதுபன்னில் வந்து சேரவில்லை ஆனால் பட்தாகா எப்பொழுதும் குழந்தைகளைத் தன் எதிரில் பார்க்கிறார். யாரெல்லாம் சேவை செய்யும் குழந்தைகளோ, ஒவ்வொருவரின் பெயரை ஏன் கூற வேண்டும்? யாரெல்லாம் இருக்கிறார்களோ அனைவருக்கும். அனைவரும் சகயோகி ஆத்மாக்கள், அனைவரும் கவலையற்றவராகி பெருமிதத்தில் இருங்கள். ஏனென்றால் உங்கள் அனைவரின் துணைவனாக சுயம் தந்தை இருக்கிறார். நல்லது.

**வரதானம்: இகழ்ச்சி-புகழ்ச்சி, வெற்றி-தோல்வியில் சமநிலையை வைக்கக்கூடிய தந்தைக்குச் சமமான சம்பன்னம் மற்றும் சம்பூரணமானவர் ஆகுக!**

ஆத்மாவின் சம்பன்னம் மற்றும் சம்பூரண நிலை உருவாகி விடுகிறது என்றால், இகழ்ச்சி · புகழ்ச்சி, வெற்றி - தோல்வி, சுகம் - துக்கம் அனைத்திலும் சமநிலை வந்து விடுகிறது. துக்கத்திலும் முகத்தில் மற்றும் நெற்றியில் துக்கத்தின் உணர்வுகளுக்கு பதிலாக சுகம் மற்றும் மகிழச்சியின் உணர்வுகள் தென்பட வேண்டும். இகழ்ச்சியை கேட்டுக் கொண்டும் இது இகழ்ச்சி இல்லை சம்பூர்ண நிலையை பரிபக்குவமாக ஆக்குவதற்காக இது மகிமைக்குத் தகுதியான வார்த்தைகளாகும் என்று அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி சமநிலை இருந்தது என்றால் தான் தந்தைக்குச் சமமானவர் என்று கூறுவோம். கொஞ்சம் கூட

உள்உணர்வில் இவர் எதிரி. தீய வார்த்தைகளால் திட்டுபவர், மேலும் இவர் மகிமை செய்பவர் என்று உள்உணர்வில் வரக் கூடாது!

**சுலோகன்: நிரந்தர யோகப் பயிற்சியின் மீது கவனம் செலுத்தினீர்கள் என்றால், முதல் வரிசை (டிவிஷனில்) வரிசை எண் கிடைத்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.11.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூதாதையர்களாகிய உங்களிடமிருந்து அனைத்து ஆத்மாக்களின் எதிர்பார்ப்புகள்!

இன்று கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் முப்பாட்டனார்) தன்னுடைய முழு வம்சாவளியோடு சந்தித்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு பெரிய வம்சாவளி, இதை நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இந்த வம்சாவளியின் முதல் அஸ்திவாரம் ஆவீர்கள் மற்றும் வம்சாவளி என்ற மரத்தின் மூல தண்டாக இருக்கிறீர்கள். உங்கள் மூலமாக வம்சாவளி எப்படி வளர்ச்சியை அடைகிறது என்ற இந்த அனைத்து இரகசியத்தையும் நீங்கள் மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எந்த ஆத்மாவை நீங்கள் பார்த்தாலும் மற்றும் தொடர்பில் வந்தாலும் நான் அனைத்து ஆத்மாக்களின் பூர்வஜமானவன் மூதாதையர்) என்ற நினைவு வருகிறதா மற்றும் மரத்தின் அனைத்து கிளைகள், சிறு கிளைகள் அனைத்திற்கும் மூல ஆதாரம் ஆவேன் அதாவது அஸ்திவாரம் ஆவேன் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே வெளிப்படையான நிலையில் இருக்கிறதா? இந்த உயர்ந்த நினைவு மூலம் இயல்பாகவே சக்திசாலியான சொரூபம் ஆகி விடும். ஒருவேளை தண்டு அதாவது மூல அஸ்திவாரம் பலஹீனமாக இருக்கிறது என்றால் முழு மரமும் பலஹீனம் ஆகி விடுகிறது. தண்டு சக்திசாலியாக இருக்கிறது என்றால், மரமும் சக்திசாலியாக இருக்கிறது. முழு மரத்தின் ஒவ்வொரு இலையின் சம்மந்தம் விதையின் கூடவே தண்டின் மூலமாகத் தான் இருக்கிறது. விதையின் சக்தி தண்டு மூலமாகத் தான் கிளைகள் மற்றும் சிறு கிளைகளை சென்றடைகிறது. அப்படி இன்று உங்களுடைய அனைத்து வம்சாவளிகளுக்கும் மூதாதையர்களாகிய உங்கள் மூலமாக மற்றும் மூல ஆதாரம் மூலமாக எந்த சக்தி தேவையாக இருக்கிறது? அனைத்து ஆத்மாக்களும் மூதாதையர்கள் உங்களை எந்த அளவு நம்பிக்கை விசுவாசத்தோடு மனவிருப்பங்களோடு நினைவு செய்கிறார்கள். எந்த நல்லிருப்பங்களைப் மாஸ்டர் வள்ளல், வரமளிக்கும் வள்ளல்கள் உங்கள் மூலமாக விரும்புகிறார்கள். அனைத்து ஆத்மாக்களின் அதாவது உங்களுடைய எல்லைக்கப்பாற்பட்ட வம்சாவளியின் நல் எண்ணங்கள் மற்றும் விருட்பங்களைத் தெரிந்திருக்கிறீர்களா?

# 1981 அவ்யக்த முரளி

இன்று அனைத்து ஆத்மாக்களின் மனதிலிருந்து வெளிப்படும் ஒரே ஒரு சப்தத்தைத் தான் கேட்க முடிகிறது. அனைவரிடமிருந்தும் இரண்டு விநாடிகளுக்காவது சுகம் மற்றும் நிம்மதியான வாழ்க்கை வாழ விரும்புகிறோம் என்ற இந்த வார்த்தைகளைத் தான் கேட்க முடிகிறது. நிம்மதியற்று இருக்கிறார்கள். செல்வம் மற்றும் சாதனம் இருந்த போதிலும், சுகம் மற்றும் அமைதி நிறைந்த தூக்கம் கண்களில் இல்லை. இன்றைய நாட்களில் பெரும்பான்மையோர் உண்மையான சுகம் மற்றும் சாந்தியின் மற்றும் உண்மையான குஷியின் தாகமுள்ளவர்களாக இருக்கும் காரணத்தினால், அதற்கான வழியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அனேக அற்ப காலத்து வழிகளை அனுபவம் செய்தும், திருப்தி கிடைக்காத காரணத்தினால் இப்பொழுது மெது மெதுவாக அந்த அனேக வழிகளிலிருந்து இதுவும் இல்லை, இதுவும் இல்லை என்று உணர்ந்து திரும்பி வருகிறார்கள். இப்பொழுது தெரியவில்லை, தெரியவில்லை என்ற அனுபவத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். 'உண்மையான வழி வேறு எதுவோ இருக்கிறது என்ற அனுபவத்தை இப்பொழுது செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த மாதிரி நேரத்தில் மூதாதையர்கள் நீங்கள் செய்ய வேண்டிய காரியம் - அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு விளக்கொளி ஆகி வழி காண்பிக்க வேண்டும். அமரஜோதி ஆகி இருளிலிருந்து புகவிடத்திற்கு கொண்டு வர வேண்டும். அந்த மாதிரி எண்ணம் வருகிறதா? மூதாதைய ஆத்மாக்கள் நாம் அனைத்து வம்சாவளியின் எதிரில் என்ன செய்கிறோமோ அதுவே தான் முழு வம்சாவளி வரை சென்றடையும் என்ற நினைவு இருக்கிறதா? மூதாதையர் உங்களுடைய உள்உணர்வு உலகின் சூழ்நிலையை மாற்றம் செய்யக்கூடியது. மூதாதையர் உங்களுடைய திருஷ்டி அனைத்து வம்சாவளியினருக்கும் சகோதரத்துவ நினைவை ஊட்டக் கூடியது. மூதாதையர்கள் உங்களுடைய தந்தையின் நினைவு அனைத்து வம்சாவளிகளுக்கும் நம்முடைய தந்தை வந்து விட்டார் என்ற நினைவை ஊட்டும். மூதாதையர்கள் உங்களுடைய உயர்ந்த காரியம் வம்சாவளிகளுக்கு உயர்ந்த ஒழுக்கமாகும். அதாவது ஒழுக்க, அறநெறியைப் படைக்க வேண்டும் என்ற நல் விருப்பத்தை உற்பத்தி செய்யும்.

அனைவரின் பார்வை மூதாதையர்களாகிய உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட நினைவு சொரூபமானவர் ஆனீர்கள் என்றால், எல்லைக்குட்பட்ட வீணான விஷயங்கள் தானாகவே முடிவடைந்து விடும். தலைகீழான மரத்தின் கணக்குப்படி விதையோடு சேர்ந்து தண்டும் மேலே உயர்வாக இருக்கிறது. நீங்கள் நேரடியாக விதை மற்றும் முக்கிய இரண்டு இலைகள், மும்மூர்த்திகளுடன் நெருக்கமான சம்மந்தமுள்ள தண்டு போலாவீர்கள். எவ்வளவு உயர்ந்த நிலை! இதே உயர்ந்த நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால்

எல்லைக்குட்பட்ட விஷயங்கள் என்ன அனுபவம் ஆகும்? குழந்தைப் பருவத்தின் கவனக்குறைவாக தவறாக செய்த விஷயங்களாகத் தென்படும். உங்களுடைய எல்லைக்கப்பாற்பட்ட முதிர்ந்த பருவத்தில் வந்து விட்டீர்கள் என்றால், அனைவரும் அனுபவமானவர்கள் ஆகி விடுவீர்கள். எல்லைக்கட்பாற்பட்ட முதிர்ந்த நிலையின் செயல்களாக என்ன இருக்கிறதோ அதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இப்பொழுது இன்னும் எவ்வளவு காரியம் செய்ய வேண்டியதாக இருக்கிறது? இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள் ஆனால் இந்த அனைத்து காரியங்களும் சுலபமாக எப்பொழுது நிறைவேறும்? எப்படி உங்களுடைய படைப்பாகிய அறிவியலைச் சேர்ந்தவர்கள் விஸ்தாரத்தை சாரத்தில் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். மிக சூட்சமமான சக்திசாலியான சாதனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் நேரம், செல்வம் மற்றும் ஆயுதங்கள் மிகக் குறைவாக செல்வாகிற மாதிரி முயன்று கொண்டிருக்கிறார்கள். முதலில் விநாஷ காரியத்தில் எவ்வளவு பெரிய சேனை, எவ்வளவு ஆயுதங்கள் மற்றும் நேரம் ஈடுபடுகிறது. இப்பொழுது விஸ்தாரத்தை சாரத்தில் கொண்டு வந்தீர்கள் இல்லையா? அந்த மாதிரி நீங்கள் மாஸ்டர் படைப்பவராகி ஸ்தாபனை காரியத்தில் அதே போலவே சூட்சுமம் மூலமாக ஸ்தூல சாதனத்தை தேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்துங்கள். இல்லை என்றால், ஸ்தூல சாதனங்களின் விஸ்தாரத்தில் சூட்சும சக்தி மறைந்து விடுகிறது. ஸ்தூல சாதனத்தின் விஸ்தாரம் எப்படி மரத்தின் விஸ்தாரம் விதையை மறைத்து விடுகிறதோ, அதே போன்று சூட்சும சக்தியின் சதவிகிதம் மறைந்து விடுகிறது. மூதாதைய ஆத்மாக்களாகிய உங்களுடைய ஆன்மீகத்தன்மை 'சூட்சும சக்தி' ஆகும். அதை மூதாதையர்கள் மூலமாக ஏதோ விசேஷ சக்தி உருவாகிக் கொண்டிருக்கிறது என்று அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். வம்சாவளிகளுக்கு ஆத்மாக்கள் உங்கள் மூலமாக ஏதாவது புதுமையை விரும்புகிறார்கள். வாய்மொழியின் சக்தி, சாதனங்களின் சக்தியோ அனைவரிடமும் இருக்கிறது ஆனால் பிராப்தியில்லாத சக்தி எது? அது சிரேஷ்ட எண்ணத்தின் சக்தி மற்றும் நல்ல உள் உணர்வின் சக்தி. அன்பு மற்றும் சகயோகம் நிரம்பிய பார்வை. இது யாரிடமும் இல்லை. எனவே னோ), பூர்வஜ் ஆத்மாக்களே! உங்களுடைய வம்சாவளிகளின் பிராப்திக்காக நம்பிக்கைத் தீபங்களை ஏற்றி யதார்த்த இலக்கு வரை கொண்டு வாருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? எதை மனிதர்கள் செய்கிறார்களோ அதை நீங்களும் செய்தீர்கள் என்றால் என்ன செய்தீர்கள்? நீங்களோ இறைவனின் குழந்தைகள். மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். இப்பொழுது வாய்மொழி குண்டுகளை வீசுகிறீர்கள் ஆனால் இது இப்பொழுது சிறு குழந்தை குண்டுகள். இப்பொழுது பிராப்தியின் அனுபவத்தின் குண்டுகளை வீசுங்கள். அதன் மூலம் நேரடியாக

வாழ்க்கையையே மாற்றி விட வேண்டும். புத்தி வரை அம்பு எய்திருக்கிறீர்கள், ஆனால் இதயத்தில் அம்பு எய்யவில்லை. இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்ற அந்த திட்டத்தையும் கொடுக்க வேண்டும் இல்லையா? நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற வார்த்தைகள் இப்பொழுது வாயிலிருந்து வெளியாகிறது ஆனால் 'இது தான் ஒரே உன்னத வழி' என்று இதயத்திலிருந்து வார்த்தைகள் வெளியாக வேண்டும். வாய் வார்த்தைகளால் ஒப்பந்தம் செய்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள். இதயத்திலிருந்து ஒப்பந்தம் செய்பவர்கள் கோடியில் சிலர் தான் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் பெரிய இதயம் உள்ளவரின் குழந்தைகள், இதயப்பூர்வமாக ஒப்பந்தம் செய்விப்பவர்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள்? அந்த மாதிரி சக்திசாலியான சேவையின் சக்கரத்தைச் சுழற்றுங்கள். அதன் மூலம் அனைத்து ஆத்மாக்களும் தன்னுடைய மூதாதையர்களைத் தெரிந்து பிராப்தியின் அதிகாரத்தை அடைந்து விட வேண்டும். கொஞ்சம் கேட்டோம். நன்றாகக் கேட்டோம் என்றிருப் பதற்குப் பதிலாக கொஞ்சம் கிடைத்தது என்று அந்த மாதிரி அனுபவம் செய்ய வேண்டும். புரிந்ததா?நன்றாகக் கூறுகிறார்கள் என்றில்லாமல், நன்றாக உருவாக்குகிறார்கள் என்றிருக்க வேண்டும். குறைந்த செலவு, குறைந்த சக்தி, குறைந்த நேரத்தை செலவழிக்க வேண்டும் என்ற இந்த விதி மூலமாக வெற்றி சொரூபம் ஆகுங்கள்.

வந்திருப்பவர்கள் பஞ்சாபின் மண்டலம் தான் இல்லையா? பஞ்சாபை என்னவாக ஆக்குவீர்கள்? அந்த மாதிரி ஏதாவது புதுமை செய்து காண்பியுங்கள். அனுபவம் செய்விப்பது என்றால் வாரிசுளை உருவாக்குவது. நன்றாகக் கேட்பவர்கள், நன்றாக இருக்கிறது! நன்றாக இருக்கிறது! என்று கூறுபவர்கள் பிரஜைகள். இப்பொழுது வாரிசு தரமுள்ளவர்கள் வேண்டும் ஒரு வாரிசுக்குப் பின்னால் பிரஜைகள் தானாகவே வந்து விடுவார்கள். பஞ்சாப் என்ன செய்யும்? எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்றாலும் தரமுள்ளவர்களை உருவாக்க முடியும் இல்லையா என்ன செய்யப் போகிறீர்கள்? இப்பொழுது நாலாபுறங்களிலும் லாரிசு தரமுள்ள குழந்தைகள் மிகக்குறைவாக இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் பஞ்சாப் நம்பர் ஒன் ஆகி விடுங்கள். சிலர் எண்ணிக்கையில் நம்பர் ஒன் ஆக இருக்கிறார்கள் என்றால், சிலர் தரத்தில் நம்பர் ஒன் ஆகி விடுங்கள். பஞ்சாபைச் சே பர்கள் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? தரமுள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்றால், அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள். ஏனென்றால், தரமுள்ள ஒருவர் இயல்பாகவே அதிக எண்ணிக்கையைக் கொண்டு வருவார். அவருடைய பெயரால் உங்களுடைய காரியம் நடந்து விடும். இது சுலபம் தானே! இல்லையா? நல்லது.

**இன்று பஞ்சாப் மற்றும் மதுபன்னைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு.** பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் மதுபன்னில் வந்து சமர்ப்பணம் செய்விப்பார்கள். பஞ்சாபீல் இருந்து நதிகள் உருவாகின்றன. மேலும் அவை எங்கே சென்று சேருகின்றன. மதுபனே கடலின் கரை, அப்படி பஞ்சாப் மற்றும் மதுபன்னின் இணைதல் நடந்தாகி விட்டது. இன்று விசேஷமாக பஞ்சாபிற்கான வாய்ப்பு எனவே பஞ்சாபிற்கு கூறிக் கொண்டு இருக்கிறோம். மற்றபடி இதில் அனைவரும் வந்து விட்டீர்கள். மதுபனிலோ அனைவரும் வந்து விட்டீர்கள். அனைவரும் எதில் வந்து சேர வேண்டும்? மதுபனில் தான் இல்லையா? நல்லது,

நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து மூதாதைய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைவரின் விருப்பங்களை நிரந்தரமாக நிறைவேற்றக் கூடிய. பிராப்தியில்லாத ஆத்மாக்களுக்கு பிராப்தியை வழங்கும் அனுபவத்தை செய்விக்கக்கூடிய, அனைவரையும் அனேக மார்க்கங்களிலிருந்து விடுவித்து ஒரு மார்க்கத்தில் கொண்டு வரக்கூடிய, அந்த மாதிரி அனைத்து ஆத்மாக்களின் மூல ஆதாரமான, எப்பொழுதும் அனைவரையும் ஒரு தந்தையின் அதிகாரி ஆக்கக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த மூதாதைய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அதிகமாக கேட்டிருக்கிறீர்கள், இப்பொழுதைய விசேஷமே சொரூபம் ஆவதோடு, பிறரையும் சொரூபமாக ஆக்க வேண்டும். எந்த அளவு நீங்களே அனைத்து பிராப்தி சொரூபமாக இருப்பீர்களோ அந்த அளவு அனைவரையும் பிராப்தியின் சொரூபமாக ஆக்க முடியும். இன்றைய நாட்களில் அனைத்து ஆத்மாக்களும் அடைய விரும்புகிறார்களேயன்றி கேட்க விரும்புவதில்லை. எப்பொழுது அடைந்து விடுகிறார்களோ அதனால் தான் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்ற இந்த பாடலை குஷியோடு பாடுவார்கள். எப்படி நீங்கள் அடைந்து விட்டோம் என்ற இந்த குஷி நிரம்பிய பாடலை பாடுகிறீர்கள் இல்லையா? அதே போல் மற்ற ஆத்மாக்களும் இந்த குஷியின் பாடலைப் பாடுவார்கள். தற்சமயம் இது தான் ஆத்மாக்களுக்கு அவசியமாக இருக்கிறது. என்ன அவசியமாக இருக்கிறதோ அதை நிறைவேற்றுவது தான் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுடைய கடமை ஆகும். இதே கடமை ஆற்றுவதில் எப்பொழுதும் அனுபவி ஆகி அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருங்கள். இதைத் தான் விரும்புகிறார்கள் இல்லையா? இந்த விருப்பத்தை நிறைவேற்றுபவர். அதாவது அனைவரையும் திருப்தியான ஆத்மாவாக ஆக்குபவர். நீங்கள் எப்பொழுதும் திருப்தியான ஆத்மாவாக

இருக்கிறீர்களா? எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவர், யார் நிரம்பியவராக இருப்பாரோ அவர் தான் திருப்தியாக இருப்பார். மேலும் எது தன்னிடம் இருக்குமோ அதைத் தான் மற்றவர்களுக்கும் அவசியம் கொடுப்பார். எனவே எப்பொழுதும் பிராப்தி சொரூபத்தின் போதை மற்றும் குஷியில் இருங்கள் இது தான் சங்கமயுக வாழ்க்கையில் விசேஷம். தந்தையை அடைந்தீர்கள் என்றால் சங்கமயுகத்தின் பிரத்யக்ஷ பலனை அடைந்தீர்கள். அனைத்து பிராப்தி தான் பிரத்யக்ஷ பலன். இந்த நிலை மூலம் அனைத்து வெற்றிகளும் பிராப்தி ஆகி விடும்.

**மதுபன்னைச் சேர்ந்த சகோதர சகோதரிகளுடன் சந்திப்பு:** மதுபன் நிவாசி அந்த அளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். உங்களைப் பார்த்து அனைவரும் குஷி அடைந்து விடுகிறார்கள். இந்த அளவு தன்னுடைய அதிர்ஷ்டத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் எப்பொழுதுமே கடலின் கரையிலேயே இருக்கிறீர்கள். ஸ்தூலமாகவும் எப்பொழுதும் தந்தை மற்றும் சிரேஷ்ட ஆத்மாக்களின் உடன் இருக்கிறீர்கள் என்றால்.எவ்வளவு பெரிய பாக்கியம் அது, எப்பொழுதுமே தனது பாக்கியத்தின் மகிமை பாடிக் கொண்டு இருக்கிறீர்களா? இந்த மகிமையை பாடிக் கொண்டே மற்றும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே மட்டும் இருங்கள். மதுபன் நிவாசி என்றால், எப்பொழுதும் மது அதாவது தேனுக்கு சமமாக இனிமையானவர். எப்பொழுதுமே வாய் மூலம் இனிமையாக இருப்பவர் மற்றும் அனைவரின் வாயை எப்பொழுதும் இனிப்பாக ஆக்குபவர். கடலின் கரையில் இருக்கக்கூடிய புனித அன்னப் பறவைகள் நீங்கள். அன்னப்பறவை என்ன செய்கிறது? எப்பொழுதும் முத்தை பொறுக்குகிறது. கூழாங்கல்லைப் பார்ப்பதே இல்லை, இரத்தினங்களை பார்ப்பார்கள். அப்படி அனைத்து இரத்தினங்களை பொறுக்குபவர்கள் தான் இல்லையா? நீங்கள் மகான் தீர்த்த ஸ்தானத்தில் இருக்கக்கூடிய மகான் ஆத்மாக்கள். அப்படி இது மகாத்மாக்களின் குரூப் ஆக ஆகி விட்டது இல்லையா? மகாத்மா என்றால் யார் எப்பொழுதும் மகான் பொருளை பார்ப்பவர். அப்படி மகான் பொருள் என்பது எது? (ஆத்மா) அப்படியானால் மகாத்மாவின் பார்வை எங்கே செல்லும்? மகான் பொருளின் மேல். அந்த மாதிரி எப்பொழுதும் மகானைப் பார்ப்பவர், மகான் வார்த்தைகளையே பேசுபவர் மற்றும் மகான் காரியங்களையே செய்பவர். இந்த நிலையைத் தான் மகாத்மா என்று சொல்வது. பாண்டவர்கள் அனைவரும் மகாத்மாக்கள். பாப்தாதாவிற்கு அனைவர்களையும் விட அதிகமான எதிர்பார்ப்புக்கள் யார் மேல் இருக்கிறது? மதுபன் நிவாசிகளிடம். மதுபன்னைச் சேர்ந்தவர்களுக்கு நம்பிக்கை தீபங்களை ஏற்ற தெரியும் தான் இல்லையா? அப்படி மதுபன்னில் எப்பொழுதும் தீபாவளி தான் இல்லையா? எப்பொழுதும் நல்

## 1981 அவ்யக்த முரளி

விருப்பங்களின் தீபத்தை எரிய வைக்கிறீர்கள் என்றால் தினசரி தீபாவளி தான்! எனவே மதுபன்னில் ஒருபொழுதும் இருள் சூழ்ந்த நிலை இருக்க முடியாது. மதுபன்னைச் சேர்ந்த நீங்கள் மாஸ்டர் ஆசிரியர். நீங்கள் கற்றுக் கொடுத்தாலும் அல்லது கற்றுக் கொடுக்காவிட்டாலும், உங்களுடைய ஒவ்வொரு காரியமும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாதாரணமான காரியம் செய்தாலும் சரி, அதைக் கற்றுக் கொண்டு செல்கிறார்கள். மேலும் உயர்ந்த காரியம் செய்தீர்கள் என்றால் அதையும் கற்றுக் கொண்டு செல்கிறார்கள். கற்றுக் கொடுப்பதில்லை ஆனால் மதுபன் நிவாசி ஆவது என்றால் மாஸ்டர் ஆசிரியர் ஆவது எனவே நான் மாஸ்டர் ஆசிரியர் (கற்றுக் கொடுப்பவர்) என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அப்படி உங்களுடைய ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு வார்த்தையும் கற்றுக் கொடுப்பதாக இருக்க வேண்டும். நீங்கள் பிரத்யேகமாக ஆசனத்தில் அமர்ந்து கற்றுக் கொடுப்பதற்கு அவசியம் இல்லை. நடமாடிக் கொண்டே. காரியம் செய்து கொண்டே கற்றுக் கொடுப்பவராக இருக்கிறீர்கள். எப்படி இன்றைய நாட்களில் நடமாடும் நூலகம் இருக்கிறது இல்லையா? அப்படி நீங்கள் நடமாடும் மாஸ்டர் ஆசிரியர். உங்களுடைய பள்ளி நன்றாக இருக்கிறது தான் இல்லையா? எனவே எப்பொழுதுமே தன்னுடைய எதிரில் மாணவர்களைப் பாருங்கள், நீங்கள் தனியாக இல்லை. எப்பொழுதுமே உங்கள் எதிரில் மாணவர்கள் இருக்கிறார்கள். எப்பொழுதும் படித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். மேலும் படிப்பித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். தகுதியான ஆசிரியர் மாணவர்களின் எதிரில் ஒருபொழுதும் கவனக்குறைவானவராக இருக்க மாட்டார், கவனம் வைத்திருப்பார். நீங்கள் தூங்கினாலும், எழுந்தாலும், சென்றாலும், உணவு அருந்தினாலும், ஒவ்வொரு நேரமும் நான் பெரிய கல்லூரியில் அமர்ந்திருக்கிறேன், என்னை மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். அப்படி நீங்கள் அதிசயமான ஆசிரியர் ஆகி விட்டீர்கள் தான் இல்லையா?

உங்கள் அனைவரையும் என்ன மகிமை செய்வது? மகிமையாக என்னவெல்லாம் இருக்கிறதோ அவை அனைத்தும் மதுபன்னைச் சேர்ந்தவர்களிடம் இருக்கிறது. அப்படி தன்னை மகான் என்று புரிந்து கொண்டு எப்பொழுதும் நடந்து கொள்ளுங்கள். தந்தை எந்தளவு மகிமை செய்வாரோ பின்பு அதன்படி நடக்கவும் வேண்டும். அப்படி நடந்து கொள்வதிலும் திறமை நிறைந்தவர்கள் தான் இல்லையா? மதுபன்னின் வரைபடம் முழு உலகத்திலும் சென்று விடுகிறது. அனைவரின் புத்தியில் எப்பொழுதும் என்ன நினைவு இருக்கிறது? மதுபன்னில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தான் இருக்கிறது. அப்படி அனைவரின்

புத்தியிலும் நினைவாக நீங்கள் இருக்கிறீர்கள். ஒவ்வொரு மதுபன்வாசியும் ஒளி மற்றும் சக்தியின் கோளமாக ஆகுங்கள். பிறகு இந்த ஒளி மற்றும் சக்தியின் உள்ளே அனைவரும் ஈர்க்கப்பட்டு அவர்களாகவே வருவார்கள். இப்பொழுதோ தந்தையின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது, அதன் காரணமாக தந்தையின் குழந்தையாக ஆகுபவர்கள் சுலபமாகவே அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் செய்து கொண்டே இருப்பார்கள். உங்களுடைய காரியம் இப்பொழுது குப்தமாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் தன்னுடைய சக்தி சொரூபம் மூலம் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். நாடகத்தின் திட்டப்படி இது நடக்கத் தான் வேண்டும், அதிகரிக்கத் தான் வேண்டும். நடந்தே ஆக வேண்டும். எனவே நடத்து விப்பவர் நடத்து வித்துக் கொண்டிருக்கிறார் ஆனால் இப்பொழுது அதே போல் தந்தையை பின்பற்றி செய்யுங்கள். இப்பொழுது ஒவ்வொரு ஆத்மாவும் சக்தி சொரூபம் ஆகி விட வேண்டும். நீங்கள் யாருடைய தொடர்பில் வந்தாலும் அவர்கள் ஆன்மீகத்தை அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுது அந்த பாகம் நடக்க வேண்டும். இப்பொழுது நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் ஆனால் தான் நன்றாக ஆக வேண்டும் என்ற இந்த பிரேரணை கிடைக்கவில்லை. அதற்கான ஒரே ஒரு வழி - குழு ரூபத்தில் ஜுவாலா சொரூபம் ஆகுங்கள். ஒவ்வொருவரும் சைத்தன்ய கலங்கரை விளக்காக ஆகுங்கள். சேவாதாரியாக இருக்கிறீர்கள், அன்பானவராசு இருக்கிறீர்கள், ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை உள்ளவராக இருக்கிறீர்கள், இவை அனைத்துமே சரி தான் ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலை மேடையில் வந்து விட்டது என்றால், அனைவரும் உங்கள் எதிரில் விட்டில் பூச்சிக்குச் சமமாக சுற்றி வரத் தொடங்கி விடுவார்கள். இப்பொழுது தந்தை ஜோதியின் ஈர்ப்பு மட்டும் இருக்கிறது. மேலும் அனைத்து ஜோகிகளின் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது என்றால், என்ன ஆகும்? ஜோதியாகவோ இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது மேடையில் வரவில்லை. மேடையில் வந்து விட்டீர்கள் என்றால் பின்பு அபு மலையில் இருப்பவர்கள் எப்படி உங்கள் பின்னால் ஓடி வருகிறார்கள் என்று பாருங்கள். நீங்கள் அவர்களிடம் செல்லதற்கு அவசியம் இருக்காது ஆனால் அவர்களாகவே உங்களிடம் வந்து ஏதாவது சேவை இருக்கிறதா, ஐயா கூறுங்கள்! என்று கேட்பார்கள்.

இப்பொழுது செல்லமான குழந்தை ஆகியிருக்கிறீர்கள். இதிலேயோ சரி தான், குழந்தை மற்றும் தந்தையுடன் செல்லத்தனம் இருக்கிறது, உறவை வைத்து நடந்து கொள்வதிலோ சரியாக இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது மாஸ்டர் ஆசிரியர் ஆகி, மாஸ்டர் சத்குரு ஆகி மேடையில் வாருங்கள். இப்பொழுது இந்த இரண்டு

பாகங்களை செய்ய வேண்டியது இன்னும் மிச்சம் இருக்கிறது. புரிந்ததா? - நல்லது. மதுபன் வாசிகளை பாப்தாதா எப்பொழுதும் விசேஷ ஆத்மாக்களின் ரூபத்தில் பார்க்கிறார். எப்பொழுதும் தந்தையின் நம்பிக்கை தீடங்கள் மதுபன் நிவாசிகள். நீங்கள் அனைவரும் எப்பொழுதும் திருப்தியாகவோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? திருப்தியாக இருப்பது மற்றும் அனைவரையும் திருப்திப் படுத்துவது, இது தான் உங்கள் அனைவரின் நிரந்தரமான சுலோகன். எப்பொழுதும் உங்களுடைய அறிவுப்பு பலகையில் என்ன சுலோகன் எழுதப்பட்டிருக்கிறது. திருப்தியாக இருக்கவும் வேண்டும் மேலும் மற்றவர்களையும் திருப்திப்படுத்த வேண்டும். இந்த சான்றிதழை பெற்றவர் எதிர்காலத்திலும் இராஜ்ய பாக்கியத்தின் சான்றிதழைப் பெற்று விடுவார். மதுபன்னைச் சேர்ந்தவர்களோ இந்த சான்றிதழை பெற்றிருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதுமே அமிர்தவேளையில் தொடங்கி இந்த சுலோகனை நினைவில் கொண்டு வாருங்கள். எப்படி பலகையில் சுலோகன் எழுதுகிறீர்கள். அதே போல் நெற்றி என்ற பலகையின் மேல் இந்த சுலோகனை ஓட விடுங்கள். பிறகு அனைவரும் திருப்தியானவர்களாக ஆகி விடுவீர்கள். நல்லது

**வரதானம்: பரிவர்த்தனை சக்தி மூலமாக அனைவரின் நன்றிக்குப் பாத்திரம் ஆகக்கூடிய தடையை வென்றவர் ஆகுக!**

ஒருவேளை யாராவது உங்களுக்கு அபகாரம் செய்கிறார் என்றால், நீங்கள் ஒரு விநாடியில் அந்த அபகாரத்தை உபகாரமாக பரிவர்த்தனை செய்து விடுங்கள், யாராவது தன்னுடைய சுபாவ சம்ஸ்காரத்தின் மூலம் சோதனை ஆகி உங்கள் எதிரில் வருகிறார் என்றால் நீங்கள் ஒருவரின் நினைவு மூலம் அந்த ஆத்மாவிற்காகவும் இரக்க மனதின் உயர்ந்த சுபாவ சம்ஸ்காரத்தை தாரணை செய்து விடுங்கள், யாராவது தேகதாரியின் பார்வையோடு எதிரில் வருகிறார் என்றால் அவருடைய பார்வையை ஆத்மீகப் பார்வையில் பரிவர்த்தனை செய்து விடுங்கள், அந்த மாதிரி பரிவர்த்தனை செய்வதற்கான யுக்தி உங்களிடம் வந்து விட்டது என்றால் தடையை வென்றவர் ஆகி விடுவீர்கள். பிறகு தொடர்பில் வரும் அனைத்து ஆத்மாக்களும் உங்களை நன்றி உணர்வோடு பார்ப்பார்கள்.

**சுலோகன்: அனுபவங்களின் சொரூபம் ஆகி விட்டீர்கள் என்றால் முகம் மூலம் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்ற பொலிவு தென்படும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 29.12.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூர தேசத்து குழந்தைகளுடன் தூர தேசத்து பாப்தாதாவின் சந்திப்பு!

இன்று பாப்தாதா தன்னுடைய அன்பிற்குரிய அதாவது அன்பில் மூழ்கியிருக்கும். குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். தூர தேசத்திலிருந்து வந்திருக்கிறோம். தூர தேசத்திலிருந்து வந்திருக்கும் குழந்தைகளோடு தூர தேசத்து பாப்தாதா சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். எந்த அளவு குழந்தைகள் பாப்தாதாவை உள்ளப்பூர்வமாக நினைவு செய்தார்களோ அந்த உள்ளத்தின் நினைவிற்கு பிரதிபலனை வழங்குவதற்காக இதயத்திலேயே வீற்றிருக்கும் தந்தை வந்திருக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களாகத் தென்படுகிறீர்கள். தூரமான இடத்தில் இருந்த போதிலும் தன்னுடைய அன்பு நினைவுகளை யாரெல்லாம் அனுப்பியிருக்கிறார்களோ அந்த அனைத்து அன்பான ஆத்மாக்கள் ஒளி வடிவ ரூபத்தில் இந்தக் கூட்டத்தின் நடுவே பாப்தாதாவின் எதிரில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவின் எதிரில் மிகப் பெரிய சபை கூடியிருக்கிறது. உங்கள் அனைவரின் மனதில் அன்பு நினைவு எவ்வளவு நிரம்பியிருக்கிறதோ அந்த நினைவின் ரூபம். அனைவரின் ஒளி வடிவான ரூபம் அனைவருடன் இருக்கிறது. அனைத்து குழந்தைகளின் ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷியின் பாடலை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்த அளவு அன்பு நிறைந்த, குஷி நிறைந்த பாடல் பாடுவதை பாப்தாதா பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கவில்லை, பார்ப்பதின் கூடவே பாடலையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளின் மனதில், இதயத்தில் மற்றும் கண்களில் ஒரு தந்தையின் நினைவில் மட்டும் இருக்கும் ஒரே சீரான நிலையின் பொலிவு தென்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த நிலையில் நிலைத்திருக்கும் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம் இன்று சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். வாணி (முரளி) சொல்வதற்காக அல்ல. அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளின் உருவத்தைப் பார்ப்பதற்காக மட்டும் வந்திருக்கிறோம். மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜா குழந்தைகளிடம் இருந்து

நறுமணத்தைப் பெறுவதற்காக வந்திருக்கிறோம். அனைத்து குழந்தைகளும் தைரியத்தின் ஆதாரத்தில் அன்பின் பிரத்யக்ஷ பலனாக நேரெதிரில் சந்திப்பதை மிக நன்றாக செய்து காண்பித்திருக்கிறார்கள் விதவிதமான பந்தனங்களை கடந்து வந்து தனது இனிமையான வீட்டில் வந்து சேர்ந்து விட்டார்கள். அந்த மாதிரி பந்தனத்திலிருந்து விடுபட்ட குழந்தைகளுக்கு பாப்தாதா பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்.

சின்னச் சின்ன குழந்தைகளும் அதிசயம் செய்திருக்கிறார்கள். இந்த சிறு குழந்தைகள் சங்கமயுகத்தின் அலங்காரம். மேலும் எதிர்காலத்தில் என்ன செய்வீர்கள்? இப்பொழுது அலங்காரமாக இருக்கிறீர்கள், எதிர்காலத்தின் அதிகாரிகள் அனைவரின் உள்ளங்கையில் சொர்க்கத்தின். சுயராஜ்யத்தின் பூமி உருண்டை தென்படுகிறது. இந்தப் படத்தை வரைந்தவர் ஒருவருக்காக வரையவில்லை, உங்கள் அனைவருக்காகவும் வரைந்திருக்கிறார். தன்னுடைய படத்தை பார்த்திருக்கிறீர்களா? இது நம் அனைவரின் படம் என்று நினைக்கிறீர்களா? அல்லது ஒரு கிருஷ்ணருடையதா? யாருடையது? உங்கள் அனைவரினுடையதா அல்லது இல்லையா? அப்பொழுது இன்று நான் பிராமணனாக இருக்கிறேன். நாளை பரிஷ்தா ஆகி, தேவ பதவி உடையவனாக கண்டிப்பாக ஆவேன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? ஞானத்தின் கண்ணாடி மூலம் பரிஷ்தாவிலிருந்து தேவதை' என்ற தன்னுடைய அந்த படம் எப்பொழுதும் தென்படுகிறதா? எப்படி உங்கள் அனைவரின் இதயத்திலிருந்து வெளியாகும் என்னுடைய பாபா என்ற சப்தம் எப்பொழுதும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அதே போன்று எப்பொழுதும் ஞானத்தின் கண்ணாடியில் தன்னுடைய படத்தைப் பார்த்துக் கொண்டே இது என்னுடைய படம் என்ற வார்த்தை வெளியாகிறதா? 'என்னுடைய பாபா' என்னுடைய படம். ஏனென்றால் இப்பொழுது தன்னுடைய இராஜ்யத்தில் இராஜ்யம் செய்வதற்கான இராஜ்ய அதிகாரி சொரூபத்தின் மிக அருகில் வந்து கொண்டிருக்கிறீர்கள். எந்தவொன்று அருகில் வந்து விடுமோ அது தெளிவாக இருப்பதாக அனுபவம் ஆகும். அப்படி தன்னுடைய பரிஷ்தா சொரூபம் மற்றும் தேவதா சொரூபம் தெளிவாக அனுபவம் ஆகிறதா? நல்லது.

இன்றோ விசேஷமாக குழந்தைகள் அழைத்திருக்கிறார்கள். மேலும் பாப்தாதா குழந்தைகளின் கட்டளைப்படி நடப்பவராக இருக்கும் காரணத்தினால் சந்திக்க வந்துள்ளார். விசேஷமாக ஓரிரு ஆத்மாக்களின் காரணமாக அனைவரையும் சந்திப்பதாக ஆகி விட்டது. இது தான் முழு ஆர்வத்திற்கான பிரதிபலன். இரட்டை

வெளிநாட்டினர் தனித்தனியாக சந்திப்பதை விரும்புகிறார்கள். எப்படி தந்தை குழந்தைகளின் இதயத்தைப் பார்க்கிறார். அது போலவே தந்தையும் குழந்தைகளின் இதயத்திற்கான பதிலைக் கொடுக்கிறார். அப்படி சந்தித்துக் கொண்டே இருப்போம். இப்பொழுது அல்லாவின் பூந்தோட்டத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். சந்தித்துக் கொண்டே இருப்போம். நல்லது.

அந்த மாதிரி அன்பின் பந்தனத்தில் மாட்டிக்கொள்ளும் மற்றும் கட்டிப்போடும், எப்பொழுதும் அன்பில் மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையின் குணங்களின் பாடலை பாடக்கூடிய குஷி நிறைந்த குழந்தைகளுக்கு, எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளுக்கு, எப்பொழுதும் குஷியர்க இருப்பதற்கான வாழ்த்துக்களுடன் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**சின்ன சின்ன குழந்தைகளுடன் சந்திப்பு:** சின்ன சின்ன குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மிகவும் குஷி அடைகிறார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் என்ன தென்படுகிறது? உங்கள் நெற்றியில் என்ன இருக்கிறது? நீங்கள் இரத்தினத்திற்குச் சமமாக பிரகாசமாக இருக்கிறீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இரத்தினத்தைப் பார்க்கிறார். உங்கள் அனைவரின் மனதில் என்ன எண்ணம் இருக்கிறது. சின்ன சின்ன குழந்தைகள் என்றால், பாப்தாதாவின் கழுத்தின் மாலையின் மணிகள். நீங்கள் குழந்தைகள் எந்த வரிசை எண்ணில் இருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? (முதல் நம்பரில்) எவ்வளவு நல்ல லட்சியம் வைத்திருக்கிறீர்கள். பாப்தாதா சிறு குழந்தைகளை முன்னுக்கு வைப்பார். பின்னுக்கு வைக்க மாட்டோம். ஏனென்றால், சிறு குழந்தைகள் நீங்கள் அனைவரும் பிறந்ததிலிருந்தே தூய்மையாக இருக்கிறீர்கள் மேலும் தூய்மையான ஆத்மாக்களின் தொடர்பில் இருக்கிறீர்கள். எனவே தூய்மையான ஆத்மாக்களை எப்பொழுதும் கண்களில் வைக்கின்றோம். அப்படி நீங்கள் அனைவரும் என்ன ஆகி விட்டீர்கள்? கண்களின் நட்சத்திரங்கள் கண்மணி ஆகி விட்டீர்கள் இல்லையா! அந்த மாதிரி நினைக்கிறீர்களா? குழந்தைகளின் அன்பு நினைவு நீங்கள் இங்கு வருவதற்கு முன்பாகவே வந்து சேர்ந்து விட்டது. அனைவரும் மிக அதிகமாக நல்ல நல்ல படங்களையும் அனுப்பியிருக்கிறீர்கள். நல்ல நல்ல லட்சிய எண்ணங்களை வைத்திருக்கிறீர்கள். யாரெல்லாம் என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்களோ, சிலர் ஆசிரியர் ஆகிச் செல்வேன். சிலர் நம்பர் ஒன் பிரம்மா குமாரி. பிரம்மா குமார் ஆகிச் செல்வேன்! ஆக, நம்பர் ஒன் டீச்சர் மற்றும் நம்பர் ஒன் பிரம்மா குமார், குமாரியின்

விசேஷமாக என்ன எடுத்துச் செல்வீர்கள்? மிக சுலபமானது. ஒரு சின்ன விஷயத்தை மட்டும் நினைவில் வைக்க வேண்டும். ஒரு தந்தையின் நினைவில் மட்டும் இருக்க வேண்டும். ஒரு தந்தையின் செய்தியை ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலை வந்தாலும், பிரச்சனை வந்தாலும் ஒரே சீராக இருக்க வேண்டும். இவர் தான் நம்பர் ஒன் பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று நினைக்க வேண்டும். அப்படியானால் சுலபமா அல்லது கடினமா?

அனைவரும் காலை எழுந்தவுடனேயே (பாபாவிற்கு) குட் மார்னிங் (காலை வணக்கம்) சொல்கிறீர்களா? நினைவில் அமர்கிறீர்களா? இப்பொழுதிலிருந்தும் தினசரி அமிர்தவேளையில் எழுந்தவுடனேயே முதலில் நினைவில் அமருங்கள். நல்லது சின்னஞ்சிறு குழந்தைகள் உங்கள் அனைவருக்கும் அனைத்தையும் விட விருப்பமான பொருளாக எது இருக்கிறது? (டோலி) (பிறகு பாப்தாதா அனைவருக்கும் டோலி வழங்கினார்)

**டாக்டர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** அனைவரும் சேர்ந்து ஒரு நொடியில் நோய் தீர்வதற்கான ஏதாவது மருந்தை கண்டுபிடித்திருக்கிறீர்களா? இன்றைய நாட்களில் நேரம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி ஒரு நொடியில் நோய் குணமாவதற்கான ஆசை வைத்திருக்கும் ஆத்மாக்கள் அனேகர் இருக்கிறார்கள் கண்காட்சியில் புரிய வையுங்கள், சொற்பொழிவு செய்யுங்கள், ஆனால் அனைத்து சொற்பொழிவையும் கேட்டுக் கொண்டே, கண்காட்சியைப் பார்த்துக் கொண்டே ஒரு நொடியில் நோய் குணமாக வேண்டும் என்ற ஆசை வைக்கிறார்கள். அனைத்து ஆத்மாக்களிடம் இரண்டு ஆசைகள் இருக்கின்றன. ஒன்று நிரந்தரமாக குணமடைய வேண்டும், இன்னொன்று விரைவில் குணமடைய வேண்டும். ஏனென்றால் அனேக விதமான துக்கம், வேதனையை சகித்துக் சகித்து அனைத்து ஆத்மாக்களும் களைப்படைந்து இருக்கிறார்கள். எனவே இரட்டை டாக்டர்கள் உங்களிடம் எந்த ஆசையோடு வருவார்கள்? இந்த இரண்டு ஆசைகளை வைத்துக் கொண்டு வருவார்கள். உங்களுக்குள் சந்திப்புக் கூட்டம் (மீட்டிங்) வைத்திருந்தீர்கள், அதில் அந்த மாதிரி ஏதாவது ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதா? மெடிடேஷனிலும் (தியானத்திலும்) சுலபமான வழியைக் கண்டுபிடித்தீர்களா? கண்காட்சியோ உருவாக்குவீர்கள் மேலும் உருவாக்கப்பட்டும் இருக்கிறது ஆனால் இந்தப் படங்களில் அந்த மாதிரி சாறை நிரப்புங்கள் அந்த சாறத்தின் பக்கம் கவனம் சென்றவுடனேயே அமைதி மற்றும் சுகத்தின் அனுபவம் செய்ய வேண்டும். ஏனென்றால் விஸ்தாரத்தையோ அனைவரும் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் ஒவ்வொரு படத்திலும் ஆன்மீகத்தன்மை இருக்க வேண்டும். எப்படி ஏதாவது ஒரு

# 1981 அவ்யக்த முரளி

பொருளில் வாசனை திரவியத்தை பூசுகிறீர்கள், நறுமணத்தைப் போடுகிறீர்கள் என்றால், அந்த நறுமணம் நிச்சயம் அனைவரையும் தன் பக்கம் கவர்ந்திழுக்கும். எங்கிருந்தோ நறுமணம் வந்து கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள். அப்படி படங்களையோ நன்றாக உருவாக்குங்கள் ஆனால் படங்களின் கூடவே என்ன மற்றவர்கள் மீது பிரபாவம் ஏற்படுமோ அந்தப் படங்களிலும் உயிரோட்டம் நிரம்பி இருக்க வேண்டும் எப்படி இங்கே மதுபன்னில் பாருங்கள். ஜடத்திலும் உயிரோட்டத்தை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? ஒவ்வொரு இடத்திற்கும் செல்லுங்கள் விரும்பினால் குடிலுக்குச் செல்லுங்கள் ஆனால் என்ன அனுபவம் செய்கிறீர்கள். சைத்தன்யத்தை அதாவது உயிரோட்டத்தை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? இதே முறையில் வாயுமண்டலத்தை அந்த மாதிரி உருவாக்குங்கள், எண்ண அலைகளை அந்த மாதிரி பரப்புங்கள் அதன் காரணமாக படங்களிலும் உயிரோட்டத்தை அனுபவம் செய்ய வேண்டும். எந்தவொரு ஸ்டாலை உருவாக்கினாலும், எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் சில இடங்களில் பசுமையின் உணர்வை ஏற்படுத்துகிறார்கள். சில இடங்களில் கடலின், சில இடங்களில் தண்ணீரின் உணர்வை ஏற்படுத்துகிறார்கள். அந்த மாதிரி ஸ்டாலை உருவாக்குகிறார்கள், அதில் சென்றவுடனேயே கடலில் வந்து விட்டோம், மலை உச்சியில் வந்து விட்டோம் என்று அனுபவம் ஏற்படுகிறது. இதே முறையில் சுற்றுப்புறம் அந்த மாதிரி இருக்க வேண்டும். நாம் சுகமான இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டோம் என்று அனுபவம் செய்ய வேண்டும். என்ன முயற்சி செய்திருக்கிறீர்களோ அதை நன்றாக செய்திருக்கிறீர்கள். சந்திப்பும் நடந்தது, திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறீர்கள். இப்பொழுது புள்ளி ரூபமாகி ஞானத்துளிகளைக் கொடுப்பதற்கான அவசியம் இருக்கிறது. ஞான விஷயங்கள் மூலமாக ஞானத்துளிகளைக் கூறுவது என்பதற்கான நேரம் இப்பொழுது இல்லை ஆனால் புள்ளி ரூபமாக ஆகி ஞானத் துளிகளை சுருக்கமாகக் கொடுக்க வேண்டும். அந்த மாதிரி தன்னையும் சக்திசாலி நிலையில் எப்பொழுதும் கொண்டு வாருங்கள், மேலும் மற்றவர்களையும் அந்த மாதிரி நிலைக்கு இழுங்கள். அதன் காரணமாக உங்கள் எதிரில் வந்தவுடனேயே நான் அந்த மாதிரி இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன், இங்கு எனக்கு என்ன பிராப்தி வேண்டுமோ அதை கிடைக்கும் என்று அனுபவம் செய்ய வேண்டும். எப்படி ஸ்தூல மருத்துவ சிகிச்சை மூலமாக இந்த டாக்டர் மிக நல்ல டாக்டர், இங்கு கட்டாயம் குணமாகி விடும் என்று நோயாளியை நம்பிக்கையில் கொண்டு வருகிறீர்கள் இல்லையா? அதே போல் ஆன்மீக மருத்துவ சிகிச்சையிலும் அந்த மாதிரி சக்திசாலியான நிலை இருக்க வேண்டும். அதன் மூலம் இங்கே வந்து சேர்ந்து விட்டோம் என்றால், பிராப்தி அவசியம் ஏற்படும் என்று அனைவருக்கும் நம்பிக்கை வந்து விட வேண்டும்.

இரண்டு விஷயங்களையும் எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இரண்டின் சமநிலை இருக்கட்டும். அதுவும் அவசியம், தான் ஏனென்றால், இன்றைய நேரத்திற்கு ஏற்றபடி பல ஜென்மங்களின் கணக்கு வழக்குகள் அதாவது கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதையும் அவசியம் அகற்ற வேண்டும். கர்ம விளைவுகளின் வேதனையின் கணக்கை அகற்றுவதற்கு இந்த ஸ்தூல மருந்துகள் இருக்கின்றன. மேலும் கர்மயோகியாக ஆக்குவதற்காக இந்த ஆன்மீக மருந்து இருக்கிறது இப்பொழுது அனைத்தையும் அனுபவித்து அழித்து விடுவார்கள். எண்ணம் மூலமாகவோ, உடல் மூலமாகவோ. அனைத்து ஆத்மாக்களும் முக்திதாமம் செல்வார்கள் இல்லையா? அங்கு நோயாளியும் இருக்க மாட்டார். டாக்டரும் இருக்க மாட்டார். இதனுடைய பயிற்சி இறுதியில் இருக்கும் டாக்டராக யார் இருப்பாரோ அவரால் ஒன்றும் செய்ய முடியாது. அந்த அளவு நோயாளிகள் இருப்பார்கள். அந்த நேரம் தன்னுடைய திருஷ்டி மூலமாக, எண்ண அலைகள் மூலமாக, அவர்களுக்கு தற்காலிக வரதானம் மூலமாக அமைதி கொடுக்க முடியும். அனேகர்கள் இறக்கவும் செய்வார்கள். இறந்தவர்களை எரிப்பதற்கும் நேரம் இருக்காது. ஏனென்றால், இது அதிக அளவிற்கு இன்னும் செல்ல வேண்டும் இல்லையா? அதிக அளவில் சென்று, பிறகு முடிவு ஏற்படும். இன்றைய நாட்களின், செய்தியில் பார்த்தீர்கள் என்றால் ஏதாவது புதிய நோய் பரவுகிறது என்றால், எவ்வளவு வேகமாக பரவுகிறது. அந்த நோய்க்காக மருந்தை டாக்டர் எடுப்பதற்கு முன்பே பலர் இறந்து விடுகிறார்கள். ஏனென்றால், அளவுக்கு அதிக நிலையில் சென்று கொண்டிருக்கிறது. மேலும் எப்பொழுது அந்த மாதிரி நடக்குமோ அப்பொழுது தான் டாக்டர்களும் நம்மையும் விட உயர்ந்த ஒன்று இருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். இப்பொழுதோ அபிமானத்தின் காரணமாக ஆத்மா என்று ஒன்று இல்லவே இல்லை என்று கூறுகிறார்கள். மருத்துவ சிகிச்சை தான் அனைத்தும் முடிவு என்று கூறுகிறார்கள். பிறகு அவர்களும் அனுபவம் செய்வார்கள். எப்பொழுது எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை. என்ற நிலை அவர்களுடைய பார்வை எங்கே செல்லும்? இப்பொழுதோ புதுப்புது நோய்கள் இன்னும் வரப்போகின்றன ஆனால் இந்த புது நோய்கள் புதிய மாற்றத்தைக் கொண்டு வரும். நீங்களோ மிகுந்த பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள், விநாஷத்திற்கு முன்பே தன்னுடைய அதிகாரத்தை அடைந்து விட்டீர்கள். மற்ற அனைவரும் ஐயோ! நாங்கள் ஒன்றுமே அடையவில்லை, என்று கதறுவார்கள். மேலும் நீங்கள் பாப்தாதாவுடன் இதயசிம்மாசனதாரி ஆகி, அவர்களுக்கு வரதானம் கொடுப்பீர்கள். அப்படியானால் நீங்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள். எப்பொழுதுமே குஷியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுதும் இதே மகிழ்ச்சியில் ஆடிக் கொண்டே அனைத்து நோயாளிகளையும் எப்பொழுதும்

குஷியின் ஊஞ்சலில் ஆட்டுங்கள். பிறகு உங்களையே பகவானின் அவதாரம் என்று நம்பத் தொடங்கி விடுவார்கள் ஆனால் நீங்கள் பிறகு சத்தியமானவரின் பக்கம் சைகை காண்பிப்பீர்கள். எப்பொழுது அந்த மாதிரி பாவனையில் வருவார்களோ அப்பொழுது சமிக்ஞை செய்ய முடியும் இல்லையா? எனவே அனைவரும் அந்த மாதிரி தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? இது அனைத்து டாக்டர்களின் மிக நல்ல குரூப் இப்பொழுது இந்த மாதிரியே வி.ஐ.பி -களின் குரூப்பை அழைத்து வாருங்கள். யார் எப்படி இருப்பாரோ அப்படிப்பட்டவரைத் தான் அவரும் அழைத்து வருகிறார் இல்லையா? எனவே எத்தனை டாக்டர்கள் வந்திருக்கிறீர்களோ அத்தனை வி.ஐ.பி.-கள் அடுத்து வருவார்கள் தான் இல்லையா? வெளிநாட்டிலும் அனுபவத்தின் எதிரில் அனைவரும் தலைவணங்குவார்கள். அறிவியல் அமைதியின் சக்தியின் எதிரில் அவசியம் தலைவணங்கும். இப்பொழுது பெரிய பெரிய விஞ்ஞானிகள் கூட நம்பிக்கை இழந்தவர்களாக ஆகி விட்டார்கள். எங்கே செல்வார்கள்? எங்கு அமைதி நிறைந்தவர்களாகிய உங்களுடைய கிரணங்கள் தென்படுகிறதோ அங்கே தான் அவர்களுடைய பார்வை செல்லும், உங்களுடைய ஐடம் (பொருளின்) மூலமாகத் தான் அவர்களும் ஆடம் (அணுகுண்டு) உருவாக்கியிருக்கிறார்கள். உங்களைத் தான் காப்பி செய்திருக்கிறார்கள் இல்லையா? ஒருவேளை ஆத்மீக சக்தி இல்லை என்றால், இந்த அணுகுண்டுகளை உருவாக்குபவர் யார்?

எப்பொழுது உலகின் நாலாபுறங்களில் இருள் சூழ்ந்து விடுகிறதோ அப்பொழுது உங்களுடைய கிரணங்கள் இருளில் தெளிவாகத் தென்படும். ஞானத்தின் ஒளி, குணங்களின் ஒளி, சக்திகளின் ஒளி, அனைத்து ஒளிகளும் லைட் ஹவுசின் வேலையைச் செய்யும் மதுபன்னில் வந்தீர்கள் புத்துணர்வும் அடைந்தீர்கள் மேலும் சேவையும் நடந்தது. மேலும் பிரத்யக்ஷ பலனும் கிடைத்து விட்டது. திட்டங்கள் என்ன உருவாக்கியிருக்கிறீர்களோ அதை வரும் காலத்தில் செய்து கொண்டே இருங்கள். பாப்தாதாவிடமும் உங்களுடைய எண்ணம் வந்து சேர்ந்து விடுகிறது. காகிதத்திலோ அதற்குப் பின்பு தான் எழுதுகிறீர்கள் நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: சங்கமயுக பிராமணர்களின் அலங்காரம் -அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து குணங்கள்!** எப்பொழுதும் தந்தையின் நினைவின் குடைநிழலின் கீழ் இருக்கிறீர்களா? எப்பொழுதும் தந்தையின் குடைநிழல் என் மேல் இருக்கிறது என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எப்படி சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்திலும் மலையைக் குடைநிழலாக ஆக்கியதைப் பார்த்தீர்கள். முழு கலியுக பிரச்சனைகள் என்ற

## 1981 அவ்யக்த முரளி

மலையை தந்தையின் நினைவு மூலமாக பிரச்சனை இல்லை, மாறாக, குடைநிழலாக ஆக்கி விட்டீர்களா? அந்த மாதிரி பிரச்சனைகளுக்கு சமாதானம் செய்யக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறீர்களா? எந்த விதமான பிரச்சனை உங்களை பலஹீனமானவராக ஆக்கவில்லையே? விக்ன வினாஷக் (தடைகளை அழிப்பவராக) இருக்கிறீர்களா? முழு ஈடுபாட்டின் ஆதாரத்தில் தடை என்ன மாதிரி அனுபவம் ஆகிறது. ஒரு பொம்மை மாதிரி அனுபவம் ஆகிறதா? இதைத் தான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று சொல்வது. அப்படியானால் அனைத்து சக்திகளும் உங்களுடைய வாழ்க்கையின் ஒரு அலங்காரமாக ஆகி விட்டதா? சங்கமயுக பிராமணர்களின் அலங்காரமே அனைத்து சக்திகள் தான். அப்படி நீங்கள் அனைத்து சக்திகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மூர்த்தி. இப்பொழுது குணங்கள் மற்றும் சக்திகளால் அலங்கரிக்கப்பட்டவர். மேலும் எதிர்காலத்தில் ஸ்தூல நகைகளால் அலங்கரிக்கப்பட்டவர் ஆவீர்கள் ஆனால் உங்களுடைய அலங்காரம் முழுக் கல்பத்திலும் மிக உயர்ந்தது. 16-அலங்காரம், 16-கலைகள் நிரம்பியவர். எனவே இப்பொழுதிலிருந்தே சம்ஸ்காரத்தை போட வேண்டும் இல்லையா? அந்த மாதிரி அப்படி அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகள் நீங்கள். நல்லது.

**வரதானம்: எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு மூலமாக பற்றுதலை வென்று நினைவு சொரூபமாக ஆகக்கூடிய ஆடாத அசையாதவர் ஆகுக!**

யார் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வில் இருக்கிறாரோ அவர் ஒருபொழுதும் ஏதாவது காட்சியைப் பார்த்து பயப்படுவதோ மற்றும் ஆடுவதோ கிடையாது. எப்பொழுதும் ஆடாத அசையாதவராக இருப்பார். ஏனென்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு மூலம் பற்றுதலை வென்று நினைவு சொரூபமாக ஆகி விடுகிறார்கள். ஒருவேளை ஏதாவது சிறிய பெரிய காட்சிகளைப் பார்த்து அம்ச மாத்திரமாவது மனதில் குழப்பம் ஏற்படுகிறது அல்லது பற்றுதல் உருவாகிறது என்றால், அங்கதனுக்கு சமமாக ஆடாதவர் அசையாதவர் என்று கூற மாட்டோம். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வில் கம்பீரத்தின் (உள்ளடக்குவதின்) கூடவே இரமணீகரமும் நிரம்பியிருக்கிறது.

**சுலோகன்: இராஜ்ய அதிகாரியின் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆகியிருப்பது தான் இராஜரிஷியின் அடையாளம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1981 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பலமற்றவர்களுக்கு பலம் கொடுக்கக்கூடிய மிக மகா பலவான் ஆகுங்கள்!

பாப்தாதா எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் முன்னேறும் கலை உள்ள குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு நொடியில் அசரீரி ஆகுக! என்ற வரதானம் கிடைத்தது மற்றும் ஒரு நொடியில் மேலே பறந்தார். அசரீரி ஆவது என்றால் உயரே பறப்பது உடல் உணர்வில் வருவது என்றால், கூண்டுப் பறவையாக ஆவது. இந்த நேரம் அனைத்து குழந்தைகளும் அசரீரி பவ என்ற வரம் பெற்று பறக்கும் பறவைகளாக ஆகி விட்டார்கள். இந்தக் கூட்டம் சுதந்திர ஆத்மாக்கள் அதாவது பறக்கும் பறவைகளின் கூட்டம். நீங்கள் அனைவரும் சுதந்திரமாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? கட்டளை கிடைத்தவுடன் தன்னுடைய இனிமையான வீட்டிற்குச் சென்று விடுங்கள் என்றால், எவ்வளவு நேரத்தில் செல்ல முடியும்? ஒரு நொடியில் செல்ல முடியும் தான் இல்லையா? கட்டளை கிடைத்தது, உடன் தனது மாஸ்டர் சர்வ சக்திவான் நிலை மூலமாக, தன்னுடைய அனைத்து சக்திகளின் கிரணங்கள் மூலமாக இருளில் வெளிச்சத்தைக் கொண்டு வாருங்கள், ஞான சூரியன், இருளை அகற்றிவிடுங்கள் என்றால், ஒரு நொடியில் எல்லைக்கப்பாற்பட்ட சேவையை செய்ய முடியுமா? அந்த மாதிரி மாஸ்டர் ஞான சூரியன் ஆகியிருக்கிறீர்களா? அறிவியலின் சாதனம் ஒரு நொடியில் இருளிருலிந்து வெளிச்சத்தைக் கொண்டு வர முடியும் என்றால், ஞான சூரியன் குழந்தைகள் நீங்கள் எவ்வளவு நேரத்தில் வெளிச்சத்தைக் கொண்டு வர முடியும்? அறிவியலை விட அமைதியின் சக்தி மிக உயர்ந்தது. ஒரு நொடியில் நினைவு என்ற பொத்தானை அழுத்தி, இருளில் அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை வெளிச்சத்தில் கொண்டு வருகிறோம் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்?

ஏழு நாளில் ஏழு மணி நேர பாடத்தை கொடுத்து இருளிலிருந்து வெளிச்சத்தில் கொண்டு வர முடியும் அல்லது மூன்று நாள் யோகா முகாமில் வெளிச்சத்தைக் கொண்டு வர முடியுமா? அல்லது இரண்டாம் நிலை வரை வந்து சேர்ந்திருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? இப்பொழுது மணி நேரங்கள்

# 1981 அவ்யக்த முரளி

கணக்குப்படி சேவையின் வேகம் இருக்கிறது அல்லது நிமிடம் அல்லது விநாடியின் வேகம் வரை வந்து சேர்ந்து விட்டீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? இப்பொழுது நேரம் வேண்டுமா அல்லது ஒரு நொடி வரை வந்து சேர்ந்து விட்டீர்கள் என்று நினைக்கிறீர்களா? எப்படி ஒரு நொடியில் முக்தி, ஜீவன்முக்தியின் ஆஸ்தியை அடையுங்கள் என்று சவால் விடுகிறீர்கள். அதை நடைமுறையில் கொண்டு வருவதற்காக தயாராகி சுயமாற்றத்தின் வேகம் ஒரு நொடியில் ஏற்படுகிறது என்ற அந்த வேகம் வரை வந்து சேர்ந்து விட்டீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? பழைய வருடம் முடிவடைகிறது. புதிய வருடம் வந்து கொண்டிருக்கிறது. அப்படி நீங்கள் அனைவரும் சங்கமயுகத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். எனவே பழைய வருடத்தில் சுயமாற்றம் மற்றும் உலக மாற்றத்தின் வேகம் எதுவரை வந்து சேர்ந்திருக்கிறது? அதிவேகம் என்று இருந்ததா? ரிசல்ட்டையோ பார்ப்போம் இல்லையா? அப்படியானால் இந்த வருடத்தின் ரிசல்ட் தனக்காக, உறவினர் மற்றும் நெருக்கத்தில் இருப்பவர்களுக்காக மற்றும் உலக சேவைக்காக எப்படி இருந்தது? இந்த வருடத்தின் லட்சியம் என்ன கிடைத்திருக்கிறது? தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? பறக்கும் பறவை மற்றும் பறக்கும் கலை. அப்படியானால் இந்த லட்சுமி நாராயணனின் வேகம் என்னவாக இருந்தது? எப்பொழுது அனைவரின் வேகம் ஒரு நொடி வரை வந்தடையும் என்றால் என்னவாகும்? தன்னுடைய வீடு, தன்னுடைய இராஜ்யம் மேலும் தன்னுடைய வீட்டிற்கு திரும்பி இராஜ்யத்தில் வந்து விடுவோம்.

எனவே புதிய வருடத்தில் புதிய ஊக்கம், ஒவ்வொரு எண்ணம் மற்றும் விநாடியில் ஒவ்வொரு காரியத்தில் பிராப்தியின் வெற்றியின் புதுமை இருக்கட்டும். இப்பொழுது நாளையிலிருந்து என்ன தொடங்கும்? புது வருடமோ தொடங்கும் ஆனால் என்ன கூறுவோம்? புது வருடம் எங்கிருந்து தொடங்கும்? உலகத்திலும் 1-1 லிருந்து தொடங்கும் இல்லையா? மேலும் நீங்கள் என்ன தொடங்குவீர்கள்? அதுவோ 1லிருந்து தொடங்கும். உங்களுடையது என்னவாக இருக்கும்? ஒன் மற்றும் வின். ஒவ்வொரு எண்ணத்திலும் வின் அதாவது வெற்றி இருக்கட்டும். இந்த வருடத்தில் ஒவ்வொரு நாளும் உங்களுடைய நெற்றியில் எந்த திலகம் இடுவீர்கள்? 'வெற்றியின் திலகம்'. எந்த சுலோகனை நினைவில் வைத்துக் கொள்வீர்கள்? வெற்றி இரத்தினம் நான் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவன். வெற்றி அடைந்திருந்தேன், வெற்றி அடைந்து கொண்டிருக்கிறேன் மேலும் எப்பொழுதுமே வெற்றி அடைபவனாக இருப்பேன். எந்த கிரீடத்தை அணிவீர்கள்? 'லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) இந்த இரட்டை கிரீடங்களை தாரணை செய்ய வேண்டும். ஏனென்றால் லைட் இருக்கிறது மற்றும் மைட் குறைவாக இருக்கிறது என்றால், எப்பொழுதும் சித்தி சொரூபமாக இருக்க

முடியாது. லைட்டுடன் சேர்ந்து மைட்டும் இருக்கிறது என்றால் தான் எப்பொழுதும் வெற்றியுடையோராய் இருப்பீர்கள் நீங்கள் லைட் மற்றும் மைட்டின் இரட்டை கிரீடம் அணிந்தவர்கள். கங்கணமாக (வளையலாக) என்ன அணிவீர்கள்? கங்கணமும் அவசியம் தான் இல்லையா? எந்த கங்கனம் பிடித்திருக்கிறது? தூய்மையின் கங்கணமோ இருக்கிறது ஆனால் இந்த வருடம் புதிய கங்கணமாக எதை அணிவீர்கள்? (சிலர் சகயோகத்தின் கங்கணம் என்று கூறினார்கள், சிலர் சம்ஸ்காரம் ஒத்துப்போவதின் கங்கணம் என்று கூறினார்கள், அப்படி அனேக பதில்கள் கிடைத்தன) அப்படியென்றால் முழு கையுமே கங்கணங்களால் நிரம்பி விடும்.

இந்த வருடத்தில் எப்பொழுதும் உற்சாகத்தில் இருப்பதோடு அனைவரையும் உற்சாகத்தில் முன்னேற்றி சென்று கொண்டே இருங்கள். இந்த விசேஷ கங்கணத்தைக் கட்டுங்கள். தன்னுடைய உற்சாகத்தையும் குறைக்காதீர்கள், மற்றவர்களுடைய உற்சாகத்தையும் குறைய வைக்காதீர்கள். இதற்காக எப்பொழுதும் கங்கணத்தை உறுதியாக வைத்துக் கொள்வதற்காக மற்றும் இருக்கமானதாக வைத்துக் கொள்வதற்காக ஒரு விஷயத்தை மட்டும் எப்பொழுதும் நினைவில் வையுங்கள் -ஒவ்வொரு விஷயத்திலும் அது தனக்காக இருந்தாலும், சரி மற்றவர்களுக்காக இருந்தாலும் சரி, முன்னேறிச் செல்வதற்கும் மற்றவர்களை முன்னேற்றுவதற்காகவும் வளைந்து கொடுப்பது தான் உண்மையான தங்கம் ஆவது நல்லது -கங்கனத்தையும் அணிந்து விட்டீர்கள். இப்பொழுது விசேஷமாக சேவைக்கான லட்சியமாக என்ன வைப்பீர்கள்? எப்படி இன்றைய அரசாங்கங்கள் ஒவ்வொரு வருடத்திற்கான விசேஷ காரியங்கள் என்ன செய்ய வேண்டும் என்று திட்டங்களை உருவாக்குகிறார்கள். அந்த அரசாங்கமோ உடல் ஊனமுற்றவர்களுக்காக உருவாக்கினார்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்? எப்படி பலமற்றவர்களுக்கு பலம் கொடுப்பவரே என்று தந்தையின் மகிமையைப் பாடுகிறீர்கள். எப்படி பலமற்ற ஆத்மாக்களை ஸ்தூலமாக அறிவியல் சாதனங்கள் மூலமாக பலம் நிரம்பியவராக ஆக்கி விடுகிறார்கள். முடமானவருக்கு நடப்பதற்கான சக்தி கொடுத்து விடுகிறார்கள். இதே விதமாக ஒவ்வொரு பலஹீனத்திற்கும் சக்தியின் சாதனம் கொடுத்து விடுகிறார்கள். அதே போன்று நீங்கள் அனைவரும் பிராமண குடும்பத்தில் இருந்தாலும் சரி, உலகிலுள்ள ஒவ்வொரு ஆத்மாக்களுக்கு, பலமற்றவர்களுக்கு பலம் கொடுக்கக்கூடிய மிக பலம் நிரம்பியவராக ஆகுங்கள். எப்படி அவர்கள் ஏழ்மையை அகற்று என்ற கோஷம் இடுகிறார்கள். அதே போல் நீங்கள் பலமின்மையை அகற்றுங்கள் தைரியம் மற்றும் உதவி, இதைக் கருவியாகி தந்தையிடமிருந்து பெற்றுக் கொடுங்கள். அப்படி இந்த

வருடத்திற்கான விசேஷ கோஷமாக என்ன இருக்கிறது? 'பலமின்மையை அகற்றுங்கள். அப்பொழுது தான் எப்பொழுதும் உற்சாகம் ஊட்டுவதற் கான என்ன சுலோகன் கிடைத்திருக்கிறதோ அதை நடைமுறையில் கொண்டு வர முடியும். புது வருடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

வெளிநாட்டினருக்கு புது வருடத்தின் மகத்துவம் அதிகம் இருக்கிறது. அப்படி புது வருடத்தின் மகத்துவம் இந்த மகான் நிலை மூலம் எப்பொழுதும் இருக்கும். எனவே இந்த புது வருடத்தில் அனைத்து மகான் நிலை மூலமாக சித்தி வெற்றி சொரூபம், சித்தி அடையக்கூடிய, அனைத்து காரியங்கள் சித்தி ஆகக்கூடிய, அனைவருக்கும் சித்தி பிராப்தி செய்வதற்கான ஒரு நொடியின் விதியைக் கூறுங்கள். அந்த மாதிரி சித்தியின் வருடத்தைக் கொண்டாடுங்கள் காரியங்கள் அனைத்தும் சித்தி ஆகட்டும் எண்ணங்களும் சித்தி ஆகட்டும். மேலும் சொரூபமும் எப்பொழுதும் சித்தி சொரூபமாக இருக்கட்டும், அப்பொழுது தான் பிரத்யக்ஷம் மற்றும் வெற்றி முழக்கத்தின் முரசு கொட்டும். அறிவியல் எப்பொழுதும் சித்தி சொரூபமாக இருப்பதில்லை ஆனால் நீங்கள் அனைவரும் எப்பொழுதும் சித்தி சொரூபமானவர்கள் (இன்று மின்சாரம் இடையிடையே அதிகமாக தடை ஏற்பட்டுக் கொண்டிருந்தது). உங்களுடைய இராஜ்யத்தில் இந்த பிரச்சனை இருக்குமா? உங்களுடைய இனிமையான இல்லத்திலோ இதற்கான அவசியமே இருக்காது. எனவே இப்பொழுது தன்னுடைய இனிமையான இல்லத்தை மற்றும் இனிமையான இராஜ்யத்தை அருகில் கொண்டு வாருங்கள். அதாவது நீங்களே அருகில் செல்லுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஒருவரின் நினைவில் இருக்கக்கூடிய, ஒருவருடன் அனைத்து சம்மந்தங்களையும் இணைக்கக்கூடிய, எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் இருக்கக்கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான, பாப்தாதாவை தன் மூலமாகவும் சேவை மூலமாகவும் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, பிரத்யக்ஷ பலன் சொரூப. மிக அன்பான மற்றும் நெருக்கமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெளிநாட்டுக் குழந்தைகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு நைரோபி பார்ட்டியுடன் சந்திப்பு:** அனைத்து குழந்தைகளும் மிக அன்பான மற்றும் சகயோகி ஆத்மாக்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? யார் அன்பானவராக இருப்பாரோ அவர் சகயோகி ஆகாமல் இருக்க முடியாது. பொதுவாக உலகத்தில் பார்த்தாலும் எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே உடல்,

மனம், பொருளால் இயல்பாகவே பலி ஆகி விடுவார்கள். அதாவது சகயோகி ஆகி விடுவார்கள். நீங்கள் அனைவரும் தந்தையின் மிக அன்பிற்குரியவர்கள். எனவே அனைத்து விதமான சகயோகி ஆத்மாக்களாகவும் இருக்கிறீர்கள். பாப்தாதா மிக அன்பான மற்றும் சகயோகி குழந்தைகளை பார்த்து குஷி அடைகிறார். எப்படி குழந்தைகள் தந்தையைப் பார்த்து குஷி அடைகிறார்களோ அதே போல் தந்தையும் குழந்தைகளைப் பார்த்து இன்னும் அதிக பல மடங்கு குஷி அடைகிறார். ஏனென்றால் குழந்தைகள் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ஒவ்வொருவரின்அதிர்ஷ்டத்தின் ரேகை எவ்வளவு உயர்ந்தது, அந்த இன்றைய நாளின் மகாத்மாக்களோ உங்களின் எதிரில் ஒன்றுமே இல்லை, பெயரளவில் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் நடைமுறையில் காரியம் செய்பவர்கள். அப்படி என்னவாக இருந்தவர்கள் என்னவாக ஆகி விட்டீர்கள். மேலும் என்னவாக ஆகப்போகிறீர்கள்? இந்த குஷி இருக்கிறதா? தரையில் இருக்கிறீர்களா அல்லது ஆசனத்தில் இருக்கிறீர்களா? தரையிலோ வருவதில்லையே? தரையை விட்டு விட்டீர்கள் தான் இல்லையா? ஆகாய சிம்மாசனத்தை விட்டு விட்டு வாருங்கள் என்று தந்தையை அழைக்கிறீர்கள். மேலும் தரையின் ஆசனத்தை விட்டு விடுங்கள். இதயத்தின் சிம்மாசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று தந்தை கூறுகிறார். அப்படி அனைவருமே இந்த சிம்மாசனத்தை அடைந்து விட்டீர்களா, பிறகு திரும்பி தன்னுடைய தரையில் வந்து விடுவதில்லையே? தரையின் கவர்ச்சி தன் பக்கம் ஈர்ப்பதில்லையே? ஏனென்றால் இந்த தரையின் கவர்ச்சி என்னை எங்கே கொண்டு வந்து விட்டது என்று இந்த பூமியில் வாழ்ந்து பார்த்து விட்டீர்கள். நரகத்தின் பக்கம் கொண்டு சென்றது இல்லையா? மேலும் இப்பொழுது இதய சிம்மாசனத்தில் இருப்பவரிலிருந்து உலக ராஜ்ய சிம்மாசனதாரி ஆகி விட்டீர்கள். இந்த ஈர்ப்பு உங்களை சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்லும். அப்படி ஒரு தடவையின் னுபவி நிரந்தரமாக அறிவுள்ளவர் ஆகி விட்டார். உங்களுடைய பட்டமே ஞானம் நிறைந்தவர். ஞானம் நிறைந்தவர் ஒருபொழுதும் ஏமாற்றத்தை அடைய முடியாது. நல்லது நீங்கள் அனைவரும் எப்பொழுதும் திருப்தியாக இருப்பவர்கள் தான் இல்லையா? தன்னைப் பற்றியோ அல்லது மற்றவர்களை பற்றியோ ஏதாவது புகார் இல்லையே? புகார் இருக்கிறது என்றால், முழுமையானவராக இல்லை தனக்காக யோகா செய்ய முடிவதில்லை. பற்றுதலை வென்றவர் ஆக முடிவதில்லை. எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை என்ற புகார் இருக்கிறது. அப்படியானால் இது புகாராக ஆனது தான் இல்லையா? அனைத்து புகார்களையும் முடித்தாகி விட்டது என்றால், முழுமையான சம்பூர்ணமானவர் ஆவது நல்லது. இதே குழந்தைகள் ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரிகள் என்று பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் எப்பொழுதுமே பெருமிதம்

இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பைத் தெரிந்திருக்கிறார். சில நேரம் குழந்தைகள் தன்னுடைய மதிப்பை குறைவாக தெரிந்திருக்கிறார்கள். தந்தையோ நல்ல முறையில் தெரிந்திருக்கிறார். எப்படிப்பட்ட குழந்தையாக இருந்தாலும், தன்னை கடைசி எண்ணில் இருப்பவராக நினைத்தாலும் மகான் தான். ஏனென்றால் கோடியில் சிலர், சிலரிலும் சிலரானவர். அப்படி கோடிகளிலிருந்து அந்த ஒருவர் கூட மகான் ஆனார் இல்லையா? எனவே எப்பொழுதும் தன்னுடைய மகான் நிலையைத் தெரிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் மகான் ஆத்மா ஆகி பிறகு தேவதை ஆகி விடுவீர்கள் நைரோபியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவு வளர்ச்சி செய்து இங்கே வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? நைரோபியில் அமர்ந்திருக்கிறீர்களா அல்லது சக்கரவர்த்திகளா? யார் அவரே தானே பறக்க முடியாதவரோ அவர்களுக்கு பலம் கொடுத்து பறக்க வைப்பவர் தான் இல்லையா. நைரோபியின் விசேஷமே முழு குடும்பமும், சிறு வயதினரிலிருந்து பெரியவர்கள் வரை பரிவர்த்தனை ஆகி விட்டார்கள் என்பது தான். ஏனென்றால் குஜராத்தின் அஸ்திவாரம் ஆகும். ஆப்பிரிக்காவிலும் யாருடைய பாக்கியம் திறந்தது? ஆப்பிரிக்காவில் வசிக்கும் பாரதவாசிகள் பாக்கியம் நிறைந்தவர்கள் ஆனார்கள். அறிமுகத்தின் சிறிதளவு தண்ணீர் படுவதினால் விதை முளைக்கத் தொடங்கியது. இந்த நேரம் செய்யும் விசேஷ சேவையாக -முதல் எது ஒவ்வொருவருக்கும் அவசியமாக இருக்கிறதோ அதை பகுத்தறியுங்கள். மேலும் பகுத்தறிந்த பிறகு பிராப்தி சொரூபம் ஆகி? பிராப்தியை பிறருக்கு செய்வியுங்கள். பகுத்தறியும் சக்தியின் மூலம் தான் சேவையின் வெற்றி ஏற்பட முடியும். நல்லது.

**லண்டன் பார்ட்டியுடன் சந்திப்பு:** லண்டன் வாசிகள் தான் சேவைக்கு அஸ்திவாரம் போட்டவர்கள் லண்டன் சேவையின் முக்கிய ஸ்தானம். அனைவரின் பார்வை லண்டனின் மேல் இருக்கிறது. லண்டனிலிருந்து என்ன டைரக்ஷன் கிடைக்கிறது. அப்படி முக்கிய சேவையின் சேவை ஸ்தானமாக லண்டன் ஆகி விட்டது இல்லையா? அப்படி லண்டன் நிவாசிகள் விசேஷ சேவாதாரிகள். பிராமண வாழ்க்கையின் தொழிலே சேவை. அந்த மாதிரி இந்த சேவையிலேயே எப்பொழுதும் பிஸியாக இருக்கிறீர்களா? பாருங்கள் வியாபாரியின் புத்தியில் இரவில் கனவில் கூட என்ன வரும்? அவருடைய வியாபாரம் என்னவோ அது வரும். இரவில் கனவில் வாடிக்கையாளர்கள் மற்றும் பொருட்கள் தான் தென்படும். அப்படி கூட உங்களுடைய கனவில் என்ன வரும்? ஆத்மாக்களை அனைத்தும் நிறைந்தவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். கனவிலும் சேவை எழுந்தாலும் சேவை, சென்றாலும். வந்தாலும் சேவை. இந்த சேவையின் ஆதாரத்தில் தான் எப்பொழுதும் முழுமையான நிரம்பியவர் மேலும் மற்றவர்களையும் நிரந்தரமாக

நிரம்பியவராக ஆக்க முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் விலைமதிக்க முடியாத இரத்தினங்கள் ஒரு பக்கம் லண்டனின் இராஜ்ய பாக்கியத்தை வைக்கிறோம், இன்னொரு பக்கம் உங்களை வைக்கிறோம் என்றால் உங்களுடைய பாக்கியம் அதிகமானது ஏனென்றால், அவர்களுடைய இராஜ்யமோ மண்ணுக்குச் சமமாக ஆகி விடும். நீங்கள் எப்பொழுதும் மிக மதிப்புள்ளவராக இருக்கிறீர்கள். எப்பொழுதும் தந்தையின் விலைமதிக்க முடியாத இரத்தினம் ஆவீர்கள். பாப்தாதா ஒவ்வொரு இரத்தினத்தின் விசேஷத்தின் மாலையை ஜபிக்கிறார். அப்படியானால் எப்பொழுதும் தன்னை அந்த மாதிரி விசேஷ ஆத்மா என்று புரிந்து ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்துக் கொண்டே இருங்கள் இப்பொழுது அனைத்து விதமான சுமைகளும் முடிந்து விட்டன இல்லையா? இப்பொழுது கூண்டுக் கிளியிலிருந்து பறக்கும் பறவையாக ஆகி விட்டீர்கள். மணி கட்டியிருக்கும் பறக்கக்கூடிய கிளி ஆகி விட்டீர்கள். கூண்டுக்கிளியாக அல்ல! பாப்தாதாவின் பாடலைப் பாடுபவர்களாக ஆகி விட்டீர்கள் லண்டனில் இருப்பவர்களுக்கு இந்தி தெரிந்தவர்களுக்கு முதல் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இருந்தாலும் நேரடியாக முரளி கேட்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். மொழிபெயர்ப்பையோ செய்ய வேண்டியது இருக்காது. இதைத் தான் தட்டிலிருந்து வாயில் என்று சொல்வது மொழிபெயர்ப்பு ஆகும் நேரத்தில் கொஞ்சம் உணவு காய்ந்து விடும் இல்லையா? அப்படி உங்களுக்கு உங்களுடையது, அவர்களுடைய பாக்கியம் அவர்களுடையது. எனவே வெளிநாட்டில் வெளிநாட்டினர்களுக்குத் தான் மகிமை இருக்கிறது என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். உங்கள் அனைவரின் கூட்டத்தைப் பார்த்து இந்த ஆத்மாக்களும் பிரபாவம் அடைந்திருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் இதற்கு பொறுப்பானவர்கள் இருந்தாலும் பாரதவாசிகளுக்கு தங்களுடைய பிறந்த இடத்தின் போதை இருக்கிறது நல்லது.

**குமாரர்களுடன் சந்திப்பு:** குமாரர்களின் குரூப் என்றால், இரட்டை சுதந்திரம். ஒன்று குடும்ப பொறுப்பிருந்து சுதந்திரம், இன்னொன்று ஆத்மா அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட சுதந்திரம். மாயாவின் பந்தனம் மற்றும் குடும்ப பந்தனத்திலிருந்தும் சுதந்திரம் அந்த மாதிரி சுதந்திரமாக இருக்கிறீர்களா? இரட்டை சுதந்திரமான ஆத்மாக்கள், இரட்டை சேவையும் செய்ய முடியும். ஏனென்றால் சுதந்திரமாக இருக்கும் காரணத்தினால் குமாரர்களுக்கு நேரம் அதிகமாக கிடைக்கிறது. எனவே நேரத்தின் பொக்கிஷத்தினால் அனேகர்களை செல்வங்கள் நிறைந்தவர்களாக ஆக்க முடியும். அனைத்தையும் விட மிகப் பெரிய கஜானா சங்கமயுகத்தின் நேரம் அந்த மாதிரி குமாரர் குரூப் என்றால் நேரத்தின் பொக்கிஷத்தினால் நிரம்பிய மேலும் நேரம் இருக்கும் காரணத்தினால்

மற்றவர்களையும் சேவையில் சம்பன்னம் ஆக்க முடியும். சேவையின் பாடத்திலும் 100 சதவிகிதம் மதிப்பெண் பெற முடியும். எப்பொழுதும் பந்தன முக்த் என்றால் எப்பொழுதும் யோகயுக்த் உலகமே தந்தை என்று ஆகி விட்டார் இல்லையா? குமாரர்களின் உலகம் எது? பாப்தாதா. மற்றவர்களின் உலகிலோ எல்லை இருக்கிறது ஆனால் உங்களுக்கு ஒரே ஒரு எல்லைக்கப்பாற்பட்ட சம்ஸ்காரம். அப்படி சகஜயோகியாகவும் இருக்கிறீர்கள். ஏனென்றால் உலகத்தில் தான் புத்தி செல்லும் இல்லையா? உலகமே தந்தை என்றால் புத்தி தந்தையிடம் தான் செல்லும். அப்படி குமாரர்களுக்கு சகஜயோகி ஆவதற்கான ஃலிப்ட் இருக்கிறது. அப்படி அசாந்த ஆத்மாக்களுக்கு சாந்தி கொடுப்பது, அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு புகலிடம் கொடுப்பது என்ற இந்த மிகப் பெரிய புண்ணியத்தை செய்து கொண்டே இருங்கள், எப்படி தாகமுள்ள ஆத்மாவிற்கு தண்ணீர் குடிக்கக் கொடுப்பது புண்ணியமோ அதே போன்று இந்த சேவை செய்வது என்றால் புண்ணிய ஆத்மா ஆவது. அப்படி எந்தவொரு அமைதியில்லாத ஆத்மாவை பார்த்து இரக்கம் வருகிறது, இல்லையா? இரக்க மனமுடைய தந்தையின் குழந்தை என்றால் எப்பொழுதும் புண்ணிய காரியத்தைச் செய்து கொண்டே இருங்கள்.

**வரதானம்: தன்னுடைய உயர்ந்த தன்மை மூலமாக புதுமை என்ற கொடியைப் பறக்க விடக்கூடிய சக்தி சொரூபம் ஆகுக!**

இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி, அருகாமைக்கு ஏற்றபடி சக்தி ரூபத்தின் பிரபாவத்தை எப்பொழுது மற்ற ஆத்மாக்கள் மேல் போடுவீர்களோ அப்பொழுது இறுதி பிரத்யக்ஷதாவை அருகில் கொண்டு வர முடியும். எப்படி அன்பு மற்றும் சகயோகத்தை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். அதே போல் சேவை என்ற கண்ணாடியில் சக்தி ரூபத்தை அனுபவம் செய்வியுங்கள். எப்பொழுது தன்னுடைய உயர்ந்த தன்மை மூலமாக சக்தி ரூபத்தின் புதுமையின் கொடியை பறக்க விடுவீர்களோ அப்பொழுது பிரத்யக்ஷதா ஏற்படும். தன்னுடைய சக்தி சொரூபம் மூலம் அனைத்து சக்திகள் நிறைந்த தந்தையின் சாட்சாத்காரம் செய்வியுங்கள்.

**சுலோகன்: மன சக்தி மூலம் சக்திகளின் மற்றும் காரியம் மூலம் குணங்களின் தானம் கொடுப்பது தான் மகாதானம் ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂